வெளியீடு 24-10-2001 Issued 24-10-2001

297
2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, நவம்பர் 13, 2000 – தொகுதி 111 – எண் 2

**Monday the 13th November, 2000 – Volume 111 – No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

... Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

211,32P00
P00.111.2
322459

V211,21 P00
P00.111.2 287/2002
13-11-2000
222459

உள்ளடக்கம் பக்கங்கள்.

1. **வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிடாத வினாக்கள்—

(அ) பட்டியல்கள் 15 மற்றும் 20 — 329

(ஆ) விதி 51-ன்கீழ், உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாதவையாக மாற்றப்பெற்றவை (பட்டியல்கள் 16 முதல் 19 வரை) — 485-917

2. **அறிக்கைகள் அளித்தல்—**

(அ) அரசு உறுதிமொழிக் குழு — 329-330

(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு — 330

3. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு, 2000 — 330-331

(ஆ) தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டமுன்வடிவு, 2000 — 331-332

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2000 — 442

4. **அறிவிப்புகள்—**

(அ) தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டமுன்வடிவு, 2000 (ஆ இ) — 331

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2000-2001, முன் மொழிதல் (ஆ செ) — 412

| | பக்கங்கள் |
|---|---|
| (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2000 (ஆ. இ.) | 442 |
| **5. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| நடிகர் ராஜ்குமாரை வீரப்பனிடமிருந்து மீட்பது குறித்து— | 332-409 |
| திரு. ச. அழகிரி | 333-341, 384-385 |
| திரு. ஜி. பழனிசாமி | 341-344 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 345-349,400 |
| திரு. ஐ. கணேசன் | 349-357 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 358-371,376-379 |
| திரு. லா. சந்தானம் | 371-373 |
| *திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 373-375 |
| திரு. சி. வேலாயுதன் | 375-379 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 380-381 |
| திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் | 381-387 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 364,365,366,368, 387-408 |
| **6. தகவல் கோரல்—** | |
| மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்கள் ஊர்வலத்தின்போது நடந்த சம்பவங்கள் குறித்த விசாரணைக் கமிஷன் அறிக்கைமீது விவாதம். | 409-412 |

| | பக்கங்கள் |
|---|---|
| **7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—** | 412-441 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 412,419, 426,433-439 |
| திரு. ஜி. பழனிசாமி | 414-418 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 418-423 |
| திரு. ஜி.கே. மணி | 423-426 |
| *திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 426-427 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 428-432 |
| **8. அரசினர் தீர்மானம்—** | |
| (அ) விதிகள் 30, 130 மற்றும் 132-ஐத் தளர்த்துதல் | 443 |
| (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல். | 445-446 |
| **9. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—** | |
| தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2000 | 443-445 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 444-445 |
| **10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 446-450 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஐப்பசி 28, விக்கிரம-திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 நவம்பர் 13, திங்கட்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"சூழாமல் தானே முடிவு எய்தும் தம்குடியைத்*
*தாழாது உஞற்று பவர்க்கு"*

*தம்மைச் சார்ந்த குடிகளை உயர்த்தும் செயல்களில் காலம் தாழ்த்தாமல் ஈடுபட்டு முயலுகிறவர்களுக்குத் தாமாகவே வெற்றிகள் வந்து குவிந்துவிடும்.*

### 1. வினாக்கள்-விடைகள்

**@ உடுக்குறியிடாத வினாக்கள்**

*(அ) பட்டியல்கள் 15 மற்றும் 20.*

(ஆ) விதி 51-ன்கீழ் உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாதவையாக மாற்றப்பெற்று அவைமுன் வைக்கப்பெற்றவை [பட்டியல்கள் பதினாறு முதல் பத்தொன்பது வரை].

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 2. அறிக்கைகள் அளித்தல்

**(அ) அரசு உறுதிமொழிக் குழு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். **திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்,** அரசு உறுதிமொழிக் குழுத் தலைவர்.

---

*@ 123 முதல் 621 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.*

[2000 நவம்பர் 13

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, 2000-2001 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்து நான்காவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ஐ. கணேசன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுத் தலைவர்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2000-2001 ஆம் ஆண்டுக்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்தொன்றாவது முதல் அறுபத்தெட்டாவது வரையிலான அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2000 ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2000 நவம்பர் 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டமுன்வடிவு, 2000 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2000 ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) — தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2000 ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2000 நவம்பர் 13

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. சிறப்புக் கவன ஈர்ப்பு

### நடிகர் ராஜ்குமாரை விரப்பனிடமிருந்து மீட்பது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, கன்னட நடிகர் திரு. ராஜ்குமாரை வீரப்பனிடமிருந்து மீட்பது குறித்து, ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. கே.ஆர். இராமசாமி, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. ஜி. பழனிசாமி, திரு. நா. பெரியசாமி, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், திரு. வை. சிவபுண்ணியம், திரு. மு. அப்பாவு, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. கே. சுப்பராயன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. ஜி.கே. மணி, திரு. ச. அழகிரி, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. லா. சந்தானம், திரு. ஏ.வி.ஏ. நாசர், திரு. இரா. வி. ஈவநாதன், திரு. சொ. கருப்பசாமி, திரு. ஜி. நிஜாமுதீன், திரு. ம. அப்துல் லத்தீப், டாக்டர் அ. செல்லக்குமார், திரு. ஆர்.ஆர். சேகரன் ஆகியோரும் கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. சி. ஞானசேகரன், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. சி. வேலாயுதன், திரு. ஐ. கணேசன், திரு. பி. வெங்கடசாமி ஆகிய மாண்புமிகு உறுப்பினர்களும் கொடுத்து இருக்கிறார்கள். இப்பிரச்சினையைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொண்டு கட்சிக்கு ஒருவர் என்கிற முறையிலே பேச அழைப்பதற்கு முன்னால் இந்தப் பிரச்சினையிலே நல்ல தீர்வு வரவேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறோம். வேறு வகையிலே முடிவு ஏற்பட்டால்—கர்நாடகத்தில் 40 இலட்சத்திற்கும் மேலான தமிழர்கள் குடியிருப்பதை மனதில் கொண்டும்,



2000 நவம்பர் 13] [பேரவைத் தலைவர்]

அதைப்போலவே கன்னடம் பேசுகின்றவர்கள் தமிழகத்தில் இருப்பதை மனதில் எடுத்துக்கொண்டும் பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் திரு. ச அழகிரி.

*முற்பகல் 9-35*

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ராஜ்குமார் அவர்கள் கடத்தப்பட்டு இன்றோடு 106 நாட்கள் கடந்துவிட்டன. இந்தப் பிரச்சினையினுடைய தன்மையை உணர்ந்து முள்ளில்பட்ட சேலையை எவ்வாறு எடுக்க வேண்டும் என்பதை உணர்ந்து, மாநில அரசாங்கம் செயல்படுகின்ற விதத்திலே, தமிழ் மாநில காங்கிரஸ் தடையாக இருக்கவில்லை என்பதனை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

ஓர் எதிர்க்கட்சி என்கிறபொழுது, ஆளுகின்ற அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளை விமர்சனம் செய்ய வேண்டியது எங்களுடைய கடமையாக இருந்தும்கூட, பிரச்சினையினுடைய தன்மையை உணர்ந்து, முதலமைச்சருக்கு உதவிகரமாக இருக்க வேண்டும் என்பதற்காக, கடந்த 106 நாட்களாக எங்களுடைய தலைவர் ஐயா மூப்பனார் அவர்களும், தமிழ் மாநில காங்கிரசும் இந்தப் பிரச்சினையை நிதானத்தோடு அணுகி வந்திருக்கிறது என்பதனை ஆளும் தரப்பு உணரும் என்று நான் நம்புகிறேன். ஆனாலும்கூட, இந்த மூன்று மாத காலமாக அரசுக்கு நாங்கள் இவ்வளவு ஆதரவு கொடுத்தும்கூட, இதுவரை என்ன நடந்து இருக்கிறது என்பதனை எதிர்க்கட்சிகளுக்கு அரசாங்கம் சொல்லாமல் இருப்பது மிகுந்த மனவேதனையை அளிக்கிறது. ஒரு சாதாரண பாமரன் பத்திரிகையைப் படித்துப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களைத்தான் இந்த அவையினுடைய எதிர்க்கட்சித் தலைவரும், மாண்புமிகு உறுப்பினர்களும் தெரிந்து கொள்கிறார்கள் என்பது ஒரு வேதனையான விஷயம் என்பதனை நான் பணிவோடு இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சட்டத்தினுடைய ஆட்சி-Rule of Law-என்பதிலே எதிர்க்கட்சியும் அடங்கியிருக்கிறது என்பதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணர்வார்கள். எனவே நீங்கள் செய்யக்கூடிய செயல்கள், ஒரு கட்சியின் சார்பாக செய்யக்கூடிய விஷயங்கள் அல்ல. அரசாங்கத்தின் சார்பாக செய்யக்கூடிய விஷயங்களாக இருக்கின்ற காரணத்தினால், எதிர்க்கட்சிகளுக்கும், நீங்கள், என்ன நடந்து இருக்கிறது என்பதனை, என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதனை வெளிப்படையாகத் தெரிவித்திருக்க வேண்டும் என்பது எங்களுடைய கருத்து. முதலமைச்சர்

[திரு. ச. அழகிரி] [2000 நவம்பர் 13

கருதலாம், எல்லா எதிர்க்கட்சிகளும் இதிலே ஒத்த நிலையில் இல்லாதபொழுது, நான் என்ன செய்ய முடியும் என்று ஒரு முறை அவர்கள் இவ்வாறு ஒரு பத்திரிகையிலே குறிப்பிட்டிருந்தார்கள். அது சரியான பதிலாக எங்களுக்குப் படவில்லை. இந்தப் பிரச்சினையில் ஒத்த கருத்துடைய எதிர்க்கட்சிகளுக்காவது நீங்கள், என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதனைச் சொல்லியிருக்கலாம் என்பதுதான் எங்களுடைய கருத்து. அதைத்தான் நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். எங்களுடைய கருத்து, தொடக்கத்திலிருந்தே கொள்ளையர்களோடு இந்த அரசாங்கம் பேசிவருகின்ற விதம் சரியான திசையில் செல்லாமல் இருக்கின்றது என்பதுதான். ஏனென்றால், இதைப்போன்ற கடத்தல் விவகாரங்களிலே கொள்ளைக்காரர்கள் குறிப்பிடுகின்ற எல்லா கோரிக்கைகளையும் அரசாங்கம் ஒத்துக்கொள்ள வேண்டுமென்கின்ற அவசியம் கிடையாது. பேரம் பேசுகின்ற முறை அதுவும் அல்ல. எடுத்தவுடனேயே, அவர்கள் சொல்லியிருக்கின்ற எல்லா கோரிக்கைகளையும் நாங்கள் ஏற்றுக்கொண்டுவிட்டோம் என்று நீங்கள் தூதுவர்கள் மூலமாக, பத்திரிகைகள் மூலமாக, செய்திகள் சொன்ன காரணத்தினால், அவை இன்று நடைபெறாமல் போய்விட்ட காரணத்தினால், ராஜ்குமாருடைய விடுதலை நீண்ட காலமாக நடக்காமல் போய் இருக்கிறதோ என்கின்ற ஓர் அச்சம் எங்களுக்கு இருக்கிறது. எப்பொழுதுமே கோரிக்கைகளை வைக்கின்றவர்களும் சரி, கோரிக்கைகளோடு வருகின்ற அரசு தூதுவர்களாக இருந்தாலும் சரி அல்லது அரசாங்கமாக இருந்தாலும் சரி, அந்தக் கோரிக்கைகளிலே எதனை நிறைவேற்ற முடியுமோ அதனை மட்டுமே நிறைவேற்ற முடியும் என்பதனை கண்டிப்பாக நாம் சொல்லியிருக்க வேண்டும். இந்த ஆட்சி அமைப்பு என்பது பல அதிகார அடுக்குகளைக் (many layers) கொண்டது. அந்த அதிகார அடுக்குகளிலே ஓர் அடுக்குதான் மாநில அரசாங்கம். உங்களால் நிறைவேற்ற முடியாத பல கோரிக்கைகளை கொள்ளைக்காரர்கள் வைத்திருக்கிறார்கள். இது உங்களுக்குத் தெரியும். உங்களுடைய ஆலோசகர்களுக்குத் தெரியும், அதிகாரிகளுக்குத் தெரியும். அப்படியிருக்கும்பொழுது, இந்த அரசாங்கத்தால் முடியாத காரியத்தை நாங்கள் செய்கிறோம் என்கின்ற ஒரு தவறான ஒப்புதலை, ஒரு நம்பிக்கையை, காட்டிலே இருக்கிறவர்களுக்கு நீங்கள் எப்படித் தந்தீர்கள் என்பதுதான் இன்று எழுந்திருக்கின்ற கேள்வி. இந்தக் கேள்வியை எதிர்க்கட்சிகள் மட்டும் எழுப்பவில்லை. நம்முடைய நாட்டினுடைய மிக உயர்ந்த அமைப்பாக இருக்கின்ற உச்சநீதிமன்றமும் இதே கேள்வியைக் கேட்டிருக்கிறது. அங்குலம் அங்குலமாக இந்த அரசாங்கங்களை விமர்சித்திருக்கிறார்கள். உங்களுடைய



2000 நவம்பர் 13] [திரு. ச. அழகிரி]

செயல்பாடுகளைக் குறை கூறியிருக்கிறார்கள். சுதந்திரம் அடைந்த பிறகு, நீதிமன்றத்தால் இந்த அளவிற்கு விமர்சிக்கப்பட்ட ஒரு அரசாங்கம் இருக்காது என்று நான் கருதுகிறேன். அந்த அளவிற்குக் கண்டனக் குரல் இந்தியாவினுடைய உச்ச நீதிமன்றத்திலிருந்து உங்கள் மீது தொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதனை இந்த அரசாங்கம் நினைத்துப் பார்க்க வேண்டும். எனவே இதைப்போன்ற சூழ்நிலைகளிலே எப்படி நீங்கள் அவர்களுடைய எல்லா கோரிக்கைகளையும் ஒத்துக்கொள்ள முடியும், ஒத்துக்கொண்டீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை. ராஜதந்திர ரீதியாக நீங்கள் சில காரியங்களைச் செய்து இருக்கலாம். அந்தக் காட்டிலே வாழ்கிறவர்களுக்கு சில சலுகைகளை அறிவிக்க வேண்டுமென்று கொள்ளைக்காரர்களிடமிருந்து ஒரு தகவல் வந்து இருக்கிறது. கோரிக்கைகளிலே இந்த ஒரு கோரிக்கையை மட்டுமே எங்களால் செய்ய முடியும்; இதற்கு மட்டுமே அரசாங்கத்திலே இடம் இருக்கிறது, அதிகாரம் இருக்கிறது; இதற்குமேல் செய்வதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்பதனை நீங்கள் தெளிவுபடுத்தி இருப்பீர்களேயானால், இதைத் தவிர எங்களுக்கு வேறு வழி இல்லை என்பதனை நீங்கள் கூறி இருப்பீர்களேயானால், அதற்கு ஒரு அழுத்தம் கொடுத்து இருப்பீர்களேயானால், இந்த அரசாங்கத்தினுடைய எல்லை, அதிகார எல்லை இவ்வளவுதான் இருக்கிறது என்பதனை அவர்களுடைய மனதிற்கு நீங்கள் கொண்டு சென்று இருப்பீர்களேயானால், அந்தப் பிரச்சினை அன்றே தீர்ந்து போய் இருக்கும் என்பதுதான் எங்களுடைய கருத்து. நீங்கள் அங்கே தவறு செய்துவிட்டீர்கள். உங்களால் முடியும் என்கிற தொனியிலே, அவர்கள் எது சொன்னாலும் செய்ய முடியும் என்கின்ற ஒரு நம்பிக்கையை நீங்கள் ஏற்படுத்திய காரணத்தினால்தான், இன்றைக்கு எந்தத் திசையிலே செல்வது, என்ன செய்வது, யாரைப் பார்ப்பது, யாரை அனுப்புவது என்கின்ற ஒரு திக்குத் தெரியாத காட்டிலே தமிழ்நாடு அரசாங்கம் இருக்கிறது என்பது எங்களுடைய குற்றச்சாட்டு. எனவே ஆரம்பத்திலேயே உங்களுடைய வரையறைகளை நீங்கள் முடித்து இருக்க வேண்டும்.

*முற்பகல் 9-40*

முதலமைச்சர் அடிக்கடி சொல்லுவார், நான் எங்கே நிற்கிறேன் என்பது எனக்குத் தெரியும் என்று சொல்லுவார். ஆனால் இந்த விஷயத்திலே அவர்கள், தான் எங்கே நிற்கிறோம் என்பதனை மறந்துபோனது எதனால் என்பது எனக்குப் புரியவில்லை. எனவே உங்களுடைய அதிகார வரம்பை நீங்கள் உணர்ந்து இருக்க வேண்டும். அப்படி உணர்ந்து, நீங்கள் ஆரம்பத்திலேயே சொல்லி இருப்பீர்களேயானால், நான் கருதுகிறேன்,

[திரு. ச. அழகிரி] [2000 நவம்பர் 13

ராஜ்குமார் இந்நேரம் விடுதலை செய்யப்பட்டு இருப்பார். கொள்ளைக்காரர்களுக்கு வேறு வழி இல்லை, இந்த அரசாங்கத்தால் இவ்வளவுதான் செய்ய முடியும் என்பதனை நீங்கள் தெளிவுபடுத்தி இருந்தால், மிக ஆழமாக அவர்களுடைய மனதிலே தூதுவர்கள் மூலமாக நீங்கள் இதைப் பதிய வைத்திருந்தால், சரி இதற்குமேலே இந்த அரசாங்கத்தால் முடியாது; எனவே இந்தப் பிரச்சினையை நாம் விட்டுவிடலாம் என்கின்ற நிலைக்கு கொள்ளைக்காரர்கள் வந்து இருக்கக்கூடும்; கடத்தல்காரர்கள் வந்து இருக்கக்கூடும். அதைச் செய்யாதது இந்த அரசாங்கத்தினுடைய தவறு என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இதிலே மேலும் ஒன்றை நாம் பார்க்க வேண்டும். இதுவரை வீரப்பன் ஆதாயக் கொலைகளையும் கொள்ளைகளையும் செய்யக்கூடியவனாக மட்டுமே இருந்து இருக்கிறான். பணத்திற்காக, யானைத் தந்தங்களுக்காக, சந்தன மரங்களுக்காக திருடுகிற, கொலை செய்கின்ற ஒரு ஆதாய கொள்ளைக்காரனாக, கொலைகாரனாக மட்டுமே அவன் இருந்து இருக்கின்றான். ஆனால் இன்றைக்கு என்ன நடந்து இருக்கிறது? கடந்த 4½ ஆண்டுகாலமாக தமிழக அரசாங்கம் மெத்தனமாக இருந்த காரணத்தினால், பிரிவினை கோருகின்ற பிரிவினைவாதிகளும், விடுதலைப்புலிகளினுடைய ஆதரவாளர்களும் வீரப்பனோடு இப்போது காட்டிலே சகஜமாக சுற்றிவரக்கூடிய ஒரு சூழ்நிலை வந்திருக்கிறது. நான் அரசாங்கத்தைப் பார்த்துக் கேட்க ஆசைப்படுகிறேன். கடந்த 4½ ஆண்டு காலத்திலே அதிரடிப் படை எத்தனை சோதனைகளை, எத்தனை தேடுதல் வேட்டைகளை வீரப்பனுக்கு எதிராக நிகழ்த்தி இருக்கிறது என்கின்ற புள்ளிவிவரத்தை நீங்கள் இந்த அவைக்கு வைக்க வேண்டும். எத்தனை முறை அவனுக்கு எதிரான துப்பாக்கிச் சண்டைகள் நடந்து இருக்கின்றன என்கின்ற புள்ளிவிவரத்தை நீங்கள் தர வேண்டும். அதிரடிப் படையினுடைய கைகள் கட்டப்பட்டு இருந்திருக்கின்றன. அவர்களுக்கு எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை. அவர்கள் செயல்படுவதற்கான உத்தரவுகள் தலைமையிடத்திலிருந்து செல்லவில்லை. அவர்களிடம் துப்பாக்கி இருக்கிறது. ஆனால் சுடுவதற்கான தோட்டா இல்லை. கானகங்களிலே திரிந்து அவரைத் தேடுவதற்கு அவர்கள் கால்களுக்குத் தேவையான ஷூக்கள்கூட முக்கியமாக அளிக்கப்படவில்லை. அவர்கள் சோம்பிக் கிடக்கிறார்கள். அவர்களால் செயல்பட முடியவில்லை.

ஒருமுறை முதலமைச்சரே சொன்னார்கள். அதிரடிப் படையிலே சென்றவர்கள் நிறைய பெண்களைக் கற்பழித்து இருக்கிறார்கள் என்று, ஒரு முறை பத்திரிகையிலே அவர்கள் பேட்டி கொடுக்கிறபொழுது



2000 நவம்பர் 13] [திரு. ச. அழகிரி]

சொன்னார்கள், ஆரம்பக் காலத்திலே. இவை எல்லாம் அவர்களுடைய மனதிடத்தைக் குலைக்கிறது. அரசாங்கம் வேறு திசையிலே இருக்கிறபொழுது, வெறும் அதிரடிப் படை மட்டுமே வீரப்பனுக்கு எதிராக செயல்பட்டுவிட முடியுமா என்கின்ற ஓர் அச்சம் அவர்களுக்குள் எழுந்து இருக்கிறது. எனவே இதற்கான காரணங்களை நீங்கள் சொல்ல வேண்டும். அதிரடிப் படை இந்த 4½ ஆண்டுகாலத்திலே செய்திருக்கிற செயல் என்ன? எவ்வளவு தேடுதல் வேட்டைகளை நடத்தி இருக்கிறார்கள் என்கின்ற புள்ளிவிவரத்தை நீங்கள் இந்த அவைக்கு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் அந்தத் திசையிலேயிருந்து திசை மாறிப் போனதற்கான காரணம் என்ன? அவன் எப்போதுமே அதிரடிப்படையால் வேட்டையாடப்படுகின்ற வீரப்பனாக இருந்திருந்தால், இவ்வளவு ஆட்கள் அவனை அணுகி இருக்க முடியாது. பிரிவினைவாதிகள் அவனைச் சந்தித்திருக்க முடியாது. விடுதலைப் புலிகளினுடைய ஆதரவாளர்கள் அவனைச் சந்தித்திருக்க முடியாது. இன்றைக்கு அவர்கள் எல்லாம் சந்திப்பதற்கான ஒருவழிப் பாதையை நாம் அமைத்துக் கொடுத்து இருக்கிறோம். ஒரு பெரிய ரூட், சப்ளை ரூட், அவர்களுக்காக இன்றைக்குப் போடப்பட்டிருக்கிறது. அப்படியென்றால், இவ்வளவு காரியங்கள் நடந்திருக்கும்போது, நம்முடைய காவல் துறையினர் அங்கே என்ன செய்தார்கள்? இந்தியாவினுடைய தலைசிறந்த காவல் துறை என்று சொல்கிறீர்களே, அந்தக் காவல் துறை வீரப்பனைப் பிடிக்க முடியவில்லையென்றாலும்கூட, வீரப்பனுக்குச் செல்கின்ற சப்ளை ரூட்டை அவர்களால் துண்டிக்க முடியாமல் போனதற்கான காரணம் என்ன? இவ்வளவு பிரிவினைவாதிகளும், விடுதலைப்புலிகளினுடைய ஆதரவாளர்களும் அவனோடு ஐக்கியமாகிறவரை நம்முடைய காவல் துறை என்ன செய்தது? அப்படியென்றால் இந்தக் காவல் துறையின் செயல்பாடுதான் என்ன? இவற்றையெல்லாம் இந்த அரசாங்கம் யோசித்துப் பார்க்க வேண்டும். இதற்கான பதிலை இந்த அரசாங்கம் கூற வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-45*

இந்தப் பிரச்சினையிலே எங்களுக்கு மேலும் ஒரு சங்கடம் இருக்கிறது. நீங்கள் முதன்முதலிலே ஒரு பத்திரிகையாளரை அங்கே அனுப்பினீர்கள். அரசுத் தூதராக அவரை அறிவித்தீர்கள். எப்பொழுதுமே அரசுத் தூதர் என்கிறபோது, அரசு அதிகாரிகள் செல்வதுதான்முறை. ஆனால் முதன்முறையாக மரபுகளுக்கு எதிராக ஒரு பத்திரிகையாளர் அங்கே அனுப்பப்பட்டார். அப்படி அனுப்பப்பட்டதற்குச் சொன்ன காரணம், வீரப்பனோடு அவருக்கு ஏற்கெனவே தொடர்பு இருந்திருக்கிறது; அவர் பலமுறை அவரைச் சந்தித்திருக்கிறார்; எனவே அவர் சென்றால்

பேச்சுவார்த்தைகள் சுமுகமாக முடியும் என்பதற்காக அரசுத் தூதராக அவரை அனுப்பியிருக்கிறோம் என்று சொன்னீர்கள். நாங்கள் அதனை எதிர்க்கவில்லை, ஏற்றுக்கொண்டோம். அவர் 5 முறை 6 முறை சென்று வந்தார். ஆனால் பலன் ஏதும் கிட்டவில்லை.

அதன் பிறகு வேறு ஒரு பிரிவினைவாதி அங்கே அனுப்பி வைக்கப்பட்டார். அப்போது பிரச்சினை எழுந்தது. ஒரு குளம், ஒரு குட்டை, ஆடாமல் அசையாமல் அலைகள் தோன்றாமல் அப்படியே இருக்க வேண்டுமென்று நீங்கள் கருதக் கூடாது. ஒரு குளத்திலே நீங்கள் ஒரு கல்லைத் தூக்கிப் போடுவீர்களேயானால் அலைகள் எழத்தான் செய்யும். அதைப்போல பிரச்சினைக்குரியவர்களை, பிரச்சினைக்குரிய இடத்திற்கு நீங்கள் அனுப்புவீர்களேயானால் மாற்றுக் கருத்துகள் வரத்தான் செய்யும். வராமல் எப்படி இருக்க முடியும்? வீரப்பனோடு இன்றைக்கு இருப்பவர்கள் யார்? பிரிவினைவாதிகள், விடுதலைப்புலிகளினுடைய ஆதரவாளர்கள். அந்தப் பிரிவினைவாதிகளுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் ஆதரவாக இருக்கின்ற ஒருவரை நீங்கள் தூதுவராக அனுப்புவீர்கள் என்று சொன்னால், அந்தப் பிரச்சினை எவ்வாறு தீர்வு அடையும் என்பதுதான் எங்களுடைய கேள்வி. இது மேலும் மேலும் அவர்களுக்கு ஆள் சேர்க்கின்ற ஒரு படலமாக அமைந்துவிடுகிறது. அரசாங்கம் ஒரு ஏஜென்சியாக மாறிவிட்டதோ என்கின்ற ஐயம் எங்களுக்கு எழுகிறது. இவர்களையெல்லாம் ஒன்று சேர்க்கின்ற ஒரு முகவராக நீங்கள் மாறிவிட்டீர்களோ என்று நாங்கள் அச்சப்படுகிறோம். பிரிந்து கிடக்கின்றவர்களை, சிதறிக் கிடக்கின்றவர்களை, மாநிலத்தின் பல்வேறு பாகங்களில்' ஒளிந்துகொண்டிருகின்றவர்களை, இன்றைக்கு அதிகாரபூர்வமாக ஓரிடத்திலே குவிப்பதற்கான காரணகர்த்தாவாக இந்த அரசாங்கம் மாறிவிட்டது என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. எனவே அரசு இவற்றையெல்லாம் உணர்ந்து பார்க்க வேண்டும். இது இன்றோடு போய்விடுகிற பிரச்சினை அல்ல. இன்றைக்கு இந்தத் தீவிரவாதிகளுக்கு ஏராளமான ஆயுதங்கள் போயிருப்பதாகச் சொல்கிறார்கள். மணிப்பூர் மாநிலத்திலிருந்து 25 ஏ.கே.27 துப்பாக்கிகள் அவர்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கின்றன என்று சொல்கிறார்கள். வீரப்பனுக்கு 30 கோடி ரூபாய் அளவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்தப் பணம் தமிழக அரசாங்கத்தினுடைய பணமா? கர்நாடகத்தினுடைய பணமா என்பது தெரிய வேண்டும். இந்தப் பணம் அவனுடைய கைகளில் இருக்குமானால் அதனால் ஏற்படுகின்ற விளைவுகளை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



எப்பொழுதுமே தீவிரவாதிகள், பிரிவினைவாதிகள், வெடிகுண்டு கலாச்சாரத்தைக் கையிலே எடுக்கின்றவர்கள், வளர்க்கப்படுவார்களேயானால், காவல் துறையால் அவர்களுக்கு அச்சம் ஏற்படவில்லையென்றால், அதனுடைய விளைவுகள் என்ன என்பதனைக் கடந்த காலங்களிலே நாம் கோவையிலே பார்த்திருக்கிறோம்; பல்வேறு இடங்களிலே பார்த்திருக்கிறோம்; இரயிலில் வெடிகுண்டு வரும்; பேருந்திலே வெடிகுண்டு வரும்; மார்க்கெட்டிலே வெடிகுண்டு வரும். இதனுடைய விளைவுகளை யார் தடுப்பது? இன்றைக்கு ஒரு பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்பதற்காக தீவிரவாதிகளினுடைய, பிரிவினைவாதிகளினுடைய ஆதிக்கத்தை நீங்கள் தகர்க்க முடியாமல் போனால் நாளைக்கு தங்களுடைய கைகளிலே இருக்கின்ற ஆயுதங்களின் மூலமாக, பணத்தின் மூலமாக அவர்கள் எவ்வளவு இடையூறுகளைத் தமிழகத்திற்குத் தருவார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

*முற்பகல் 9-50*

ஒரு காலத்திலே விடுதலைப்புலிகள் மீது நாம் இரக்கம் கொண்டோம். அதனுடைய விளைவு என்னவானது? அமைதி பூமியாக இருந்த தமிழகம் எந்த அளவிற்கு துப்பாக்கிக் கலாச்சாரத்தை மேற்கொண்டது என்பது உங்களுக்குத் தெரியாததல்ல. எனவே, அந்தச் சரித்திரம், அந்த வரலாறு திரும்பக் கூடாது என்பதுதான் எங்களுடைய கருத்து என்பதனை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இதனையும் மீறி இன்றைக்கு இந்த அரசாங்கம் தீவிரவாதிகளோடு தொடர்புடைய ஒருவரை மீண்டும் அங்கே அனுப்பியிருக்கிறது. இடையிலே அவர் கொஞ்சம் சிணுங்கிக்கொண்டார். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏதோ ஒரு கருத்தைச் சொன்னார்கள் என்பதற்காக இனிமேல் நான் போக மாட்டேன், நான் வீட்டிலேயே அமர்ந்திருப்பேன் என்று சொன்னார். எங்களுக்கு வேடிக்கையாக இருந்தது. நக்கீரன் கோபாலுக்கு எதிராகக்கூட தமிழகத்தினுடைய எதிர்க்கட்சியைச் சார்ந்த ஒருவர் மிகவும் மோசமான குற்றச்சாட்டுகளைச் சொன்னபோது, நக்கீரன் கோபால் கோபித்துக்கொண்டோ அல்லது சிணுங்கிக்கொண்டோ இனிமேல் நான் காட்டுக்குப் போக மாட்டேன், ராஜ்குமார் பிரச்சினையை நான் கையிலே எடுக்க மாட்டேன் என்று ஒருபோதும் சொல்லவில்லை. ஒரு கடமையை ஏற்றுக்கொண்டிருக்கிறவர்கள் அந்தக் கடமையைச் செய்ய வேண்டும், அது எந்தக் கடமையாக இருந்தாலும் சரி. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு.ச. அழகிரி:** அவர் சென்றுதான் வந்தார். ஆனால் இன்றைக்கு என்ன நிகழ்ந்திருக்கிறது? இதிலே அரசியல் ஆதாயம் தேடப் பார்க்கிறார்கள். ஒரு விளம்பரம் தேடப் பார்க்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் என்னைப்பற்றி குறைவாகச் சொல்லிவிட்டார். எனவே நான் செல்ல மாட்டேன் என்று சொல்லுவது யாரை மிரட்டுவதற்காக? எதற்காக அந்தக் காரியத்தைச் செய்கிறார் அல்லது எந்த விளம்பரத்தைத் தேட ஆசைப்படுகிறார்? இந்தப் பிரச்சினையை திசை திருப்பிவிடலாம் என்று கருதுகிறார்கள். உண்மையிலேயே இந்தப் பிரச்சினைக்கு எதிராக தமிழ் மாநில காங்கிரஸ் இருந்திருக்குமேயானால் இந்த மூன்று மாத காலத்திலே பெரிய ஆர்ப்பாட்டங்களை, போராட்டங்களை எங்களால் நடத்தியிருக்க முடியும். அரசாங்கத்திற்குப் பிரச்சினைகளைக் கொடுத்திருக்க முடியும். ஆனால் மிகுந்த பொறுப்புணர்வோடு நாங்கள் நடந்து கொண்டோம், பிரச்சினை வேண்டாம் என்பதற்காக அவ்வாறு நடந்து கொண்டோம். அரசாங்கத்திற்கு ஆதரவாக இருந்தோம். ஆனால் இன்றைக்கு தவறான மனிதர் ஒருவர் அனுப்பப்பட்டிருக்கிறார் என்கிற காரணத்திற்காகத்தான் ஒரு கருத்தை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்ல வேண்டியிருந்தது. ஆனால் அதனையும்மீறி இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் அவரை அனுப்பியிருக்கிறார்கள். அவர் அரசு தூதுவரா அல்லது தூதுவருடைய நண்பரா என்பது தெளிவாக விளங்கவில்லை. அந்த மொழி எங்களுக்குப் புரியவில்லை. ஆயினும்கூட இன்றைக்கு நீங்கள் அவரை அனுப்பியிருக்கிறீர்கள். இந்த நேரத்திலேகூட நாங்கள் இந்த அரசாங்கத்திற்கு எங்களுடைய ஒத்துழைப்பைத் தரவே விரும்புகிறோம். அவரால்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று அரசாங்கம் கருதுமேயானால் அதற்குத் தடையாக நாங்கள் இருக்க விரும்பவில்லை. ஏனென்றால் ஒரு விளிம்பில் நீங்கள் நின்றுகொண்டிருக்கிறீர்கள். ஒரு பிரச்சினையினுடைய விளிம்புக்கு நீங்கள் சென்று இருக்கிறீர்கள். இந்த நேரத்திலே நீங்கள் செய்த தவறுகளை எடுத்துச் சொல்வதனால் மட்டும் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை என்பதனை நாங்கள் உணருகிறோம். எனவே நீங்கள் இந்தப் பிரச்சினையிலிருந்து மீள ஒரு முடிவிற்கு வரவேண்டுமென்று சொன்னால், அவர் சென்றால்தான் இந்தப் பிரச்சினை முடியும் என்று இந்த அரசாங்கம் கருதுமேயானால், மீண்டும்கூட ஒரு வாய்ப்பை இந்த அரசாங்கத்திற்குத் தர நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் இந்தப் பிரச்சினை முடிந்த பிறகோ அல்லது இந்தப் பிரச்சினை வேறுவிதமாக முடிந்தாலோகூட, தீவிரவாதிகளுடைய, விடுதலைப்புலி ஆதரவாளர்களுடைய நடவடிக்கைகளை வருங்காலத்திலாவது இந்த அரசாங்கம் தடுத்து நிறுத்துவதற்கு இதனை





ஒரு பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லி என்னுடைய கருத்தை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக தமிழ்நாட்டினுடைய எல்லையில் ஈரோடு மாவட்டத்திலிருந்து கன்னட நடிகர் ராஜ்குமாரும் மற்றும் அவரைச் சார்ந்தவர்களும் கடத்தப்பட்டு இன்றோடு 106 நாட்கள் கடந்திருக்கின்றன. நான் ஆரம்பத்திலே ஒன்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். கன்னட நடிகர் ராஜ்குமார் அவர்கள், 'என்னுடைய தோட்டத்தின் வீட்டில் இருக்கிறபோதே எனக்குப் பல்வேறு கடிதங்கள், எச்சரிக்கைகள் வருகின்றன, எனக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்' என்று தமிழ்நாட்டினுடைய காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு எழுத்து மூலமாக கடிதங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் காவல்துறையினர் என்ன நடவடிக்கை எடுத்தார்கள், என்ன பாதுகாப்பு கொடுத்தார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்று சொன்னால், ராஜ்குமார் அவர்கள் சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு, என்னுடைய வீட்டுக்கும், எனது உயிருக்கும் ஆபத்து இருக்கிறது, பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே அரசிடத்திலே வலியுறுத்தியிருக்கிறார்கள். அதில் நடவடிக்கை எடுக்காததன் விளைவாக, ராஜ்குமாரைக் கடத்தியதன் மூலமாக, கர்நாடக மாநிலத்தில் இருக்கிற தமிழர்களுக்குத் துயரமான சம்பவங்கள், பல நிகழ்வுகள் நடந்திருக்கின்றன. அவர்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. உடைமைகளை இழந்திருக்கிறார்கள். அங்கே இருக்கிறவர்கள் அச்சத்தோடு தங்களுடைய வாழ்க்கையை நடத்த வேண்டிய அவசியம் கர்நாடகத்தில் ஏற்பட்டிருக்கிறது. இதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு சரியாக எடுத்திருக்கிறதா, எடுக்கவில்லையா என்பதை தமிழக அரசுதான் சொல்ல வேண்டும். இன்றைக்கு கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் சொல்லுகிறபோது ராஜ்குமாரை விடுவிப்பதற்கான காரணங்களில் தமிழக அரசோடு ஒத்த கருத்துக்களை தான் கொண்டிருப்பதாகவும், தமிழ்நாட்டினுடைய முதலமைச்சரை தான் முழுமையாக நம்பியிருப்பதாகவும். அவரை விடுவிப்பதற்காக முதலமைச்சருடைய ஆலோசனைகளை நான் பெறுவேன் என்றும் அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை பலதடவை கூட்டி, அவர் செய்திகளை

பத்திரிகைகளுக்குத் தந்துகொண்டிருக்கிறார். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திலே இதுபோன்ற பல்வேறு நிகழ்வுகள் நடந்துகொண்டிருக்கிறபோது, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை எழுகின்றபோதெல்லாம் அனைத்துக் கட்சிக் கூட்டங்களைக் கூட்டி ஆலோசனை பெறக்கூடியவர்கள், ஏன்தான் இதிலே காலம் கடத்தினார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே கர்நாடகத்திலே வாழக்கூடிய மக்கள் இந்த அச்சத்தோடு வாழ்வதிலிருந்து விடுபட்டு ஒரு பாதுகாப்போடு வாழ்வதற்கான உத்தரவாதத்தை கர்நாடக அரசிடமிருந்து நம்முடைய மாநில அரசு பெற்றாக வேண்டும்.

முற்பகல் 9-55

அதேபோன்று, வீரப்பனும் இதுவரையிலும் பல்வேறு வகையான தவறுகளைச் செய்திருக்கிறார். வன இலாகாவின் பல்வேறு உயர் அதிகாரிகளைக் கடத்தி, இதுவரையில் 130-க்கும் மேற்பட்டவர்களை படுகொலை செய்திருக்கிறார் என்கிற வழக்குகளும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றை நாம் யாரும் மறந்துவிட முடியாது. ஒன்று இரண்டு தவறுகள் அல்ல. யானைத் தந்தங்களை, சந்தன மரங்களைக் கடத்துவது மட்டுமல்ல, மனித உயிர்களை 130-க்கும் மேற்பட்டவர்ளை இதுவரையிலும் அவர் படுகொலை செய்திருக்கிறார் என்கின்ற மிகப் பெரிய குற்றச்சாட்டும் அவர்மேல் இருக்கிறது. இன்னும் நாட்டினுடைய தேச விரோத சக்திகளிலே வீரப்பன் ஈடுபட்டவர்தான். அப்படிப்பட்டவர் நடிகர் ராஜ்குமாரைக் கடத்திக்கொண்டு வைத்திருக்கிறார். தமிழக அரசின் மூலமாக அவரை விடுவிப்பதற்காக அரசு தூதுவர்களை அனுப்புவது தவறு என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சொல்ல விரும்பவில்லை. ஏனெனில், ராஜ்குமாரை உயிரோடு பாதுகாக்கவில்லை என்று சொன்னால் கர்நாடகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தமிழர்கள் பலர் உயிரிழக்கக்கூடிய நிலைமை அங்கே ஏற்பட்டுவிடும். ஆகவே அரசு இதிலே பொறுப்புணர்வோடு செயல்பட்டு காட்டிலே இருக்கக்கூடிய கன்னட நடிகரை—ராஜ்குமாரை வீரப்பனிடமிருந்து மீட்டு வருவது சரியாக இருக்கும் என்று நினைத்துத்தான் நான் இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஒவ்வொரு தடவையும் வீரப்பன் பல்வேறு நபர்களை கடத்திக்கொண்டு வைத்திருந்த நேரத்தில் அவருடைய கோரிக்கைகள் எப்படி இருந்தன? தன்னுடைய ஆட்களை விடுவிக்க வேண்டும், தன்னுடைய மனைவிக்குப்





பாதுகாப்பு வேண்டும், தன்னைச் சார்ந்தவர்களை விடுவிக்க வேண்டும், பணம் வேண்டும் என்றுதான் ஒரு கோரிக்கைகளை அரசு அனுப்பும் தூதுவர்களிடத்திலே கொடுப்பது வழக்கமாக இருந்தது. ஆனால் இந்தத் தடவை 22 கோரிக்கைகளை தமிழக அரசுக்கு நம்முடைய தூதர் மூலமாகக் கொடுத்து அனுப்பியிருக்கிறார். அந்தக் கோரிக்கைகள், யாரால் தயாரிக்கப்பட்டது? எந்த இயக்கத்தால் தயாரிக்கப்பட்டது? அது எப்படிக் கிடைத்தது? பல ஆண்டுகாலமாக காட்டிலே இருக்கின்றபோது சொல்லமுடியாத கருத்துக்கள் இந்தத் தடவை அவரால் எப்படிச் சொல்லப்பட்டன? இந்தக் கருத்துக்கள் யார் மூலமாக அவருக்குக் கிடைத்தன? கர்நாடக அரசுக்கும், தமிழக அரசுக்கும் இடையேயான பிரச்சினையை, மத்திய அரசு தலையிட்டும்கூட தீராத பிரச்சினையான காவிரி நீர்ப் பிரச்சினைக்கு ஒரு உடன்பாடு கேட்கிறார். தேயிலை விலைக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டுமென்று கேட்கிறார். மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினையைப்பற்றிப் பேசுகிறார். இதுபோன்ற பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்துப்பேச வேண்டிய அவசியம் எப்படி வந்தது? அதற்குத் தொடர்பு உடையவர்கள் யார்? அதற்குக் காரணமான இயக்கங்கள் யாவை? அதைத் தயாரித்துக் கொடுத்தது எந்த இயக்கம் என்பது நம்முடைய காவல் துறைக்குத் தெரியாமல் இருப்பதற்கு நியாயமே கிடையாது; கண்டிப்பாகத் தெரியும், முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் கன்னடத்திலே இருக்கக்கூடிய தமிழர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக வேண்டி முதலமைச்சர் அவர்கள் பொறுமையாகக்கூட இருந்திருக்கலாம். இந்தப் பிரசசினையில் அரசியல் ரீதியிலே தீர்வு காணலாம் என்றுகூட நினைத்து இருப்பீர்கள், 106 நாட்களுக்கு மேலாக அவர் கன்னட நடிகரைக் கடத்தியதன் மூலமாக, இன்றைக்கு இரண்டு அரசுகளுக்கும்-கர்நாடக அரசுக்கும், தமிழக அரசுக்கும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இப்போது புதியதாக ஒரு தூதரை நீங்கள் அனுப்பியிருப்பதை நாங்கள் தவறு என்று சொல்லவில்லை. எப்படியேனும் கன்னட நடிகர் உயிரோடு வெளியே வர வேண்டும். அப்படி வந்ததற்குப் பின்னாலும்கூட இந்தத் தீவிரவாதத்திற்கு யார் துணை நிற்கிறார்கள், எந்த இயக்கம் துணை நிற்கிறது என்பதைக் கண்டறிந்து சம்பந்தப்பட்ட நபர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்பதை இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு—மாநில அரசுகள் முற்றிலுமாக செயலிழந்த நிலையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையை முழுமையாகப் பராமரிக்க முடியவில்லை என்ற மாபெரும் குற்றச்சாட்டை நம்முடைய அரசு சுமந்து நிற்கிறது. ஆக இதன் மூலமாக—இன்னும் எத்தனை வீரப்பன்கள் இதை முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு—சிலரைக் கடத்தி வைத்துக்கொண்டு அரசை நிர்பந்திப்பது மட்டுமல்ல, சில தனி நபர்களைக்கூட நிர்பந்திப்பதற்கான வாய்ப்புகளை வீரப்பன் பிரச்சினை இப்போது உருவாக்கித் தந்திருக்கிறது. ஆக, தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கிற I.A.S. Officers, I.P.S. Officers போன்றவர்களெல்லாம்கூட கடத்தப்படுகின்ற சூழ்நிலையில் இன்னும் வீரப்பன் கோரிக்கைகளை முழுமையாக பல பட்டியல்களிலே தந்து கொண்டிருக்கிறான்; பத்திரிகையிலே செய்திகள் வராமல் இருக்கலாம். ஆனால் நம்முடைய தூதர் மூலமாக அவர் கொடுத்திருக்கிற பட்டியலைப் பார்த்தோம் என்று சொன்னால், யாருடைய உயிருக்கும் பாதுகாப்பு இல்லாத வகையிலே, பட்டியலையெல்லாம் இன்றையதினத்திலே கொடுத்தனுப்புகிறான். அந்த வகையில் உயர் அதிகாரிகளைக் கடத்தி வைத்துக்கொண்டு, இன்னும் பல்வேறு கோரிக்கைகளை வைத்துக்கொண்டு ஒரு தனி அரசாங்கம், தனி இராஜ்ஜியம் காட்டில் நடத்தக்கூடிய அவசியங்கள் இன்றைய தினத்திலே வீரப்பனிடத்தில் இருக்கின்றது.

*முற்பகல் 10-00*

ஆகையினால் இந்தப் பிரச்சினையிலே மிகக் கவனத்தோடு அரசியல் நிதானத்தோடு, அரசின் பொறுப்புணர்வோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து உயிரோடு ராஜ்குமாரை மீட்ட பின்னாலுங்கூட, கடத்தலுக்குத் துணை போகின்ற தீவிரவாதக் கும்பல்மீது நீங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்; அதற்குத் துணையாக இருந்துவிடக் கூடாது. இந்த அரசு இதுபோன்ற தேசவிரோத சக்திகளுடைய நடவடிக்கைக்கு முன்னுதாரணமாக அமைந்துவிடக்கூடாது என்று நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சுட்டிக்காட்டி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.





**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் வீரப்பனைப் பிடிப்பதற்கு எங்களுடைய கழகப் பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், டி.ஜி.பி. திரு. வால்டர் தேவாரம் தலைமையில் சிறப்பு அதிரடிப்படை அமைக்கப்பட்டு, அவனைத் தேடி வேட்டையாடியதன் மூலமாக, 150 பேருடன் இருந்த வீரப்பனுடைய கும்பல் 5 பேராகக் குறைக்கப்பட்டது. சிறப்பு அதிரடிப்படை எடுத்த நடவடிக்கையில் கண்ணிவெடி வெடித்து 5 காவல்துறையினர் கொல்லப்பட்டார்கள். 1993 ஆம் ஆண்டில் சிறப்பு அதிரடிப்படையினுடைய கூட்டு நடவடிக்கை தமிழகத்திலும், கர்நாடகத்திலும் ஏற்படுத்தப்பட்டது. அடுத்தபடியாக, 1994 டிசம்பரில் காவல் துறை துணை கண்காணிப்பாளர் சிதம்பரநாதனும் இன்னும் இருவரும், 1995 ஆம் ஆண்டு மூன்று வனத் துறை அதிகாரிகளும் கடத்தப்பட்டபோது அன்றைய முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவின்படி, சிறப்பு அதிரடிப்படையினர் அவர்களைத்தேடி மீட்டு வந்தார்கள். அதற்குப் பிறகு 1993 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டுவரை வீரப்பனுடைய கூட்டத்தினருக்கும், சிறப்பு அதிரடிப்படையினருக்கும் கிட்டத்தட்ட 28 முறை சண்டை நடந்திருக்கின்றது. 58 பேர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தற்போது தடா கைதிகளாக இருக்கின்றவர்களெல்லாம் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆனால் கடந்த 4½ ஆண்டுகளிலே இந்த அரசு சாதித்தது என்ன? 1996 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவாக சன் டி.வி.யிலே வீரப்பன் பேட்டியை ஒளிபரப்பி, எங்களுடைய புரட்சித் தலைவியை மிகக் கேவலமாகப் பேசியதற்குக் கைமாறாகத்தான் இந்த 4½ ஆண்டுகளாக நீங்கள் வீரப்பனைப் பிடிப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று இந்த அரசின்மீது நான் குற்றஞ்சாட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைக்கு சுப்ரீம் கோர்ட், ராஜ்குமார் மீட்கப்படாத விஷயத்தில் ஒரு கண்டனம் தெரிவித்திருக்கிறது. தமிழக எல்லைப் பகுதியிலுள்ள ராஜ்குமாரின் பங்களாவிற்குப் பாதுகாப்புக் கொடுக்கத் தவறியது, இந்த தமிழக அரசு செய்த மன்னிக்க முடியாத குற்றம் என்றும், வீரப்பனைப் பிடிக்க முடியாத கையாலாகாத இந்த அரசு இராஜிநாமா செய்ய வேண்டுமென்றும் கூறியிருக்கின்றார்கள். வீரப்பனை பிடிப்பதற்கு, இரண்டு அரசுகளும் என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றன? இந்த 106 நாட்களாக என்ன நடந்தது, என்ன பேச்சுவார்த்தை நடந்தது என்பதை வெள்ளை அறிக்கையாக இந்த அவைக்கு முதல்வர் அவர்கள் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முன்பிருந்த ஆட்சிக் காலத்தில், 1991 ஆம் ஆண்டு காவிரி நீர்ப் பிரச்சினை எழுந்த நேரத்தில் தமிழ்நாட்டு மக்கள் அகதிகளாக இங்கே வந்தபோது, அப்போது இங்கிருந்த ராஜ்குமாருடைய வீட்டிற்கு காவல் போடப்பட்டது. ராஜ்குமார் அவர்கள் பெங்களூர் செல்வதற்கு புரட்சித் தலைவி அவர்கள் போலீஸ் படையுடன் அவருக்கு பாதுகாப்புக் கொடுத்து அனுப்பினார்கள். நீங்கள் அதையெல்லாம் செய்யத் தவறிவிட்டீர்கள். சுப்ரீம் கோர்ட்டைப் பொறுத்தவரையில், இன்றைக்கு அவர்கள் கூறியிருக்கிறார்கள்; அதாவது ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் வீரப்பனை பிடித்திருந்தால் பிடித்திருக்கலாம்; இப்போது அவனுடன் தமிழ்நாடு விடுதலைப் படையினர், ராஜீவ் காந்தி கொலையில் சம்பந்தப்பட்டவர்களெல்லாம் சேர்ந்து ஒரு பெரிய படையாக அவர்கள் இருக்கின்றார்கள். ஆகவே அவரைப் பிடிப்பது பெரிய காரியம், பிடிக்க முடியாது என்று அவர்கள் கூறியிருக்கின்றார்கள். நான் இந்த அரசைக் கேட்கிறேன். இந்த 106 நாட்களில், கிட்டத்தட்ட கர்நாடக அரசு, அங்கே இருக்கின்ற முதல்வர், நான்கைந்து தடவை எதிர்க்கட்சிகளினுடைய கூட்டத்தைக் கூட்டி இருக்கின்றார்கள். இங்கு ஒரு முறையாவது எதிர்க்கட்சிகளைக் கலந்து பேசினீர்களா? ஏன், தமிழ்நாட்டிலே எதிர்க்கட்சிகளே இல்லையா? என்ன காரணம்? எதற்காக நீங்கள் எதிர்க்கட்சிகள் கூட்டத்தைக் கூட்டவில்லை? அப்படிக் கூட்டினால், உங்களுடைய ஏஜென்ட், வீரப்பனுடைய ஏஜென்ட், நக்கீரன் கோபாலை நீங்கள் அனுப்ப முடியாது என்ற ஒரே எண்ணத்திற்காகத்தான் எதிர்க்கட்சிகள் கூட்டத்தைக் கூட்டவில்லை என்று நான் இந்த அரசுமீது குற்றஞ்சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-05*

அடுத்தபடியாக, இப்போது கேசட் அங்கேயிருந்து வந்திருக்கிறது. ராஜ்குமார் அவர்களைக் கடத்தியதற்குப் பிறகு, சந்தன மரக் கடத்தல்காரன், வீரப்பனுடைய ஆடியோ கேசட், 4-8-2000 அன்று சன் டி.வி-யிலும், உதயா டி.வி.-யிலும் ஒளிபரப்பப்பட்டிருக்கிறது. அது நேரடியாக இங்கே நம்முடைய போலீஸ் துறை அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படாமல், நேரடியாக அந்தக் கேசட் எப்படி உங்களுடைய நிறுவனமான சன் டி.வி.-க்கும், உதயா டி.வி.-க்கும் கிடைத்தது என்பதுதான் எங்களுடைய கேள்வி. அதற்குப் பிறகு, இரண்டு, மூன்று தடவை நீங்கள் கோபாலை அனுப்பினீர்கள். பேச்சுவார்த்தை என்று கூறினீர்கள். அவரை மீட்டுவர முடியவில்லை. அதற்கு நாங்கள் கேட்கிறோம், அரசுத் தூதர், அரசுத் தூதர் என்று கோபாலைக் கூறுகிறீர்கள். யார் அவருக்கு அந்தப் பட்டத்தைக் கொடுத்தது? நீங்களே அவருக்கும் வீரப்பனுக்கும் இருக்கிற





தொடர்பை வைத்து, கோபால் எங்களுக்கு எதிரானவர் என்பதை வைத்துக் கொண்டு, உங்களுடைய காரியத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற ஒரே எண்ணத்திற்காக அவரை அரசுத் தூதர் என்று இப்போது கூறிக் கொண்டிருக்கிறீர்கள். அப்படியிருந்தும், அவர் அவனை அழைத்து வந்தாரா? சரி, அதற்குப் பிறகு நெடுமாறனை அனுப்பியிருக்கிறீர்கள். அந்த நெடுமாறன் யார்? தீவிரவாத இயக்கத்துடன் தொடர்பு கொண்டவர். அவரைப்பற்றியெல்லாம் இங்கே மிக விளக்கமாக ஏற்கெனவே கூறினார்கள். அவர், தன்னை இந்தியன் என்பதற்குப் பதிலாக தமிழன் என்று கூற வேண்டுமென்றுகூட தன்னுடைய பேட்டியிலே கூறியிருக்கிறார். சிதம்பரத்திலே, விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக மாநாடு நடத்தியிருக்கிறார். ஆனால் அவரைப்பற்றி உங்களுடைய வக்கீல் அங்கே, டெல்லியிலே வாதாடும்போது, அவர் சிறந்த மதிப்பிற்குரிய தலைவர்; சிறந்த பக்திமான் என்று வாதாடியிருக்கின்றார். அது எந்தவிதத்திலே நியாயம்? உங்களுடைய இந்த அரசு, நெடுமாறன்மீது வைத்திருக்கிற மதிப்பைத்தான் இது காட்டுகிறது. நெடுமாறனுடன் இன்னும் இரண்டு பேர் சென்றிருக்கிறார்கள். கல்யாணி, சுகுமாரன், இவர்கள் யார்? இவர்கள் அனைவருமே தடை செய்யப்பட்ட அமைப்பைச் சார்ந்தவர்கள்; விடுதலைப்புலிகளினுடைய ஆதரவாளர்கள். இந்திய தேச ஒற்றுமைக்கு எதிரான சிந்தனை கொண்டவர்கள். இவர்கள் சென்று வந்து, அந்த 5 தடா கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை உங்களிடம் வைத்திருக்கிறார்கள். அந்த 5 தடா கைதிகள் யார்? இப்போதுள்ள இந்த தமிழ் தேசிய விடுதலைப் படைத் தலைவர் நெடுமாறனுடைய கூட்டாளிகள். கும்பகோணத்திலே வங்கிக் கொள்ளையிலே சம்பந்தப்பட்டவர்கள். விடுதலைப்புலிகளுக்காக, பெட்ரோல், மருந்து, வெடிகுண்டு இவற்றைக் கடத்தியவர்கள். காவல் நிலையத்தைத் தாக்கியவர்கள். டி.வி. டவர், எல்லாவற்றையும் தாக்கியவர்கள். இவர்களைத்தான் நீங்கள் விடுவிக்க வேண்டுமென்று துடித்துக்கொண்டிருக்கிறீர்கள். ஏனோ தெரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்தாலே, தீவிரவாதம் தலைவிரித்து ஆடுகின்றது. இந்தத் தீவிரவாதத்திற்கெல்லாம் நீங்கள் துணை போய்க்கொண்டிருக்கிறீர்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், 1975 ஆம் ஆண்டு தற்போதைய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜார்ஜ பெர்னாண்டஸ் அவர்கள் பரோடா வெடிகுண்டு வழக்கிலே குற்றவாளி என்று தெரிந்தும், அவருக்கு அடைக்கலம் கொடுத்துக் காப்பாற்றியவர்தான் இன்றைய முதல்வர், இந்த அவையிலே அமர்ந்திருக்கிறார். ஆக தீவிரவாதத்திற்கும் உங்களுக்கும் எப்போதும் ஒரு தொடர்பு இருந்து

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2000 நவம்பர் 13

கொண்டுதான் இருக்கிறது. அதேபோல், 1989 ஆம் ஆண்டு, 1990 ஆம் ஆண்டு பத்மநாபா அவர்களும், அவரைச் சார்ந்தவர்கள் 14 பேரும் இங்கே கொலை செய்யப்பட்டபோது, அவர்கள் தப்பி ஓடுவதற்கு உடந்தையாக இருந்தது இந்த அரசு. ஆகவேதான் தீவிரவாதத்திற்கும். இந்த அரசுக்கும் எப்போதுமே தொடர்பு இருந்துகொண்டிருக்கிறது. இவர்களை வைத்துத்தான் 130 பேரைக் கொன்றவனை; 2,000 யானைத் தந்தங்களை விற்றவனை, கொடியவனை இன்றைக்குத் தமிழ் பிரிவினைவாதம் பேசிக்கொண்டிருக்கிற வீரப்பனை நீங்கள் காப்பாற்றி, ராஜ்குமார் அவர்களைக் காப்பாற்ற முடியாமல், வக்கில்லாமல் இருந்து கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரும் ஒன்றும் பேச வேண்டாம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு உண்மையிலேயே வீரப்பனை பிடிக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்திருந்தால், இந்த 106 நாட்களாக நீங்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க மாட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு அந்த எண்ணம் இருக்கிறது.

*முற்பகல் 10-10*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒருமுறை சென்றீர்கள்; இரண்டு முறை சென்றீர்கள்; 4 முறை சென்றீர்கள்; இப்போது நெடுமாறனை விட்டிருக்கிறீர்கள். அதற்கு எதிர்ப்பு வந்ததற்குட பிறகும், இறுதியாக உச்சநீதிமன்றம் தடா கைதிகளை விடுதலை செய்யக்கூடாது என்று அறிவித்ததற்குப் பிறகும், நீங்கள் அவரை அனுப்பியிருக்கிறீர்களே, அது எந்தவிதத்திலே நியாயம்? முதலமைச்சர் கூறியிருக்கின்றார்; அவர், அரசுத் தூதரே அல்ல; நக்கீரன் கோபாலுடன் சேர்ந்ததற்குப் பிறகு அவர் அரசுத் தூதர் என்ற நிலையை எடுத்திருக்கிறார் என்று கூறியிருக்கின்றார். அது தவறு. நேற்றுகூட, நெடுமாறன் பேட்டியிலே கூறியிருக்கின்றார், இரு மாநில அரசுகளினுடைய விருப்பத்திற்கு இணங்க நான் செல்கிறேன் என்று. ஏன் கர்நாடகாவிலே யார் எல்லாமோ சென்றார்களே, அவர்களை எல்லாம் கைது செய்தார்களே, அப்படி இருக்கும்போது, பிரிவினைவாதி இந்த நெடுமாறன் செல்லக்கூடாது என்று நீங்கள் ஏன் தடுத்து நிறுத்தவில்லை? இதுதான் எங்களுடைய கேள்வி. ஆகவே இறுதியாக, சுப்ரீம் கோர்ட்டு எடுத்துக்கூறியது போல, முதல்வரவர்கள் பதவியிலே ஒரு நிமிடம்கூட நீடிப்பதற்கு தார்மீக உரிமை



2000 நவம்பர் 13] [திரு. பி.ஆர். சுந்தரம்]

அவருக்குக் கிடையாது என்று நான் (குறுக்கீடுகள்) தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இனியும் அவர் இந்தப் பதவியிலே நீடிப்பது வெட்கக்கேடு. (குறுக்கீடுகள்) அவர் உடனடியாக இந்தப் பதவியைவிட்டு விலக வேண்டுமென்று..... (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது) இந்த நேரத்திலே மத்தியிலே ஒரு அரசு இருக்கிறதா என்ற எண்ணம் எங்களுக்கு இருக்கின்றது. இவ்வளவு தூரத்திற்குப் பிறகு, வெங்கய்யா நாயுடு அவர்கள் வந்தார்கள். வந்ததற்குப் பிறகு, இரண்டு மாநில அரசுகளும் இதற்கு வேறு வகையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூறியதற்குப் பிறகும் நீங்கள், அதிரடிப்படையை ஏன் அழைக்கவில்லை, ஏன் மத்திய அரசை நீங்கள் கேட்கவில்லை? நீங்கள் சொல்லலாம். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் உங்களுடைய பாணியிலே சொல்ல வேண்டுமானால், உங்களுடைய அம்மையார் ஆட்சிக் காலத்தில் ஏன் இராணுவத்தை நீங்கள் ஒரு முறைகூட அழைக்கவில்லை என்று நீங்கள் கேட்கலாம்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களாக இதைக் கேட்கலாம் என்றெல்லாம் சொல்ல வேண்டாம். நீங்கள் உங்களுடைய கருத்தை மட்டும் சொல்லி முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அன்றைக்கு இருந்த நிலைமை வேறு. இன்றைக்கு இருக்கிற நிலைமை வேறு. ஆகவே இன்றைக்கு 106 நாட்களாக, ராஜ்குமார் போன்ற முக்கியமானவர்களைக் கடத்தி வைத்திருப்பதுபோல் அன்றைக்கு அங்கே வைத்திருக்கவில்லை. ஒரு உயிருக்குப் பாதுகாப்பற்ற நிலை, அன்று இல்லை. ஆகவே இறுதியாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருப்பது இராணுவம் இதில் தலையிட வேண்டும். மத்திய அரசு இதில் தலையிடவேண்டும். இந்தச் செயலிழந்த அரசு (குறுக்கீடுகள்) ராஜிநாமா செய்து, ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்தி ராஜ்குமார் அவர்களை விரைவிலே மீட்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கூறி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாயாவி வீரப்பனைப்பற்றிப் பேசுவதற்காக, நாட்டிலே மிக முக்கியமான 20 கேள்விகளைத் தள்ளிவிட்டு, அதைவிட முக்கியமான வீரப்பன் கோரிக்கையைப்பற்றி பேச, இந்த அவையையே ஒத்திவைத்து, விவாதம் நடந்துகொண்டிருக்கக்கூடிய இந்த பொன்னான நேரத்திலே, இந்த வாதத்தைத் தொடங்கிவைத்த அருமை அண்ணன் அழகிரி அவர்கள் மிக அழகாக எடுத்துச் சொன்னார்கள். நான் சொல்ல வேண்டுமென்று

[திரு. ஐ. கணேசன்] [2000 நவம்பர் 13

எதிர்பார்த்த, அதே கருத்தைத்தான் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் மிக மென்மையாகச் சொன்னார்கள். முள்ளின்மீது சேலை விழுந்தாலும், அந்தச் சேலையை எப்படி மெதுவாக எடுக்கவேண்டும் என்பதை ஆராய்ந்து, ஆராய்ந்து, பல அனுபவங்களைக் கண்ட, தமிழ்நாட்டினுடைய ஆறரை கோடி மக்களுடைய விடிவிளக்கை நிர்ணயிக்கக்கூடிய (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நம்முடைய முதல்வர் அவர்கள், அந்தச் சேலையைப் பத்திரமாக எடுக்க ஆயத்தமாக இருக்கிறார் என்பதைச் சொல்லும்போது, என்னுடைய மனம் மிகவும் நெகிழ்ந்து விட்டது. *(சிரிப்பு)*

நம்முடைய பிரதான எதிர்க்கட்சியே உண்மையைப் புரிந்து இவ்வளவு சிறப்பான கருத்தை எடுத்துச் சொன்னதற்கு என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகவும், என் அருமைச் சகோதரர் ஜி.கே. மணி அவர்கள் சார்பாகவும் இங்கே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்பு நண்பர்களே,.... (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு உறுப்பினர்களே, மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பழைய நினைவுகளை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்கே பேசியவர்கள் பழைய வரலாறுகள் தெரியாமல் பேசிவிட்டார்கள். தமிழக முதல்வரவர்களே, இதே அவையிலே, எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சி நடந்தபோது, இன்று கலைஞர் அமர்ந்திருந்த அதே இடத்திலே எம்.ஜி.ஆர் அமர்ந்திருந்த, அந்தக் காலகட்டத்திலே, 20 ஆண்டுகாலத்திற்கு முன்னால், கர்நாடகத்தில் ராஜ்குமார் அவர்கள், தமிழர்களை இழிவாகப் பேசியதன் காரணமாக, ஊட்டியிலே—நான் சொல்வது வரலாறு.....(மணியடிக்கப்பெற்றது) யாரையும் புண்படுத்த.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. இந்தப் பிரச்சினையிலே நீங்கள் மிகவும் ஜாக்கிரதையாகப் பேச வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு. ஐ. கணேசன்:** ரொம்ப நன்றி. யாரையும் புண்படுத்த வேண்டும் என்று நான் எண்ணவே மாட்டேன்.

அன்புத் தமிழ் மக்கள்மீது அன்றைக்கு ராஜ்குமார் அவர்கள் எவ்வளவு மோசமான வார்த்தையைச் சொன்னபோதுகூட, ஊட்டியிலே அவருடைய படப்பிடிப்பின்போது, இங்கே இருக்கக்கூடிய தமிழர்கள் கொதித்து எழுந்து, அந்தப் படப்பிடிப்பை ரத்து செய்யக்கூடிய நேரத்திலேயும்கூட, இங்கே



2000 நவம்பர் 13] [திரு. ஐ. கணேசன்]

இருந்த முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் எவ்வளவு ஆணித்தரமான கருத்தினைச் சொல்லி, தமிழ்நாட்டிற்கும், கர்நாடகத்திற்கும் நல்லுறவு ஏற்பட வேண்டும், ஒரு நடிகரால் அந்த உறவு கெட்டுவிடக் கூடாது, தயவுசெய்து என்மீது அன்பு கொண்ட தமிழ் மக்கள், அவரை ஒன்றும் செய்யக்கூடாது, படப்பிடிப்புக்கு இடையூறு கொடுக்கக் கூடாது என்று சொல்லி, அந்த விவகாரத்தை முடித்து வைத்தார்கள்.

*முற்பகல் 10-15*

அதேபோல கர்நாடகத்திலே, அதற்குப் பின்னால் அவருடைய பெயரைச் சொல்லி வந்து ஆட்சி நடத்தியவர்கள், கர்நாடகத்தில் இருக்கக்கூடிய தமிழர்களை எந்தெந்த வகையிலே, எப்படியெல்லாம் அந்த அரசு சித்திரவதை செய்தது என்பதற்கு, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நாம், இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள், தஞ்சை விவசாயிகள், காவிரி டெல்டா பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகள், எங்கள் பகுதிக்கு தண்ணீர் வேண்டும், தண்ணீர் கொடுங்கள் விவசாயத்திற்கு, குடிப்பதற்கு தண்ணீர் கொடுங்கள் என்று கர்நாடகத்தைக் கேட்டபோது, அங்கு இருக்கக்கூடிய கர்நாடகத்தினுடைய வெறியர்கள், எங்களுடைய தமிழ் மக்களை எப்படி ஓட ஓட அடித்து, எப்படி அவர்களுடைய சொத்துக்களைக் கொள்ளையடித்து, எங்களுடைய தமிழ் பெண்டிர்களை மானபங்கப்படுத்திய வரலாறுகளை இங்கே இருக்கக்கூடிய ஒரு சிலர் மறந்துவிட்டார்களோ என்ற ஐயப்பாடுதான் எனக்கு எழுகிறது. அதையும் விட்டுவிடுவோம். அதன்பிறகு, கர்நாடகத்திலே இருக்கக்கூடிய ஆயிரம் ஆயிரம் தமிழர்களை அடித்துத் துரத்திய நேரத்திலே அந்தத் தமிழர்களை காட்டுப் பகுதியிலேயிருந்து மீட்டுக் கொண்டுவிட்ட வீரப்பனுடைய நல்ல செயலையும் மறந்து விடுவோம். மறப்பது தமிழர்களுடைய இயற்கை. ஆகையினாலே மறப்போம். ஆனால் ஒன்றே ஒன்று. 3 ஆயிரம் கோடி, 30 ஆயிரம் கோடி, 3,500 கோடி என்று பேசுகிறார்களே, டி.வி.யிலே பேட்டி கொடுக்கிறார்களே, அவர்கள் என்று எப்படி சொல்லலாம் என்று பேட்டி கொடுக்கிறார்களே, அவர்களை நான் கேட்கிறேன். எத்தனை பங்களாக்கள், எத்தனை மாட மாளிகைகள், எத்தனை குபேரபுரங்களை இங்கிருந்து மகாபலிபுரம் ரோட்டிலே வாங்கி வைத்திருக்கிறார்கள் என்று அவர்களால் கணக்குக் கொடுக்க முடியுமா? அவர்களால் கணக்குச் சொல்ல முடியுமா அல்லது கர்நாடகத்திலே சந்தன மரங்களால் இழைக்கப்பட்ட பங்களாக்கள் எத்தனை இருக்கின்றன என்று யாராவது சொல்ல முடியுமா? ஆந்திராவில் இருக்கிறது என்று சொல்கிறார்களே! யாரையோ, நமக்கு என்ன, விட்டுவிடுவோம், நாட்டு மக்கள் பார்த்துக்கொள்வார்கள்.

கர்நாடகம் என்று வீரப்பனை சொல்கிறார்களே, அங்கே இருக்கிறதா? அவன் பணத்தை வாங்கி அவனுடைய குடும்பம்தான் நல்லபடியாக இருக்கிறதா? அவனுடைய குடும்பத்தை அழைத்து வந்து போட்டோ எடுத்து பலவிதமான போஸ்களையெல்லாம் கொடுத்து, தமிழ் மக்களிடத்திலே அறிமுகப்படுத்திக்கொண்டவர்களை நான் கேட்கிறேன். வீரப்பனுடைய குடும்பம், யாராவது காப்பாற்றுவார்களா என்றுதானே ஏங்கிக்கொண்டிருக்கிறது? அவர்கள் என்ன, மாட மாளிகையிலே மேட்டூரிலே குடியிருக்கிறார்களா? குளத்தூரிலே இருக்கிறார்களா? சொந்த வீடு இருக்கிறதா? எதற்காக அவனுக்குப் பணம் தேவை? இந்தத் தமிழர்களை பல்வேறு நேரத்திலே காப்பாற்றி தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்தவன் வீரப்பன் என்று நான் சொல்வதைவிட இதற்கு முன்னால் கடத்தப்பட்ட ஒரு விஞ்ஞானியினுடைய குழு என்ன சொல்லியது என்பதை இந்த அவை ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மனிதாபிமானம் மிக்கவன் வீரப்பன். இன்று கொள்ளையன் என்று வர்ணிக்கப்படுகிறானே அந்த வீரப்பன், மனிதாபிமானம் மிக்கவன். தனக்குக் கிடைத்த உணவை எங்களுக்கு பங்குபோட்டுக் கொடுத்தவன் வீரப்பன். சொன்னான் அல்லவா? அறிக்கை வரவில்லையா? படிக்கவில்லையா? அப்பேற்பட்ட வீரப்பன்-அவனுடைய தம்பி அர்ஜுணன் என்ற ஒரு மாபெரும் வீரன் இந்த அரசாங்கத்தை நம்பி நம்முடைய முதல்வரை நம்பி தமிழ்நாட்டிலே தனக்கு ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு மருத்துவம் பார்க்க வந்தபோது நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் மனித நேயத்தோடு 2 மாதம் அவனை வைத்திருந்து காப்பாற்றி கர்நாடகத்திற்கு விசாரணைக்கு என்று அழைத்துச் சென்றபோது—நம்முடைய சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலமாக நான் கேட்கிறேன். தமிழ்நாட்டிலே இன்று பேசுகிறார்களே, அந்த நல்லவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். நெஞ்சிலே கை வைத்துச் சொல்லட்டும். 2 மாதத்திற்கு மேலே சிறையிலே இருந்த வீரப்பனுடைய தம்பி அர்ஜுணன் என்ன நிலைக்கு ஆளாக்கப்பட்டான்? கர்நாடகத்திலே விசாரணைக்குச் சென்று வந்த இடத்திலே, அச்சகபுரம் என்ற இடத்திலே அந்த அர்ஜுணனுக்கு சைனைடு கொடுத்துக் கொன்றார்களே, அந்த கர்நாடகத்தினுடைய போலீஸார்; அவனுக்கு எப்படி சைனைடு வந்தது? சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? நம்முடைய முதல்வரை நம்பி தமிழ்நாட்டிற்கு வந்த அந்த அர்ஜுணனை முதல்வர் 2 மாதமாகப் பாதுகாத்து வைத்திருந்து, கர்நாடகத்திற்கு விசாரணைக்கு அழைத்துச் சென்றபோது அவனை சைனைடு கொடுத்துக் கொன்றார்களே எப்படி? அவன் மனிதாபிமானம் மிக்கவனா? இல்லையா? (குறுக்கீடு)



*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** நம்முடைய பேரவைத் தலைவர் மூலமாக நான் கேட்டுக்கொள்வதெல்லாம், வீரப்பன் சாதாரணமாக கொலை, கொள்ளை நடத்தினான் என்பதனை வைத்துக்கொண்டு அவனைப்பற்றி இங்கே அவையிலே மிகமிக கீழ்த்தரமாக விமர்சிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் விமர்சனம் வேறு எங்கோ, இந்த ஆட்சியைப் பற்றி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள். நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். நீங்களே சொல்கிறமாதிரி சேலை முள்மேலே விழுந்துவிட்டது. அதை ஜாக்கிரதையாக எடுக்க வேண்டும். உங்கள் பேச்சினால் அந்தச் சேலை கிழிந்துவிடக் கூடாது.

**திரு. ஐ. கணேசன்:** நிச்சயமாகக் கிழியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால் ஜாக்கிரதையாகப் பேசுங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மட்டுமல்ல; எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி மட்டுமல்ல; எங்களுடைய நிறுவனர் டாக்டர் ஐயா அவர்கள் சுற்றுப்பயணத்திலே இருந்தபோதுகூட, உடனடியாக சுற்றுப்பயணத்தையெல்லாம் இரத்து செய்துவிட்டு, இந்த நிகழ்ச்சி திசை திரும்பிச் செல்கிறது என்று அறிந்தவுடனே சென்னைக்கு ஓடோடி வந்தார்கள். சென்னைக்கு வந்து நெடுமாறனை சுமார் 1/2 மணி நேரத்திற்கு மேலே சந்தித்து நீங்கள் கண்டிப்பாகச் செல்ல வேண்டும், வீரப்பனிடத்திலே என்னுடைய உணர்வுகளைத் தெரிவியுங்கள், அவன் நம்பவில்லையென்றால் என்னுடைய கடிதத்தைக் காட்டுங்கள் என்றார். ராஜ்குமாரை, ஒரு கடுகளவுகூட தொல்லை கொடுக்காமல் பத்திரமாக தமிழ்நாட்டினுடைய முதல்வரிடத்திலே ஒப்படைக்க வேண்டும் என்று சொன்ன தலைவர் எங்களுடைய டாக்டர் ராமதாஸ் ஐயா அவர்கள்தான். அதேபோல அன்று இரவு இந்தியாவினுடைய பாதுகாப்பு அமைச்சர்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

[2000 நவம்பர் 13

**திரு. ஐ. கணேசன்:** ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களைச் சந்தித்து வீரப்பனை மிகப் பத்திரமாகக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு தமிழ்நாட்டினுடைய முதல்வர் (குறுக்கீடு) (சிரிப்பு) ராஜ்குமாரை— பரவாயில்லை. அதுவும் நல்லதுதான். அவன் ஒன்றும் கொள்ளையடித்து பங்களா கட்டவில்லை. அதுவும் நல்லதுதான். ரைட். நாட்டைக் கொள்ளையடித்தவர்கள் எல்லாம் எங்கெங்கோ இருக்கிறார்கள். ராஜ்குமாரை—மிகப் பத்திரமாக தமிழ்நாட்டின் முதல்வர், கருணை உள்ளம் கொண்ட கலைஞரிடத்திலே ஒப்படைக்க வேண்டும்; இதுதான் எங்களுடைய விருப்பம்; பாட்டாளி மக்கள் கட்சியினுடைய விருப்பம். எத்தனை பெண்டிர்களை..... (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள் என்றால் புதிது புதிதாக ஆரம்பித்துக்கொண்டிருக்கிறீர்கள். நான் அடுத்த உறுப்பினரைக் கூப்பிடப் போகிறேன். நீங்கள் டாக்டர் ஐயா அவர்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். அது அருமையான கருத்து. அத்தோடு முடித்துக்கொள்ளுங்கள். திரு. லத்தீப் அவர்கள்.

முற்பகல் 10-25

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, இதோ நான் என் பேச்சை முடித்துவிடுகிறேன். நீங்கள் ஏதோ சொல்கிறீர்கள் என்று நினைத்து நான் பேசாமல் இருந்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக என்னுடைய பேச்சினால் இந்தச் சுமுகமான உறவுக்குக் கடுகளவுகூட குந்தகம் ஏற்படாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குந்தகம் ஏற்படாது என்பது சரி. சீக்கிரம் பேச்சை முடித்தால்தானே அடுத்த உறுப்பினர் பேச முடியும்.

**திரு. ஐ. கணேசன்:** அதேபோல, கர்நாடகத்தினுடைய முதல்வர் அவர்களும் எங்களுடைய தலைவர் அவர்களிடத்திலேயும், மணி அவர்களிடத்திலேயும் பலமுறை தொடர்புகொண்டு எப்படியாவது வீரப்பனிடத்திலே சொல்லி ராஜ்குமாரை பத்திரமாக வெளியே கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள். அதன்பொருட்டுத்தான் அவர் ஒரு கடிதத்தை நெடுமாறனிடத்திலே கொடுத்து அனுப்பிவைத்திருக்கிறார்கள். இதைவிட ஒரு கொடுமை, இங்கே பேசுகிறார்கள், சிரிக்கிறார்கள், (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய ஒரேயொரு உணர்வைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



2000 நவம்பர் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உரையை முடியுங்கள் என்று சொன்னால், அவர்கள் பேசினார்கள், இவர்கள் பேசினார்கள் என்று சொன்னால் எப்படிச் சரியாக வரும்?

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, என்னுடைய உணர்வுகளைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு நேரமும் நீங்கள் உங்களுடைய உணர்வுகளைத்தானே சொன்னீர்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, இன்னும் கொஞ்சம் இருக்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய முழு உணர்வுகளையும் தெரிவிக்கவிட எனக்கு நேரம் இல்லை. (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** சபாநாயகர் அவர்களே, ஒரே ஒரு நிமிடத்திலே கருத்துக்களைச் சொல்லி முடிக்கலாம் என்று நினைக்கிறேன். ஆனால் நீங்கள் மணியடிப்பது, என்னுடைய இதய வால்வு டப் டப் என்று சொல்லி நிற்கிறதுமாதிரி இருக்கிறது. தயவுசெய்து ஒரு நிமிடத்திலே பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

பார்த்த விஷயத்தை பலமாதிரிப் பேசக்கூடிய இந்தச் சமுதாயம், பார்க்காததைத் தன்னுடைய எண்ண ஓட்டத்திற்குத் தகுந்தாற்போலப் பேசக்கூடிய இந்தக் காலகட்டத்திலே, பழைய வரலாறுகளை எடுத்துச் சொல்வது தவறு இல்லை. நல்லதைப் பல்லாயிரம் முறை சொன்னாலும் விளைவுகள் என்ன?

என்னுடைய சமுதாய மக்களை விசாரணை என்ற பெயரிலே அழைத்துச் சென்று அங்கே அவர்களுடைய — அந்தத் தாய்மார்களுடைய மர்ம உறுப்புகளிலே எலக்ட்ரிக் ஷாக் கொடுத்தார்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் வேண்டாம். இதனால்தான் நான் முதலிலே சொன்னேன், இதிலே ரொம்ப ஜாக்கிரதையாகப் பேச வேண்டுமென்று. நீங்கள் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நான் அனுமதி கொடுக்க முடியாது. நீங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** ஒரேயொரு வரியுடன் உரையை முடித்துக்கொள்கிறேன்.

[2000 நவம்பர் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே பாதிக்கப்பட்டது தமிழர்கள் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறோம். அப்புறம், என் உறவினர்கள், அது, இது என்று பிரித்துப் பேசாதீர்கள். நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஒரேயொரு நிமிடத்திலே பேசி முடித்துக்கொள்ளலாம் என்று நானும் நினைத்து பேசும்போதெல்லாம் நீங்கள் மணியடிக்கிறீர்கள். மற்றவர்கள் உள்ளே புகுந்து.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மேலும் ஒரு நிமிடம் பேசுவது என்பது பிரச்சினையல்ல. நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்பதுதான் பிரச்சினை. நீங்கள் ஏற்கெனவே நல்ல கருத்தை, டாக்டர் ஐயா கடிதம் கொடுத்துவிட்டார் என்று சொல்லிவிட்டீர்கள். அதோடு நிறுத்திக்கொள்வதுதான் நல்லது.

**திரு. ஐ. கணேசன்:** அவ்வளவுதான். தலைவர் அவர்களே, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி ராஜ்குமாரை எந்தவிதமான குந்தகமும் இல்லாமல் இந்த முறை — அதுவும் குறிப்பாக இந்த ஐ. கணேசன் சொல்கிறேன், இந்த அவையின் மூலமாகச் சொல்கிறேன். தமிழக முதல்வர் மூலமாகச் சொல்கிறேன், உங்கள் சார்பாக வீரப்பனுக்குச் சொல்லிக்கொள்வது எல்லாம் ஒன்றே ஒன்றுதான். கர்நாடகத்திலே உள்ள 30 இலட்சம் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் இருக்க நீங்கள் உடனடியாக யார் எதைப்பற்றிப் பேசினாலும் கவலையில்லை, மாவீரன் வீரப்பன் அவர்கள் ராஜ்குமாரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்று.....

**திரு. சி. ஞானசேகரன்:** I am on a Point of Order....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவருடைய கருத்து.

**THIRU C. GNANASEKARAN:** He is going on paying encomiums to Veerappan, it is not correct.

**HON. SPEAKER:** That is his business, you sit down.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** தலைவர் அவர்களே,.....

**திரு. ரா. ஈஸ்வரன்:** தலைவர் அவர்களே, அதை எப்படிச் சொல்லலாம்?



2000 நவம்பர் 13]

**டாக்டர் அ. செல்லக்குமார்:** தலைவர் அவர்களே, மாவீரன் என்று வீரப்பனைச் சொல்வது — அது அரசினுடைய failure என்றுதானே அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. அதுதான் நீங்கள் அரசை attack பண்ணினீர்களே, இதிலே புதுசு என்ன?

**டாக்டர் அ. செல்லக்குமார்:** இது அரசுக்கு அசிங்கமாக இருக்காதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு வேண்டுமானால் அசிங்கமாக இருக்கும். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) சரி. மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள்.

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, இன்னும் ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் இனி அனுமதிக்கமாட்டேன். நீங்கள் பேசி முடித்தாகிவிட்டது.

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே. ஒரேயொரு நிமிடத்தில் பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நீங்கள் பேசி முடித்தாகிவிட்டது. திரு. அப்துல் லத்தீப் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் விடுதலை செய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டீர்கள். அதோடு முடித்துவிட்டீர்கள். திரு. ம. அப்துல் லத்தீப் அவர்கள்.

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே. ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு) சரி.

**திரு. ஐ. கணேசன்:** ஒரேயொரு கருத்து சார். அதாவது, நாட்டைக் கொள்ளையடித்து பல எஸ்டேட்டுகள் வாங்குவதைவிட, காட்டிலே கொள்ளையடித்து நாட்டு மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய வீரப்பன், என்னைப் பொறுத்தவரையில் ஒரு மாவீரன்தான் என்பதனைச் சொல்லி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

*முற்பகல் 10-30*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இதனை அரசியலுக்கு அப்பாற்பட்டு நான் அணுக விரும்புகின்றேன். பொதுவாக இந்தப் பிரச்சினை எதிர்பாராத வகையில் நீண்டநாட்கள் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. நம்முடைய எதிர்பார்ப்பிற்கு மாறாக இந்தப் பிரச்சினையை வீரப்பனுடைய பிடிவாதத்தின் காரணமாகவோ அல்லது ராஜ்குமார் அவர்களை விடுவிப்பதில் நமக்கிருக்கின்ற இயலாமையின் காரணமாகவோ நீண்டுகொண்டே போகிறது. அதனால் இந்தப் பிரச்சினையும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நம்முடைய ராஜ்குமார் அவர்கள் வீரப்பனால் கடத்தப்பட்டபோது அதற்குப் பிறகு கர்நாடக மாநிலத்தில் ஏற்பட்ட சில விரும்பத்தகாத பேச்சுக்கள், தீய விளைவுகளுக்கு, அதுவும் குறிப்பாக தமிழர்களுக்கு பாதகத்தை ஏற்படுத்திவிடுமோ, பரவலான ஒரு சிக்கலை கர்நாடகத்தில் ஏற்படுத்துவதன் வாயிலாக அங்கே உள்ள தமிழர்களுக்கு தீமைகள் ஏற்பட்டு அது ஒருவேளை தமிழகத்திற்கும் பரவிவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக எப்படியாவது ராஜ்குமார் அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும், ஏதோ ஒரு தனி நபர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற நோக்கததைவிட அதற்குப் பிறகு உருவான சூழ்நிலைகளினால் சட்டம், அமைதிக்கு கேள்விக்குறி எழுந்து 2 மாநிலங்களுக்கிடையே மோதல் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக கொஞ்சம் விவேகத்தோடுதான் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும் என்று அவர் கருதியது சரியானது என்றே நான் கருதுகின்றேன். ஆனால் இந்தப் பிரச்சினையின் வாயிலாக தனி மனிதனுக்கு ஏற்பட்ட, செய்யப்பட்ட ஒரு தீங்கு நாட்டிற்கே தீங்காக விளைந்துவிடுமோ என்ற அச்சம்தான் பலரை இதுகுறித்து வெளிப்படையாகப் பேசுவதிலிருந்து தடுத்து நிறுத்தியது. அப்போதுகூட முதலமைச்சர் அவர்கள் யாரும் குறுக்குச்சால் ஓட்ட வேண்டாம், இந்தப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்கள். அதன் அடிப்படையில் பலர் இதுகுறித்து பேசாமலேயே இருந்தார்கள். அது அன்றைய தேவையாக இருந்தது. ஆனால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினை இந்தியாவிலேயே — அதுவும் தமிழகத்திலேயே நம்முடைய ஆட்சி அதிகாரத்திற்கு, அதுவும் அரசமைப்புச் சட்ட இறையாண்மைக்கே



கேள்வி எழுப்பக்கூடிய வகையில், ஒரு குறிப்பிட்ட பகுதி தமிழக அரசினுடைய அதிகார வரம்பிற்கும் அப்பாற்பட்டு சுதந்திரமாகவே செயல்படுகிறதோ என்ற கேள்வி மட்டுமல்ல, அப்படித்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற நிலைமை காலப்போக்கில் உருவாகி வருவது கவலைக்குரிய ஒன்று.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

இந்த அரசுகூட கவலைகொள்ளும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனால் இந்த நிலைமை நீடித்துக்கொண்டிருப்பது எந்த அளவுக்குச் சரி என்பதைத்தான் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

*முற்பகல் 10-35*

இங்கேகூட சொன்னார்கள், ஒரு மாவீரன் என்று. ஒரு மாவீரனால் இந்தச் சட்டப்புறம்பான காரியம் செய்யப்பட்டு இருக்கிறது. இரண்டு அரசுகளை இந்த மாவீரன் அச்சுறுத்திக்கொண்டிருக்கிறான். தமிழகத்தினுடைய ஒரு பகுதியை தன்னுடைய அதிகார வரம்பிற்குள் வைத்துக்கொண்டு சட்டம் இல்லை, நீதி இல்லை, அதிகாரம் இல்லை, ஆட்சி இல்லை, எல்லாம் நான்தான் என்று சொல்லக்கூடிய அளவுக்கு அவன் நடந்துகொண்டிருக்கிறான் என்று சொன்னால், இங்கே எடுத்துச் சொல்லப்பட்டதைப்போல அவன் ஒரு மாவீரனா அல்லது சட்டத்திற்கு கேள்விக்குறி எழுப்பி இருக்கின்ற ஒரு தனி நபரா என்பதைப்பற்றித்தான் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே இன்றைக்கு எழுந்திருக்கின்ற பிரச்சினை என்பது இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கே ஒரு கேள்விக்குறியாக எழுந்திருக்கிறது. சட்டப்பூர்வமான ஆட்சி இருக்கின்ற ஒரு நாட்டிலே தனி நபர் சொல்வதுதான் நடக்கும் என்பதற்கு நம்முடைய நடவடிக்கைகளே அதற்கு ஆதாரமாக அமைந்திருக்குமேயானால், அதுகுறித்து நாம் வேதனை அடைவதைத் தவிர வேறு வழியில்லை. ஒரு வரையறைக்குட்பட்டு முறையாக நடந்துகொள்ளாத ஒரு சூழ்நிலை உருவாகும்போது, அதுகுறித்து கருத்துகள் சொல்வது தேவையான ஒன்று என்பதை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டாக வேண்டும். எப்படி நடந்துகொள்கிறான்? அரசுத் தூதர் என்று ஒருவரை நீங்கள் நியமித்தீர்கள். ஆனால் அரசுத் தூதர் என்று சொல்லும்போது, எந்த வகையில் அவர் உங்களுடைய இரகசியங்களைக் காப்பாற்றுவதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிறார்? அரசின் சார்பாக அவர் அனுப்பப்படும்போது, சில இரகசிய விஷயங்களை, அரசு சார்புடைய விஷயங்களை அவரோடு நீங்கள் பரிமாறிக்கொள்ள வேண்டும். அரசு என்ன நினைக்கிறது என்று

அவரிடத்திலே நீங்கள் உங்களுடைய எண்ணங்களை வெளியிட வேண்டும். அதற்கு என்னென்ன ஆதாரம் என்று அரசு இரகசியங்களை அவரிடத்திலே நீங்கள் பகிர்ந்துகொள்ளத்தான் வேண்டும். அப்படி இருக்கும்போது, எந்த அடிப்படையிலே அவர் உங்களுக்குக் கட்டுப்படக்கூடிய ஆளாக மாறுவார்? அது எந்தச் சட்டத்தில் அடங்கும்? வெளியிலேயிருக்கிற அரசு அதிகாரிகள் சொல்வது வேறு விஷயம். ஆனால் தனிப்பட்ட ஒருவர், உங்களின் சார்பாக, உங்களுடைய அங்கீகாரத்தைப் பெற்று, நீங்கள் அறிந்திருக்கிற உண்மைகளையெல்லாம் அவரிடத்திலே எடுத்துச் சொல்லி, இவற்றை நீங்கள் சொல்ல வேண்டும் என்று அவரிடத்திலே சொல்லி, அவர்கள் சொல்கிற உண்மைகளையெல்லாம் உங்களிடத்திலே வந்து சொல்வதற்குரிய முழு அதிகாரமும் ஒரு தனிப்பட்ட நபருக்கு நீங்கள் அளிக்கிறீர்கள் என்றால், எந்தச் சட்டம் உங்களுக்கு அதற்கான அனுமதியை வழங்கியது? இது அதற்கான கேள்வி. இதிலே நான் மிகுந்த பொறுப்போடு சொல்கிறேன். வீரப்பன் இப்போது முன்புபோல சுதந்திரமாக இல்லை. அவன் வேறு சிலருடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டிருக்கின்றான். இன்னும் சொல்லப்போனால், வீரப்பனுடைய உயிருக்கே ஆபத்து இருக்கக்கூடிய நிலையிலே, அவன் சூழ்நிலைக் கைதியாக ஆக்கப்பட்டு, வீரப்பன் சொல்வதெல்லாம், அவன் சொல்கிற கருத்து அல்ல. வேறு சிலர் சொல்கின்ற கருத்துகளைத்தான், அவன் இன்றைக்குச் சொல்லிக்கொண்டிருக்கின்றான் என்பது, எந்த வகையில் சட்டத்திற்கும், அரசமைப்புச் சட்டத்திற்கும், ஆட்சி அதிகாரத்திற்கும், நிர்வாக முறைகளுக்கும் ஏற்புடையது என்பதைச் சிந்திப்பார்கள். இதைத்தான் நம்முடைய பழனிசாமி அவர்கள் சொன்னார்கள். காவிரிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், மற்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் வீரப்பனுக்கு அதிலே என்ன அக்கறை? அவன் என்ன ஒரு ஆட்சியா? ஓர் ஆட்சியாளர் செய்ய வேண்டிய வேலையை அவன் செய்யத் துணிந்திருக்கிறான். அவனுக்கு அந்த ஒரு இறுமாப்பு வந்திருக்கிறது என்று சொன்னால், யார் சார்பாக வீரப்பன், நீங்கள்—இருவரும் சேர்ந்து தமிழ்நாட்டு மக்களுடைய இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டாக வேண்டும் என்று சொன்னால், அவனுக்கு இருக்கிற authority என்ன? அவன் யார் சார்பாகப் பேசுகிறான்? அப்படிப் பேசச் சொன்னால், அதிலே வேறு சில சக்திகள் நுழைந்து நிபந்தனைகளையெல்லாம் எழுதிக்கொடுத்து, அதைத்தான் உங்களுக்கு அனுப்பியிருக்கிறான். You have taken due cognizance of the unauthorised, unconstitutional conditions, என்ற முறையிலே அந்த நிபந்தனைகளையெல்லாம் நீங்கள் ஏற்றுக்கொண்டு, பேச்சு நடத்தியிருக்கிறீர்கள். சரி, அதைக்கூட நாம் பொறுத்துக்கொள்வோம்.



காரணம் என்னவென்றால், நீங்கள் ஒரு உயிரைக் காப்பாற்ற விரும்புகிறீர்கள். எல்லோரும் விரும்புகிறோம். உயிரைக் காப்பாற்றுவது, அவருக்காக மட்டுமல்ல, இரண்டு மாநிலங்களுக்கிடையே மோதலைத் தவிர்க்க வேண்டும் என்ற பரந்த நோக்கம் அதிலே இருக்கிறது. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அதற்காக ஒரு உயிரைக் காப்பாற்றுவதற்காக, ஒரு நாட்டின் உயிருக்கு உயிரான சட்டத்தினுடைய இறையாண்மையை, நீதிமன்றத்தினுடைய இறையாண்மையை, நிர்வாக இரகசியங்களை நீங்கள் பலி கொடுக்கலாமா? இப்போது வீரப்பனைக் காப்பதற்காக சட்டத்தைப் பலி கொடுத்திருக்கிறீர்கள். அரசமைப்புச் சட்டம் பலி கொடுக்கப்பட்டிருக்கிறது. நீதிமன்றம் கேவலப்படுத்தப்பட்டிருக்கிறது. உச்சநீதிமன்றம் தன்னுடைய கருத்துகளை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. அதிலேகூட உச்ச நீதிமன்றம் கருத்தாகத்தானே சொல்லியிருக்கிறது என்று நீங்கள் நினைக்கலாம். அப்படி அல்ல. நீதிமன்றம் ஒரு கருத்தைச் சொன்னால், All judicial observations by a High Court or any court is a verdict. It amounts to a verdict of the court. Judicial observation - நீதிமன்றத்தினுடைய கருத்து, அது தீர்ப்பாகக் கருதப்பட வேண்டும் என்பதுதான் மரபு. சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு முறை அல்ல, இரண்டு முறை, மூன்று ஜட்ஜ்கள் உட்கார்ந்து ஒரு நீதிமன்றம் திருப்பித் திருப்பி உங்கள் மீது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறது. உங்கள்மீது என்றால் உங்கள்மீது மட்டும் அல்ல; கர்நாடகா, தமிழகம், இரண்டையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறது. இது எங்களுக்கு மிகுந்த வேதனையைத் தந்திருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டினுடைய கருத்துக்கள் வெளியிடப்பட்ட பிறகும்கூட அதைப்பற்றி நாம் எந்த ஒரு சீரியஸோடு (குறுக்கீடு) எந்த ஆட்சி என்பது எனக்கு முக்கியம் அல்ல; It is an observation of the highest court of the country. I am not bothered about which Government has been condemned. அது எனக்கு முக்கியமானது அல்ல; நான் உங்கள்மீது குறை சொல்கிறேன் என்று நான் சொல்லவில்லை. யார்மீது சொல்லியிருந்தாலும், என்மீதே சொல்லியிருந்தாலும் "a due observation of the Supreme Court, i.e., the highest court, for that matter the observation of the judiciary amounts to its verdict". இதுதான். அது ஒரு தீர்ப்பு சொன்னதாகவேதான் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அது என்னென்ன விவரங்கள் சொல்லியிருக்கிறது, உங்களுக்குத் தெரியும்; Clearly it has stated. நாட்டுக்கு முழுவதும் தெரியும். அப்படி உங்களாலே முடியவில்லை என்று சொன்னால், get out. நீங்கள் அந்தப் பொறுப்பிலேயிருந்து வெளியேறுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், அதைப்பற்றி (குறுக்கீடு) என்ன

சொல்கிறீர்கள், சரி சொல்லுங்கள். நீங்கள் என்னைவிட deep-ஆகப் படித்திருப்பீர்கள், சொல்லுங்கள்.

*முற்பகல் 10-40*

**திரு. சைதை கா. கிட்டு:** அப்படிச் சொல்லவில்லை. தீர்ப்புதான் சொல்லியிருக்கிறது; நீங்கள் மாற்றி மாற்றிப் பேசாதீர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். சுப்ரீம் கோர்ட் என்ன சொன்னது என்று நீங்கள் எதைச் சொல்கிறீர்களோ அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு) சுப்ரீம் கோர்ட் அந்தமாதிரி சொல்லியிருக்கிறது. அப்படியிருக்கிறது என்றால் I am subject to correction. வேறே நீங்கள் சொல்வதாக இருந்தால் (குறுக்கீடு) yes Mr. A.L.S.

***திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் 3 institutions - Judiciary இருக்கிறது, அதைப்போல, சட்டமன்றம் இருக்கிறது, நிர்வாகம் இருக்கிறது, ஒவ்வொன்றும் "each one is supreme in its own sphere" என்ற கருத்தை அடிக்கடி சொல்லுவார். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சியைப் பார்த்து "நீங்கள் வீட்டுக்குப் போங்கள்" என்று சொல்லுவதற்கு சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகாரம் இருக்கிறதா என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டும்.

**THIRU M. ABDUL LATHEEF:** Yes, Yes I am coming to that question also.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் லத்தீப், இது எங்கேயோ திசை திரும்பிப் போய்க்கொண்டு இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் சொன்னதற்குத்தான் அவர்கள் கேட்டார்கள். நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** இந்தச் சபையிலே நாம் சட்டம் நிறைவேற்றுகிறோம். இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபை. இதில் நிறைவேற்றப்படுகிற சட்டம், அரசமைப்புச் சட்டத்திற்கு ஏற்புடையதுதானா, இல்லையா என்று யார் தீர்மானிப்பது? நாமே தீர்மானித்துக் கொள்வதா? It is only Judiciary. Constitution is nothing but as it is interpreted by the Judiciary. The Statute is nothing but as it is interpreted by the Judiciary.





**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சியைப் பார்த்து அது உயர்நீதிமன்றமோ, உச்சநீதிமன்றமோ, நம்மைக் கண்டிக்கலாமே தவிர, முடியவில்லை என்றால் நீங்கள் பதவியை விட்டு விலகுங்கள் என்று சொல்லுவதற்கு அதிகாரம் இல்லை என்பது என் கருத்து. இன்னொன்று. நீதிமன்றங்கள் - நான் சொல்வதாக இருந்தால், நானும் வழக்கறிஞர்தான். நீதிமன்றங்கள் அவர்களுடைய வரைமுறையில் நிற்க வேண்டும்—வீட்டுக்குப் போ என்று ஒரு ஆட்சியைச் சொல்வதற்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லை, வரம்பு இல்லை. மாறாக இன்னொன்று, உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தாலும், உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்தாலும் அவரை வீட்டுக்கு அனுப்புகின்ற அதிகாரம் நாடாளுமன்றத்தில் அவர்மீது impeachment கொண்டுவந்து வெளியேற்றுகின்ற அதிகாரத்தை அரசியல் சட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட சபைக்குத் தந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களெல்லாம் பெரிய Legal experts. எனக்குத் தெரியும். லத்தீப் பேசட்டும், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** தலைவரவர்களே, ஏ.எல்.எஸ். அவர்கள் எந்தக் கண்ணோட்டத்தில் பேசுகிறார் என்பது எனக்குத் தெரியும். நானும் அவருடைய அந்தக் கருத்துகளை ஏற்றுக்கொள்ளக்கூடியவன்தான். சாதாரணமாக, சட்டமன்றத்தைக் கலைப்பதோ அல்லது ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவதோ நீதிமன்றத்தினுடைய வேலை அல்ல என்று சொன்னாலும், நம்முடைய ஆட்சியின், ஆட்சித் துறையினுடைய நடவடிக்கைகளை, அவர்கள் எடுக்கின்ற முடிவுகளை அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையிலே கணித்துப் பார்த்து அந்தக் கணிப்பின் அடிப்படையிலே இது அரசமைப்புச் சட்டத்திற்கு முற்றிலும் முரண்பட்டது என்று சொன்னால், ஆட்சியிலே இருப்பவர்கள் அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். நான் Constitution என்று சொன்னால், அவர் சொல்கிறார், மூன்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது என்று. Separation of Powers is there. There is no dispute about that. Government இருக்கிறது. Judiciary இருக்கிறது. Bureaucracy இருக்கிறது. இது எல்லாம் இருக்கிறது. சரிதான். இது எல்லாம் separate.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் திரு. ஏ.எல். சுப்பிரமணியன் சொல்கிற கருத்தை ஏற்றுக்கொள்கிறீர்கள். ஆனால் நீங்கள் வேறு ஒன்றைச் சொல்கிறீர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் என் கருத்தைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம். நீங்கள் இப்போது உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**THIRU. M. ABDUL LATHEEF:** Every line has got its own interpretation. My interpretation is that it has been already substantiated and sustained not only by the Supreme Court, but also by all the High Courts. What I am saying is in confirmity with the Constitutional provisions. That is all.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, உச்ச நீதிமன்றம் சொன்ன கருத்தை அப்படியே வரி பிசகாமல் சொல்லாத காரணத்தினால் ஏற்படுகின்ற குழப்பம் இது. உச்ச நீதிமன்றம் இந்த அரசைப் பார்த்தோ அல்லது கர்நாடக அரசைப் பார்த்தோ நீங்கள் வெளியேறுங்கள் என்று சொல்லவில்லை. என்ன பிரச்சினை அங்கே எழுந்தது என்றால், 'இந்தப் பிரச்சினையிலே அவர்களை எல்லாம் விடுதலை செய்யாவிட்டால், கர்நாடக சிறையிலே இருக்கின்றவர்களையும், தமிழகச் சிறைகளிலே உள்ள ஐந்து தீவிரவாதிகளையும் விடுதலை செய்யாவிட்டால், ராஜ்குமாரை விடுவிக்க மாட்டார்கள். அதனால் கர்நாடகத்திலும் தமிழகத்திலும் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை வரும் என்று வழக்கறிஞர்களால் சொல்லப்பட்டது. அப்படி சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை வரும்போது அதைச் சமாளிக்க முடியாவிட்டால், அந்த அரசு வெளியேறலாம் என்றுதான் உச்ச நீதிமன்றத்திலே சொல்லப்பட்டதே தவிர, நீங்கள் எல்லாம் இப்போதே வெளியேறுங்கள் என்று உச்ச நீதிமன்றம் சொல்லவில்லை. எனவே சொன்ன வாசகத்தை சரியாக ஞாபகத்தில் வைத்துக்கொண்டால், லத்தீப் அவர்கள் சொன்னதிலும் குற்றம் இல்லை, ஏ.எல். சுப்பிரமணியன் அவர்கள் சொன்னதிலும் குற்றம் இல்லை. இரண்டிலும் குற்றம் இல்லை.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்து குறிப்பிலே இருக்கிறது. அதை நான் மாற்றிச் சொன்னாலோ அல்லது வேறு யார் மாற்றிச் சொன்னாலோ அது அவரவர்களுடைய மொழிபெயர்ப்பு அல்லது அதைப் புரிந்துகொள்கிற அடிப்படையிலே அது அமையுமே தவிர, உச்ச நீதிமன்றம் தன்னுடைய கருத்தைச்





சொன்னது, குறிப்பிலே இருக்கிறது. அதை ஒருவேளை நான் மாற்றிச் சொன்னாலும் அந்தக் குறிப்பைப் பார்த்தே தெரிந்துகொள்ளலாம். ஆனால் அவர்கள் சொன்னது, கேட்ட கேள்வி, இத்தனை ஆண்டுகள் என்ன செய்துகொண்டிருந்தார்கள் இவர்கள் என்ற கேள்வியை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இப்போதுள்ள பிரச்சினையைப்பற்றி அல்ல அது. இத்தனை ஆண்டுகள் என்ன செய்துகொண்டிருந்தார்கள்? அதுதான் பிரச்சினை. இன்றைக்கு இப்படி ஒரு பெரிய சட்ட சிக்கல் ஏற்பட்டிருக்கிறதே, இந்தியாவிற்குள்ளேயே இந்திய சட்டங்களுக்கு அடங்காத ஒரு பகுதியாக இன்றைக்கு யதார்த்த நிலையில் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறதே, இவர்கள் ஏன் இதனை, இதுவரையில் கட்டுப்படுத்தவில்லை என்றுதான் கேட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, திரு. லத்தீப் அவர்கள் இப்போது அவர்கள் இருக்கின்ற இடத்திற்குத் தோதாக இத்தனை ஆண்டுகள் என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். 10 ஆண்டுகளாக என்ன செய்துகொண்டிருந்தார்கள் என்று Supreme Court கேட்டது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** லத்தீப் எங்கேயும் இருக்க மாட்டான். எங்கே சட்டம் இருக்கிறதோ, எங்கே நியாயம் இருக்கிறதோ, எங்கே கொள்கை இருக்கிறதோ, அந்தக் கொள்கையிடத்திலேதான் இருப்பானே தவிர, அது முதலமைச்சர் அவர்களுக்கும் மிகத் தெளிவாகத் தெரியும். (மணியடிக்கப்பெற்றது) இப்போதும் அதே இடத்தில்தான் இருக்கிறேன். (குறுக்கீடு) அன்றைக்குக்கூட பி.ஜே.பி.யை எதிர்த்திருக்கிறேன். இன்றைக்குக்கூட பி.ஜே.பி.யை எதிர்க்கிறேன். என்றைக்கும் பி.ஜே.பி.யை எதிர்ப்பேன். அண்ணா, பெரியார் ஆகியோருடைய கொள்கைக்கு மாறாக யார் நடந்துகொண்டாலும் அதை எதிர்த்துப் போராடுவேன். அன்றைக்கும் போராடினேன். என்றைக்கும் போராடுவேன்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னைப் பார்த்துப் பேசவேண்டும். இத்தனை ஆண்டுகள் என்கிறீர்களே, அதை 10 ஆண்டுகள் என்று நீங்கள் சொல்லலாமே என்றுதான் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவ்வளவுதான் பிரச்சினை.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** 10 ஆண்டுகள் என்ன, 10 நிமிடமும் ஏதாவது மாற்றம் இருப்பதாக யாராவது சொன்னாலும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்தனை ஆண்டுகள் என்று சொல்வதற்குப் பதிலாக, 10 ஆண்டுகள் இருந்த அரசுகள் என்ன

பண்ணியது என்று உச்ச நீதிமன்றம் கேட்கிறது என்று நீங்கள் சொல்லவில்லையே என்கிறார்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** உச்ச நீதிமன்றத்தினுடைய கருத்துகள் வெளியிடப்பட்ட தற்குக் குறிப்பு இருக்கிறது. அந்தக் குறிப்பு.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அந்தக் குறிப்பிலேதான், 10 ஆண்டுகளாக இருந்த அரசுகள் என்ன செய்தன என்ற கேள்வியும் இருக்கிறது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** 10 ஆண்டுகளாக இருந்த அரசுகள் என்ன செய்தன என்று நீங்கள் யாரைக் குறிப்பிடுகிறீர்களோ, அவர்களையும் குறிப்பிட்டுத்தான் நான் சொல்கிறேன். நீங்கள் என்னை (குறுக்கீடு) side track பண்ணி அங்கே எடுத்துக்கொண்டு போக முயலாதீர்கள். (சிரிப்பு) நான் எல்லோரையும் - அவர்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். எல்லோரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்டால், கலைஞர் அவர்கள் எப்படியெல்லாம் கிடுக்கிப் பிடி போடுவார்கள் என்று எனக்குத் தெரியும். நீங்கள் என்ன சொன்னாலும் சரி. உங்கள் மேலே அவர்கள் இப்படிச் சொல்லிவிட்டார்கள் என்று நான் மகிழ்ச்சியோடு சொல்லவில்லை. ஒரு மாநில அரசைப்பற்றி, சுப்ரீம் கோர்ட்டிலே இவ்வளவு தூரம், பாரதூரமான கருத்துகளைச் சொல்லும் அளவுக்கு ஏன் நடந்துகொண்டீர்கள்? யார் நடந்துகொண்டிருந்தாலும், அது தவறுதான் என்பது என்னுடைய நிலை.

முற்பகல் 10-50

**HON. SPEAKER:** Please finish your speech quickly.

**THIRU. M. ABDUL LATHEEF:** I am on my feet. I rarely rise. It is not that I am happy that I should speak. In spite of my ill-health, I thought that I should speak. Therefore, I am....

**HON. SPEAKER:** I am not asking not to speak. You have taken twenty minutes. Kindly finish your speech quickly. That is a request I make here.

**THIRU. M. ABDUL LATHEEF:** I don't often interfere; I don't often speak; I don't even put the question often. I am sitting here silently and then, whenever I speak, if you just say that I should sit without completing my speech, then alright, I will take it up.





**HON. SPEAKER:** I never ask you to sit down without completing your speech. Don't misquote me. I have only made a request to you. The first speaker has taken only 15 minutes. You have already taken 20 minutes. Please finish your speech quickly. That is all I can say.

**THIRU. M. ABDUL LATHEEF:** I have to refer to the Supreme Court judgement. It is a matter of record.

**HON. SPEAKER:** I have made a request to you. I can pass an order, if you want.

**THIRU. M. ABDUL LATHEEF:** Thank you, Mr Speaker. I have made certain references about the observations made by the Supreme Court. Whatever I say, I don't say that it is exactly what the Supreme Court has said that during its course of observations. I just quote it. It may be either this way or that way different. But there is a record. Supreme Court-னுடைய ரெக்கார்டு இருக்கிறது. அதைப் பார்த்தால் தெரிந்துபோகும். அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதைத்தான் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது. நீங்கள் உங்களுடைய அறிவாலே, அனுபவத்தாலே எனக்கு இப்படியோ, அப்படியோ பதில் சொல்லலாம். ஆனால் உண்மையை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும், புரிந்துகொள்ள வேண்டும் என்பதிலே பெரும் அக்கறையுடையவன் நான். அதனாலே, என் பேச்சு முறையைப் பார்த்து நீங்கள், அது யார், இது யார் என்று கேட்டால் நான் என்ன சொல்லட்டும்? யாராக இருந்தாலும், அது நீங்களாக இருந்தாலும், இதற்கு முந்தையவர்களாக இருந்தாலும், தவறு, தவறுதான். அது அரசமைப்புச் சட்டத்திற்கு மாறாக இருக்குமேயானால், அதை நான் விமர்சனம் செய்வேன்; கண்டிப்பேன். அது, நாங்கள் இல்லை, அவர்கள் என்று சொன்னால், ஏன் அவர்கள் வழியிலே நீங்கள் போகிறீர்கள்? அவர்கள் வழியில் போக வேண்டிய அவசியம் என்ன? அவர்கள்தான் வேண்டாம் என்று சொல்கிறபோது, அவர்கள் செய்த தவறை நாமும் செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்களா? அதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்; உங்களைச் செய்யவும் விடமாட்டேன். அவ்வளவுதான். கலைஞரைப் பொறுத்தவரையில் சொல்கிறேன் நான். நீ. அங்கே இருந்தாயே, இங்கே இருந்தாயே என்று கேட்டால், ஏன்? அதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆகவே நான் உங்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், அவன் என்ன சொல்கிறான்? எதற்காக கோபாலே வேண்டும் என்கிறான்?

இப்போது அதிலே மாற்றம் வேண்டுமென்று கேட்டால் என்ன அர்த்தம்? நீங்கள் சொல்லிவிட்டீர்கள்; நாங்கள் சொல்லவில்லை, அவர்கள் சொல்கிறார்கள், நண்பர் நெடுமாறன் போக வேண்டுமென்று. நெடுமாறன்தான் வரவேண்டும் என்று உங்களிடம் யார் சொன்னது? அதற்கு என்ன காரணம்? அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? விடுதலை செய்து விட்டான் ஒரு ஆளை. ராஜ்குமாருடைய மருமகன் கோவிந்தராஜனை விடுதலை செய்திருக்கிறான். அந்த கோவிந்தராஜன் வந்து என்ன சொல்கிறார்? இல்லை, நெடுமாறனையே அனுப்புங்கள் என்கிறார். என்ன அர்த்தம்? விடுதலை பெற்ற கோவிந்தராஜன் வெளியே வந்து இப்படிச் சொல்கிறார் என்றால், நெடுமாறனையே அனுப்புங்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம்? அங்கே இருந்துகொண்டு எல்லாம் தெரிந்துகொண்டிருக்கிறான்; இவர்களுக்குள்ளே என்ன உறவு முறை, இவர்கள் எவ்வளவு தொடர்பு வைத்திருக்கிறார்கள். இந்த வீரப்பன் சொல்வது உண்மைதானா, அவன் எதற்காக ராஜ்குமாரைக் கடத்தினான், இதையெல்லாம் தெரிந்து கொண்டுவந்து, கோவிந்தராஜன் சொல்கிறார், பாவம் பேச முடியாது தவித்துக்கொண்டிருக்கிறார், கோவிந்தராஜன்—மருமகன்; மகன்கள் இரண்டு பேரும் வந்து ரொம்ப அடக்க ஒடுக்கமாக 'சாமி' என்று நம் நெடுமாறனிடம் வேண்டிக்கொண்டு, பாவம், உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். என்ன அர்த்தம்? நீங்கள் போனால்தான் ஏதாவது நடக்கும், மற்ற யார் போனாலும் நடக்காது என்றுதானே அர்த்தம்? அப்போது என்ன அர்த்தம்? ஆகையினால் இன்றைக்கு இருக்கிற நிலைமை என்னவென்றால்....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இதைத் திருத்துவதற்காவது மாண்புமிகு உறுப்பினர் அனுமதிப்பார் என்று கருதுகின்றேன். கோவிந்தராஜனுடைய பிள்ளைகள் அல்ல; ராஜ்குமாருடைய பிள்ளைகள். (குறுக்கீடு) கோவிந்தராஜனுடைய பிள்ளைகள் அல்ல; ராஜ்குமாருடைய பிள்ளைகள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** ராஜ்குமாருடைய பிள்ளைகள்தான்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எப்படி இருந்தாலும், நீங்கள் ஒரு நிமிடத்திற்குள் உங்கள் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

முற்பகல் 10-55

**திரு. ம. அப்துல் லத்தீப்:** சரி. முதல்வர் அவர்களுடைய திருத்தத்திற்கு மிக்க நன்றி. உங்களுடைய திருத்தத்திற்கு எப்போதும் நான் வரவேற்பை



அளிப்பவன். நீங்கள் திருத்தித் திருத்தியே நான் வளர்ந்தவன். ஆனால், நான் ஒரு விஷயம் சொன்னதைக் கேட்காமல், நீங்கள் என்னவோ தகாத இடத்திற்குப் போய்விட்டீர்கள். அவ்வளவுதான் விஷயமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. உங்களுடைய திருத்தத்திற்கு மிக, மிக நன்றி. நான் ஒன்றைச் சொல்கிறேன். இதிலே பல விஷயங்கள் இருக்கின்றன. நான் பேசக்கூடாது. நீங்கள் சொன்னீர்கள், கொஞ்சம் அடக்கத்தோடு பேசுங்கள் என்று. சபாநாயகரும் சொன்னார், ரொம்ப அடக்கத்தோடு பேசுங்கள், நிலைமை சீர்கெட்டு விடக்கூடாது என்று. நாம் விரும்புகிற ஒருவர் வெளியே வரவேண்டும். அந்த நடிகருக்காக நாம் விரும்பவில்லை. ஓர் உயிர் என்பதால் எல்லோர் மேலேயும் எங்களுக்கு அக்கறை இருக்கிறது. ஆனால், அதனாலே இரண்டு மாநிலங்களுக்குள்ளே மோதல் ஏற்படக்கூடாது. இது என்ன நாடய்யா இது? எவனோ ஒருத்தன் யாரையோ பிடித்துக்கொண்டு போகிறான், அதற்காக அவன் பிடித்துக்கொண்டு போனதால் தமிழர்களை எல்லாம் அடிப்பேன் என்று சொல்வதும்—தமிழர்களை அங்கே அடிப்பேன் என்று சொல்வதும், நாங்கள் அவர்களை விடமாட்டோம் என்று சொல்வதும் இதெல்லாம் நல்லதுதானா? இந்த நாட்டிற்கு நல்லதுதானா என்பதை உரிய மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நான் என்னுடைய அருமை நண்பர் கணேசன் அவர்களைக் கேட்டுக்கொள்வேன். நாடெல்லாம் ஏதோ சொல்லிக்கொண்டிருக்கிறது. நாங்களெல்லாம் உட்கார்ந்திருக்கிற இந்த அவையிலே நீங்கள் வீரப்பனை மாவீரன் என்று தயவுசெய்து சொல்லாதீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், நீங்கள் உட்காருங்கள். அது அவருடைய கருத்து. லத்தீப், நீங்கள் அதைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** சீக்கிரம் முடித்துவிடுகிறேன். அது அவருடைய கருத்துதான். அந்தக் கருத்தில் நான் குறுக்கே நிற்கவில்லை. ஆனால் சபை உறுப்பினர் என்ற முறையிலே, நானும் இங்கே உட்கார்ந்து இருந்ததால் அவருக்கு வேண்டுகோள் விடுக்கிறேன், அவ்வளவுதான். வேறு ஒன்றும் இல்லை. இந்த மாதிரி அவரை மாவீரன் என்று சொன்னால், எல்லோரும்தான் உட்கார்ந்து இருக்கிறோம், கலைஞரும் உட்கார்ந்து இருக்கிறார். இந்தச் சபையிலே மாவீரன் என்று சொல்லப்பட்டது என்ற ஒரு செய்தி வரும்போது அங்கே என்ன செய்வான், கர்நாடகாவிலே—நான் அதையெல்லாம் வெளியில் சொல்லவில்லை. அங்கேயே இருந்து

[திரு. ம. அப்துல் லத்தீப்] [2000 நவம்பர் 13

இந்தத் தமிழ்நாட்டுக்காரர்கள் அத்தனை பேரும் சேர்ந்துதான் செய்து இருக்கிறார்கள். சபையிலே இந்த மாதிரி பேசியிருக்கிறார்கள், வீரப்பனை மாவீரன் என்று சொல்லி இருக்கிறார்கள் என்று வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், நீங்கள் உட்காருங்கள். நான் உங்கள் பேச்சை எடுக்கவில்லை. திரு. லத்தீப், உங்கள் பேச்சை முடிக்க வேண்டும். நீங்கள் பேச்சை நீட்டித்துக்கொண்டே போகிறீர்களே, நான் அதை அனுமதிக்க முடியாது.

**THIRU M. ABDUL LATHEEF:** Thank you very much for your leniency.

**HON. SPEAKER:** Yes. I have been too lenient. You have spoken for more than 25 minutes. Hon. Member Thiru. Santhanam.

**THIRU M. ABDUL LATHEEF:** I am just at the verge of completing my speech.

**HON. SPEAKER:** You are not going to complete. You are going on.

**THIRU M. ABDUL LATHEEF:** I am completing. Please don't cut it abruptly, Mr. Speaker. ஆகையினால், நான் கேட்டுக்கொள்வது இந்த மாதிரி விஷயங்களில் எல்லோரையும் நான் கேட்டுக்கொள்கிறேன் — கொஞ்சம் விவேகத்தோடுதான் நாம் சிந்திக்க வேண்டும். அரசியல் கொண்டு வரவேண்டுமென்று எதிலேயும் நினைக்கக்கூடாது. ஆளுங்கட்சி நண்பர்களாக இருந்தாலும், அல்லது எதிர்க்கட்சி நண்பர்களாக இருந்தாலும், இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்று. எனவே நாம் இரண்டு மாநிலங்களுக்கும் சுமுக நிலையை ஏற்படுத்தவும், எல்லாவற்றிற்கும் மேலாக அரசமைப்புச் சட்டத்தினுடைய இறையாண்மையை, நாம் உயிர் கொடுத்தாவது காப்பாற்ற வேண்டும் என்ற அடிப்படையிலே, அதுவும் எங்களைப் போன்றவர்கள்— நாங்களும்கூட இதன் மேலே பிரமாணம் எடுத்துக்கொண்டுதான் உறுப்பினராக இருக்கிறோம். எங்களைவிட இரகசியக் காப்புப் பிரமாணமும், அரசமைப்புச் சட்டப் பிரமாணமும் எடுத்துக்கொண்டிருக்கிற அமைச்சர் பெருமக்கள், அவர்களுடைய தலைமை அமைச்சர், முதலமைச்சர் அவர்களுக்கு இதிலே பெரும் பொறுப்பு இருக்கிறது. அந்தப் பொறுப்பை அவர் நிறைவேற்ற, அதற்காகத்தான் அவர் பேசாமல் இருக்கிறார் என்பது என்னுடைய நம்பிக்கை. ஆகையினால் இனிமேலாவது இதுகுறித்து ஆழ சிந்தித்து, நல்ல நடவடிக்கை எடுத்து, அந்த ராஜ்குமாரைக்



2000 நவம்பர் 13] [திரு. ம. அப்துல் லத்தீப்]

கொண்டுவந்து பெங்களூரிலே விட்டுவிட்டு இந்தப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காண வேண்டும் என்பதில் அரசே சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

*முற்பகல் 11-00*

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பனைப் பொறுத்த அளவிலே, இந்த அவையிலே நடந்துகொண்டிருக்கிற இந்த விவாதம் இன்றைக்கு மட்டுமல்ல, சென்ற ஆண்டுகூட பல நேரங்களிலே இந்த விவகாரத்தைப்பற்றி நாம் இந்த அவையிலே பேசியிருக்கிறோம். வனத் துறை அலுவலர்களை எல்லாம் கடத்தி வைத்துக்கொண்டு அப்போது இதே நிலையை வீரப்பன் எடுத்திருக்கிற நேரத்தில், இந்த அவையிலே அந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது அப்போதுகூட தமிழகத்தைச் சேர்ந்த பல பேர் மைசூர் சிறைச்சாலைகளிலே தடா கைதிகளாக பல ஆண்டுகளாக விசாரணை என்ற பெயரிலே இருக்கிறார்கள் என்கின்ற நிலையெல்லாம் இந்த அவையிலே எடுத்துச் சொல்லப்பட்டது. ஆனால் அப்போது அந்தப் பிரச்சினை முடிந்தவுடனே, இந்த அரசாங்கங்கள் மறுபடியும் தொடர்ச்சியாக அதற்கு எப்படி முடிவு காண வேண்டும் என்கின்ற நிலையை எடுக்காது விட்டுவிட்ட காரணத்தினால்தான் இந்த நிலைகள் மீண்டும் மீண்டும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அன்றைக்கு இந்தத் தடா கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்று நமது அரசும், அதேபோல கர்நாடக அரசும் கூடி விவாதித்திருந்தால் சட்ட ரீதியாகவே இதைத் தீர்த்திருக்க முடியும். அதை நாம் செய்யவில்லை. அன்றைக்கு இருந்த நிலையிலே அந்த வனத் துறைக் காவலர்கள் விடுவிக்கப்பட்டார்கள். அதோடு அந்த வாதம் முடிந்துவிட்டது. இன்றைக்கு மீண்டும் கன்னட நடிகர் ராஜ்குமார் அவர்கள் கடத்தப்பட்டிருக்கிறார் என்ற நிலை வந்தவுடனே, நாம் அந்த விவகாரத்தைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம். இரண்டு மாநில அரசுகளும் அதற்குரிய முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கின்றன. அது இரண்டு மாநிலங்களிலே இருக்கின்ற மக்களைப் பொறுத்த விவரம். என்கின்ற காரணத்தால் இந்த இரண்டு மாநிலங்களிலே இருக்கின்ற மக்களும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது. அதுவும் தமிழர்கள் இப்போது கர்நாடகத்திலே அதிகமாக வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள் என்பதால், அவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்கின்ற நிலையிலே இன்றைக்கு இந்தப் பிரச்சினையை மிக நிதானமாகக் கையாள வேண்டும் என்பதிலே எந்த

மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆனால் இந்தப் பிரச்சினை நீண்டுகொண்டே போகின்ற நேரத்தில் எத்தனை தமிழர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்? இன்று கர்நாடகத்திலே மத்திய அரசு அலுவலகங்களிலே வேலை செய்கின்ற, தமிழகத்தைச் சேர்ந்த நமது அரசு ஊழியர்கள் பல பேர் தங்களுடைய பிள்ளைகளை பள்ளிகளிலே படிக்க வைத்தால்கூட அங்கே என்ன நிலை ஏற்படுமோ, என்ன பிரச்சினை வருமோ, நாளைக்கு நமக்கு என்ன ஆபத்துக்கள் நிகழக்கூடுமோ என்று அந்தக் குழந்தைகளுடைய படிப்பைக்கூட பாதியிலே நிறுத்திவிட்டு அவர்களுடைய குடும்பத்தோடு இங்கு வந்து இருக்கின்ற ஒரு சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இதெல்லாம் அவர்களுடைய வாழ்க்கையைப் பாதிக்கின்ற ஒரு நிலையாக இருக்கின்ற காரணத்தால் இதை நிதானத்தோடு அணுக வேண்டும்.

இன்று பல்வேறு நிலைகளிலே இங்கு நமது உறுப்பினர்களெல்லாம் குறிப்பிட்டதைப்போல, எதிர்க்கட்சிகளெல்லாம் எடுத்து வாதிடுகின்ற பல பிரச்சினைகளை காட்டிலிருந்து வீரப்பன் இப்போது வாதாடிக் கொண்டிருக்கிறான். இரண்டு மாநிலங்களும் பல ஆண்டுகளாக நீதிமன்றங்களை நாடி அதன் வாயிலாகக் கிடைக்கப்பெற்ற தீர்ப்பின் மூலமாக, காவிரி நதிநீர்ப் பங்கீடு எல்லாம் செய்துகொண்டிருக்கிற அந்தப் பிரச்சினையைக்கூட எடுத்துச் சொல்கிற நிலை. எங்களைப் பொறுத்த அளவிலே மக்கள் பிரச்சினையாகிய சேலம் உருக்காலையைத் தனியாருக்கு விற்கக்கூடாது என்று இந்தச் சட்டமன்றத்திலே பேசி நாமெல்லாம் தீர்மானம்கூட நிறைவேற்றினோம். விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற நிலையையெல்லாம் எடுத்துச் சொன்னோம். இவற்றையெல்லாம் எதிர்க்கட்சிகள் சொல்வதற்குப் பதிலாக, வீரப்பனிடத்திலே அவற்றைக் கொடுத்துவிட்டால் அவற்றிற்கெல்லாம் ஒரு விடிவு ஏற்பட்டுவிடுமே என்கிற நிலைகூட இப்போது நாட்டிலே வந்திருக்கிறது. அந்த அளவிற்கு வீரப்பன் நாட்டைப்பற்றியும், நாட்டு மக்களைப்பற்றியும் பேசுகின்ற அளவுக்கு ஒரு தியாகியாக இன்றைக்கு உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறான் என்கின்ற நிலைதான் இன்று வந்துகொண்டிருக்கிறது. இதைத்தான் எதிர்க்கட்சிகளெல்லாம் மிகவும் வருத்தத்தோடு இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

காட்டிலே தன்னுடைய வாழ்க்கையைத் தொடங்கி, அங்கிருக்கிற மிருகங்களை வேட்டையாடி, அங்கிருக்கின்ற மரங்களைக் கடத்திக்





கொண்டிருக்கிற ஒருவன், தமிழக மக்களைப்பற்றிச் சிந்தித்து, தமிழகத்திற்காகப் போராடுகின்ற ஒரு போராட்டவாதியாக இன்று சித்தரிக்கப்படுகின்ற இந்த நிலை உண்மையிலேயே வேதனைக்குரியது. எனவே, இதையெல்லாம் தவிர்த்து எப்படியும் கன்னட நடிகர் ராஜ்குமார் அவர்களை விரைவாக மீட்டுத் தந்து, அதன் மூலமாக இரண்டு மாநிலங்களினிடையே இருக்கின்ற உறவுகள் சீராக இருப்பதற்கும், அங்கு வாழ்கின்ற தமிழக மக்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் உத்தரவாதம் அளிக்கின்ற அளவிலே இரண்டு மாநில அரசுகளும் செய்ய வேண்டும், செயல்பட வேண்டுமென்று என்னுடைய கருத்தை வலியுறுத்தி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாடு மிகவும் கவலையோடு பார்த்துக்கொண்டிருக்கிற ஒரு பிரச்சினையின்மீது நாம் விவாதித்துக்கொண்டிருக்கிறோம். இன்று தமிழக அரசும், அதேபோல கர்நாடக அரசும் சேர்ந்து ராஜ்குமாரை விடுவிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையில் ஆரம்ப கட்டத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, அதற்கு எந்தவிதத்திலும் பங்கம் ஏற்படுத்தக்கூடாது என்ற முறையிலே, அது சம்பந்தமாக நாங்கள் விமர்சனம் செய்யக்கூடாது என்ற வகையில் எந்தக் கருத்தையும் எடுத்துச் சொல்லவில்லை. ஆனால் துரதிருஷ்டவசமாக இன்று சட்டம்-ஒழுங்கு என்ற மிஷினரியையே ஒரு கொள்ளைக்காரனுக்கு, ஒரு சமூக விரோதிக்கு சரண்டர் செய்கிற அளவுக்கு விஷயங்கள் போகின்றன என்ற நிலை ஏற்பட்ட நேரத்தில், அதற்கும் மேலாக இந்த நாட்டினுடைய பிரிவினைக்காக வாதாடுகிற பிரிவினைவாதிகளுக்குப் பின்னால் தமிழக அரசு போகிறது என்ற கவலையோடு, அந்தப் பிரிவினைவாதிகளைத்தான் ஆதரிக்கிறது என்ற அவர்களுடைய கற்பனைகளுக்கு உள்ளிட்டு நான் செயல்பட வேண்டியவன் என்ற முறையிலே உள்ள கருத்துகள் வீரப்பனிடமிருந்து வந்ததற்குப் பிறகு, இந்தப் பிரச்சினைகள் சம்பந்தமாக சில கருத்துகளைச் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு இன்றைக்கு நாம் வந்திருக்கிறோம்.

முற்பகல் 11-05

இந்த நாட்டில் பிரிவினைவாதிகளை அல்லது பிரிவினை சக்திகளை வலுப்படுத்தக்கூடிய முறையிலே தமிழக அரசினுடைய நடவடிக்கைகள் அமையக்கூடாது என்ற கவலையோடு நாங்கள் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். ஏற்கெனவே வீரப்பனால் வைக்கப்பட்ட பல

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2000 நவம்பர் 13

கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு தமிழக அரசு நடவடிக்கை எடுக்கின்ற நேரத்திலே உச்ச நீதிமன்றம் கேட்டதுபோல, 'what is the guarantee for the release of Rajkumar after the release of TADA detenus? பல முறையிலே, பல நேரங்களிலே வீரப்பனோடு பேசப்பட்டிருக்கின்றது. ஆனால் வீரப்பன் தன்னுடைய கோரிக்கைகளை அடைவதற்காக வைத்த விஷயங்களுக்குத் தமிழக அரசு பணிந்து போவதைத் தவிர, தமிழக அரசினுடைய மிக முக்கியமான கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அதை நடைமுறைப்படுத்துவதற்கு எந்தவிதமான guarantee-யும் இல்லாத நிலையிலேதான் இன்று இந்த விஷயங்கள் அமைந்திருக்கின்றன. ராஜ்குமாரை மீட்பதற்கு பிரிவினைவாத சக்திகளைப் பயன்படுத்தக்கூடிய முறையிலே இன்றைக்கு விஷயங்களைக் கொண்டு செல்வதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது. ஆகவே இன்று இந்தப் பிரச்சினையைப் பொறுத்த அளவிலே, மிக முக்கியமான, நாடு கவலையோடு பார்த்துக்கொண்டிருக்கின்ற இந்தப் பிரச்சினையிலே, தமிழக அரசு, இந்த மாநிலத்திலேயிருக்கின்ற அனைத்து அரசியல் கட்சிகளையும் அழைத்துப் பேசி அவர்களுடைய ஒத்துழைப்போடு இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவை ஏற்படுத்துவதற்கு ஏன் முன்வரக் கூடாது என்று நாங்கள் கேட்க விரும்புகிறோம். கர்நாடக அரசு அந்த முறையிலே நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். கர்நாடக முதலமைச்சர் பத்திரிகைகளிலே சொல்லியிருப்பதைப் படிக்கின்ற நேரத்திலே, ராஜ்குமார் அவர்களை மீட்பதற்கான எல்லா பொறுப்புகளையும் இன்று தமிழக அரசினுடைய, தமிழக முதலமைச்சருடைய தலையில் அவர்கள் கட்டி வைத்திருக்கிறார்களோ என்ற ஐயப்பாடுகூட ஏற்படுகிறது. அப்படிப்பட்ட மிக முக்கியமான பொறுப்பிலே இன்றைக்குத் தமிழக அரசும், தமிழக முதல்வரும் வந்திருக்கின்ற நேரத்திலே, தமிழக மக்களும், அனைத்துக் கட்சிகளும் இந்தப் பிரச்சினையைக் கவலையோடு பார்க்கின்ற நேரத்திலே, தமிழக அரசு அனைத்துக் கட்சிகளையும் கூட்டி இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவை எடுத்து, ராஜ்குமார் அவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதுவல்லாமல், ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, இன்று மனிதனையே கடிக்கக்கூடிய இடத்திற்கு வந்திருக்கிறது. வீரப்பனை வளர்ப்பதோ, வீரப்பனால் வைக்கப்படுகின்ற கட்டளைகளுக்கு அரசு பணிந்து போவதோ சரியானதல்ல; இது ஒரு மிக முக்கியமான விஷயம். சட்டம்—ஒழுங்கு மெஷினரியையே ஒரு கொள்ளைக்காரனுக்கு அடகு வைக்கக்கூடிய முறையிலே நடந்துகொண்டோம் என்று நம்முடைய எதிர்காலப் பரம்பரை நம்மைக் குற்றம் சாட்டக்கூடிய முறையில் விஷயங்கள் அமையும். அதற்குச் சந்தர்ப்பம்



2000 நவம்பர் 13] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

கொடுக்காமல் அனைத்துக் மக்களுடைய ஆதரவோடு, அனைத்துக் கட்சிகளுடைய ஆலோசனையோடு, தமிழக அரசு இதில் ஒரு நல்ல முடிவை எடுத்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் 4½ ஆண்டு காலப் பிரச்சினையல்ல இது. கொஞ்ச காலமாகவே தமிழகத்தை வாட்டி, வதைத்து, வேதனைப்படுத்துகின்ற பிரச்சினை. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் இரண்டு மாநில மக்களுடைய ஒற்றுமையான, சுபிட்ஷமான வாழ்வு இதில் அடங்கியிருக்கிறது. தேசிய ஒருமைப்பாட்டுக்குக்கூட இதற்குள் பொருள் மிகுந்திருக்கிறது. எனவே இந்த விஷயத்தை, மொழி, மாகாண உணர்வோடு சிந்திக்கக் கூடாது. இதற்கு முன்னால் சிலர் பேசியபோது அப்படியொரு கருத்து கூறப்பட்டது. நிச்சயமாக மொழி, மாகாண உணர்வோடு அல்லாமல், தேசிய ஒருமைப்பாடு என்கிற முறையில் நம்முடைய தமிழக அரசு ஆழ்ந்து சிந்தித்து, எப்படி எனக்கு முன்னால் பேசிய நம்முடைய தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர் பேசினாரோ, அதுபோன்று, முள்ளில் விழுந்த ஆடையை எப்படி எடுப்பது என்ற அடிப்படையில், பல வகையில் சிந்தித்து, இப்படி எடுத்தால் அதைக் கிழியாமல் எடுத்து விட முடியுமா என்றெல்லாம் பல வகையில் இதைப்பற்றியே சிந்தித்து நம்முடைய அரசாங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. கர்நாடக அரசுக்கு இந்த விஷயத்திலே அனைத்து எதிர்க்கட்சிகளும் பலவிதமான கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், வேற்றுமைக்கு அப்பாற்பட்டு ஒத்துழைப்பு நல்குகின்றார்கள் என்ற செய்தி இருக்கின்றது.

முற்பகல் 11-10

அதேபோன்று நம்முடைய தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து எதிர்க் கட்சிகளும்கூட இந்த விஷயத்தில் நல்ல முறையில் ஒத்தாசை கொடுக்கின்றார்கள். அது பேச்சுவாக்கில்கூட சில சந்தர்ப்பங்களில் அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுக்கவில்லையோ என்ற ஐயம் எழுந்துவிடக்கூடிய வகையில் ஆகிவிடக்கூடாது என்பதை நாம் இந்த விஷயத்தில் மிகத தெளிவாக இருந்து, அரசாங்கத்திற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில், வீரப்பனுடைய பிரச்சினையல்ல, இது ராஜ்குமாரை மீட்கக்கூடிய பிரச்சினை; இந்த விஷயத்தில் கொலை அல்ல, கொள்ளை அல்ல, எதைச் செய்தாலும், மக்களுக்கு உதவி செய்கின்றான் என்றெல்லாம் பாராட்டிப்

பேசுவதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. அறநெறி நாளும் காத்து, அரும்பொருள் ஈட்டி நல்ல முறையோடு வாழ வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள்; அது நம்முடைய பண்பாடு. எதைச் செய்வதாக இருந்தாலும், அறத்திற்குப் புறம்பாகச் செய்யக்கூடாது. கொள்ளை அடித்து, கொலை செய்து உதவலாம் என்பது நிச்சயமாக மனித வாழ்க்கைக்கு அல்லது மனிதப் பண்பாட்டிற்கு உகந்ததல்ல. நல்லது செய்வதாக இருந்தாலும்கூட, அதை எப்படிச் செய்ய வேண்டும் என்று இருக்கின்றது. எனவே எக்காரணம் கொண்டும் தீவிரவாதத்தை—நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் மிகச் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். எக்காரணம் கொண்டும் தீவிரவாதத்தை—பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கக்கூடாது. கட்சி அடிப்படையில் எங்களுக்குள் ஆயிரம் வேறுபாடுகள் இருக்கலாம்.

அதேபோன்று ** என்னைப் பொறுத்தமட்டில், அது எப்படி என்று எனக்குப் புரியவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தமட்டில் எங்களுக்குள் கொள்கை வேறுபாடுதான்; ஆனால் கருத்தைப்பற்றி இந்த விஷயத்தில் எப்படி என்று சிந்திக்கும்போது, இந்த விஷயத்தைப் பொறுத்தமட்டில் ஆதரிக்க வேண்டியிருக்கின்றது; ஆதரிக்க வேண்டும். இதுபோன்று எந்தக் கட்சியாக இருந்தாலும், நல்லது செய்யும்போது, நல்ல விஷயத்திற்காக ஒத்தாசை செய்யும்போது ஆதரிக்க வேண்டும் என்பது எங்களுடைய கருத்து; ஆக, இந்தக் கட்சியை நாங்கள் எப்பொழுதும் எதிர்ப்போம் என்பது எங்களுக்கு இல்லை. எங்களுக்கு தேசியம்தான் முக்கியம்; கட்சியோ, சாதியோ, மதமோ இரண்டாவது பட்சம். எனவே எந்தக் கட்சியையும், எப்போதும் நாங்கள் எதிர்த்துக்கொண்டே இருப்போம் என்பது எங்களுடையது அல்ல; எங்களுடைய அளவுகோல் அனைத்தும் தேசியம், பண்பாடு, கலாச்சாரம்தான். எனவே இந்த விஷயத்தில்....(குறுக்கீடு)

**திரு. ம. அப்துல் லத்தீப்:** ஒரு விஷயத்தை,....... (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விஷயத்தை மாண்புமிகு உறுப்பினர்....... (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். நீங்கள் எப்போதுமே சுவரைப் பார்த்துப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுத்தால்தானே நீங்கள் எழுந்து நிற்கலாம்? (குறுக்கீடு) எத்தனை வருடம் சட்டமன்றத்தில் இருந்திருக்கிறீர்கள்? இது

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கூடவா தெரியாது உங்களுக்கு? (குறுக்கீடு) நீங்கள் எதைப்பற்றிப் பேசப் போகிறீர்கள்? நீங்கள் இப்போது Point of order கேட்கிறீர்களா?

**திரு. ம. அப்துல் லத்தீப்:** He referred my name. That is why I want a clarification. மாண்புமிகு உறுப்பினர் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இப்போது இந்த விளக்கம் சொல்லத் தேவையில்லை. (குறுக்கீடு) திரு. வேலாயுதன், நீங்கள் அந்தக் கருத்தைப்பற்றியெல்லாம் சொல்லாமல், வீரப்பன் பிரச்சினையைப்பற்றிய கருத்துகளை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் திரு. அப்துல் லத்தீப் பற்றிப் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கிறேன். (குறுக்கீடு). திரு. அப்துல் லத்தீப் உட்காரலாம். (குறுக்கீடு) திரு. அப்துல் லத்தீப், நீங்கள் பாலிசி பற்றி எல்லாம் பேசுவதற்கு இது நேரமல்ல. (குறுக்கீடு) நான்தான் உங்களைப்பற்றிப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்படும் என்கிறேன். (குறுக்கீடு) அதற்குத்தான், உங்களைப்பற்றி திரு. வேலாயுதன் பேசியது அவைக் குறிப்பிலே இடம் பெறாது. ஆகையினாலே நீங்கள் உட்காருங்கள். திரு. வேலாயுதன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**HON. SPEAKER:** I won't allow you, because I am expunging his remarks.

**THIRU M. ABDUL LATHEEF.** He quoted my name. So, I want to get a clarification.

**HON. SPEAKER:** I am expunging his remarks. So, I won't allow you. (Interruption)

**திரு. ம. அப்துல் லத்தீப்:** விதிப்படிதான் நான் விளக்கம் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நானும் விதிமுறைப்படிதான் சொல்கிறேன். (குறுக்கீடு) ஆமாம். Because, I have expunged his remarks, I won't allow you to speak. நான் அதைத்தான் உங்களிடம் சொல்லிவிட்டேன்.

**THIRU M. ABDUL LATHEEF:** To get the clarification, you cannot say 'No.'

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2000 நவம்பர் 13

**HON. SPEAKER:** No, No. You please sit down. I am standing. You please sit down. I am standing. That is the first rule.

**THIRU M. ABDUL LATHEEF:** It is my right to get the clarification. You cannot just say 'No.'

**HON. SPEAKER:** When the Speaker is standing....

**THIRU M. ABDUL LATHEEF:** If you want me to go out, I will go.

**HON.SPEAKER:** You can do whatever you like. I have no objection (Interruption) Oh, yes. You please sit down. I am standing. You please sit down.

**THIRU M. ABDUL LATHEEF:** You are always treating me partially.

**HON. SPEAKER:** You please sit down now. Because I am standing, you have to sit down. That is the elementary rule of the Assembly.

**THIRU M. ABDUL LATHEEF:** Your attitude towards me is always partial.

**HON. SPEAKER:** You please sit down. I am standing. You sit down. That is the first rule (Interruption). *நீங்கள் முதலில் உட்காருங்கள். வேலாயுதன், நீங்கள் தேவையில்லாமல் பேசாதீர்கள். வீரப்பன் பிரச்சினையைப் பேசுங்கள். நீங்கள், திரு. லத்தீப் அவர்கள் பற்றிப் பேசியதை அவைக் குறிப்பிலி நந்து எடுக்கிறேன். திரு. வேலாயுதன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. வேலாயுதன் உங்களைப் பற்றிப் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கிறேன். திரு. லத்தீப் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11-15*

**THIRU M. ABDUL LATHEEF:** He has mentioned my name.

**HON. SPEAKER:** That is why I have removed his observations.

**THIRU M. ABDUL LATHEEF:** What he said about me is in the record. He has mentioned me.

**HON. SPEAKER:** No. It will not go on record. (Interruption). No, you have taken too many chances. You are a senior member. You have to abide the chair. If you don't abide the Chair, it is better you go.



2000 நவம்பர் 13]

**THIRU M. ABDUL LATHEEF:** You always expect me to sit down or go.

**HON. SPEAKER:** Yes, Yes. Thiru Velayuthan.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாரையும் ஒன்றுமே சொல்லவில்லை. நல்லது எதைப் பேசினாலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் சொன்னேன். இந்த ராஜ்குமார் விஷயத்தைப் பொறுத்தமட்டில்.... ஒரு வீட்டிற்குத் தீப்பிடித்து விட்டால், அந்தத் தீயை அணைப்பதற்கு குளத்துத் தண்ணீரை எடுப்பதா அல்லது ஆற்றுத் தண்ணீரை எடுப்பதா, பைப்புத் தண்ணீரை எடுப்பதா என்பதல்ல பிரச்சினை. எந்தத் தண்ணீராக இருந்தாலும், தீயை அணைக்க வேண்டும். மண்ணை அள்ளிப் போட்டாலும் சரிதான். அதேபோன்று இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், நாம் ராஜ்குமாரை மீட்டுக் கொண்டுவந்து, இரண்டு மாநில மக்களும் ஐக்கியமாக, ஒற்றுமையோடு, சுபிட்சமாக, தேசிய ஒருமைப்பாட்டோடு வாழ்வதற்கு உண்டான வழியை வகுக்க வேண்டுமென்பது நம்முடைய அரசின் நோக்கம். அந்த அடிப்படையில் யாரை அனுப்புவது, யாரை அனுப்பக்கூடாது என்பதல்ல. அனுப்பக்கூடியவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று சிந்திக்கக் கூடிய நேரம் அல்ல இது. எனவே தேச விரோத சிந்தனை எங்கிருந்தாலும், யாரிடமிருந்தாலும், அது அழிக்கப்பட வேண்டியதுதான். தீவிரவாதத்தை ஒழிக்க வேண்டியதுதான். இந்த விஷயத்தைப் பொறுத்தமட்டில் கொள்ளைக்காரனுக்கு ஆதரவாக இருக்க வேண்டுமென்பது நமது நோக்கமல்ல; அரசாங்கத்திற்கும் நோக்கமல்ல. எப்படியாவது ராஜ்குமாரை மீட்டுக்கொண்டு வர வேண்டும்; இரண்டு மாநில மக்களும் அமைதியாக வாழ வேண்டுமென்ற நோக்கத்தில் எப்படிச் செய்யலாம் என்பது குறித்து பல இடங்களிலிருந்து வரக்கூடிய கருத்துகளைச் சேமித்து, அதன் மூலம் மீட்டுக்கொண்டு வர வேண்டுமென்ற ஆர்வத்தோடுதான் இந்தக் காரியங்கள் நடக்கின்றனவே தவிர, வேறல்ல. அரசு நல்ல முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறது. மேலும் இந்த முயற்சி தொடர வேண்டும். பலர் இராணுவத்தை அனுப்ப வேண்டுமென்றெல்லாம்கூடப் பேசினார்கள். என்னைப் பொறுத்தவரையில் அனுபவரீதியான ஒரு விஷயம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய..... (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி. திரு. சி. வேலாயுதன், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** ஒரேயொரு கருத்து. எனவே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இராணுவம் பற்றியெல்லாம் பேச வேண்டாம். திரு. சி. வேலாயுதன், நீங்கள் உட்காருங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 மாத காலமாக வீரப்பன் பிடியிலே இருக்கக்கூடிய ராஜ்குமார் அவர்களை எவ்வளவு விரைவாக விடுதலை செய்ய வேண்டுமோ, அவ்வளவு விரைவாக விடுதலை செய்வதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதிலே புதிய தமிழகம் கட்சியின் சார்பாக சில கருத்துகளை வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலும் நான் ஆரம்பத்திலேயே ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். யாராக இருந்தாலும், சட்டமன்றத்திற்கு உள்ளே இருந்தாலும், வெளியே இருந்தாலும், இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலும் அரசியல் ஆக்க வேண்டாம் என்பதுதான் என்னுடைய பணிவன்பான வேண்டுகோள்.

ஏறக்குறைய 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களுடைய வாழ்வு நிலை மற்றும் இரண்டு மாநிலங்களுக்கு இடையே இருக்கக்கூடிய உறவுகள் அடங்கிய ஒரு மென்மையான பிரச்சினை இது. எனவே இந்தப் பிரச்சினையை நாம் மிகவும் கண்ணும் கருத்துமாக அணுக வேண்டுமென்பதே என்னுடைய வேண்டுகோள்.

இங்கே நடிகர் ராஜ்குமார் அவர்களை விடுதலை செய்வதற்கு யாரை அனுப்புவது, யாரை அனுப்பக்கூடாது என்பது நம்முடைய விருப்பத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படக்கூடிய விஷயம் அல்ல என்பதுதான் என்னுடைய கருத்து. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இதற்கு ஓர் உதாரணத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முதல் உலகப் போரின் சமயம். அப்போது ரஷ்யாவுக்கும், அண்டை நாட்டுக்கும் ஒரு மோதல் ஏற்பட்ட சமயத்தில் பேச்சுவார்த்தைக்காக ரஷ்ய நாட்டிற்கு அழைப்பு வருகிறது. அப்போது சில நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. அந்த நிபந்தனைகள் எல்லாம் ஆச்சரியப்படக்கூடியவைகளாகவும் அதிர்ச்சி தரக்கூடியவைகளாகவும் இருக்கின்றன. இந்த நிபந்தனைகளை ஸ்டாலின் அவர்கள் லெனின் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னபோது, லெனின் என்ன சொன்னார்கள் என்று சொன்னால், 'தோழர் ஸ்டாலின் அவர்களே, நமக்குக் காரியம்தான் முக்கியம், இப்போது வீரியம் முக்கியமல்ல; பாவாடையைக் கட்டிக் கொண்டு, அந்தப் பேச்சுவார்த்தைக்குச் செல்ல வேண்டியது அவசியம் என்ற நிபந்தனையை அவர்கள் விதித்தாலும்கூட, அதைக்கூட ஏற்றுக்கொள்ளுங்கள்' என்றுதான் சொன்னார்கள்.



முற்பகல் 11-20

என்னைப் பொறுத்தமட்டிலும், நானும் அதைத்தான் வலியுறுத்த விரும்புகிறேன். ஏறக்குறைய 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களைக் காப்பாற்ற, ஒட்டுமொத்தமான பிரச்சினைகள் சுமுகமாகத் தீர இப்போது யாரை அனுப்புவது, யாரை அனுப்பக்கூடாது என்ற விருப்பத்தை நாம் தெரிவிக்காமல், இன்று வீரப்பனால் வைக்கப்பட்டிருக்கக்கூடிய கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியனவா, இல்லையா என்பது வேறு பிரச்சினை. ஆனால் 70 வயது, 75 வயது தாண்டிய ராஜ்குமார் அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். எனவே அவர் விடுதலை செய்யப்படுவதற்கு விரைவாக அனைவரும், அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த நிலைக்கு, ஒரு கருத்துக்கு வர வேண்டும். அதற்குண்டான ஆலோசனைகளையே சொல்ல வேண்டும். அரசியல் கருத்துகளை வெளியே வைத்துக்கொள்ளலாம். வேறு பிரச்சினைகளை வெளியே வைத்துக்கொள்ளலாம். இதிலே அனைத்துக் கட்சிகளும், அனைவரும் ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமென்பதே புதிய தமிழகத்தினுடைய வேண்டுகோள் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னட நடிகர் ராஜ்குமார் அவர்களை மீட்பது தொடர்பாக அரசு இதுவரையில் கவனமாக, எச்சரிக்கையான நடவடிக்கை எடுத்திருக்கிறது. இந்தப் பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்படுகின்ற வரையிலே யாருடைய ஏச்சுக்கும், பேச்சுக்கும் இடமளிக்காமல், எந்தவிதமான பதட்டத்திற்கும் இடந்தராமல் இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டுமென்று தமிழ் பாட்டாளி மக்கள் கழகத்தின் சார்பிலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கர்நாடகத்திலே 40 இலட்சம் தமிழர்களுக்கு மேல் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே அதுபோல கன்னடர்களும் பல இலட்சம் பேர் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையிலே கர்நாடக மாநிலத்தினுடைய ஒரு பிரபலமான, மக்கள் செல்வாக்குடைய ஒரு நபர் கடத்தப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறார். அதைச் சரி என்று யாரும் சொல்ல முடியாது. ஆனால் அதே நேரத்திலே இன்றைக்கு அவரை மீட்பது

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [2000 நவம்பர் 13

எப்படி என்பதற்கான ஆலோசனைகளிலே ஆக்கப்பூர்வமாக நாம் ஈடுபடுவதற்குப் பதிலாக, அனுப்பியது சரியா, தவறா, யாரை அனுப்பியிருக்கலாம், இன்னாரை அனுப்பியிருக்கக்கூடாது என்பதுபோல விவாதங்கள் சென்றுகொண்டிருக்கின்றன. சில நேரங்களில் ஒரு பெரிய தவறு நிகழ்ந்து விடாமல் இருக்க வேண்டும் என்பதற்காக சிறிய தவறைக்கூடச் செய்யலாம். நடைமுறை வாழ்க்கையிலேகூட இதை நாம் பார்க்கிறோம். அப்படிச் செய்ய வழி இருக்கிறது. 50 பேரை ஏற்றிச் செல்லக்கூடிய ஒரு பேருந்து சாலையிலே போகிறபோது திடீரென்று ஒருவன், சைக்கிளிலே குறுக்கே வந்துவிட்டால், அதை அதற்கு மாறான திசையிலே திருப்புகிறபோது பெரிய பள்ளத்திலே விழுந்துவிடும். 50 பேர்களுடைய உயிருக்கு ஆபத்து வரும் என்று நினைக்கிறபோது அந்தப் பேருந்து ஓட்டுநர் அந்த ஒருவன் மீது பிரேக் அடித்து கொஞ்சம் மோதினாலும் பரவாயில்லை என்று மோதுவது ஒரு சிறிய தவறைப்போல. ஆனால் 50 பேர்களுடைய உயிர்களைக் காப்பது என்பது ஒரு பெரிய காரியம். விபத்து நிகழ்ந்துவிடாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அந்த சைக்கிளில் சென்றவர்மீது பிரேக் அடித்து மோதிய அந்தச் சிறிய தவறைச் செய்வது எப்படி நியாயமானது என்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்களோ, அதுபோலத்தான் இந்தப் பிரச்சினையிலே ராஜ்குமார் அவர்களை மீட்பதுதான் முக்கிய நோக்கம் என்று கருதுகின்ற அரசோ அல்லது தமிழக மக்களோ இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டுவதற்கு யாரை அனுப்பினாலும் பரவாயில்லை, பிரச்சினை தீர்ந்தால் பரவாயில்லை, என்றுதான் நினைப்பார்கள். எனக்குக்கூட ஆசைதான், அரசு ஏன் என்னை அனுப்பவில்லை என்று சொல்லி, ஆனால் என்னோடு பேசுவதற்கு அங்கே இருப்பவர்கள் தயாராக இருக்க வேண்டும். அப்போதும் என்ன சொல்வார்கள்? ஏன் அவர்கள் யாரை விரும்பினார்களோ அவர்களை அனுப்பியிருக்கலாமே, எதற்கு இன்னாரை அனுப்பினார்கள், இவரோடு பேசவில்லையே, இதற்கு ஒரு முயற்சி தேவையா என்றெல்லாம்கூட வாதிடலாம். நடந்து முடிந்ததற்குப் பின்னாலே சில செயல்களை விமர்சிப்பது எளிது. ஆகவே நான் இந்தப் பிரச்சினையிலே இன்னொன்றையும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-25

இதிலே தமிழர் தேசிய இயக்கத்தினுடைய தலைவர் பழ. நெடுமாறன் அவர்கள், மக்கள் கல்வி இயக்கத்தினுடைய பொறுப்பாளராக இருக்கின்ற பேராசிரியர் கல்யாணி அவர்கள், மனித உரிமை அமைப்பினுடைய பொறுப்பாளராக இருக்கக்கூடிய சுகுமாரன் அவர்கள், இவர்களோடு



2000 நவம்பர் 13] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

நம்முடைய நக்கீரன் பத்திரிகை ஆசிரியர் கோபால், அவர்களும், மற்றவர்களும் இணைந்து இன்றைக்குச் சென்றிருக்கிறார்கள்.

இதிலே தீவிரவாதியை அனுப்பலாமா, பிரிவினைவாதியை அனுப்பலாமா என்றெல்லாம் விவாதிக்கப்பட்டது. நான் இந்த நேரத்தில் ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். நெடுமாறன் அவர்கள் பிரிவினைவாதி அல்ல. அவர் கேட்கின்ற தன்னுரிமைக் கொள்கை என்பது—நான் நேரம் இல்லாத காரணத்தால் சுருக்கமாகவே சொல்ல விரும்புகிறேன்—தன்னுரிமைக் கொள்கை என்பது வேறு, தனி நாடு கோரிக்கை என்பது வேறு. இலையில் சாப்பிடுவது என்பது வேறு. இலையையே சாப்பிடுவது என்பது வேறு. அதேபோலத்தான் தனிநாடு கோரிக்கை இலையையே சாப்பிடுவது போல. தன்னுரிமைக் கோரிக்கை இலையில் பரிமாறப்படுவதைச் சாப்பிடுவது போல.

பழ. நெடுமாறன் அவர்கள் எந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்; எதனால் அவர் இன்றைக்கு பிரிவினைவாதி என்று சுட்டிக்காட்டப்படுகிறார்? சுய நிர்ணய உரிமைக் கொள்கை என்பது லெனின் ஏற்றுக்கொண்ட கொள்கை. பொதுவுடைமைவாதிகள் யாராக இருந்தாலும் ஏற்றுக்கொண்ட கொள்கை. ஏன் தேசிய இயக்கவாதிகளாக இருக்கின்ற காங்கிரஸ்காரர்கள்கூட 1946-லே ஏற்றுக்கொண்ட கொள்கை; அவர்களுடைய மாநாட்டிலேயே நிறைவேற்றிய தீர்மானம். ஏன் பிரிட்டிஷ் அமைச்சரவைக் குழு இந்த நாட்டுக்கு வருகை தந்தபோது அவர்களிடம் மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்களாலே வலியுறுத்தப்பட்ட அதே சுய நிர்ணய உரிமைக் கொள்கைதான். 8 அதிகாரங்களை மத்தியிலே வைத்துக்கொண்டு ஏனைய அதிகாரங்கள் முழுமையாக மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற அந்த சுய நிர்ணய உரிமைக் கொள்கைதான் தன்னுரிமைக் கொள்கை. எனவே, இந்தக் கொள்கையை வலியுறுத்துகின்ற காரணத்தினாலே ஒருவரை நாம் பிரிவினைவாதி என்று சொல்வது அவ்வளவு சரியல்ல.

இன்னொன்று, தீவிரவாதியை அனுப்பலாமா என்று எல்லோரும் கேட்பதுபோல அருமை நண்பர், மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்கள்கூடக் கேட்டார்கள். அண்மையிலே மத்திய அரசு என்ன செய்தது? விமானத்தைக் கடத்திய தீவிரவாதிகளோடு பேச்சுவார்த்தை நடத்தியது. காரணம், தீவிரவாதிகளை ஆதரிப்பதற்காக அல்ல. பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக, சில நேரங்களில் பெரிய தவறுகள் நிகழாமல் இருப்பதற்காக, சிறிய தவறுகளைக்கூட ஏற்றுக்கொள்கிற மனப்பான்மையிலேதான் இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு

நடந்துகொண்டது. இது யாரும் அறியாத ஒன்றல்ல. எனவே இதில் தீவிரவாதமா, பிரிவினைவாதமா என்றெல்லாம் பார்க்காமல், பிரச்சினைக்கு எப்படியாவது தீர்வு வருகிறதா என்றுதான் பார்க்க வேண்டும். அதுவும் பழ. நெடுமாறன் அவர்கள் இருதய அறுவை சிகிச்சை மேற்கொண்ட நிலைமையிலே, மருத்துவர்கள் எல்லாம் அங்கே போனால் உங்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் வரும், ஏனென்றால் காட்டிலே கடுமையான மழை பெய்துகொண்டிருக்கிறது, ஏராளமான மைல்கள் தூரத்திற்கு நடக்க வேண்டும் என்றெல்லாம் அறிவுறுத்தியும்கூட, கர்நாடகத்திலே இருக்கக்கூடிய அந்தத் தமிழர்களுடைய வாழ்விலே, நலனிலே அவருக்கு அக்கறை இருந்த காரணத்தாலே தன்னுடைய உடல் உபாதையைக்கூடப் பொருட்படுத்தாமல் அவர்கள் காட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். மேலும், பேராசிரியர் கல்யாணியாக இருந்தாலும் சரி, சுகுமாரனாக இருந்தாலும் சரி, யாரும் தீவிரவாதிகள் அல்ல என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் பிரச்சினைகளுக்காக பாடுபட்டுக்கொண்டிருக்கின்றார்களே தவிர, அவர்கள் தீவிரவாதிகள் அல்ல.

அதே நேரத்தில் நான் ஒன்றைக் கேட்கிறேன். தலைவர் மூப்பனார் அவர்கள்கூட, வீரப்பனுடைய மனைவிக்கும், அவருடைய குழந்தைக்கும் உதவுவதாக, அண்மையிலே அவரிடம் அவர்கள் மனு கொடுத்ததாகவும், அதற்காக உதவி செய்ததாகவும் பத்திரிகையிலே அறிவித்திருந்தார்கள். தலைவர் மூப்பனார் அவர்கள் வீரப்பனுடைய குழந்தைக்கோ, அவருடைய மனைவிக்கோ உதவுவதாக அறிவித்திருப்பதிலே என்ன மனிதாபிமானம் இருக்கிறதோ, அதே மனிதாபிமான நடவடிக்கை போல தமிழர்கள் நலனிலும், கர்நாடக மக்களுடைய நலனிலும் அக்கறை உள்ளவர்களால் எடுக்கப்படுகின்ற இந்த நடவடிக்கையும் ஒரு மனிதாபிமான நடவடிக்கையே தவிர, வேறு அல்ல என்பதை இந்த நேரத்தில் நான் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் இன்னாரை அனுப்பியிருந்தால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அழகிரி, என்ன சொல்லப் போகிறீர்கள்?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பனுடைய குழந்தை படிக்க வேண்டும் என்பதற்காகப் புத்தகம் வாங்கித் தருவது மனிதாபிமானம். ஆனால் வீரப்பன் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும், மற்றவர்களைக் கொலை செய்ய வேண்டும் என்பதற்காக வெடிகுண்டு வாங்கிக் கொடுத்தால் அதற்குப் பெயர் மனிதாபிமானம் அல்ல. தலைவர் மூப்பனார் புத்தகம் வாங்கிக்



கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நீங்களோ அவனுக்கு வெடிகுண்டு வாங்கித் தர வேண்டுமென்று சொல்கிறீர்கள். எங்களுக்கும் உங்களுக்கும் உள்ள வேறுபாடே அதுதான்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைச் சொல்லவில்லை. அதற்காகத்தான் எச்சரிக்கையாக கர்நாடக, தமிழக மாநில மக்களுடைய நலனுக்காக இரு அரசுகளும் எடுத்திருக்கின்ற நடவடிக்கை என்று நான் சொன்னேன். நான் வீரப்பனுக்கு ஆயுதம் கொடுப்பதை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** வலியுறுத்தவும் இல்லை, நாங்கள் அதை விரும்பவும் இல்லை. இதுவல்ல பிரச்சினை என்பதுதான் என்னுடைய கருத்து. அதே நேரத்தில் இன்றைக்கு ஒருவரை அனுப்பியிருந்தால் பிடித்திருக்கலாம் என்று கூறுகிறார்கள். அவர் அதிகாரியாக இருந்தபோது பல கோடி ரூபாய் மக்களுடைய வரிப் பணத்தைச் செலவிட்டு, ஏறத்தாழ இரண்டு அரசுகளுக்கும் 300 கோடி ரூபாய்க்கு மேலே இதுவரையில் செலவாகியிருக்கின்றது. ஆனால் அவராலும் பிடிக்க முடியவில்லை. அதே நேரத்தில் அப்படிப்பட்டவர் மட்டும் என்ன பெரிய வீராதிவீரனா, புனிதவானா? தேசிய மனித உரிமைகள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

*முற்பகல் 11-30*

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** அந்த மக்களுடைய பாதிப்புகளை, தயவுசெய்து இந்தச் சந்தர்ப்பத்திலே வெளிப்படுத்துவதற்கு கொஞ்சம் வாய்ப்புக் கொடுங்கள். அந்தப் பகுதியிலே வாழ்ந்துவரும் மலைவாழின மக்கள், அன்றாடங்காய்ச்சிகள், அந்த மலைக்குச் சென்றால், அங்கிருக்கக்கூடிய வீரப்பழம், சூரப்பழம், இலந்தைப்பழம், இப்படிப்பட்ட பழங்களை அன்றாடம் கொண்டுவந்து விற்று ஒரு நாளைக்கு 20 ரூபாய், 25 ரூபாய் என்று ஜீவனம் செய்யக்கூடிய ஏழை மக்கள், மலைவாழின மக்கள், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், அவர்களெல்லாம் தீவிரவாதிகளாகச் சித்தரிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அதைவிடக் கொடுமை, பாலியல் கொடுமைகளுக்கெல்லாம் ஆளாக்கப்பட்டார்கள் என்று சொல்லி, இவர்கள் யாரை அனுப்ப வேண்டுமென்று சொன்னார்களோ, அவரைப்பற்றி தேசிய

மனித உரிமைக் கமிஷன் கண்டனம் தெரிவித்திருக்கிறது. அதற்காக நான் இந்த நேரத்திலே அவரைக் குற்றவாளி என்று குற்றம் சுமத்த விரும்பவில்லை. ஆனால் அந்தப் பழங்குடியின மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதை அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்களே, அதைக் கருத்திலே கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதனை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இன்னொன்றையும் நான் இந்த நேரத்திலே சொல்லி முடிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் புதுப்புதுக் கருத்துகள் சொல்ல வேண்டாம். நீங்கள் இப்போது சொல்கிற கருத்தோடு முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** முடித்துக்கொள்கிறேன். குற்றவாளிகள் திருந்தக்கூடாது என்பது சட்டத்தினுடைய நோக்கமும் அல்ல; சமுதாயத்தினுடைய நோக்கமும் அல்ல. கிரன் பேடி என்று சொல்லக்கூடிய ஒரு போலீஸ் அதிகாரி, திஹார் சிறையிலே, ஒரு சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றிய வரலாறுகளையெல்லாம் இந்த நாடு அறியாதது அல்ல. ஏன், "பல்லாண்டு வாழ்க" என்ற திரைப்படத்திலே எம்.ஜி.ஆர். அவர்களே, குற்றவாளிகளைத் திருத்துவதாகவே நடித்திருக்கிறார்கள். ஆக, இது ஒன்றும் பெரிய அதிசயமான ஒன்று அல்ல. வீரப்பன் குற்றவாளிதான். சட்டத்திற்கு விரோதமான பல செயல்களைச் செய்திருந்தாலும்கூட, இன்றைக்குத் திருந்தி வாழ வேண்டுமென்று நினைக்கிறான். ஒரு காட்டிலே கொள்ளைக்காரனாக இருந்த வால்மீகியாலே ஒரு மிகச் சிறந்த இராமாயணத்தைப் படைக்க முடிகிறபொழுது, இன்றைக்கு அவன் பாராட்டப்படுகிறான். சில பேருக்குத் திருந்துவதற்கு வாய்ப்புக் கொடுக்கிறபோது, அவர்களாலேயும் நாட்டு மக்களுக்கு நன்மைகள் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே நான் இந்த நேரத்திலே தமிழக அரசை வற்புறுத்தி வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்; இந்தப் பிரச்சினையிலே, அதாவது, கன்னட நடிகர் ராஜ்குமார் அவர்களை மீட்டெடுப்பதிலே பொறுமை வேண்டும். இன்னுங்கூட நாளானால் பரவாயில்லை. ஆனால் 1992 ஆம் ஆண்டிலே அந்தக் காவிரி நீர்ப் பிரச்சினை ஏற்பட்டபோது, அந்த மக்கள் நம் மக்கள்மீது என்னென்ன வன்முறையான தாக்குதல்களையெல்லாம் நடத்தினார்கள் என்பதை நீங்கள் மனக்கண் முன்னால் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்றையதினம் பன்னாரி முகாமிற்கு, கர்நாடக மாநிலத்தினுடைய அந்தத் தமிழக எல்லையோரப் பகுதியிலே இருக்கக்கூடிய பன்னாரி முகாமிற்கு டாக்டர் இராமதாஸ் அவர்களும், நானும் சென்றிருந்தோம். அப்பொழுது



காவல் துறை அதிகாரிகளுடைய முன்னிலையிலே அந்த மக்கள் சொன்ன வார்த்தை, "எங்களைக் காவல் துறைகூட சரிவரக் காப்பாற்ற இயலவில்லை; போதுமான ஆட்கள் இல்லை. எங்களை—850 பேரை மிகப் பத்திரமாகக் கொண்டுவந்து, தமிழக எல்லையிலே சேர்த்தது, வீரப்பனும் அவருடைய ஆட்களும்" என்று சொல்லி, காவல் துறையினுடைய மிகப் பெரிய அதிகாரிகளுடைய முன்னிலையிலே அந்த மக்கள் சொன்னார்கள். நாங்கள் நேரிலே இருந்து கேட்டோம். எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால்,......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மனிதாபிமான முறையிலே அவர் செய்த ஏனைய தவறுகளை நான் சரி என்றோ அல்லது மன்னிக்கப்பட வேண்டுமென்றோ சொல்ல விரும்பவில்லை. ஆகவே சில நேரங்களில் சில மனிதர்கள், ஏதோ எல்லா நேரங்களிலும் மோசமாக நடந்து கொள்வதில்லை. சந்தர்ப்ப சூழ்நிலைகள் சில பேருக்கு அப்படியொரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து விடுகிறது. அவர்கள் திருந்துவதற்கு, அதன் மூலமாக நாட்டினுடைய மக்கள் வரிப்பணம் மிச்சப்படுவதற்கு அதேநேரத்திலே அப்பாவி மக்கள், அந்த மலைவாழின மக்கள், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் என்றைக்கும் நிம்மதியாக வாழ்வதற்கு அரசு எடுத்து வருகின்ற நடவடிக்கை, ராஜ்குமார் மீட்கப்பட வேண்டும் என்ற அந்த நடவடிக்கை, அமைதியாக, பொறுமையாக, சிக்கல் இல்லாமல் தீர்க்கப்பட வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பனிடமிருந்து கன்னட நடிகர் ராஜ்குமார் அவர்களை மீட்பது குறித்து, இன்று இந்த அவையில், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய சார்பில் திரு. அழகிரி அவர்கள் 18 நிமிடங்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. பழனிசாமி அவர்கள் 8 நிமிடங்களும், அ.தி.மு.க. சார்பில் திரு. சுந்தரம் அவர்கள் 10 நிமிடங்களும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் திரு. ஐ. கணேசன் அவர்கள் 19 நிமிடங்களும், இந்திய தேசிய லீக் சார்பில் திரு. லத்தீப் அவர்கள் 28 நிமிடங்களும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் திரு. சந்தானம் அவர்கள் 5 நிமிடங்களும், மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் 6 நிமிடங்களும், பி.ஜே.பி. சார்பில் திரு. வேலாயுதன் அவர்கள் 8 நிமிடங்களும், புதிய தமிழகம் சார்பில்

டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் 4 நிமிடங்களும், பேராசிரியர் தீரன் அவர்கள் 10 நிமிடங்களும், ஆக மொத்தம் ஏறத்தாழ 2 மணி நேரம், இந்த விவாதத்திலே பங்கேற்று, அவையை ஒத்திவைத்து இந்தப் பிரச்சினையை முன்னிறுத்தி இதுபற்றிய முடிவை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, உரையாற்றியிருக்கிறார்கள்.

*முற்பகல் 11-35*

நம்முடைய நண்பர் திரு. அழகிரி அவர்கள் முதலிலே இதை ஆரம்பித்து வைத்தார்கள். அவருடைய பேச்சு மென்மையாக தொடக்கத்திலே இருந்தாலும்கூட, இறுதியாக இரண்டொரு கருத்துகளை, இந்த அரசைத் தாக்குகிற வகையில், குறிப்பாக என்னைப் புண்படுத்துகின்ற வகையில், இங்கே வெளியிட்டார்கள். அதைத் தவிர, அவருடைய பேச்சு மிக ஒழுங்காக வரையறுக்கப்பட்ட வகையில் அமைந்திருந்ததை நான் பாராட்டுகின்றேன்.

பிரிவினைவாதிகளுக்கு இந்த அரசு துணை போகிறது என்று சொன்னதோடு நிறுத்தாமல், பிரிவினைவாதிகளையெல்லாம் ஒன்று சேர்க்கிறது; அதாவது, பிரிவினைவாதத்திற்குப் புதிய பலத்தைத் தருகிறது என்று இந்த அரசை அல்லது அரசை நடத்துகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒரு பிரிவினைவாத இயக்கம்போல அவர்கள் இங்கே கற்பித்துக் காட்டினார்கள்.

இன்னொன்று சொன்னார்கள்; 30 கோடி ரூபாய் வீரப்பனுக்குச் சென்றிருக்கிறது; அது தமிழ்நாடு அரசின் சார்பாகவா, கர்நாடக அரசின் சார்பாகவா என்பது எனக்குத் தெரியாது; இப்படிச் சொல்லப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள்.

பொதுவாக, இப்படிச் சொல்லப்படுகிறது, கேட்கப்படுகிறது, செய்தி வெளியாகிறது, மக்கள் பேசிக்கொள்கிறார்கள் என்ற அளவில், பொத்தாம் பொதுவிலே பேசுவது, அழகிரி போன்ற பொறுப்புள்ள உறுப்பினர்களுக்கு அழகல்ல என்றாலும்கூட நான் அதை, அந்தச் சொல்லப்படுவதாக அவர் சொன்ன அந்தக் கருத்தை, அந்தச் செய்தியை வன்மையாக மறுக்கிறேன். அதுபோன்று பணம் கொடுத்து, பேரம் பேசி, ராஜ்குமாரை மீட்பதாக இருந்தால், தொடக்கத்திலேயே அந்தக் காரியத்தைச் செய்து, இந்நேரம் மீட்டிருக்கலாம். ராஜ்குமார் மீட்கப்பட்டு 100 நாட்கள் ஆகிவிட்டன என்று விழாகூட கொண்டாடியிருக்கலாம். இப்போது, இன்னும் மீட்கப்படவில்லை 100 நாட்களாக, என்று வருந்திக்கொண்டிருக்கிறோம். நான் அவருக்கும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கும், இந்த அவைக்கும்,



இந்த அவையின் வாயிலாக நாட்டு மக்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன். நாடு பிரிய வேண்டும் என்ற கருத்தை, அந்தக் கொள்கையை, திராவிட முன்னேற்றக் கழகம் கைவிட்டு பல ஆண்டுகள் ஆகின்றன.

1962 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராக, எங்கள் தலைவராக வீற்றிருந்தபோது, பொதுக் குழுவைக் கூட்டி, இந்த நாட்டினுடைய ஒருமைப்பாட்டிற்கும், ஒற்றுமைக்கும் நாம் என்றைக்கும் உதவியாக இருக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி, திராவிட நாடு பிரிவினையை, கோரிக்கையைக் கைவிட்டாயிற்று. நான் திரு. அழகிரி அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உறுதியாகச் சொல்கிறேன். நாங்கள் கைவிட்டது மாத்திரமல்ல; அந்தப் பிரிவினையைக் கோரி, யார் குரல் கொடுத்தாலும், அவர்களை நாங்கள் நிச்சயமாக அடக்கியே தீருவோம் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது, திரு. அழகிரி அவர்களுக்கும், அவருடைய கட்சியினருக்கும், நாட்டு மக்களுக்கும் நான் தருகின்ற உறுதிமொழியாகும்.

இப்போது, வீரப்பனுடைய இந்தப் பிரச்சினையில் கொஞ்சம் நாம் பின்னோக்கிச் சென்று, இன்றைய நிலைக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். 1978 ஆம் ஆண்டு, கர்நாடக மாநிலத்திலே, இராமாபுரம் காவல் நிலைய எல்லையில், பரமசிவம் என்பவரைக் கொலை செய்ய குரூப்பன் என்பவருக்கு உதவி செய்ததிலே தொடங்கி, கடந்த 22 ஆண்டுகளிலே 124 பேரைக் கொலை செய்ததாக வீரப்பன்மீது 156 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. வழக்குகள் பதிவு செய்யப்பட்டுவிட்ட காரணத்தினாலேயே குற்றவாளி வாதம் சரியல்ல; அப்படியே வீரப்பன்மீது குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்டு, வீரப்பன் தண்டிக்கப்பட்டாலும்கூட, மேல் கோர்ட் இருக்கிறது என்கின்ற சமாதான வாதம்கூட, இன்றைய அரசியல் சூழ்நிலையிலே எழலாம். நான் அதைப்பற்றி கவலைப்படாமல் செய்திகளை வரிசைப்படுத்திச் சொல்கின்றேன்.

*முற்பகல் 11-40*

வீரப்பன், கர்நாடகாவிலே 1986ஆம் ஆண்டு ஒரு முறை பிடிபட்டதாகவும், வனத் துறை பயணியர் இல்லத்திலே சில நாட்கள் கைதியாக வைக்கப்பட்டிருந்ததாகவும், பெங்களூரிலே, சார்க் மாநாடு நடைபெற்ற நேரத்தில் காவல் துறையினுடைய முழுக் கவனமும் அது

தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகள்மீது இருந்த காரணத்தால், வீரப்பன் தப்பிச் சென்றுவிட்டதாகவும் ஒரு செய்தியும் உண்டு.

தமிழகத்திலே வீரப்பன் குழுவினர் நடத்திய சம்பவங்களை மாத்திரம் வரிசைப்படுத்திப் பார்த்தால், 14-7-1987; அப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இல்லை. நான் எந்த ஒரு ஆட்சியையும் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. வரலாற்று விவரங்களைச் சொல்வதற்காக இதைக் குறிப்பிடுகின்றேன்.

14-7-1987 அன்று வீரப்பன் குழுவினர், சத்தியமங்கலம் வன அலுவலர் சிதம்பரம் என்பவரைச் சுட்டுக் கொலை செய்தார்கள்.

7-8-1989 அன்று தமிழ்நாடு பர்கூர் காவல் நிலைய எல்லையில், வனக் காவலர் பழனிச்சாமி, வாச்சர் சுப்பிரமணியம் மற்றும் மஸ்தி என்ற நபர் ஆகிய மூவரையும் வீரப்பனுடைய கும்பல் கொலை செய்தது.

1991 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பெண்ணாகரத்திலே இருக்கின்ற இந்தியன் வங்கியைக் கொள்ளையடிக்க வீரப்பன் தலைமையிலே ஒரு குழு சென்றபோது, அந்த வங்கியைக் கொள்ளையடிக்கக்கூடும் என்ற தகவலின் அடிப்படையில், அங்கே போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்த போதும்கூட, வீரப்பன் ஒரு காவலரைச் சுட்டுக் கொன்றுவிட்டு 303 என்ற துப்பாக்கி ஒன்றையும் திருடிக்கொண்டு தப்பிச் சென்றுவிட்டான். ஆயுதம் தாங்கிய காவலர்களை நேருக்கு நேர் சந்தித்தும், வீரப்பன் தப்பிச் சென்ற இந்தச் சம்பவம் 4-7-1991 அன்று நடைபெற்றது.

1993-ல் வீரப்பன் கும்பலால் வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகள் வெடித்ததில், சுரைக்காய்மடுவு என்ற இடத்தில் ஐந்து காவலர்கள் உட்பட 22 பேர் மாண்டார்கள். இதில் காவல் துறை கண்காணிப்பாளர் S.P. கோபாலகிருஷ்ணன் படுகாயம் அடைந்தார்.

கடந்த ஆட்சியில் 3-12-1994 அன்று, வீரப்பன் காவல் துறை கண்காணிப்பாளர் சிதம்பரநாதன் உட்பட மூன்று பேரைக் கடத்திச் சென்றபோது, அவர்களை விடுவிக்க வீரப்பன் விதித்த நிபந்தனை என்ன தெரியுமா? அதிரடிப் போலீசை வாபஸ் பெற வேண்டும். வீரப்பனைத் தேடும் பணியைக் கைவிட வேண்டும். வீரப்பனுடைய அண்ணன் மாதய்யனை விடுதலை செய்ய வேண்டும். வீரப்பன் சரணடைந்தால் அவன்மீது வழக்கு போடவே கூடாது. இதுதான் நிபந்தனை.



ஆனால் இதைப்பற்றி 4-12-1994 அன்று அரசு சார்பில் கோவை மாவட்ட கலெக்டர் விடுத்த அறிக்கையில், வீரப்பனால் கடத்தப்பட்டிருக்கின்றவர்களுடைய உயிரைக் காப்பாற்றுவதுதான் முக்கியம். எனவே வீரப்பனைத் தேடும் பணி, வீரப்பனுடைய நிபந்தனைகளின்படி நிறுத்தப்பட்டுவிட்டது என்று தெரிவித்தார்.

6-12-1994 அன்று அரசாங்கத்தின் சார்பில் கோவை மாவட்ட ஆட்சியர் மீண்டும் கூறியது: "வீரப்பனிடமிருந்து எனக்குச் செய்தி வந்துள்ளது. அந்தச் செய்தியிலே வீரப்பன் கேட்டுக்கொண்டபடி, வீரப்பனோ, அவரது பிரதிநிதியோ என்னைச் சந்திக்கலாம். அவருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது என்ற உறுதி அளிக்கப்படுகிறது. மேலும், பணயமாக பிடித்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்குத் தேவையான உணவுப் பொருளைக் கொண்டு செல்ல தடை எதுவும் இருக்காது. அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன. வீரப்பனுடைய ஆட்கள் மலைக் கிராமங்களுக்கு நேரிலே வந்து, எவ்வித தடையும் இல்லாமல் உணவுப் பொருளை எடுத்துச் செல்லலாம். அதற்குத் தடை கிடையாது." கலெக்டர் இதைச் சொல்லும்போது, ஒரு நிருபர் குறுக்கிட்டு "வீரப்பனுடைய தூதுவன் வர அரசுத் தரப்பில் வாகன வசதி செய்து கொடுக்கிறீர்களே, இந்த நிலையிலே தூதுவன் துப்பாக்கியுடன் வந்து பேசுகின்றானே, இது சரியா?" என்று கேட்கிறார். கலெக்டர் சொல்கிறார், "அவர் சொந்த பாதுகாப்புக்கு துப்பாக்கியுடன் வருகிறார். காரணம் அவர் காட்டுக்குள் போகிறார், வருகிறார். எனவே துப்பாக்கி ஏந்துகிறார்" என்று கலெக்டர் செய்தியாளர்களுக்கு பதில் அளித்தது, அன்றைய செய்தி ஏடுகளிலே வந்திருக்கிறது. அப்போது தலைமைச் செயலாளராக இருந்த அரிபாஸ்கர் விடுத்துள்ள செய்தியில் "வீரப்பனுடைய தளபதி பேபி இரண்டு கோரிக்கைகளைச் சொன்னார். ஒன்று வீரப்பன் கோஷ்டியினர் காட்டுக்குள் உணவு கொண்டுவரும்போது, எவ்வித துன்புறுத்தலுக்கும் ஆளாகக் கூடாது. மற்றொன்று, சிறையிலே உள்ள வீரப்பன் கோஷ்டியை தளபதி பேபி பார்க்க அனுமதிக்கப்பட வேண்டும்." "மாவீரன் என்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் (இங்கே சொல்லிவிட்டதற்கு கோபித்துக் கொண்டோம். சொல்லலாமா என்று எனக்கெல்லாம்கூட சந்தேகம் ஏற்பட்டது. ஆனால், அன்றைக்கு தலைமைச் செயலாளரே சொல்கிறார் தளபதி பேபி என்று) மேலும் அரிபாஸ்கர், "இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால், மற்ற கோரிக்கைகள் பிறகு தெரிவிக்கப்படும்" என்று பேபி, கோவை கலெக்டரிடம் கூறியிருக்கிறார். இந்தக் கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து வருகிறது. இப்போது அரசினுடைய மிக முக்கியமான முன்னுரிமை கடத்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் மீட்பதுதான்.

விசேஷ அதிரடிப் படையின் பணிகள் நிறுத்தப்பட்டுவிட்டன. இந்தப் படைகளை அனுப்பினால் வீரப்பன் போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் கொன்றுவிடக்கூடும். பேச்சுவார்த்தை முடிந்து, பேபி வீரப்பன் மீண்டும் காட்டுக்குள் செல்ல முழு பாதுகாப்பும் அளிக்கப்படும்".

*முற்பகல் 11-45*

இதற்குப் பிறகு, வீரப்பன் தம்பி அர்ஜுனன் செய்தியாளர்களிடம் பேசுகிறார். "நாங்கள் சரண் அடைய மாட்டோம். தண்டனை அனுபவிக்க மாட்டோம். எங்களுக்கு மன்னிப்பு கொடுத்து ஜனாதிபதி எழுத்து மூலம் உத்தரவு கொடுக்க வேண்டும். அப்போதுதான் ஆயுதங்களை ஒப்படைப்போம்."

'இதற்கு மீண்டும் தலைமைச் செயலாளர் சொல்கிறார்' "ஒரு அடிப்படை விஷயத்தை நாம் மறந்துவிடக் கூடாது. இது உயிர்கள் சம்பந்தப்பட்ட விஷயம், போலீஸ் துணை சூப்பரின்டென்டெண்ட் மற்றும் இரண்டு நபர்களை நாம் மீட்க வேண்டும்" என்று தலைமைச் செயலாளர் அப்போதும் சொல்கிறார். கேள்வி கேட்கிறார்கள் செய்தியாளர்கள் "வீரப்பன் இருக்குமிடம் அரசுக்குத் தெரியுமா?" அரிபாஸ்கர் சொல்கிறார், "வீரப்பன் இருக்குமிடம் அரசுக்குத் தெரியும். ஆனால் 3 பேர்களை மீட்க அரசு பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறது".

இதிலே அப்போது கடத்தப்பட்ட சிதம்பரநாதனைக் கூட போலீஸ் மீட்டதா, தானாக வந்து விட்டாரா என்கின்ற செய்தி அப்போது வந்தது. தானாகவே ஓடி வந்துவிட்டேன் என்று சிதம்பரநாதன் சொன்னது மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் நினைவிருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

பிறகு, 1-1-1995 அன்று ஈரோடு மாவட்டம் பர்கூர் காவல் நிலைய எல்லையில் வீரப்பன் குழு, ராஜேந்திரன், சுப்பிரமணியம் என்ற இரு காவலர்களையும், உடையார் என்ற வாட்ச்சரையும் கடத்திச் சென்றது. 17-2-1996 அன்று ஈரோடு மாவட்டம், ஆசனூர் காவல் நிலைய எல்லையில் ஆரேபாளையத்தில் வீரப்பன் குழு மறைந்திருந்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில் காவல் துறை கண்காணிப்பாளர் தமிழ்ச்செல்வன் காயமுற்று, அவரது கை விரல்கள் துண்டிக்கப்பட்டன. செல்வராஜ் என்ற தலைமைக் காவலர் அந்தத் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார். இதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 12-7-1997 அன்று வீரப்பனும், கூட்டாளிகளும் கர்நாடக வனத் துறையைச் சார்ந்த 9 நபர்களைப் பிடித்து வைத்துக்கொண்டு



தனக்கும் தன்னுடைய கூட்டாளிக்கும் பொது மன்னிப்பு உள்ளிட்ட சில சலுகைகளை வழங்கினால் மட்டுமே அவர்களை விடுவிக்க முடியும் என்று கூறிவிட்டார்கள். தமிழக அரசும், கர்நாடக அரசும் பிடிபட்ட நபர்களுடைய உயிருக்கு ஆபத்து என்று கருதி, வீரப்பன் சரண் அடைவது குறித்து கர்நாடக மாநில முதலமைச்சர் மற்றும் அவரது குழுவினரோடு சென்னையில் 19-8-1997 அன்று நான் கலந்துரையாடியபோது எடுத்த முடிவுகளில் ஒன்றுதான் வீரப்பன் சம்பந்தப்பட்ட வழக்குகளில் புலன் விசாரணையின்போது கைது செய்யப்பட்டவர்கள்மீது எந்தவிதமான தனிப்பட்ட குற்றச்சாட்டும் இல்லையென்றால், அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதாகும். அதைத்தான் நண்பர் சந்தானம் அவர்கள் இங்கே சொன்னார். அந்தப் பேச்சுவார்த்தையில் அந்தக் கைதிகள் எல்லாம் விடுவிக்கப்பட வேண்டும் என்ற ஒரு நிபந்தனையும் விதிக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஏதாவது குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் அவர்கள்மீது இருக்குமேயானால், அவை உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு ஒரு முடிவு எடுக்கப்படும். மேலும், அனைவரையும் சட்டப்படி ஜாமீனில் விடுதலை செய்யப்படும் என்பதாகும். இந்த முடிவு அப்போது எல்லா ஏடுகளிலும் வெளியிடப்பட்டது. இந்த முடிவின் அடிப்படையில் தமிழக அரசின் சார்பில் 9-10-1997 அன்று கர்நாடக மாநில முதலமைச்சருக்கு நான் எழுதிய கடிதத்தில் 19 ஆம் தேதி நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது எடுக்கப்பட்ட முடிவை நினைவுபடுத்தி கர்நாடக சிறையிலே இன்னமும் ஏராளமானவர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றும் கர்நாடக அரசு அதிகாரிகளுக்குத் தகுந்த அறிவுரை கூறி உடனடியாக அவர்களை விடுவிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் எழுதியிருந்தேன்.

இதைத் தொடர்ந்து 11-10-1997 அன்று நம்முடைய தலைமைச் செயலாளர், மத்திய உள் துறை அமைச்சரோடு தொலைபேசியில் பேசியதோடு, நமது அரசின் சார்பில் மத்திய அரசுக்கு எழுதிய கடிதத்திலும் 19-8-1997 அன்று இரண்டு மாநில அரசுகளிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் விவரத்தைத் தெரிவித்து கர்நாடக அரசினால் தடா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட 121 பேர்களில் 70 பேர் நிபந்தனை ஜாமீனில் வெளிவந்துவிட்டார்கள் என்றும், 51 பேர் இன்னமும் சிறையிலே அவதிப்பட்டுக்கொண்டிருப்பதாகவும் விளக்கியதோடு அவர்களுடைய விடுதலைக்கு உதவி செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது.

முற்பகல் 11-50

இந்தத் தடா சட்டத்தைப்பற்றிக் குறிப்பாக நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர்கள் என்ன கருத்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நன்றாக அறிவேன். முற்போக்கு எண்ணம் உடைய எந்தக் கட்சிக்காரர்களும் தடா சட்டத்தை ஆதரிப்பதில்லை என்பதையும் நான் நன்றாக அறிவேன். ஆனால் இந்தத் தடா சட்டம் யார்மீது பாய்ந்தது என்றால் உள்ளபடியே தீவிரவாதிகள்மீது பாய்ந்து அதன் காரணமாக அவர்கள் மைசூர் சிறையில் அடைக்கப்பட்டார்களா என்றால் இல்லை. சாதாரண ஏழை-எளிய, பஞ்சைப் பராரிகள்—நீங்கள் இப்பொழுதுகூட டி.வி.-யிலே அவர்கள் காட்சியாகக் காட்டப்படும்போது கவனித்திருப்பீர்கள், எப்படிப்பட்ட பெண்கள், எத்தகைய தாய்மார்கள், எவ்வளவு வயதான கிழடு கட்டைகள்—இவர்கள் எல்லாம் அந்தச் சிறையில் இருக்கிறார்கள் என்பதை நாம் தெரிந்துகொள்ள முடியும். அதனால்தான் அழகிரி அவர்கள்கூட கேட்டார்கள். பிறகு எந்த முயற்சியாவது எடுத்தீர்களா அவர்களை விடுவிப்பதற்கு என்றுகூட கேட்டார்கள். பல முறை முயற்சி எடுக்கப்பட்டது. ஒவ்வொரு முறையும் நான் தொலைபேசியிலே பேசும்போதெல்லாம், பார்க்கிறோம், பார்க்கிறோம் என்று அன்றைக்கிருந்த கர்நாடக முதலமைச்சர் எனக்கு உறுதியளித்தார். ஓர் ஆண்டுக்கு மேலாகியும்கூட கர்நாடக அரசு எந்தவிதமான நடவடிக்கையும் இதிலே எடுக்கவில்லை என்பதால், 21-11-1998 அன்று மீண்டும் கர்நாடக முதலமைச்சருக்கு ஒரு D.O. லெட்டர் நான் எழுதியிருக்கிறேன். அந்தக் கடிதத்திலும் இந்த விவரங்களை எல்லாம் குறிப்பிட்டு நாம் அப்பொழுதே பேசியிருக்கிறோம். அதன்படி அவர்களை விட்டுவிட வேண்டும் என்று. ஏனென்றால் அந்த வன அதிகாரிகளை, கர்நாடக வன அதிகாரிகளை வீரப்பன் விட்டாகி விட்டது. விட்ட பிறகு நக்கீரன் கோபால் அவர்களுடைய முயற்சியால் அவர்கள் விடுபட்ட பிறகும் இவர்கள் விடுவிக்கப்படவில்லை, அதை ஞாபகப்படுத்தித்தான் நான் பல முறை அவருக்குக் கடிதம் எழுதினேன். ஆனால் எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை.

தொடர்ந்து 11-1-1999, 23-2-1999, 28-3-1999, 5-5-1999, 28-5-1999 ஆகிய நாட்களில் நினைவூட்டல் கடிதங்கள் என்னாலேயே கர்நாடக அரசுக்கு எழுதப்பட்டன. கர்நாடக அரசின் சார்பில் முதலமைச்சராக இருந்த ஜேஎச். பட்டேலே 28-5-1999 அன்று எழுதிய கடிதத்தில் வீரப்பன் சரணடையும் பட்சத்தில்தான் அந்தக் கைதிகளை விடுவிப்பதாக ஒப்பந்தம் செய்யப்பட்டது; சரணடையாத பட்சத்தில் இந்தக் கேள்வி எழவில்லை என்று அதற்கு பதில் எழுதிவிட்டார்.

இத்தடா கைதிகள் விஷயத்தில் யாரோ ஏழை-எளியவர்கள், அப்பாவி மக்கள், அவர்கள் தடா சட்டத்தின்படி கைது செய்யப்பட்டிருக்கும்





பொழுது வீரப்பன் சரணடைவதைப் பற்றிய பிரச்சினையே கிடையாது. இது வீரப்பன் ஒரு நிபந்தனையாக இப்பொழுது வைத்தான். அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அதைக் காரணமாகக் காட்டி அவர்களை விடுதலை செய்வது என்ற கேள்வியே எழவில்லை என்று பதில் தெரிவித்துவிட்டார். இப்பொழுது வீரப்பனுக்கு அதுதான் பெரிய கோரிக்கையாக ஆகிவிட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். தமிழக எல்லையைப் பொறுத்தவரையிலே மாத்திரம் நாம் எடுத்துக்கொண்டால், இங்கே ஒன்றுமே செய்யவில்லை என்று நம்முடைய அண்ணா தி.மு.க. தலைவர் இங்கே பேசினார்.

1991 ஆகஸ்ட் முதல் 1996 மே வரையில் தமிழக எல்லையிலே மாத்திரம் வீரப்பனால் கொலை செய்யப்பட்டவர்கள் 63 பேர். 1996-ல்இந்த ஆட்சி வந்த பிறகு ஜூன் முதல் இதுவரை மூன்றே பேர்தான் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தமிழக போலீஸாரால் கைது செய்யப்பட்டவர்கள் வீரப்பனைச் சேர்ந்தவர்கள்; வீரப்பனைச் சேர்ந்தவர்கள் என்றால் யாரும் தவறாக கருதிக்கொள்ளக்கூடாது. வீரப்பன் ஒரு படை வைத்திருப்பதாகவும், அந்தப் படையிலே 150 பேரோ, 200 பேரோ இருப்பதாகவும் யாரும் கருதிக்கொள்ளக்கூடாது. அந்தக் காட்டிலேயிருக்கின்ற மக்களிலே பல பேர் வீரப்பனுக்கு உதவி செய்யக்கூடியவர்கள், அவர்களுடைய எண்ணிக்கையைத்தான் நான் சொல்கிறேன். அந்த எண்ணிக்கையிலே 1991 ஆகஸ்ட் முதல் 1996 மே வரையிலே 121 பேர் கைது செய்யப்பட்டார்கள், அந்த ஆட்சியிலே. 1996 ஜூன் முதல் இதுவரையிலும் இந்த ஆட்சியில் 135 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்த விவரங்களையும் இந்த அவைக்கு அளிப்பது என்னுடைய கடமை என்பதால் அளித்துவிட்டேன்.

ஏதோ முன்னால் இருந்த டி.ஜி.பி. கூறிய கருத்துகளையும் அவர் எவ்வளவு சாதனைகளைப் புரிந்தார் என்பதையும் இங்கே நம்முடைய அண்ணா தி.மு.க. கட்சித் தலைவர் சுந்தரம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இதைப்பற்றி நான் சொல்வதைவிட கடந்த ஆட்சியில் செல்வி ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது டி.ஜி.பி.யாக இருந்து ஓய்வுபெற்ற பிறகு 'நான் சமாளித்த சவால்கள்' என்று வைகுந்த் அவர்கள் எழுதியுள்ள பெரிய புத்தகத்தில் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அவர் பதிலளித்திருக்கிறார். அவர் சொல்கிறார், "வீரப்பனைப் பிடிக்கப் பொதுவான வழிமுறைகளை வகுக்கும்பொருட்டு 10-5-1995 அன்று, அன்றைய கர்நாடக முதல்வர் தேவ கௌடாவும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் இரண்டு மாநில அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். வீரப்பனைப் பிடிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளைப் பொறுத்தவரையில், அவன் மறைந்திருக்கும் பகுதி மிகவும் அடர்ந்த காட்டுப்

பகுதி என்பதால் அதற்குள் நுழைந்து அவனைப் பிடிப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல என்பதையும் நாம் முதலில் ஒத்துக்கொள்ள வேண்டும். அதோடு, அந்த அடர்ந்த காட்டுப் பகுதி தமிழ்நாட்டில் 5 மாவட்டங்களிலும், கர்நாடக மாநிலத்திலே மைசூர் மாவட்டத்திலும் சுமார் 6000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்திருக்கும் ஒரு பகுதியாக இருக்கிறது. மேலும், வீரப்பனும் அவன் கும்பலைச் சேர்ந்தவர்களும் நவீன ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள் என்பதும், கண்ணிவெடி வைப்பதில் அவன் நிபுணத்துவம் பெற்றிருப்பதும், அவன் அந்தப் பகுதியிலேயுள்ள பணக்காரர்களை மிரட்டிப் பண வசூல் செய்து வருகிறான் என்பதும் தெரிய வந்தது." (இதையெல்லாம் வைகுந்த் அவர்கள்தான் சொல்கிறார்கள்.)

*முற்பகல் 11-55*

"இதுபோன்று மலைப் பகுதிகளில் நடவடிக்கை எடுக்கும்போது வழக்கமாகப் பின்பற்றப்பட வேண்டிய இராணுவ நடவடிக்கையை ஒத்த வழிமுறைகள் இங்கு கடைப்பிடிக்கப்படவில்லை. மேலும், காவல் துறை நடவடிக்கையின்போது அப்பாவி மலைவாசிகள் துன்புறுத்தப்படுவதைத் தடுக்க எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை."

தேவ கௌடாவும், செல்வி ஜெயலலிதாவும் சேர்ந்து நடத்திய கூட்டத்தில் இந்தக் கருத்துகளை வைகுந்த் எடுத்து வைத்ததாக இதிலே குறிப்பிடுகிறார்.

'வீரப்பனுக்கு எதிராக எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கையில் முக்கிய தகவல்களைச் சேகரிக்க எந்த வகையான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. மக்களுக்கு வீரப்பன்மீது ஒரு ராபின் ஹூட் போன்றதொரு நல்ல கருத்து இருந்து வந்தது. தனது எதிரிகளை அரக்கத் தனமாக தயவு தாட்சண்யம் இல்லாமல் கொலைசெய்யும் அவன் ஏழை மலைவாசிகளுக்கு எப்போதுமே உதவிசெய்து கொண்டிருக்கிறான். ஆகவே பயம் காரணமாகவும் மரியாதை காரணமாகவும் மக்கள் அவனைப் பற்றிய தகவல்களைக் கொடுக்க முன்வராமலே இருந்துவிட்டார்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக அப்பாவி மலைவாழ் மக்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். சில சமயம் பெண்கள் மானபங்கப்படுத்தப்படுகிறார்கள் அல்லது கற்பழிக்கப்படுகிறார்கள் என்ற அவப்பெயரை காவல் துறையினர் சம்பாதித்திருக்கிறார்கள். இந்தக் காரணத்தினால்தான் வீரப்பனுக்கெதிராக காவல் துறை எடுத்துவரும் நடவடிக்கையில் மக்களுடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் அவர்களால் பெற முடியவில்லை.



இதில் கவனிக்கத்தக்க வேறொரு விஷயம் என்னவென்றால், வீரப்பனுக்கெதிராக எடுக்கப்படும் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள ஒரு சிறு அளவு முன்னேற்றத்தைக்கூட பெரிய அளவிலே விளம்பரப்படுத்திவிடும் ஒரு போக்கு உயர் அதிகாரிகள் மத்தியிலே காணப்பட்டது. அனைத்து முன்னேற்றங்களுக்கும் கிடைக்க வேண்டிய பெருமை முழுவதையும் உயர் அதிகாரிகளே எடுத்துக்கொள்வதால், சார்நிலை அதிகாரிகளுக்கு மன உறுதி பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டது. இதன் காரணமாகப் பொதுமக்களைப் பொறுத்தவரையில், காவல் துறையின் செயல்பாடுகள் நகைப்பிற்குரியதாக ஆகிவிட்டன. ஆகவே வீரப்பன் விவகாரம் குறித்து ஆழமாக ஆராய்ந்து மேலே கூறிய பொருள்பட ஒரு விரிவான அறிக்கையைத் தயார் செய்து ஜெயலலிதா அவர்களிடம் நான் கொடுக்க அதை அவர் அந்தக் கூட்டத்திலேயே படித்தார். தேவாரம் அவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவிக்க முயன்றபோது, தேவ கௌடா அவர்கள் குறுக்கிட்டு, "தேவாரம் அவர்களே, நாங்கள் எப்போதும் பெங்களூரில்தான் இருக்கிறோம். அவ்வகையில் உங்களை எங்களுக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் போர் உடையுடன் கையில் ஏ.கே. 47 துப்பாக்கி வைத்துக்கொண்டிருப்பதைப் போன்ற புகைப் படங்கள் மட்டும் அடிக்கடி பத்திரிகையிலே வருவதால்தான் நீங்கள் யார் என்று எங்களுக்குத் தெரிகிறது. மேலும், ஒவ்வொரு முறையும் நீங்கள் காட்டுப் பகுதிக்குப் போகும்போது வீரப்பன் மற்றும் அவனுடைய ஆட்களால் கொல்லப்பட்ட காவல் துறையினர் உடல்கள்மீது மலர் வளையம் வைக்கத்தான் போகிறீர்களோ என்ற ஐயம் ஏற்படும் வகையில் இதுவரையில் உங்களால் வீரப்பனைப் பிடிக்க முடியவில்லை " என்று உறுதியான குரலில் தேவகௌடா தெரிவித்தபோது, தேவாரம் பதில் பேசாமல் மௌனமானார்.

வீரப்பன் கும்பலைச் சேர்ந்தவர்களுடைய எண்ணிக்கை 150-லேயிருந்து வெறும் 5 ஆகக் குறைக்கப்பட்டுவிட்டது என்பதுபோல ஒரு பேச்சு அப்போது அடிபட்டு வந்தது. இது போலீஸ் தரப்பில் தரப்படும் புள்ளி விவரமே தவிர, இதில் ஒன்றும் உண்மை கிடையாது" என்று வைகுந்த் அவர்கள் அந்தப் புத்தகத்திலே எழுதியிருக்கிறார்.

மேலும், இப்போதும் "வீரப்பனிடமிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் நிலையில்தான் இருக்கிறோம். இது மிகவும் வெட்கக் கேடானது என்றாலும் இதுதான் இன்றுள்ள நிலைமை. வீரப்பனைக் கண்டுபிடிக்க காவல் துறையால் முடியவில்லை என்பதைப் பொதுமக்கள் கேவலமாகப் பேசுவது குறித்து ஜெயலலிதா அவர்கள் நன்றாகவே அறிந்திருந்தார்கள்.

ஆர்.எஸ்.எஸ். அலுவலகக் குண்டு வெடிப்பு வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த முஸ்லீம் தீவிரவாதி இமாம் அலியைப் பிடிப்பது குறித்து ஒருமுறை விவாதம் நடந்தபோது முதல்வர் ஜெயலலிதா தேவாரத்தைப் பார்த்துக் கேட்டார், "தேவாரம் அவர்களே, வீரப்பனைப் பிடிப்பது பற்றித்தான் நீங்கள் பல கற்பனைக் கதைகளைக் கூறி வந்திருக்கிறீர்கள். இந்த இமாம் அலியையாவது பிடிக்கப் பாருங்கள்" என்று கிண்டலாகக் கூறியதை (சிரிப்பு) இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்" என்று வைகுந்த் அவர்கள் அந்த நூலிலே விஸ்தாரமாக எழுதியிருக்கின்றார்கள்.

நண்பகல் 12-00

இன்னொன்று; இந்த அரசை, முதலமைச்சரை அல்லது போலீஸ் இலாகாவை குறை கூறிப் பேசும் எதிர்க்கட்சிகளிலே பெரும் எதிர்க்கட்சி. தமிழ்நாட்டிலே இன்றைய நிலையிலே, அந்தக் கட்சியினுடைய சார்பிலே இங்கே பேசிய சுந்தரம் ஆகட்டும் அல்லது வெளியிலே இருக்கின்ற அதனுடைய தலைவர்களாகட்டும் என்ன பேசுகிறார்கள்? ஏன் சர்வ கட்சிக் கூட்டங்களைக் கூட்டவில்லை என்றெல்லாம் கேட்கப்பட்டது. நல்ல கேள்வி. ஏன் சர்வ கட்சிக் கூட்டங்களைக் கூட்டிக் கூட்டி பழகியவன் நான், பழக்கப்பட்டவன் நான். எந்த ஒரு விஷயத்திற்கும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறோம். காவிரிப் பிரச்சினையாகட்டும் அல்லது வேறு எந்தப் பொதுப் பிரச்சினையாகட்டும், அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி. நானே கையெழுத்திட்டு, சர்வ கட்சித் தலைவர்களுக்குக் கடிதம் அனுப்பி செயலாளரை விட்டல்ல, நானே கையெழுத்திட்டு கூட்டத்திற்கு வர வேண்டுமென்று சொல்லி நானே டெலிஃபோனில் அழைத்து, நானே வாசலில் சென்று வரவேற்று, சர்வ கட்சிக் கூட்டங்களை நடத்திப் பழக்கப்பட்டவன் தான் இந்த கருணாநிதி (மேசையைத் தட்டும் ஒலி) என்பதிலே எந்தச சந்தேகமும் தேவை இல்லை.

ஆனால் இந்தப் பிரச்சினை எவ்வளவு பெரிய சிக்கலானது என்பதை அறிவீர்கள். காவிரிப் பிரச்சினையிலே சொன்னார்கள். கருணாநிதி துரோகம் செய்துவிட்டு சர்வ கட்சிக் கூட்டத்திற்கு எங்களை அழைக்கிறார் என்று சொன்னார்கள். கூட்டத்திற்கு வருகின்றவர்கள் சர்வ கட்சிக் கூட்டத்திலே எடுத்த முடிவுகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா என்றால் இல்லை.



சாதி, மதச் சண்டையின்போது ஒரு அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே ஒரு அருமையான கருத்தை மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தை எல்லோரும் ஏற்றுக்கொண்டோம். மாவட்டங்களுக்குத் தலைவர்களுடைய பெயரை வைக்க வேண்டாம், பேருந்து கழகங்களுக்குத் தலைவருடைய பெயரை வைக்க வேண்டாம் என்று மூப்பனார் அவர்கள் சொல்லி அதை எல்லா கட்சிக்காரர்களும் ஏற்றுக்கொண்டு உடனடியாக இந்த அரசு அதை அமல்படுத்தியது. நீங்கள் யாரும் அதை மறந்திருக்க முடியாது. இன்றைக்கும் அது நடைமுறையில் இருக்கிறது.

* ஆனால் அந்த சர்வ கட்சிக் கூட்டத்திலே கலந்துகொண்ட அ.தி.மு.க. அதைப் பின்பற்றுகிறதா? இன்றைக்கும் சிவகங்கை மாவட்டம் என நாம் மாற்றி விட்டோம், சர்வ கட்சிக் கூட்டத்திலே எடுத்த முடிவின்படி. ஆனால் அவர்கள் இன்றைக்கும் பசும்பொன் தேவர் மாவட்டம் என்றுதான் அழைத்துக்கொண்டிருக்கிறார்கள். பிறகு சர்வ கட்சிக் கூட்டத்திற்கு என்ன மதிப்பு இருக்கிறது என்று நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அது ஒரு பெரிய கட்சி நான் அதை இல்லையென்று மறுக்கவில்லை. இன்றைக்குப் பிரதான எதிர்க்கட்சி. த.மா.கா. இங்கிருக்கிறது. தமிழ் மாநில காங்கிரஸ். ஆனால் வெளியிலே ஒரு பெரிய எதிர்க்கட்சி என்று இன்றைய அளவிலே வடிவமைத்துக்காட்டப்படுகின்ற ஒரு கட்சி அ.தி.மு.க. அந்த அ.தி.மு.க. சர்வ கட்சிக் கூட்டத்திலே கலந்துகொண்டு, எல்லோரும் இணைந்து ஏற்றுக்கொண்ட ஒரு முடிவை இன்றைக்கு அமல்படுத்துகிறதா என்றால் இல்லை.

திருவாரூர் மாவட்டத்தைப் பன்னீர்செல்வம் மாவட்டம் என்றுதான் அழைக்கிறார்கள்; அதைப்போலத்தான் அம்பேத்கர் மாவட்டம் என்றுதான் வேலூர் மாவட்டத்தை அழைக்கிறார்கள். அவர்களுடைய செய்திகளிலே, அவர்களுடைய விளம்பரங்களிலே அப்படித்தான் வந்துகொண்டிருக்கிறது. சர்வ கட்சிக் கூட்டத்தினுடைய முடிவை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதுபோல, காவிரிப் பிரச்சினைக்கு நாம் சர்வ கட்சிக் கூட்டதைக் கூட்டினோம். அதிலே நாம் எல்லாம் சேர்ந்து எடுத்த முடிவை அவர்கள் ஏற்றுக் கொண்டார்களா என்றால் இல்லை. வெளியிலே வந்த பிறகு எதிர்த்து முழக்கமிட்டார்கள். அதாவது பரவாயில்லை. இப்போது இந்தப் பிரச்சினையிலே சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டினால் என்ன சொல்வார்கள்? என்ன சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், என்ன அறிக்கை விட்டார்கள்? நாங்கள் யாரும் படித்துப் பார்க்கவில்லையா அந்த அறிக்கைகளை? வீரப்பன் கருணாநிதிக்கு பணம் கொடுக்கின்றான்.

வீரப்பனிடத்திலிருந்து பணம் வாங்கி கருணாநிதி கட்சி நடத்துகிறார். தேர்தலுக்காக பணம் வாங்கிக்கொண்டிருக்கிறார். வீரப்பனுடைய நிறுவனம்தான் சன் டி.வி. சன் டி.வி.-யை வீரப்பன்தான் நடத்திக் கொண்டிருக்கிறான் என்கின்ற அளவிற்குப் பேசுகிற ஒரு நிலையில் சர்வ கட்சிக் கூட்டத்திலே அவர்களை உட்கார வைத்து...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் yield பண்ணினால்தான் நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கமுடியும். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும். திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து கழகங்களின் பெயரை மாற்ற வேண்டும் என்ற கூட்டத்தில் எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் கலந்துகொண்டபோது, அதற்கு ஒப்புதல் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் வரவில்லை. அவர்கள் மீதிக் கருத்துகளை ஏற்றுக்கொண்டார்கள். அந்தக் குறிப்பிட்ட கருத்திலே எங்களுக்கு உடன்பாடில்லை என்று அந்தக் கூட்டத்திலே அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆக, அந்தச் சூழ்நிலை வேறு, இந்தச் சூழ்நிலை வேறு. ஒன்றை வைத்துக்கொண்டு நீங்கள் அடுத்த கூட்டத்தை நான் கூட்டவில்லை என்று கூறுவது எந்தவிதத்தில் நியாயம்?

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினையில் திரு. வி.பி. சிங் அவர்களைப் பார்க்கப் போவதற்காக, சர்வ கட்சிக் கூட்டம் கூட்டியபோது, உங்கள் கட்சியின் சார்பிலே, அப்போது எதிர்க்கட்சியாக இருந்த நீங்கள், வருகிறோம் என்று சொல்லி, விமான டிக்கெட்டுகள் வாங்கப்பட்ட பிறகு, இறுதிக் காலத்திலே வரமாட்டோம் என்று ஓடிவிட்டீர்களே, அதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினையிலே, அந்த உடன்படிக்கையிலே உங்களுடைய கட்சியின் நிலை எங்களுக்கு உடன்பாடு இல்லையென்ற காரணத்தினால்தான் அதற்கு நாங்கள் வரவில்லை.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை அமைச்சர் சொல்வது அதுவல்ல. எல்லோரும் சேர்ந்து திரு. வி.பி. சிங் அவர்களைப் பார்ப்பதற்கு—அப்போது அவர் பிரதமர் அவரைப் பார்ப்பதற்கு எல்லா கட்சிகளும் சேர்ந்து செல்வது என்று முடிவு எடுத்து, அப்போது வருவதாகத் தெரிவித்துவிட்டு விமான டிக்கெட் எல்லாம் வாங்கிய பிறகு கடைசியாக இரத்து செய்து விட்டார்கள். அதுதான் அவர் இப்போது சொல்வது. காவிரிப் பிரச்சினைக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்று சொல்லிவிடலாம், அது வேறு.

அப்போது இதே அவையில் எதிர்க்கட்சியிலே நம்முடைய அன்பிற்குரிய திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் இதே பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது, இங்கே முதலமைச்சராக வீற்றிருந்த அம்மா ஜெயலலிதா அவர்கள் என்ன பேசினார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

"தமிழக அரசும் காவல் துறையும் எந்த அளவிற்கு விவேகத்துடனும், கட்டுப்பாட்டுடனும் நிதானம் தவறாமல் செயல்பட்டன என்பதை எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் அவர்களுக்குப் பாராட்ட மனம் வரவில்லை என்றாலும், தமிழகக் காவல் துறையை இழிவுபடுத்தும் வண்ணம் அவையில் அவர் பேசியது வேதனைக்குரியதாகும். வீரம் இருக்கும் இடத்தில் விவேகமும் இருக்க வேண்டும். அப்போதுதான் வீரத்தின் பலன்கள் நமக்குக் கிடைக்கும். வீரப்பனிடம் 3 உயிர்கள் சிக்கிக் கொண்டிருந்த சூழ்நிலையில், அந்த வீரர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படக்கூடாது என்கிற எண்ணத்தினால்தான் காவல் துறையினரையும், மாவட்ட ஆட்சித் தலைவரையும் தகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் எனது ஆணையின் பேரில் பேச்சுவார்த்தை நடத்த ஆரம்பித்தார். மூன்றாவது நாளில் வீரப்பன் கூட்டத்தைச் சேர்ந்த பேபி வீரப்பன் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்துப் பேசினான். பேபி வீரப்பன், பின்னர் வீரப்பனின் மனைவியையும் வேறு சிலரையும் பாதுகாப்பாக வைத்துள்ள இடத்திற்குச் சென்று பார்த்துவிட்டு வந்தான். வீரப்பனின் தம்பி அர்ச்சுனன் *12-12-1994* அன்று மருத்துவச் சிகிச்சை செய்துகொள்வதற்கும், வீரப்பனின் அடாவடித்தனமான நிபந்தனைகளைத் தெரிவிப்பதற்கும் வந்தான். சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்ற அவனது சகோதரன் மாதையனைப் பார்ப்பதற்கும் தனது காயத்திற்கு மருத்துவச்

சிகிச்சை செய்துகொள்வதற்கும் அர்ச்சுனனுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

நாம் வெளிப்படுத்துகின்ற எந்தச் செய்தியும் மேற்கொண்டுள்ள பணிக்கு இடையூறாகப் போவது மட்டுமின்றி மூன்று பேர்களின் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்கின்ற எச்சரிக்கை உணர்வும்தான் பல செய்திகளை நாங்கள் வெளியிட முடியாமல் போனதற்குக் காரணம்.

இன்று காவலர்கள் மேற்கொண்ட பணிகளை வாய்க்கு வந்தபடி ஏசுபவர்கள், வீரப்பனைப் பிடிக்க முடியவில்லையா; தனி ஆள், இரட்டை ஆள் என்று வீரப்பனைக் கூறுகின்றவர்கள், இத்தனை பெரிய காவல் படை சென்று வீரப்பனையும் அவன் கூட்டத்தையும் பிடிக்க முடியவில்லையா என்று நிதானமின்றி இந்தப் பிரச்சினையை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறவர்களுக்கு சில உண்மைகளை வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்."

நான் அல்ல, இதுவெல்லாம் ஜெயலலிதா பேச்சு. இப்போது ஜெயலலிதா பேசிக்கொண்டிருப்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள்.

"பிணைக் கைதிகளாக வீரப்பனிடம் சிக்கிக் கொண்ட மூன்று பேர்களையும் எப்படியாவது காப்பாற்றி அழைத்து வருவதற்காக National Security Guard (NSG) Brigadier ஒருவரின் தலைமையிலே 180 பேர்கொண்ட ஒரு குழு மீட்புப் பணியை மேற்கொள்ள டெல்லியிலிருந்து வந்தது. N.S.G. என்பது மத்திய அரசின் அதிரடிப் படையாகும். கிட்டத்தட்ட 6,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள அடர்த்தியான வனப் பகுதிகளை நேரில் கண்ட பின்பு, இத்தகைய இடங்களில் மீட்புப் பணியை மேற்கொள்வது மிகவும் கடினமான காரியம் என்று கருத்து தெரிவித்து N.S.G. குழுவினர் திரும்பிச் சென்றுவிட்டார்கள்." இதுவும் ஜெயலலிதா சொன்னதுதான்.

"வீரப்பன் எங்கே ஒளிந்திருக்கிறான்? கட்டாந்தரையிலோ அல்லது களத்துமேட்டிலோ அல்ல; அடர்த்தியான மரங்கள் வளர்ந்து, ஆறு அடிக்கு அப்பால் ஒரு யானை நின்றால்கூட அது கண்ணுக்குத் தெரியாத ஒரு வனாந்தரப் பகுதியில் ஒளிந்துகொண்டிருக்கிறான். யானை நின்றாலே கண்ணுக்குத் தெரியாத அடர்த்தியான காட்டுப் பகுதியில் ஒரு ஒல்லியான மனிதன் மறைந்து நின்று, கொரில்லாத் தாக்குதலில் ஈடுபட்டால் அந்தச் சூழ்நிலையை எப்படிச் சமாளிக்க முடியும்?

மனைவி மக்களைப் பிரிந்து, மாதக் கணக்கில் ஓய்வு ஒழிச்சலின்றி தங்களது உயிருக்கு எப்போது ஆபத்து வரும் என்று தெரியாத நிலையில் பாடுபட்டு வரும் காவலர்களின் கடுமையான வாழ்க்கையைப் புரிந்து



கொள்ளாமல், சிலர் வக்கணை பேசுகிறார்கள், வசைச் சொல் கூறுகிறார்கள். இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல் காவல் துறையைக் களங்கப்படுத்திப் பேசுவது அறிவுடைமை ஆகாது." (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொல்லவில்லை. "அறிவுடைமை ஆகாது" என்று ஜெயலலிதா அம்மையார் சொல்கிறார். "வக்கணை பேசுகிறார்கள். வசைச் சொல் கூறுகிறார்கள். இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல், காவல் துறையைக் களங்கப்படுத்திப் பேசுவது அறிவுடைமை ஆகாது" என்று ஜெயலலிதா கூறியுள்ளார்.

பிறகு, 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இதே போன்றதொரு கடத்தல் வீரப்பனால் நடத்தப்பட்டபோது, ஒத்திவைப்புத் தீர்மானம். அதிலே அந்த அம்மையார் பேசுகிறார், "வீரப்பனைப் பிடிப்பதற்காக இராணுவத்தின் உதவியை நாட வேண்டும், இராணுவத்தினரால்தான் இது முடியும் என்று இங்கே எதிர்க்கட்சித் தலைவர் பேசினார். அதை இந்த நேரத்தில் நான் ஏற்றுக்கொள்ளமுடியாது. இராணுவத்தினர் இங்கே வந்தால் அதனால் வேறு சில பிரச்சினைகள் எழக்கூடும். இராணுவத்தினர் போடுகின்ற ஒரு நிபந்தனை, அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களையெல்லாம் காலி செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அது சாத்தியமான காரியமல்ல. இந்த விஷப் பரிட்சையில் இறங்க இந்த அரசு விரும்பவில்லை. இராணுவத்தினருக்கு என்று சில திறமைகள் இருக்கலாம். ஆனால் அந்தப் பகுதியைப் பொறுத்தவரை, அந்தக் காடுகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு அது ஒரு Unknown terrain இந்தக் காட்டுப் பகுதியிலே உள்ள பாதைகள் எங்கே போகின்றன, எப்படிப் போகின்றன என்பதெல்லாம் இராணுவத்திற்குத் தெரியாது. ஆகவே இராணுவத்தை அழைக்க இயலாது" என்றும் ஜெயலலிதா அவர்களே இதே அவையிலேதான் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 12-10

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். முதலமைச்சர் yield ஆகவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை. நான் அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, (குறுக்கீடு)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2000 நவம்பர் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள் இப்போது (குறுக்கீடு) சரி, நீங்கள் உட்காருங்கள் இப்பொழுது. உங்கள் பேச்சு குறிப்பேட்டிலே ஏறாது, உட்காருங்கள். நீங்கள் என்ன பேசினாலும் ஏறாது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தீவிரவாதிகளை அனுப்பி இதுபோன்ற கடத்தல் சம்பவங்களில் அவர்களை விடுவிக்கின்ற முயற்சி ஒன்றும் புதிது அல்ல. இதற்குப் பல முன்மாதிரிகள் இருக்கின்றன.

சமீபத்திலே காத்மாண்டிலேயிருந்து 181 பயணிகளோடு புறப்பட்ட இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் 5 தீவிரவாதிகளால் கடத்தப்பட்டது. அதில் 41 பேர் தமிழர்கள் இருந்தார்கள். மொத்த பயணிகளில் 27 பேர் விடுவிக்கப்பட்டார்கள். 4 பேர் கொல்லப்பட்டார்கள். கடத்தப்பட்ட விமானம் இறுதியாக ஆப்கானிஸ்தானத்தில் இருந்த காந்தகார் விமான நிலையத்தில் தரையிறங்கியது. விமான கடத்தல்காரர்களோடு ஐக்கிய நாடுகளின் தூதுக் குழுவே பேச்சுவார்த்தை நடத்தியது. அப்பொழுது, காஷ்மீரில் சிறை வைக்கப்பட்டிருந்த பாகிஸ்தானுடைய மதத் தலைவர் மவுல்வி மசூத் அசாரையும், வேறு சில தீவிரவாதிகளையும் விடுதலை செய்யாத வரையில் பயணிகளை விடுவிக்க முடியாது என்று கடத்தல்காரர்கள் திட்டவட்டமாகக் கூறிவிட்டனர். பயணிகளை விடுவிக்குமாறு தூதுக் குழு விடுத்த வேண்டுகோளைக் கடத்தல்காரர்கள் ஏற்க மறுத்துவிட்டார்கள். தங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படாத நிலையில் பயணிகளை விடுவிக்க முடியாது என்று கூறிவிட்டதால் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது, தூதுக் குழு திரும்பிவிட்டது. விமானக் கடத்தலுக்குக் காஷ்மீர் தீவிரவாத அமைப்பான இஸ்லாமிய மீட்பு முன்னணி பொறுப்பேற்றுக்கொண்டது. மவுல்வி மசூத் அசார் உள்ளிட்ட தீவிரவாதிகளை விடுவிக்கக்கூடாது என்று இராணுவத் துறை நிபுணர்களெல்லாம் வற்புறுத்தியும்கூட கடத்தல்காரர்களோடு பேச்சுவார்த்தை நடத்த இந்தியத் தூதுக் குழு ஒன்று சென்று பேச்சுவார்த்தை நடத்தியது. இறுதியாக 8 நாட்களுக்குப் பிறகு உடன்பாடு ஏற்பட்டு, சிறைகளிலே அடைக்கப்பட்டிருந்த 3 தீவிரவாதிகள் விடுதலை செய்யப்பட்ட பிறகுதான் பயணிகள் எல்லாம் விடுவிக்கப்பட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒரு செய்தி.

அதுமாத்திரம் அல்ல. அதற்கு முன்பேகூட, 1989-ல் வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்த அந்தக் காலத்தில், மத்திய உள் துறை அமைச்சராகயிருந்த



2000 நவம்பர் 13] [கலைஞர் மு. கருணாநிதி]

முப்தி முகம்மது சையத் அவர்களுடைய மகள் ரூபையா சையத் அவர்களைக் காஷ்மீர் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுவிட்டார்கள். அவரை விடுவிக்க டிசம்பர் 13, 1989 அன்று ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி —J.K.L.F. என்ற தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த 5 தீவிரவாதிகள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மீண்டும் மார்ச் 1991-ல் காஷ்மீர் அரசியல் தலைவர் சைபுதீன் சோஸ் அவர்களின் மகள் நாஹீது என்பவர் தீவிரவாதிகளால் கடத்திச்செல்லப்பட்டபோது அவரை விடுவிக்க காஷ்மீர் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த 3 தீவிரவாதிகள் விடுவிக்கப்பட்டார்கள்.

1991-ல் இந்தியன் ஆயில் கம்பெனியின் மூத்த அதிகாரி துரைசாமி என்பவர் காஷ்மீர் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்படும்பொழுது அவரை விடுவிக்க ஆகஸ்ட் 20 அன்று 11 காஷ்மீர் தீவிரவாதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

இன்னொன்றை உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன். பழ. நெடுமாறனையும், வேறு சில தீவிரவாதிகள் என்று உங்களால் சொல்லப்படுகின்றவர்களையும் குற்றம் சாட்டப்பட்டவர்களையும் அனுப்பியது தவறு என்று கூறப்பட்டது. சில மாதங்களுக்கு முன்பு ஆந்திராவில் நாலைந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நக்சலைட்டுகள் கடத்திக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களிடம் பேசி அதிகாரிகளை மீட்க யாரை அனுப்புவது என்ற கேள்வி எழுந்தது. அப்போது நக்சலைட்டுகளைச் சந்தித்துப் பேச்சு நடத்த யாரை அனுப்பலாம் என்ற ஒரு கருத்து உருவானது. நக்சலைட்டுகளால் கடத்தப்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை விடுவிக்க நக்சலைட் இயக்கத்திற்காக வாதாடிக்கொண்டு இருக்கின்ற வக்கீலையே அனுப்பலாம் என்று ஒரு கருத்து வந்தது. இந்தக் கருத்தை ஆந்திர அதிகாரிகள் கடுமையாக எதிர்த்தார்கள். ஐ.பி.எஸ். அதிகாரிகள் கடுமையாக எதிர்த்தார்கள். ஆனால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சங்கம் கூடி, எங்களைச் சேர்ந்த நாலைந்து அதிகாரிகள் நக்சலைட்டுகளால் கடத்தப்பட்டிருக்கும்பொழுது அதுபற்றி விவாதமா? எனவே அவர்களை மீட்க, வழக்கறிஞர் கண்ணபிரானைக் கட்டாயம் காட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று தீர்மானமே போட்டார்கள். பிறகு ஆந்திர அரசு, வழக்கறிஞர் கண்ணபிரானை அனுப்பி, அந்த நான்கைந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும் மீட்டு வந்தது. ஆகவே முள்ளை முள்ளால் எடுப்பது என்பார்களே, முள்ளிலே விழுந்த சேலையை, துணியை எடுப்பதைப் போல, ஆரம்பத்தில் செய்தோம். பிறகு, முள்ளை முள்ளால் எடுப்பதைப்

போல, அந்தக் காரியத்தையும் செய்யவேண்டிய அவசியத்திற்கு நாம் வந்திருக்கின்றோம் என்பதை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12-15*

திரு. நெடுமாறன் அவர்களைப்பற்றிப் பேசப்பட்டது. நெடுமாறன் என்னமோ பிரிவினைவாதி, நெடுமாறன் தேசவிரோதி என்றெல்லாம்கூட நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்குப் பேசும்போது குறிப்பிட்டார்கள். நெடுமாறன் நடத்துகின்ற தமிழர் தேசியக் கட்சி, தடை செய்யப்பட்ட இயக்கம் அல்ல. அல்லது அவரும் அவரோடு சென்றிருக்கின்ற இரண்டு பேர், பேராசிரியர் கல்யாணி என்பவரும், பாண்டிச்சேரியைச் சேர்ந்த அவருடைய இயக்கத்தைச் சேர்ந்த சுகுமாரன் என்பவரும் மனித உரிமை மீட்பு கூட்டு இயக்கம் என்ற ஒன்றை நடத்துகிறார்கள். அதன் சார்பாகத்தான் போய் இருக்கிறார்கள். கேட்கலாம். அவர் பிரபாகரனுக்கு வேண்டியவர் அல்லவா, பிரபாகரனை ஆதரிப்பவர் அல்லவா, ராஜீவ் காந்தி கொலை வழக்கிலேகூட அந்தக் கொலையாளிகளுக்காகக் கருணை காட்டக்கூடியவர் அல்லவா என்றெல்லாம்கூடக் கேட்கலாம். நான் அதை மறுத்தோ அல்லது ஆதரித்தோ, அவர் அப்படிச் செய்தது சரிதான் என்றோ பேச வரவில்லை. ஆனால் அதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு இருக்கிறது. அதை மறந்து விட்டீர்களே. நெடுமாறன் என்ன செய்தாரோ, அதே காரியத்தை வீரமணி செய்துகொண்டிருக்கவில்லையா? என்ன பேசினார்? ஒரு ஆண்டு கூட முடியவில்லை. 1999 ஜனவரி 24 ஆம் நாள் சென்னையில் நடைபெற்றது 'எம்.ஜி.ஆரும், ஈழத் தமிழர்களும்' என்ற நூல் வெளியீட்டு விழா. அதில் வீரமணி பேசினார். "விடுதலைப் புலிகளின் மீதுள்ள தடையை நீக்குக என்று கோருவது, அரசியல் சட்டத்திற்குப் புறம்பானதோ, விரோதமானதோ அல்ல." அரசியல் சட்டம்பற்றி லத்தீப் அவர்களுக்கு என்னைவிட நன்றாகத் தெரியும். இங்கே பேசினார்கள். வீரமணி சொல்லியிருக்கிறார். "விடுதலைப் புலிகளின் மீதுள்ள தடையை நீக்குக என்று கோருவது அரசியல் சட்டத்திற்குப் புறம்பானதோ விரோதமானதோ அல்ல". மேலும் வீரமணி, "என்னைப் பொறுத்தவரையில், பிரபாகரன் தமிழ்ச் சமுதாயத் தலைவர் மட்டுமல்ல, என்னுடைய இளைய சகோதரனாகும்" என்று பேசியுள்ளார். யாருக்கு? வீரமணிக்கு. ராஜீவ் காந்தியைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள பிரபாகரன், வீரமணிக்கு இளைய சகோதரன். மறந்துவிடாதீர்கள். நான், நெடுமாறனோ அல்லது வீரமணியோ இப்படிப் பேசுவதோ கருதுவதோ சரியென்று ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆள் அல்ல நான் என்பது உங்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். ஆனால் அதே



வீரமணி அவர்கள், அவருடைய கட்சியினுடைய சார்பில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 13 ஆம் நாள் மயிலாடுதுறையில் நடைபெற்ற—சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற—திராவிடர் கழகத்தினுடைய மத்திய செயற்குழுக் கூட்டத்தில் என்ன தீர்மானம் நிறைவேற்றினார் தெரியுமா? "ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட நான்கு கைதிகளுக்கான தண்டனையைக் குறைக்க வேண்டுமென்று" குடியரசுத் தலைவர் திரு. கே.ஆர். நாராயணன் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து தீர்மானம் நிறைவேற்றினார்கள். அந்தத் தீர்மானத்தினுடைய முழு வாசகத்தையும் படிக்கிறேன்.

"அண்மையில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், தடா சட்டம் அவ்வழக்கிற்குப் பொருந்தாது என்று தீர்ப்புக் கூறிய உச்ச நீதிமன்றம், அதே சட்டத்தின் அடிப்படையில் சட்ட வலிமை பெற்ற சாட்சியங்களை ஏற்று பலருக்குத் தண்டனை அளித்தது நியாயப்படி ஏற்கத்தக்கதல்ல." "அதில் தூக்குத் தண்டனை பெற்றவர்களான நளினி, திருவாளர்கள் முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோருக்குக் குறைந்தபட்சம் ஆயுள் தண்டனையாகக் குறைத்து அவர்களுக்கு கருணைகாட்ட வேண்டுமென்று குடியரசுத் தலைவரை இக்குழு வேண்டிக் கேட்டுக்கொள்கிறது".

*பிற்பகல் 12-20*

அது மாத்திரமல்ல, 27-5-1999 'விடுதலை' பத்திரிகையில் வீரமணி எழுதிய தலையங்கத்தில்—"தமிழ்நாட்டு அரசியலிலும் சரி, இந்திய அரசியலிலும் சரி, எப்போதாவது, யார் மீதாவது பழிபோட்டு மற்றவர்களைப்பற்றித் தவறான பிரச்சாரம் செய்வதற்கு 'ரெடிமேடு' பலிகடாவாக ஆக்கிட, என்றும் பலரால், குறிப்பாக சில அரசியல் கட்சிகளாலும், உளவுத் துறைகளில் மேலோங்கியுள்ள பார்ப்பன ஆதிக்கவாதிகளாலும் பயன்படுத்தப்படும் அமைப்பு ஈழத்தில் தன்னுரிமை, மனித உரிமைக்குப் போராடிக்கொண்டு இருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பேயாகும். தமிழ்நாட்டிலோ, தென்னாப்பிரிக்காவிலோ அல்லது உலகெங்கும் உள்ள நாடுகளில் வாழும் தமிழர்களோ, ஈழத் தமிழர்களின் உரிமைப் போரை, விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பது என்ன மாபெரும் சமூகக் குற்றமா" என்று கேட்ட வீரமணி அவர்கள் யாரோடு இருக்கிறார்; எங்கே இருக்கிறார்; எங்கே ராஜகுரு என்ற நிலையிலே இன்றைக்கு அவர் இருக்கிறார்

என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரியும். அவருக்கு டெல்லியிலே, அங்கு நடைபெற்ற ஒரு விழாவிலே, டெல்லியினுடைய முதலமைச்சர் ஷீலா தீட்சித் அவர்கள் 5 இலட்சம் ரூபாய் அவருடைய நிறுவனத்திற்கு நிதிகூட, இப்போதுதான் ஒரு மாதத்திற்கு முன்புதான் கொடுத்திருக்கிறார். இங்கேகூட, பெரியார் விழா—ஒரு கமிட்டி போட்டு, அவர் அமைப்பாளராக இருந்து, நம்முடைய மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் குழுவினுடைய தலைவராக இருந்து நடத்தப்பட்டிருக்கிறது. நான் அதைத் தவறு என்று சொல்லவில்லை. அது சரி என்கிறபோது, நெடுமாறன் சென்றதும் சரிதான் என்பதற்காகத்தான் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதைச் சொல்கிறேனேயல்லாமல், அதைத் தவறு என்று நான் சொல்லவில்லை என்று குறிப்பிட்டு, இந்த அளவில் கர்நாடக மக்களும், தமிழக மக்களும் சகோதரர்களாக வாழ்வதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்க இந்தத் தீர்மானம் பயன்படட்டும் என்றுகூறி, இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுக்கவில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒன்றைச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுக்கவில்லை என்கிறேன். (குறுக்கீடு) விவாதம் முடிவுற்றது. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** என்னுடைய கருத்தைத் தெரிவித்து வெளிநடப்புச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வெளிநடப்புச் செய்யுங்கள். (குறுக்கீடு) வெளிநடப்புச் செய்யுங்கள், யார் வேண்டாம் என்றார்கள். நான் வெளி நடப்புச் செய்கிறேன் என்று சொல்லிவிட்டுப் போங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதற்காகத்தான் நான் மைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லிவிட்டு, வெளிநடப்புச் செய்யுங்கள்.





**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சநீதி மன்றம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வெளிநடப்புச் செய்வதற்குத்தான் உங்களுக்கு அனுமதியேயொழிய திரும்பப் பேசுவதற்கு அனுமதி கிடையாது. நீங்கள், முதலமைச்சர் பதிலில் கொஞ்சம்கூட எனக்குத் திருப்தி இல்லை, ஆகவே நான் வெளிடப்புச் செய்கிறேன் என்று சொல்வதற்குத்தான் நான் உங்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜ்குமார் அவர்களை... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கின்ற அளவோடு நிறுத்திக்கொண்டால்தான் அவைக் குறிப்பிலே உங்களுடைய பேச்சு ஏறும். இங்கே நீங்கள் வெளிநடப்புச் செய்வதற்கு முழு சுதந்திரம் உண்டு. உங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கும் முழு சுதந்திரம் உண்டு. ஆனால் திரும்ப இங்கே ஒரு சொற்பொழிவை ஆற்றுவதற்கு உங்களுக்கு அனுமதி கிடையாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை எங்களுக்குத் திருப்தி அளிக்காததாலும், அவர்கள் நெடுமாறனை அனுப்பியது சரி என்று வாதிட்டதை ஏற்றுக்கொள்ளாததாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

## 6. தகவல் கோரல்

### மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்கள் ஊர்வலத்தின்போது நடந்த சம்பவங்கள் குறித்த விசாரணைக் கமிஷன் அறிக்கைமீது விவாதம்

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 23-7-1999 ஆம் நாளன்று மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக நடத்திய போராட்டத்தின்போது...

[2000 நவம்பர் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் Order of Business படிக்கும்போது, நீங்கள் ஊடே எழுந்திருந்து எதையாவது பேசுவதை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் அடுத்த Business-க்குப் போகிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ஆறு நாட்கள் சட்டமன்றம் நடைபெற்றிருக்கிறது. கடைசி நாளில், விசாரணை அறிக்கையை வைத்தால், இதிலே நாங்கள் எப்படிப் பேசுவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு, கடைசி நாளில் வைக்க வேண்டுமென்பதுகூட அவசியம் கிடையாது. அடுத்த கூட்டத் தொடரில்கூட வைத்திருக்கலாம். எனக்குக் கிடைக்கும்போதுதான் நான் வைக்க முடியும். வேறு வழி கிடையாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இதில், என்னுடைய ஆட்சேபணையைத் தெரிவிக்க வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அடுத்து நடக்கும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கமிஷன் ரிப்போர்ட் வைக்கும்போது, மூன்று நாட்கள் அவகாசம் கொடுக்க வேண்டும். இன்று வைப்பது என்பது சரியில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எங்களுக்குக் கிடைக்கும்போதுதான் வைப்போம்.

**திரு. ஜி. பழனிசாமி:** அதற்கு நீங்கள் வைக்காமலேயே இருந்திருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு மூத்த சட்டமன்ற உறுப்பினர். உங்களுக்கே தெரியும். எத்தனையோ சட்டமுன்வடிவுகள் நேற்றைக்கு முன்தினம் காலை வந்து அவற்றை நாம் விவாதித்திருக்கிறோம். எங்களுக்கு வரும் நேரத்திலேதான் நான் இதைச் செய்ய முடியுமேயொழிய, இதை எதிர்பார்த்து இந்த அறிக்கை எங்கே என்று நான் கேட்டுக்கொண்டிருக்க முடியாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** முன்னரே வைத்திருக்க வேண்டும் என்று தான். சொல்கிறேன். நாங்களும் படித்திருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி வைத்திருந்தாலும் உங்களுக்கு எப்படி வாய்ப்புக் கொடுக்க முடியும்? ஆகவே அடுத்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் நீங்கள் நன்றாகப் படித்துக் கொண்டுவந்து பேசுங்கள்.



2000 நவம்பர் 13]

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இந்த அவையிலே இருக்கக்கூடிய ஆறு சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டது. இதிலே, எல்லோர் மேலேயும் குற்றச்சாட்டு சொல்வது மாதிரி இருக்கிறது. இதிலே ஆட்சேபகரமான கருத்துகள் இருக்கின்றன. அதை எப்படி நாங்கள் ஏற்றுக்கொள்வது? அதுபற்றிப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் சொல்கிறேன். அடுத்த சட்டமன்றக் கூட்டத்தில் உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படும். அப்போது நீங்கள் அதற்குத் தனித் தீர்மானம் ஒன்று கொண்டுவாருங்கள்.

*பிற்பகல் 12-25*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இந்த அறிக்கை ஒட்டுமொத்தமாக ஜனநாயக விரோதமாக இருக்கிறது. இதை நான் கண்டித்து வெளிநடப்புச் செய்ய வேண்டி இருக்கிறது. இந்த அறிக்கையில் உண்மைக்கு மாறான பல கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. எங்களுடைய மனதைப் புண்படுத்துகிற மாதிரி இருக்கிறது. ஒரு நல்ல நோக்கத்திற்காக ஊர்வலம் போனோம். அந்த நோக்கத்தையெல்லாம் புண்படுத்தக்கூடிய விதத்திலே இது இருக்கிறது. 17 பேர் இறந்திருக்கிறார்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதிருப்தியைக் காண்பித்து வெளிநடப்புச் செய்யுங்கள். அதிருப்தியைக் காண்பிக்கிறேன் என்று சொற்பொழிவு ஆற்றுவதற்கு உங்களுக்கு அனுமதி கொடுக்க மாட்டேன். நீங்கள் சொல்லிவிட்டீர்கள். "என்னுடைய அதிருப்தியைத் தெரிவிப்பதற்கு வெளிநடப்புச் செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு தாராளமாக வெளிநடப்புச் செய்யுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இந்த அறிக்கையைக்கூட நான் கிழித்துப் போடுவதுதான் நியாயமானதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்யுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நீங்கள் இப்படியெல்லாம் செய்யக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஒன்றும் செய்யவில்லை. நானா விசாரணை செய்தேன்? நீங்கள் வெளிநடப்புச் செய்வது அவைக் குறிப்பிலே ஏற்றப்படும்.

[2000 நவம்பர் 13

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இந்த அறிக்கையைக் கிழித்துப் போடுவதும் அவைக் குறிப்பில் ஏற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

*(டாக்டர் க. கிருஷ்ணசாமி, விசாரணை அறிக்கையைக் கிழித்துவிட்டு, வெளிநடப்புச் செய்தார்.)*

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2000-2001, முன் மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2000-2001 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

'In pursuance of Art. 205 read with clause (iii) of Art. 203 of the Constitution of India, I, M. Fathima Beevi, Governor of Tamil Nadu hereby give my recommendations for the demands for further grants for the year 2000-2001 being moved in the Tamil Nadu Legislative Assembly'.

## 7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கைமீது விவாதமும் வாக்கெடுப்பும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000-2001 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 7-11-2000 தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2000-2001 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2000 நவம்பர் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானமும் மானியக் கோரிக்கைகளும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. பேரவை விதிகளின்படி இன்று விவாதமும் பதிலுரையும் சரியாக 1 மணி 30 நிமிடங்களுக்குள் முடிக்கப்பட்டு, வாக்கெடுப்பிற்கு எடுக்கப்பட வேண்டும் என்பதை உறுப்பினர்கள் மனதிற்கொண்டு சுருக்கமாகப் பேசும்படி கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** எங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க் கட்சியில் ஒருவருக்குத்தான் வாய்ப்புக் கொடுப்பேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** பிரதான கட்சிக்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எத்தனை கட்சியாக இருந்தாலும் ஒன்றுதான். அது என்னுடைய உரிமை. (குறுக்கீடு) ஒரு மணிநேரம்தான் இருக்கிறது. அதற்குள் முதலமைச்சரும் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** எங்களுக்குப் பேச உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம். நீங்கள் கேட்கவில்லை, உங்களுக்குக் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) ஒருவருக்குத்தான் கொடுப்பேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவரவர்களே, இன்றையதினம் நேரத்தினுடைய அருமை கருதி ஆளுங்கட்சி சார்பில் ஒருவர்கூட நாங்கள் பேசவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் ஒருவருக்குத்தான் பேச அனுமதி கொடுப்பேன். திரு. ஜி. பழனிசாமி அவர்கள். (குறுக்கீடு) இல்லை, கொடுக்க முடியாது.

**திரு. சி. ஞானசேகரன்:** ஜனநாயக விரோதமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம். ஜனநாயகத்திற்கு விரோதமாக நான் செயல்படுகிறேன் என்றால் அதற்குண்டான தீர்மானத்தைக் கொண்டு வாருங்கள். (குறுக்கீடு) நாங்கள் யாரும் பேசவில்லை என்று ஆளும் கட்சியினர் கூறுகிறார்கள்; முதலமைச்சர் பதில் வேண்டாம் என்றாலும் சரிதான். நீங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள்.

திரு. பழனிசாமி பேசுவார். (குறுக்கீடு) நான் அறிவித்துவிட்டேன், நீங்கள் ஊடே நிற்காதீர்கள். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. சி. ஞானசேகரன்:** எங்களுக்கு 5 நிமிடம் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள்.

***(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)***

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டுக்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக காலத்தின் அருமை கருதி நான் சுருக்கமாக சில கருத்துகளைச் சொல்ல விழைகின்றேன். குறிப்பாக, இரண்டு தினங்களுக்கு முன்னதாக, மன்றத்தில் நடைபெற்றிருக்கிற விவாதங்களின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இல்லாவிட்டாலும்கூட, சபையினுடைய நிகழ்ச்சிகளை அவர் கேட்டறிந்து இருப்பார் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அந்தவகையிலே சென்ற நிதிநிலை அறிக்கையினுடைய, பட்ஜெட் கூட்டத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எதிர்க் கட்சிகளின் சார்பாக விவசாயிகள் பட்டிருக்கிற வேதனைகளைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக அவர்களுடைய கடனைத் தள்ளுபடி செய்யாவிட்டாலும்கூட, அதனுடைய வட்டியை முழுமையாகத் தள்ளுபடி செய்து, அவர்கள் பெற்றிருக்கிற கடன்கள் 3 தவணைகளில் கட்டப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தி எதிர்க் கட்சிகளின் சார்பாக எழுத்துபூர்வமாக முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்தோம். மீண்டும் எதிர்க் கட்சிகளுடைய சட்டமன்ற கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசுவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் மிகவும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். விவசாயிகளும் பெரிதும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று மீண்டும் உங்களிடத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-30*

அதேபோன்று கொப்பரைத் தேங்காய், தேயிலை விவசாயிகளுடைய கோரிக்கைகளை விரிவாகப் பேசியிருக்கிற காரணத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதையும் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு



விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன்களுக்கான வட்டியை ஒரு சதவிகிதம் உயர்த்தினாலும், தாங்கள் ஒரு சதவிகிதம் குறைப்பதாகக் கூறியிருப்பது விவசாயிகளிடையே மிகப் பெரிய ஏமாற்றத்தை அளிக்கிறது என்பதைத் தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரால், இறக்குமதிக் கொள்கை என்ற பெயரால், தேயிலையாக இருந்தாலும், தேங்காயாக இருந்தாலும் பல்வேறு பொருட்களை இறக்குமதி செய்கின்ற காரணத்தால், உள்ளூரில் உற்பத்தி ஆகக்கூடிய அனைத்துப் பொருட்களின் விலைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன. விவசாயிகளுக்கு சரியான விலை கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. சந்தைகளில் விலை குறையவில்லை. உற்பத்திக் குறைவும், இறக்குமதி அதிகரிக்கிற கொள்கையும் பெரிதாக விவசாயிகளைப் பாதித்திருக்கிறது என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆக இறக்குமதிக் கொள்கையால் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களான நெல், கடலை, தேங்காய், தேயிலை ஆகியவற்றிற்கு அதிக விலை கிடைக்காவிட்டாலும், விலை குறைந்ததா என்றால், பல சந்தைகளில் அந்தப் பொருட்களினுடைய விலையும் குறைக்கப்படவில்லை.

சென்றமுறை பல்வேறு பொருட்களுக்கு வரிகளைக் குறைத்திருந்தபோதிலும், ஏதாவது ஒரு பொருளுக்கு வரி குறைந்திருக்கிறதா என்று சொன்னால், எந்தப் பொருளுக்கும் வரிக் குறைவால், விலை குறைந்ததாகப் பட்டியலிட்டுக் காட்ட முடியாது என்ற சூழ்நிலையே இன்றையதினம் இருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று மத்தியிலே ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கக்கூடிய பி.ஜே.பி. கட்சி, ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நாள் முதல் இன்று வரையிலேயும், பல்வேறு தடவை பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலையை உயர்த்தியிருக்கிறது. இதன்மூலம் அத்தியாவசியப் பொருட்கள் விலைகள் அத்தனையும் தமிழகத்தில் கிடுகிடுவென்று உயர்த்தப்பட்டிருக்கிறது. ஏழை எளிய பாமர மக்கள், அன்றாட வருமானம் பெற்று வாங்கிச் சாப்பிடக்கூடியவர்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்துகொண்டிருக்கிறவர்கள் வாழ்க்கையில் மென்மேலும் படுபாதாளத்திலே இன்றையதினத்திலே தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மத்தியிலே ஆளும் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் அங்கம் பெற்றிருக்கிற, ஆதரவு காட்டுகிற கட்சிகளெல்லாம் இன்றையதினம்

இந்தியா முழுவதும் கண்டனக் குரலை எழுப்பிக்கொண்டு இருக்கின்றன. ஆனால் தமிழகத்திலேயிருந்து எந்தவொரு குரலும், அதற்கு எதிர்ப்பான வார்த்தைகளும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வார்த்தைகளிலிருந்து ஏன் வரவில்லை என்பது இரகசியமாக இருந்துகொண்டிருக்கிறது. ஆந்திர முதல்வர் அவர்கள் பெட்ரோல் விலை உயர்வை எதிர்க்கிறார், டீசல் விலை உயர்வை எதிர்க்கிறார், மண்ணெண்ணெய் விலை உயர்வை எதிர்க்கிறார், அதுபோன்று உரத்தின் விலைக்கும் குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறார். மேற்கு வங்கத்திலே மம்தா பானர்ஜி (மணியடிக்கப்பெற்றது) இருங்கள், இப்போதுதான் தொடங்கி இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவ்வளவுதான், 1-30 மணிக்குள் முடிக்க வேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** ஆக அவரவர்களுக்குள்ள கடும் எதிர்ப்புகளைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். விலை குறைப்புச் செய்யவில்லை என்று சொன்னால், மத்திய ஆட்சிப் பொறுப்பில் அங்கம் வகிப்பதை விலக்கிக் கொள்வேன் என்று இன்றையதினம் சொல்லி வருகிறார்கள். ஆனால் நம்முடைய மாநில அரசு எந்தவொரு கருத்தும் சொல்லாமல், வாய்மூடி மர்மமாக இருப்பதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. மண்ணெண்ணெய் விலை உயர்வைப்பற்றிச் சொன்னால், சாதாரண ஏழை எளிய மக்கள் பயன்படுத்தும் மண்ணெண்ணெய் ரூ.18, ரூ. 18.50 காசுக்கும், 20.00 ரூபாய்க்குக்கூட விற்பனை செய்கிறார்கள். இப்படிப்பட்ட கொடுமைகளால் தமிழகத்திலே இருக்கிற ஏழை எளிய, குடிசைவாழ் மக்கள் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகளுக்கு மத்திய அரசால் வழங்கப்படக்கூடிய நிதி படிப்படியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க வேண்டிய நிதியும் குறைக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி மன்றங்களுக்கு வழங்கக்கூடிய நிதியை மத்திய அரசு குறைத்துக்கொண்டிருக்கிறது. நம்முடைய மாநில அரசு அதைப்பற்றி கேட்டதா அல்லது கேட்டுப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டதா என்பதைப்பற்றி ஒன்றுமே தெரியவில்லை. அடிப்படையான வேலைகள் அப்படியே ஸ்தம்பிக்கக்கூடிய அளவுக்கு மத்திய அரசு இன்றையதினம் முடக்கி வைத்திருக்கிறது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பிற்பகல் 12-35

இன்றைக்கு தமிழகத்தில் ஆலைகள், தொழிற்சாலைகள் உற்பத்தியில் தமிழகம் நான்காவது இடத்தில் இருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே வரவேற்கிறோம். எப்படியென்று சொன்னால், இயந்திரங்கள் உற்பத்தி செய்யக்கூடிய ஆலைகள் மட்டும் தொடங்கியிருக்கின்றன. ஆனால் Manpower-தொழிலாளர்கள் உற்பத்தி செய்யக்கூடிய ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரியும் ஆலைகள் மூடப்பட்டு பல ஆண்டுகாலம் பணிபுரிந்தவர்கள் வாழ்க்கையில் இன்று படுமோசமான நிலைக்கு வந்திருக்கிறார்கள். ஒன்று, ஈரோடு மாவட்டத்திலே ஈங்கூர் என்ற இடத்திலே இன்றையதினத்திலே பெருமள்வுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஈரோடு மாவட்டத்திலே சத்தியமங்கலத்தினுடைய வட்டாரத்தில் இருக்கக்கூடிய தொழிற்சாலை, அதேபோன்று, மதுரை, மதுரா கோட்ஸ் தொழிற்சாலை, திருப்பூரிலே இருக்கின்ற தனலட்சுமி மில்ஸ், ஈரோடு மாவட்டத்திலே பெருந்துறை பகுதியிலே இருக்கின்ற ரத்னாகரன் மில்ஸ், அதேபோன்று பார்த்தோம் என்று சொன்னால் (மணியடிக்கப்பெற்றது) பல்வேறு இடங்களிலே ஆலைகள் மூடப்பட்டு தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல, ஈரோடு மாவட்டத்திலே சுப்பாத்தா மில்ஸில் 600 தொழிலாளர்கள் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கதவடைப்புச் செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் என்ன வேலைவாய்ப்பு உறுதி செய்யப்போகிறீர்கள்? தமிழகத்திலே நாம், பல்வேறு பட்டியலிட்டுக் காட்டினாலும்கூட, இன்றையதினத்திலே பார்த்தோம் என்று சொன்னால், தொழிலாளர்கள் வேலை பார்க்கக்கூடிய எல்லா ஆலைகளையும் மூடிவிட்டு, இயந்திரங்கள் உற்பத்தி செய்யக்கூடிய ஆலைகளை மட்டும் தொடங்குவதன் மூலம் வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு எந்தவொரு வாய்ப்பும் கிடையாது. இந்த இறக்குமதிக் கொள்கையால் தமிழகத்திலே இதுபோன்ற நிலைகள் வந்திருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று பால் உற்பத்தி விவசாயிகளுக்கு சுமார் 100 கோடி ரூபாய் பாக்கியிருக்கும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே, சாதாரணமாக 30 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது என்பது போதாது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எல்லாம்—மாண்புமிகு முதலமைச்சர்கூட, எங்களுடைய திருவாரூர் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் என்றாலும் அவர் திருவாரூர் மாவட்டத்திற்கு மட்டும் முதலமைச்சர் அல்ல. தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு, தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்கு, திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினத்திலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான் இங்கே பல அமைச்சர்களை குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. சில அமைச்சர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், தங்களுடைய மாவட்டம், தன்னுடைய தொகுதி என்கிற அடிப்படையிலே செயல்படுகிற நிலைமை நம்முடைய அமைச்சர்களிடத்திலே வந்திருக்கிறது. நீங்கள் எல்லாம் தமிழகத்தினுடைய முன்னேற்றத்தைக் கருதி பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் 10 ஆண்டுகாலம், 15 ஆண்டுகாலம் போட முடியாத பல சாலைகள் இருக்கின்றன. நான் அவர்களிடத்திலே கடிதம் மூலமாகக் கொடுத்திருக்கிறேன். நிர்வாகப் பொறியாளர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். முதலமைச்சருடைய மாவட்டம் என்றுதான் பெயர், எல்லாம் அங்கே செய்கிறோம் என்றுதான் பெயர். அநேகமாக அந்தச் சாலைகள் எல்லாம், அவரால் பெயரிடப்பட்டிருக்கிற சாலைகள், இதுவரையிலே ஒரு சாலைகூட, அவர் அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னால் போடப்படவில்லை; சீரமைக்கப்படவில்லை, நிதி ஒதுக்கப்படவில்லை என்று வேதனையோடு இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) என்ன காரணம் என்று தெரியவில்லை. அதற்கெல்லாம் நிதி ஒதுக்கி இந்தச் சாலைகளை நீங்கள் போட்டுத்தர வேண்டும். அதற்கான பட்டியலை உங்களிடத்திலே தந்திருக்கிறேன் என்று கூறி, பேசுவதற்கு அனுமதி தந்த தலைவருக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராசிபுரத்தில் ஒரு பெரிய தொழிற்சாலை அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக தொழில் மானியக் கோரிக்கையில் உறுதி கொடுத்தும், இதுவரை அதற்கான



எந்தவிதமான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. ஆகவே இராசிபுரத்தில் ஒரு புதிய பெரிய தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராசிபுரம் நகரம் மிகவும் நெரிசல் மிகுந்த பகுதி. போக்குவரத்து தடை ஏற்பட்டு பல நேரங்களில் நகரமே ஸ்தம்பித்துவிடுகிறது. ஆகவே இராசிபுரத்தில் உடனடியாக ஒரு புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெண்ணாந்தூர் ஒன்றியத்தில் போதமலையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் உறுதி கூறி, அதற்கான அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டும், இன்னும் கட்டடங்கள் கட்டப்படாத நிலையிலே இருக்கிறது. ஆகவே அதற்கு உடனடியாக கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஐந்து ஆண்டு கால கோரிக்கையான வெண்ணாந்தூர் ஒன்றியத்தில், திருமணிமுத்தாரின் குறுக்கே ஒரு பெரிய பாலம் கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராசிபுரம் தொகுதியை பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று இந்த அரசை கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 4½ ஆண்டுகாலத்தில் இந்த அரசு மக்கள் பயனடையக்கூடிய எந்தவிதமான உருப்படியான திட்டங்களையும் செயல்படுத்தவில்லை. சமத்துவபுரம் என்ற பெயரால் கட்டிய வீடுகள் அனைத்துமே...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 4½ ஆண்டு காலத்தில் இந்த அரசு எந்த உருப்படியான பணியும் செய்யவில்லை என்று சொல்கிறார். எம்.எல்.ஏ.-க்களுக்கு 25 லட்சம், 50, 60, 77 இலட்சம் என்று கொடுத்திருக்கிறோமே அதையாவது உருப்படியாகப் பயன்படுத்தியிருக்கிறார்களா? அதையும் அவர் உருப்படியாகப் பயன்படுத்தவில்லை என்று இப்போதுதான் தெரிகிறது.

*பிற்பகல் 12-40*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 77 இலட்சத்திற்கும் முதன்முதலாகப் பட்டியல் கொடுத்து அனைத்து பகுதிகளுக்கும் கொடுத்துவிட்டேன் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் முதல்வர் அவர்களுடைய பேச்சிலே இருந்து இது ஒன்றுதான் உருப்படியான திட்டம் என்று அவரே ஒத்துக் கொள்கிறார் என்று நினைக்கின்றேன்.

சமத்துவபுரம் என்ற பெயரில் கட்டிய வீடுகள், 6 மாதங்களுக்கு முன் கட்டிய வீடுகள் இப்போது மழை பெய்தால் ஒழுகுகின்றன. 100-வது உழவர் சந்தையை நாளை செவ்வாய்க்கிழமை திறக்க இருப்பதாகக் கூறியிருக்கின்றீர்கள். அது வியாபாரிகளுக்குத்தான் பயன்படுகிறதே தவிர, உழவர்களுக்குப் பயன்படக்கூடிய சூழ்நிலையே இல்லை. இன்னும் 2, 3 மாதங்கள் கழித்து நீங்கள் போய்ப் பார்த்தால், பாதி உழவர் சந்தைகள் மூடப்படுகின்ற சூழ்நிலைதான் உருவாகும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல் இன்றைக்கு பொது மருத்துவமனைக் கட்டடங்கள் எல்லாம் இடிந்து விழும் நிலையிலே இருக்கின்றன. அதைக் கட்டுவதற்கு இந்த அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழை எளியோர் வாங்கிச் சாப்பிடக்கூடிய 2 ரூபாய் அரிசி எங்களுடைய ஆட்சிக் காலத்தில் போடப்பட்டது. அதனுடைய விலையை 3½ ரூபாயாக உயர்த்தி ஏழைகளின் வயிற்றிலே அடித்து இருக்கின்றது இந்த அரசு. அதேபோல் பஸ் கட்டணத்தை 2001 வரை உயர்த்தமாட்டேன் என்று கூறிவிட்டு, 2 மடங்கு பஸ் கட்டணத்தை உயர்த்திவிட்டு, இன்றைக்கு பஸ்ஸிலே பயணம் செய்ய முடியாத சூழ்நிலைதான் இருக்கின்றது. பஸ்கள் எல்லாம் இன்றைக்கு மிக மோசமான நிலையிலே இருக்கின்றன. புதிதாக பஸ்கள் கட்டப்படும் என்று நீங்கள் அறிவித்தும், ஒழுங்கான பஸ்கள் இன்னும் விடப்படவில்லை.

அதேபோல் மின்சாரக் கட்டணத்தை இரண்டு, மூன்று தடவை நீங்கள் இரகசியமாக உயர்த்தி இருக்கின்றீர்கள். (குறுக்கீடுகள்) சொல்லாததையும் நீங்கள் செய்து இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உண்மைகளைச் சொல்வதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் தவறுகளையே, உண்மைக்குப் புறம்பானவற்றையே சொல்லிக்கொண்டிருந்தால், இது என்ன நியாயம்? எப்போது மின் கட்டணத்தை உயர்த்தினோம்? இந்த அரசாங்கத்திற்குத் தெரியாமல், உங்களுக்கு எல்லாம் தெரியாமல் உயர்த்தினோமா? (குறுக்கீடு) அதுதான் செல்வி ஜெயலலிதா ஆட்சியிலே நடந்தது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொத்தாம் பொதுவாக இந்தக் கடைசி நேரத்திலே குற்றச்சாட்டுக்களைச் சொல்லிக்கொண்டிருந்தால், நாங்கள் 'கம்' என்று உட்கார்ந்து இருக்க



விரும்பவில்லை. எந்த, சமத்துவபுரம் ஒழுகுகிறது என்று சொன்னால், உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. எவ்வளவோ சமத்துவபுரங்கள் கட்டி இருக்கின்றோம். அவற்றிலே, ஒன்றிரண்டு எங்காவது இருக்கலாம். அதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதை விட்டு விட்டு எல்லாமே ஒழுகுகிறது என்று சொன்னால் என்ன அர்த்தம்? உழவர் சந்தையில் எந்தக் கடையை மூடி இருக்கிறார்கள் என்பதை இப்போது சொல்ல வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** திறந்ததற்குப் பிறகு ஒரு கடை மூடியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** அந்த உழவர் சந்தை எது என்பதை இந்த அவையில் தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு கட்டணத்தை உயர்த்தும்போது அதை ஊர் உலகத்திற்குத் தெரிந்துதான் உயர்த்த முடியும். அது என்ன இரகசியமாக உயர்த்திவிட்டார்கள் என்று சொல்கிறீர்கள். (குறுக்கீடு) இதற்குப் பதில் சொல்லுங்கள் நீங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மின்சாரக் கட்டணத்தை நீங்கள் வந்ததற்குப் பிறகு உயர்த்தவே இல்லை என்று சொல்கிறீர்களா? சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஜெயலலிதா காலத்திலே 5 ஆண்டுகாலத்திலே 5 முறை உயர்த்தினார்கள். இந்த ஆட்சிக் காலத்திலே, 5 ஆண்டுகாலத்திலே 2 முறை உயர்த்தினோம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதுதான் நீங்கள் 2 முறை உயர்த்தினீர்கள் என்று சொன்னேன். அதேபோல், சமத்துவபுரம். இராசிபுரம் தொகுதிக்கு அமைச்சர் அவர்கள் உடனே வர வேண்டும். நீங்கள் வாருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொன்னது கடந்த கால ஆட்சியிலே ஒவ்வோர் ஆண்டும் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டது. இந்த ஆட்சியில் அப்படி ஒவ்வோர் ஆண்டும் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்படவில்லை. இரண்டே இரண்டு முறைதான் உயர்த்தப்பட்டது. தென் மாநிலங்களிலே இருக்கக்கூடிய எந்த மாநிலத்தை ஒப்பிட்டாலும், இன்றைக்கும் தமிழ்நாடு மின்சாரக் கட்டணத்தை குறைவாகத்தான் வசூலிக்கிறது.

**மாண்புமிகு திரு. கோ. சி.மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புறவழிச் சாலையைப்பற்றி அவர் சொன்னார். அந்தச்

[திரு. கோ.சி. மணி] [2000 நவம்பர் 13

சாலையைப் போய் நான் பார்த்தேன். அதற்கு நில ஆர்ஜிதம் பண்ண வேண்டும். நில ஆர்ஜிதம் என்பது 10 நாட்களில் பண்ணி முடிந்து விடுவதல்ல. அவரிடம் நான் சொன்னேன். நில ஆர்ஜிதம் பண்ண காலதாமதம் ஆகும்; நிதி உதவியைப்பற்றி கவலை இல்லை. அந்த நிலத்தை சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து எழுதி வாங்கி consent கொடுத்தால், உடனடியாக நடவடிக்கை எடுத்து சாலை போடுவதற்கான ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னேன். அதற்கு இதுவரையிலே எந்தப் பதிலும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீங்கள் சொல்லாததையும் செய்து இருக்கிறீர்கள். கொப்பரைத் தேங்காயில் கொள்ளை, சுதர்த் துறையில் 2½ கோடி ரூபாய் ஊழல், அரிசியில் வெளிமாநிலங்களுக்கு எடுத்துச் சென்றதில் 1,400 கோடி என்று இப்படி 4½ ஆண்டுகாலமாக தமிழகத்தில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. இதையெல்லாம் விட்டுவிட்டு இந்த 4½ ஆண்டுகாலத்தில் நீங்கள் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வை அழிக்க வேண்டும், ஒழிக்க வேண்டும்; எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களை சிறையிலே தள்ள வேண்டும் என்ற ஒரே அம்ச கொள்கையில்தான் நீங்கள் இதுவரை செயல்பட்டு இருக்கின்றீர்கள். (குறுக்கீடு) நான் இந்தச் சபையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். நீங்கள் எங்களுடைய அம்மா அவர்களை அரசியல் ரீதியாக நேருக்கு நேர் சந்திக்க முடியாமல், தனி நீதிமன்றங்கள் மூலமாக அவர்களை அச்சுறுத்திப் பார்க்கிறீர்கள். இந்த சலசலப்புக்கு எல்லாம் அவர்கள் அஞ்சமாட்டார்கள் (குறுக்கீடு) வாக்கியத்தை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தத் துணை மானியக் கோரிக்கையில் இதெல்லாம் வருகிறதா? (குறுக்கீடு) எங்கே வருகிறது? நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள். நேரமாகிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தென் மாநிலங்களில் எங்களுடைய அம்மா அவர்களுக்கு ஏற்பட்டுள்ள வரவேற்பைப் பார்த்து உளவுத் துறையின் மூலமாக நீங்கள் அறிந்து கதிகலங்கிக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) வருகின்ற 2001 சட்டமன்றத் தேர்தலில் எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக வருவார்கள். அப்போது சர்க்காரியா கமிஷன் முன்பு குற்றவாளிகள் என்று (குறுக்கீடுகள்) நிரூபிக்கப்பட்ட நீங்கள்.......



2000 நவம்பர் 13]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சில தென் மாநிலங்கள் என்று குறிப்பிட்டீர்கள்; ஆந்திரா, கேரளா, கர்நாடகா என்று எல்லாவற்றையும் சேர்த்துச் சொல்கிறீர்களா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தென் மாநிலங்களில் ஏற்பட்ட வரவேற்பைச் சொன்னேன். (குறுக்கீடுகள்) 2001-ல் புரட்சித் தலைவி மீண்டும் பேரவைக்கு வருவார்கள். (குறுக்கீடுகள்) சர்க்காரியா கமிஷன்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி.

பிற்பகல் 12-45

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளிலே மாண்புமிகு முதலமைச்சர் தாக்கல் செய்த அனைத்தையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதார வரவேற்கின்றேன்.

கடந்த சில மாதங்களாக பாட்டாளி மக்கள் கட்சியின்மீது ஒரு சில இடங்களிலே காவல் துறை அத்துமீறி தவறான வழக்குகளை எல்லாம் பதிவு செய்து, கடுமையான வழக்குகளிலே சிறையிலே அடைத்து வருகிறார்கள். அதிலும் குறிப்பாக, திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை, மதுரை ஆகிய மாவட்டங்களிலே 21 நபர்களை தேசியப் பாதுகாப்புச் சட்டத்திலே கைது செய்து சிறையிலே அடைத்திருக்கிறார்கள். அதிலே கார்த்திக், ஆறுமுகம் என்ற இரண்டு இளைஞர்கள், 15 வயது ஒருவர், 17 வயது ஒருவர்; இன்னொருவர் பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 17 வயது நிரம்பியவர். இவர்களெல்லாம் 18 வயது நிரம்பாதவர்களைக் கூட தேசியப் பாதுகாப்புச் சட்டத்திலே கைது செய்து சிறையில் அடைத்திருப்பது எந்த வகையிலே நியாயம் என்பதை நான் இங்கே மிகுந்த வேதனையோடு கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, இப்படி பல இடங்களிலே வழக்குகள் இருக்கின்றன. இந்த வழக்குகளைப்பற்றி மனந்திறந்து சொல்கிறேன். டாக்டர் ஐயா அவர்கள்மீது நடந்த கொலை முயற்சி தாக்குதலுக்குப் பிறகு, திட்டமிட்டு ஒரு சிலர் கைது செய்யப்பட்டார்கள். நான் இன்னும் வெளிப்படையாக உண்மையைச் சொல்கிறேன். அந்த அதிருப்தியின் காரணமாக எங்களுடைய தொண்டர்கள் சில இடங்களிலே பேருந்து கண்ணாடிகளையெல்லாம் உடைத்ததை ஏற்றுக்கொள்கிறேன்.

[திரு. ஜி.கே. மணி] [2000 நவம்பர் 13

நான் மறுக்கவில்லை. சில இடங்களிலே அப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் நடைபெற்றதற்கு நாங்கள் எங்களுடைய வருத்தத்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால் அவர்கள்மீது போடப்பட்ட வழக்கானது, கடுமையான வழக்காக இருக்கிறது. இது திட்டமிட்டு வேறு சிலர் தூண்டிவிட்டு செய்ததே தவிர நாங்கள் செய்யவில்லை என்பதைச் சொல்லி, இப்படிப்பட்ட அவதூறு வழக்குகளையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து திரும்பப்பெற வேண்டுமென்று கேட்டு, அவர்களை வெளியிலே விட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அந்தச் சம்பவம் நடைபெற்றபோது, எங்களுடைய தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு வார காலமாக ஊரிலேயே இல்லை. அப்போது ஊரிலே இல்லாத ஒருவர்மீது, தருமபுரி மாவட்டத்திலே அவதூறு வழக்கு ஒன்று பதிவு செய்யப்படுகிறது. அவற்றையெல்லாம் கவனத்திலேகொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், விழுப்புரம் மாவட்டத்திலே கடந்த 6 மாதகாலமாக பாட்டாளி மக்கள் கட்சிக்கு பொதுக்கூட்டம் நடத்துவதற்கோ அல்லது உண்ணாவிரதம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்துவதற்கோ காவல் துறை அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது. அங்கேயிருக்கக் கூடிய மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் அவர்கள் ஒரு அறிக்கை விடுகிறார். 'தூங்கும் புலியை இடறாதே, எங்களைச் சீன்டிப் பார்க்காதே' என்றெல்லாம் ஒரு கட்சியினுடைய தலைவரைப் பார்த்துச் சொல்வது, மவுனம் சாதிக்க வேண்டிய, சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய ஓர் அதிகாரி இப்படிப் பேசுவது, அறிக்கை விடுவது எந்த வகையிலே பொருத்தமுடையதாக இருக்கும் எனக் கேட்டுக் கொள்கிறேன். அந்த அதிகாரிகூட 4 வருடத்திற்கும் மேலே அங்கேயிருக்கிறார். இந்த 4 வருடங்களிலே 4 மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாறுதல் செய்யப்பட்டு, 5-வது மாவட்ட ஆட்சித் தலைவர் வருகிறார். ஆனால் இவர் ஒருவர் மட்டும் அங்கேயிருந்துகொண்டு, அடாவடித்தனத்திலே ஈடுபட்டு வருகிறார். அவருடைய துணையோடு, அங்கே இருக்கக்கூடிய ஒரு டி.எஸ்.பி. மாலை நேரங்களிலே, ஜீப்பிலே செல்லுகின்ற நேரங்களிலே மைக்கிலே பேசிக்கொண்டு செல்கிறார். ஒரு ஜாதியைக் குறிப்பிட்டுச் சொல்லி இந்த ஜாதியை அடக்காமல் ஒழிய மாட்டேன். இங்கிருந்து மாறுதல் செய்ய மாட்டேன் என்றெல்லாம் பல வகைகளிலே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) அவர் சொல்வதற்குக் காரணம், யாரோ அங்கே இருக்கக்கூடிய அமைச்சர்



2000 நவம்பர் 13] [திரு. ஜி.கே. மணி]

தூண்டுதல் என்று அதிகாரிகள் வெளிப்படையாகவே சொல்லிக் கொள்கிறார்கள். அங்கேகூட குண்டர் சட்டத்திலேயெல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்திலேயிருந்து பாட்டாளி மக்கள் கட்சிக்கு வந்தவர்கள். நான் வேதனையோடு சொல்கிறேன். அவர்களை எங்களுடைய கட்சிக்கு வரவேண்டாம் என்றோம். கூட்டணிக் கட்சியிலே இருக்கின்ற காரணத்தால் இங்கே வரக்கூடாது என்று டாக்டர் ஐயா அவர்கள் சொன்னாலும்கூட, நாங்கள் இங்கே சேர்க்கவில்லை என்று சொன்னால், அவர்கள் அண்ணா தி.மு.க.-வுக்குப் போகிறோம் என்று வெளிப்படையாகச் சொன்ன காரணத்தால் அவர்களைச் சேர்த்துக்கொண்டார்கள். ஆகவே தி.மு.க. விலே இருந்த நேரத்திலே அவர்கள் நல்லவர்களாக இருந்தார்கள். இந்தக் கட்சிக்கு வந்த பிறகு N.S.A. Goondas சட்டத்தின்கீழ் அவர்கள்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு சிறையிலே அடைப்பது எப்படி பொருத்தமுடையதாக இருக்கும் (மணியடிக்கப்பெற்றது) என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) சீக்கிரம் பேசி முடித்துக் கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கருணைகூர்ந்து பரிசீலித்து அந்த வழக்குகளைத் திரும்பப்பெற வேண்டும், நியாயம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே பஞ்சப்பள்ளி வாய்க்கால், பாப்பாரப்பட்டி ஏரிகளை இணைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று 4 ஆண்டுகாலமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். திட்டம் அனுமதிக்கப்பட்டு, டெண்டர் விடும் நிலையில் இருக்கிறது. அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தை நலக் காப்பாளர்கள், ஊட்டச் சத்து அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள் எல்லாம் முழு நேர அரசு ஊழியர்களாக மாற்றப்பட வேண்டும்; ஊதிய உயர்வு வேண்டும் என்று சொல்லி, குரல் கொடுத்திருக்கிறார்கள். அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிருவாக வசதிக்காக மாவட்டங்களைப் பிரிக்கக்கூடிய நேரத்திலே தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டும், அதைப்போல வேலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருப்பத்தூரை தலைநகராகக் கொண்டும், கடலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, விருத்தாசலத்தை தலைநகராகக்

கொண்டும் புதிய மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

கரும்பு விவசாயிகளுக்கு எல்லா கரும்புகளுக்கும் 1,000 ரூபாய் வழங்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். அதுபோல பால் உற்பத்தியாளர்களுக்கு பணம் பட்டுவாடா கிடைக்காமல் மிகுந்த வேதனை அடைந்துகொண்டிருக்கிறார்கள். எல்லோருக்கும் 70 கோடி ரூபாய்......

*முற்பகல் 12-50*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, எல்லா கரும்புக்கும் 1,000 ரூபாய் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். நாற்பதாம் நம்பர் நூலுக்கும் ஒரே விலை, நூறாம் நம்பர் நூலுக்கும் ஒரே விலை. அதுதான் நியாயம் என்று கருதுகிறீர்களா? அப்படிப் பார்த்தால் அது நியாயம் என்றால், இதுவும் நியாயம்தான்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பிழிதிறன் அடிப்படையிலே சர்க்கரைச் சத்து அடிப்படையிலே நீங்கள் வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள். அதிலும் குறிப்பாக 1,000 ரூபாய் கொடுத்தால்கூட இன்று விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாத நிலை. இப்படி 10 சதவீதம் பிழிதிறன் சர்க்கரைச் சத்து கொண்ட கரும்புக்கு இன்னும் கூடுதலாக விலை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. தனியார் சர்க்கரை ஆலைகளிலே இந்த விலைகூட கிடைப்பதில்லை. அரசு அறிவித்த விலைகூட கிடைக்காத நேரத்திலே, இன்று உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள் தனியார் ஆலைகளுக்குக் கரும்பு கொடுக்கக்கூடிய விவசாயிகள். அதையெல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டு, பால் உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை பட்டுவாடா செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், (குறுக்கீடுகள்) நேரம் இல்லை. திரு. ஐ. கணேசன், இன்னும் இரண்டு பேர் பேச வேண்டும். பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்று தொழில்கள் மூடப்பட்டுக்கொண்டு வருகிற ஒரு ஆபத்தான நிலை ஏற்பட்டிருக்கிறது. சேலம் உருக்கு ஆலை மூடப்பட்டபோது இங்கே தீர்மானம்கூட நிறைவேற்றப்பட்டது. ஆனால் இன்னும் அதை தனியார்



மயமாக்குகிற ஆபத்து நீடித்துக்கொண்டே இருக்கிறது. ஊட்டியில் Hindustan Photo Film ஆலைகூட இன்று மூடப்படுகிற ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இப்படி வேலையின்மை என்பது பெருகிவரும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று முறைப்படுத்தப்படாத தொழில்களுக்கு (unorganised) நல வாரியங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த நல வாரியங்களைப் பொறுத்த அளவில் அவை செயலாற்றுவதற்கு ஏற்படுத்துவதற்கான நிதியாவது-Administrative expenses-அரசு கொடுத்து ஒரு 'கார்பஸ்' ஏற்படுத்தி செயலாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமல் அந்த நல வாரியங்கள் function ஆகாத ஒரு நிலை இருக்கிறது.

இன்று எல்லா வாரியங்களையும் ஒரே வாரியமாக மாற்றுவதற்குக்கூட சில கருத்துகளை அதிகாரிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அது சரியல்ல. ஒரு தொழிலினுடைய தன்மையின் அடிப்படையில் Group of Industries-க்கு ஒரு வாரியம் என்ற முறையிலே அந்த வாரியங்கள் செயலாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மருத்துவமனைகளிலே வேலை பார்க்கிற நர்சுகளுக்கு ஒரு நல வாரியம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

என்னுடைய குமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே இன்று பட்டா கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மலைப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு பட்டா கொடுப்பதிலே பல முறைகேடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதைச் சரி பண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுப்பதில் பல இடங்களில் பிரச்சினை இருக்கிறது. அந்தத் தண்ணீர் பரிசோதனை செய்யப்பட வேண்டுமென்றால், King Institute-க்கு சென்னைக்குக் கொண்டுவர வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, நெல்லை மாவட்டத்திலேயோ அல்லது தென் மாவட்டங்களில் ஏதேனும் ஒரு பகுதியிலோ அதற்கென ஒரு Institute-ஐ (தண்ணீர் பரிசோதனை நிலையம்) ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். (குறுக்கீடுகள்) டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் கோரிக்கை இருந்தால் தனியாக எழுதிக்

கொடுங்கள். நேரம் இல்லை. 1.30-க்குள் முடிக்க வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த துணை மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துகளை இங்கே வைக்க நான் விரும்புகிறேன். இரண்டு தினங்களுக்கு முன்பு நம்முடைய சென்னை நகரத்தில் மண்பாண்டத் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட பத்தாயிரம் பேர் தமிழகம் முழுவதிலிருந்து இங்கே வந்து காலையிலிருந்து உண்ணாவிரதம் மேற்கொண்டு நம்முடைய அரசுக்குப் பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் மிக நியாயமான கோரிக்கைகளை வைத்திருக்கிற காரணத்தால், இதை நான் முதலிலேயே எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு காலத்தில் சிறப்பான முறையில் இந்த நாட்டினுடைய நாகரீகத்தை வளர்த்த அந்த மண்பாண்டத் தொழிலாளர்கள் சமுதாயம் இன்று வறுமையில் வாடுகிறது. மண்பாண்டங்களுக்கு இன்று விலையே கிடையாது. அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில், மற்ற தொழிலாளர்களுக்கு வாரியம் அமைப்பது போல, மண்பாண்டத் தொழிலாளர்களுக்கும் ஒரு வாரியம் அமைத்து அவர்களுடைய ஏழ்மையைப் போக்குவதற்கு அரசு வழிகாண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், 'எங்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திருந்தாலும்கூட, அதனால் எந்தவித பலனும் கிடைக்கவில்லை; இதுவரையில் ஒரு அதிகாரிகூட எங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆகவே எங்களை தாழ்த்தப்பட்ட மக்கள் SC/ST பிரிவில் கூட சேர்த்துவிடுங்கள்' என்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதோடு அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று சொன்னால் இந்த நாட்டில் இருக்கின்ற கைவினைஞர்களான குலாளர் போன்ற மைனாரிட்டி சமுதாயங்கள் எல்லாம் சேர்த்து எங்களுக்கு என்று ஒரு தனி ரிசர்வேஷன் வேண்டுமென்றுகூட அவர்கள் தீர்மானம் நிறைவேற்றிவிட்டார்கள். ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவர்களுடைய மிகுந்த ஏழ்மை நிலையைக் கருதிப்பார்த்து அவர்களுடைய கோரிக்கைகளை சிறப்பான முறையிலே கவனிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

நம்முடைய சேலம் உருக்காலை குறித்து இங்கே நாம் எல்லோரும் ஒட்டுமொத்த தீர்மானம் போட்டு அனுப்பினோம். ஆனால் இப்போது



வருகின்ற செய்தி என்னவென்றால், கிட்டத்தட்ட பாதிக்குமேல் அதை ஒரு தனியாருக்குக் கொடுத்துவிட்ட சூழ்நிலைதான் வந்திருக்கிறது என்று அங்கே இருக்கின்ற தொழிலாளர்கள், அதிகாரிகள் எல்லாம் ஒட்டுமொத்தமாக வந்து சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் இந்த சேலம் உருக்காலை குறித்து என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? ஏனென்றால் சேலம் உருக்காலை என்பது இந்த நாட்டின் மிகப் பெரிய உருக்காலை. அதேநேரத்தில் ஒரு உருக்காலையிலே லாபம் இல்லை என்பதற்காக அதை நிறுத்துவோம் என்று சொன்னால் இந்தியாவில் ஏராளமான உருக்காலைகள் இருக்கின்றன. அங்கேயெல்லாம் மத்திய அரசு பல உதவிகளைச் செய்துவிட்டு இந்த உருட்டாலையை மட்டும் தனியாருக்கு விடுவோம் என்பது தமிழகத்திற்குச் செய்கின்ற ஒரு மிகப் பெரிய துரோகமாகும். ஆகவே நம்முடைய அரசாங்கம் மிகக் கடுமையாக இருந்து, சேலம் உருட்டாலையை நம்முடைய அரசிடமே இருக்க வேண்டுமென்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று அழுத்தந்திருத்தமாக நாம் தீர்மானம் போட வேண்டும். அதற்காக மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே இரண்டு மாதங்களுக்கு முன்பாக, ஆகஸ்ட் மாதம் என்று கருதுகிறேன். இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் தொழில் துறையில் முதன்மை வகிக்கிறது என்று சொன்னார்கள். ஆகஸ்ட் 21 ஆம் தேதி 'பைனான்ஸ் எக்ஸ்பிரஸில்' வந்த செய்தியை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள். ஆனால் அதே 'பைனான்ஸ் எக்ஸ்பிரஸ்' வேறு ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது. மத்திய அரசு வெளிநாட்டு மூலதனம் இந்தியாவில் முதலீடு செய்யப்படுவதை வரவேற்கிறது என்று இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் கூறியுள்ள அறிக்கையை எடுத்துக்காட்டி முதல்வர் அவர்கள் தமிழகம் அதில் முதலிடம் வகிக்கிறது என்று கூறினார்கள். ஆனால் அது உண்மையல்ல என்பதை அதே மையம் கூறியுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அது என்ன சொல்லியிருக்கிறது என்றால், மராட்டியம்தான் முதலிடம் வகிக்கிறது. தமிழக அரசு அந்த வெளிநாட்டு முதலீட்டை எவ்வளவு தூரம் நடைமுறைப்படுத்தியுள்ளது என்பதுபற்றி பல புள்ளிவிவரங்கள் மூலம் எடுத்துக் கூறியிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்கும் இந்த 'பைனான்ஸ் எக்ஸ்பிரஸ்' சொன்ன கருத்துக்கும் பல வேறுபாடுகள் இருக்கின்றன. அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், முதலீட்டிலே நிறைவேற்றப்பட்ட திட்டங்களைப் பார்க்கிறபோது தமிழகம்-குஜராத், மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா, ஒரிசா ஆகிய மாநிலங்களை

விட கீழ் நிலையில் இருப்பதாக அந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த நாட்டுக்குச் சொன்ன ஒரு செய்தி முழுக்க முழுக்க ஆதாரம் இல்லாத ஒரு செய்தி என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, கடந்த சட்டமன்றத்திலேயே நான் மிகவும் தெளிவாக எத்தினால் உற்பத்தியைப்பற்றி எடுத்துச் சொன்னேன். நம்முடைய பெட்ரோலியத் துறை அமைச்சர்கூட சொல்லியிருக்கிறார். இந்த நாட்டில் பெட்ரோல் இவ்வளவு கடுமையான விலையில் விற்கப்படுவதைத் தடுப்பதற்கு, ஏழை எளிய மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் எத்தினால் என்கின்ற ஒரு மூலப் பொருளைத் தயாரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஏற்கெனவே அதைப்பற்றிப் பேசியிருக்கிறோம். இன்று அமெரிக்கா போன்ற நாடுகளில்— ஏற்கெனவே நான் இங்கே பேசிய செய்தி என்னவென்றால் 100-க்கு 85 சதவிகிதம் பெட்ரோலை வைத்துக்கொண்டு, இந்த எத்தினாலை 15 சதவிகிதம் சேர்க்க வேண்டுமென்று சொன்னேன்—ஆனால் இன்று அமெரிக்கா, பிரேசில் போன்ற நாடுகளில் 85 சதவிகிதம் எத்தினாலைப் பயன்படுத்தி வெறும் 15 சதவிகிதம் மட்டும் பெட்ரோலை சேர்த்து கார்களை ஓட்டலாம், வாகனங்களை ஓட்டலாம் என்று புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இன்று அதற்காக புதிய கார்களை உற்பத்தி செய்து வெற்றிகரமாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த எத்தினால் தயாரிப்பதில் நமக்கு என்ன ஒரு பெரிய இலாபம் என்று சொன்னால், நம்முடைய நாட்டிலே இருக்கின்ற கரும்பைப் பயன்படுத்தி, சோளத்தைப் பயன்படுத்தி, இதுபோன்ற பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு ஏராளமான இலாபம் கிடைக்கிறது. அவர்களுக்கு வாழ்வு கிடைக்கிறது. அதேநேரத்தில் பெட்ரோல் விலையும் குறைகிறது என்கின்ற நல்ல நோக்கத்தோடுதான் இங்கே எடுத்து வைத்தோம். நம்முடைய அரசு உடனடியாக இதுசம்பந்தமாக மத்திய அரசோடு பேசி, இந்த எத்தினால் தயாரிக்கின்ற தொழிலை இங்கே உருவாக்குவதன்மூலம், நம்முடைய நாட்டில் கரும்பு விவசாயிகள், வறட்சிப் பயிரான சோளம் போன்ற பயிர்களைப் பயிரிடுகின்ற விவசாயிகளுக்குப் பெரிய இலாபம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

அடுத்ததாக இந்த நாட்டில் ஆடு வளர்ப்பவர்களுக்காக நம்முடைய சபாநாயகர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று முதலமைச்சர் அவர்கள்





ஆடு வளர்ப்பவர்கள் வனத் துறையில் இனாமாக ஆடு மேய்க்கலாம் என்று சொன்னார்கள். ஆனால், முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்களே தவிர, சம்பந்தப்பட்ட வன அதிகாரிகள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை அவர்களெல்லாம் இன்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். நீங்கள் ஒரு பட்டி போட வேண்டுமானால், அதற்கு ஆயிரம் ரூபாய் அட்வான்ஸ் கட்ட வேண்டும்; அந்தக் கழிவுப் பொருள்களையெல்லாம் நீங்கள் எடுக்கக்கூடாது; அப்படியானால்தான் நீங்கள் வனத் துறையிலே ஆடு மேய்க்க முடியும் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். இது முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு விரோதமான ஒரு செயல் என்ற காரணத்தால், அதற்கும் ஒரு உத்தரவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1997ஆம் ஆண்டு கிண்டியில் நடந்த நெடுஞ்சாலைத் துறை பொன்விழாவில் முதலமைச்சர் அவர்கள், 2000 N.M.R. தொழிலாளர்களுக்கும் வேலை கொடுத்துவிட்டு, அதன்பிறகு 10,000 பேரை பணி நியமனம் செய்வோம் என்று அறிவித்தார்கள். அந்த 10,000 பேர்களைப் பணி நியமனம் செய்தார்களே தவிர, இந்த 2,000 N.M.R. தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கவில்லை என்று அவர்களெல்லாம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததையே செய்யவில்லையென்றால், அது எந்தவகையில் நம்முடைய அரசுக்கு நியாயம் என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல I.T.I. படித்த 5,000 இளைஞர்கள் மின்சார வாரியத்தில் பணி நியமனம் செய்யப்படுவார்கள் என்று 25-11-1998, 23-11-1999 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தும்கூட, இதுவரைக்கும் அவர்களுக்கு வேலை கொடுக்கவில்லை என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் நம்முடைய அரசு கவனித்து I.T.I. படித்த 5,000 இளைஞர்களுக்கு ஒரு நல்ல வாழ்வளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு பாராட்டை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். பாரதி படத்திற்கு முழு வரிவிலக்கு அளித்திருக்கிறார்கள். நான் அந்தப் படத்தைப் பார்த்தேன். நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, மகாத்மா காந்தியுடைய படம் தமிழிலே எடுத்திருக்கிறார்கள். அதற்கு வெறும் நான்கு வாரங்களுக்கு மட்டும்—(குறுக்கீடு) கொடுத்தாச்சா, முழுமையாகக் கொடுத்தாச்சா, அதற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், மகாத்மா காந்தியினுடைய படம் தமிழிலே மிகச் சிறப்பாக வந்திருக்கிறது. அதற்கும் வரிவிலக்கு கொடுத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரையிலே பஸ் எரித்ததற்கு, அது உங்களுடைய உட்கட்சிப் பிரச்சினை; குடும்பப் பிரச்சினை என்ற விதத்திலே நாங்கள் அதிலே தலையிடவேயில்லை. நாகரிகம் கருதி அதிலே தலையிடவில்லை. ஆனால் அதேநேரத்தில், 10-க்கு மேற்பட்ட பஸ்கள் எரிக்கப்பட்டது என்பது, ஒரு உட்கட்சிப் பிரச்சினையில் எரிக்கப்பட்டது என்பது வரலாறு காணாத ஒரு பெரிய தவறு. ஆகவே முதலமைச்சர் அவர்களையும், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தையும் நான் கேட்டுக்கொள்வது, அந்த 10 பஸ்களுக்குரிய இரண்டு கோடி ரூபாயை உடனடியாக நீங்கள் கஜானாவில் கட்ட வேண்டுமென்று நான் கோரிக்கை வைக்க விரும்புகிறேன். நீங்கள் ஒரு பொறுப்புள்ள ஆட்சி நடத்துகிறவர்கள் என்ற முறையில் இதை நீங்கள் கண்டிப்பாகக் கஜானாவில் கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அடுத்தது, நாங்கள் ஒரு 15 அம்சக் கோரிக்கை வைத்துப் போராட்டம் நடத்தினோம். போராட்டத்தைப் பற்றியெல்லாம் விளக்கமாகப் பேசினால் நேரமாகிவிடும். இன்று அந்தக் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றித் தர வேண்டும். இல்லையென்றால் மறுபடியும் நாங்கள் போராட்டம் நடத்துவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* இன்னும் கொஞ்சம்தான்; ஒரே ஒரு நிமிடம்.

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகம் கட்டுவதாக அறிவித்து— எனக்கெல்லாம் அலுவலகம் கட்டியாகிவிட்டது— 78 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இதுவரையிலே அலுவலகம் கிடைக்கவில்லை; இடமே கொடுக்கவில்லை. அதற்கு என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால், பஞ்சாயத்து போர்டு, ஊராட்சி ஒன்றியம் ஆகியவை, இதற்கெல்லாம் அரசாங்கமே பணம் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். அதை உடனடியாகக் கட்டி, இந்த டிசம்பர் மாதத்திற்குள்ளே எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அலுவலகம் ஏற்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001-ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளில், கருத்துக்களை எடுத்துச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

561.52 கோடி ரூபாய்க்கான துணை மதிப்பீட்டில், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதற்காக, மின் வாரியத்திற்குக் கூடுதல் மின் கட்டண இழப்பீட்டுத் தொகையாக 319.43 கோடி ரூபாயும், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ.60 இலட்சத்திலிருந்து ரூ.77 இலட்சமாக உயர்த்திய வகையில், 63.45 கோடி ரூபாயும், பால் உற்பத்தியாளர்களுக்கு நிலுவைத் தொகை வழங்கிட 30 கோடி ரூபாயும், விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்திற்காக 20 கோடி ரூபாயும், 960 தொடக்கப்பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு மாநில அரசின் பங்குத் தொகையாக, மொத்தம் 29 கோடி ரூபாயில், 17.99 கோடி ரூபாயும், அடிப்படை வசதிகளை மேற்கொள்ளும் நகராட்சிகளுக்கு மானியமாக 7 கோடி ரூபாயும், ஆக இந்தத் துணை மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. நமக்கு ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சங்கடம் என்று ஒன்று சொல்ல வேண்டுமேயானால், அண்மையில் 11-ஆவது நிதிக் குழு அறிக்கை, ஜுலை 2000-லே தாக்கல் செய்யப்பட்டது. மாநிலங்களுக்கு மைய அரசின் அனைத்து நிகர வரி வருவாயில் 29.5 விழுக்காடுகள் பகிர்ந்து அளிக்கப்படும் என்ற நிலையில் தமிழ்நாட்டினுடைய பங்கு 5.385 விழுக்காடு என்று இருந்தது. இது பத்தாவது நிதிக் குழுவிலே 6.637 விழுக்காடாக இருந்தது என்பதை ஒப்பிட்டு நோக்கும்போது, தமிழகத்திற்கு இதனால் 2000-2001-லே இருந்து, ஐந்தாண்டுகளில் சுமார் 4,700 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்கின்ற கவலை நமக்கு ஏற்பட்டு, இதுகுறித்து பிரதமரிடத்திலும் மற்றும் மத்திய நிதியமைச்சரிடத்திலும் மற்ற அமைச்சர்களிடத்திலும் முறையிட்டு, வலியுறுத்தி எடுத்துக் கூறியதன்பேரில், வேறுவிதமாக இதைச் சமாளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 நவம்பர் 13

நேரம் அதிகம் இல்லை என்ற காரணத்தினால், சில முக்கியமான செய்திகளை மாத்திரம் இங்கே அறிவிக்க விரும்புகின்றேன். பல உறுப்பினர்களும் தந்துள்ள பல கருத்துக்களைப் பற்றி விரிவாகப் பின்னர் பேசலாம் என்பதையும் அவை அதிகாரிகளினுடைய கவனத்திற்கு நிச்சயமாக எடுத்துச் செல்லப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்கின்றேன்.

ஏதோ, மதுரையிலே பஸ்கள் எரிக்கப்பட்டன. குடும்பச் சண்டை என்று சொன்னார்கள். எல்லாக் கட்சிகளிலும் குடும்பச் சண்டை இருக்கிறது. இது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் சோ. பாலகிருஷ்ணன் அவர்களுக்குத் தெரியாததல்ல. குடும்பச் சண்டைகளின் காரணமாக, யார் யார், எங்கெங்கெல்லாம் இருந்து பிரிந்துபோய் விட்டார்கள் என்பதெல்லாம்கூட நமக்கு நன்றாகத் தெரியும். இதையெல்லாம் விவரித்து விவகாரமாக ஆக்கிக்கொள்ள நாம் விரும்பவில்லை. குடும்பச் சண்டை அல்ல; கட்சிச் சண்டைதான். கட்சியா, குடும்பமா என்று இருந்தால், நான் கட்சியைத்தான் பெரிதாக மதிப்பவன்; குடும்பத்தை அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கட்சியைப் பெரிதாக மதித்து, குடும்பத்தைப் பெரிதாக மதிக்காத காரணத்தால்தான் 8 பேர் இன்றைக்குத் தேசப் பாதுகாப்புச் சட்டத்தின்படி மதுரை சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மையை நான் எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

சில செய்திகளை இங்கே அறிவிக்க விரும்புகிறேன். சென்னை மாநகரத்திலே உள்ள கூவம், அடையாறு பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி வடிகால், கேப்டன் காட்டன் கால்வாய் ஆகிய 5 நீர்வழிகளில் சேரும் திடக் கழிவு தடுப்பு, கழிவு நீர் அகற்றும் மற்றும் சுத்திகரிப்பு ஆகிய பணிகளுக்காக மைய அரசு தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 491 கோடி ரூபாய் மானியமாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளது என்பதை இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) Accepted in principle. திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி ஆகிய நகரங்களிலேயிருந்து வெளியேறும் கழிவு நீரை சுத்திகரித்து, முறையே காவிரி, வைகை, தாமிரபரணி ஆகிய நதிகள் மாசுபடுவதைத் தடுக்கும் எண்ணத்தோடு 335.38 கோடி ரூபாய் அளவில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, மைய அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளன. இந்தத் திட்டங்களுக்கும் மைய அரசின் நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது.



2000 நவம்பர் 13] [கலைஞர் மு. கருணாநிதி]

பிற்பகல் 1-10

விவசாயத் தொழிலாளர்களின் ஏழ்மை நிலையை மனதிலே கொண்டு, அவர்களுக்கென தனியாக ஒரு நல வாரியம் அமைக்கக் கோலப்பன் குழு பரிந்துரை செய்துள்ளது. இதற்காக விவசாயத் தொழிலாளர்களையும் Tamil Nadu Manual Workers (Regulation of Employment and Conditions of Work) Act, 1982 என்ற சட்டத்தின்கீழ் இணைத்து, அதற்கான அறிவிக்கையும் தமிழ்நாடு அரசிதழில் 14-8-2000 அன்று பிரசுரம் ஆகியுள்ளது. அந்த அறிக்கையின் சட்டப்பூர்வமான மூன்று மாத கால அவகாசம் இன்றோடு முடிவடைகிறது. எனவே விரைவில் விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பெறும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இங்கே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுவரையிலே கழக அரசால் அமைக்கப்பட்ட வாரியங்கள், அமைப்புச் சாராத தொழிலாளர்கள் பாதுகாப்பு வாரியங்கள், தனித்தனியாக சில வாரியங்கள், ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம், தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல் வாரியம், தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம், இன்று அறிவித்துள்ள விவசாயத் தொழிலாளர் நல வாரியம், மண்பாண்டம் புனைவோருடைய நல வாரியம் தேவை என்றும் எனக்குக் கடிதங்கள் எழுதி உள்ளார்கள். அதுபற்றியும் விரைவிலே கவனித்து ஆவன செய்யப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

நடப்பாண்டில் நபார்டு வங்கி அளிக்கும் ஊரகக் கட்டமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து உதவி பெற்று 122.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1102 கிலோமீட்டர் நீளத்திற்கு 440 சாலைகளும், 81 சிறு பாலங்களும் அனைத்து மாவட்டங்களில் ஊரகப் பகுதியிலே அமைக்கப்படும் என்பதையும் அறிவிக்கின்றேன்.

மதுரை மாநகரில் வைகை நதியின் இரண்டு பக்கக் கரைகளில் வெள்ளத் தடுப்புச் சுவர் எழுப்புவதற்கும், கரையோரங்களில், உள்ளாட்சிச் சாலைகளை மேம்படுத்துவதற்கும் 18 வாய்க்கால்களைத் தூர்வாரி முறைப்படுத்தி, கரையோரங்களில், தோட்டங்கள் மற்றும் பூச்செடிகள் அமைப்பதற்கும் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் அரசின் பங்காக, ரூ.6 கோடி அனுமதிக்கும். இத்திட்டத்தில் பொது மக்கள் இரண்டு கோடி ரூபாய்

வழங்க முன்வந்துள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு இம் மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு காவல் துறை அலுவலர்கள்மீது சுமார் 2150 தண்டனைப் பட்டியல்கள் நிலுவையிலே உள்ளன. இவற்றில் ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் காவல் துறை நிலை ஆணை விதி 145-ன்கீழ் விசாரணை, அல்லது கிரிமினல் குற்றச்சாட்டு சம்பந்தப்பட்டவை சுமார் 600 ஆகும். மீதமுள்ள 1550 தண்டனைப் பட்டியல்கள், சிறு தவறுகளுக்காக ஏற்படுத்தப்பட்டவை. இதன் காரணமாக பல காவலர்கள் பதவி உயர்வு பெற இயலாத நிலை உள்ளது. இந்நிலையைப்போக்க சிறு தவறுகளுக்காக நிலுவையிலே உள்ள 1550 தண்டனைப் பட்டியல்களை, உயர் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று பரிசீலித்து, அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இரண்டு மாத காலத்திற்குள் தண்டனைப் பட்டியல் மீதான மேல் நடவடிக்கை கைவிடப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறைந்தது 10 ஆண்டு பணியிலிருந்து எந்த தண்டனையும் பெறாமல் பணியாற்றியிருக்கின்ற காவலர்கள், தலைமைக் காவலர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் முதலமைச்சரின் காவல் துறை பதக்கம், அறிஞர் அண்ணா பிறந்த நாளையொட்டி வழங்கப்படுகிறது. சிறு தவறுகளுக்காக துறை நடவடிக்கையினால், தண்டனை பெற்ற சிலர், தண்டனைக்குப் பிறகு 15, 20 ஆண்டுகள் அப்பழுக்கற்ற பணியாற்றினாலும், பதக்கம் பெற தங்களது பதவிக்காலம் முழுவதும் தண்டனை ஏதும் பெற்றிருக்கக்கூடாது என்ற விதியுள்ளதால் பதக்கம் பெற முடியாத நிலையிலே உள்ளார்கள். எனவே கடந்த 10 ஆண்டுகளில், எந்தவித தண்டனையும் இல்லாதவர்களுக்கு முதலமைச்சரின் காவல் துறை அண்ணா பதக்கம் வழங்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

*பிற்பகல் 1-15*

கீழ்பவானி பாசனத் திட்டத்திற்கு பயிர் கட்டுப்பாட்டின் காரணமாக, விதிக்கப்பட்டுவரும் தண்டத்தீர்வைக்குப் பதிலாக ஏக்கர் வாரியாக தீர்வை நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்து வருகிறது.

கீழ்பவானி பாசனத் திட்டத்தில் பருவ கால சுழற்சி முறை நீர்ப்பாசனத் திட்டம் (Seasonal Sluice Turn System) அறிமுகப்படுத்தப்பட்டு, இன்று வரையிலே அது நடைமுறையிலே இருந்துவருகிறது. இந்த சுழற்சி முறை



திட்டத்தின்படி ஆகஸ்ட் 15ஆம் நாளிலிருந்து டிசம்பர் 15ஆம் நாள் வரை முதல் போகம் என்றும், டிசம்பர் 15 ஆம் நாளிலிருந்து மார்ச் 15ஆம் நாள் வரை இரண்டாம் போகம் என்றும் பிரிக்கப்பட்டு, முதல் போகத்திற்கு 4 மாதங்களுக்கு மொத்தம் 24 டிஎம்சி. தண்ணீரும், இரண்டாம் போகத்திற்கு 3 மாதங்களுக்கு 15 டி.எம்.சி. தண்ணீரும் வழங்கப்படுகிறது. இந்த சுழற்சி முறை திட்டத்தின் மூலம் 75,000 ஏக்கர் ஆயக்கட்டு ஜனங்கள் பாசன வசதி பெறுகின்றனர். இரண்டாம் போகத்தில், அதாவது டிசம்பர் 15-லிருந்து மார்ச் 15 வரை தடை செய்யப்பட்டுள்ள நஞ்சைப் பயிர்களை பயிரிட்டால் தண்டத் தீர்வையாக முதன்முறை 5 மடங்கு சாதாரண தண்ணீர்த் தீர்வை என்று தொடங்கி நான்காவது முறை மற்றும் அதற்குப் பிறகு 20 மடங்கு சாதாரண தண்ணீர்த் தீர்வை என்று தண்டத் தீர்வை வசூல் செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுவரும் பிரச்சினைகளை முழுமையாக ஆய்வு செய்து, தீர்வு காண்பதற்கு என்று சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் தலைமையில் குழு ஒன்றை இந்த அரசு அமைத்தது. அந்தக் குழு அளித்துள்ள பரிந்துரைகளை பரிசீலனை செய்து கீழ்பவானி பாசன ஆயக்கட்டு நிலங்களுக்குத் தண்ணீர்த் தீர்வை விதிப்பதற்கு பயிர் வகையை அடிப்படையாகக் கொள்ளாமல், இனி நிலத்தின் பரப்பளவு அதாவது ஏக்கர் அடிப்படையில் ஒரே மாதிரியான (Flat Rate) தண்ணீர் தீர்வை விதிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசு மேற்கொண்டுள்ள இந்த முடிவின் காரணமாக, கீழ்பவானி ஆயக்கட்டுதாரர்கள் எதிர்கொண்டு வரும் நீண்ட காலப் பிரச்சினைக்கு நல்லத் தீர்வு காணப்பட்டுள்ளது.

11-5-2000 அன்று சட்டமன்றத்தில் ஒரு வெள்ளை அறிக்கை வைக்கப்பட்டு, மொத்தப் பின்னடைவு பணியிடங்களாகிய 11,264-ஐ படிப்படியாக 5 ஆண்டுகளுக்குள் நிரப்பப்படும் என்று உறுதி அளித்தேன். அதன் அடிப்படையில் முதலாவது ஆண்டில் அதாவது 2000-2001ஆம் ஆண்டில் நிரப்பப்படுவதற்காக குறியீடு செய்யப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை 2,250 ஆகும். இந்தப் பின்னடைவு காலிப் பணியிடங்களை நிரப்ப தொடர்ந்து கண்காணித்து, ஆய்வு செய்ய தலைமைச் செயலாளர் தலைமையில், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறைச் செயலாளர், ஆதிதிராவிடர் நலத் துறைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைச் செயலாளர் ஆகியோரைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு ஆய்வு செய்து 31.10.2000 வரை நிரப்பப்பட்ட பணியிடங்கள் 828 ஆகும். இது தவிர, 61 பணியிடங்களுக்கு தகுந்த நபர்களைத் தேர்ந்தெடுக்க நியமன

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 நவம்பர் 13

நிறுவனங்களாகிய தேர்வு ஆணையம் மற்றும் வாரியங்கள் அறிவிக்கை செய்துள்ளன. இவ்வாண்டிற்கு நிரப்பப்பட வேண்டிய பணியிடங்களின் குறியீட்டில் இதுவரை நிரப்பப்பட்டுள்ள குறியீடு 39.5 விழுக்காடு ஆகும். டிசம்பர் 2000-த்திற்குள் இந்த வருடாந்திரக் குறியீடு 2,250 காலிப் பணியிடங்கள் முழுவதுமாக நிரப்பப்பட தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. டிசம்பர் இறுதிக்குள் நிர்ணயிக்கப்பட்ட குறியீடு முழுவதும் நிரப்பப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நிரப்பப்பட்ட பணியிடங்கள் வகுப்பு வாரியாக பின்வருமாறு :

மொத்த நிரப்பப்பட்ட பணியிடங்கள் இதுவரையில் 828. அதிலே ஆதிதிராவிடர்கள் 387. பழங்குடியினர் 4. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் 437 என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொழில் துறையிலே தொழில் முதலீட்டில் முதலிடத்திலே இருப்பதைப்பற்றி நான் சொன்னது தவறாகிவிட்டது என்று குறிப்பிட்டார்கள். மராட்டியத்திற்கும், தமிழ்நாட்டிற்கும்—நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன், ஒரு முதலிடம், இரண்டாவது இடம் என்பதிலே எப்போதும் ஒரு அணு அளவு வித்தியாசம் இரண்டுக்கும் இடையிலே எப்போதும் இருப்பதுண்டு. அந்த வித்தியாசத்தைத்தான் அந்தப் பத்திரிகை வெளியிட்டிருப்பதாக நான் கருதுகிறேன்.

சி.எம்.ஐ.இ. நிறுவனம் மாதந்தோறும் மாநிலங்களில் முதலீட்டு நிலைமைகளைப்பற்றி அறிக்கை வெளியிடுகிறது. அந்தந்த மாதத்தில் எடுக்கப்படும் முதலீடுகளைப் பற்றிய முடிவுகளைப்பற்றி மாநிலங்களின் ஒப்பீடு நிலையில் மாறுதல் ஏற்படும் ஆகஸ்ட் மாதத்தில் சி.எம்.ஐ.இ.-ன் அறிக்கைப்படி தமிழ்நாடு முதலிடத்தில் இருந்தது. சமீபத்திய அறிக்கைப்படி தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது என்பதை நான் இங்கே விளக்கமாக அறிவிப்பதோடு, இன்னொரு முக்கியமான அறிவிப்பை— இந்த அரசின் சார்பில் பல நல்ல தமிழ் அறிஞர்களுடைய நூல்களையெல்லாம் நாட்டுடைமை ஆக்குகின்ற காரியத்தைத் தொடர்ந்து செய்து வருகின்றோம். அதிலே கடந்த வரவு-செலவுத் திட்ட உரையின்போது பலருடைய நூல்கள் அரசுடைமை ஆக்கப்பட்டதை அறிவித்து அதற்குரிய நிதி அவர்களுடைய குடும்பத்தாருக்குப் பரிவுத்தொகை அண்மையிலே வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே விடுபட்டுப்போன ஒன்று அதை வருத்தத்தோடு தெரிவித்து, ஆனால் மகிழ்ச்சியோடு பன்மொழி புலவர் க. அப்பாத்துரையார் அவர்களுடைய புத்தகங்கள் அரசுடைமையாக



2000 நவம்பர் 13] [கலைஞர் மு. கருணாநிதி]

ஆக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குரிய பரிவுத் தொகையும் மற்றவர்களுக்கு வழங்கப்பட்டதைப் போல வழங்கப்படும் என்பதையும் தெரிவித்து இந்த அளவில் அமைகின்றேன். நன்றி.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது.

"2000-2001 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 7-11-2000 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2000-2001 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை முழுமையாக வழங்கப்பெறுகிறது.

**நிறைவேற்றப்பெற்ற 2000-2001 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்**

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| அ. | வருவாய்க் கணக்கில் செலவு— | |
| 1. | நில வருவாய்த் துறை | 9,04 |
| 4. | பொது விற்பனை வரியும்-ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம்— | 3,63,95 |
| 6. | ஆவணப் பதிவு | 35,44 |
| 8. | தேர்தல்கள் | 2,10,00 |

[2000 நவம்பர் 13

| | | |
|---|---|---|
| 9. | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 2,35,47 |
| 10. | பால் வழங்கு செயல் திட்டங்கள் | 30,89,00 |
| 11. | மாவட்ட நிருவாகம் | 9,03,20 |
| 12. | 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 12,50 |
| 13. | நீதி நிருவாகம் | 34,34 |
| 14. | சிறைச்சாலைகள் | 75,73 |
| 15. | காவல் துறை | 2,51,92 |
| 16. | தீயணைப்புப் பணிகள் | 6 |
| 17. | கல்வி | 30 |
| 18. | மருத்துவம் | 6 |
| 19. | மக்கள் நல்வாழ்வு | 10 |
| 20. | வேளாண்மை | 3,21,65,71 |
| 22. | கால்நடை வளர்ப்பு | 69,59 |
| 23. | கூட்டுறவு | 20,00,00 |
| 24. | தொழில்கள் | 8,72,68 |
| 26. | கதர்-கிராமத் தொழில்கள் | 13,70 |
| 27. | ஊரக வளர்ச்சி | 96,99,24 |
| 29. | சமூக நலன் | 38,48 |
| 30. | பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 1 |
| 31. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் | 5,85,24 |
| 32. | வீட்டு வசதி | 1,30,00 |



2000 நவம்பர் 13]

| | | |
|---|---|---|
| 33. | நகர்ப்பகுதி வளர்ச்சி | 1,70 |
| 34. | நுகர்பொருள் வழங்கல் | 2,92,85 |
| 35. | பாசனம் | 4 |
| 44. | காட்டுவளத் துறை | 1 |
| 46. | செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல் | 85,00 |
| 47. | ஊரகத் தொழில்கள் | 13,46,63 |
| 48. | குடிநீர் வழங்கல் | 1 |
| 49. | நகராட்சி நிருவாகம் | 11,63,26 |
| 50. | சுற்றுலா | 27,00 |
| 51. | தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 35,00 |
| **மொத்தம்--அ. வருவாய்க் கணக்கில் செலவு** | | **5,37,47,26** |
| **ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—** | | |
| 54. | பாசனம் குறித்த மூலதனச் செலவு | 2,02,79 |
| 55. | பொதுப் பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 10,37,41 |
| 58. | காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 3 |
| 59. | ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 54,71 |
| 60. | பல்வகை மூலதனச் செலவு | 4 |
| **மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | | **12,94,98** |
| இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்— | | |
| 61. | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்— | 9,51,18 |
| **பெருமொத்தம்** | | **559,93,42** |

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2000 (அ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்) 2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



## 8. அரசினர் தீர்மானம்

### (அ) விதிகள் 30, 130 மற்றும் 132-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். இன்று அறிமுகம் செய்யப்பட்ட சட்டமுன்வடிவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றை தளர்த்தி 2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/2000) இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

## 9. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு, (ஆய்வு செய்தல்) 2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/2000), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[2000 நவம்பர் 13

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/2000) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

2000 நவம்பர் 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 8. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுவது குறித்த அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

[2000 நவம்பர் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையில் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.24 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*94.* வணிக வரிகள் துறையில் *16-9-1998*-ஆம் நாளன்று உருவாகி, *21-10-1998* ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட II (1) வணிக வரி/*156/98* ஆம் எண் அறிவிக்கையில் வேறுபாடுகள் செய்யப்பட்டது குறித்து வணிக வரிகள் துறையின் *26-7-2000* ஆம் நாளிட்ட *128* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53* (*5*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*95.* *1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்யப்பட்டது குறித்து வணிக வரிகள் துறையின் *4-8-2000* ஆம் நாளிட்ட *128* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53* (*5*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*96.* மாநிலத்திற்குள் அமைந்துள்ள பகுதிகளில் பரிசுச் சீட்டுகள் விற்பனை செய்யும் எல்லா விற்பனையாளர்களைப் பொறுத்தமட்டில், மாநிலத்தில் அவர்கள் பதிவு செய்துள்ள இடம் மற்றும் விற்பனை செய்யும்



2000 நவம்பர் 13]

இடம் எதுவாக இருப்பினும் அதனைக் கருதிப்பாராது, *1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின்கீழ், யாதொரு வரியையும் விதிப்பதற்கு வணிக வரி அதிகாரி, சேப்பாக்கம் வரி விதிப்பு வட்டம், சென்னை மற்றும் வணிக வரி அதிகாரி, துடியலூர் வரி விதிப்பு வட்டம், கோயம்புத்தூர் வணிக வரி அதிகாரிகளுக்கு அதிகாரமளிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் *12-9-2000* ஆம் நாளிட்ட *144* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53* (*5*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*97.* *1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்யப்பட்டது குறித்து வணிகவரிகள் துறையின் *13-9-2000* ஆம் நாளிட்ட *146* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு *1/1959*) *53* (*5*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*98.* *1998-99*-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பத்தாவது ஆண்டறிக்கை, ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [*1989* ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *42/1989*) *51* (*3*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

*99.* *1996-97* மற்றும் *1997-98* ஆகிய ஆண்டுகளுக்கான மதுரை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். [*1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994*) *165* (*2*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

*100.* *1996-97, 1997-98* மற்றும் *1998-99* ஆகிய ஆண்டுகளுக்கான விருதுநகர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள் (*1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994*) *165* (*2*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

*101.* *1996-97, 1997-98* மற்றும் *1998-99* ஆகிய ஆண்டுகளுக்கான சிவகங்கை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள் [*1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994*) *165* (*2*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

[2000 நவம்பர் 13

102. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான தூத்துக்குடி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

103. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான கன்னியாகுமரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

104. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் இருபத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

105. 1999-2000 ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

106. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

107. தமிழ்நாடு அரசின் 1999-2000 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் கணக்குகள். (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்).

108. தமிழ்நாடு அரசின் 1999-2000 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்)

109. சென்னை மத்தியச் சிறையில், 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் நாளன்று சிறைக்கைதிகள் சிறையினுள் நடத்திய வன்முறை மற்றும் கலவரம் குறித்தும் மற்றும் காவல் துறை நடத்திய துப்பாக்கிச் சூடு குறித்தும் அதன் விளைவாக ஒரு துணைச் சிறை அதிகாரி மற்றும் கைதிகள் சிலர் இறந்தது குறித்தும் விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட மாண்புமிகு நீதிபதி திரு. ஐ. டேவிட் கிருஸ்டியன் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).



2000 நவம்பர் 13]

110. 23-7-1999 ஆம் நாளன்று திருநெல்வேலி மாநகரில் ஊர்வலத்தினர் மீது காவல் துறையினர் பலப்பிரயோகம் நடத்த வழிகோலிய காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்தும் மற்றும் பேரச்சத்தின் காரணமாக ஆற்றில் குதித்ததால், உயிரிழப்புகள் ஏற்பட வழிகோலிய காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்தும் விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதியரசர் திரு. எஸ். மோகன் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

68. 1999-2000 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் இருபத்து இரண்டாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

69. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்து நான்காவது அறிக்கை. (2000-2001)

70. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து ஒன்றாவது அறிக்கை. (2000-2001)

71. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து இரண்டாவது அறிக்கை. (2000-2001)

72. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து மூன்றாவது அறிக்கை. (2000-2001)

73. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து நான்காவது அறிக்கை. (2000-2001)

74. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து ஐந்தாவது அறிக்கை. (2000-2001)

75. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து ஆறாவது அறிக்கை. (2000-2001)

[2000 நவம்பர் 13

76. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து ஏழாவது அறிக்கை. (2000-2001)

77. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து எட்டாவது அறிக்கை. (2000-2001)

78. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினைந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

79. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினாறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

80. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினேழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

81. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினெட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

82. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பத்தொன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

83. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (இருபதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 51 வரை)



2000 நவம்பர் 13]

## (அ) உடுக்குறியிடாத வினாக்கள்

### (பதினைந்தாவது பட்டியல்)*

1—

### தொழில் வளாகம்

**வினா எண் 25971—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதியில் அரசினர் தொழில் வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதியில் அரசினர் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2—

### தனியார் தொலைக்காட்சி நிலையங்கள்

**வினா எண் 30308—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள தனியார் தொலைக்காட்சி நிலையங்கள் மூலமாக அரசிற்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939-ன்படி தனியார் தொலைக்காட்சி நிலையங்கள் கேளிக்கை வரி செலுத்துவதில்லை. மாறாக இந்த ஒளிபரப்பினை மேற்கொள்ளும் கேபிள் டி.வி.

*[குறிப்பு: இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.]

[2000 நவம்பர் 13

இயக்குபவர்களிடமிருந்து தமிழ்நாடு கேளிக்கை வரி சட்டப் பிரிவு 5D வாயிலாக கேளிக்கை வரி வசூல் செய்யப்படுகிறது. இவ்வரியின் மூலம் 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.214.22 லட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டினைக் காட்டிலும் ரூ.106.18 லட்சம் கூடுதலாகும்.

3—

### கட்டடம் பழுதுபார்த்தல்

**வினா எண் 25653—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், எடப்பாடி அரசினர் மேல்நிலைப் பள்ளியிலுள்ள கூரை பழுதடைந்துள்ள வகுப்பறை கட்டடத்திற்கு பழுதுபார்க்க ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி வந்து சேராததால் கைவிடப்பட்ட வேலையை மீண்டும் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில் அதன் விவரம் அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் பழுதடைந்து இருந்த மூன்று வகுப்பறை கட்டடத்திற்கு பழுதுபார்ப்புப் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் ரூ.3.40 லட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு 31-3-2000ல் முடிக்கப்பட்டு 19-5-2000 அன்று கட்டடம் பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

4—

### நூலகக் கட்டடம்

**வினா எண் 31683— திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், மல்லப்புரம் கிராமம், மல்லப்புரத்தில் நூலகம் (கட்டடம் ஏற்கெனவே உள்ளது) இயக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், மல்லப்புரம் கிராமம், மல்லப்புரத்தில் நூலகம் தொடங்குவதற்கான கட்டடம் மல்லப்புரம் ஊராட்சி தலைவர்வசம் உள்ளதால், அப்பகுதி மக்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவு செய்தால் மேற்குறிப்பிட்டுள்ள கிராமத்தில் பகுதிநேர நூலகம் இயங்க ஆவன செய்யப்படும்.

1) எதிர்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக் குழு பெயருக்குப் பத்திரப்பதிவு செய்து தருதல் வேண்டும்.

2) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

3) ரூ. 2,000 மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

4) ரூ. 1,000 தொகை செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5—

### பள்ளிக் கட்டடங்கள் செப்பனிடல்

**வினா எண் 33762—திரு. ந. கருப்பண்ண உடையார்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—**

**தஞ்சாவூர் மாவட்டத்தில் அனைத்துப் பள்ளிக் கட்டடங்களையும்** செப்பனிட்டுப் புதுப்பித்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்களைச் செப்பனிட சிறப்பு மராமத்துப் பணியின்கீழ் 120 பள்ளிகட்கு ரூ.1,49,04,000/- மதிப்பீட்டில் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**6—**

## இலவசப் பாடப்புத்தகம்

**வினா எண் 41439—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு பள்ளியிலும் இலவசப் பாடநூல் மாணவர்களுக்கு வழங்குவதில் சில இடர்பாடுகள் உள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு குழு அமைத்து வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவசப் பாடப்புத்தகம் வழங்க நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) முன்னர், ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் சத்துணவு உண்ணும் மாணவ, மாணவியர்கட்கு மட்டுமே இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டு வந்தன. அச்சமயம் எழுந்த இடர்பாடுகளைக் கருத்திற்கொண்டு 1998-99 • கல்வி ஆண்டு முதல் அரசாணை (நிலை) எண் 178, பள்ளிக்கல்வித் துறை, நாள் 1-6-1998-ன்படி, ஒன்று முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கு இலவசப் பாட நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் மேற்காண் இலவசப் பாடநூல்கள் பள்ளி மாணவர்கட்கு அதே கல்வி ஆண்டில் உரிய நேரத்திலேயே வழங்கப்பட்டு விடுகின்றன. மேலும் இவற்றை பள்ளிக்கு எடுத்துவரத் தேவையான போக்குவரத்துச் செலவினமும் அளிக்கப்படுகிறது. எனவே இடர்பாடுகள் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

**7—**

## கலை, அறிவியல் கல்லூரிகள்

**வினா எண் 43422—திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 கல்வி ஆண்டில் புதியதாக கலை, அறிவியல் கல்லூரிகள் தனியார் தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளதா?

(ஆ) இதில் சேலம் மாவட்டத்தில் எத்தனை?



விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அ) 20

ஆ) அவற்றுள் சேலம் மாவட்டத்திற்கென கல்லூரிகள் ஏதும் அனுமதிக்கப்படவில்லை.

**8—**

## மருத்துவர் பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 24020—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஜூன் மாதம் முடிய சேலம் மாவட்டத்தில் சுகாதாரத் துறையில் எவ்வளவு மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன?

(ஆ) ஆம் எனில், அவற்றை நிரப்ப அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் 1997-98 ஜூன் மாதம் முடிய 15 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் காலியாக இருந்தன. அவை தற்போது தமிழ்நாடு தேர்வாணைக் குழு மூலம் தேர்வு செய்யப்பட்ட மருத்துவ அலுவலர்களைக் கொண்டு நிரப்பப்பட்டு உள்ளன. தற்போது 5 பணி இடங்கள் காலியாக உள்ளன. அவற்றை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**9—**

## விரிவாக்கப் பணி

**வினா எண் 24456—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பனகுடி பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார மையம் விரிவாக்கப் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், 0.63 சென்ட் இந்து அறநிலையத் துறையிடம் இருந்து நிலத்தினைப் பரிமாற்றம் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பனகுடி ஆரம்ப சுகாதார நிலையம், தற்போது செயல்படும் அரசு கட்டடத்துடன் கூடுதலாக ஒரு அறை மட்டும் கட்டினால் போதுமென்பதால், ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

**10—**

### சட்டத் திருத்தம்

**வினா எண் 28399—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதைத் தடுத்திடப் பொருத்தமான சட்டத் திருத்தம் (MCI Act) செய்ய மத்திய அரசை இவ்வரசு வற்புறுத்தியுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**11—**

### நிதி ஒதுக்கீடு

**வினா எண் 29001—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களையும், கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களையும் பராமரிக்கத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் நிதியாண்டில் சங்கரன் கோவில் சுகாதார மாவட்டத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள கட்டடப் பணிகளுக்காக ரூ.1.75 இலட்சமும், மின் பணிகளுக்காக ரூ.0.25 இலட்சமும் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள கட்டடப் பணிகளுக்காக ரூ.2.50 இலட்சமும், மின் பணிகளுக்காக ரூ.0.50 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்நிதி ஒதுக்கீட்டிலிருந்து பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**12—**

### சுகாதார நிலையக் கட்டடம்

**வினா எண் 33471— திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, பவானி ஒன்றியம், ஓடத்துறை நஞ்சகவுண்டம் பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட ஒரு ஏக்கர் நிலம் இலவசமாகக் கொடுத்தும் இன்னும் கட்டடம் கட்டப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் கட்டிக் கொடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா.வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

[2000 நவம்பர் 13

(அ) மற்றும் (ஆ) பவானி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஓடத்துறை ஆரம்ப சுகாதார நிலையம், முன்னாளில் ஊராட்சி ஒன்றிய மருந்தகமாக இருந்து ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டதாகும். இது தற்சமயம் ஊராட்சி ஒன்றியக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. 1997-98ஆம் ஆண்டு திட்டத்தில் 352 ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்ட, அரசு ஆணை வழங்கப்பட்டதில், ஓடத்துறை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் தானமாக வழங்கப்பட்ட நிலத்தில் கட்டடப் பணிகள் பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கூடிய விரைவில் கட்டட வேலைகள் முடிவுபெற்று, புதிய கட்டடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படும்.

**13—**

**நிரந்தர மருத்துவர்**

**வினா எண் 33954—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள புறநகர் மருத்துவமனையில் நிரந்தரமாக மருத்துவர்கள் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, ஈஞ்சம்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நீலாங்கரை என்ற இடத்தில் அரசு புறநகர் மருத்துவமனை கடந்த 13-7-1999 அன்று தொடங்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

தற்போது இம் மருத்துவமனையில் பொதுமக்களுக்கு சிகிச்சை அளிப்பதில் எந்தவித இடையூறுகள் ஏற்படாத வண்ணம், அரசு இராயப்பேட்டை மருத்துவமனையிலிருந்து பகராண்மைப்பணி மூலம் (Deputation) மருத்துவர்கள் சுழற்சி (Rotation) முறையில் பணியாற்றிட அனுப்பப்படுகின்றனர். மேலும் இம்மருத்துவமனைக்கு மருத்துவர்கள்



2000 நவம்பர் 13]

மற்றும் இதர பணியிடங்கள் உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

**14—**

**மின் அழுத்தக் கம்பம்**

**வினா எண் 35055—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 12வது கட்டபொம்மன் நகர், 2வது வீதி நடுவில் ஒரு உயர் மின் அழுத்தக் கம்பம் உள்ளதை அரசு மாற்றி அமைக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் கட்டபொம்மன் நகர் 2-வது வீதி நடுவில் 11 கி.வோ. உயர் மின் அழுத்த மின்கம்பம் உள்ளதை மாற்றி அமைக்கக் கோரும் விண்ணப்பம் எதுவும் திருப்பூர் நகராட்சியிலிருந்து பெறப்படவில்லை. விண்ணப்பம் கிடைக்கப்பெற்று, அதற்கு ஆகும் செலவுத் தொகையைச் செலுத்தியபின், மேற்படி மின்கம்பம் மாற்றி அமைக்கப்படும்.

**15—**

**மின்வாரியத்தைப் பிரித்தல்**

**வினா எண் 35464—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின் வாரியத்தை மூன்றாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சீரமைப்பதற்கான தேவையை ஆய்வு செய்ய ஏனஸ்ட் அண்ட் யங் என்ற ஆலோசனை வழங்கும் நிறுவனத்தை அமர்த்தியுள்ளது.

ஆலோசனை வழங்கும் நிறுவனம் செய்துள்ள பரிந்துரையின் மீதான கருத்துக்கள் தொழிற்சங்க நிர்வாகிகளிடம் கேட்கப்பட்டுள்ளது. ஆலோசனை வழங்கும் நிறுவனம் தமது இறுதி அறிக்கையை டிசம்பர் 2000-த்திற்குள் சமர்ப்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**16—**

**ரத்தவங்கி மருத்துவர் பணியிடம் ஏற்படுத்துதல்**

**வினா எண் 35595—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் ரத்தவங்கி மருத்துவர் பணியிடம் ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி அரசு தலைமையிட மருத்துவமனையில் குருதி வங்கி பயிற்சி முடித்த மருத்துவ அதிகாரி பணிபுரிந்து வருவதால், மேலும் ஒரு மருத்துவர் பணியிடம் உருவாக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.



2000 நவம்பர் 13]

**17—**

**மின் இணைப்பு சந்தா விவரம்**

**வினா எண் 36257—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மின் இணைப்புப் பெறுவதற்காகச் செலுத்தப்படும் வைப்புத் தொகையையும் அதன் மூலம் வரப்பெற்ற வட்டித்தொகையையும் ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் சந்தாதாரர்களுக்குத் தெரிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மின் நுகர்வோர்களிடமிருந்து மின் இணைப்பு வழங்கும் நேரத்தில் கட்டண விகிதப்படி தொடக்க வைப்புத்தொகை வசூலிக்கப்பட்டு வருகிறது. மின் நுகர்வோர்கள் முந்தைய 12 மாத மின் இணைப்புக் கட்டணங்களின் சராசரியில் 3 மடங்கு தொகைக்கு இணையாக மின் துய்ப்பு வைப்புத்தொகை வைத்திருக்க வேண்டும். தாழ்வு அழுத்த மின் இணைப்பு பெற்ற நுகர்வோர் போதிய மின் நுகர்வு வைப்புத்தொகை வைத்துள்ளனரா என்பதை இரண்டு ஆண்டுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்து ஆண்டு இறுதியிலுள்ள தொகைக்கு வட்டி கணக்கிட்டு வைப்புத்தொகையுடன் கட்டப்படுகிறது. இவ்விவரம் நுகர்வோருக்குத் தெரிவிக்கப்பட்டு நுகர்வோர் செலுத்தவேண்டிய மீதி வைப்புத்தொகை இருப்பின் செலுத்த கோரப்படுகிறது.

**18—**

**சுற்றுச் சுவர் கட்டுதல்**

**வினா எண் 37325—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஆரம்ப கட்டமாக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் அரசு கட்டட வசதி வேண்டுமென, *1996-97* ஆம் ஆண்டில் *300* ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்களும், *1997-98* ஆம் ஆண்டில் *352* ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்களும் கட்ட அரசு நிதி ஒதுக்கீடும் நிர்வாக ஒப்புதலும் வழங்கியுள்ளது. சுற்றுச் சுவர் கட்டும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்யும்போது, சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டுவது குறித்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**19—**

### மேம்பாலம் அமைத்தல்

**வினா எண் 14389—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சென்னை வியாசர்பாடி கன்னிகாபுரத்தில் மேம்பாலம் அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சென்னை வியாசர்பாடி கன்னிகாபுரத்தில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர் சாலையின் குறுக்கே செல்லும் இரயில் தடங்களின் கீழ் தற்போது ஒரு சுரங்கப்பாதை அமைந்துள்ளது. இங்கிருந்து சுமார் 1 கி.மீ. தொலைவில் உள்ள பெரம்பூர் சுரங்கப்பாதையின் மேல் ஒரு மேம்பாலம் கட்டப்பட்டு வருகிறது. இதனால் தற்போது கன்னிகாபுரம் பகுதியில் உள்ள சுரங்கப்பாதை வழியாக எல்லா வாகனங்களும் திருப்பி விடப்பட்டுள்ளன. பெரம்பூர் வாகன மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு இதன் மேல் வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டபின் கன்னிகாபுரம் பகுதியில் போக்குவரத்து வெகுவாகக் குறைந்து விடும். எனவே இங்கே மேம்பாலம் தற்போது அவசியமில்லை. மேலும் இங்கு மேம்பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு எதுவும் சென்னை மாநகராட்சியின் பரிசீலனையில் இல்லை.



**20—**

### பொறியாளர் அலுவலகம் மாற்றுதல்

**வினா எண் 22888—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநெல்வேலி மாவட்ட சிறப்பு குடிநீர் திட்டங்களுக்கான முதன்மைப் பொறியாளர் அலுவலகம் மதுரையில் இருப்பதை திருநெல்வேலிக்கு மாற்றித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

**21—**

### நகரமன்ற அரங்கு அமைத்தல்

**வினா எண் 23386—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சியில் நகரமன்ற கூட்டம் நடத்துவதற்கு ஏதுவாக மன்ற அரங்கு அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சியில் நகர்மன்ற கூடம் கட்ட 2000-2001 ஆம் ஆண்டிற்கான 11வது நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**22—**

**டீசல் விலை உயர்வு**

**வினா எண் 36089—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டீசல் விலை உயர்வின் காரணமாக ரிக் உரிமையாளர்கள் அதிகப்படியான கட்டணம் கேட்டுக்கொண்டு பணியைத் தாமதப்படுத்துவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) அதன் மேல் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) டீசல் விலை உயர்வின் காரணமாக ரிக் உரிமையாளர்கள் அதிகப்படியான கட்டணம் கேட்டுக்கொண்டு பணியை தாமதப்படுத்துவது தொடர்பாக 1-6-2000 மற்றும் 1-7-2000 அன்று நடைபெற்ற வாரியக் குழுக் கூட்டத்தில் முறைப்படியான கருத்துரு வைக்கப்பட்டு வாரியத்தின் தீவிர பரிசிலனைக்குப்பின் கடினப்பாறையில் தனியார் ரிக்குகளை வைத்து 6" ஆழ்துளைக் கிணறு அமைக்க ஒரு மீட்டர் ஆழத்திற்கு ரூ.230/- என புதிய விலை விகிதம் செய்யப்பட்டு வாரிய ஆணை எண் 169, நாள் 31-7-2000-ன் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 13]

**23—**

**சுற்றுச் சுவர் எழுப்புதல்**

**வினா எண் 36142—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதி, நாகல்நகர் சுடுகாட்டில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி சுற்றுச் சுவர் எழுப்பும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், சுற்றுச் சுவர் எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் தொகுதி, நாகல்நகர் சுடுகாட்டில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டு விட்டன. 1999-2000 ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.3.50 இலட்சம் செலவில் சுடுகாட்டின் மூன்று பக்கங்களிலும் சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நான்காவது பக்கத்தில் (தென் பகுதியில்) நடப்பு நிதி ஆண்டில் சுடுகாடு மேம்பாடு திட்டத்தின்கீழ் ரூ.2.25 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சுடுகாட்டில் முட்புதர்களை அகற்றும் பணி பொது நிதியிலிருந்து ரூ.40,000/- மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ளது.

**24—**

**கழிப்பிட வசதி**

**வினா எண் 36832—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், சடையப்பபுரம் கிராமத்திலுள்ள கீழ்ப்பாவூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் மேற்கூரையை பழுதுநீக்கம் செய்து தரவும், நவீன கழிப்பிடம் கட்டித் தரவும், குடிநீர் வசதி செய்து தரவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை பழுதுநீக்கம் செய்ய ஒன்றியக் குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி விரைவில் பழுதுநீக்கம் செய்து முடிக்கப்படும்.

**25—**

**கழிப்பிடக் கட்டடம்**

**வினா எண் 36833—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், மேலகரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், கழிப்பிட கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், மேலகரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டடம், கழிப்பிடக் கட்டடம் கட்ட போதுமான இடவசதி உள்ளது.

**26—**

**பூங்காக்கள் அமைத்தல்**

**வினா எண் 37694—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர், வேலப்பாடி பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள மனைப்பிரிவில் பூந்தோட்டம் (Park) அமைக்க இடம் வசதியாக இருந்தும் நகராட்சி தக்க நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்துவதால் அதனை விற்றுப் பணமாக்க Layout Owner-கள் முயற்சி செய்யலாம். எனவே இதனைத் தடுக்கவும், மக்கள் வசதி அடையவும் பூங்காக்கள் உடனே அமைக்க அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வேலப்பாடி பூந்தோட்டம் பகுதியில் 1981 முதல் 1988 ஆம் ஆண்டு வரை எட்டு குடியிருப்பு மனைப் பிரிவுகளுக்கு நகராட்சியால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இம்மனைப் பிரிவுகளில் பூங்காவிற்காக இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சிக்கு ஒப்படை செய்யவில்லை. எனவே இப்பகுதியில் நகராட்சியால் பூங்கா அமைக்கும் நிலை இல்லை.

**27—**

**மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டடம்**

**வினா எண் 38030—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், வேலூர் கோடையிடி குப்புசாமி முதலியார் நகராட்சி மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்திருப்பதால் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சி கோடையிடி குப்புசாமி முதலியார் நகராட்சி மேல்நிலைப் பள்ளியின் முதல் தளத்தைப் பழுதுபார்க்க, 2000-2001 ஆம் ஆண்டு கல்வி நிதியிலிருந்து ரூ. 3.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.

[2000 நவம்பர் 13

28—

## கூடுதல் வகுப்பறைகள்

**வினா எண் 38034—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் தோட்டப்பாளையம் மகளிர் நகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் தோட்டப்பாளையம் மகளிர் நகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுவது, நகராட்சியில் நிதிநிலை சரியில்லாத காரணத்தால் செய்ய இயலவில்லை.

29—

## ஆக்கிரமிப்பு

**வினா எண் 38961—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சி எல்லையில் லாங் பஜார், மண்டித் தெரு, சிட்டிஞ் பஜார், காந்தி ரோடு, ஆபீசர்ஸ் லைன் ஆகிய பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புக் கடைகளை அரசு எப்போது அகற்றும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பிரதான சாலைகளான லாங் பஜார், மண்டித் தெரு, நியூ சிட்டிஞ் பஜார், காந்தி ரோடு, ஆபீசர்ஸ் லைன் போன்ற சாலைகளில் செய்யப்பட்டிருந்த ஆக்கிரமிப்புகள் அனைத்தும் 21-1-2000 மற்றும் 23-3-2000 ஆகிய தேதிகளில் வேலூர் நகராட்சியால் அகற்றப்பட்டுவிட்டன.



2000 நவம்பர் 13]

30—

## உதவி செயற்பொறியாளர் அலுவலகம்

**வினா எண் 41335—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூரில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய உதவி செயற்பொறியாளர் அலுவலகம் திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பெரணமல்லூரில் தனியாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய உதவி செயற்பொறியாளர் அலுவலகம் அமைப்பது தற்பொழுது அவசியமில்லை என கருதப்படுகிறது.

(ஆ) வினா எழவில்லை.

31—

## டெர்மினேட்டர் ஜீன்

**வினா எண் 21910—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "டெர்மினேட்டர் ஜீன்" என்ற வேளாண்மை வளத்தைப் பாழ்படுத்தும் மரபணுவை இந்திய வேளாண்மை நிலத்தில் கலந்துவிட அமெரிக்கா முயல்வதாக விவசாய விஞ்ஞானி எச்சரித்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனால் தமிழ்நாட்டு வேளாண்மை பாதிக்கப்படாமல் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) "டெர்மினேட்டர் ஜீன்" என்ற சாத்தியம், தத்துவ அளவில்தான் இருக்கின்றதே தவிர நடைமுறைக்கு விடப்படவில்லை. மேலை நாடுகளிலும் இந்த முறை தற்போது பாதுகாக்கப்பட்ட முறையில் பரிசோதனையில்தான் உள்ளது. எனவே இந்த முறை நம் இந்திய மண்ணில் அரசுக்கும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்திற்கும் தெரியாமல் நுழைந்துவிட சாத்தியம் இல்லை. மேலும், இம்மாதிரியான தொழில்நுட்பங்களால் இந்திய விவசாயம் எள்ளளவும் பாழ்பட்டு விடக்கூடாது என்பதற்காக வழிகாட்டுதலின் பேரில் இந்திய வேளாண் கழகம், இந்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறை ஆகியவை இணைந்து முனைப்போடு செயல்பட்டு வருகின்றனர். எனவே அரசு அதிகாரிகளுக்கும் விஞ்ஞானிகளுக்கும் தெரியாமல் "டெர்மினேட்டர் ஜீன்" உள்ளடங்கிய விதை இந்தியாவில் நுழைந்து விடக்கூடும் என்று ஐயப்படத் தேவையில்லை.

(ஆ) பதில் எழவில்லை.

**32—**

**வயது வரம்பு**

**வினா எண் 26448—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நேரடி நியமனங்களில் வயது வரம்பு 30தான் இருக்க வேண்டுமென்று அரசாணை இருந்தும்கூட அது கடைபிடிக்கப்படாமல், அரசின் அனுமதியும் பெறாமல் பல்கலைக்கழகத்தில் வயது முதிர்ந்தவர்கள் சில பணியிடங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளது குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நேரடி நியமனங்களில் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வயது வரம்பு பின்பற்றப்படுகிறது.

(ஆ) வினா எழாது.





**33—**

**பார்த்தீனியம் செடி**

**வினா எண் 35324—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி மற்றும் சுற்றுப்புறங்களில் பார்த்தீனியம் எனும் விஷச் செடிகள் அதிக அளவில் பரவியுள்ளதால் பொதுமக்களுக்கு சுகாதாரக் கேடு அதிகம் உள்ளது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவ்விஷச் செடிகளை முற்றிலும் ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தென்காசி மற்றும் சுற்றுப்புறங்களிலும், மாநிலத்தில் இன்னும் சில மாவட்டங்களிலும் பார்த்தீனியம் விஷச் செடிகள் பரவி உள்ளன. இச்செடிகளால் மனிதனுக்கு தோல் மற்றும் கண் அரிப்பு, கொப்புளங்கள், ஊரல் போன்ற தோல் நோய்கள், ஆஸ்துமா, மூச்சுத் திணறல், உடல் ஒவ்வாமை மற்றும் காய்ச்சல் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

(ஆ) இச்செடிகளை அழிக்க சில ஆண்டுகளுக்கு முன்பு முகாம்கள் நடத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது இச்செடிகளை அழிக்க திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. பார்த்தீனியம் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளாக தொழில்நுட்ப செயல் விளக்கங்கள், கிராம விழாக்கள், பார்த்தீனியம் ஒழிப்பு முகாம், இளம் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் பார்த்தீனியக் கட்டுப்பாடு தொழில்நுட்பக் கருத்தரங்குகள் ஆகியவற்றை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொடர்ந்து செய்து வருகிறது.

*பார்த்தீனியம் விஷச் செடிகளை அழிக்க ஒருங்கிணைந்த கட்டுப்பாடு முறைகள்*

1. இச்செடி மீண்டும் பரவாமல் இருக்க, பூப்பதற்கு முன்பாக அழிப்பது மிகவும் நல்லது.

2. புதர் நீக்கும் கருவியை உபயோகித்து இக்களையை முற்றிலும் அகற்றி எரித்துவிட வேண்டும்.

3. இந்த நச்சுக் களை முளைப்பதைத் தடுக்க மழைக்காலத்திற்கு முன்பாக அட்ரமாஸ் களைக்கொல்லியை ஏக்கருக்கு ஒரு கிலோ என்ற அளவில் சுமார் 250 லிட்டர் நீரில் கலந்து விசைத் தெளிப்பான் கொண்டு நிலத்தின் மேல் சீராக தெளிக்க வேண்டும்.

4. வளர்ந்த செடிகளைக் கட்டுப்படுத்த, ஒரு லிட்டர் நீரில் 200 கிராம் சமையல் உப்பு (20%) மற்றும் ஒரு மில்லி சோப்பு திரவம் கலந்து நல்ல வெயில் நேரத்தில் செடிகள் முழுவதும் நனையும்படி கைத்தெளிப்பானால் தெளிக்க வேண்டும்.

5. தரிசு மற்றும் பொது நிலங்களில் "கேசியா செரியா" என்ற அடர் ஆவாரை செடியை வளரச் செய்து பார்த்தீனியச் செடி வளர்வதைத் தடுக்கலாம்.

6. பார்த்தீனியச் செடியைத் தின்று அழிக்கக்கூடிய சைக்கோகிராமா பைக்காலரேட்டா என்ற மெக்சிகன் வண்டுகளை உயிரியல் முறையாக உபயோகப்படுத்தலாம்.

7. தரிசு நிலங்களில் இயற்கையாக உள்ள மற்ற செடி இனங்களை அழிக்காதிருத்தல் வேண்டும்.

8. மழை பெய்த அடுத்த நாள் களை முளைக்கும் தெளிக்கக்கூடிய அட்ரசின் அல்லது மயூரான் களைக் கொல்லி எக்டேருக்கு 1 கிலோ என்ற அளவில் 750 லிட்டர் தண்ணீரில் கலந்து மண் நன்கு நனையும்படி தெளிக்கலாம்.

9. களை முளைத்தபின் தெளிக்கக்கூடிய பராகுவாட் 1 லிட்டர் அல்லது 2, 4 டீ 2 கிலோ அல்லது சோடியம் குளோரைடு 20 சதவீதம் - 1 சதவீதம் சோப்பு கரைசல் செடிகள் பூக்குமுன் தெளிக்கவும்.

10. பார்த்தீனியம் வளரும் இடங்களில் போட்டச் செடிகளான அவிரி, துத்தி, கொலிஞ்சி மற்றும் பெரு ஆவாரை போன்ற செடிகளை வளரச் செய்வதன் மூலம் பார்த்தீனியத்தின் எண்ணிக்கையை மிகவும் குறைவாக வைத்துக்கொள்ளலாம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பார்த்தீனியம் இயற்கையாக உள்ள மானாவாரி விளை நிலங்களில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி முடிவின்படி, மக்காச்சோளம், சோளம், சூரியகாந்தி மற்றும்



கம்பு போன்ற பயிர்கள் பார்த்தீனியத்துடன் போட்டி போட்டு வளர்ந்து பார்த்தீனியத்தின் வளர்ச்சியைக் குறைப்பதுடன் பார்த்தீனியத்தின் பூவின் எண்ணிக்கையை வெகுவாகப் பாதித்துள்ளது எனவும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே மானாவாரி நிலங்களிலும் முடிந்தவரை மேற்கண்ட பயிர்களை அல்லது அடர் ஆவாரையை வளர்த்து பார்த்தீனியத்தைக் கட்டுப்படுத்தலாம்.

34—

## ஆய்வுக்கூடக் கட்டடம்

**வினா எண் 35364—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் அக்மார்க் ஆய்வுக் கூடத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001-ல் பகுதி 2 திட்டத்தில் தென்காசி அக்மார்க் தரம் பிரிப்பு ஆய்வகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. 2001-2002 ஆம் ஆண்டு தென்காசி அக்மார்க் ஆய்வகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

35—

## உலர் களம்

**வினா எண் 35993—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம் நா. வல்லுண்டாண்பட்டு ஊராட்சிக்கு உட்பட்ட மாப்பிள்ளை நாயக்கன்பட்டி கிராமத்தில்

[2000 நவம்பர் 13

விவசாய விளைபொருள்களை உலர்த்துவதற்கு 'களம்' ஒன்று அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர் ஒன்றியம், நா. வல்லுண்டான்பட்டு ஊராட்சிக்கு உட்பட்ட மாப்பிள்ளை நாயக்கன்பட்டி கிராமத்தில் உலர் களம் கட்டுவதற்கான கோரிக்கை ஏதும் இதுகாறும் பெறப்படவில்லை. உலர்களம் கட்டுவதற்குத் தேவையான விவரங்கள் கிடைக்கப் பெற்றால் 2000-2001 ஆம் ஆண்டில் உலர்களம் கட்ட இடம் தேர்வு செய்யப்படும்பொழுது, இது குறித்து பரிசீலிக்கப்படும்.

**36—**

### உழவர் பயிற்சி மையம்

**வினா எண் 38311—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் புதிய உழவர் பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) இம்மாவட்டத்தில் உழவர் பயிற்சி நிலையங்கள் எங்கெங்கு உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டத்தில் ஏற்கெனவே உழவர் பயிற்சி நிலையம் செயல்பட்டு வருவதால் கூடுதலாக புதிய உழவர் பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை..

(ஆ) வேலூர் மாவட்டத்தில் நவ்லாக் என்னும் இடத்தில் செயல்பட்டு வரும் உழவர் பயிற்சி நிலையம், வேலூர் மாவட்ட விவசாயிகளின் பயிற்சித் தேவைகளைக் கவனித்து வருகிறது.



2000 நவம்பர் 13]

**37—**

### வீரிய தென்னங்கன்றுகள்

**வினா எண் 38315—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி, வாணியம்பாடி, குடியாத்தம், பேர்ணாம்பட்டு ஆகிய தொகுதிகளில் தென்னை அதிகம் பயிர் செய்யப்படுவதால் விவசாயிகளுக்கு வீரிய தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம் மட்டுமின்றி தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இலவசமாக தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டம் ஏதுமில்லை. அரசு தென்னை நாற்றுப் பண்ணைகளில் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு நெட்டை இரகத்திற்கு கன்று ஒன்றுக்கு ரூ.12/-ம், நெட்டை மற்றும் குட்டை இரகத்திற்கு கன்று ஒன்றுக்கு ரூ.20/- விலையிலும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

**38—**

### தொழில்நுட்ப இயந்திரங்கள் ஏற்றுமதி விவரம்

**வினா எண் 39143—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரியில் உருவாக்கப்படும் தொழில்நுட்ப இயந்திரங்களை வெளி மாநிலங்களுக்கு அரசு அனுப்புகிறதா?

(ஆ) அந்தக் கருவிகள் தனியாருக்கு விற்கப்படுகின்றனவா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்படும் தொழில்நுட்ப இயந்திரங்கள் பல்கலைக்கழகத்தால் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன. அந்தக் கருவிகள் வேளாண் துறையைச் சார்ந்த அரசுத் துறைகள் மூலமாகவும் உழவர்களுக்கு விற்கப்படுகின்றன. மேலும், தனியாரால் நடத்தப்படும் தொழிற்கூடங்களில் அவை உற்பத்தி செய்ய அனுமதிக்கப்பட்டு அவற்றின் மூலமாகவும் தனியாருக்கு விற்கப்படுகின்றன.

**39—**

## கிராமப்புற பசுமைத் திட்டம்

**வினா** *எண்* **38354—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கிராமப்புற பசுமைத் திட்டம் சென்னையில் அறிமுகப்படுத்தப்பட உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) கிராமப்புற பசுமைத் திட்டம் சென்னையில் அறிமுகப்படுத்தும் திட்டம் இல்லை.

(ஆ) மத்திய, மாநில அரசுகள் ஒருங்கிணைந்து நகர்ப் பகுதிகளில் மரம் வளர்த்து மாசினைக் கட்டுப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ஐந்தாண்டுகளுக்கு 1997 முதல் ஆண்டுதோறும் 200 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு காடு வளர்ப்புப் பணிகள் செய்யப்படுகின்றன. கிராமப்புற பசுமைத் திட்டம் என்றொரு திட்டம் தனியே இல்லை.

**40—**

## மரம், செடி வளர்ப்பு

**வினா எண் 40014—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





திருவண்ணாமலை மாவட்டம், செங்கம்பூண்டி, நம்பேடு, அஸ்தினாபுரம் பகுதியில் உள்ள காடுகளில் புதியதாக மரம், செடிகள் வளர்க்கப்படுகின்றனவா?

*விடை—*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம்பூண்டி, நம்பேடு மற்றும் அஸ்தினாபுரம் ஆகிய கிராமங்களுக்கு அருகிலுள்ள நம்பேடு காப்புக்காட்டின் பரப்பு 576.43 ஹெக்டேர் ஆகும். இதில் 1999-2000 ஆண்டில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், திருவண்ணாமலை காடு வளர்ப்புக் கோட்டத்தால் 350 ஹெக்டேர் பரப்பில், வேம்பு, புங்கன், ஆயா, விளா, நெல்லி, ஆலன், நீர்மத்தி, நாவல் மற்றும் புளி போன்ற செடி வகைகள் மொத்தம் 1,27,000 நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், மண் வளப் பாதுகாப்புப் பணியாக இரண்டு தடுப்பணைகளும், ஒரு குளத்தில் தூர் வாரும் பணியும் செய்யப்பட்டுள்ளது.

**41—**

## வன ஊழியர்கள்

**வினா எண் 40146—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள காடுகளைக் காக்கவும், வன விலங்குகளைப் பாதுகாக்கவும், வன ஊழியர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதிகப்படியான வன ஊழியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

*விடை—*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

[2000 நவம்பர் 13

(அ) ஆம். காடுகள் மற்றும் வன விலங்குகளைப் பாதுகாக்க பணியாளர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது என்பதை அரசு அறியும்.

(ஆ) மாநிலத்தின் மொத்த வனப் பரப்பு 22,74,845 ஹெக்டேர். ஒரு பீட்டின் அளவு 1000 ஹெக்டேருக்கு மேல் இருத்தல் கூடாது. எனவே மொத்த வனப் பரப்பானது (22,74,845 ஹெக்டேர்) 2274 பீட்டுகளாகப் பிரிக்கப்பட வேண்டும். 1998 ஆம் ஆண்டில் 1005 பீட்டுகள் மட்டுமே இருந்தன. மொத்த வனப் பரப்பு மற்றும் தரக்குழுவின் பரிந்துரைகளின்படி மேலும் 1269 புதிய பீட்டுகள் உருவாக்கப்பட வேண்டும். இதன்படி இதுவரை 290 பீட்டுகள் எட்டு நிலைகளில், எட்டு வருடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒன்பதாம் நிலையாக 2000-2001-ம் ஆண்டில் 20 பீட்டுகள் புதியதாக ஏற்படுத்தி 20 வனக் காப்பாளர் மற்றும் 20 வனக் காவலர் பணியிடங்களை புதியதாக உருவாக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு பணியிடங்கள் படிப்படியாக உயர்த்தப்பட்டு வருகின்றன.

**42—**

### சந்தன எண்ணெய் தொழிற்சாலை

**வினா எண் 40380—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் 2000 ஆண்டில் ஒரு புது சந்தன எண்ணெய் தொழிற்சாலை உருவாக்கும் செயல் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் 2000 ஆண்டில் ஒரு புது சந்தன எண்ணெய் தொழிற்சாலை உருவாக்கும் செயல் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2000 நவம்பர் 13]

**43—**

### வ.உ.சி.யின் நூல்கள்

**வினா எண் 18926—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து-சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வ.உ.சி.யின் நூல்களை நாட்டுடமையாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேசிய எழுத்தாளர்கள் 15 பேர் எழுதிய நூல்கள் தமிழக அரசால் 15-8-1998 அன்று அரசுடமையாக்கி அறிவிக்கப்பட்டது. இவர்களுள் வ.உ. சிதம்பரனார் நூல்களும் அரசுடமையாக்கப்பட்டு அவருடைய மரபுரிமையர்களுக்கு ரூ.5 இலட்சம் பரிவுத் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது.

**44—**

### அய்யன் திருவள்ளுவர் ஆண்டு

**வினா எண் 35487—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தை மாதம் முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டு அய்யன் திருவள்ளுவர் ஆண்டு எனவும் சித்திரை மாதம் முதல் நாளை சித்திரை பெருநாள் எனவும் அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் ஆய்வில் உள்ளது.

**45—**

**பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் நிலை**

**வினா எண் 22883—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் தற்போது இலாபத்தில் இயங்குகிறதா? நட்டத்தில் இயங்குகிறதா?

(ஆ) கடந்த மூன்று ஆண்டுகளின் விவரம் என்ன?

(இ) நட்டத்தில் இயங்கினால் அதற்குரிய காரணங்கள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் தற்போது நட்டத்தில் இயங்குகிறது.

(ஆ) கடந்த மூன்றாண்டுகளின் நிதிநிலைமை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது:

| வருடம் | நிகர லாபம் | நிகர நட்டம் |
|---|---|---|
| 1996-97 | .. | (-)ரூ.1,88,14,988.97 (தணிக்கையின்படி) |
| 1997-98 | ரூ.87,24,956.47 | (உத்தேசமாக) |
| 1998-99 | .. | (-)ரூ.1,18,34,794.00 (உத்தேசமாக) |



2000 நவம்பர் 13]

(இ) நட்டத்திற்கான காரணங்கள்:

(1) தற்போது ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் 31-3-1999 முடிய ரூ.1319.00 இலட்சங்கள் மொத்த நட்டம் ஏற்பட்டுள்ளது. இது தேசிய பால்வள வாரியத்தின் திட்டக் கடனுக்கு செலுத்தப்படும் வட்டியால் ஏற்படுகிறது. ஈரோடு ஒன்றியத்தின் திட்டக் கடனுக்காக ரூ.1901.80 இலட்சங்கள் கணக்கிடப்பட்டு இதுவரை ரூ.1376.98 இலட்சங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

(2) ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு 31-3-1999 வரை ரூ.770.74 இலட்சங்கள் தேய்மான ஒதுக்கீடாக கணக்கிட்டுள்ளது. ஏறத்தாழ ரூ.50 இலட்சங்கள் ஒவ்வொரு வருடமும் தேய்மான ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

(3) கொள்முதல் செய்யப்படும் மொத்தப் பாலில் இரண்டில் ஒரு பாகம் பாலாக விற்பனை செய்யப்படுகிறது. மீதமுள்ள பால் உபபொருட்களாக மாற்றப்பட்டு சந்தை நிலவரத்திற்கேற்ப தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் மூலம் பெரும்பாலும் அடக்க விலையைக் காட்டிலும் குறைவாக விற்பனை செய்யப்படுகிறது.

(4) ஒன்றியத்திற்கென நடைமுறை மூலதனம் எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இதனால் ஒன்றியம் பால் பணம் பட்டுவாடாவிற்கு பொருட்களை ஈடு வைத்து கடன் பெற்று வருகிறது. இந்தக் கடனுக்கான வட்டி, ஒன்றியத்திற்கு நட்டத்தை ஏற்படுத்துகிறது.

**46—**

**பணி நிரந்தரம்**

**வினா எண் 27927—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் பணியாற்றும் தினக்கூலி தொழிலாளர்களின் பணியினை நிரந்தரப்படுத்த அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் பணிபுரியும் தினக்கூலி பணியாளர்கள் 177 பேரை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக சிறப்பு ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்களிடமிருந்து பிரேரணை பெறப்பட்டு, அதற்கான ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**47—**

**பணியிடங்களை ஏற்படுத்துதல்**

**வினா எண் 35306—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் தற்காலிகமாக பணிபுரியும் பணியாளர்களின் பணிகளை வரன்முறைப்படுத்தத் தேவையான 76 இளநிலை மஸ்தூர் பணியிடங்களைப் புதிதாக ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் தற்காலிகமாக பணிபுரியும் பணியாளர்களின் பணிகளை வரன்முறைப்படுத்தத் தேவையான 76 இளநிலை மஸ்தூர் பணியிடங்கள் தொடர்பாக சிறப்பு ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்களிடமிருந்து பிரேரணை பெறப்பட்டு, அதற்கான ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**48—**

**அரசாணை விவரம்**

**வினா எண் 26780—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(a) Is there any Government order passed by the Government by banning the assignment of Poramboke lands Podugal Grazing Poramboke in Hosur and Denkanikota Taluks?

(b) If so, the details thereof?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) உள்ளது.

(ஆ) தருமபுரி மாவட்டம், ஒசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை வட்டங்களில் மட்டுமல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்திலும் மேய்ச்சல் தரை, மேய்க்கால் மற்றும் மந்தைவெளி என்று ஒரே பயனுக்குள்ள நிலங்களை வெவ்வேறு விதமாகக் குறிக்கிறார்கள். மேய்ச்சல் தரை மற்றும் மந்தைவெளி என்று ஒரே மாவட்டத்தில் பிரித்துக் கூறப்பட்டாலும், மந்தைவெளியிலும் கால்நடைகள் மேயலாம். அங்கு அவை மேயாமல் தங்கி நின்றாலும் அது கால்நடைகளுக்குத் தேவையானதே என்று அரசு கருதுகிறது. எனவே மேய்ச்சல் தரைப் புறம்போக்குகளுக்கு விதிக்கப்பட்ட தடை மேய்க்கால் புறம்போக்கு, மந்தைவெளி ஆகியவற்றிற்கும் பொருந்தும் என்று அரசாணை (நிலை) எண் 115, வருவாய், நாள் 20-1-1988-ன்படி தடை செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. எனவே மேற்படி அரசாணை ஒசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை வட்டங்களுக்கும் பொருந்தும்.

**49—**

**அரசு புறம்போக்கு விவரம்**

**வினா எண் 34619—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், ஆண்டிப்பாளையம் ஊராட்சி, குளத்துப்புதூர் குளக்கரையை ஒட்டி அரசு புறம்போக்கு எவ்வளவு ஏக்கர் உள்ளது?

(ஆ) அவை யார் பொறுப்பிலுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

[2000 நவம்பர் 13

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் வட்டம் மற்றும் ஆண்டிப்பாளையம் ஊராட்சி குளத்துப்புதூர் குளக்கரையை ஒட்டி, அரசு புறம்போக்கு நிலம் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

50—

**நில ஒதுக்கீடு**

**வினா எண் 38701—திரு. நா. பெரியசாமி;** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், அரச்சலூர் உள்வட்டம், கொமராபாளையம் அரிசன காலனியில் வசிப்பவர்கள் காங்கயம் வட்டம் பழையகோட்டை கிராமத்தில் உபரி நில விநியோகத்தில் நில ஒதுக்கீடு பெற்று உள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.



[*1* ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

**அ. உடுக்குறியிடாத வினாக்கள்**

**(ஆ) விதி 51ன் கீழ் உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாதவையாக மாற்றப்பெற்றவை**

**(பதினாறாவது பட்டியல்)**

1—

**நூலகம்**

**வினா எண் 9798—திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர்-தீரன் சின்னமலை மாவட்டம், பள்ளப்பட்டி, அரவக்குறிச்சி ஆகிய இடங்களில் புதிய நூலகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) கரூர் மாவட்டம், பள்ளப்பட்டி என்ற இடத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் வேலம்பாடி நகராட்சியில் ஒரு கிளை நூலகமும், ஒரு ஊர்ப்புற நூலகமும் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. அரவக்குறிச்சியிலும் ஏற்கெனவே ஒரு கிளை நூலகம் செயல்பட்டு வருகிறது. எனவே, இவ்விடங்களில் புதிய நூலகம் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

2—

**பெண்கள் உயர்நிலைப் பள்ளி**

**வினா எண் 21367—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் :**

அரசாணை (நிலை) எண் 165, பள்ளிக் கல்வித் துறை, நாள் 14-6-2000-ல் 2000-2001 ஆம் கல்வி ஆண்டில், சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைத் தனியே பிரித்து மகளிர் உயர்நிலைப் பள்ளியாகச் செயல்பட ஆணையிடப்பட்டுள்ளது.

**3—**

**அலுவலக உதவியாளர் நியமனம்**

**வினா எண் 21659—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நூலகங்களில் நூலகர் விடுப்பில் சென்றால் பொது மக்களுக்கு நூலகம் பயன்படும் வகையில் அனைத்து கிளை நூலகத்திற்கும் அலுவலக உதவியாளர் ஒருவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நூலகர் விடுப்பில் சென்றால் பிற நூலகர்களைக் கூடுதல் பொறுப்பில் நியமிப்பதன் மூலமும், தினக்கூலி அடிப்படையில் பணியாளர்களை நியமிப்பதன் மூலமும் பொது மக்கள் நூலகங்களை பயன்படுத்துவதில் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்ளப்படுகிறது. தற்போது நிதித் துறை நிர்ணயித்துள்ள அலகின்படி பொது நூலகத் துறையில் அலுவலக உதவியாளர் பணியிடங்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளன எனக் கண்டறியப்பட்டுள்ளதால், பொது நூலகத் துறையில் உள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்களை நூலக உதவியாளர் எனப் பெயர் மாற்றம் செய்து நூலகங்களில், போதுமானவர்களை நியமிப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.



**4—**

**வகுப்பறை வசதிகள்**

**வினா எண் 22426—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்திலுள்ள கே.ஏ. நாச்சியப்பா அரசு மேல்நிலைப் பள்ளியில் போதுமான வகுப்பறை வசதிகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதியதாக வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் உள்ள கே.ஏ. நாச்சியப்பா அரசு மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுவது சார்பாக, இவ்வாண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே, சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்க, தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினரின் இசைவு பெறப்படின், இப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**5—**

**உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா 23452—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், வீரபாண்டி அரசு நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தரம் உயர்த்தப்படும்?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் ஒன்றியம், வீரபாண்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் கருத்துரு எதுவும் பெறப்படவில்லை. உயர்த்துவதற்கான நிதியும் செலுத்தப்படவில்லை.

6—

### கூடுதல் வகுப்பறைகள்

**வினா எண் 24547— திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, பொய்யுண்டார் கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, பொய்யுண்டார் கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட, சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்/சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து நிதி ஒதுக்க சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு கல்வி அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் இசைவு பெறப்படின் இப்பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

7—

### பள்ளிக்குக் கூடுதல் வசதி

**வினா எண் 24817—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம்; சமூகரெங்கபுரம் அரசு ரெட்டியார் உயர்நிலைப் பள்ளிக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதியிலிருந்து கூடுதல் கட்டடங்கள் (இரண்டு) கட்டி முடிக்கப்பட்டு (மின்சார இணைப்பின்றி) பல மாதங்கள் ஆகியும் பள்ளியிடம் ஒப்படைக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தாலுகா, சமூகரெங்கபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில், வகுப்பறை கட்டும் பணி முடிவுற்று, ஒப்படைக்கப்பட்டு, கடந்த ஜனவரி 1999-லிருந்து, வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தச் சமயத்தில், மின் பணிகள் நிறைவேற்றப்படவில்லை. இப்பொழுது, மேற்காணும் பணிக்கான ஒதுக்கீட்டின் நிலுவைத் தொகையான ரூ. 6798.00-க்கு மின் பணிகள் தொடங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு மின் பணிகள் 31-3-2000 அன்று முடிக்கப்பட்டுள்ளன.

8—

### அறிவொளி இயக்கம்

**வினா எண் 25078—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அறிவொளி இயக்கத்தில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களது பணியால் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள விளைவு என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அறிவொளி இயக்கம் ஒரு நிரந்தரமான இயக்கமல்ல. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் அத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். தமிழகத்தில் 2224 தற்காலிகப் பணியாளர்கள் அறிவொளி

இயக்கத்தின் தொடர்ச்சியான வளர்கல்வி இயக்கத்தில் ஈடுபட்டுள்ளனர். தமிழ்நாட்டில் நடத்தப்படும் எழுத்தறிவு இயக்கத்தில் கிராமங்களில் 15-35 வயதினருக்குட்பட்ட எழுத்தறிவற்றவர்களுக்கு எழுத்தறிவிக்கும் பணி இவர்களால் மேற்கொள்ளப்பட்டது. இதில் ஈடுபட்ட தொண்டர்கள் அனைவரும் அவ்வியக்கம் அந்த மாவட்டத்தில் முடிவுற்றவுடன் பணியிலிருந்து விடுவிக்கப்படுவார்கள்.

**9—**

**கோளரங்கம்**

**வினா எண் 26427—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழ்நாட்டில் கோளரங்கம் எந்தெந்த ஊர்களில் உள்ளது?

*(ஆ)* இதன் பயன் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ)* தற்சமயம், சென்னை கோட்டூர்புரத்தில், பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்திலும் மற்றும் திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மையத்திலும் கோளரங்கங்கள் இயங்கி வருகின்றன.

*(ஆ)* இரவு வானத்தை கோளரங்கத்தின் அரங்கில் உருவாக்கி, வானியல் கருத்துக்களையும், விண்ணியல் சிறப்பு நிகழ்ச்சிகளையும் மக்களுக்கு, குறிப்பாக மாணவர்களுக்கு எளிதாகப் புரியும் வண்ணம் விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. மூட நம்பிக்கைகளை அகற்றி அறிவியல் சார்ந்த கருத்துக்களை பரப்ப கோளரங்குகள் உதவுகின்றன. மேலும், வானியல், வான் இயற்பியல், விண்பயணம், செயற்கைக் கோள்கள் இவைபற்றியும் அவ்வப்போது விளக்கங்கள் கொடுத்து அறிவியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த உதவுகின்றன.

**10—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 26866—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* திருப்பூர், மங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியில் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை நிலவுவதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், அதைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* திருப்பூர், மங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஆழ்குழாய்க் கிணற்றில் இருந்து நீர்மூழ்கி மின்மோட்டார் வைத்து பள்ளியில் உள்ள தரைமட்டத் தொட்டிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**11—**

**கட்டட வசதி**

**வினா எண் 27638—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பர்கூர் தொகுதி, கொடமாண்டப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டட வசதி இல்லாததை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது கட்டட வசதி ஏற்படுத்தித் தர இயலும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம், பர்கூர் தொகுதி, கொடமாண்டப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி தற்போது ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளிக்கென இடவசதி பெற உரிய நடவடிக்கை எடுக்குமாறும், நிலம் பள்ளிக்கு கிடைக்கப்பெறின் சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கி, கூடுதல் கட்டட வசதி செய்து கொடுக்க தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

[2000 நவம்பர் 13

12—

**மேல்நிலைப் பள்ளி**

**வினா எண் 29723—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பெரும்பாலை அரசு உயர்நிலைப் பள்ளியை நடப்பாண்டில் மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில், தருமபுரி மாவட்டம், பெரும்பாலை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

13—

**தேர்வு மையங்கள்**

**வினா எண் 34663—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நடைபெறும் +2, எஸ். எஸ். எல். சி. தேர்வு மையங்களில் 100-க்கு குறைவாக மாணவ/மாணவிகள் தேர்வு எழுதும் மையங்களை அருகிலுள்ள தேர்வு மையங்களில் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

மேல்நிலை மற்றும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு மையங்களில் 100-க்கும் குறைவாக மாணவ/மாணவியர் ஒரே ஊரில் (நகர்ப்புறங்களில்) அருகருகில் தேர்வெழுதும்பட்சத்தில் இரண்டு தேர்வு மையங்களை ஒரே தேர்வு மையமாக இணைத்து மாணவர்களுக்கு எவ்விதச் சிரமமுமின்றி தேர்வுகளை நல்ல முறையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 13]

14—

**நூலகம்**

**வினா எண் 34835—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், வெள்ளரிவெள்ளியில் ஊர்ப்புற நூலகம் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், வெள்ளரிவெள்ளியில் ஊர்ப்புற நூலகம் திறப்பதற்கென விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் ஏதும் நிறைவு செய்யப்படவில்லையாதலால், இவ்வூரில் ஊர்ப்புற நூலகம் திறக்க இயலவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

15—

**பள்ளிக்கு வசதிகள்**

**வினா எண் 34970—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், இடுவம்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக்கூடம், போதுமான வகுப்பறைகள் இல்லாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அந்த வசதிகள் செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர், இடுவம்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளி ஊராட்சி ஒன்றியக் கட்டடத்தில் நடைபெற்று வருகிறது. இப்பள்ளிக்குச்

சொந்தமான நிலம் எதுவும் இல்லாத காரணத்தால் இப்பள்ளிக்கு ஆய்வுக்கூடம் மற்றும் வகுப்பறை வசதிகள் செய்து தர இயலவில்லை. இப்பள்ளிக்கு அருகில் இடும்பன் குமாரசாமி கோவில் என்னும் கோவில் உள்ளது. இக்கோவிலுக்குச் சொந்தமான 10 ஏக்கர் நிலத்தைப் பள்ளிக்கு சொந்தமாக்கிக் கொள்வதற்கான பணிகள் இப்பள்ளியின் வளர்ச்சிக் குழுத் தலைவர் மூலம் நடவடிக்கையில் உள்ளது. மேற்படி நிலம் இப்பள்ளியின் பெயருக்கு மாற்றப்படின் இப்பள்ளிக்கான கட்டட வசதி, விளையாட்டிட வசதி மற்றும் பிற வசதிகள் செய்யவியலும்.

**16—**

### கிராமங்களில் நூலகம்

**வினா எண் 35531—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், முத்துகிருஷ்ணாபேரி கிராமத்தில் பகுதிநேர நூலகம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், முத்துக்கிருஷ்ணாபேரி கிராமத்தில் பகுதிநேர நூலகம் திறக்கப்படுவதற்கான கோரிக்கை பெறப்பட்டுள்ளது. ஆனால் இதற்கான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாததால் அவ்வூரில் பகுதிநேர நூலகம் திறக்க இயலவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**17—**

### தமிழாசிரியர்கள் நியமனம்

**வினா எண் 35538—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



*தமிழகத்தில் அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலிருந்து நடுநிலைப் பள்ளி வரை (1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை) தமிழ் மொழியைச் செம்மையாக மாணவர்கள் கற்றிட தமிழாசிரியர்கள் நியமனம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தொடக்கப் பள்ளிகளில் மொழிப் பாடங்களில் அடிப்படைத் திறனே போதுமானது என்பதாலும், இதற்கு இடைநிலை ஆசிரியர்களே தகுதியானவர்கள்தான் என்ற நிலையிலும், தனியாக தமிழாசிரியர் நியமனம் செய்யும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**18—**

### நூலகம் அமைத்தல்

**வினா எண் 35539—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம் மேற்கு ஊராட்சியில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை தொழிலாளர்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமத்தினர் பயன்பெறும் வகையில் சர்க்கரை ஆலை வளாகத்தில் ஒரு நூலகம் அமைக்க அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம் மேற்கு ஊராட்சியில் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை வளாகத்தில் ஒரு நூலகம் அமைக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் நிறைவு செய்யாததால், அவ்விடத்தில் நூலகம் அமைக்க இயலவில்லை.

**19—**

### நூலகம்

**வினா எண் 35558—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

தஞ்சாவூர் மாவட்டம், இனாத்துக்கான்பட்டி ஊராட்சி, துலுக்கன்பட்டி கிராமத்திலும், மருங்குளம் ஊராட்சியிலும் நூலகம் ஒன்று அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

பொது நூலகச் சட்டம் 1948-ன்படி 1000-க்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட ஊர்களில் பகுதிநேர நூலகங்களும், 5000-க்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட ஊர்களில் கிளை நூலகங்களும் திறக்கலாம். தஞ்சாவூர் மாவட்டம், இனாத்துக்கான்பட்டி ஊராட்சி, துலுக்கன்பட்டி கிராமத்தின் மக்கள் தொகை 3,881, மருங்குளம் ஊராட்சியின் மக்கள் தொகை 3,319 ஆகும். எனவே மக்கள் தொகையின் அடிப்படையில் இவ்வூர்களில் பகுதிநேர நூலகங்கள் திறக்கலாம். எனினும், பகுதிநேர நூலகம் திறப்பதற்கான நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் பூர்த்தி செய்யாததால் அவ்வூர்களில் நூலகங்கள் திறக்க இயலவில்லை.

**20—**

**தொழில் நுட்பக் கல்லூரி**

**வினா எண் 36226—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதி, ஒரத்தநாடு பகுதியில் அல்லது திருவோணத்தில் ஒரு தொழில்நுட்பக் கல்லூரி நடப்பு ஆண்டில் தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

**21—**

**வாக்குச் சாவடி**

**வினா எண் 36429—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதிக்கு உட்பட்ட குருங்குளம் மேல்பாதி ஊராட்சி, அற்புதபுரம் வாக்குச் சாவடியை, அதிகமாக வாக்காளர்கள் உள்ள அரசு உதவிபெறும் சர்க்கரை ஆலை உயர்நிலைப் பள்ளிக்கு வரும் பொது தேர்தல் முதல் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

பொதுத் தேர்தல்/இடைத்தேர்தல்/வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் ஆகியவை நடைபெறும்போது வாக்குச் சாவடிகளைப் புதிதாக அமைத்தல்/இடமாற்றம் செய்தல் முதலான கருத்துருக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்டு, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதல் பெற்றபின்னரே மாற்றியமைக்க முடியும்.

**22—**

**நடுநிலைப் பள்ளியில் வாக்குச் சாவடி**

**வினா எண் 36430—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், இராமநாதபுரம் ஊராட்சி, மானோஜிபட்டி பகுதியைச் சேர்ந்த வாக்காளர்களுக்கு வரும் பொதுத் தேர்தல் முதல் மானோஜிப்பட்டி நடுநிலைப் பள்ளியிலேயே வாக்குச் சாவடி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

பொதுத் தேர்தல்/இடைத்தேர்தல்/வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் ஆகியவை நடைபெறும்போது வாக்குச் சாவடிகளைப் புதிதாக அமைத்தல்/இடமாற்றம் செய்தல் முதலான கருத்துருக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்டு இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்திய தேர்தல் ஆணையத்தின் ஒப்புதல் பெற்றபின்னரே, புதிய வாக்குச் சாவடிகள் அமைக்கவோ அல்லது மாற்றங்கள் செய்யவோ இயலும்.

[2000 நவம்பர் 13

**23—**

**பாடப்புத்தக வெளியீடு**

**வினா எண் 36655—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மாணவர்களுக்காக மலிவு விலையில் பாடப்புத்தகங்கள் தயாரிப்பதால் அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுகின்றதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு இழப்பு கடந்த 1998-99ல் ஏற்பட்டது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாணவர்களுக்கு மலிவான விலையில் தரமான புத்தகங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காக தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் உருவாக்கப்பட்டது. இதில் இலாப நட்ட நோக்கம் ஏதும் கிடையாது. மேலும், ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை அனைத்து மாணவர்களுக்கும், 6 முதல் 8 வகுப்பு வரை பயிலும் மதிய உணவு உண்ணும் மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கான செலவையும் அரசே ஏற்றுக்கொண்டுள்ளது. இதன் காரணமாக ஏழை எளிய மாணவர்களுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்கள் வழங்குவது தொடர்பான இலாப நட்டக் கணக்குகளைப் பார்த்து செயல்படுவது பொருத்தமுடையதல்ல. 1998-99-ம் ஆண்டிற்கு அரசு விநியோகம் செய்த இலவசப் புத்தகங்களின் மதிப்பு (உற்பத்திச் செலவின் மதிப்பு) ரூ. 20,08,29,975 ஆகும்.

**24—**

**நூலகம் அமைத்தல்**

**வினா எண் 37363—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரி ரெங்காபுரம் கிராமத்தில் நூலகம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரி ரெங்காபுரம் கிராமத்தில் நூலகம் திறப்பதற்கான கீழ்க்கண்ட நிபந்தனைகளை அவ்வூர் பொது மக்கள் நிறைவு செய்து தந்தால் அவ்வூரில் பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்:

(1) நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

(2) பின்னர் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப் பதிவு செய்து கொடுக்க வேண்டும்.

(3) ரூ. 2000 மதிப்புள்ள தளவாடப் பொருட்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

(4) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(5) ரூ. 1000 செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**25—**

**புதிய பாடத் திட்டங்கள்**

**வினா எண் 37993—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர்-6, காந்தி நகரிலுள்ள ஆக்சிலியம் கல்லூரியில் புதிய பாடத் திட்டங்கள் ஆரம்பிக்க அரசுக்குக் கோரிக்கை வரப் பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு இது குறித்து எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(இ) புதிய பாடத் திட்டங்கள் இந்நிதியாண்டில் அனுமதிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) பெறப்படவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

(இ) கேள்வி எழவில்லை.

**26—**

**புதிய பாடங்கள்**

**வினா எண் 37994—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் டி.கே.எம். கல்லூரியில் புதிய பாடத் திட்டங்கள் தொடங்கிட அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(இ) புதிய பாடத் திட்டங்கள் இவ்வாண்டு ஏற்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

(இ) கேள்வி எழவில்லை.

**27—**

**பல்தொழில் நுட்பப் பயிலகம்**

**வினா எண் 36908—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிக்கோட்டை பகுதியில் ஒரு பல்தொழில் நுட்பப் பயிலகம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

D V211,31'P00 P00-111-2





விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

**28—**

**விபத்து சிகிச்சை மையம்**

**வினா எண் 2575—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி புறவழிச்சாலைப் பகுதியில் விபத்து சிகிச்சை மையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே அவசர விபத்து சிகிச்சைப் பகுதி செயல்பட்டுவருவதால், கிருஷ்ணகிரி புறவழிச்சாலையில் விபத்து சிகிச்சை மையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**29—**

**அவசர சிகிச்சைப் பிரிவு**

**வினா எண் 3994—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் பகுதி தேசிய நெடுஞ்சாலையில் அதிக விபத்துக்கள் ஏற்படுவதால், தேசிய நெடுஞ்சாலையில் புதியதாக அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்று தொடங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டிவனம் பகுதி தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி உள்ள திண்டிவனம் அரசு மருத்துவமனையில் அவசர விபத்து சிகிச்சைப் பிரிவு தொடங்க ஆணையிடப்பட்டுள்ளது. இச்சிகிச்சைப் பிரிவு விரைவில் செயல்படத் தொடங்கும்.

**30—**

**சலவை இயந்திரம்**

**வினா எண் 5621—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், ஈரோடு அரசு மருத்துவமனையில் நோயாளிகளின் துணிகளை சலவை செய்யும் இயந்திரம் செயல்படுகிறதா?

(ஆ) இல்லை எனில், அது எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் சலவை இயந்திரம் நிறுவுவதற்கு அரசு ஏற்கெனவே அனுமதி வழங்கியுள்ளது. சலவை இயந்திரத்தை நிறுவுவதற்கான கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. சலவை இயந்திரம் வாங்கப்பட்டுள்ளது. அதனை நிறுவும் பணி சென்னை பொதுப் பணித் துறை தொழிற்கூடத்தின் மூலம் விரைவில் முடிக்கப்படும்.

**31—**

**மின் விளக்கு**

**வினா எண் 5686—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) ஊராட்சிப் பகுதிகளில் புதிய மின் கம்பங்கள் போட்டு மின் விளக்கு அமைக்க மின்வாரியம் ஊராட்சி மன்றங்களிலிருந்து கட்டணம் வசூலிக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியம், ஊராட்சிப் பகுதிகளில் புதிய மின் கம்பங்கள் போட்டு மின் விளக்குகள் அமைக்க, வைப்பு நிதி திட்டத்தின்கீழ், புதிய தெருவிளக்குகள் அமைக்க ஆகும் முழுச் செலவினையும் இத்திட்டத்தின்கீழ் செலுத்த முன்வந்தால் புதிய தெரு விளக்குகள் அமைத்து மின் இணைப்பு முன்னுரிமையில் மின் கட்டண விகிதம் II-ன்கீழ் வழங்கப்பட்டு வருகிறது.

**32—**

**மருத்துவமனை விரிவாக்கம்**

**வினா எண் 14910—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள்நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

[2000 நவம்பர் 13

33—

### பரிசோதனை சாதனங்கள்

**வினா எண் 16630—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் சானடோரியம் நெஞ்சக நோய் மருத்துவமனைக்கு எய்ட்ஸ் பரிசோதனை சாதனங்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள்நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் தாம்பரம் சானடோரியம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனைக்கு 1998-99-ம் ஆண்டில் ரூ.29.00 இலட்சம் செலவிலும் மற்றும் 1999-2000-ம் ஆண்டில் ரூ.58.00 இலட்சம் செலவிலும், ஆகமொத்தம் ரூ.87.00 இலட்சம் செலவில் எய்ட்ஸ் நோய் பரிசோதனை சாதனங்கள், உபகரணங்கள், மருந்துப் பொருட்கள் ஆகியன தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மைய திட்ட இயக்கத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் இம் மருத்துவமனைக்கு எய்ட்ஸ் நோய் பரிசோதனை சாதனங்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

34—

### சிறப்பு மருத்துவப் பகுதிகள்

**வினா எண் 16640—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் அரசு மருத்துவமனையில் பல், கண், எலும்பு முறிவு போன்றவற்றுக்கு சிறப்பு மருத்துவப் பகுதிகளை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள்நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, ஓமலூர் அரசு மருத்துவமனையில் பல், கண், எலும்பு முறிவு போன்றவற்றிற்கு சிறப்பு மருத்துவப் பகுதிகளை ஏற்படுத்த நிதி நிலைமைக்கேற்ப இனிவரும் பகுதி-2 திட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்வது குறித்து கவனத்தில் கொள்ளப்படும்.

35—

### மின் கட்டணம்

**வினா எண் 19466—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ஆந்திர மின் வாரியம் மாதாந்திர நிரந்தரக் கட்டணம் செலுத்தாமல் நிலுவையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்தொகையை வசூலிக்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள்நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

36—

### தடுப்புச் சுவர்

**வினா எண் 19519—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) சேலம் மாவட்டம், பூலாம்பட்டி பேரூராட்சி, காவிரி ஆற்றின் குறுக்கே, நெரிஞ்சிப்பேட்டை என்ற இடத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் கீழ்மேட்டூர் நீர் மின் திட்டம் பேரேஜ் என்ற துணை மின் நிலையம் அமைத்து இயங்கி வருவதால், பூலாம்பட்டி மயானம், கழிப்பிடம், பூங்காவில் அமைக்கப்பட்ட மீன் தொட்டிகள், பனங்காடு என்ற இடத்தில் சில வீடுகள் மூழ்கி விட்டன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தடுப்புச் சுவர் கட்டிக்கொடுத்து பூலாம்பட்டி பேரூராட்சிப் பகுதியினைத் தண்ணீரால் ஏற்படும் அபாயத்தில் இருந்து காப்பாற்ற அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள்நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ரூ.22.58 இலட்சத்தில் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

**37—**

### தொழில் நுட்பங்கள்

**வினா எண் 22487—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தற்பொழுது முன்னேறிய நாடுகள் எய்ட்ஸ் நோயிற்கான மருத்துவ ஆராய்ச்சியில் பெற்றிருக்கும் தொழில் நுட்பங்களைப் போல், தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவர்களும் பெற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

முன்னேறிய நாடுகளில் எய்ட்ஸ் நோய் குறித்து மேற்கொள்ளும் ஆராய்ச்சி நுட்பங்கள், தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவர்களுக்கும் அளிப்பதற்கு மிக அதிக அளவில் செலவு ஆகும். ஆகவே



2000 நவம்பர் 13]

நிதிநிலைமைக்கும், வசதிகளுக்கும் ஏற்ப மருத்துவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்படுகின்றது.

**38—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 23782—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், சிவநாடானூர் ஊராட்சி, மடத்தூரில் ஆரம்ப துணைச் சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள்நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மடத்தூர் கிராமம் சிவநாடானூர் துணைச் சுகாதார மையத்தைச் சார்ந்ததாகும். இது அரியப்பபுரம் ஆரம்ப சுகாதார நிலைய எல்லைக்குட்பட்டது. மடத்தூர் கிராமத்திற்கு 6 கி.மீ. தொலைவில் அரியப்பபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும், 9 கிலோ மீட்டர் தொலைவில் தென்காசி அரசு மருத்துவமனையும் உள்ளதால், இங்கு ஆரம்ப துணைச் சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகளில்லை.

**39—**

### துணை மின் நிலையம்

**வினா எண் 24712—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, திருவாரூர் மாவட்டம், குடவாசல்-சேங்காலிபுரம் 110 துணை மின் நிலையம் எப்போது செயல்படத் தொடங்கும்?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

குடவாசல் 110/11கே.வி. துணை மின் நிலையப் பணிகள் முடிக்கப்பட்டு, 18-8-1999 அன்று இயக்கி வைக்கப்பட்டுவிட்டது.

**40—**

**சர்க்கரை நோய்**

**வினா எண் 25988—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கரை நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்நோய் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே உருவாக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள்நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அவ்வப்போது பொது இடங்களில் முகாம்கள் போட்டு மக்களுக்கு நீரிழிவு நோய் பற்றிய அறிவுரைகள் எடுத்துரைக்கப்படுகின்றன. அரசு மருத்துவமனைகளுக்கு வருகை தரும் நோயாளிகளுக்கு நீரிழிவு நோய் பற்றிய குறிப்புகள் வழங்கப்படுகின்றன. அவ்வப்போது, தொடர் நிலை மருத்துவக் கல்வி நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்கம் நடத்துவதன் மூலம் மருத்துவர்கள், மருத்துவக் கல்வி மாணவர்கள் ஆகியோருக்கு நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துதல், உரிய சிகிச்சை அளித்தல் மற்றும் மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்க மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்த அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.



2000 நவம்பர் 13]

**41—**

**தனி இயக்குனரகம்**

**வினா எண் 25993—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல் மருத்துவக் கல்விக்கென்று தனி இயக்குனரகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் பல் மருத்துவக் கல்விக்கென்று தனி இயக்குனரகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**42—**

**தடுப்பு ஊசிகள்**

**வினா எண் 27092—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக எத்தனை வகையான நோய்த் தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன?

(ஆ) அதற்காக ஒரு வருடத்திற்கு எவ்வளவு தொகை அரசு செலவிடுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு மருத்துவமனைகள் மற்றும் நகர சுகாதார நிலையங்கள் மூலமாக கீழ்க்காணும் நோய்களுக்குத் தடுப்பு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன:-

1. தொண்டை அடைப்பான்

2. கக்குவான் இருமல்

3. இரண ஜன்னி (சிசு நோய்)

4. இளம்பிள்ளை வாதம்

5. குழந்தைப் பருவ காச நோய்

6. தட்டம்மை

(ஆ) 1998-99 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட செலவின் உத்தேச மதிப்பீடு ரூபாய் 12.17 கோடி ஆகும். இந்த மதிப்பீடு அந்தந்த ஆண்டுக்கான தேவையைப் பொறுத்து மாறுபடும். இந்த செலவினங்களை மைய அரசே ஏற்றுக்கொள்கிறது.

**43—**

**எய்ட்ஸ் நோய்கள்**

**வினா எண் 27099—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் பகுதியில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிக சதவீதம் உள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

(இ) அதற்காக அரசு மேற்கொள்ளப்போகும் தடுப்பு நடவடிக்கைகள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள்நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) நாமக்கல் பகுதியில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிக சதவீதம் இல்லை. எனினும், இந்த எய்ட்ஸ் நோயை முற்றிலும் தடுப்பதற்கான சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் கட்டுப்பாட்டுப் பணிகள்



தீவிரமாக்கப்பட்டுள்ளன. மற்றும், இம்மாவட்டத்தில் குடும்ப நலவாழ்வு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு மக்களிடையே எய்ட்ஸ் நோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**44—**

**தனி சிகிச்சைப் பிரிவு**

**வினா எண் 27103—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி வட்டம், அரசு மருத்துவமனையில் பாம்புக் கடியில் இறந்து போகும் பொதுமக்களுக்காக தனி சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி வட்டம், அரசு மருத்துவமனையில் பாம்புக் கடியால் இறந்து போகும் பொதுமக்களுக்காக தனி சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், ஒவ்வொரு அரசு மருத்துவமனையிலும் பாம்பு கடித்து சிகிச்சைக்காக வரும் நோயாளிக்கு தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**45—**

**மருத்துவமனை**

**வினா எண் 27111—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி, தேசிய நெடுஞ்சாலை 47-ல் அடிக்கடி அதிக விபத்துக்கள் நேர்வதால், ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**46—**

**தடுப்பு ஊசி இலவசம்**

**வினா எண் 27119—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டைபாய்டு நோய்த் தடுப்பு ஊசியை அரசே இலவசமாகப் போட முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) டைபாய்டு தடுப்பூசி போடுவதால் எதிர்ப்பு சக்தி போதிய அளவிற்கு கிடைக்கப் பெறுவதில்லை என்பதாலும், எதிர்ப்புத் தன்மை குறுகிய கால அளவிற்கு கிடைக்கப் பெறுவதாலும், மைய அரசு, டைபாய்டு நோய்த் தடுப்பூசியை தேசிய தடுப்பு மருந்து அட்டவணையிலிருந்து (N.I.S.) நீக்கிவிட்டது. எனவே இதனை செயல்படுத்துவது உசிதமானதல்ல.

**47—**

**பொது மருத்துவமனை**

**வினா எண் 27124—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியத்தில் உள்ள சித்தூரில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தை பொது மருத்துவமனையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியத்தில் உள்ள சித்தூரில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தினை பொது மருத்துவமனையாக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**48—**

**குடும்ப நல சிகிச்சைக் கட்டடம்**

**வினா எண் 27305—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் கட்டப்பட்ட குடும்ப நல சிகிச்சைக் கட்டடம் பல ஆண்டுகளாக திறக்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பரமக்குடியில் கட்டப்பட்ட குடும்ப நல சிகிச்சை கட்டடம் 24-3-2000 அன்று திறக்கப்பட்டு தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**49—**

**24 மணி நேர மருத்துவமனை**

**வினா எண் 28010—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) பர்கூர் 24 மணி நேர மருத்துவமனையை மருத்துவமனையாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பர்கூர் 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையத்தினை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**50—**

**கூடுதல் கட்டடம்**

**வினா எண் 28123—திரு. ஆர். தமிழ்ச்செல்வன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**51—**

**மருத்துவமனை**

**வினா எண் 28333—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி, பண்டஅள்ளி, ஏரியூர், பி. அக்ரஹாரம், பெரும்பாலை, நாகதாசம்பட்டி ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு நடப்பாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் குறிப்பிட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனையாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பேதும் நடப்பாண்டில் இல்லை.

**52—**

**தலைமை மருத்துவமனையை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 28343—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தலைமை மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை

**53—**

**கணினி மூலம் மருத்துவ சிகிச்சை**

**வினா எண் 28539—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி வட்டத்திலுள்ள அரசு மருத்துவமனையில் கணினியைப் பயன்படுத்தி, நெடுந்தொலைவிற்கு அப்பாலுள்ள மருத்துவ வல்லுநர்களிடமிருந்து அறிவுரை பெற்று சிகிச்சை செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி அரசு மருத்துவமனையில் கணினியைப் பயன்படுத்தி தொலைத் தொடர்பு வழி மருத்துவம் அறிமுகப்படுத்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**54—**

## நடமாடும் மருத்துவமனை

**வினா எண் 28543—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசின் "வாழ்வொளி திட்டத்தின்" மூலம் பள்ளிச் சிறார்களின் உடல் நலம் பேணிக்காக்க, வாரம் ஒரு முறை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் மருத்துவர்கள் பள்ளிக்குச் சென்று, மாணவர்களை பரிசோதித்து மருந்துகள் வழங்க நடமாடும் மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழக அரசின் "வாழ்வொளித் திட்டத்தின்" மூலம் பள்ளிச் சிறார்களின் உடல் நலம் பேணிக்காக்க வாரத்தில் வியாழக்கிழமை அல்லது விடுமுறையானால் வெள்ளிக்கிழமை "வாழ்வொளித் திட்ட" நாளாக கடைப்பிடிக்கப்படுகிறது. அன்று அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அருகிலுள்ள ஆரம்ப



2000 நவம்பர் 13]

சுகாதார நிலைய மருத்துவர், சுகாதார செவிலியர், சுகாதார ஆய்வாளர் அடங்கிய குழு பரிசோதித்து உரிய மருந்துகளைக் கொடுப்பதுடன், தேவை இருப்பின் மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப்பட்டு மாவட்ட மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படுகின்றனர். எனவே, நடமாடும் மருத்துவமனை அமைத்து இப்பணியை மேற்கொள்ள செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**55—**

## மருத்துவமனை இடமாற்றம்

**வினா எண் 28561—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையை மாற்றும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையினை மாற்றும் செயற்குறிப்பேதும் அரசின் ஆய்வில் இல்லை.

**56—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 28665—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா? .

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் வரையறையின்படி, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியிலுள்ள அஜ்ஜனஅள்ளியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகளில்லை.

**57—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 28843—திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதியைச் சேர்ந்த தென்மலைக் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் வருவதற்கு எல்லா முயற்சி எடுத்தும், இதுவரை காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தென்மலை கிராம மக்கள்தொகை 2,863 ஆகும். இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. வாசுதேவநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சார்ந்தது. இக்கிராமத்திற்கு 10 கிலோ மீட்டர் தொலைவில் இராயகிரி ஆரம்ப சுகாதார நிலையமும், 10 கிலோமீட்டர் தொலைவில் சிவகிரி அரசு மருத்துவமனையும் செயல்படுகிறது. எனவே, இக்கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.

**58—**

**மின் வசதி**

**வினா எண் 28876—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், கோட்ட கவுண்டம்பட்டி புது காலனியிலுள்ள சுமார் 300 வீடுகளுக்கு மின் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கட்டி முடிக்கப்பட்ட 200 வீடுகளுக்கு ஏற்கெனவே மின் இணைப்பு கொடுக்கப்பட்டுவிட்டது. 210 வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வீடுகள் கட்டி முடிக்கப்பட்டபின், உரிய விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் மின் இணைப்புகள் வழங்கப்படும்.

**59—**

**அவசர சிகிச்சைப் பிரிவு**

**வினா எண் 28916—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தின் மத்தியில் பத்மநாபபுரம் அரசு மருத்துவமனை தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி உள்ளதால், அங்கு அவசரச் சிகிச்சைப் பிரிவு இயங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டம் மத்தியிலுள்ள பத்மநாபபுரம் அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவு தொடங்கும் கருத்துரு ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**60—**

**காற்றாலைகள்**

**வினா எண் 29016—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்வாரியத்தின் 19 மெ.வா. திறன் கொண்ட காற்றாலைகள் விதிமுறைக்குட்பட்ட 30 விழுக்காடு ரியாக்டிவ் சக்தியை எடுத்துக்கொண்டு இயங்குகின்றனவா?

(ஆ) அவ்வாறு இல்லையெனில், அதிகப்படியான ரியாக்டிவ் சக்தியை எடுத்துக்கொள்ளுவதை தடுக்க தமிழ்நாடு மின்வாரியம் தகுந்த நடவடிக்கையை எடுக்குமா?

(இ) எப்போது அது நடைமுறைப்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மின்வாரியத்தின் 19 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலைகளில் நிறுவப்பட்டுள்ள கெபாசிட்டர்கள் பழையன ஆகிவிட்டதாலும் பழுதடைந்துவிட்டதாலும் 30 விழுக்காட்டிற்கு மேல் ரியாக்டிவ் சக்தியை எடுத்துக்கொள்கின்றன.

(ஆ) அண்ணா பல்கலைக் கழகத்தின் ஆலோசனையின்படி தமிழ்நாடு மின்வாரிய காற்றாலைகளில் மின்னாக்கிகளின் மின் சக்தியில் 50 விழுக்காடு கெபாசிட்டர்களை நிறுவவும் பழுதடைந்த கெபாசிட்டர்களை நீக்கி புது கெபாசிட்டர்களை நிறுவி ரியாக்டிவ் சக்தி இழப்பைக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(இ) புது கெபாசிட்டர்களை வாங்குவதற்கும் நிறுவுவதற்கும் 2000-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



**61—**

**திருத்தப்பட்ட விலை**

**வினா எண் 29017—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்வாரியக் கட்டமைப்பின் பளுவைக் குறைக்கும் பொருட்டு, தமிழ்நாட்டிலுள்ள காற்றாலைகளால் எடுக்கப்படும் 800 மெகாவாட் ரியாக்டிவ் மின் சக்திக்கான தொகையை (அபராதம்) தமிழ்நாடு மின்வாரியம் உயர்த்துமா?

(ஆ) ஆம் எனில், எந்த அளவுக்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது மற்றும் இது எப்பொழுது முதல் அமல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஒரு யூனிட் ரியாக்டிவ் மின் சக்திக்கு ரூ.0.30 பைசாவிற்கு பதிலாக ரூ.1.00 என்று காற்றாலை நிறுவனர்களிடம் இருந்து திருத்தப்பட்ட விலை ஜூலை 2000 மாதத்திலிருந்து வசூலிக்கப்படுகிறது.

**62—**

**மருத்துவ வசதி**

**வினா எண் 29106—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சர்க்கரை நோயாளிகளுக்கு முறையாக இன்சுலின் மாத்திரை வழங்குவதில்லை என்ற புகார் அரசிற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீரிழிவு நோய்க்கு இன்சுலின் மாத்திரை என தனியாக மாத்திரை ஏதும் இல்லை. இன்சுலின் என்ற ஊசி மருந்து உள்ளது. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நீரிழிவு நோய்க்கான சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு ரடோல்பூட்டாமை கிளைபென்கிளைமேடு, மெட்பார்மின் மற்றும் கிளிசிபைடு ஆகிய மாத்திரைகள் இரு வாரங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகின்றன. இந்த மாத்திரைகள் தங்கு தடையின்றி எப்பொழுதும் நீரிழிவு நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

**63—**

**கட்டடங்கள்**

**வினா எண் 29556-ஏ—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்ட அரசு மருத்துவமனையில் உள்ள பல கட்டடங்களில் நோயாளிகள் படுக்கை போட தகுதியற்றவையாகவுள்ளவற்றை இடித்துவிட்டுப் புதிய வார்டு கட்டடங்கள் கட்ட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் உள்ள பழைய கட்டடங்களை இடித்துவிட்டு 136 படுக்கைகளுடன் 2 மாடி புதிய கட்டடம் கட்டும் கருத்துரு மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.



2000 நவம்பர் 13]

**64—**

**குளிர்சாதன வசதி**

**வினா எண் 29582—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் வட்டம், குரோம்பேட்டை வட்ட மருத்துவமனையிலுள்ள பிணவறைக்கு குளிர்சாதன வசதி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் வட்டம், குரோம்பேட்டை அரசு மருத்துவமனையின் பிணவறையில் குளிர்சாதன வசதி பணிகள் முடிக்கப்பட்டு பிணவறை கட்டடம் உபயோகத்தில் உள்ளது.

**65—**

**கட்டட வசதி**

**வினா எண் 29623—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் இயங்கிவரும் துணை இயக்குநர் அலுவலகம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[2000 நவம்பர் 13

விடை—

-மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) எல்லா அரசு அலுவலகங்களும் சொந்தக் கட்டடத்தில் இயங்குவது சாத்தியமில்லை. பரமக்குடி ஒரு சுகாதார வட்டம் ஆகும். வருவாய் மாவட்டங்கள் அமைக்கப்படும்பொழுது அரசு அலுவலகங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்க நிதி நிலைமைக்கேற்ப, வழிவகை செய்யப்படுகின்றது. சுகாதார மாவட்டங்களில் இயங்கும் பொது சுகாதார அலுவலகங்களுக்கு இது சாத்தியமில்லை.

66—

மருந்தாளுநர் பணியிடங்கள்

**வினா எண் 29885—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவமனைகளில் காலியாகவுள்ள மருந்தாளுநர் பணியிடங்களை நிரப்புவது தடை செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், தடையை விலக்கி மருந்தாளுநர் பணியிடங்களை பூர்த்தி செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலைவாய்ப்பகங்கள் மூலம் நிரப்ப வேண்டிய காலியாகவுள்ள "நுழைவு நிலை பணியிடமான" மருந்தாளுநர் பணியிடங்களை அரசின் முன் அனுமதி பெற்று நிரப்ப வேண்டும் என்ற அரசாணை நடைமுறையில் இருந்தது. தற்போது அரசு மருத்துவமனைகளில் காலியாகவுள்ள மருந்தாளுநர் பணியிடங்களை நிரப்ப உரிய ஆணை வெளியிடப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 13]

67—

விபத்து அவசர சிகிச்சை

**வினா எண் 29910—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் நகர் அரசு மருத்துவமனையில் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேலூர் நகர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படுவது குறித்த செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

68—

மின் கட்டணம் செலுத்த மையம்

**வினா எண் 30746—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்குடி வட்டம், ஆயங்குடி மின் உபயோகிப்பாளர்களின் தேவையை கருத்தில்கொண்டு மின் கட்டணம் செலுத்தும் மையத்தை உடனடியாக தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்குடி வட்டம், ஆயங்குடி மின் உபயோகிப்பாளர்களின் தேவையை கருத்தில்கொண்டு மின் கட்டணம் செலுத்தும் மையம் ஒன்று 5-1-2000 அன்று தொடங்கப்பட்டுவிட்டது.

69—

### கட்டட வசதி

**வினா எண் 30760—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாவூர் சத்திரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறு பிரிவிற்கு உரிய கட்டட வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாவூர் சத்திரம் ஆரம்ப சுகாதார நிலையம் புதிய அரசு கட்டடத்தில், அனைத்து வசதிகளுடன்கூடிய 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாக இயங்குகிறது. இங்கு குடும்ப நலப்பிரிவு கட்டடமும், ஒரு மருத்துவ அலுவலர் மற்றும் நான்கு பணியாளர்கள் குடியிருப்பு கட்டடங்களும் உள்ளன. தற்போதுள்ள கட்டட வசதிகள் போதுமானதாக உள்ளதால், மகப்பேறுக்கென கூடுதல் கட்டட வசதி ஏற்படுத்த அவசியம் இல்லை.

70—

### கிளை மின்வாரிய அலுவலகம்

**வினா எண் 31554—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மங்கலம் கிளை மின்சார அலுவலகத்தை பூமலூர் மின் அலுவலகத்தோடு இணைத்து செயற்படுத்துவதால் பொது மக்கள் எதிர்த்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மங்கலத்தில் தனி மின்சார அலுவலகம் அமைக்கப்படுமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம்.

71—

### மின் கட்டணம்

**வினா எண் 31889—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரு யூனிட் மின்சாரம் தயாரிக்க ஏற்படும் செலவு என்ன?

(ஆ) அதை அரசு என்ன விலைக்கு மக்களுக்கு விநியோகிக்கிறது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஒரு யூனிட் மின்சாரம் தயாரிக்க ஏற்படும் செலவு ரூ.2.78 (இரண்டு ரூபாய் எழுபத்து எட்டு காசுகள் மட்டும்) ஆகும்.

(ஆ) தாழ்வழுத்த மின் நுகர்வோர், உயர் அழுத்த மின் நுகர்வோர் என பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு தனித்தனியே கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

72—

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 31937—திரு. சி. வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், காணப்பாடி ஊராட்சிக்கு புதியதாக அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் நிறைவேறுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை ஊராட்சி ஒன்றியம், காணப்பட்டி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் இயங்கி வருகின்றது. மேலும், வடமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கிவருவதால் காணப்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.

**73—**

**மலைப்பட்டிக்கு ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 31938—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், பாகாநத்தம் ஊராட்சியில் உள்ள மலைப்பட்டிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை ஊராட்சி ஒன்றிய மலைப்பட்டி கிராமம், பாகாநத்தம் துணை சுகாதார நிலையம், பிலாத்து ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது. வடமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருவதால், மலைப்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.



**74—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 31944—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், கொல்லப்பட்டிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை ஊராட்சி ஒன்றியம், கொல்லப்பட்டி கிராமம், மோர்ப்பட்டி துணை சுகாதார நிலையத்தினைச் சார்ந்தது. இக்கிராமத்திற்கு 7 கிலோமீட்டர் தொலைவில் பிலாத்து ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. எனவே, இக்கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.

**75—**

**மருத்துவமனை**

**வினா எண் 31971—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியம், பாலப்பட்டி ஊராட்சி, அழகாபுரிக்கு அரசு மருத்துவமனை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம், அழகாபுரி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இது கோவிலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது. வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. எனவே, அழகாபுரி கிராமத்தில் புதிய அரசு மருத்துவமனை அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.

**76—**

**சுரண்டையில் ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 32030—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையில் கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் அனைத்துப் பணிகளும் முடிவடைந்து பயனுக்குக்கொண்டு வரப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

(இ) எப்பொழுது அது பயனுக்குக் கொண்டுவரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) சுரண்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தானமாக கொடுத்த நிலத்தில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட நிலையில், சுரண்டை கிராமத்தைச் சார்ந்த திரு. ஆறுமுகம் என்பவர், அந்த நிலத்தில் தனக்கு உரிமை உள்ளது என வழக்குத் தொடர்ந்துள்ளார். வழக்கு நிலுவையில் உள்ளது. வழக்கை விரைவில் முடிக்க அரசு வழக்கறிஞர் கோரப்பட்டுள்ளார். வழக்கு முடிந்தவுடன் கட்டடம் பயனுக்குக் கொண்டுவரப்படும்.



**77—**

**மின் நிலையப் பணி**

**வினா எண் 32291—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, கடலங்குடி 230 கே.வி. Grid மின் நிலையப் பணி சுணக்கமாக நடைபெற்று வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பணியை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) கடலங்குடி 230 கே.வி. துணை மின் நிலையப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இத்துணை மின் நிலையம் 2000-2001-ல் இயக்கி வைக்கப்படும்.

(ஆ) விவசாயப் பணிகள் நடைபெற்று வருவதால், மின் பாதைப் பணிகள் பிப்ரவரி 2000-ல் அறுவடை முடிந்த பின்னர் தொடங்கப்பெற்று, ஜூன் 2000-ல் முடிக்க ஏதுவாகும்.

**78—**

**குளிர்சாதன வசதி**

**வினா எண் 32307—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி அரசு மருத்துவமனை அறுவை சிகிச்சை அரங்கிற்கு குளிர்சாதன வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பவானி அரசு மருத்துவமனை அறுவை சிகிச்சை அரங்கிற்கு குளிர்சாதன வசதி வரும் ஆண்டில் பகுதி II திட்டத்தின்கீழ் நிதிநிலையை அனுசரித்து செய்து கொடுக்க பரிசீலிக்கப்படும்.

**79—**

**கடலூர் மின் திட்டம்**

**வினா எண் 32343—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மின் திட்டத்தை அமல்படுத்துவதை, துறைமுகம் அமைக்கப்படுவதை காரணம் காட்டி மாநில அரசு நிறுத்தி வைத்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**80—**

**சேயூர் மின் திட்டம்**

**வினா எண் 32344—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேயூர் மின் திட்டத்தை செயல்படுத்த தனியார் அமைப்பு ஒன்று எதிர்ப்பு தெரிவித்ததால் திட்டம் கைவிடப்பட்டுள்ளதா?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேயூர் மின் திட்டம் கைவிடப்படவில்லை. மைய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சகம் இத்திட்ட அமலாக்கத்திற்கு இறுதி அனுமதி வழங்கிய பின்னரே இத்திட்டப் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

**81—**

**குரோமோசோம்களைப் பிரித்தல்**

**வினா எண் 32375—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தில்லி அரசு இயற்றிய சட்டம்போல் எக்ஸ், ஒய் குரோமோசோம்களைப் பிரிப்பதைத் தடுக்க சட்டம் இயற்ற அரசு கருதியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தில்லி அரசு 'பிறப்பிற்கு முன் சிசுவை அறியும்' தொழில் நுட்ப 'முறைகள் (வரன்முறைகள் மற்றும் தவறான பயன்பாட்டினை தடுத்தல்) சட்டம் 1994 என்கிற சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டத்தையே தமிழக அரசு 1997 ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தி வருகிறது.

**82—**

**ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம்**

**வினா எண் 32423—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) பொழிச்சலூர் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் அமைக்கும் பணி எப்பொழுது தொடங்கப்படும்?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொழிச்சலூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் கட்டுமானப் பணிகள் 19-1-2000-ல் தொடங்கப்பட்டுள்ளன. விரைவில் கட்டடப் பணிகள் பொதுப் பணித் துறையினரால் முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**83—**

**மின் கடத்தி**

**வினா எண் 32669—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, வெங்கம்பாக்கம், செந்தமிழ் நகர், முத்தமிழ் நகர் ஆகிய பகுதிகளுக்கு புதிய மின் கடத்தி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தாம்பரம் தொகுதி, வெங்கம்பாக்கம், செந்தமிழ் நகர், முத்தமிழ் நகர் ஆகிய பகுதிகளுக்கு அரசின் சார்பில் தெருவிளக்கு அமைக்க அனுமதிக்கும்போது மேற்கண்ட பகுதிகளுக்கும் புதிய மின் கடத்தி அமைக்க ஆவன செய்யப்படும்.

**84—**

**மின் நிலையம்**

**வினா எண் 32885—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

(அ) நெய்வேலியில் 250 மெ.வா. திறனுள்ள மின் நிலையம் அமைக்க அரசு தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன?

(இ) அந்த மின் நிலையம் எவ்வளவு காலத்திற்குள் நிறுவப்பட்டு உற்பத்தியைத் தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 20-11-1996 அன்று தமிழக மின்வாரியம் எஸ்.டி.சி.எம்.எஸ். என்ற தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இந்நிறுவனம் ரூ.1170/- கோடி செலவில் 250 மெ.வா. திறன் கொண்ட மின் நிலையத்தை நிறுவ உள்ளது.

(இ) 2-12-2002-க்குள் நிறுவப்பட்டு மின் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**85—**

**மின் அழுத்தக் குறைவு**

**வினா எண் 32886—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் மின் அழுத்தக் குறைவைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் கிராமத்தில் உள்ள மின்னழுத்தக் குறைவை நிவர்த்தி செய்யும் பொருட்டு புதிதாக மின் மாற்றி (சுந்தரபாண்டியபுரம் உப மின் நிலையம் 63 கே.வி.ஏ.) அமைத்து, 22-3-2000 அன்று இயக்கி வைக்கப்பட்டது.

**86—**

**அமரர் ஊர்தி**

**வினா எண் 32806—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் அமரர் ஊர்தி இயங்காமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஊர்தி வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் கழிவு செய்யப்பட்ட அமரர் ஊர்திக்குப் பதிலாக புதிய ஊர்தி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**87—**

**குடியிருப்புகள்**

**வினா எண் 32954—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் உள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள அரசு மருத்துவ ஊழியர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**88—**

**சூரிய ஒளியில் மின்சாரம்**

**வினா எண் 32996—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தெரு விளக்குகளுக்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்தை சூரிய ஒளியிலிருந்து பெறுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இதுவரை தமிழகத்தில் 1125 சூரிய ஒளி தெரு மின் விளக்குகள் நிறுவப்பட்டுள்ளன. இவை கடலூர், விழுப்புரம், சேலம், திருச்சி, நீலகிரி, கோவை, திண்டுக்கல், இராமநாதபுரம், மதுரை மற்றும் சென்னை போன்ற மாவட்டங்களில் பெரும்பாலும் கிராமப்புறங்களில் நிறுவப்பட்டுள்ளன. 1999-2000 ஆண்டில் மத்திய மாநில அரசுகளின் மானியம் பெற்று 100 சூரிய தெரு மின் விளக்குகள் நிறுவப்பட்டுள்ளன.

**89—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 33166—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், விஜயாபதி ஊராட்சி, இடிந்தகரை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், இடிந்தகரை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**90—**

**புதிய மின் கடத்தி**

**வினா எண் 33369—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிக்கோட்டை ஊராட்சி, ஆரோக்கிய நகர் பகுதி, ஆசிரியர் காலனி, பாப்பாநகர் பகுதிகளில் மின் அழுத்தக் குறைவு நிலவுவதால் அங்கு ஒரு புதிய மின் கடத்தி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிக்கோட்டை ஊராட்சி, ஆரோக்கிய நகர் பகுதி, ஆசிரியர் காலனி, பாப்பாநகர் பகுதிகளில் நிலவி வந்த குறைவழுத்தத்தை நிவர்த்தி செய்ய அசோக் நகர், ஆசிரியர் காலனி ஆகிய இடங்களில் புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு மின்னழுத்தம் அபிவிருத்தி அடைந்துவிட்டதால், அப் பகுதிகளில் மேற்கொண்டு புதிய மின்மாற்றி அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.



2000 நவம்பர் 13]

**91—**

**மின் கடத்தி அமைத்தல்**

**வினா எண் 33370—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், சின்ன அம்மன்குடி கிராமத்தில் புதிய மின் கடத்தி ஒன்று அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், சின்ன அம்மன்குடி கிராமத்தில் புதிய மின்மாற்றி ஒன்று 30-6-2000-க்குள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**92—**

**ஆரம்பச் சுகாதார நிலையம்**

**வினா எண் 33515—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், பரப்பாடி கிராமத்திற்கு அரசு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி ஊராட்சி ஒன்றியம், பரப்பாடி கிராமத்தில் புதிய ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

[2000 நவம்பர் 13

**93—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 33579—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியில் திருநாகேசுவரம், பந்தநல்லூர் ஆகிய இடங்களில் துணை மின் நிலையங்கள் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமல்படுத்தப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியில் திருநாகேசுவரம், பந்தநல்லூர் ஆகிய இடங்களில் துணை மின் நிலையங்கள் ஏற்படுத்த தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

**94—**

**புதிய மின்மாற்றி**

**வினா எண் 33580—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தாம்பரம் தொகுதி, அனகாபுத்தூரில் சாமுண்டீஸ்வரி நகரில் புதிய மின்மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.



2000 நவம்பர் 13]

**95—**

**நகர்ப்புற துணை மின் நிலையம்**

**வினா எண் 33625—திரு. ஆர்.ஆர். சேகரன்;** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சேலம் மாவட்டம், கருப்பூர் துணை மின் நிலையத்தை நகர்ப்புற துணை மின் நிலையமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், கருப்பூர் துணை மின் நிலையம் நகர்ப்புற துணை மின் நிலையமாக ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

**96—**

**மின்மாற்றி**

**வினா எண் 33671—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சேலம் மாவட்டம், எடப்பாடி 110 கே.வி. துணை மின் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றி (Transformer) சக்தி குறைவாக உள்ளதால் அதிக சக்தியுள்ள மின்மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம். அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

[2000 நவம்பர் 13

97—

## அனல் மின் உற்பத்தி

**வினா எண் 33678—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் புதிய அனல் மின் உற்பத்தி தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். தமிழகத்தில் கீழ்க்கண்ட அனல் மற்றும் எரிவாயு சுழலி மின் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன:

1. புதிய எண்ணூர் அனல் மின் திட்டம் (1000 மெ.வா.)

2. தூத்துக்குடி இணைப்பு அனல் மின் திட்டம் (500 மெ.வா.)

3. கோவில் களப்பால் எரிவாயு சுழலி மின் திட்டம் (107 மெ.வா.)

4. பெருங்குளம் எரிவாயு சுழலி மின் திட்டம் (100 மெ.வா.)

5. குத்தாலம் எரிவாயு சுழலி மின் திட்டம் (65 மெ.வா.)

98—

## முறைசாரா மின் உற்பத்தி

**வினா எண் 33679—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் திட்டமான முறைசாரா மின் உற்பத்தித் திட்டம் தமிழகத்தில் எங்கு நிறைவேற்ற திட்டமிடப்பட்டு உள்ளது?



2000 நவம்பர் 13]

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மைய அரசின் திட்டமான முறைசாரா மின் உற்பத்தித் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் நடப்பாண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன:

### காற்றின் மூலம் மின் சக்தி

கோவை மாவட்டத்தில் இடையார்பாளையம், வடவள்ளி, கேத்தனூர், பஞ்சம்பாளையம் ஆகிய இடங்களிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் பழுவூரிலும் நடப்பாண்டில் இதுவரை 4.124 மெகாவாட் திறனுள்ள காற்றாலைகள் நிறுவப்பட்டு உள்ளன. நடப்பாண்டில் மீதமுள்ள நாட்களில் தமிழகத்தில் இன்னும் 10 மெகாவாட் திறனுள்ள காற்றாலைகள் கோவை மாவட்டத்திலும், தென் தமிழகத்தில் தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலும் நிறுவப்பட உள்ளன.

### சர்க்கரை ஆலைக் கழிவு மூலம் மின் உற்பத்தி

இந்த நிதியாண்டில் தமிழகத்தில் திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், நாகை, சிவகங்கை, நாமக்கல், திருவள்ளூர் மற்றும் சென்னை மாவட்டங்களில் 182 மெகாவாட் திறனுள்ள 8 மின் உற்பத்தி நிலையங்களில் சர்க்கரை ஆலைக் கழிவுகளிலிருந்து மின்சாரம் எடுக்கும் திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.

### உயிர்க் கழிவு மூலம் மின் சக்தி

ஈரோடு மாவட்டத்தில் 1000 கிலோவாட் மின் உற்பத்தி தாவரக் கழிவுகளில் இருந்தும் 1000 கிலோவாட் மின் உற்பத்தி சேலம் மாவட்டம் நாமக்கல்லிலும், சென்னைப் புறநகரில் உள்ள பெருங்குடியில் நகரை தூய்மைப்படுத்தப்பட்ட கழிவுகளில் இருந்து 14.85 மெ.வா. மின் உற்பத்தி செய்யும் திட்டமும் நிறைவேற்றப்பட உள்ளன.

[2000 நவம்பர் 13

99—

நீரிழிவு நோய் சிகிச்சைப் பிரிவு

**வினா 33706—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி அரசு மருத்துவமனையில் நீரிழிவு நோய் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், 1999-2000 நிதியாண்டில் அரசு செயல்படுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள எடப்பாடி அரசு மருத்துவமனையில் நீரிழிவு நோய்க்கு சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

100—

பரிசோதனைக் கூடம்

**வினா 33708—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி அரசு மருத்துவமனையில் பொது சுகாதார பரிசோதனைக் கூடம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

101—

மின் உற்பத்தி

**வினா எண் 33800—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, மருத்தூரில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்படவுள்ள 100 மெ.வாட் எரிவாயு மின் சுழலி திட்டம் (Gas Turbine) தொடர்ந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகும் நாப்தா மூலம் மின் உற்பத்தி செய்யும் வகையில் வடிவமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மத்திய எரிவாயு கழகம், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இயற்கை எரிவாயு 2010-ஆம் ஆண்டு வரை வழங்குவதற்கான ஒப்புதல் அளித்துள்ளது. 2010-ஆம் ஆண்டிற்குப் பிறகும் இயற்கை எரிவாயு தொடர்ந்து கிடைப்பின், மின் வாரியத்திற்குத் தொடர்ந்து வழங்கப்படுமென மத்திய எரிவாயு கழகம் தெரிவித்துள்ளது. 2010-ஆம் ஆண்டிற்குப் பிறகு எரிவாயு கிடைக்காவிடில் மின் சுழலி இயந்திரத்தில் சில மாற்றங்கள் செய்து நாப்தா மூலம் மின் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

[2000 நவம்பர் 13

102—

**காற்றாலை மூலம் மின்சாரம்**

**வினா எண் 33822—திரு. கே. ரவி அருணன் :** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், நெட்டூர் மற்றும் ஆய்குடி பகுதிகளில் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1988-93 மற்றும் 1993-97-ஆம் ஆண்டுகளில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆய்குடி மற்றும் நெட்டூர் பகுதிகளில் காற்று அளவிடும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஆய்வின் மூலம் காற்றின் வேகம் இவ்விடங்களில் 21.35 முதல் 19.35 கி.மீ. / மணி வேகம் உள்ளது எனக் கண்டறியப்பட்டது. இந்த இடங்களில் ஒரு 225 கி.வா. மின்சாரம் தயாரிக்கும் இயந்திரம் மூலம் ஒரு வருடத்திற்கு 4 இலட்சம் மின்சார யூனிட்டுகள் உற்பத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

103—

**புதிய மின் இணைப்பு**

**வினா எண் 33915—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விவசாயிகளுக்குப் புதிய மின் இணைப்பு வழங்குவதில் தொடர்ந்து காலதாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், காலதாமதத்தைத் தவிர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) காலதாமதத்தைத் தவிர்க்க சுயநிதித் திட்டத்தை அமல்படுத்தி வருகிறது. விவசாயிகள், சுயநிதித் திட்டத்தின்கீழ் பதிவுசெய்தால் விரைவில் மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

104—

**மின் அழுத்தக் குறைவு**

**வினா எண் 34023—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி கோட்டம், ஆவுடையானூர் ஊராட்சி, மாடக்கண்ணுப்பட்டி, மருதனியூர், புதூர், கைக்கொண்டார் தெரு ஆகிய பகுதிகளிலுள்ள மின் அழுத்தக் குறைவை போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பணிகள் நடைபெற்று வருகின்றன.

105—

**மின் கட்டணம்**

**வினா எண் 34262—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2000 நவம்பர் 13

(அ) தமிழகத்தில் உள்ள வருமானம் இல்லாத கோவில்களுக்கு வசூலிக்கப்படும் மின் கட்டணத்தை வீட்டு உபயோகத்திற்கு வசூலிக்கப்படும் மின் கட்டணம் அளவிற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு வரும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள கோவில்களுக்கு வசூலிக்கப்படும் மின் கட்டணத்தை வீட்டு உபயோகத்திற்கு வசூலிக்கப்படும் மின் கட்டண அளவிற்கு மாற்ற உத்தேசம் எதுவும் இல்லை.

**106—**

**இலவச விளக்கு வசதி**

**வினா எண் 34274—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு இலவச மின்சாரமும், குடிசை மக்களுக்கு இலவச விளக்கு வசதியும் அரசின் குறியீட்டு அளவிற்கு வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளின் பம்புசெட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்க குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு இலக்கீடும் எய்தப்படுகிறது. சென்ற ஆண்டான அதாவது 1999-2000 ஆண்டுக்கு 7020 பம்புசெட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்க இலக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டு 7169 எண்ணிக்கைகளுக்கு மின் இணைப்பு



2000 நவம்பர் 13]

வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் குடிசைகளுக்கு இலவச விளக்கு வசதி வழங்க ஒவ்வொரு ஆண்டும் 40,000 என இலக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டு இலக்கீடும் எய்தப்படுகிறது. 1999-2000 ஆண்டுக்கு 40,000 என இலக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டு 40,000 குடிசைகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**107—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 34278—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, தளவாய்பேட்டையில் துணை மின் நிலையக் கட்டுமானப் பணிகள் முடிவடைந்தும் இன்னும் பணிகள் தொடங்கப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைந்து செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விரைவில் செயல்படுத்தப்படும்.

**108—**

**மின் வசதி**

**வினா எண் 34279—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரும் 2001-ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தில் மின் பற்றாக்குறை இல்லாத மாநிலமாக தமிழகத்தை உருவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசின் திட்டம் என்ன?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தமிழகத்தை மின் பற்றாக்குறை இல்லாத மாநிலமாக உருவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளது.

(ஆ) தற்பொழுது, தமிழகத்தின் நிறுவுதிறன், மத்திய அரசிடமிருந்து பெறப்படும் பங்கான 1893 மெகா வாட்டையும் சேர்த்து 7203.555 மெ.வாட் ஆகும். இதுவரை எட்டியுள்ள உச்ச அளவு 5659 மெ.வா. ஆகும். தமிழ்நாடு மின்சார வாரியம் கூடுதலாக 546 மெ.வா. திறனுள்ள வெவ்வேறு திட்டங்களை 2000-2001-ல் நிறுவ உள்ளது. மேலும் மொத்தம் 1156 மெ.வா. திறன் கொண்ட 2 தனியார் துறை திட்டங்களுக்கான கட்டுமானப் பணிகள் 2000-2001-ல் ஆரம்பிக்கப்படும். இவை தவிர தூத்துக்குடி இணைப்பில் 500 மெ.வா. மற்றும் எண்ணூரில் 1000 மெ.வா. திறனுள்ள அனல் மின் திட்டங்கள் நிறுவுவதற்கான வாய்ப்புகள் பரிசீலனையில் உள்ளன. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் தமிழ்நாட்டில் மின் நிலைமை சற்று உபரியாக இருக்கும்.

**109—**

### நீரின் மூலம் மின்சாரம்

**வினா எண் 34281—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒகேனக்கல்லில் நீரின் மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஒகேனக்கல் புனல் மின் திட்டம் அமல்படுத்தப்படுவதற்காக இந்திய அரசின் ஆளுமைக்குட்பட்ட தேசிய நீர்மின் குழுமத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 13]

(ஆ) தேசிய நீர் மின் குழுமம் மற்றும் காவிரி ஆற்றின் நீர்த் தேக்கங்கள் நிறைந்த நான்கு மாநிலங்களுக்கிடையேயான (அதாவது தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் பாண்டிச்சேரி) உடன்பாட்டுக் குறிப்பு கையெழுத்தானவுடன், இந்தப் புனல் மின் திட்டத்தின் ஆரம்பக் கட்டப் பணிகள் தொடங்கப்படும்.

**110—**

### மின்சார விநியோகம்

**வினா எண் 34282—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள விவசாய நிலங்களுக்கு மின் மோட்டார் மூலம் 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படுமா?

(ஆ) இல்லையெனில், பகலிலாவது 12 மணி நேரம் மின்சாரம் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) தற்பொழுது தமிழ்நாடு மின்சார வாரியத்தில் விவசாய மின் இணைப்புகளுக்கு பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

தமிழகத்திலுள்ள விவசாய நிலங்களுக்கு பகலில் 12 மணி நேரம் மின்சாரம் கொடுக்கும் திட்டம் எதுவும் தற்சமயம் அரசிடம் இல்லை.

**111—**

### மின் உற்பத்தி

**வினா எண் 34283—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) தமிழகத்தில் அனல் மின்சாரம், நீர் மின்சாரம், அணு மின்சாரம், காற்றாலை மின்சாரம் ஆகியவை மூலம் எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது?

(ஆ) வெளி மாநிலங்களிலிருந்து வாங்கப்படும் மின்சாரம் எவ்வளவு?

(இ) மேலும் தமிழகத்தில் அனல் மின் நிலையங்களை ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 31-3-2000 அன்றுள்ளபடி கீழ்க்கண்ட அளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அனல் | .. | 2970.000 மெகாவாட் |
| நீர் | .. | 1995.000 மெகாவாட் |
| எரிவாயு | .. | 130.000 மெகாவாட் |
| காற்றாலை(மாநிலம்) | .. | 19.355 மெகாவாட் |
| காற்றாலை(தனியார்) | .. | 740.680 மெகாவாட் |
| மத்திய அரசிலிருந்து தமிழகத்தின் பங்காக நெய்வேலி, இராமகுண்டம், கல்பாக்கம், கைகா ஆகியவற்றிலிருந்து. | .. | 1893.000 மெகாவாட் |

(ஆ) வெளி மாநிலங்களிலிருந்து அதாவது பஞ்சாப், கிழக்கு பிராந்தியம் மற்றும் பாண்டிச்சேரி கார்ப்பரேஷன் ஆகியவைகளிலிருந்து சுமார் 260 மெகாவாட் மின்சாரம் கிடைக்கின்றது.

(இ) தமிழகத்தில் இரண்டு அனல் மின் நிலையங்களை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. அவை 1000 மெகாவாட் திறன் கொண்ட புது எண்ணூர் மற்றும் 500 மெகாவாட் திறன் கொண்ட தூத்துக்குடி இணைப்பு மின் திட்டங்களாகும்.



2000 நவம்பர் 13]

**112—**

### கூடுதல் மின் பளு

**வினா எண் 34437—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகள் கூடுதல் மின் பளு கோரி அரசுக்கு அளித்த மனுக்கள் முடிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். விவசாயிகள் கூடுதல் மின் பளு கோரி அரசுக்கு அளித்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு அனைத்து மின் வாரிய அலுவலகங்களுக்கும் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுப்பதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டுவிட்டன.

**113—**

### பணியாளர்கள் நியமனம்

**வினா எண் 34469—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, கவுந்தப்பாடி அரசு மருத்துவமனைக்கு தினந்தோறும் 350 முதல் 500 பேர் வரை நோயாளிகளாக வந்து செல்வது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்குத் தேவையான அளவு மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் நியமனம் செய்யும் திட்டம் உள்ளதா?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) ஈரோடு மாவட்டம், அரசு மருத்துவமனை, கவுந்தப்பாடியில் தினந்தோறும் சராசரியாக 300 வெளிநோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர்.*

*(ஆ) இம்மருத்துவமனை 30 படுக்கைகள் கொண்டது. மேற்கண்ட படுக்கை வசதிக்கும், வரும் புறநோயாளிகளின் எண்ணிக்கைக்கும், இருக்கும் மருத்துவர்கள், செவிலியர்கள், மற்ற பணியாளர்கள் போதுமானதாகும்.*

**114—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 34513—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) புவனகிரியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புவனகிரியில் ஏற்கெனவே 33/11 கி.வோ. எடுமுனை துணை மின் நிலையம் (LT SS) இயங்கி வருவதால், அங்கு துணை மின் நிலையம் அமைக்கும் அவசியம் எழவில்லை.*

**115—**

**புகை பிடிக்கத் தடை**

**வினா எண் 34544—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

*(அ) பொது இடங்களில் புகை பிடிப்பதைத் தடை செய்ய அரசு பரிசீலிக்கிறதா?*

*(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நடைமுறைக்கு வரும்?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பொது இடங்களில் புகை பிடிப்பதைத் தடை செய்வது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.*

**116—**

**ஆம்புலன்ஸ் கட்டுப்பாட்டு மையம்**

**வினா எண் 34600—திரு. கே. ரவி. அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்தில் முக்கிய நகரங்களில் ஆம்புலன்ஸ் கட்டுப்பாட்டு மையம் ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழகத்தில் முக்கிய நகரங்களில் ஆம்புலன்ஸ் கட்டுப்பாட்டு மையம் ஏற்படுத்திக் கொடுக்க ஏற்பாடு செய்யும் கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) இவ்வினா எழ இடமில்லை.*

**117—**

**பழுது நீக்கம்**

**வினா எண் 34681—திரு. கே. ரவி. அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

*(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், முத்துகிருஷ்ணபேரியில் உள்ள துணை சுகாதார நிலையம் கடந்த 10 ஆண்டுகளாக பழுது நீக்கம் செய்யப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதைச் சரி செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? எப்போது சீர் செய்யப்படும்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வீரகேரளம்பூர் ஆரம்ப சுகாதார நிலையப் பகுதியில், முத்துகிருஷ்ணபேரி துணை சுகாதார நிலையம் உள்ளது. ஆரம்ப சுகாதார நிலையம்/துணை சுகாதார நிலையம் கட்டடப் பராமரிப்பு நிதி ஒதுக்கீடு கடந்த ஆண்டுகளில் போதுமானதாக இல்லாததால் இங்குள்ள பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாமல் இருந்தன. 2000-2001-ஆம் ஆண்டில் திருத்திய மதிப்பீட்டில் கட்டடப் பராமரிப்பு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று, மேற்கண்ட துணை சுகாதார நிலைய பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.*

**118—**

### மருத்துவமனை

**வினா எண் 34632—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வருகின்ற குற்றால சீசனுக்கு முன்பாக குற்றாலத்தில் இயங்கி வருகின்ற பேரூராட்சி மருத்துவமனையினை அரசு மருத்துவமனையாக மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*



2000 நவம்பர் 13]

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) குற்றாலத்தில் இயங்கி வருகின்ற பேரூராட்சி மருத்துவமனையினை அரசு மருத்துவமனையாக மாற்றுவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. வருகின்ற குற்றாலப் பருவத்திற்கு (Season) முன்பாக மாற்றியமைப்பது குறித்த காலக்கெடுவினை அளித்திட இயலாது.*

**119—**

### தீவிர சிகிச்சைப் பிரிவு

**வினா எண் 34633—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் 24 மணி நேர தீவிர சிகிச்சை மற்றும் விபத்து சிகிச்சைப் பிரிவுகள் இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் 24 மணி நேர தீவிர சிகிச்சை மற்றும் விபத்து சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**120—**

### ஆயுர்வேத மருந்தகம்

**வினா எண் 34636—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2000 நவம்பர் 13

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் ஆயுர்வேத மருந்தகம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் ஆயுர்வேத மருந்தகம் அமைக்கும் திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**121—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 34707—திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குச்சனூர் பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தேனி மாவட்டம், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம், குச்சனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.



2000 நவம்பர் 13]

**122—**

**காலரா நோய்**

**வினா எண் 34712—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம், லட்சுமிபுரம் அருகே காலரா நோய் தாக்குதல் கடுமையாக உள்ளதாக வந்த செய்தியை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பெரியகுளம், லட்சுமிபுரத்தில் 2-1-2000 மற்றும் 3-1-2000 அன்றும் வயிற்றுப்போக்குதான் ஏற்பட்டது. காலரா தாக்குதல் ஏதும் நிகழவில்லை.

(ஆ) லட்சுமிபுரம், கிருஷ்ணாபுரம் மற்றும் சருத்துப்பட்டி ஆகிய கிராமங்களில் 2-1-2000 முதல் 3-1-2000 வரை வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. சருத்துப்பட்டி கிராமத்தில் 18 நபர்களும், கிருஷ்ணாபுரம் கிராமத்தில் 8 நபர்களும், லட்சுமிபுரத்தில் 1 நபரும் வாந்தி வயிற்றோட்டம் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பாதிக்கப்பட்ட கிராம மக்கள் மாசு ஏற்பட்ட நீரைப் பருக வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டு, 5-1-2000 முதல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகவும், ஊராட்சிகளின் மூலமாகவும் மாற்று குடிநீர் ஏற்பாடுகள் செய்யப்பட்டு, ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து, கைப்பம்பு மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. கீழ்க்கண்ட தடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்பட்டது:

1. குடிநீர், கிருமிநாசினம் செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது.

2. ஓ.ஆர்.எஸ். பாக்கெட்டுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டது.

[2000 நவம்பர் 13

3. பாதிக்கப்பட்ட வீடுகளில் கிருமிநாசினம் செய்யப்பட்டது.

4. பாதிக்கப்பட்ட பகுதிகளில் காலரா தடுப்பூசி போடப்பட்டது.

5. மருத்துவ அலுவலர்களின் தலைமையின்கீழ் குழுக்கள் அமைத்து தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டது.

6. சுகாதாரக் கல்வி போதிக்கப்பட்டு கொதிக்க வைத்து ஆறிய நீரைப் பருகும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

**123—**

### ஆரம்ப சுகாதார மையம்

**வினா எண் 34713—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருப்பூர், தொறவலூர் ஊராட்சி, ஆண்டிப்பாளையத்தில் ஆரம்ப சுகாதார மையம் அமைக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஆண்டிப்பாளையம் கிராம மக்கள்தொகை 466 ஆகும். இக் கிராமம் பட்டாம்பாளையம் துணை சுகாதார நிலையத்தினையும், பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தினையும் சார்ந்தது. இக் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**124—**

### சுகாதார மையம்

**வினா எண் 34714—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

*(அ)* திருப்பூர் முதலிபாளையம் சிட்கோ அருகில் சுகாதார மையம் அமைக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் முதலிபாளையம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. இது மங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தினை சார்ந்தது. இக் கிராமத்திற்கு 10 கிலோமீட்டர் தொலைவில் சாவடிப்பாளையம் (ஈரோடு மாவட்டம்) ஆரம்ப சுகாதார நிலையமும், 18 கிலோமீட்டர் தொலைவில் திருப்பூர் அரசு மருத்துவமனையும் செயல்படுகின்றன. எனவே, இக் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகளில்லை.

**125—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 34715—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருப்பூர் 15-வேலம்பாளையம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறதா?

*(ஆ)* ஆம் எனில், அதை மேலும் விரிவுபடுத்தி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 15—வேலம்பாளையம் கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் 22-2-2000 முதல் அனைத்து வசதிகளும் கொண்ட புதிய கட்டடத்தில் செயல்பட்டு

[2000 நவம்பர் 13

வருகிறது. பயனடையும் நோயாளிகளின் எண்ணிக்கை அடிப்படையில் தற்போதுள்ள வசதிகளே போதுமானதாகும். எனவே, இதனை மேலும் விரிவுபடுத்த வேண்டிய அவசியமில்லை.

**126—**

**சுகாதார மையம்**

**வினா எண் 34716—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் 15-வேலம்பாளையம், பெரியார் காலனி கணேஷ் தியேட்டர் அருகில் சுகாதார மையம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பெரியார் காலனி கிராம மக்கள் தொகை 5236 ஆகும். இக்கிராமம் பொங்குபாளையம் துணை சுகாதார நிலையத்தையும் 15—வேலம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தையும் சார்ந்தது. எனவே இக்கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டமில்லை.

**127—**

**சுகாதார மையம் அமைத்தல்**

**வினா எண் 34717—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், இடுவாய் ஊராட்சி, சின்னகாளிபாளையத்தில் சுகாதார மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சின்னக்காளிபாளையம் கிராம மக்கள்தொகை 223 ஆகும். இக்கிராமம் இடுவம்பாளையம் துணை சுகாதார நிலையத்தினையும் மங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தினையும் சார்ந்தது. இக்கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டமில்லை.

**128—**

**சுகாதார மையம்**

**வினா எண் 34718—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், மங்கலம் அக்ரஹாரப்புத்தூரில் சுகாதார மையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அக்ரஹாரப்புத்தூர் கிராம மக்கள்தொகை 1030 ஆகும். இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. இது மங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சார்ந்தது. எனவே இக்கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டமில்லை.

**129—**

**பொது மருத்துவமனை**

**வினா எண் 34848—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

திருப்பூர், பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை பொது மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், திருப்பூர் வட்டத்தில் உள்ள பெருமாநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**130—**

**காசநோய் மருத்துவமனை**

**வினா எண் 34849—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகராட்சிக்குச் சொந்தமான இடுவாய் ஊராட்சி, வஞ்சிப்பாளையத்திலுள்ள 72 ஏக்கர் நிலத்தில் காசநோய் மருத்துவமனை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**131—**

**சுகாதார மையம்**

**வினா எண் 34850—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு சுகாதார மையம் என்ற திட்டத்தை அமலாக்குவது குறித்து மாநில அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் முழு விவரம் என்ன?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு சுகாதார மையம் அமைப்பது என்ற திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**132—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 34873—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி வெள்ளரி வெள்ளியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வெள்ளரிவெள்ளி கிராம மக்கள்தொகை 785 ஆகும். இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. இது சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை சார்ந்தது. இக்கிராமத்திற்கு 4 கிலோமீட்டர் தொலைவில் சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 4 கிலோமீட்டர் தொலைவில் எடப்பாடி அரசு மருத்துவமனையும் செயல்படுகின்றன. எனவே, இக்கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டமில்லை.

[2000 நவம்பர் 13

133—

**யானைக்கால் நோய்**

**வினா எண் 34878—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் யானைக்கால் வியாதியால் எவ்வளவு பேர் அவதியுறுகிறார்கள் என்று அரசால் கணக்கெடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அந்த நோயைப் பரவ விடாமல் தடுக்க அரசு எடுத்த தீவிர நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் யானைக்கால் நோயால் 36686 பேர் அவதியுறுகின்றனர்.

(ஆ) தமிழகத்தில் தேசிய யானைக்கால் நோய் தடுப்புத் திட்டம் 1957-ஆம் ஆண்டு முதற்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கம் மக்கள் சமுதாயத்தில் யானைக்கால் நோய் விகிதத்தை குறைப்பது ஆகும். யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு டி.இ.சி. மாத்திரை மற்றும் டி.இ.சி. கலந்த உப்பு வழங்கப்பட்டு நோய் பரவுதல் தடுக்கப்படுகிறது. மேலும் யானைக்கால் வீக்கம் கண்டவர்களுக்கு மின்வெப்ப ஒத்திட சிகிச்சை (Heat Therapy), மென்மையான மின்அதிர்வு சிகிச்சை (Interferential Therapy), காற்றமுத்த சிகிச்சைமுறை (Pneumatic Compression Theraphy) மற்றும் விம்பெடிம் மாத்திரைகள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு நோயாளிகள் சிரமமின்றி நடந்திட வழிவகை செய்யப்படுகிறது.

134—

**போலியோ சொட்டு மருந்து**

**வினா எண் 34879—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

(அ) தமிழ்நாட்டில் போலியோ சொட்டு மருந்து எவ்வளவு குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது?

(ஆ) எத்தனை இடங்களில் போலியோ சொட்டு மருந்து அளிக்கும் முகாம் அமைக்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் போலியோ சொட்டுமருந்து 72,78,910 குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டது.

(ஆ) 40,399 இடங்களில் போலியோ சொட்டு மருந்து அளிக்கும் முகாம் அமைக்கப்பட்டது.

135—

**புகையிலைப் பொருட்களைத் தடை செய்தல்**

**வினா எண் 34941—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் புகையிலைப் பொருட்களைத் தடை செய்யும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் புகையிலைப் பொருட்களைத் தடை செய்யும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

136—

**புதிய கட்டண விகித முறை**

**வினா எண் 35009—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) மத்திய அரசின்கீழ் இயங்கும் பல்வேறு மின் கார்ப்பரேஷன்களிடமிருந்து மின்சாரத்தை வாங்கும் மாநிலங்களுக்கு புதிய கட்டண விகிதமுறை அமலாக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனால் தமிழ்நாட்டு நலன் பாதிக்கப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மின் உற்பத்தி அளவு/ஒதுக்கீடு அடிப்படையாகக் கொண்டு, புதிய கட்டண விகிதமுறை (Availability Based Tariff) தென்னகத்தில் ராமகுண்டம் மின் உற்பத்தி நிலையத்திற்கு 1-4-2000 முதல் அமலாக்கப்படுவதற்காக மத்திய மின்சார ஒழுங்குபடுத்தும் ஆணையம் தனது 4-1-2000 ஆணையில் உத்தரவு பிறப்பித்திருந்தது. ஆனால், அதே ஆணையம், அமலாக்கத்தை மறு உத்தரவு வரை நிறுத்தி வைத்துள்ளது.

(ஆ) அமலாக்கப்படவிருந்த ஆணையின்படி தமிழ்நாட்டு நலன் பாதிக்கப்படவில்லை. பின்னர் வரக்கூடிய ஆணையினால் தமிழ்நாட்டு நலன் பாதிக்கப்படுமேயானால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**137—**

## மின் இணைப்பு

**வினா எண் 35033—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் சொக்கனூர் ஊராட்சி ஆதிதிராவிடர் காலனி, தொகுப்பு வீடுகளுக்கு மின் வாரியம் மின் இணைப்பு தர மறுப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இணைப்பு வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் சொக்கனூர் ஊராட்சிக்குட்பட்ட ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு "குடிசைக்கு ஒரு விளக்கு" திட்டத்தின்



2000 நவம்பர் 13]

கீழ் மின் இணைப்பு கேட்டு மனு எதுவும் கோவை மின் விநியோகம் (வடக்கு) வட்டத்திற்குட்பட்ட அவினாசி கோட்டத்தில் பெறப்படவில்லை.

**138—**

## மின் அழுத்தக் குறைவு

**வினா எண் 35186—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 15-வேலம்பாளையம் தாய் மூகாம்பிகை நகர், தியாகி குமரன் புதுக் காலனி, சோளிபாளையம் பகுதிகளில் மின் அழுத்தம் குறைவாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**139—**

## சாணத்திலிருந்து மின்சாரம்

**வினா எண் 35291—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாட்டுச் சாணத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாட்டுச் சாணத்திலிருந்து பெருமளவில் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் தற்சமயம் இல்லை.

**140—**

**மின்மாற்றி**

**வினா எண் 35546—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிக்கோட்டை பகுதியில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதால் அதிக மின் அழுத்தம் கொண்ட மின்மாற்றி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம். புதிய மின்மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**141—**

**புதிய மின்மாற்றி**

**வினா எண் 35547—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கொ. வல்லுண்டாம்பட்டு ஊராட்சி, வேங்கராயன்குடிகாடு பகுதியில் மின் பற்றாக்குறையைப் போக்க புதிய மின்மாற்றி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம். புதிய மின்மாற்றி அமைக்கப்படுகிறது.

**142—**

**கூடுதல் திறன் கொண்ட மின் மாற்றி**

**வினா எண் 35571—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கல்விராயன்பேட்டை கிராமம், வடக்குத் தெருவில் பிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள மின்மாற்றிக்குப் பதிலாக கூடுதல் திறன் கொண்ட மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை. அதற்கான அவசியம் தற்போது எழவில்லை.

**143—**

**முழுநேர மருத்துவமனை**

**வினா எண் 35836—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, பூசாரிப்பட்டியில் செயல்பட்டுவரும் பகுதிநேர மருத்துவமனையை முழுநேர மருத்துவமனையாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, பூசாரிப்பட்டி கிராமத்தில் பகுதிநேர மருந்தகம் ஏதும் செயல்படவில்லை. துணை சுகாதார நிலையம்தான் செயல்படுகிறது. பூசாரிப்பட்டி துணை சுகாதார நிலையத்தினை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் சாத்தியக் கூறுகளில்லை.

**144—**

**நெடுஞ்சாலைத் துறை மருத்துவமனை**

**வினா எண் 35838—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் 24 மணி நேரமும் இயங்கும் விதத்தில் நெடுஞ்சாலைத் துறை மருத்துவமனைகளை நிறுவுவதற்கு அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 10 படுக்கைகள் கொண்ட 24 மணி நேர விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள், விபத்தில் சிக்கிய நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கென்றே ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இவை பெரும்பாலும் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் அமைந்து உள்ளன.

**145—**

**இனிப்பு தயாரித்தல்**

**வினா எண் 35885—திரு. இ. ஜி. சுகவனம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழகத்திலுள்ள சில இனிப்பு கடைகளில் மாட்டிறைச்சி கொழுப்பிலிருந்து தயாரிக்கப்படும் நெய், இனிப்பு தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள சில இனிப்புக் கடைகளில் மாட்டிறைச்சி கொழுப்பிலிருந்து தயாரிக்கப்படும் நெய், இனிப்பு உணவுப் பொருள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுவதாக புகார் ஏதும் பெறப்படவில்லை.

**146—**

**நிதியுதவி**

**வினா எண் 35930—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சூரிய சக்தியால் இயங்கும் எஸ்.பி.வி. (SPV) நீரிறைக்கும் எந்திரங்களை வாங்கிப் பொருத்திக் கொள்ள விவசாயிகளுக்கு நிதியுதவி அளிக்க தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து 1000 வாட் திறன் கொண்ட 107 சூரிய ஒளி மின் பம்புகளை உலக வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் 2000-2001-ம் நிதியாண்டில்

[2000 நவம்பர் 13

தமிழ்நாட்டில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள விவசாயிகள் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தை தொடர்புகொள்ளலாம்.

**147—**

### மின் உற்பத்தி

**வினா எண் 36117—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரில் என்னென்ன மின் உற்பத்தித் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன?

(ஆ) மேலும் புதிய திட்டங்கள் ஏதேனும் செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தற்பொழுது மேட்டூரில் கீழ்க்காணும் மின் உற்பத்தித் திட்டங்கள் இயங்கி வருகின்றன:

| புனல் | உற்பத்தித் திறன் (மெ.வா.) |
|---|---|
| 1. மேட்டூர் அணை | 40 |
| 2. மேட்டூர் சுரங்கம் | 200 |
| 3. கீழ் மேட்டூர் | 120 |
| அனல் | |
| 1. மேட்டூர் அனல் மின் நிலையம் | 840 |

(ஆ) மேட்டூரில் புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறு தற்பொழுது இல்லை.



2000 நவம்பர் 13]

**148—**

### காற்றாலை மூலம் மின்சாரம்

**வினா எண் 36118—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஏற்காடு, மாவட்ட எல்லையிலுள்ள மஞ்சவாடிக் கணவாய் மற்றும் தொப்பூர் கணவாய் ஆகிய இடங்களில் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் ஏற்காடு, மாவட்ட எல்லையிலுள்ள மஞ்சவாடிக் கணவாய் மற்றும் தொப்பூர் கணவாய் ஆகிய இடங்களில் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிப்பதற்கான கருத்துருக்கள் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**149—**

### இலவச மின்சாரம்

**வினா எண் 36244—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகரப் பஞ்சாயத்துப் பகுதியிலுள்ள குடிசை வீடுகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கி ஒரு மின் விளக்கு அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஒரு குடிசைக்கு ஒரு மின் விளக்குத் திட்டத்தின்கீழ் இலவச மின்சாரத்தை கிராமப் பஞ்சாயத்து பகுதியிலுள்ள குடிசை வீடுகள் மட்டுமே பெறமுடியும். இத்திட்டம் கிராம பஞ்சாயத்துப் பகுதியிலுள்ள நலிந்த மக்களுக்கு உதவும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டது. நகரப் பஞ்சாயத்துப் பகுதியிலுள்ள வீடுகளுக்குப் பொருந்தாது.

**150—**

**மின்மாற்றி**

**வினா எண் 36251—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சின்ன திருப்பதி மற்றும் கொங்குப்பட்டி ஆகிய பகுதியில் உள்ள மின்மாற்றிகளை புதிதாக அமைத்து சீரான மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**151—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 36370—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், மாரியம்மன்கோவில் ஊராட்சி, மாரியம்மன்கோவில் பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், மாரியம்மன்கோவில் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இது சுசவளநாடுபுதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது. இக்கிராமத்திற்கு 7 கிலோமீட்டர் தொலைவில் இராசா மிராசுதார் மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. எனவே இக்கிராமத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகளில்லை.

**152—**

**புதிய மின்மாற்றி**

**வினா எண் 36475—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிக்கோட்டை ஊராட்சியில் போஸ்டல் காலனியில் மின் அழுத்தக் குறைவால் அடிக்கடி மின் தடை ஏற்படுவதை தவிர்த்திட புதிய மின்மாற்றி ஒன்று அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

17-12-1999 அன்று கருணாநிதி நகரிலும், 2-2-2000 அன்று ரஹ்மான் நகரிலும் புதிய மின் மாற்றிகள் அமைக்கப்பட்டு விட்டதால் போஸ்டல் காலனியில் தற்பொழுது மின் அழுத்த குறைபாடு இல்லை. எனவே புதிய மின் மாற்றி அமைக்க அவசியம் இல்லை.

**153—**

**மின் தூக்கி**

**வினா எண் 36506—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) தாம்பரம் தொகுதி, சானடோரியத்தில் தொழுநோய் மருத்துவமனையில் நோயாளிகளைக் கொண்டு செல்ல மின்தூக்கி இல்லாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வரும் ஆண்டின் பகுதி-II திட்டத்தின்கீழ் நிதிநிலையை அனுசரித்து தாம்பரம் தொழுநோய் மறுவாழ்வு மற்றும் மேம்பாட்டு நிலையத்தில் மின்தூக்கி வசதி செய்துதர கருதப்பட்டுள்ளது.

**154—**

**சிலிகான் செல்களை உருவாக்குதல்**

**வினா எண் 36608—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறைந்த செலவில், அதிக மின்னுற்பத்தி செய்யும் திறன்மிகு சிலிகான் செல்களை உருவாக்க அரசு மேற்கொண்ட முயற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிலிகான் செல்களின் விலையை அதிக அளவில் அவற்றை உற்பத்தி செய்வதன் மூலம் ஓரளவிற்குக் குறைக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிய தொழில் நுட்பத்தின் மூலமே கணிசமாக அதன் விலையைக் குறைக்க முடியும். தற்போது அதன் விலை ஒரு வாட்டிற்கு சுமார் ரூ. 200.00 ஆக உள்ளது. உலகம் முழுவதும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் கூடங்களில் இதற்கான ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.



2000 நவம்பர் 13]

**155—**

**மேல் மின்மாற்றி**

**வினா எண் 36670—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, வத்தல்மலையில் உள்ள மலை கிராமங்களுக்கு சீரான மின்சாரம் வழங்க மலையின் மேல் மின்மாற்றி ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**156—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 36747—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி தண்டேச நல்லூர் துணை மின் நிலையம் எப்போது செயல்பட தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

29-3-2000-லிருந்து செயல்பட்டு வருகின்றது.

157—

**மருத்துவமனை**

**வினா எண் 36807—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், காடையாம்பட்டியில் அரசு மருத்துவமனை ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், காடையாம்பட்டியில் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அதை அரசு மருத்துவமனையாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

158—

**மின் இணைப்பு**

**வினா எண் 36896—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு எளிதாக மின் இணைப்பு கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சென்னை நகரில் கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு தாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.



159—

**மருந்துகள் வாங்க விதிமுறைகள்**

**வினா எண் 36944—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளுக்கு மருந்துகள் வாங்குவதற்கு என்னென்ன வழிமுறைகள் கையாளப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அரசு மருத்துவ நிலையங்களுக்குத் தேவைப்படும் மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது, மேலும், தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் பட்டியலில் இடம்பெறாத மருந்துகள், வெளிச் சந்தைகள் மூலம் முறையான வழியில் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன.

160—

**மின் வசதி**

**வினா எண் 38979—திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் ஒன்றியம், மன்னவனூர் ஊராட்சி, மஞ்சம்பட்டி கிராமத்திற்கு மின் வசதி செய்துதர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அடர்ந்த காடுகளைக் கடந்து அக்கிராமம் உள்ளதால் வனத் துறையின் ஒப்புதலும், சரியான சாலை வசதியும் தேவை. எனவே தற்போது அங்கே மின்வசதி செய்துதர இயலாது.

161—

## துணை மின் நிலையங்கள்

**வினா எண் 37150—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டத்தில் எத்தனை துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது?

(ஆ) வேலைகள் நடைபெற்றுவரும் துணை மின் நிலையங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திண்டுக்கல் மாவட்டத்தில் மொத்தம் ஆறு துணை மின் நிலையங்கள் அமைக்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இவற்றில் சிப்காட், தாழையூத்து, தாடிக்கொம்பு ஆகிய மூன்றில் துணை மின் நிலையங்கள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன. செங்குறிச்சியில் இந்த நிதியாண்டிலேயே பணிகள் முடிக்கப்படும். செந்துறையில் அடுத்த நிதியாண்டில் பணிகள் துவங்கப்படும். கொடைக்கானலில் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

162—

## கூட்டுறவு முறையில் மருத்துவமனைகள்

**வினா எண் 37385—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கூட்டுறவு முறையில் மருத்துவமனைகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் செயல்படுத்தப்படுமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவு முறையில் மருத்துவமனைகள் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) வினா எழாது.

163—

## நுழைவு அனுமதி

**வினா எண் 37538—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், இட்டமொழியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்தும், சர்வே எண். 308 இடம் கிடைக்காத காரணத்தினால் ஊர் பொதுமக்கள் மாற்று இடம் வழங்கிய பின்னரும் நுழைவு அனுமதி கொடுக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இட்டமொழி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட 50 சென்ட் நிலம் சர்வே எண். 308-ல் பெறப்பட்டு, பொதுப் பணித் துறையினரிடம் 29-5-2000 ஆம் நாளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கட்டட கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

164—

## வட்ட மருத்துவமனை

**வினா எண் 37562—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையில் வட்ட மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் தற்சமயம் செயல்பட்டு வருகிறது. அதனை வட்ட மருத்துவமனையாகவோ, அல்லது வட்டமல்லாத மருத்துவமனையாகவோ தரம் உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழாது.

**165—**

**இறப்புச் சான்றிதழ்**

**வினா எண் 37565—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்ய விநியோகிக்கப்பட்ட புதிய விண்ணப்பப் படிவத்தில், இறப்பு பதிவு செய்யும் விண்ணப்பப் படிவம் மற்றும் தற்போது வழங்கப்படும் இறப்புச் சான்றிதழ் ஆகியவற்றில் தகப்பனார் பெயர் (எழுத) குறிப்பிட கலம் (பகுதி) இல்லாதது பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தகப்பனார் பெயர் குறிப்பிட்டு, இறப்புச் சான்றிதழ் வெளியிட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



2000 நவம்பர் 13]

(ஆ) தகப்பனார் பெயரை இறப்பு அறிக்கை மற்றும் சான்றிதழில் தனியாகக் குறிப்பிடாமல் இறந்தவர் பெயருடன் இன்னாருடைய மகன்/மகள் என்று குறிப்பிட அனைத்து பிறப்பு இறப்புப் பதிவாளர்களுக்கும் தமிழ்நாடு தலைமை பிறப்பு, இறப்புப் பதிவாளரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**166—**

**புதிய மின் இணைப்புகள்**

**வினா எண் 37737—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் புதிய மின் இணைப்புகள் வழங்க தேவையான மீட்டர் கையிருப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பொதுமக்களே மீட்டர் வாங்கிக் கொடுக்கும் முறையைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தேவையான மீட்டர்கள் கையிருப்பில் உள்ளதால் பொதுமக்கள் மீட்டர் வாங்கிக் கொடுக்கும் முறை இனி எழாது.

**167—**

**சூரிய சுடுநீர் கலன்**

**வினா எண் 37870—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்ட மருத்துவமனை மற்றும் திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர், குடியாத்தம் மற்றும் மாவட்டத்தில் உள்ள

[2000 நவம்பர் 13

மருத்துவமனைகளில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் சூரிய சுடுநீர் கலன் நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் தமிழக அரசின் 100 சதவீத நிதியுதவியுடன், இதுவரை அரசு தலைமை மருத்துவமனை கடலூர், காஞ்சிபுரம், பெரியகுளம், நாகர்கோவில், திண்டுக்கல், தூத்துக்குடி, திருவாரூர், ஈரோடு ஆகிய இடங்களிலும் மற்றும் கோவை, செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் மக்களின் உபயோகத்திற்காக சூரிய சுடுநீராக்கிகள் பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்கள்/விநியோகஸ்தர்கள் மூலம் நிறுவியுள்ளது.

2000-2001 ஆம் ஆண்டில் அரசு கண் மருத்துவமனை, சென்னை, அறிஞர் அண்ணா மருத்துவமனை, அரும்பாக்கம், சென்னை அரசு தலைமை மருத்துவமனை, புதுக்கோட்டை அல்லது நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் சூரிய சுடுநீராக்கிகள் நிறுவ தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் உத்தேசித்துள்ளது. இதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டுவிட்டன.

மருத்துவம் மற்றும் ஊரக நலவாழ்வு இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து அரசு தலைமை மருத்துவமனை, வேலூர் மற்றும் பிற இடங்களில் சூரிய சுடுநீராக்கி நிறுவ கருத்துரு பெறப்பட்டால், 2001-2002-ல் அல்லது வரும் ஆண்டுகளில் நிறுவ தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் உடன் நடவடிக்கை மேற்கொள்ளும்.

**168—**

### துணை மின் நிலையம்

**வினா எண் 37918—திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

(அ) திருநாவலூர் பகுதிக்கு துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் வட்டம், திருநாவலூர் பகுதிக்கு துணை மின் நிலையம் அமைப்பதற்கான அவசியம் தற்போது எழவில்லை.

**169—**

### ராமகுண்டத்திலிருந்து மின் விநியோகம்

**வினா எண் 37957—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராமகுண்டத்திலிருந்து விநியோகிக்கப்படும் மின்சாரம் தமிழ்நாட்டிற்கு முறையாக கிடைக்கிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1999-2000 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட பங்கைவிட 718 மில்லியன் யூனிட் மின்சாரம் அதிகமாக தமிழ்நாடு பெற்றுள்ளது.

**170—**

### திரவ எரிவாயு மூலம் மின் உற்பத்தி

**வினா எண் 37966—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் இயற்கை திரவ எரிவாயு மூலம் மின் உற்பத்தி செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் இயற்கை திரவ எரிவாயு மூலம் மின் உற்பத்தி செய்வதற்கான திட்டத்தைப் பற்றி மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எந்தத் தகவலும் வரப்பெறவில்லை.

**171—**

**மின் உற்பத்தி**

**வினா எண் 38051—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் மின் திட்டம் எப்போது தொடங்கப்படும்?

(ஆ) அந்தத் திட்டத்தின் மூலம் மின் உற்பத்தி எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஜெயங்கொண்டம் பவர் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் இந்த மின் திட்டத்திற்கான மின் கொள்முதல் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட நாளிலிருந்து பன்னிரெண்டு மாதத்திற்குள் மின் திட்டத்திற்கான கட்டுமானப் பணியை தொடங்கும்.

(ஆ) இம் மின் திட்டத்திற்கு வருமான அடமானம் கொடுத்த பின்பு மின் கொள்முதல் ஒப்பந்தம் கையெழுத்திடப்படும். இதிலிருந்து 12 மாதத்திற்குள் நிதிநிலை முடிவு செய்யப்படும். இதிலிருந்து 42 மாதம் கழித்து மின் உற்பத்தி தொடங்கப்படும்.



2000 நவம்பர் 13]

**172—**

**காற்றாலை மூலம் மின்சாரம்**

**வினா எண் 38056—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) அத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டத்தில் காற்றாலைகள் மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டம், தற்போது நடப்பாண்டில் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**173—**

**நாப்தாவைக் கொண்டு மின்சாரம்**

**வினா எண் 38062—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாப்தாவைக் கொண்டு மின்சாரம் தயாரிக்க தனியார் முன் வந்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அரசு அளித்துள்ள உறுதிமொழி என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

[2000 நவம்பர் 13

(ஆ) மின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்த உத்தேசித்து தமிழ்நாடு அரசு நாப்தாவைக் கொண்டு செயல்படும் மின் திட்டங்களுக்கு அனுமதி அளித்தது. நாப்தாவின் திடீர் விலை ஏற்றத்தினால், இந்த மின் திட்டங்களிலிருந்து பெறப்படும் மின்சாரத்தின் விலை கட்டுப்படியாகவில்லை. ஆகையால், தமிழ்நாடு அரசு திரவ இயற்கை வாயு, இயற்கை வாயு, நிலக்கரி ஆகியவற்றைக் கொண்டு இயங்கும் மின் திட்டங்களை தற்போது ஊக்குவிக்கிறது.

**174—**

**மின்சாரம் தயாரித்தல்**

**வினா எண் 38064—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எதிர்கால தேவைக்கேற்ப மாஸ்டர் பிளான் செய்து தேவைகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்து மின்சாரம் தயாரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மின் தேவையை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் அமைய வேண்டிய மின் உற்பத்தித் திட்டங்கள் குறித்து மாநில திட்டக்குழு தயாரித்துள்ள ஒன்பதாம் ஐந்தாண்டு காலத் திட்ட ஆவணம் விவரிக்கிறது.

(ஆ) முறையாக அவ்வப்போது மின் உற்பத்தித் திறன் கூடுதல் ஆக்கப்பட்டு வருகிறது.

**175—**

**மின் கட்டண மதிப்பீடு**

**வினா எண் 38267—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

(அ) தமிழகத்தில் தற்போது நடைமுறையில் உள்ள மின் கட்டண மதிப்பீட்டு முறையை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குறைந்த மின் அழுத்த மின் இணைப்பிற்கு நான்கு மாதங்களுக்கு ஒரு முறை மின் கட்டணம் மதிப்பீடு செய்யவும், இரு மாதத்திற்கு ஒருமுறை வசூல் செய்யும் முறையையும் நடைமுறைப்படுத்துவதற்கான செயற்குறிப்பு மின் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

**176—**

**தமிழ்நாட்டிற்கு மின்சாரம்**

**வினா எண் 38285—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிழக்குப் பிராந்தியத்தில் இருந்து தமிழ்நாட்டுக்கு மின்சாரம் கொண்டுவரும் திட்டத்தை அமல்படுத்த மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கிழக்குப் பிராந்தியத்தில் இருந்து தமிழ்நாட்டுக்கு மின்சாரம் கொண்டுவரும் திட்டத்தை அமல்படுத்த மத்திய அரசை மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றது.

[2000 நவம்பர் 13

177—

### எரிவாயு

**வினா எண் 38379—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் எரிவாயு மின் சுழலித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள எரிவாயுவின் மொத்த அளவு எவ்வளவு?

(ஆ) மேலும், கிடைக்கும் எரிவாயுவை இந்தத் திட்டத்திற்குக் கிடைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) குத்தாலம் எரிவாயு சுழலி திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள எரிவாயுவின் மொத்த அளவு நாள் ஒன்றுக்கு 4.5 இலட்சம் கனமீட்டர் ஆகும்.

(ஆ) மத்திய இயற்கை மற்றும் எரிவாயு கழகம் முதலில் நாள் ஒன்றுக்கு 3.2 இலட்சம் கனமீட்டர் அளவும், அதன்பின்னர் மேலும் நாள் ஒன்றுக்கு 1.3 இலட்சம் கனமீட்டர் அளவு இயற்கை எரிவாயுவை கூடுதலாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்கியுள்ளது.

178—

### துணை மின் நிலையம்

**வினா எண் 38971—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் தொகுதி, தொரப்பாடி பகுதியில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

179—

### துணை மின் நிலையங்கள் அமைத்தல்

**வினா எண் 40011—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் மற்றும் மழையூர் துணை மின் நிலையங்கள் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் மற்றும் மழையூர் ஆகிய இடங்களில் ஏற்கெனவே துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. ஆகவே, புதிதாக அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.

180—

### மின் அளவை அதிகரித்தல்

**வினா எண் 40020—திரு. ஏ.கி.ஏ. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலி அனல் மின் நிலையம் 2-ன் மூலம் தமிழகத்திற்கு பெறப்படும் மின்னளவை அதிகப்படுத்த அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நெய்வேலி அனல் மின் நிலையம்-2 மத்திய மின் உற்பத்தி நிலையமாதலால் இந்திய அரசின் விதி முறைகளின்படி மட்டுமே மின்சாரம் பெறமுடியும். மேலும், நெய்வேலி அனல் மின் நிலையம்-I-ஐ 2ஒ 210 மெ.வா. மின் நிலையமாக விரிவுபடுத்த இருப்பதால் தமிழ்நாட்டிற்கும் கூடுதல் மின்சாரம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**181—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்**

**வினா எண் 2793—திரு. க. வேல்சாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகருக்கு வைகை அணையிலிருந்து வரும் நீரை புதிய குழாய்கள் மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் ஏற்றி விநியோகம் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகராட்சியில் ஏற்கெனவே நிறுவப்பட்டு பயனில் உள்ள குடிநீர் திட்டம் மூலம் மழைக்காலங்களில் நாளொன்றுக்கு 680 இலட்சம் லிட்டர் குடிநீரும், உலக வங்கி உதவியுடன் வைகை அணையிலிருந்து குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் மூலம் 670 இலட்சம் லிட்டர் குடிநீரும், ஆக மொத்தம் 1350 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கும்படியாக குடிநீர் அபிவிருத்தித் திட்டம் நிறைவேற்றப்பட்டு 1995 ஆம் வருடம் பிப்ரவரி முதல் அமலில் உள்ளது.



2000 நவம்பர் 13]

**182—**

**குடிநீர் வசதியை மேம்படுத்துதல்**

**வினா எண் 5745—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை, கருமாண்டி செல்லிபாளையம் மற்றும் வழியோரக் கிராமங்களுக்கு குடிதண்ணீர் விநியோகத்தை மேம்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தினால் பயனடையும் வழியோரக் கிராமங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை மற்றும் கருமாண்டி செல்லிபாளையம் ஆகிய பேரூராட்சிகள் மற்றும் 64 வழியோரக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் 1999-2000 ஆம் ஆண்டிற்கான பொன்விழா திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அரசாணை நிலை எண். 77, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ1) துறை, நாள் 12-6-2000-ல் மேற்படி திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 64 வழியோரக் கிராமங்கள் பயனடையும்.

**183—**

**குடிநீர் விநியோகம்**

**வினா எண் 8690—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், திருப்புவனம்புதூர் அருகே ஆற்றிற்குள் இருக்கும் குடிநீர் கிணற்றிலிருந்து மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம், புதூர் அருகே ஆற்றினுள் ஏற்கெனவே உள்ள கிணற்றினை நீராதாரமாகக் கொண்டு ஒரு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று கட்டி முடிக்கப்பட்டு 30-9-1999 முதல் திருப்புவனம் நகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**184—**

## மலேரியா ஒழிப்பு

**வினா எண் 9444—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சி மற்றும் சத்துவாச்சேரி, அல்லாபுரம், சேண்பாக்கம், தொரப்பாடி ஆகிய பகுதிகளில் மலேரியா ஒழிப்பிற்கு சிறப்புப் பணியாளர்கள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஒவ்வொரு ஆண்டும் மலேரியா நோய் அதிகத் தாக்குதலை உண்டாக்கும் பருவகாலமான செப்டம்பர் முதல் டிசம்பர் வரையிலான நான்கு மாத காலத்திற்கு வேலூர் நகராட்சிக்கு 17 (பதினேழு) சிறப்பு மலேரியா பணியாளர்களை முற்றிலும் தற்காலிகமாக விதிமுறைகளுக்குட்பட்டு நியமனம் செய்ய அரசு அனுமதி அளித்து 19-12-1998 ஆம் நாளிட்ட ந.நி.கு.வ. துறையின் அரசாணை (ப) எண் 688-8-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. சத்துவாச்சேரி, அல்லாபுரம், சேண்பாக்கம் மற்றும் தொரப்பாடி ஆகிய பேரூராட்சிகளில், செப்டம்பர் முதல் டிசம்பர் வரைக்கான பருவ காலங்களில் மட்டும் கொசுத் தொல்லை அதிகமிருப்பதால் அப்பேரூராட்சிகளில் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில்



உள்ள பொது சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு கொசு ஒழிப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. புதியதாக பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கத் தேவையில்லை என பேரூராட்சிகளின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**185—**

## பாதாள சாக்கடை

**வினா எண் 13950— திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்தின் ஆய்வுப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு அதற்கான வடிவமைப்புகள் தயாரிக்கப்பட்டு ரூ. 26.85 கோடிக்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மண்டல தொழில்நுட்பக் குழுவின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின் மூலம் வெளியேறும் கழிவுநீரை சுத்திகரிக்க கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காக சுமார் 100 ஏக்கர் நிலம் நகராட்சியால் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர் தான் விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிதிநிலையைப் பொறுத்து திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**186—**

## பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்

**வினா எண் 14320—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் பகுதியில் குடிநீர் தட்டுப்பாட்டால் மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், போர்க்கால அடிப்படையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம். ஆம்பூர் பகுதியில் தற்போது குடிநீர் தட்டுப்பாடு உள்ளது.

(ஆ) ஆம்பூர் நகராட்சிக்கு முழுமையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க குடிநீர் மாசு அடையாத இடத்தில் நீர் ஆதாரம் தேர்வு செய்ய ஆய்வுப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

**187—**

**பாலாறு குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 14418—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சிக்கு புதிய பாலாறு குடிநீர்த் திட்டம் தொடங்க ரூ. 9.5 கோடி வழங்கி ஓராண்டாகியும் பணி இன்னும் தொடங்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சிக்கு ரூ. 9.5 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்ட நீர் ஆதாரப் பகுதியில் வேலூர் நகராட்சிப் பகுதி கழிவுநீர் மற்றும் வேலூர் கிருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் கழிவுகள் சுத்திகரிக்கப்படாமல் பாலாற்றில் நேரிடையாகவே கலப்பதால், குடிநீர் மாசு அடைந்துள்ளது. இதனை குடிநீராகப் பயன்படுத்துவது உகந்தது அல்ல என்பதால் இத்திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. மாசுபடாத பகுதியில்





நீராதாரங்கள் அமைத்து புதிய மேம்பாட்டுத் திட்டம் ஒன்று விரைவில் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**188—**

**சுரங்கப்பாதை பணிகள்**

**வினா எண் 15139—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர், காந்திபுரத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தால் (TNUDP) அமைக்கப்படவிருந்த சுரங்கப்பாதைப் பணிகள் எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர், காந்திபுரத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தால் (TNUDP) அமைக்கப்படவிருந்த சுரங்கப்பாதைப் பணி நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் கைவிடப்பட்டு அதற்குப் பதிலாக பாதசாரிகள் நடைபாதை மேம்பாலம் (Foot Over Bridge) ரூ. 9.50 லட்சம் செலவில் கட்டிமுடிக்கப்பட்டு 1999 அக்டோபர் திங்களில் பொதுமக்கள் உபயோகத்திற்கு திறந்துவிடப்பட்டுள்ளது.

**189—**

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 15707—திரு. ஆர்.ஆர் சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி வட்டம் காடையாம்பட்டி பேரூராட்சியில் ஆண்டிக்கொட்டாய் அருகிலுள்ள ஆற்றின்மீது பாலம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி காடையாம்பட்டி பேரூராட்சியில் ஆண்டிக்கொட்டாய் அருகிலுள்ள ஆற்றின்மீது தற்பொழுது பாலம் கட்டப்பட்டுள்ளது.

**190—**

**தளவாடப் பொருட்கள்**

**வினா எண் 16313—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் குடிநீர் வாரியத்திற்கு அலுவலக தளவாடப் பொருள்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதிதாக தொடங்கப்பெற்ற திருவாரூர் குடிநீர் வாரிய கோட்டத்திற்கு தளவாட சாமான்கள் வாங்குவதற்கு ரூ.1,00,000 அனுமதி அளிக்கப்பட்டு ரூ.98,956-க்கு தளவாட சாமான்கள் வாங்கப்பட்டுவிட்டன.

**191—**

**மின் விளக்கு**

**வினா எண் 16781—திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சியில் புதிதாக மின்விளக்கு அமைப்பதற்கு ரூ.3,500 ஊராட்சி மன்றங்கள் மின் வாரியத்திற்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்த அரசு முன்வருமா?



(ஆ) இல்லை எனில், நிதி ஆதாரம் இல்லாத ஊராட்சிகளுக்காவது சிறப்புச் சலுகை அளித்து தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஒவ்வோர் ஆண்டும் அரசு நிதியிலிருந்து ஊரகப் பகுதிகளில் தெரு விளக்குகள் அமைக்க குறியீடு நிர்ணயித்து அரசு செயல்படுத்தி வருகிறது. இதைத்தவிர ஊராட்சிமன்ற நிதியிலிருந்து அமைக்கப்படும் புதிய மின் விளக்கிற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் நிர்ணயிக்கப்படும் தொகையைச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையை அரசால் தற்போது தளர்த்த இயலாது.

(ஆ) நிதி ஆதாரம் இல்லாத ஊராட்சிகளுக்கு மின் விளக்கு அமைப்பது உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

**192—**

**வடிகால் வசதி**

**வினா எண் 17245—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரம், உத்தண்டிக்காடு பகுதியில் வடிகால் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகராட்சி உத்தண்டிக்காடு காட்டுவளவு பகுதியில் 1998-99 ஆம் ஆண்டு பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 1.50 மதிப்பீட்டில் 210 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டது. மேலும் 1999-2000 ஆண்டு மாநில

[2000 நவம்பர் 13

நிதிக்குழு பரிந்துரை நிதி ஆதாரத்தில் உத்தண்டிக்காடு பகுதியில் பூலாம்பட்டி சாலை சந்திப்பிலிருந்து 200 மீட்டர் நீளத்திற்கு தார்ச்சாலை அமைக்கப்பட்டு, அதில் முதல் 75 மீட்டர் நீளத்திற்கு வடிகால் வசதி செய்யப்பட்டுள்ளது.

**193—**

### மின் கட்டணத்தைக் குறைத்தல்

**வினா எண் 19864—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளுக்கு குடிநீர் விநியோகத்திற்கான மின்சார கட்டணத்தைக் குறைக்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதனால் அரசுக்கு ஏற்படும் இழப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளுக்கு குடிநீர் விநியோகத்திற்கான மின் கட்டணத்தை குறைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**194—**

### புதிய குடிநீர்த் திட்டப்பணி

**வினா எண் 20828—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகரில் புதிய குடிநீர்த் திட்டப்பணி தொடங்கப்படாததால் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படும் நிலையிலுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய குடிநீர்த் திட்டம் எப்போது தொடங்கப்படும்?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் நகராட்சியில் நிலவும் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு ரூபாய் 40.80 இலட்சத்தில் ஒரு உடனடி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் ஏப்ரல் 2000-ல் முடிக்கப்பட்டு திட்டம் மக்கள் பயனுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும், வேலூர் நகராட்சி மற்றும் சத்துவாச்சாரி பேரூராட்சிக்கு பொன்னையாற்றினை நீர் ஆதாரமாகக் கொண்ட ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

**195—**

### மேல்நிலைத் தொட்டிகள்

**வினா எண் 22194—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் வழியோரக் கிராமக் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக எத்தனை மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன?

(ஆ) அதற்கான இடம் எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் வழியோர கிராமக் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக திருப்பூர் தொகுதியில் உள்ள திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் நல்லூர் கிராம பேரூராட்சியைச் சார்ந்த 124 குடியிருப்புகளில் 78 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் புதிதாக கட்டப்பட்டுள்ளன. இது தவிர, 38 குடியிருப்புகளில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கிராமக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், ஏற்கெனவே கட்டப்பட்டு, பயனில் உள்ள

[2000 நவம்பர் 13

38 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 8 குடியிருப்புகள் பகிர்மானக் குழாய் நீட்டிப்பின் மூலம் பயன்பெறுகின்றன.

(ஆ) குடியிருப்புப் பகுதிகளில் மேடாக உள்ள புறம்போக்கு இடம் தேர்வு செய்யப்பட்டு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன.

**196—**

**மின் இணைப்பு**

**வினா எண் 22763—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பத்தரஅள்ளி ஊராட்சி, ஆரல்குந்தியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி மின் இணைப்பு வழங்கப்படாமலிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் மின் இணைப்பு வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பத்ரஅள்ளி ஊராட்சி ஆரல்குந்தி கிராம மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தற்போது மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**197—**

**பணி வரன்முறை**

**வினா எண் 22950—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்டப் பராமரிப்புப் பணிகளில் பல ஆண்டுகளாக பணிபுரிந்து வருகின்ற தினக்கூலி பணியாளர்களை பணி வரன்முறை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசாணை எண் 198, ந.நி.ம.கு.வ. துறை, நாள் 26-10-1998-ன்படி, நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படி பேரூராட்சிகள் துறையில் குடிநீர்த் திட்டப் பராமரிப்பு பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, அப்பணியிடங்களில் குடிநீர்த் திட்டப் பராமரிப்பில் பணிபுரியும் தினக்கூலி பணியாளர்களை ஈர்த்துக்கொள்ள பேரூராட்சிகள் இயக்குநரால் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**198—**

**மின் பணியாளர் பணியிடம்**

**வினா எண் 23603—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நல்லூர் பேரூராட்சியில் மின் பணியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிரப்பப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கோவை மாவட்டம், திருப்பூர்-நல்லூர் பேரூராட்சிக்கு பேரூராட்சிகள் இயக்குநரின் செயல்முறை ஆணை எண் 13070/2000/அ3, நாள் 31-7-2000-ன்படி மின் பணி உதவியாளர் பணியிடம் தோற்றுவித்து ஆணையிடப்பட்டதையடுத்து இப்பணியிடம் அப்பேரூராட்சியின் செயல் அலுவலரால் நிரப்பப்படும்.

[2000 நவம்பர் 13

**199—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 25655—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கோனேரிப்பட்டியில் சாவடி அருகில் மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டிருந்தும், ஊர் மக்களுக்கு நீண்ட நாட்களாக காவேரி குடிநீர் வழங்கப்படாமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பகுதிக்கு குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், நெடுங்குளம் ஊராட்சியிலுள்ள கோனேரிப்பட்டி சாவடி குடியிருப்புக்கு கோனேரிப்பட்டி சாவடி அருகில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 1500 மீட்டர் நீளத்திற்கு பகிர்மானக் குழாய்களும், 200 மீட்டர் நீளத்திற்கு பிரதானக் குழாய்களும் பதித்து பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. எடப்பாடி-இராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் கடந்த 8-9-1999 அன்று இணைப்பு வழங்கப்பட்டு, பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**200—**

**மனை அங்கீகாரம்**

**வினா எண் 36740—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகளில் ஒதுக்கப்பட்ட நிலம் இல்லையென்றால் அந்த மனைக்கட்டை அங்கீகரிக்க ஒதுக்கப்பட்ட நிலத்தின் சந்தை விலையைப் போல ஒன்றரை மடங்கு தொகை உள்ளாட்சிக்கு அளிக்க வேண்டும் என்பதைத் தளர்த்த அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அங்கீகாரமற்ற மனைப்பிரிவுகளை முறைப்படுத்துவது குறித்த பொது ஆணையில் பொது உபயோகத்திற்கென 10 விழுக்காடு மனைப்பரப்பு ஒதுக்கீடு செய்யப்படாத அங்கீகாரமற்ற மனைப்பிரிவுகளைப் பொருத்தமட்டிலும், 10 விழுக்காடு மனைப்பரப்புகான சந்தை மதிப்பில் ஒரு மடங்கு தொகையை உள்ளாட்சி நிறுவனத்திற்கு ரொக்கமாகச் செலுத்த வேண்டும் என முதலில் அரசு நிபந்தனை விதித்தது. பல்வேறு குடியிருப்புச் சங்கங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் வேண்டுகோள்களைப் பரிசீலித்த பின்பு, பெரும்பான்மை மனைகளில் வீடுகள் கட்டப்பட்டு பத்து விழுக்காடு பொது ஒதுக்கீடு செய்ய இயலாத மனைப்பிரிவுகளை முறைப்படுத்த, வழிகாட்டுக் கையேடு விலை மதிப்பில் 50 விழுக்காடு தொகை செலுத்தினால் போதுமானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

*பதினேழாவது பட்டியல்*

**1—**

**உலக வங்கி ஒப்புதல்**

**வினா எண் 26353—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக முறை மேம்பாட்டிற்காக உலக வங்கியிடம் ஒப்புதல் கோரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு இரண்டாம் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்கு உலக வங்கியுடன் 1999 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒப்பந்தம் செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிறுவன மேம்பாட்டு கூறாகும். நிறுவன மேம்பாட்டு திட்டத்திற்காக சுமார் ரூ.92.40 கோடி செலவிடப்படும். இத்திட்டம் இதற்காக அமைக்கப்பட்டிருக்கும் திட்ட நிர்வாக அமைப்பின் மூலம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் கீழ்க்கண்ட துணைத் திட்டங்களை உள்ளடக்கியதாகும் :

1. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் திறனை (capacity) மேம்படுத்துதல்

2. செயல்திறனுக்கான அளவுகோல்களை நிர்ணயித்தல்

3. அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஆகியோருக்குப் பயிற்சி அளித்தல்

4. கணக்கு வைப்பு, பொறியியல் பணி, திடக்கழிவு நிர்வாக ஒப்பந்தம் அளித்தல் போன்றவற்றிற்கான கையேடு தயாரித்தல்

5. நகராட்சிகளின் பல்வேறு பணிகளை கணினிமயமாக்கத் தேவையான மென்பொருட்கள் மற்றும் கணினிகள் வாங்குதல்

6. நகராட்சி நிர்வாகத் துறையின் திறனை மேம்படுத்துதல்

**2—**

### நிரந்தரத் தொழிலாளர்கள்

**வினா எண் 26723—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு நகராட்சியில் பொறியியல் பிரிவு, பூங்கா பணி, சாலை பராமரிப்புப் பணிகளில் உள்ள பணியாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் அனைவரும் நிரந்தரத் தொழிலாளர்களா?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு நகராட்சி பொறியியல் பிரிவு, பூங்கா பணி, சாலை பராமரிப்புப் பணி ஆகியவற்றில் 181 பணியாளர்கள் உள்ளனர். அவர்களில் 79 பேர் நிரந்தரப் பணியாளர்கள், மீதி 102 பேர் தினக்கூலிப் பணியாளர்கள் ஆவர்.

**3—**

### புதிய பேருந்து நிலையம்

**வினா எண் 26994—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பெண்ணாகரம் பேரூராட்சி பஸ் நிலையம் மிகவும் நெருக்கடியாய் இருப்பதும் கடைவீதி மிகவும் குறுகலாக இருப்பதும் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் புதிய பஸ் நிலையத்திற்கு இடம் தேர்வு செய்துதர முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பெண்ணாகரம் பேருந்து நிலையத்தைச் சுற்றிலும் உள்ள ஆக்கிரமிப்புக்கள் அனைத்தும் அகற்றப்பட்டுள்ளன. பேருந்து நிலையத்தில் போதிய அளவிற்கு காலியிடம் உள்ளது. இவ்விடத்தில் ரூபாய் 1.10 கோடியில் புதிய பேருந்து நிலையம், கடைகள் மற்றும் தினசரி அங்காடி அமைக்க கடன் உதவி கேட்டு கருத்துரு டுபிட்கோவிற்கு பரிந்துரை செய்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

4—

### சிறு பாலம்

**வினா எண் 27344—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காமலாபுரம் ஊராட்சியில் காமலாபுரம் பஸ்டாப் - மெயின்ரோடு குறுக்கே, வட்டக்காடு அருகில் கோடி வாய்க்கால் குறுக்கே, சேசியன்பாடு - கிழக்கத்திக்காடு பாதை - மெயின் வாய்க்கால் குறுக்கே சிறுபாலம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நிதிநிலைக்கேற்ப வரும் 2000-2001 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

5—

### சாலையைச் சீரமைத்தல்

**வினா எண் 27752—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலைநகர் பேரறிஞர் அண்ணா சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



6—

### சாலை வசதி

**வினா எண் 27754—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகரியம், திருமூலர் தெருவிற்கு புதிய தார்ச் சாலை அமைத்து சோடியம் ஆவி விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மறைமலைநகர் பேரூராட்சியிலுள்ள திருமூலர் தெருவிற்கு ஏற்கெனவே போடப்பட்ட தார்ச் சாலை நல்ல நிலையில் உள்ளதால் புதிதாக தார்ச் சாலை அமைக்கவில்லை. இத்தெருவில் உள்ள அனைத்து மின் கம்பங்களிலும் 4 குழல் மின் விளக்குகள் பொருத்தி நல்ல நிலையில் எரிகின்றன. முக்கியமான சாலை சந்திப்புகளில்தான் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டு வருவதால், இத்தெருவில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தவில்லை.

7—

### சாலையைப் புதுப்பித்தல்

**வினா எண் 28107—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதி, அகரம் பேரூராட்சி கோட்டூர்-ஆவாரம்பட்டி சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சாலை எப்போது போடப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அகரம் பேரூராட்சிக்குட்பட்ட கோட்டூர்-ஆவாரம்பட்டி சாலை (மொத்தம் 3.775 கி.மீ. நீளம்)யினை 2000-2001 ஆம் நிதியாண்டில் தார்ச் சாலையாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**8—**

**தார்ச் சாலை**

**வினா எண் 28913—திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதியில் வடகரை கிராமத்தில் கல்குளம் சாலை பழுதடைந்து போக்குவரத்துக்கு சிரமமாக உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தார்ச் சாலை போடப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பணி நடைபெற்று வருகிறது.

**9—**

**சிறிய பாலம்**

**வினா எண் 28933—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், காடையாம்பட்டி பேரூராட்சியிலுள்ள ஆற்றின் குறுக்கே சிறிய பாலம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1999-2000 வருட தேசிய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சிறு பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**10—**

**வணிக வளாகம்**

**வினா எண் 28469—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் வணிக வளாகம் ஒன்று அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**11—**

**தொழிற் பயிற்சி நிலையம்**

**வினா எண் 29369—திரு. பெ.க. திருவேங்கடம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி சார்பில் தொழிற்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு உள்ளதா? அதன் விவரமென்ன?

(ஆ) அதன் நோக்கம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சென்னை மாநகராட்சி நிர்வாகத்தின்கீழ் 1999-2000 ஆண்டு ஆகஸ்ட் முதல் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டு, ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் பெரும்பாலும் குடிசைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வறுமை நிலையில் உள்ளவர்கள், இவர்களுக்கு எளிதில் வேலை கிடைப்பதற்கு தொழில்நுட்பப் பயிற்சி அளிக்க வேண்டிய அவசியத்தை கருத்தில்கொண்டு, சென்னை மாநகராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தேசிய வாழ்வியல் பயிற்சி முறையில் செயல்பட இத்தொழிற் பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப மாநகராட்சிப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு 80 விழுக்காடும், மாநகராட்சிப் பணியாளர் மாணவர்களுக்கு 20 விழுக்காடும் இப்பயிற்சி நிலையத்தில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**12—**

## பேரூராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு

**வினா எண் 29395—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்தாவது நிதிக் குழு திட்டத்தின் மூலம் ஒதுக்கும் தொகை பேரூராட்சிப் பகுதிகளுக்கு எந்த அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது?

(ஆ) இதன் மூலம் என்னென்ன பணிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன?





விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பத்தாவது நிதிக் குழு நிதி ஒதுக்கீட்டில் 75 விழுக்காடு பேரூராட்சிகளின் மக்கள் தொகை அடிப்படையிலும் 25 விழுக்காடு அவசரத் தேவைகளின் அடிப்படையிலும் ஒதுக்கப்படுகிறது.

(ஆ) இதன்மூலம் பேரூராட்சிகளில் அடிப்படை வசதி பணிகளான சாலை வடிகால், சிறுபாலம், குடிநீர், தெரு விளக்கு போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**13—**

## அடிப்படைத் தேவைகள்

**வினா எண் 30082—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பேரூராட்சியில் மக்கள் வசிக்கும் பெரும்பகுதி குற்றாலநாதர் கோவில் நிருவாகத்தின்கீழ் வருவதால், பேரூராட்சி நிருவாகத்தின் மூலம் அங்கு வசிக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குற்றாலம் பேரூராட்சியில் மக்கள் வசிக்கும் பெரும்பகுதி திருக்குற்றாலநாதர் கோவில் நிர்வாகம் தொடர்பான கடைகள் அடங்கிய கடை வீதியாகவே உள்ளது. அங்குள்ள மக்களுக்குத் தேவையான தெரு மின் விளக்கு வசதி, சாலை வசதி மற்றும் கழிவறை வசதி உள்ளன. கூடுதலாகக் குடிநீர் வசதி செய்துதர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[2000 நவம்பர் 13

14—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 30086—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, தாவடநல்லூர் ஆதிதிராவிட மக்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, தாவடநல்லூர் ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் குடிநீர்த் திட்டம் முடிவுற்று உள்ளாட்சியின் பராமரிப்புக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

15—

### சாலை பராமரிப்பு

**வினா எண் 30253—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஐந்தருவியிலிருந்து இலஞ்சி வரையுள்ள பேரூராட்சிக்குச் சொந்தமான சாலையைப் பராமரிக்கும் பொறுப்பை நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

16—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 30441—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம், கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி சாலைப் போக்குவரத்து நிறுவனம்—இராமலிங்கம் காசநோய் மருத்துவமனை எல்லைக்குள் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க நிலம் கேட்டு விண்ணப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நிலம் கேட்டல் தொடர்பான விண்ணப்பம் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

17—

### பாதுகாக்கப்பட்ட குடிநீர்

**வினா எண் 30694—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) திண்டுக்கல் தொகுதி, சிறுமலை ஊராட்சியிலுள்ள மலை கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திண்டுக்கல் மாவட்டம், சிறுமலை ஊராட்சியில் உள்ள மலைக் குடியிருப்பிற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) சிறுமலை ஊராட்சி 1) அண்ணாநகர் 2) வேளாண்பண்ணை 3) தேன்மலை 4) சிறுமலை பழையூர் 5) சிறுமலை புதூர் 6) கடம்பன்குளம் 7) அரளிக்காடு 8) தாளக்கடை 9) தவிட்டுக்கடை மற்றும் 10) அகஸ்தியாபுரம் ஆகிய குடியிருப்புகளை உள்ளடக்கியது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பத்து குடியிருப்புகளில் அண்ணாநகர், வேளாண்பண்ணை, தேன்மலை ஆகிய மூன்று குடியிருப்புகளுக்கு இந்த நிதியாண்டில் (2000-2001) குடிநீர்த் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மீதமுள்ள ஏழு குடியிருப்புகளுக்கும் முன்னுரிமை மற்றும் தேவையின் அடிப்படையில் பின்னர் வரும் நிதியாண்டுகளில் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

18—

### வணிக வளாகம்

**வினா எண் 30907—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, எரியோட்டிற்கு வணிக வளாகம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வேடசந்தூர் தொகுதி, எரியோட்டிற்கு வணிக வளாகம் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

19—

### பாலம்

**வினா எண் 31907—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதியில் பாளையம் பேரூராட்சி, சேவகவுண்டச்சிப்பட்டி—சாணிப்பட்டி சாலையிலுள்ள அணைக்கரை, பெரியகுளம் கண்மாய்க்குச் செல்லும் ஆற்றில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேடசந்தூர் தொகுதியில் பாளையம் பேரூராட்சி சேவகவுண்டச்சிப்பட்டி—சாணிப்பட்டி சாலையில் உள்ள அணைக்கரை, பெரியகுளம் கண்மாய்க்கு செல்லும் ஆற்றுப்பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

20—

### சோடியம் ஆவி விளக்குகள்

**வினா எண் 32130—திரு. பீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) தாம்பரம் தொகுதி, கிழக்குக் கடற்கரைச் சாலையில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி கிழக்குக் கடற்கரைச் சாலையில் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**21—**

**புதிய நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 32139—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பணிகொண்டான்விடுதி ஊராட்சி, திருவோணத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளதால் புதியதாக கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பணிகொண்டான்விடுதி ஊராட்சியில் பணிகொண்டான் விடுதி குடியிருப்பிலுள்ள மேல்நிலைத் தொட்டியே பழுதடைந்துள்ளது. திருவோணம் குடியிருப்பு காவாலிப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்ததாகும். பணிக்கொண்டான்விடுதி ஊராட்சிக்குச்



2000 நவம்பர் 13]

சொந்தமான இடத்தில் திருவோணம் குடியிருப்பிற்கு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் கட்டப்பட்ட 20,000 லிட்டர் மேல்நிலை தொட்டியிலிருந்து குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. அது போதுமானதாக இல்லாததால் புதிதாக 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல், 2000 மீ. விநியோகக் குழாய் பதித்தல் மற்றும் 19 பொதுக் குழாய்கள் அமைத்தல் ஆகிய பணிகள் முடிவுற்றுள்ளன. விரைவில் மின் இணைப்பு பெற்று இக்குடிநீர்த் திட்டம் மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

**22—**

**உச்சவரம்பை உயர்த்துதல்**

**வினா எண் 32430—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிர்வாக தாமதத்தைத் தவிர்க்கும் வகையில் அரசு நிதியில் செய்யும் வேலைகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கும் உச்சவரம்பை ஒன்றியங்களுக்கு ரூபாய் ஐந்து இலட்சமாகவும், ஊராட்சிகளுக்கு ரூபாய் இரண்டு இலட்சமாகவும் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் உள்ள உபரி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் தனியான மூலதனப் பணிகளுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் ரூ.5.00 இலட்சம் வரை செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு ஒப்புதல் அளிக்க அதிகாரம் அரசு ஆணை (நிலை) எண் 85, ஊரக வளர்ச்சி, நாள் 6-5-1998-ல் அளிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று கிராம ஊராட்சி உபரி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் தனியான மூலதனப் பணிகளுக்கு ரூ.1 இலட்சம் வரை ஒப்புதல் அளிக்கக்கூடிய அதிகாரம் அரசாணை (நிலை) எண் 189, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 3-9-1998-ல் அளிக்கப்பட்டுள்ளது.

**23—**

**விளம்பர வரி**

**வினா எண் 32436—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகராட்சிகளில் விதித்துள்ளது போல் ஊராட்சிப் பகுதிகளில் விளம்பரம் செய்ய வரி விதிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிப் பகுதிகளில் விளம்பரம் செய்ய வரி விதிப்பதற்கு ஊராட்சிகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டு, அதற்கான சட்டம் 15-10-1999 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

**24—**

**குடிநீர்த் திட்டப்பணி**

**வினா எண் 32604—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாடம்பாக்கம் பேரூராட்சி குடிநீர்த் திட்டப் பணி விரைவில் தொடங்கப்படுமா?

(ஆ) அதன் மதிப்பீடு மற்றும் பணி விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாடம்பாக்கம் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.264.685 இலட்சங்களுக்கு விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, மண்டல தொழில் நுட்பக் குழு ஒப்புதல்





பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**25—**

**பாதாள சாக்கடை**

**வினா எண் 32901—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதியில், ஆலந்தூர் நகராட்சியை ஒட்டி மிக வேகமாக வளர்ந்து வரும் உள்ளகரம்-புழுதிவாக்கம் பேரூராட்சி மற்றும் மடிப்பாக்கம் ஊராட்சியை ஆலந்தூர் பாதாள சாக்கடை திட்டத்துடன் இணைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**26—**

**பேரூராட்சிகளில் கணினிகள்**

**வினா எண் 33117—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் பேரூராட்சிகளிலும் கணினிகள் வாங்கி நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

[2000 நவம்பர் 13

**27—**

**சாக்கடை வசதி**

**வினா எண் 33361—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி, கொங்கணாபுரம், எடங்கணசாலை ஆகிய பேரூராட்சிகளில் விரிவான சாக்கடை கட்டி சுகாதார மேம்பாடு செய்ய அரசு மானிய கடன் வழங்குமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

**28—**

**ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்**

**வினா எண் 33418—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் சாலை ஓர ஆக்கிரமிப்புகளை நிரந்தரமாக அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் சாலையோர ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன.



2000 நவம்பர் 13]

**29—**

**சிறுவர் பூங்கா**

**வினா எண் 33619—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் புலி அருவியில், சிறுவர் பூங்கா அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் புலி அருவியில், சிறுவர் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

**30—**

**விடுதிகளை நவீனப்படுத்துதல்**

**வினா எண் 33934—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பேரூராட்சி, பேருந்து நிலைய மாடியில் உள்ள தங்கும் விடுதிகளை பழுது பார்த்து நவீனப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

[2000 நவம்பர் 13

(ஆ) குற்றாலம் பேரூராட்சி பேருந்து நிலைய மாடியில் உள்ள 7 அறைகளில் பராமரிப்புப் பணி செய்து முடிக்கப்பட உள்ளது.

31—

படுக்கைக் கூடத்தை பழுதுபார்த்தல்

**வினா எண் 33938—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பேரூராட்சி, அருவிக்கரை படுக்கைக் கூடத்தைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) குற்றாலம் பேரூராட்சி அருவிக்கரை படுக்கைக் கூடம் பழுது பார்க்கப்பட்டு தற்போது நல்ல முறையில் உள்ளது.

32—

சாலையைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 33940—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பேரூராட்சி தென்காசி சாலை சிற்றில்களைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பழுதுபார்க்கும் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன.

33—

நிழற்குடை அமைத்தல்

**வினா எண் 33943—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலம் பேரூராட்சி ஐந்தருவியிலுள்ள வாகன நிறுத்தத்தில் பயணிகள் நிற்கும் வண்ணம் நிழற்குடை ஒன்று அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் ஆண்டு பேரூராட்சி நிதிநிலைக்கேற்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

34—

விடுதிகளை ஏலம் விடுதல்

**வினா எண் 33978—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலம் பேரூராட்சி தங்கும் விடுதிகளை ஏலம் விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2001-ல் சீசன் காலத்தில் பேரூராட்சி தங்கும் விடுதிகளை குத்தகைக்கு விடும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**35—**

## புதிய இணைப்புச் சாலை

**வினா எண் 34003—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சி, தென்காசி ரயில் நிலையம் முன்புள்ள ரெயில்வே பீடர் (ரோடு) சாலையிலிருந்து ஆய்குடி சாலையை இணைக்கும் வகையில் புதிய இணைப்புச் சாலை சட்டமன்ற உறுப்பினர் வளர்ச்சித் திட்டத்தில் அமைக்க தேவையான இடத்தை இரயில்வே துறையிடமிருந்து பெற்று தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சி, தென்காசி ரயில் நிலையம் முன்புள்ள ரயில்வே பீடர் (ரோடு) சாலையிலிருந்து ஆய்குடி சாலையை இணைக்கும் வகையில் புதிய இணைப்புச் சாலை அமைக்கத் தேவையான நிலம் இரயில்வேயிடமிருந்து பெற இயலாத நிலையில், அத்திட்டம் கைவிடப்பட்டுவிட்டது.



**36—**

## அறிவியல் பூங்கா

**வினா எண் 34057—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை நகராட்சி பூங்காவில் அறிவியல் பூங்கா, தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையத்தின் மூலம் ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை நகராட்சி பூங்காவில் அறிவியல் பூங்கா தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையத்தின் மூலம் ஏற்படுத்தி கொடுக்க நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. ஆகவே இத்திட்டத்தைச் செயல்படுத்த இயலவில்லை.

**37—**

## ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா எண் 34209—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், 15 வேலம்பாளையம், பெரியார் காலனியிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி அந்த இடத்தை பேரூராட்சியிடம் ஒப்படைக்குமாறு அரசிற்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஒப்படைக்கப்படும்?

53-317—20

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**38—**

**குடிநீர் விநியோகம்**

**வினா எண் 34229—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகருக்குள் குடிநீர் விநியோகம் எத்தனை நாளைக்கு ஒருமுறை வழங்கப்படுகிறது?

(ஆ) இரவு நேரங்களில் குடிநீர் விநியோகம் செய்வதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் நகராட்சி, பொது மக்களுக்கு சமநிலையில் குடிநீர் விநியோகிக்கும்பொருட்டு எட்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பூச்சிக்காடு, அவிநாசி சாலையில் அமைந்துள்ள குடியிருப்புகள், விநோபாஜி நகர் மற்றும் பெரிச்சிபாளையம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் மூன்று நாட்களுக்கு ஒரு முறை சுழற்சி முறை மூலமும், தாராபுரம் சாலையில் உள்ள பகுதிகளுக்கு இரண்டு நாட்களுக்கொரு முறையும், ராயபுரம் மற்றும் தென்னம்பாளையப் பகுதிகளுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாளும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) மேற்கண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் வடிவமைத்தபடி 24 மணி நேரமும் குடிநீர் ஏற்றப்பட்டுச் சுழற்சி முறையில் நகருக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதனால், சில பகுதிகளுக்கு இரவு நேரங்களில் குடிநீர் விநியோகம் செய்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.



2000 நவம்பர் 13]

திருப்பூர் பெருநகர் மூன்றாவது குடிநீர்த் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் முடிக்கப்பட்டு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இதற்கிடையே இத் திட்டத்தினைப் புதிய திருப்பூர் பகுதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, இத் திட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் திருப்பூர் நகருக்கு இரவு நேரங்களில் குடிநீர் விநியோகம் செய்வதைத் தவிர்க்க வாய்ப்பு உள்ளது.

**39—**

**சமூகக் கூடம்**

**வினா எண் 34234—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர் 11-ஆவது வார்டு அம்பேத்கர் காலனியில் ஒரு சமூகக் கூடம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர் 11வது வார்டு அம்பேத்கர் காலனியில் சமூகக் கூடம் கட்டும் உத்தேசம் தற்போது இல்லை.

**40—**

**பேருந்து நிலையம்**

**வினா எண் 34258—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணை சாலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணை சாலை பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**41—**

**வெள்ளப் பாதிப்பு**

**வினா எண் 34269—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) புவனகிரி தொகுதியின் கிழக்கு எல்லையான பரங்கிப்பேட்டை மற்றும் கிள்ளை பேரூராட்சிப் பகுதிகள் அடிக்கடி வெள்ளப் பாதிப்பு உண்டாவதிலிருந்து நிரந்தரத் தீர்வு காணும் வகையிலான திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**42—**

**கடல் நீரை குடிநீராக மாற்றல்**

**வினா எண் 34270—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

*(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை பேரூராட்சியில் கடல்நீரைக் குடிநீராக மாற்றும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம் புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை பேரூராட்சியில் கடல்நீரைக் குடிநீராக மாற்றும் திட்டம் பரிசீலனையில் இல்லை.*

**43—**

**புதிய சாலை**

**வினா எண் 34414—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஓலகடம் பேரூராட்சி குந்துபாயூர் ஓலகடம் தார்ச் சாலையில் இருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும், சாலையே இல்லாத தாண்டாம்பாளையம் காலனிக்குப் புதிய சாலை அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஓலகடம் பேரூராட்சி குந்துபாயூர் ஓலகடம் தார்ச் சாலையில் இருந்து தாழ்த்தப்பட்ட மக்கள்*

[2000 நவம்பர் 13

வசிக்கும், சாலையே இல்லாத தாண்டாம்பாளையம் காலனிக்கு புதிய சாலை அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

44—

**ஆழ்குழாய்க் கிணறு**

**வினா எண் 34419—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, சலங்கப்பாளையம் பேரூராட்சி கிருஷ்ணாபுரத்திலும், மின்னவெட்டுவம்பாளையத்திலும், மேல்நிலைத் தொட்டிகள் கட்டி, ஆழ்குழாய்க் கிணறு அமைத்தும் இன்னும் குடிநீர் வழங்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி சட்டமன்றத் தொகுதி, சலங்கப்பாளையம் பேரூராட்சியிலுள்ள கிருஷ்ணாபுரம் குடியிருப்பில் 685 நபர்கள் பயன்பெறும் வகையில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி மற்றும் பகிர்மானக் குழாய்கள் அமைப்புடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு ஜனவரி 2000 முதல் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

சலங்கப்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட மின்னவெட்டுவம்பாளையம் குடியிருப்பில் சுமார் 800 நபர்கள் பயன்பெறும் வகையில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி மற்றும் பகிர்மானக் குழாய் அமைப்புடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு மார்ச் 2000 முதல் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.



2000 நவம்பர் 13]

45—

**அறிவியல் பூங்கா**

**வினா எண் 34496—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பேரூராட்சி பாம்புப் பண்ணை வளாகத்தில் தமிழ்நாடு அறிவியல் மையத்தின் மூலம் அறிவியல் பூங்கா ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

46—

**கழிவு நீர்க் குழாய்கள்**

**வினா எண் 34517—திரு. பெ.க. திருவேங்கடம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அனைத்து தெருக்களிலும் கழிவு நீர்க் குழாய்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

[2000 நவம்பர் 13

(ஆ) சென்னையில் உள்ள 13,475 தெருக்களின் மொத்த நீளமான 2,430 கிலோ மீட்டரில் தொழில்நுட்ப சாத்தியக் கூறுகள் உள்ள தெருக்களில் இதுவரை 2,100 கிலோ மீட்டர் நீளத்திற்கு கழிவு நீரகற்று வசதி செய்யப்பட்டுள்ளது.

47—

**குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்**

**வினா எண் 34538—திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னமனூர் நகராட்சியில் குடிநீர் பெரியாற்றில் உறைகிணறு மூலம் எடுப்பதைத் தவிர்த்து அங்கு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம் சின்னமனூர் நகராட்சிக்கு தற்போது வழங்கப்படும் குடிநீர், சுருளியாற்றில் அமைக்கப்பட்டுள்ள நீர் உறிஞ்சு கிணறுகள் மூலம் பெறப்பட்டு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் ஏற்றப்பட்டு பகிர்மானக் குழாய்கள் மூலம் விநியோகிக்கப்படுகிறது. நீர் உறிஞ்சு கிணறுகள் மூலம் பெறப்படும் குடிநீருக்கு சுத்திகரிப்பு நிலையம் தேவைப்படுவதில்லை.



2000 நவம்பர் 13]

48—

**மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி**

**வினா எண் 34605—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம் தெள்ளார் ஒன்றியம், முளப்பட்டு, அருந்தோடு, அருந்ததிபாளையம், பொல்கூடபுத்தூர் கிராமங்களில் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், தென்னாத்தூர் ஊராட்சி, முளப்பட்டு கிராம குடியிருப்புக்கும் கொரக்கோட்டை ஊராட்சி, அருந்ததிபாளையம் ஆகிய இரண்டு குடியிருப்புகளுக்கு மட்டும் நடப்பு நிதி ஆண்டில் (2000-2001) பாதுகாக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அருந்தோடு மற்றும் பெருங்கூடபுத்தூர் ஆகிய குடியிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் பயனில் உள்ளது.

49—

**குடிநீர் வழங்கல்**

**வினா எண் 34609—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், குண்ணகம்பூண்டி ஊராட்சியில் குடிநீர் இன்றி பொது மக்கள் சிரமப்படுவதால் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், குண்ணகம்பூண்டி ஊராட்சிக்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ள தேசூர், தெள்ளார் மற்றும் இதர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் இக்கிராம குடியிருப்புக்கும் தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**50—**

**குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 34613—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவண்ணாமலை மாவட்டம் தெள்ளார் ஒன்றியம், பாஞ்சரை ஊராட்சி எல்லைக்குள் நீர் ஆதாரம் இல்லாததால் குடிநீர் வழங்க இயலாததை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், மாற்று திட்டத்தின் மூலம் குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், பாஞ்சரை ஊராட்சியில் (1) பாஞ்சரை மற்றும் (2) சித்தாத்துரை ஆகிய இரண்டு குடியிருப்புகள் உள்ளன. பாஞ்சரை குடியிருப்பிற்கு தேசூர்-தெள்ளார் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. சித்தாத்துரை குடியிருப்பிற்கு பாஞ்சரையிலிருந்து குழாய் நீட்டிப்பு மூலமாகவும் இரண்டு கையிறைப்பான்கள் மூலமாகவும் குடிநீர் வழங்கப்படுகிறது.



*(ஆ)* பாஞ்சரை குடியிருப்பிற்கு தேசூர்-தெள்ளார் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் ஒன்று விட்டு ஒரு நாள், நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. இக்குடியிருப்பில் தற்போது 50 வீட்டிணைப்புகள் உள்ளன.

சித்தாத்துரை குடியிருப்புக்கு பாஞ்சரையிலிருந்து குழாய் நீட்டிப்பு மூலமாகவும் கையிறைப்பான் மூலமாகவும், தற்சமயம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 20 லிட்டர் தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. நடப்பாண்டில் (2000-2001) தனி மின் இறைப்பான் திட்டம் மூலம் புதிய நீர் ஆதாரம் உருவாக்கி, இக்குடியிருப்பிற்கு குடிநீர் வசதி முழுமையாகச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**51—**

**கழிவுநீர்க் கால்வாய்**

**வினா எண் 35292—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சென்னையில் உள்ள அனைத்து கழிவு நீர்க் கால்வாய்களை தூய்மைப்படுத்தும் திட்டம் மாநில அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதன் உத்தேச மதிப்பீடு என்ன?

*(இ)* எப்பொழுது திட்டம் தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* அதன் உத்தேச மதிப்பீடு ரூபாய் 16.76 கோடியாகும்.

*(இ)* இத்திட்டம் விரைவில் தொடங்கப்படும்.

[2000 நவம்பர் 13

52—

### சமுதாய நலக் கூடம்

**வினா எண் 35520—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலகரம் பேரூராட்சி, குடியிருப்பு கிராமத்தில் ஒரு சமுதாய நலக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேலகரம் குடியிருப்பு கிராமத்தில் சமுதாய நலக் கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

53—

### குடிநீர் வசதி

**வினா எண் 35522—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் தொகுதி, தில்லையாடி வள்ளியம்மை நகர், என்.வி.என். நகர், நேரு நகர் ஆகிய பகுதிகளிலுள்ள மக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளான தில்லையாடி வள்ளியம்மை நகர், என்.வி.என். நகர் மற்றும் நேரு நகரில் வாழும் மக்களுக்கு தினமும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் குழாய்களின் மூலம் வழங்கப்படுகின்றது.



2000 நவம்பர் 13]

54—

### ஊராட்சிகளுக்கு அதிகாரம்

**வினா எண் 35796—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய அரசியல் சட்டப்பிரிவு 243(ஜி), தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டக்கூறு 257-ன்படி 29 துறைகளின் அதிகாரமும் முழுமையாக ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) முதற்கட்டமாக மாநில திட்டக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று சிறுபாசனம், சமூகக்காடுகள் மற்றும் பண்ணைக்காடுகள், சிறுகாடுகளின் உற்பத்தி, விறகு மற்றும் தீவனம் மற்றும் வயது வந்தோர் மற்றும் முறைசாராக் கல்வி ஆகிய பொருள்களைத் தவிர மற்ற 24 பொருள்கள் மீது மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரம், பொறுப்புகள் மற்றும் உரிமைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக, உயர்நிலைக்குழு பரிந்துரைகளின்படி 29 பொருட்கள்மீது மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரம், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன.

55—

### மாவட்ட திட்டமிடல் குழு

**வினா எண் 35797—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்ட வளர்ச்சிக்குரிய மாவட்ட திட்டமிடல் குழு மாவட்ட ஊராட்சித் தலைவரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளதா?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். 2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (ஐந்தாவது திருத்தச் சட்டத்தின்) வாயிலாக மாவட்ட திட்டமிடல் குழுவின் தலைமையாளராக மாவட்ட ஊராட்சித் தலைவரும், துணைத் தலைமையாளராக மாவட்ட ஆட்சியரும் நியமிக்கப்பட்டு குழு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

**56—**

**சிறப்புப் பிரிவுகள்**

**வினா எண் 35827—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் அரசு மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை சிறப்புப் பிரிவு ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் அரசு மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை சிறப்புப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

**57—**

**சமுதாய நலக் கூடம்**

**வினா எண் 36149—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், மேலகரம் பேரூராட்சி, நன்னகரம் கிராமத்தில் சமுதாய நலக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**58—**

**சிறுவர் பூங்கா**

**வினா எண் 36153—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலகரம் பேரூராட்சிப் பகுதியில் சிறுவர் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேலகரம் பேரூராட்சிப் பகுதியில் தகுதியான இடவசதி இல்லாததால் சிறுவர் பூங்கா அமைக்க இயலாத நிலை உள்ளது.

**59—**

**கட்டடத்தைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 36416—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், நாஞ்சிக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஓட்டுக் கட்டடம் பழுது அடைந்துள்ளதை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், நாஞ்சிக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்குப் புதியதாகப் பள்ளிக்கட்டடம் கட்டப்பட்டுவிட்டது.

**60—**

**பேருந்து நிலையம்**

**வினா எண் 36445—திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெண்ணைநல்லூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவெண்ணைநல்லூர் பேரூராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**61—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 37372—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியத்தில் புளோரைடு பாதிப்பு கிராமங்களுக்கு காவிரி ஆற்று நீர் வழங்கும் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர், காடையாம்பட்டி, நங்கவள்ளி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள புளோரைடால் பாதிக்கப்பட்ட 136 குடியிருப்புகள் மற்றும் புளோரைடால் பாதிக்கப்படாத குடிநீர் பிரச்சினை உள்ள 512 வழியோர கிராமக் குடியிருப்புகள் மற்றும் மேச்சேரி, காடையாம்பட்டி பேரூராட்சிகளுக்கு காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.50 கோடியே 4 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு 4/2000-ல் நடந்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு மேற்படி மதிப்பீட்டினை அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் ஒப்புதல் பெற்றபின் அரசின் நிர்வாக ஒப்புதல் பெற்று இதற்கான அரசு ஆணை வழங்கப்பட்ட பின்னர் நடைமுறை விதிமுறைகளின்படி பணிகள் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கான தலைமைப் பணியிடத்தில் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு நீர் சேகரிக்கும் கிணறு கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

**62—**

**மழைநீர்**

**வினா எண் 37380—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மழைநீரை சேகரித்து குடிநீருக்குப் பயன்படுத்தும் முறை தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மழைநீரை சேகரித்து குடிநீருக்குப் பயன்படுத்தும் முறை தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. அதனை தமிழகம் முழுவதும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**63—**

**நிதியுதவி**

**வினா எண் 37777—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை நிதிநிலை நலிந்த நிலையில் உள்ள பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரத்தை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**64—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 37981—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துவாச்சாரி பகுதி-1, நம்பிக்கை இல்லம் பின்புறம் சுதந்திர தினப் பொன்விழா நகரில் உள்ள பூங்கா இடத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத்



தொட்டி அமைத்து குடிநீர் குழாய் இணைப்பு வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந் நிதியாண்டில் பூர்த்தி செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள வேலூர் நகராட்சி மற்றும் சத்துவாச்சாரி பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கான விரிவான மதிப்பீட்டில், மேற்படி சத்துவாச்சாரி பகுதி-1 நம்பிக்கை இல்லம் பின்புறம் சுதந்திர தினப் பொன்விழா நகரில் உள்ள பூங்கா அருகில் 4.0 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) வேலூர் நகராட்சி சத்துவாச்சாரி நகரப் பேரூராட்சி மற்றும் 12 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அரசு ஆணை நிலை எண் 166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (கு.வ.1) துறை, நாள் 11-8-2000-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 2000-2001-ல் இத்திட்டப் பணிகள் தொடங்கப்படும்.

**65—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 38017—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சிக்கு உட்பட்ட இந்திரா நகர் மலையடிவாழ் மக்கள் குடிநீர் தட்டுப்பாட்டில் அல்லல்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சத்துவாச்சாரி பேரூராட்சிக்குட்பட்ட இந்திரா நகர் மலையடிவாழ் மக்கள் வசிக்கும் பகுதிக்கு 6 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டில் உள்ளன.

**66—**

**குடிநீர் விநியோகம்**

**வினா எண் 38047—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி, ஆம்பூர், குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க காவிரி ஆற்று நீரை ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியிலிருந்து கொண்டு வந்து விநியோகம் செய்ய அரசு திட்டம் தீட்டுமா?

(ஆ) எப்போது அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வாணியம்பாடி, ஆம்பூர், குடிநீர் பிரச்சினையைப் போக்க காவிரியாற்று நீரை ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியிலிருந்து கொண்டு வந்து விநியோகம் செய்ய விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

(ஆ) மேற்படி திட்டத்தின் ஆய்வுப் பணிகள் முடிந்து அதன் பரிசீலனைக்குப் பின் விரிவான மதிப்பீட்டிற்கான உரிய அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டதும் திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**67—**

**சிறுவர் பூங்கா**

**வினா எண் 38537—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துவாச்சாரி பேரூராட்சி "எல்" டைப் பகுதியில் சிறுவர் பூங்கா அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சத்துவாச்சாரி பேரூராட்சி "எல்" டைப் பகுதியில் சிறுவர் பூங்கா அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

**68—**

**மாநகராட்சியாக்குதல்**

**வினா எண் 38950—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சியை மாநகராட்சியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**69—**

**கூட்டுக் குடிநீர்**

**வினா எண் 39044—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தக்கோலம், நெமிலி, பனப்பாக்கம், பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படாமல் காலதாமதம் ஆவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ளபடி வேலூர் மாவட்டத்தில் தக்கோலம், நெமிலி, பனப்பாக்கம் ஆகிய மூன்று பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏதும் தற்போது வாரியத்தின் பரிசீலனையில் இல்லை. இம்மூன்று பேரூராட்சிகளுக்கும் தனித்தனியாக குடிநீர்த் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஏற்கெனவே செயல்படுத்த ஒப்புதல் பெறப்பட்டு செயலாக்கத் திட்டப் பணிகள் பல்வேறு நிலைகளில் முடிவுற்றுள்ளன.

(ஆ) தக்கோலம் குடிநீர்த் திட்டமும் பனப்பாக்கம் குடிநீர்த் திட்டமும் செயல்படுத்தப்பட்டு 28-4-2000 முதல் பேரூராட்சிகள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நெமிலி பேரூராட்சிக்கான குடிநீர்த் திட்டம், இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 3/2001ல் முடிவுறும்.

**70—**

### இட ஒதுக்கீடு

**வினா எண் 13422அ—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண்மை படிப்பிற்கு கிராமப்புற மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஆம். அரசாணை (நிலை) எண் 552, வேளாண்மை, நாள் 22-12-1997ன் படி கிராமப்புற பள்ளிகளில் பயின்றுவரும் மாணவர்களுக்கு 1998-99 ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த பட்ட வகுப்புகளில் 15 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதன்படி வேளாண்மை மற்றும் அது சார்ந்த பட்ட வகுப்புகளில் மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.



2000 நவம்பர் 13]

**71—**

### வாய்க்காலைச் செப்பனிடுதல்

**வினா எண் 22462—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், சென்னியவிடுதி ஊராட்சி, 15ஆம் நம்பர் வாய்க்காலைச் செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம் சென்னிய விடுதி ஊராட்சி 15ஆம் எண் வாய்க்காலைச் செப்பனிடும் பணி 1999-2000 ஆண்டில் முடிக்கப்பட்டுவிட்டது.

**72—**

### மானிய விலை

**வினா எண் 30386—திரு. எஸ்.எஸ். மணி நாடார்,** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கென மானிய விலையில் விதைகள், மரக்கன்றுகள், நாற்று மற்றும் ரசாயன உரங்கள் வழங்க அரசின் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென தோட்டக்கலைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மாநில திட்டங்களில், சிறப்பாக ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தனி ஒதுக்கீடு

அளிக்கப்பட்டு மானிய விலையில் விதைகள், மரக்கன்றுகள், உரம் ஆகியவை வழங்க திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மேலும் மைய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கென மானியம், ஆதிதிராவிட விவசாயிகளைச் சென்றடைய குறிப்பிட்ட சதம் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றது.

**73—**

**பழங்கள் ஏற்றுமதி**

**வினா எண் 30725—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பழ வகைகள் யாவை?*

*(ஆ) அவற்றின் மூலம் கிடைக்கும் அன்னியச் செலவாணி 1998-99-ல் எவ்வளவு கிடைத்துள்ளது?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மாம்பழம், மாதுளை, திராட்சை.*

*(ஆ) ரூ. 1,05,75,487/-*

**74—**

**விவசாய நிலத்தை சீர் செய்தல்**

**வினா எண் 30847—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், தேவிப்பட்டினம் கிராமத்தில் 10-12-1998 அன்று ஏற்பட்ட புயல் மழையால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களின் விவசாய நிலங்கள் சரி செய்யப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**





*(அ) ஆம்.*

*(ஆ) 1998ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், தேவிப்பட்டினம், சிவகிரி மற்றும் விஸ்வநாதப்பேரி போன்ற கிராமப் பகுதிகளில் புயல் மழையால் பாதிக்கப்பட்ட 199.76.0 ஹெக்டேர் விளை நிலங்கள் ரூ. 10,36,400/- செலவு செய்து சீரமைக்கப்பட்டுள்ளன.*

**75—**

**பருத்தி பயிரிடுதல்**

**வினா எண் 32211—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாட்டில் பூச்சித் தாக்குதல் அதிகரித்துள்ளதால்தான் விவசாயிகள் பருத்தி பயிரிட அஞ்சுகிறார்கள் என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், பூச்சி தாக்குதலைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் பூச்சி தாக்குதலால் அஞ்சுமளவிற்கும் பருத்தி பயிர் பாதிக்கப்படவில்லை. பருத்தி சாகுபடி பரப்பு குறைந்துள்ளதற்கு முக்கிய காரணம், பருவமழை தக்க சமயத்தில் பெய்யாததுதான், ஏனெனில் மொத்த பரப்பான 2.50 எக்டர் பருத்தியில் சுமார் 1.50 எக்டரில் பயிரிடும் பருத்தி மானாவாரியாகத்தான் பயிரிடப்படுகிறது. பருவமழை போதுமான அளவில் பெய்யாவிட்டாலும் (அல்லது) காலங்கடந்து பெய்தாலும் பருத்தி சாகுபடி பரப்பளவு நேரடியாக பாதிக்கிறது.*

*(ஆ) பூச்சி தாக்குதலைத் தடுக்க, "பருத்தியைத் தாக்கும் புரடீனியா புழுவை ஒழிக்க, என்.பி.வி., தயாரித்து விநியோகம் செய்தல்" என்ற மாநில அரசின் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் வருடத்திற்கு 1500 எக்டருக்குத் தேவையான என்.பி.வி. வைரஸ் தயாரித்து அடக்க விலையில் விநியோகம் செய்யப்படுகிறது. இதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.45,000/- செலவிடப்படுகிறது.*

*என்.பி.வி. தயாரிப்பு மையங்கள் விழுப்புரம், கோபிசெட்டிப்பாளையம் மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.*

[2000 நவம்பர் 13

**76—**

**பூச்சிக் கட்டுப்பாட்டு முறை**

**வினா எண் 32221—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயப் பயிர்களுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்த உயிரியல் பூச்சிக் கட்டுப்பாட்டு முறை அமல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பயிர்களில் ஏற்படும் நோய்கள் மற்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த, உயிரியல் கட்டுப்பாட்டு முறை நன்மை தரும் பூசனம், டிரைக்கோடெர்ம விரிடியினை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம், விதைநேர்த்தி செய்து விதைப்பதால் விதை மூலம் பரவும் நோய்களான வேர் அழுகல் மற்றும் இலைப்புள்ளி போன்ற நோய்களை பயறுவகைப் பயிர்களிலும், மணிலா, பருத்தி பயிர்களிலும் உயிரியல் கட்டுப்பாட்டு முறை மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது.

**77—**

**வேளாண்மைக் கழகம்**

**வினா எண் 32224—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வேளாண்மைக் கழகம் (Agricultural Council) உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம். எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். அரசின் பரிசிலனையில் உள்ளது.

(ஆ) அகில இந்திய அளவில் அவ்வப்போது கண்டுபிடிக்கப்படும்



2000 நவம்பர் 13]

புதிய தொழில்நுட்பங்களைப் பரிமாறிக் கொள்ளவும், அங்கீகாரமற்ற பட்டதாரிகளைத் தடை செய்யவும், பட்டம் மற்றும் பட்டயப் படிப்பிற்கான பட்டதாரிகளைத் தடை செய்யவும், பட்டம் மற்றும் பட்டயப் படிப்பிற்கான வரன்முறைகளை வகுக்கவும், வேளாண் பட்டதாரிகள் சுய தொழில் மேற்கொள்ளவும், மருத்துவம், கால்நடை மருத்துவம் போன்று வேளாண்மை தொழில் நுட்பக் கல்வி என்ற அடிப்படையில் வேளாண் வல்லுநர்களைக் கொண்ட வேளாண்மை மன்றம் (Agricultural Council) ஒன்று அமைப்பது இன்றியமையாதது எனக் கருதி அரசு கொள்கை அளவில் ஏற்று இதற்கான சட்டமொன்றினை இயற்றவுள்ளது.

**78—**

**புதிய நெல் ரகங்கள்**

**வினா எண் 33869—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனி நபர் புதிய நெல் ரகங்களைப் பல்கலைக்கழகங்கள் மூலம் வெளியிட முன்வந்தால் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆராய்ச்சிக் கட்டணத்தைக் குறைக்க அரசு வழிவகை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது. தனி நபர் புதிய நெல் இரகங்களை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் மூலம் வெளியிட முன்வந்தால், எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டுமென்பதைப்பற்றி பல கோணங்களில் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் குழு ஆராய்ந்து முடிவு செய்துள்ளது. இதன்படி, அதற்காக தற்போது வசூலிக்கப்படவேண்டிய ரூ. 1 லட்சம் என்ற கட்டணத்தைக் குறைப்பது சாத்தியமில்லை.

**79—**

**காளான் வளர்ப்பு**

**வினா எண் 33875—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி வட்டத்தில் காளான் வளர்ப்பினை ஊக்குவித்து உழவர் சந்தைகளின் மூலம் விவசாயிகள் விற்பனை செய்திட அவர்களுக்கு ஊக்கம் அளிக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விவசாயிகளுக்கு காளான் சாகுபடி பற்றிய தொழில் நுட்பங்களை அளிக்கும் பொருட்டு, தமிழகத்தில் "காளான் வளர்ப்புத் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் எல்லா மாவட்டங்களிலும் உள்ள விவசாயிகளுக்கு காளானின் சாகுபடி குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரு விவசாயிக்கு ரூ. 500 வீதம் செலவிடப்படுகிறது. மேலும் காளான் விதைப்புட்டிகள், சாகுபடி பற்றிய கையேடு ஆகியவையும் இலவசமாக அளிக்கப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டின் மத்திய அரசு திட்டத்தின்கீழ், நெல்லை மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் இலக்கில், குறிப்பாக தென்காசி உழவர் சந்தை விவசாயிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பயிற்சியளித்து, அதனால் உற்பத்தியாகும் காளானை தென்காசி உழவர்சந்தையில் விற்பனை செய்திட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் காளான் சாகுபடி மேற்கொண்டு, காளான் விற்பனை மூலம் உரிய வருவாய் பெற்றிட வழிவகை செய்யப்படுகின்றது.

80—

## தரிசு நிலங்களைச் சமன் செய்தல்

**வினா எண் 34179—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரிசு நிலங்களைச் சமன் செய்வதற்கு விவசாயிகளுக்கு அரசு இயந்திரம் (புல்டோசர்) மணிக்கு ரூ. 650 என்று வாடகை விதித்திருப்பது அதிகம் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வாடகையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?



விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உழுவை வாடகைத் திட்டத்தின்கீழ் இயங்கும் அனைத்து மின் தள்ளும் இயந்திரங்கள் மற்றும் உழுவைகளுக்கான வாடகையினை ஆய்வு செய்யவும் மற்றும் விஞ்ஞான அடிப்படையில் வாடகையினை மறு நிர்ணயம் செய்வது தொடர்பாகவும் அரசுக்குப் பரிந்துரைக்க, உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மண்தள்ளும் இயந்திரங்கள் மற்றும் உழுவைகளின் வாடகை திருத்தி அமைக்கப்படும்.

81—

## தொழில்நுட்பப் பயிற்சி

**வினா எண் 34406—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி மற்றும் செங்கோட்டை வட்டத்தில் காளான் அபிவிருத்தித் திட்டத்தை செயல்படுத்தி விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி மற்றும் செங்கோட்டை வட்டத்தில் மைய அரசு திட்டமான காளான் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் காளான் சாகுபடி குறித்த பயிற்சி அளிக்கப்பட்டு, இப்பயிற்சியில் காளான் சாகுபடி குறித்த தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு விளக்கிக் கூறப்படுகிறது.

82—

## விவசாயிகளுக்கு உதவி

**வினா எண் 34409—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) சிக்கனமான முறையில் துளைகுழாய் கிணறுகளை எவ்விதம் போடுவது, நீர்வளம் எங்கு, எவ்வளவு ஆழத்திலிருக்கிறது என்பவற்றைத் துல்லியமாகக் கண்டறியும் பொருட்டு, நவீன விஞ்ஞான கருவிகள் பயன்படுத்திட விவசாயிகளுக்கு உதவ அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி, எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வேளாண் பொறியியல் துறையில் இச்செயல்முறைகள் நடைமுறையில் உள்ளன.

**83—**

**பழங்கள் பதப்படுத்துதல்**

**வினா எண் 34410—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் தென்காசியில் பழங்கள் பதப்படுத்தும் தொழிற்சாலை நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



2000 நவம்பர் 13]

**84—**

**எண்ணெய்ப் பனை சாகுபடி**

**வினா எண் 34412—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் எண்ணெய்ப் பனை சாகுபடி திட்டத்தை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எண்ணெய்ப் பனை சாகுபடித் திட்டம் 1997-98 ஆம் ஆண்டிலிருந்து திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**85—**

**தொழிற்சாலை**

**வினா எண் 35320—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் விளையும் சாமந்தி மற்றும் மல்லிகை மலர்களைக் கொண்டு வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லை.

86—

**நறுமணப் பயிர்**

**வினா எண் 35329—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பச்சோலி எனும் நறுமணப் பயிரை தென்னை மரங்களின் இடைவெளியில் பயிரிட்டு ஏற்றுமதிக்கான பரப்பினை விவசாயிகளிடம் பிரபலப்படுத்தி விவசாயிகளை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்.**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

87—

**ஆய்வுக்கூடம்**

**வினா எண் 35330—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் திசு வளர்ப்பு ஆய்வுக்கூடம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்.**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



88—

**தொழிற்சாலை**

**வினா எண் 35334—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசியில் தென்னை நார் கழிவை பயன்படுத்தி உரம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தென்னை நாரினைப் பயன்படுத்தி உரம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

89—

**தரிசு நில மேம்பாடு**

**வினா எண் 35342—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்றுமதி வாய்ப்பு நிறைந்த பெருநெல்லி உற்பத்தியைப் பெருக்க தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினை அரசு அனைத்து இடங்களிலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 1999-2000 ஆண்டில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. தோட்டக் கலைத் துறை மூலம் தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், பெரம்பலூர், ஈரோடு, புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தரிசுநில மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இவற்றில் திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் 520 எக்டர் பரப்பில் பெருநெல்லி ரூ.1.60 இலட்சம் செலவில் நடவு செய்யப்பட்டது.*

**90—**

**வேளாண் மன்றம்**

**வினா எண் 35344—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வேளாண் மன்றம் அமைப்பது குறித்து அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை அரசுக்கு வரப்பெற்றுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அப்பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) சட்டத் துறையுடன் கலந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*



2000 நவம்பர் 13]

**91—**

**மானியம்**

**வினா எண் 35350—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தாவரப் பூச்சிக்கொல்லி மருந்துகளை வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு தாவர பூச்சிக்கொல்லி மருந்துகள் மானிய விலையில் வழங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) பதில் ஏதும் எழவில்லை.*

**92—**

**தரிசு நிலம் மேம்பாடு**

**வினா எண் 35352—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தரிசு நிலமேம்பாட்டுத் திட்டத்தை மீண்டும் திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 2000-2001-க்குள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் 3000 ஏக்கர்களில் நிறைவேற்றப்படும்.*

93—

### விவசாயிகளுக்கு மானியம்

**வினா எண் 35353—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு காய்கறி மற்றும் கிழங்கு சாகுபடி செய்ய தேவையான விதைகளை 50% மானியத்தில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?*

விடை —

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தோட்டக்கலைத் துறையினால் செயல்படுத்தப் படுகின்ற ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் ஆகிய மாநில திட்டங்களில் 50% மானியத்தில் விவசாயிகளுக்கு காய்கறி விதைகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவற்றின் பெரும் பகுதி சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டங்கள் கடந்த ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டதுபோல் நடப்பு ஆண்டிலும் செயல்படுத்தப்படுகிறது.*

94—

### மானிய விலையில் தென்னங்கன்று

**வினா எண் 35361—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தென்னை வளர்ப்புத் திட்டத்தை தமிழகத்தில் பிரபலப்படுத்தும் வகையில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50% மானிய விலையில் தென்னங்கன்றுகளை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?*



விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) தென்னை வளர்ப்புத் திட்டத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50% மானியம் விலையில் தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

95—

### நாற்றுப்பண்ணை

**வினா எண் 35473—திரு கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், வடகரையில் உள்ள தென்னை நாற்றுப் பண்ணை சரியாக செயல்படாமல் இருப்பதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், வடகரையில் இரண்டு தென்னை நாற்றுப் பண்ணைகள் உள்ளன. ஒன்று அரசுக்குச் சொந்தமான நிலத்தில் இயங்கி வருகிறது. மற்றொன்று குத்தகை நிலத்தில் இயங்கி வந்தது. குத்தகை நிலத்தில் இயங்கி வந்த பண்ணையில் ஏற்பட்ட இடர்பாடுகளால் அரசுக்கு இழப்பு ஏற்படாமல் தவிர்க்க இப்பண்ணை மூடப்பட்டது. இப்பகுதியில் அரசுக்குச் சொந்தமான நிலத்தில் உள்ள பண்ணைகளின் மூலம் மாவட்டத்திற்குத் தேவையான தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றது. இதனால் விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏதுமில்லை.*

[2000 நவம்பர் 13

**96—**

**வாரியம்**

**வினா எண் 36011—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி வாரியம் அமைத்து இந்தத் தொழிலை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி வாரியம் அமைக்கும் கருத்துரு ஏதும் இத்துறையில் இல்லை.

**97—**

**விவசாயக் கல்லூரி**

**வினா எண் 38347—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், வேலூரில் விவசாயக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**98—**

**தென்னை ஆராய்ச்சி நிலையம்**

**வினா எண் 38429—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

(அ) திருநெல்வேலி மாவட்டம், வடகரை தென்னை நாற்றுப் பண்ணையில் தென்னை ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது. தஞ்சாவூர் மாவட்டம், வேப்பங்குளத்தில் ஒரு தென்னை ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகின்றது. இது அண்டை மாவட்ட விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றது. எனவே, திருநெல்வேலி மாவட்டம், வடகரை தென்னை நாற்றுப் பண்ணையில் தென்னை ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**99—**

**தரக் கட்டுப்பாடு**

**வினா எண் 38430—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரம் குறைந்த உரம் மற்றும் பூச்சி மருந்து, விதைகள் விற்பனை செய்வதைத் தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தரம் குறைந்த உரம், பூச்சி மருந்து மற்றும் விதைகள் விற்பனை செய்வதைத் தடுக்க, உரக் கட்டுப்பாடு ஆணை 1985, பூச்சி மருந்து சட்டம் 1968 மற்றும் விதைகள் சட்டம் 1966 ஆகியவை மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2000 நவம்பர் 13

**100—**

**உழவர்களுக்குப் பயிற்சி**

**வினா எண் 38439—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தேங்காய்நார் கழிவுகளை காளான் விதை மூலம் மக்கச்செய்து உரமாக்கிப் பயன்படுத்திடும் உழவர்களுக்கு பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* வேளாண் பொருட்களின் கழிவுகளை இயற்கை உரமாக மாற்றும் திட்டம் கைவிடப்பட்டது. எனவே உழவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் அவசியம் எழாது.

*(ஆ)* வினாவிற்கு இடமில்லை.

**101—**

**தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

**வினா எண் 38498—திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் தேனி மாவட்டத்தில் சின்ன ஏவலாபுரம், அய்யம்பட்டி, புளிக்குத்தி, வேப்பம்பட்டி ஆகிய பகுதிகள் தேர்வு செய்யப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், அங்கு என்ன பணிகள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளன?*



2000 நவம்பர் 13]

*விடை—*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* வாய்ப்பு இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

**102—**

**ஆராய்ச்சி நிலையம்**

**வினா எண் 39059—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியத்தில் விவசாய ஆராய்ச்சி நிலையம் தொடங்கி தரமான பழங்கள் மற்றும் மலர்கள் உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம் காடையாம்பட்டி ஒன்றியத்தில் விவசாய ஆராய்ச்சி நிலையத்தைத் தொடங்கி தரமான பழங்கள் மற்றும் மலர்கள் உற்பத்தி செய்ய தற்போது வாய்ப்புகள் ஏதும் இல்லை.

**103—**

**வேளாண்மைப் பொறியியல் திட்டம்**

**வினா எண் 39340—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பெண்ணாகரம் தொகுதியில், வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், வேளாண்மைப் பொறியியல் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதியில், வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், வேளாண்மைப் பொறியியல் திட்டத்தைச் செயல்படுத்த அரசிடம் தனியாக திட்டம் ஏதுமில்லை. இதற்காகத் தனியாக நிதியும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

**104—**

**மனித வள மேம்பாடு**

**வினா எண் 39413—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், அங்கு வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கால்நடை வளர்ப்பு உறுதித் திட்டத்தை அமல்படுத்த அரசு நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கால்நடை வளர்ப்பு உறுதித் திட்டத்தை அமல்படுத்த அரசிடம் தனியாக திட்டம் ஏதுமில்லை. இதற்காகத் தனியாக நிதியும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

**105—**

**இரசாயன உரங்கள்**

**வினா எண் 40180—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறு, குறு விவசாயிகளுக்கு மானிய விலையில் இரசாயன உரங்கள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில் இரசாயன உரங்கள் வழங்குவதற்கான அரசுத் திட்டம் ஏதுவும் இல்லை.

**106—**

**வேளாண்மைக் கல்லூரி**

**வினா எண் 40187—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இதுகுறித்து உத்தேசம் இல்லை.

**107—**

**சாலை வசதி**

**வினா எண் 8634—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி ஒன்றியம், மூங்கில்பட்டி கிராமத்திற்கு சாலை அமைத்துத்தர வனத் துறை முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி சாலையிலிருந்து மூங்கில்பட்டி கிராமத்திற்கு சிக்கபூர்த்தி வழியாக செல்லும் சாலையின் மொத்த நீளம் 5 கி.மீ. இதில் காப்புக்காட்டிற்குள் சுமார் 1.6 கி.மீ. தூரமும், காப்புக்காட்டிற்கு வெளியே சுமார் 3.4 கி.மீ. தூரமும் உள்ளது. இச்சாலையை மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**108—**

**வாய்க்கால்களைச் செப்பனிடுதல்**

**வினா எண் 21273—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி வட்டம், திருமேனி வாய்க்கால், பாலையூர் வாய்க்கால்களை உடன் செப்பனிட்டு பாசனம் பெறுவதற்கு வழிவகை செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

மன்னார்குடி வட்டம், திருமேனி வாய்க்கால் 1998 ஆம் ஆண்டு தூர் வாரப்பட்டு கட்டுமானங்கள் ரூ. 8.00 லட்சத்திற்கு செய்து முடிக்கப்பட்டுள்ளன. பாலையூர் வாய்க்கால் கட்டுமானங்கள் 1998 ஆம் ஆண்டு சீர் செய்யப்பட்டுள்ளன. தற்போது இவ்விரு வாய்க்கால்களிலும் பாசனம் நல்லமுறையில் நடைபெற்று வருகிறது.

**109—**

**ஏரியைச் செப்பனிடுதல்**

**வினா எண் 22471—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், நாயக்கன்கோட்டை கிராமத்தில் உள்ள ஆலடி ஏரியை தூர் எடுத்து செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் வட்டம், நாயக்கன்கோட்டை கிராமத்தில் உள்ள ஆலடி ஏரியை 2000-2001 ஆம் ஆண்டில் நிதிநிலைமைக்கேற்ப தூர் எடுத்து செப்பனிட்டுத் தரப்படும்.

**110—**

**வாய்க்காலைச் செப்பனிடுதல்**

**வினா எண் 22474—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், திருவோணம் ஒன்றியம், பாதிரங்கோட்டை தெற்கு கிராமத்தில் நடுவிக்கோட்டை இரண்டாம் நம்பர் வாய்க்காலை தூர் எடுத்து செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், திருவோணம் ஒன்றியத்தில் நடுவிக்கோட்டை இரண்டாம் எண் வாய்க்கால் தூர் எடுக்கும் பணிக்கு ரூ. 15,000/- மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தக்காரர் நியமனம் செய்யப்பட்டுள்ளது. வரும் அடைப்புக் காலத்தில் தூர் வாரி செப்பனிட்டுத் தரப்படும்.

[2000 நவம்பர் 13

111—

## தூர் எடுத்தல்

**வினா எண் 24746—திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி, கொத்தமங்கலம், கோடிக்குளம் வாரி, பெரியாத்தாள் ஊரணிக்குச் செல்லும் அன்னதான காவிரி வாய்க்கால் போன்ற வாரிகளை தூர் எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி கொத்தமங்கலம் கோடிக்குளம் வாரி, பெரியாத்தாள் ஊரணிக்குச் செல்லும் அன்னதான காவிரி வாய்க்கால் போன்ற வாரிகளை தூர் எடுக்கும் பணி முடிவுற்றது.

112—

## கால்வாய் அமைத்தல்

**வினா எண் 25259—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கம் வட்டம், செய்யாற்றில் இருந்து எறையூர் அணைக்கட்டு முதல் ராதாபுரம் ஏரி வரையில் நிரம்பி ஆளி ஆற்றில் வீணாகப் போகும் தண்ணீரை கீழ் சிறுபாக்கம் ஏரிக்கு கால்வாய் அமைத்து திருப்பி பாசனத்திற்கு வழிவகை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

இல்லை.

113—

## செப்பனிடல்

**வினா எண் 25951—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம் தென்னாத்தூர் ஏரியின் கரையையும், கலங்கலையும் செப்பனிட்டுத்தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தென்னாத்தூர் ஏரியின் கலங்கலை செப்பனிட 2000-2001 ல் முன்னுரிமை அடிப்படையில் நிதி நிலைமைக்கு ஏற்ப ஒரு பணி மேற்கொள்ளப்படும்.

114—

## தேயிலை உலர வைத்தல்

**வினா எண் 26103—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைப் பகுதிக்குள் அமைந்துள்ள தேயிலைத் தொழிற்சாலைகளில் விறகுகள் பயன்படுத்துவதற்கு தடை செய்து தேயிலை

[2000 நவம்பர் 13

உலர வைப்பதற்கு (சூரிய ஒளி சக்தி மூலம்) சூரிய வெப்ப கூடுகாற்றாக்கிகள் நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சூரிய சக்தியைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் நீலகிரி மாவட்டம், கூடலூர் பகுதியில் உள்ள தமிழ்நாடு பாண்டியார் தேயிலைத் தொழிற்சாலையில் சூரிய தகடுகள் நிறுவப்பட்டன. ஆனால் இந்த அமைப்பு இலாபகரமானதாக இல்லை என கண்டறியப்பட்டுள்ளது.

**115—**

**சந்தன மரங்கள்**

**வினா எண் 26193—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் காடுகளில் உற்பத்தியாகும் சந்தன மரங்களை வாங்கும் அண்டை மாநிலங்கள் யாவை?

(ஆ) அதனால் அரசுக்கு வருடந்தோறும் கிடைக்கும் வருமானம் எவ்வளவு என்பதை அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகியவற்றுடன் உத்தரப்பிரதேசம், புதுதில்லி, மகாராஷ்டிரா மற்றும் மேற்கு வங்காளத்தைச் சார்ந்த ஏற்றுமதியாளர்கள், வியாபாரிகள் மற்றும் எண்ணெய் வடித்தெடுப்பவர்கள் தமிழ்நாட்டில் சந்தன மரங்களை பொது ஏலத்தில் வாங்குகின்றனர்.

(ஆ) 1995-96 முதல் 1999-2000 வரை சந்தன மரக்கட்டைகள் மற்றும் சந்தன மர வெள்ளைடைகள் மூன்று சந்தன மரக் கிடங்குகளில் விற்றதின்



2000 நவம்பர் 13]

மூலம் வருடந்தோறும் அரசுக்குக் கிடைத்த வருமான விவரம் பின்வருமாறு:—

| ஆண்டுகள் | வருமானம் (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|
| 1995-96 | 1323.06 | (சந்தனக்கட்டை விற்பனை மட்டும்) |
| 1996-97 | 4973.58 | |
| 1997-98 | 329.93 | |
| 1998-99 | 2712.17 | |
| 1999-2000 | 10232.06 | |

**116—**

**ஏரியைப் புதுப்பித்தல்**

**வினா எண் 26851—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், கங்ககுடாமணி ஏரியைச் செப்பனிட்டு மதகைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், கங்ககுடாமணி ஏரிக்கரை மற்றும் பழுதடைந்த 2 மதகுகளையும் செப்பனிடும் பணி இந்த நிதியாண்டில் (2000-2001) முன்னுரிமை அடிப்படையில் நிதிநிலைமைக்கேற்ப மேற்கொள்ளப்படும்.

[2000 நவம்பர் 13

117—

### ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா எண் 27423—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள முக்கியமான ஏரிகளை இணைக்கும் நீர்வழிப் பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) இல்லை எனில், அதைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏரிகளை இணைக்கும் நீர்வழிப் பாதைகளில் ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டால், வருவாய்த் துறையின் உதவியுடன் ஆக்கிரமிப்புகள் உடனுக்குடன் அகற்றப்படுகின்றன. மேலும், ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் இருக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே இதற்கான தனிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் தேவையில்லை.

118—

### வாசனை திரவியங்கள் ஏற்றுமதி

**வினா எண் 27455—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டு தமிழகத்தில் எவ்வளவு மதிப்புள்ள வாசனை திரவியங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன?

(ஆ) அதன் விவரம் என்ன?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தால் ரூ. 1,38,98,603 மதிப்புள்ள சந்தன எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டது.

(ஆ) ஏற்றுமதி செய்யப்பட்ட சந்தன எண்ணெயின் விலை, உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு உரிய விற்பனை ஆணைகள் பெறப்பட்ட பின்பு ஏற்றுமதி செய்யப்பட்டன.

119—

### மரங்கள் இறக்குமதி

**வினா எண் 27461—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டுக்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உயர் இன மரங்கள் யாவை?

(ஆ) அவைகளால் ஏற்படும் அன்னியச் செலவாணி இழப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) பொதுவாக மெர்பா, கொங்கு, வெள்ளை அயனிமரம் போன்ற மர இனங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இது தவிர பர்மா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளிலிருந்தும் தேக்கு மரங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

(ஆ) ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 100 கோடி அளவில் அந்நிய செலவாணி (இந்தியா முழுவதற்கும்) மர இறக்குமதியில் செலவிடுவதாக மைய அரசு வணிகவரி அமைச்சகத்தினால் கணக்கிடப்பட்டுள்ளது.

**120—**

### கசிவுநீர்க் குட்டைகள்

**வினா எண் 27793—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி வனப் பகுதியில் மழைக் காலங்களில் ஓடைகளில் வரும் தண்ணீரைத் தடுத்து நிறுத்தி காடுகள் வளம் பெற கசிவுநீர்க் குட்டைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியைச் சார்ந்த வனப் பகுதியில் மழைக் காலங்களில் ஓடைகளில் பெருக்கெடுத்து வரும் தண்ணீரைத் தடுத்து நிறுத்தி காடுகள் வளம்பெறும் பொருட்டு தேவையான இடங்களில் ஏற்கெனவே காடு வளர்ப்புத் திட்டங்களின்கீழ் தடுப்பணைகள் மற்றும் கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

**121—**

### ஏரிப் பாசன வசதி

**வினா எண் 28253—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பாரப்பட்டி காஞ்சன் ஏரியைத் தரப்படுத்தி, பாசன வசதி செய்ய அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட காஞ்சன் ஏரியைத் தரப்படுத்தும் பணி 75 சதவீதம் வேலை முடிவுற்றது. மீதமுள்ள பணி 2000-2001 நிதியாண்டில் முடிக்கப்படும்.

**122—**

### பாசன வசதி

**வினா எண் 28258—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தொன்னகுட்ட அள்ளி ஊராட்சி, மத்தாளப்பள்ளம் ஏரியைச் செப்பனிட்டு பாசன வசதியைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தொன்னகுட்ட அள்ளி ஊராட்சி, மத்தாளப்பள்ளம் ஏரியைச் செப்பனிடும் பணி முடிவுற்று பாசன வசதியும் செய்யப்பட்டுள்ளது.

**123—**

### ஏரிப் பாசன வசதி

**வினா எண் 28262—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பஞ்சப்பள்ளி வாய்க்காலைப் பாப்பாரப்பட்டி சுற்றியுள்ள 16 ஏரிகளுடன் இணைத்து அப்பகுதியில் பாசன வசதியைப் பெருக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

*விடை—*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*இத்திட்டம் தலைமைப் பொறியாளர் (சென்னை மண்டலம்) அவர்கள் ஆய்வில் உள்ளது.*

**124—**

**ஏரியைத் தூர் எடுத்தல்**

**வினா எண் 28669—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, கூனாம்பள்ளம் ஏரியைத் தூர் எடுக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, கூனாம்பள்ளி ஏரியைத் தூர் எடுக்கும் பணி 6/99-ல் ரூ. 7.40 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.*

**125—**

**பாசன வசதி**

**வினா எண் 29321—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், குத்தாலம் பக்கம் உள்ள அஞ்சாறுவார்த்தலை, திருவேள்விக்குடி பெரிய வாய்க்கால் தூர் வாரியும், காவிரியிலிருந்து அந்த வாய்க்கால் மூலம் பாசனம் கிடைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

*விடை—*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், குத்தாலம் பக்கம் அஞ்சாறுவார்த்தலை, திருவேள்விக்குடி பெரிய வாய்க்கால் ஆகியவை தூர்வாரப்பட்டு செப்பனிடப்பட்டதால் இந்த வாய்க்கால் மூலம் தற்போது போதுமான அளவு பாசனத்திற்கு நீர் கிடைக்கிறது.

**126—**

**தூர் வாருதல்**

**வினா எண் 29324—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, காவிரி மற்றும் விக்கிரமன் ஆறு இந்த ஆண்டு தூர்வாரி நெய்வேலி காட்டாமணக்கு அகற்றும் பணி நடைபெற அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, காவிரி ஆறு மற்றும் விக்கிரமன் ஆறு ஆகியவை இந்த ஆண்டு (1999) முழுவதுமாகத் தூர் வாரி நெய்வேலி காட்டாமணக்குச் செடிகள் அகற்றப்பட்டுள்ளன.

**127—**

### தொழிற்சாலை

**வினா எண் 31207—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் மலைப் பகுதியில் இருக்கும் சந்தன மரங்களைக் கொண்டு பெண்ணாகரம் பகுதியில் சந்தன எண்ணெய், சந்தன சோப்பு, சந்தனப் பவுடர் ஆகியவற்றை உற்பத்தி செய்ய தொழிற்சாலை தொடங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**128—**

### வனப் பகுதியில் கால்நடை மேய்ச்சல்

**வினா எண் 32193—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் வனப் பகுதியில் எந்தெந்த இடங்களில் கால்நடை மேய்ச்சல் அனுமதிக்கப்பட்டுள்ளன?

(ஆ) கால்நடை மேய்ச்சலுக்கு விதிக்கப்படும் கட்டணங்கள் எவ்வளவு?

(இ) 1998-99 ஆம் நிதியாண்டில் அரசுக்கு அதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் எவ்வளவு?





விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவில், குற்றாலம், சிவகிரி மற்றும் கடையநல்லூர் சரகங்களில், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட வனப் பகுதியைத் தவிர இதர வனப் பகுதிகளில் கால்நடை மேய்ச்சல் அனுமதிக்கப்படுகிறது.

(ஆ) கால்நடை மேய்ச்சலுக்கு விதிக்கப்படும் கட்டணங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| செம்மறி ஆடு ஒன்றுக்கு (தற்போது இந்தக் கட்டணம் ரத்து செய்யப்பட்டுவிட்டது) | .. | ரூ.2.00 |
| மாடு ஒன்றுக்கு | .. | ரூ.4.00 |
| எருமை ஒன்றுக்கு | .. | ரூ.6.00 |
| குதிரை ஒன்றுக்கு | .. | ரூ.10.00 |
| யானை ஒன்றுக்கு | .. | ரூ.100.00 |

(இ) 1998-99 ஆம் நிதியாண்டில் அரசுக்கு கால்நடை மேய்ச்சல் மூலம் கிடைத்த வருவாய் ரூ.17.96 லட்சம் ஆகும்.

**129—**

### வனப் பாதையைச் செப்பனிடுதல்

**வினா எண் 32613—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, தாமஸ் மலை ஒன்றியம், மதுரைப்பாக்கம் சுடுகாட்டிற்கு வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் செல்லும் பாதையைச் செப்பனிட்டுத் தர அரசு பரிசிலிக்குமா?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

தாம்பரம் தொகுதி, தாமஸ் மலை ஒன்றியம், மதுரைப்பாக்கம் சுடுகாட்டிற்குச் செல்ல, வேங்கடமங்கலம் மாம்பாக்கத்திற்குச் செல்லும் வன நிலம் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட உரிமைப் பாதையாக அறிவிக்கப்பட்டுள்ளது. சாலைப் பராமரிப்புப் பணிக்கு துறையில் குறைந்த நிதியே ஒதுக்கப்படுவதால் அனுமதிக்கப்பட்ட உரிமைப் பாதைகளைப் பராமரிக்க இத்துறையால் இயலவில்லை.

**130—**

### பாலைச் செடி அகற்றுதல்

**வினா எண் 33299—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதியில் பல ஏரிகளில் பாலைச் செடி என்னும் ஒருவகைச் செடி அதிக அளவில் வளர்ந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை அகற்ற நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இச்செடிகள் சல்லி வேர்கள் கொண்ட தாவர வகையைச் சார்ந்தது என்பதனால் இவற்றை முழுவதும் அகற்றினாலும்கூட மிக விரைவில் மீண்டும் இவை முளைத்துவிடுகின்றன. இச்செடிகளை அகற்றிட தனியே செயற்குறிப்பு ஏதும் இல்லை. எனினும், இவற்றை முழுவதுமாக அழிக்க விஞ்ஞானரீதியிலான வழிமுறையைக் கண்டறிய வேளாண்மை ஆராய்ச்சித் துறையினை அணுகி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2000 நவம்பர் 13]

**131—**

### புதிய மதகுகள்

**வினா எண் 33479—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், குளிச்சப்பட்டு கிராமம், பொன்னன் ஏரி மதகுகள் பழுதடைந்துள்ளதை மாற்றி புதிய மதகுகள் போட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

பொன்னன் ஏரியில் உள்ள 5 மதகுகளில் பழுதடைந்த பாகங்கள் மற்றும் ஷட்டர்கள் முதலியன பழுதுபார்த்தும் மாற்றியும் பணிகள் சென்ற நிதியாண்டில் (மார்ச் 2000) செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**132—**

### அணை கட்டுதல்

**வினா எண் 33508—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பிரதான அருவி மேல் அணை கட்டி வருடம் முழுவதும் அருவியில் தண்ணீர் விழ அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டு முழுவதும் நீர்வீழ்ச்சி விழ தேவையான அளவுக்கு நீரைத் தேக்கி வைக்க, தொழில்நுட்ப ரீதியாக சாத்தியகூறு

இல்லை என்பதாலும் திட்டப் பகுதி வரையறுக்கப்பட்ட வனப் பகுதியில் உள்ளதால் இயற்கைச் சூழல் பாதிக்கப்பட்டு சுற்றுச் சூழல் மாசுபட ஏதுவாக இருக்கும் என்பதாலும், மேற்படி திட்டத்தை நிறைவேற்ற இயலாது.

**133—**

**விழிப்புணர்ச்சிக் குழு**

**வினா எண் 33948—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை, குற்றாலம் வனச்சரகப் பகுதிகளில் வனங்கள் பற்றிய விழிப்புணர்ச்சி மக்களுக்கு ஏற்படுத்த வனத் துறை மற்றும் பொதுமக்கள் ஆகியோரை இணைத்து "விழிப்புணர்ச்சிக் குழு" ஏற்படுத்த அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் சுற்றுச்சூழலை மேம்படுத்தவும் மரம் மற்றும் மரம் சாரா விளைப்பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கி உள்ளூர் மக்களின் தேவைகளை கூடியவரை நிறைவு செய்யும் பரந்த நோக்கத்துடன் ஒரு மிகப்பெரிய காடு வளர்ப்புத் திட்டம் முறையாகச் செயல்பட கிராம வனக்குழுக்கள் அமைக்கப்பட்டு, உறுப்பினர் மூலமாக வனக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுகின்றார். கிராம வனக் குழுக்கள் வனத் துறை மற்றும் பொதுமக்கள் ஆகியோரை இணைத்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் நிறுவனமாகச் செயல்படுகிறது.

**134—**

**பயணிகள் தங்கும் விடுதி**

**வினா எண் 34327—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தென்காசியில், தென்காசி-மதுரை சாலையில் உள்ள பொதுப் பணித் துறை பயணிகள் தங்கும் விடுதிக் கட்டடங்கள் பழுது நீக்கி, நவீனப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி-மதுரை சாலையிலுள்ள பொதுப் பணித் துறை ஆய்வு இல்லத்தில் (பயணிகள் தங்கும் விடுதி) பழுதுகள் ஏதுமில்லை. நல்லமுறையிலேயே பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே நவீனப்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

**135—**

**பறவைகள் சரணாலயம்**

**வினா எண் 35287—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்கு எத்தனை வகையான பறவைகள் எந்தெந்த நாட்டிலிருந்து எப்போது வருகின்றன?

(ஆ) அங்கு செல்லும் பார்வையாளர்களுக்கு அரசு செய்துள்ள வசதிகள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்கு காகம், வக்கா, பாம்புதாரா போன்ற சுமார் பதினெட்டு பவகையான பறவைகள் வருகின்றன. இவையனைத்தும் உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் முக்கியமாக ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து அக்டோபர் மாதம் முதல் மார்ச் மாதம் முடிய வந்து போகின்றன. பறவைகள் வருகின்ற எண்ணிக்கை பருவநிலை மற்றும் மழை அளவிற்கு ஏற்ப வருடா வருடம் மாறுபடும்.

[2000 நவம்பர் 13

(ஆ) பார்வையாளர்கள் பறவைகளை அருகில் பார்ப்பதற்கு இரண்டு வாச் டவர்கள் (Watch Towers) டெலஸ்கோப் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், பைனாகுலர் வசதியும் செய்யப்பட்டுள்ளது. மற்றும் ஒரு பிளாட்பாரம் கட்டப்பட்டுள்ளது. இச்சரணாலயம் குறித்த செய்திப் படங்கள் இன்ஸ்பிரேஷன் மையத்தில் வைக்கப்பட்டுள்ளன. பறவைகள் பற்றிய செய்திகளைப் பார்வையாளர்களுக்கு எடுத்துச் சொல்ல பணியாளர்கள் (Bird Trekkers) பணியமர்த்தப்பட்டுள்ளனர். பார்வையாளர் தங்க வன ஓய்வு விடுதி வசதி செய்யப்பட்டுள்ளது.

**136—**

**நதிகளை தேசியமயமாக்குதல்**

**வினா எண் 35860—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நதிகளை தேசியமயமாக்கி காவேரியுடன் கங்கையை இணைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

மாநிலங்களுக்கிடையேயான நதிகளை (Inter State Rivers) தேசிய நதிகளாக்க வேண்டும் என்று இவ்வரசு வற்புறுத்தி வருகிறது. இருப்பினும் மத்திய அரசுதான் இதில் ஒரு முடிவை எடுக்க வேண்டும். நாட்டிலுள்ள நதிகளை இணைப்பது குறித்து தேசிய நீர் மேம்பாட்டு முகமை ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு இதற்கான ஒத்துழைப்பை நல்கி வருகிறது.

**137—**

**சந்தனத் தைலம்**

**வினா எண் 36110—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

(அ) சேலம் மாவட்டத்தில் கிடைக்கும் சந்தன மரங்களைக் கொண்டு சந்தனத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று ஓமலூர் தொகுதியில் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**138—**

**ஊராட்சிக்குப் பங்குத் தொகை**

**வினா எண் 36912—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வனத் துறைக்குச் சொந்தமான மரங்களை ஏலம் விடும்போது கிடைக்கும் தொகையில் சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கு ஏதேனும் பங்குத் தொகை அரசு வழங்குகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

சுவீடன் சர்வதேச வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் 1981-ம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்ட சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட தோட்டங்களை ஏலம் விடும்போது கிடைக்கும் தொகையில் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு 60 விழுக்காடு பங்குத் தொகையை அரசு வழங்குகிறது.

[2000 நவம்பர் 13

139—

### தேசிய பூங்கா

**வினா எண் 37113—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலுள்ள பெரிய ஏரியை தேசிய பூங்காவாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) இல்லையெனில், அதைப் பரிசீலனைக்கு அரசு எடுத்துக்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

(இ) குறிப்பிடும்படியான வன உயிரினம் ஏதும் இங்கு இல்லாததால் இதனைப் பரிசீலனைக்கு எடுக்கும் சாத்தியமில்லை.

140—

### பேருந்து இயக்கல்

**வினா எண் 789—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி பொன்னிரை வரை திருவாரூரிலிருந்து இயங்கிக் கொண்டிருந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் திரும்ப இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திருத்துறைப்பூண்டி-பொன்னிரை (வழி) ஆலத்தம்பாடி தடத்தில் தட எண் 3-ன் மூலம் தினசரி காலை இரு நடைகளும், மாலை இரு நடைகளுமாக மொத்தம் நான்கு நடைகள் 1-1-1997 முதல் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

141—

### பேருந்துகளை இயக்குதல்

**வினா எண் 2915—திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், திட்டக்குடியிலிருந்து திட்டக்குடி எல்லை, வேப்பூர் வழியாக அரியலூருக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் (கோட்டம்-1) ஆல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை வழித்தடத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளுமே பகுதி வாரியாகத் தேவையான அளவு பேருந்து வசதி பெற்றுள்ளன. மேலும் திட்டக்குடி-அரியலூர் வழித்தடத்தில் கூடுதலாக 24-7-1996 முதல் 14 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் புதிய பேருந்துகள் இயக்க வேண்டிய நிலைமை நிலவவில்லை.

142—

### கன்டெய்னர் பேருந்து

**வினா எண் 3578—திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) பம்பாயில் அனுமதிக்கப்படும் கன்டெய்னர் அளவிலான பெரிய பேருந்துகளைச் சென்னையிலும் சோதனை முறையில் இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பம்பாயில் அனுமதிக்கப்படும் பெரிய அளவிலான பேருந்துகளைச் சென்னையிலும் சோதனை முறையில் இயக்க வகை செய்யும் பொருட்டு மாநகரப் போக்குவரத்துக் கழகங்களால் தற்போது 10 இருதளப் பேருந்துகளும், 33 தொடர் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.

**143—**

**பேருந்துகளை அதிகரித்தல்**

**வினா எண் 3643—திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், பெண்ணாகரம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், தருமபுரி கிளையில் பேருந்துகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளதால் அனைத்துப் பகுதிகளுக்கும் பேருந்துகள் இயக்க முடியாத நிலைமையை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பேருந்துகளை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரத்தை மையமாகக் கொண்டு பெண்ணாகரத்திலிருந்து அனைத்து முக்கியப் பகுதிகளுக்கும் போதுமான அளவு பேருந்து வசதி செய்யப்பட்டு உள்ளது. எனவே அரசுப் பேருந்துகளை அதிகரிக்க தற்போது வாய்ப்பில்லை.



2000 நவம்பர் 13]

**144—**

**புதிய பேருந்து தடம்**

**வினா எண் 3749—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணியிலிருந்து நகரி - ஏகாம்பரகுப்பம் - குமாரமங்கலம் புண்ணியம் வழியாக பொதட்டூர்பேட்டைக்கு புதிய பேருந்துத் தடம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடத்தில் 2 நடைகள் 31-3-1997 முதல் இயக்கப்படுகின்றன.

**145—**

**பேருந்து இயக்கல்**

**வினா எண் 7484—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டத் தலைநகர் திருவாரூரிலிருந்து கோட்டூர், வேதபுரம், தேவதானம் வழியாக சித்தமல்லி, பெருகவாழ்ந்தான் வரை இரண்டு பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

நாணலூர் முதல் ரகுநாதபுரம் வரையிலான 2 கி.மீ. தார்ச் சாலை சேதமுடைந்துள்ளது. அச்சாலை சீர்செய்யப்பட்டு, சாலை தகுதிச் சான்று பெறப்பட்டவுடன் பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**146—**

**பேருந்து மூலம் இணைந்தல்**

**வினா எண் 12529—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

தமிழகத்திலுள்ள சட்டமன்றப் பேரவைத் தொகுதி ஒவ்வொன்றையும் தலைநகர் சென்னையுடன் பேருந்து மூலம் இணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*சுமார் 70 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளைத் தவிர மற்ற அனைத்து சட்டமன்றத் தொகுதிகளையும் சென்னையுடன் இணைக்கும் வண்ணம் தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேற்கண்ட 70 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் 44 தொகுதிகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் இயக்கும் பேருந்துகள் மூலம் சென்னையுடன் இணைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 26 தொகுதிகள் சிறிய ஊர்களாக உள்ளதாலும், பயணிகள் அடர்வு குறைவாக உள்ளதாலும் மேலும் அருகாமையில் உள்ள பெரிய ஊர்களுக்கு வந்து அங்கிருந்து சென்னைக்கு வர பகுதிவாரியாகப் போக்குவரத்து வசதி இருப்பதாலும் அத்தொகுதிகளிலிருந்து நேரடியாகவோ அல்லது அத்தொகுதி வழியாகவோ பேருந்துகள் இயக்கப்படவில்லை.*

**147—**

**தனியாருக்கு விற்பனை**

**வினா எண் 14391—திரு. செங்கை சிவம் :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவொற்றியூர் தொகுதி, கவியரசு கண்ணதாசன் நகர் மாநகரப் பேருந்து நிலையத்தில் ஒரு பகுதியைத் தனியாருக்கு விற்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், இதைத் தடுக்க உடனடி நடவடிக்கையை அரசு எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.**

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.



2000 நவம்பர் 13]

**148—**

**நகரப் பேருந்து**

**வினா எண் 17854—சீ.வெ. கிருஷ்ணன் :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*கரூர்-குஜிலியம்பாறை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*கரூர்-குஜிலியம்பாறை வழித்தடம் 34.4 கி.மீ. நீளமாகும். இவ்வழித்தடத் தூரம் 30 கி.மீட்டருக்கு அதிகமாக உள்ளதால் நகரப் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.*

**149—**

**எரிபொருள் சேமிப்பு**

**வினா எண் 18313—திரு. கு. மனோகரன் :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிறுவனம் போக்குவரத்துக் கழகங்களுக்கு கடனுதவி அளிக்கும்போது எரிபொருள் சேமிப்பு குறித்து ஏதேனும் நிபந்தனை விதிக்கிறதா?*

*(ஆ) ஆம் எனில், எந்தெந்த போக்குவரத்துக் கழகங்கள் சிக்கனத்தைக் கடைபிடித்து சாதனை படைத்துள்ளன?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-4) லிமிடெட், திண்டுக்கல் எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் சிக்கனத்தைக் கடைபிடித்து கடந்த வருடங்களில் கீழ்க்கண்ட விருதினைப் பெற்றுள்ளது.*

[2000 நவம்பர் 13

1. 1995-96 அகில இந்திய அளவில் மசகு எண்ணெய் சேமிப்பில் (புறநகர்ப் பேருந்து) சிறந்த சாதனைக்கு விருது கிடைத்துள்ளது.

2. 1995-96 எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் சேமிப்பில் சிறந்த சாதனைக்கு இந்தியன் ஆயில் நிறுவனம் விருது வழங்கியுள்ளது.

3. 1996-97 எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் சேமிப்பில் சிறந்த சாதனைக்கு இந்தியன் ஆயில் நிறுவனம் விருது வழங்கியுள்ளது.

4. 1996-97 அகில இந்திய அளவில் எரிபொருள் சேமிப்பில் சிறந்த முறையில் பணி ஆற்றியமைக்கு இரண்டாவது இடத்திற்கான விருது கிடைத்துள்ளது.

2. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், காரைக்குடி, எரிபொருள் மற்றும் உயவு எண்ணெய் சிக்கனத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் 1992-1993 ஆம் ஆண்டில் இரண்டாவது இடத்தையும், 1993-94-ம் ஆண்டில் முதல் இடத்தையும் பெற்றது.

3. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருச்சி 1996-97 ஆம் ஆண்டிற்கான டீசல் மற்றும் லூப் ஆயில் சிக்கனத்திற்கான இந்திய எண்ணெய்க் கழக விருது பெற்றுள்ளது.

**150—**

**பேருந்துகளை அதிகரித்தல்**

**வினா எண் 20114—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்திலிருந்து சென்னைக்கு கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிதம்பரத்திலிருந்து கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக சென்னைக்குக் கூடுதலாகப் பேருந்துகளை இயக்கும் திட்டம் உள்ளது. ஆனால் இது பாண்டிச்சேரி மாநிலத்தை உள்ளடக்கிய சாலைகளின்



2000 நவம்பர் 13]

வழியாகச் செல்வதால், இரு மாநிலங்களுக்கிடையேயான வழித்தட ஒப்பந்தம் ஏற்படும்போது இவ்வழித்தடத்தில் கூடுதல் பேருந்துகளை இயக்க பரிசீலிக்க இயலும்.

**151—**

**பேருந்தை மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 20220—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், அ. புதூர் வண்டி எண் 30 பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அந்தப் பேருந்தை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மகுடஞ்சாவடிக்கும் அழகப்பம்பாளையம் புதூருக்கும் இடையில் அகல இரயில் பாதை ஒன்றுள்ளது. இது அதிகப் போக்குவரத்து மிக்கது. அதனால் ரெயில்வேகேட் தினசரி சுமார் 45 தடவைகள் மூடப்படுகிறது. இதன் காரணமாக அவ்வழியாகச் செல்லும் பேருந்துகள் நிர்ணயிக்கப்பட்ட நேரங்களைக் கடைப்பிடிக்க முடிவதில்லை. மேலும் அழகப்பம்பாளையம் புதூருக்கு இயக்கப்படும் நடைகளில் பயணிகளின் போக்குவரத்தும் குறைவாக உள்ளது. தவிரவும் எடப்பாடி-சித்தர்கோவில் (வழி) அழகப்பம்பாளையம் புதூர், இளம்பிள்ளை தடத்தில் இயக்கப்படும் தடம் எண் 5 மற்றும் 5 பி-யின் மூலம் அழகப்பம்பாளையம் புதூருக்கு தினசரி 18 நடைகள் பேருந்து வசதி உள்ளது. அவ்வழியாகச் சேலம் வர அடிக்கடி பேருந்து வசதி உள்ளது. மகுடஞ்சாவடியிலிருந்து 1.5 கி.மீ. தாண்டி சுமார் 4 கி.மீ. சாலை குண்டும் குழியுமாகப் பேருந்து இயக்கத்திற்கு ஏதுவாக இல்லை. மேற்கண்ட காரணங்களால் சேலத்திலிருந்து மகுடஞ்சாவடி வழியாக அழகப்பம்பாளையம் புதூருக்கு இயக்கப்பட்ட பேருந்து 11-2-1996 முதல் மகுடஞ்சாவடி வரை இயக்கப்படுகிறது. பேருந்து நிறுத்தப்படவில்லை. அழகப்பம்பாளையம் புதூர் வரை பேருந்தினை இயக்க தற்போது சாத்தியக்கூறு இல்லை.

[2000 நவம்பர் 13

**152—**

**நேரம் நிர்ணயம்**

**வினா எண் 20949—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பயணிகள் கூட்டம் அதிகம் இருக்கிற நேரங்களில் அரசுப் பேருந்துகளுக்கு 'டைமிங்' ஒதுக்கி நிர்ணயிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அரசுப் பேருந்துகள் நேரம் நிர்ணயிக்கப்பட்டுத்தான் இயக்கப்படுகின்றன. கூட்டம் அதிகம் உள்ள நேரங்களில் அதிகப் பேருந்துகள் நேரம் நிர்ணயம் செய்து இயக்கப்படுகின்றன. விழாக்காலங்களில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு பின்னர் போக்குவரத்துக் கழகங்களால் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அதிகாரிக்குத் தெரிவிக்கப்படுகிறது. இவற்றுக்கு நேரம் நிர்ணயம் செய்ய அவசியம் எழாது. பயணிகள் கூட்டம் அதிகம் இருக்கின்ற நேரங்களில் இடைவெளி நேரங்களில் பேருந்துகள் நேரம் நிர்ணயம் செய்து தற்காலிகமாக சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, நேரம் நிர்ணயம் செய்வது நடைமுறையில் இருந்து வருகிறது.

**153—**

**அதிகப் பேருந்துகள்**

**வினா எண் 21089—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க அதிகப் பேருந்துகளை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சென்னையில் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க மாநகர போக்குவரத்துக் கழகம் (சென்னை-கோட்டம்-1 மற்றும் 2) மூலம் தற்போது



2000 நவம்பர் 13]

2594 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் 33 தொடர் பேருந்துகள் மற்றும் 10 மாடிப் பேருந்துகளும் அதிகப் பயணிகள் பயணம் செய்யும் வகையில் இயக்கப்படுகின்றன.

**154—**

**அரசுப் போக்குவரத்துக் கழகம்**

**வினா எண் 21091—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் இந்த (1997-98) நிதி ஆண்டில் ஏற்பட்ட நட்டம் எவ்வளவு?

(ஆ) நட்டம் ஏற்படுவதற்கான காரணங்களை அரசு ஆய்ந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 1997-98 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மொத்த நட்டம் ரூ. 228.51 கோடியாகும்.

(ஆ) ஆம்.

(இ) டீசல் விலை உயர்வு மற்றும் ஊழியர் சம்பள உயர்வினைக் கணக்கில் கொண்டு, உரிய காலத்தில் பேருந்து கட்டணம் உயர்த்தப்படாததாலும், பொது மக்களின் நலன் கருதி வருவாய் ஈட்டாத தடங்களில் நகரம் மற்றும் கிராமப்பகுதிகளில் பேருந்துகள் இயக்கப்படுவதாலும் நட்டம் ஏற்பட்டுள்ளது.

**155—**

**பேருந்துகளில் நட்டம்**

**வினா எண் 21600—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) அரசுப் பேருந்துகளில் நட்டம் ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அவையின் முன்னர் ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் ஏற்படும் நட்டத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் விவரம் வருமாறு:

(1) நிர்வாகச் செலவினங்களைக் கட்டுப்படுத்தி சீரிய நிர்வாக மேம்பாட்டிற்காக 21 போக்குவரத்துக் கழகங்களை 7 போக்குவரத்துக் கழகங்களாக இணைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

(2) போக்குவரத்துக் கழகங்களின் செலவினங்களைக் கட்டுப்படுத்த, அரசால் நியமிக்கப்பட்ட உயர்மட்டக் குழுவால் புதிய கொள்முதல் கொள்கை வகுக்கப்பட்டு, பிப்ரவரி 1997 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் கழகங்கள், உதிரி பாகங்கள் மற்றும் இதர பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்குவதால் செலவினம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. டயர், ஸ்பிரிங் மற்றும் உதிரிபாகங்கள் செலவு 1995-96-ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 1998-99 ஆம் ஆண்டு சுமார் 27.65 கோடி ரூபாய் செலவினம் குறைக்கப்பட்டுள்ளது. 3 ஆண்டுகளில் பொருள்களின் வழக்கமான விலை உயர்வுக்குப் பிறகும், இந்த செலவினக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

(3) மேலும் பேருந்துகள் கூடு கட்டும் செலவினங்களில் கடந்த ஆண்டுகளில் சுமார் 48 கோடி ரூபாய் செலவினம் குறைக்கப்பட்டுள்ளது.

(4) சம்பளச் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் புதிய நியமனங்கள் செய்வது செப்டம்பர் 1998 முதல் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது.

(5) வருவாயை பெருக்க சென்னை நகரில் விரைவுப் பேருந்து, சொகுசுப் பேருந்து, குறிப்பிட்ட நிறுத்தப் பேருந்துகளில் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டுள்ளது. மதுரை போன்ற மற்ற முக்கிய நகரங்களிலும், இத்தகைய பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய பேருந்துகள் மூலம் பொது மக்களுக்கு வசதி செய்து



2000 நவம்பர் 13]

கொடுப்பதுடன், கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவதால் போக்குவரத்துக் கழகங்களின் வருவாயும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

(6) போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையே ஏற்படும் போட்டியைத் தவிர்க்க, மண்டல வாரியாக வழித்தடங்களைச் சீரமைக்க குழு நியமிக்கப்பட்டு, அதன் பரிந்துரைகள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் மூலம் கழகங்களின் வருவாயைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(7) அதிகமாக நட்டம் ஏற்படும் வழித்தடங்களை பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிறுத்தவும் மற்றும் வருவாய் வரும் தடங்களில் இயக்கவும், நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

(8) 25-10-1999 முதல் கட்டண விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இதனால் ஓராண்டுக்கு போக்குவரத்துக் கழகங்களுக்கு சுமார் ரூ. 629.31 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும். அவ்வகையில் இழப்பு ஏற்படுவது பெருமளவில் குறைய வாய்ப்புள்ளது.

மேற்கூறிய முயற்சிகள் மூலமாக போக்குவரத்துக் கழகங்களின் வருவாயைப் பெருக்கவும் மற்றும் செலவினங்களைக் கட்டுப்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**156—**

**வட்டாரப் போக்குவரத்துத் துறை அலுவலகம்**

**வினா எண் 21639—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறையில் பகுதி நேர வட்டாரப் போக்குவரத்துத் துறை அலுவலகம் செயல்படத் தொடங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனை முழு நேர அலுவலகமாக நிலை உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். 29-10-1998 முதல் பெருந்துறையில் பகுதி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் செயல்பட்டு வருகிறது.

[2000 நவம்பர் 13

(ஆ) இந்த அலுவலகத்தை முழு நேர அலுவலகமாக நிலை உயர்த்தும் அளவுக்கு இப்பகுதியில் பெருமளவு வாகனங்கள் இல்லை. எனவே இச்செயற்குறிப்பினை தற்பொழுது பரிசீலிக்க இயலாது.

**157—**

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 21760—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலிருந்து சென்னை சென்று வந்த பேருந்து ஜூன் 1998 முதல் நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அந்தப் பேருந்தை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி-சென்னை பேருந்து 2-4-1997 முதல் இயக்கப்பட்டு 31-5-1998 முதல் நிறுத்தப்பட்டது.

(ஆ) மீண்டும் எடப்பாடி, சட்டமன்ற உறுப்பினரின் வேண்டுகோளுக்கு இணங்க எடப்பாடி-சென்னை தடத்தில் பிப்ரவரி 99 முதல் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது.

**158—**

**பேருந்து இயக்கம்**

**வினா எண் 21764—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரிலிருந்து ஈரோடு நகர் வரை ஜவுளி வியாபாரிகளின் போக்குவரத்து நன்மையைக் கருதி ஒரு பேருந்து இயக்க அரசு முன்வருமா?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகரிலிருந்து ஈரோடு நகர் வரை செல்ல அரசு மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த 17 பேருந்துகள் மூலம் 43 நடைகள் தினசரி இயக்கப்படுகின்றன. மேலும் எடப்பாடியிலிருந்து சங்ககிரி செல்ல 95 நடைகள் தினசரி இயக்கப்படுகின்றன. அங்கிருந்து ஈரோடு செல்ல 3 நிமிடங்களுக்கு ஒரு பேருந்து வீதம் பேருந்து வசதி உள்ளது. இதுவே எடப்பாடி நகரப் பயணிகளுக்கு ஈரோடு செல்வதற்கான தேவையை நிறைவு செய்வதால் கூடுதல் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**159—**

**விரைவுப் பேருந்து**

**வினா எண் 21765—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரிலிருந்து பழநி வரை சென்று வர ஒரு விரைவுப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடியிலிருந்து பழநி 157 கி.மீ. தூரத்தில் உள்ளது. வழித்தடத்தின் நீளம் 250 கி. மீட்டருக்கும் குறைவாக உள்ளதால் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் இத்தடத்தில் பேருந்து இயக்க இயலாது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் இத்தடத்தில் ஒரு பேருந்தின் மூலம் இரு நடைகள் இயக்கி வருகின்றது.

**160—**

**பெங்களூருக்குப் பேருந்து**

**வினா எண் 22039—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

எடப்பாடி முதல் ஜலகண்டபுரம், தொப்பூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஒசூர் வழியாக பெங்களூருக்கு அரசுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கோரிக்கையில் கேட்கப்பட்ட தடம் புறமாநிலத் தடம் ஆகும். புற மாநில ஒப்பந்தங்களின்போது இதற்கான ஒப்புதல் பெற்ற பின்பே இத்தடத்தில் பேருந்து இயக்க இயலும். எனவே, தற்போது திட்டம் ஏதும் இல்லை.

**புதிய பேருந்து**

**161—**

**வினா எண் 22041—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி முதல் சுண்ணாம்புக்குட்டை, சங்ககிரி வழியாக ஈரோடு செல்ல ஒரு புதிய பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள வழித்தடத்தில் ஒரு அரசுப் பேருந்து மற்றும் தனியார் பேருந்தின் மூலம் தினசரி 14 நடைகள் பேருந்து வசதியுள்ளது. சங்ககிரி-ஈரோடு தடத்தில் ஒவ்வொரு 3 நிமிடத்திற்கு ஒரு பேருந்து மூலமும் பகுதிவாரியாக போதுமான பேருந்து வசதியுள்ளது. இவ்வழித்தடத்தில் இயக்கப்படும் எந்தப் பேருந்திலும் 100% பயணிகள் விகிதாச்சாரம் இல்லாத காரணத்தால் கூடுதல் பேருந்து இயக்கும் சாத்தியக்கூறு இல்லை.

**162—**

**எடப்பாடி-சென்னை பேருந்து**

**வினா எண் 22525—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரிலிருந்து சென்னை சென்று கொண்டிருந்த அரசுப் போக்குவரத்துப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது என்பது உண்மையா?



2000 நவம்பர் 13]

(ஆ) ஆம் எனில், அதனை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி-கொங்கணாபுரம்-சேலம்-சென்னை தடத்தில் 2-4-1997 முதல் இயக்கப்பட்ட பேருந்து, பயணிகள் விகிதாச்சாரம் குறைவாக இருந்ததால் 31-5-1998 அன்று நிறுத்தப்பட்டது. அப்பேருந்து 12-2-1999 முதல் மீண்டும் இயக்கப்பட்டு வருகிறது.

**163—**

**அரசுப் போக்குவரத்துக் கழகம்**

**வினா எண் 22530—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில், ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும், தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் 1996-ல் இருந்து இதுவரை ஏற்பட்டுள்ள இலாப நட்டக் கணக்கென்ன?

(ஆ) இன்னும் சிறப்பாக நடத்தி இலாபம் ஈட்ட அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒரு விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில், ஈரோட்டைத் தலைமையிடமாக கொண்டு இயங்கும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் 1995-96 ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட இலாப நட்ட விவரம் பின்வருமாறு:

| | வருடம் | ஏற்பட்ட இலாப/நட்டம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 1995-96 | (-) 595.47 |
| 2 | 1996-97 | (-) 759.09 |
| 3 | 1997-98 | (+) 77.01 |
| 4 | 1998-99 | (-) 929.23 (தணிக்கை செய்யப்படாதது) |

வழித்தடத்தில் உள்ள அனைத்து நிறுத்தங்களிலும் பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்ல, ஓட்டுநர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. முக்கியமான இடங்களில் நேரக்காப்பாளர்கள், தணிக்கையாளர்களைப் பணியமர்த்தி, பேருந்து சரியான நேரத்திற்குச் செல்ல, வழி ஏற்படுத்துவதன் மூலம், வருவாய் பெருக வழி செய்யப்பட்டுள்ளது. சிறந்த பராமரிப்பின் மூலம், மாறுபடும் செலவினங்கள் குறைக்கப்பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகள் மூலம் வருவாய் ஈட்டி இலாபமடைய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நட்டத்தைக் குறைக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

(அ) போக்குவரத்துக் கழகங்களின் செலவினங்களைக் கட்டுப்படுத்த, அரசால் நியமிக்கப்பட்ட உயர்மட்டக் குழுவால் புதிய கொள்முதல் கொள்கை வகுக்கப்பட்டு, பிப்ரவரி 1997 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் கழகங்கள் உதிரி பாகங்கள் மற்றும் இதர பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்குவதால் செலவினம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) சம்பளச் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் புதிய நியமனங்கள் செய்வது செப்டம்பர் 1998 முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(இ) 25-10-1999 முதல் கட்டண விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதால், கூடுதல் வருவாய் கிடைக்கும். இதனால் இழப்பு ஏற்படுவது பெருமளவில் குறைய வாய்ப்புள்ளது.

மேற்கூறிய முயற்சிகள் மூலமாக போக்குவரத்துக் கழகங்களின் வருவாயைப் பெருக்கவும் மற்றும் செலவினங்களைக் கட்டுப்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**164—**

## அனைத்துப் போக்குவரத்துக் கழகங்கள்

**வினா எண் 22531—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் ஏற்பட்டுள்ள மொத்த நட்டம் எவ்வளவு?

(ஆ) நட்டத்தைச் சரி செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விவரஅறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பெற்றுள்ளது.

## அறிக்கை

நிதி நெருக்கடியைச் சமாளிக்க போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு 1996 முதல் இலகுவான கடன்களை அளித்தும், பங்குத் தொகையை அளித்தும் வந்துள்ளது. போக்குவரத்து வளர்ச்சி நிதிநிறுவனத்திற்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகையைச் செலுத்தித் தீர்க்க 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 68.52 கோடியை போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கியது. மேலும் ரூ. 20.00 கோடியை போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு, போக்குவரத்துக் கழகங்களுக்கு கடனுதவி வழங்குவதற்காக, வழிவகை முன் பணமாக வழங்கியது. தவிரவும் பங்குத் தொகையாக ரூ. 71.50 கோடி வழங்கப்பட்டது. அதைத் தவிர ரூ. 10.90 கோடி அளவிலான பங்குத் தொகையாக மாற்றப்பட்டது. 1997-98ல் ரூ. 100/- கோடி வழிவகை முன் பணமாகவும் ரூ. 150.53 கோடி அளவிலான, கடன் பங்குத் தொகையாகவும் மாற்றப்பட்டது.

2. 1998-99 ஆம் ஆண்டில் புதிய பேருந்துகள் வாங்க ரூ. 100/- கோடி கூடுதல் பங்குத் தொகையாக, அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் வழங்கப்பட்டது. போனஸ் வழங்க மேலும் ரூ. 70/- கோடி அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்பட்டது. தங்களுடைய கடன் நிலுவைத் தொகைகளை தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்குச் செலுத்தித் தீர்க்கும் வகையில் சில போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ. 30/- கோடி வழங்கப்பட்டது. 1999-2000 ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்களுக்கு, அரசின் கூடுதல் பங்குத் தொகையாக வழங்க ரூ. 111/- கோடி வழங்கப்பட்டது.

3. போக்குவரத்துக் கழகங்களின் செலவினங்களைக் கட்டுப்படுத்த, அரசால், நியமிக்கப்பட்ட உயர் மட்டக் குழுவால், புதிய கொள்முதல் கொள்கை வகுக்கப்பட்டு, பிப்ரவரி 1997 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் கழகங்கள் உதிரி பாகங்கள் மற்றும் இதர பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்குவதால், செலவினம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. டயர், ஸ்பிரிங், மற்றும் உதிரிபாகங்கள் செலவு 1995-96 ஆண்டுடன் ஒப்பிடும்போது 1998-99 ஆம் ஆண்டில் சுமார் ரூ. 27.65 கோடி ரூபாய் செலவிலும் குறைக்கப்பட்டுள்ளது. 3 ஆண்டுகளில் பொருள்களின்

[2000 நவம்பர் 13

வழக்கமான விலை உயர்வுக்குப் பிறகும் இந்த செலவினக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

4. சம்பளச் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில், புதிய நியமனங்கள் செய்வது செப்டம்பர் 1998 முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

5. வருவாயைப் பெருக்க சென்னை நகரில் விரைவுப் பேருந்து, சொகுசுப் பேருந்து, குறிப்பிட்ட நிறுத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டுள்ளது. மதுரை போன்ற மற்ற முக்கிய நகரங்களிலும், இத்தகைய பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய பேருந்துகள் மூலம் பொது மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதுடன், கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவதால் போக்குவரத்துக் கழகங்களின் வருவாயும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

6. போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையே ஏற்படும் போட்டியைத் தவிர்க்க, மண்டல வாரியாக வழித்தடங்களை சீரமைக்க, குழு நியமிக்கப்பட்டு, அதன் பரிந்துரைகள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் கழகங்களின் வருவாயைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

7. அதிகமாக நட்டம் ஏற்படும் வழித்தடங்களை, பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிறுத்தவும், மற்றும் வருவாய் வரும் தடங்களில் இயக்கவும், நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

8. மேற்கூறிய முயற்சிகள் மூலமாக போக்குவரத்துக் கழகங்களின் வருவாயைப் பெருக்கவும் மற்றும் செலவினங்களைக் கட்டுப்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

9. 25-10-1999 முதல் கட்டண விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இதனால் ஓராண்டுக்கு போக்குவரத்துக் கழகங்களுக்கு சுமார் ரூபாய் 629.31 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும். அவ்வகையில் இழப்பு ஏற்படுவது பெருமளவில் குறைய வாய்ப்புள்ளது.

**165—**

### பேருந்துகளை மீண்டும் இயக்குதல்

**வினா எண் 22799—திரு. க. மணிவர்மா :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

திருவண்ணாமலையிலிருந்து தண்டராம்பட்டு, தானிப்பாடி, அரூர் வழியாக சேலம் சென்று கொண்டிருந்த பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடம் ஒரு சுற்று வழித்தடம் என்பதால், இதில் திருவண்ணாமலை - சேலம் மற்றும் சேலம்-திருவண்ணாமலை பயணம் செய்யும் பயணிகள் பயணம் செய்வதைத் தவிர்த்துவிடுகின்றனர். அதனால், இத்தடம் மிகக் குறைந்த அளவில் வருவாய் ஈட்டியதாலும், பயணிகள் அடர்வு இல்லாமையாலும் இத்தடத்தில் தொலைதூரப் பேருந்துகள் இயக்கம் நிறுத்தப்பட்டது. இயக்கச் செலவுகளைக் கூட ஈடுகட்டும் அளவிற்கு வருவாய் வருவதில்லை. மேலும், திருவண்ணாமலை-அரூர், அரூர்-சேலம் வழித்தடங்களில் போதிய பேருந்து வசதி உள்ளது. எனவே, கோரிக்கை வழித்தடத்தில் மீண்டும் பேருந்துகளை இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**166—**

### பேருந்து இயக்குதல்

**வினா எண் 22804—திரு. க. மணிவர்மா :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதியில் கீழ்சிறுபாக்கம், ராதாபுரம், தென்முடியனூர், தண்டராம்பட்டு வழியாக தென்பள்ளிப்பட்டுக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தண்டராம்பட்டு தொகுதியில் திருவண்ணாமலை-தென்பள்ளிப்பட்டு (வழி) கீழ்சிறுபாக்கம், ராதாபுரம், தண்டராம்பட்டு, தென்முடியனூர் தடத்தில் 24-3-1987 முதல் தினசரி 6 நடைகள் நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

[2000 நவம்பர் 13

167—

**பேருந்து வசதி**

**வினா எண் 22808—திரு. க. மணிவர்மா :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையிலிருந்து பெரும்பாக்கம், கீழ்வணக்கம்பாடி, தரடாப்பட்டு வழியாக சாத்தனூர் அணைக்குப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

168—

**நேரடிப் பேருந்துகள்**

**வினா எண் 23256—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் பவானி-தாராபுரம் நகரங்களை இணைக்கும் நேரடிப் பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அந்தியூரிலிருந்து, பவானி, தாராபுரம் வழியாக பழனி வரை தற்சமயம் 12 தனி நடைகள் தினசரிப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதனால் பவானி-தாராபுரம் நேரடிப் பேருந்து வசதி பெற்றுள்ளது. எனவே பவானி-தாராபுரம் நேரடியாக புதிய வழித்தடப் பேருந்து இயக்க தற்சமயம் திட்டம் எதுவும் இல்லை.



2000 நவம்பர் 13]

169—

**நிர்வாகச் செலவுகள்**

**வினா எண் 23736—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகச் செலவுகள் மிகப் பெரிய அளவில் அதிகரித்துள்ளன என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1-9-1998 முதல் ஊதிய ஒப்பந்தப்படி போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு சம்பள உயர்வு மற்றும் இதரச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகச் செலவுகள் அதிகரித்துள்ளன. நிர்வாகச் செலவுகளைக் கட்டுப்படுத்த போக்குவரத்துக் கழகங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

170—

**கிராமங்களில் பேருந்து வசதி**

**வினா எண் 23743—திரு. மு. அப்பாவு :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், இருக்கன்துறை ஊராட்சி, கொத்தன்குளம் கிராமத்திற்கு பேருந்து வசதி செய்து கொடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த இருக்கன்துறை ஊராட்சிக்குட்பட்ட கொத்தன்குளம் கிராமம் சுமார் 60 வீடுகளையும் 300 மக்கள் தொகையையும் கொண்டது. தற்பொழுது கொத்தன்குளம் கிராம பொதுமக்கள் 2.0 கி.மீ. தூரத்தில் உள்ள கங்கனாபுரத்திற்கு வந்து அங்கிருந்து அவ்வூர் வழியாகச் செல்லும் மதுரை கோட்டம்-3 மற்றும் மதுரை கோட்டம்-2 மூலம் இயக்கப்படும் பேருந்து வசதிகளை உபயோகித்துக்கொள்ளலாம். தற்போது பேருந்து வசதி பெற்றிருப்பதாலும் மக்கள் தொகை மிகவும் குறைவாக உள்ள சிறிய கிராமமாக உள்ளதாலும் முன்னுரிமை கொடுத்து பேருந்து இயக்கும் சாத்தியக்கூறு இல்லை.

**171—**

### நிறுத்தப்பட்ட பேருந்துகளை இயக்குதல்

**வினா எண் 23744—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரூட் நெ. 470 திருப்பூரிலிருந்து சென்னை மற்றும் ரூட் நெ. 630, திருப்பூரிலிருந்து திருநெல்வேலி ஆகிய பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளதன் காரணம் என்ன?

(ஆ) அவற்றை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மிகக் குறைந்த பயணிகள் விகிதாச்சாரம் காரணமாக வழித்தடம் எண் 470 திருப்பூர்-சென்னை 1-11-1998-லிருந்தும் வழித்தடம் எண் 630 திருப்பூர்-திருநெல்வேலி 1-8-1998-லிருந்தும் நிறுத்தப்பட்டது.

(ஆ) பயணிகள் விகிதாச்சாரம் குறைவின் காரணமாக வருவாய் இழப்பு ஏற்பட்டு, நிறுத்தப்பட்ட அரசு விரைவுப் பேருந்து வழித்தடங்களை மீண்டும் இயக்க சாத்தியமில்லை.



**172—**

### திருப்பூர்-திருச்செந்தூர் பேருந்து

**வினா எண் 23747—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரூட் நெ.635 திருப்பூர்-திருச்செந்தூர் அரசுப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை மீண்டும் இயக்க அரசு ஆணையிடுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக வழித்தடம் 635 திருப்பூர்-திருச்செந்தூர் குறைந்த வருவாய் ஈட்டியதின் காரணமாக 11-2-1999 முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

(ஆ) வருவாய் இழப்பின் காரணமாக நிறுத்தப்பட்ட வழித்தடத்தை மீண்டும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலம் இயக்க சாத்தியமில்லை. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், ஈரோடு இதே வழித்தடத்தில் 12-02-1999 முதல் 2 பேருந்துகளை இயக்கி வருகிறது.

**173—**

### ஆராய்ச்சி நிறுவனம்

**வினா எண் 23754—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாலை போக்குவரத்து ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றை தென் மாநிலங்கள் சார்பாக தமிழகத்தில் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[2000 நவம்பர் 13

**174—**

### செல்லுலார் போன் வசதி

**வினா எண் 23756—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்தில் இயங்கும் தொலைதூர அரசுப் பேருந்துகளில் செல்லுலார் போன் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**175—**

### பேருந்துகளினால் இழப்பு

**வினா எண் 23897—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 1998-99 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் எத்தனை அரசுப் பேருந்துகள் சமூக விரோதிகளால் மற்றும் போராட்டத்தின் மூலம் தீக்கிரையாக்கப்பட்டன?*

*(ஆ) அதனால் அரசுக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டது?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டில் சமூக விரோதிகள் மற்றும் போராட்டத்தின் மூலம் 16 பேருந்துகள் தீக்கிரையாக்கப்பட்டன.

(ஆ) அதனால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு சுமார் ரூ. 65.65 இலட்சம் ஆகும்.



2000 நவம்பர் 13]

**176—**

### விரைவுப் பேருந்து வசதி

**வினா எண் 23908—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சென்னையில் இருந்து புதுவைக்கு மாமல்லபுரம் வழியாக (கிழக்குக் கடற்கரைச் சாலை) செல்லும் அரசு விரைவுப் பேருந்துகள் மாமல்லபுரத்தில் நின்று செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் சென்னையிலிருந்து கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக புதுவைக்கு இயக்கப்படும் அனைத்து பேருந்துகளில் மாமல்லபுரம் கூட்டுச்சாலை கட்டணம் நிலையாக உள்ளது. இப்பேருந்துகள் குறைந்த நேரத்தில் இயக்கப்படுவதால் மாமல்லபுரம் ஊருக்குள் சென்று வருவதை நேரடியாகச் செல்லும் பயணிகள் விரும்பமாட்டார்கள். மாமல்லபுரம் பேருந்து நிலையத்திற்கும் மாமல்லபுரம் கூட்டுச் சாலை பேருந்து நிறுத்தத்திற்கும் இடையே உள்ள தூரம் 1.2 கி.மீ. ஆகும். கூட்டுச்சாலை பேருந்து நிறுத்தத்திலிருந்து பேருந்து நிலையம் வரை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் காஞ்சிபுரம் பேருந்துகள் 65 மூலம் 352 நடைகள் தினசரி இயக்கப்படுகின்றன. சென்னையிலிருந்து புதுவைக்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம் மூலம் இயக்கப்படும் அனைத்து வழி நில்லாப் பேருந்துகளும் (பாயிண்ட் டு பாயிண்ட்) மாமல்லபுரம் பேருந்து நிலையத்திற்குள் சென்று வருகின்றன.

**177—**

### புதிய வழித்தடங்கள்

**வினா எண் 23911—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) விருத்தாசலத்தில் இருந்து திருப்பூர், பழநி, நாகர்கோவில் ஆகிய ஊர்களுக்கு புதிய வழித்தடத்தில் பேருந்துகளை இயக்கிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது பேருந்து விடப்படும்?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) விருத்தாசலத்திலிருந்து திருப்பூர், பழநி, நாகர்கோவில் ஆகிய இடங்களுக்கு பேருந்து இயக்க தற்போது திட்டம் ஏதும் இல்லை. இவ்வழித்தடங்களில் தற்போது பகுதிவாரியாகப் பேருந்து வசதி உள்ளதால் நேரடிப் பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**178—**

**புதிய வழித்தடம்**

**வினா எண் 24198(ஏ)—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் முதல் கீழ்க்கட்டளை வரை நங்கநல்லூர் வழியாக புதிய வழித்தடம் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது போதுமான வழித்தடங்கள் இயக்கப்படுவதால் தாம்பரம் முதல் கீழ்க்கட்டளை வரை நங்கநல்லூர் வழியாக புதிய வழித்தடம் இயக்க சாத்தியமில்லை.

**179—**

**புறநகர்ப் பேருந்து**

**வினா எண் 24934—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரத்திலிருந்து திருப்பதிக்கு திண்டிவனம், தெள்ளார், தேசூர், பெரணமல்லூர், ஆரணி வழியாக புறநகர்ப்பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரத்திலிருந்து திருப்பதிக்கு திண்டிவனம், தெள்ளார், தேசூர், பெரணமல்லூர் மற்றும் ஆரணி வழியாக பேருந்து இயக்க ஆந்திர மாநில அரசின் இசைவு கோரப்பட்டுள்ளது. இசைவு பெற்ற பின்னர் புதிய பேருந்துகள் விடும்பொழுது இத்தடத்தில் இயக்க பரிசிலனை செய்ய இயலும். எனவே, தற்போது கோரிக்கை வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாது.

**180—**

**முன்பதிவு வசதி**

**வினா எண் 24540—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து திருச்சி செல்லும் அரசுப் பேருந்துகளில் தொலைபேசி மூலம் இருக்கைகள் முன்பதிவு செய்ய பயணிகளுக்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னையிலிருந்து புறப்படும் அனைத்து அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கும் (திருச்சி உட்பட) தொலைபேசி மூலமாக முன் பதிவு செய்யும் வசதி 1-5-1999 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கென தனி இடமும் தொலைபேசியும் ஒதுக்கப்பட்டுள்ளது. தொலைபேசி எண் 5342737. பயணியின் பெயர், பயண நாள், புறப்படும் நேரம், தடம், வயது மற்றும் பால் ஆகியவற்றை தொலைபேசியில் தெரிவித்துப் பதிவு செய்துகொள்ள வேண்டும். பின் அதற்கான குறியீட்டு எண் தெரிவிக்கப்படும். பயணத் தேதிக்கு ஒரு நாளுக்கு முன்பாக முன்பதிவு செய்தவர்கள் முன்பதிவு செய்த நேரத்தில் இருந்து 24 மணி நேரத்திற்குள் பாரிமுனைப் பேருந்து நிலையத்தில் உள்ள

தொலைபேசி முன்பதிவு மையத்திற்கு வந்து குறியீட்டு எண்ணைத் தெரிவித்து பயணக் கட்டணம் செலுத்தி பயணச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம். தவறினால் முன்பதிவு ரத்து செய்யப்படும். பயணத் தேதியில் முன்பதிவு செய்த பயணிகள் புறப்படுவதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்பாக பயணச்சீட்டைப் பெற வேண்டும். தவறினால் முன்பதிவு ரத்து செய்யப்படும். தொலைபேசி மூலம் முன்பதிவு செய்வதற்கு ஏற்கெனவே உள்ள பயணக் கட்டணத்துடன் சேவைக் கட்டணமாக ரூ.5 பயணச்சீட்டுடன் சேர்த்து பெறப்படும்.

**181—**

### பேருந்து இயக்குதல்

**வினா எண் 24939—திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருவண்ணாமலையிருந்து நாரையூர் வரை நகரப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருவண்ணாமலை-வைப்பூர் (வழி) நாரையூர் வழித்தடத்தில் 4 நடைகளும் திருவண்ணாமலை-ஆங்குணம் (வழி) ஆவூர், நாரையூர் வழித்தடத்தில் 6 நடைகளும் ஏற்கெனவே பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. திருவண்ணாமலை நாரையூர் வழித்தடத்தில் பயணிகளின் அடர்வு 43% மட்டுமே உள்ளதால் இத்தடத்தில் பிரத்யேகமாக நகரப் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**182—**

### பேருந்து வசதி

**வினா எண் 24940—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தண்டராம்பட்டிலிருந்து செங்கம், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி வழியாக பெங்களூர் வரை பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தண்டராம்பட்டிலிருந்து பெங்களூர் வரை பேருந்து இயக்க தற்போது திட்டம் ஏதும் இல்லை.

**183—**

### தனியார் பேருந்து

**வினா எண் 24945—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பிற மாவட்டங்களில் இயங்குவது போன்று கன்னியாகுமரி மாவட்டத்திலும் தனியார் பேருந்துகள் இயக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.**

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

**184—**

### விரைவுப் பேருந்துகள்

**வினா எண் 24946—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாகர்கோவில்-நெய்வேலி, நாகர்கோவில்-பாண்டிச்சேரி நாகர்கோவில்-ஈரோடு ஆகிய விரைவுப் பேருந்துகள் மீண்டும் இயக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*(இ) இல்லை எனில், தனியார் பேருந்து இயக்கும் உத்தேசம் உண்டா?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ), (ஆ) மற்றும் (இ) பயணிகள் விகிதாச்சாரம் குறைவு மற்றும் வருவாய் இழப்பு காரணமாக நிறுத்தப்பட்ட கோரிக்கை வழித்தடங்களை அரசு விரைவுப் போக்குவரத்துக்கழகம் மூலமாக மீண்டும் இயக்க சாத்தியக் கூறு இல்லை. மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் போக்குவரத்து இயக்கம் தேசியமயமாக ஆக்கப்பட்டுள்ளதால் கோரிக்கை வழித்தடங்களில் தனியார் பேருந்து இயக்க வழி வகை இல்லை.*

**185—**

## நகரப் பேருந்துகள்

**வினா எண் 24948—திரு. சி. வேலாயுதன்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குமரி மாவட்டத்தில் ஓடிக்கொண்டிருந்த 311-நாகர்கோவில்-கரிக்கி, டி.ஹெச்.எஸ்-7 திங்கள்சந்தை-தக்கலை, 5ஏ தக்கலை-குளச்சல், 11 எச் தக்கலை-பிள்ளையார்புரம் ஆகிய பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*தடம் எண் 311 தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. தடம் எண் 307 பி நாகர்கோவில்-கரிக்கி பேருந்து வழிப் பாதை பழுதடைந்ததால் வழித்தடம் மாற்றி இயக்கப்பட்டு வந்தது. 16-10-99 முதல் மார்த்தாண்டம்—கருங்கல்-கரிக்கி என்ற வழித்தடத்தில் நகரப் பேருந்து ஒன்று கரிக்கி கிராமத்திற்கு இயக்கப்பட்டு வருகிறது.*

*பி.ஹெச்.எஸ் 7 என்ற வழித்தடம் பயணிகள் அடர்வு குறைவாக இருந்தபோதிலும் பல்நோக்கி வழித்தடமாக மாற்றி இயக்கப்பட்டு வருகிறது. சாலை சரியில்லாத காரணத்தால் சில மாதங்கள் இயக்கப்படாமல் இருந்தது.*



*5-ஏ தக்கலை-குளச்சல் வழித்தடப் பேருந்துகள் நிறுத்தப்படவில்லை. 1996-97 ஆம் ஆண்டு முதல் கூடுதலாக ஒரு பேருந்து இயக்கப்படுகிறது. தடம் எண் 11-எச் தக்கலை-பிள்ளையார்புரம் பல்முனை வழித்தடத்தில் பேருந்து இயக்கப்பட்டது. தற்போது நாகர்கோவில்-பிள்ளையார்புரம் வழித்தடத்தில் தனிப் பேருந்தும் நாகர்கோவில்-தக்கலை வழித்தடத்தில் தனிப்பேருந்தும் இயக்கப்பட்டு வருகின்றது. எனவே, பேருந்துகள் எதுவும் நிறுத்தப்படவில்லை.*

**186—**

## புதிய பேருந்துகள்

**வினா எண் 24975—திரு. டி. மணி:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குமரி மாவட்டம் மார்த்தாண்டம், படந்தாலுமூடு, திருவட்டார், திங்கள் சந்தை பணிமனைகளில் அதிகமாக பழுதடைந்துள்ள பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் வழங்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-3) நாகர் கோயிலில் 1996-97 ஆம் ஆண்டில் 49 பேருந்துகளும், 1997-98 ஆம் ஆண்டில் 175 பேருந்துகளும் 1998-99 ஆம் ஆண்டில் 57 பேருந்துகளும் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. 1996-97, 1997-98 ஆம் ஆண்டுகளில் மார்த்தாண்டம்-படந்தாலுமூடு (குழித்துறை) திருவட்டார் மற்றும் திங்கள் சந்தை பணிமனைகளில் 32% பழைய பேருந்துகள் மாற்றப்பட்டன. 1998-99 ஆம் ஆண்டில் 11% பழைய பேருந்துகள் மாற்றப்பட்டுள்ளன. புதிய பேருந்துகள் இயக்கப்படும்போது படிப்படியாக பழைய பேருந்துகள் கழிக்கப்படுகின்றன.*

**187—**

## விரைவுப் பேருந்து விடுதல்

**வினா எண் 24983—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், திருவோணத்திலிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?*

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக திருவோணத்திலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதுமில்லை.

**188—**

**சென்னைக்கு விரைவுப் பேருந்து**

**வினா எண் 24985—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், சோழவந்தானிலிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சோழவந்தான்-மதுரை மற்றும் மதுரை-சென்னை வழித்தடங்களில் போதுமான பேருந்து செதி உள்ளதால் சோழவந்தானிலிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து நேரடியாக இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**189—**

**பொதுக் கழிப்பறை**

**வினா எண் 24990—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையத்தில் பொதுக் கழிப்பறை கட்டப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

ஏற்கெனவே கழிப்பறை உபயோகத்தில் உள்ளது.



2000 நவம்பர் 13]

**190—**

**நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா எண் 24991—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையிலிருந்து தண்டராம்பட்டு வரை நகரப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**191—**

**ஆட்டோக்களில் மீட்டர்கள் பொருத்துதல்**

**வினா எண் 24996—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் ஆட்டோக்கள் பெரும்பாலானவற்றில் மீட்டர்கள் பொருத்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அத்தகைய ஆட்டோக்களின் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2000 நவம்பர் 13

192—

### மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம்

**வினா எண் 24997—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி நகரில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அத்தகைய அலுவலகம் ஒன்றை அங்கு தொடங்க ஏற்பாடு செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தெரியும்.

(ஆ) தற்போது இல்லை.

193—

### இலவச அனுமதிச்சீட்டு

**வினா எண் 25010—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டில் பலதரப்பட்ட பகுதியினருக்கு வழங்கப்பட்ட இலவசப் பேருந்து அனுமதிச் சீட்டுத் திட்டத்தால் போக்குவரத்துத் துறைக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 1997-98-ம் ஆண்டில் பலதரப்பட்ட பிரிவினருக்கு இலவசப் பேருந்து அனுமதி சீட்டினால், போக்குவரத்துத் துறைக்கு ஏற்பட்ட இழப்பு ரூ.93.00 கோடியாகும்.



2000 நவம்பர் 13]

194—

### நகரப் பேருந்து

**வினா எண் 25027—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி பணிமனையிலிருந்து இயக்கப்படும் எண். 20 நகரப் பேருந்து ஆரணியிலிருந்து கோணையூருக்கு தொடர்ந்து இயக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தொடர்ந்து இயக்க நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரணி பணிமனையிலிருந்து இயக்கப்படும் எண்.20 நகரத் தடம் ஆரணி-கோணையூர் என தினசரி 4 நடைகள் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றது. இத்தடம் தொடர்ந்து இயக்கப்படாமல் இருந்ததில்லை.

195—

### பேருந்து இயக்குதல்

**வினா எண் 25035—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், வட்டக்காடு பகுதிக்கென்று தனியாக ஒரு பேருந்து சேலத்திலிருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம், வட்டக்காடு செல்வதற்கு தடம் எண் 90 மூலமாக தினசரி 8 நடைகளும், தடம் எண் 90ஏ மூலமாக தினசரி 6 நடைகளும் பேருந்துகள் சேலம் பழைய பேருந்து நிலையத்திலிருந்து இயக்கி வருகிறது. இந்தப் பேருந்துகள் மூலம் இப்பகுதி

[2000 நவம்பர் 13]

மக்கள் போதிய போக்குவரத்து வசதி பெற்று வருகின்றனர். மேலும் தடம் எண் 90-ல் பயணிகள் வருகை 65 சதவீதமும், தடம் எண் 90-ஏயில் பயணிகள் வருகை 61 சதவீதமும், மட்டுமே உள்ளதால் கூடுதலாக வட்டக்காடு பகுதிக்கு ஒரு தனி பேருந்து இயக்க தற்சமயம் தேவை எழவில்லை.

**196—**

**இரவு நேரப் பேருந்து**

**வினா எண் 25039—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து வெள்ளணைப்பட்டியிலுள்ள கோபிநாதபுரத்திற்கு இரவு நேரப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சேலத்திலிருந்து கோபிநாதபுரத்திற்கு 90ஏ தடப்பேருந்து தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. சேலத்திலிருந்து கோபிநாதபுரம் செல்ல இரவு நேரப் பயணிகளுக்கு வசதியாக சேலம் பழைய பேருந்து நிலையத்திலிருந்து இரவு 11.50 மணிக்கு புறப்பட்டு, சேலம் மாநகரப் புதிய பேருந்து நிலையத்திற்கு இரவு 12.00 மணிக்குச் சென்றடைந்து, அங்கிருந்து கோபிநாதபுரத்திற்கு இரவு 00.40 மணிக்கு சென்றடையும்படி இயக்கப்பட்டு அங்கேயே இரவு தங்கல் செய்து அதிகாலை சேலத்திற்கு வரும் பயணிகளுக்கு வசதியாக காலை 4.40 மணிக்கு கோபிநாதபுரத்தில் இருந்து புறப்பட்டு சேலம் செல்கிறது. இதுவே தேவையை நிறைவு செய்வதாக உள்ளதால் கோபிநாதபுரத்திற்கு தனியாக இரவு நேரப் பேருந்து இயக்க தேவை நிலவவில்லை.

**197—**

**புதிய பேருந்து**

**வினா எண் 25041—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், மூக்கனூரிலிருந்து சேலத்திற்கு தனியாக புதிய பேருந்து இயக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சேலத்திலிருந்து மூக்கனூருக்கு எஸ்-1 தடப் பேருந்து மூலம் 2 நடைகளும், ஓ-14 தடப்பேருந்தின் மூலம் 4 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றது. சேலத்திலிருந்து ஓமலூருக்கு நகர மற்றும் புறநகர் பேருந்துகள் அடிக்கடி உள்ளதால், ஓமலூரிலிருந்து எஸ்-1, ஓ-14 மற்றும் 102 தடங்களின் மூலம் மூக்கனூருக்கு நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எஸ்-1 தினந்தோறும் 8 நடைகள் இயக்கப்பட்டு அதன் பயணிகள் வருகை 57 விழுக்காடுதான் உள்ளது. அதேபோல ஓ-14 தினமும் 6 நடைகள் இயக்கப்பட்டு பயணிகள் வருகை 57 விழுக்காடும், 102 பேருந்துகள் மூலம் தினமும் 4 நடைகளில் பயணிகள் வருகை 51 விழுக்காடுதான் உள்ளது. எனவே இப்பகுதி மக்களுக்கு பேருந்து வசதி இதுவே போதுமானதாக உள்ளது. எனவே புதிய பேருந்து இயக்க அவசியம் எழவில்லை.

**198—**

**புதிய பேருந்து**

**வினா எண் 25109—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு, திருவள்ளூருக்கிடையே புதிய பேருந்து (வழித்தடம்) இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கழகப் பேருந்துகள் மூலமாகவும், தனியார் பேருந்துகள் மூலமாகவும் போதுமான பேருந்து வசதி பெற்றிருப்பதால் புதிய பேருந்து (வழித்தடம்) இயக்கத் தேவை எழவில்லை.

[2000 நவம்பர் 13

**199—**

### பேருந்து நிலையம்

**வினா எண் 25110—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சென்னை, சைதாப்பேட்டை, மறைமலையடிகள் பாலம் அருகில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*சென்னை சைதாப்பேட்டை மறைமலையடிகள் பாலம் அருகில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 1 ஏக்கர் நிலப்பரப்பு 10 அடி பள்ளமாக இருந்ததால் அவ்விடத்தில் ஒரு பகுதியில் மண்கொட்டி படிப்படியாக நிலம் சமப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 80 சென்ட் அளவில் பேருந்து நிலையம் அமைக்கவும் மேற்குறிப்பிட்ட இடம் ஆற்றின் கரையோரமாக இருப்பதால் முதற்கட்டமாக தடுப்பு சுவரும் மேற்பரப்பில் தார்ச் சாலை போடவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இப்பணிகளை செய்வதற்காக மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தில் இருந்து ரூ.35 இலட்சம் நிதி உதவி செய்ய மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர் திரு. வி.பி. துரைசாமி அவர்கள் முன் வந்துள்ளதால் அந்த நிதியைப் பெற்று அபிவிருத்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.*

**200—**

### கூடுதல் பேருந்து வசதிகள்

**வினா எண் 26216—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*திருப்பூர் தொகுதி, தொழில் பகுதி என்பதால் தற்போதுள்ள பேருந்து வசதிகளை மேலும் அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*



2000 நவம்பர் 13]

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*திருப்பூர் நகர்புறத்தைப் பொறுத்தமட்டில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர், திருப்பூர், பல்லடம் மற்றும் கருமத்தம்பட்டி கிளைகளைச் சார்ந்த 90 நகரப் பேருந்துகள் மூலம் 859 நடைகள் திருப்பூர் நகரில் இயக்கி வருகிறது. மேலும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்-2) ஈரோடு மூலம் சுமார் 58 நகரப் பேருந்துகள் மூலம் 396 நடைகள் தினசரி இயக்கி வருகிறது. திருப்பூரை மையமாகவும் திருப்பூர் வழியாகவும் 94 புறநகர் பேருந்துகள் இயங்குகின்றன. இது தவிர 29 தனியார் துறை நகரப் பேருந்துகள் தினசரி 449 நடைகள் இயங்குகின்றன. 42 சிற்றுந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த வசதியே தற்போதைய பயணிகளது அடர்விற்கு போதுமானதாக உள்ளது. எனவே பேருந்து வசதிகளை மேலும் அதிகப்படுத்திட வேண்டிய தேவை எழவில்லை.*

### பதினெட்டாவது பட்டியல்

**1—**

### புதிய வழித்தடம்

**வினா எண் 26235—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சாத்தான்குளம், நாசரேத் வழியாக பெங்களூர் செல்ல அரசு விரைவுப் பேருந்து புதிய வழித்தடம் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) திட்டம் ஏதும் இல்லை.*

*(ஆ) இக்கேள்வி எழாது.*

**2—**

### பேருந்துகள் இயக்குதல்

**வினா எண் 26251—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) பெண்கள், வயோதிகர்கள் மற்றும் ஊனமுற்றோர் வசதியாக பிரயாணம் செய்ய தாழ்வான படிக்கட்டுகள் கூடிய (Low Floor Bus) பேருந்துகளை இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**3—**

**பேருந்து வசதி**

**வினா எண் 26258—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை ஒன்றியம், கள்ளியம்புதூர் பொதுமக்களிடமிருந்து பேருந்து வசதி செய்து தருமாறு அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பெருந்துறை ஒன்றியம், கள்ளியம்புதூர் பொதுமக்களிடமிருந்து கூடுதல் பேருந்து வசதி வேண்டி மனு பெறப்பட்டுள்ளது.

(ஆ) பெருந்துறையிலிருந்து கள்ளியம்புதூருக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோவை கோட்டம்-2, ஈரோடு மூலமாக நகரப் பேருந்துகள் தடம் எண் பி1, பி12, 7பி ஆகியவை மூலம் 10 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பேருந்துகளில் பயணிகள் விகிதாச்சாரம் 40%, 30%, 39% எனக் குறைவாக உள்ளதால் கூடுதல் பேருந்து இயக்குவது சாத்தியமில்லை.



2000 நவம்பர் 13]

**4—**

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 26260—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, பொன்முடி ஊராட்சி பகுதியில் உள்ள மக்களிடமிருந்து பேருந்து வசதி கேட்டு அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், ஈரோடு மூலமாக நகரப் பேருந்து தடம் எண் பி10 பொன்முடி வழியாக தினசரி 4 நடைகள் இயக்கப்படுகிறது. தற்சமயம் அப்பேருந்தில் பயணிகள் விகிதாச்சாரம் குறைவாக இருப்பதால் கூடுதல் நடைகள் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**5—**

**நவீனமயமாக்கப்பட்ட பேருந்துகள்**

**வினா எண் 26264—திரு. டி. மணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை-திருவனந்தபுரம் வரை இயக்கப்படுகின்ற விரைவுப் பேருந்துகளில் பழையவைகளை மாற்றி நவீனமயமாக்கப்பட்ட புதிய பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் சென்னை-திருவனந்தபுரம் வழித்தடத்தில் 18 சொகுசுப் பேருந்துகள் 18 ஒருவழிப்பாதை பயணமாக

[2000 நவம்பர் 13

இயக்கப்பட்டு வருகின்றது. இப்பேருந்துகள் அனைத்திற்கும் ஓராண்டு காலம்தான் பூர்த்தியாகின்றது. எனவே அப்பேருந்துகளை மாற்ற வேண்டிய அவசியம் எழவில்லை.

**6—**

**வட்டாரப் போக்குவரத்துக் கழகம்**

**வினா எண் 26270—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி சுவாமியார் மடத்திலுள்ள பகுதி நேரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலரை நியமித்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

**7—**

**கூடுதல் பேருந்து வசதி**

**வினா எண் 26274—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*ஆண்டிமடம் தொகுதி, சிறுகளத்தூர் கிராமத்திற்கு பேருந்து வசதியை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

ஜெயங்கொண்டம்—செந்துறை வழித்தடத்தில் பொன்பரப்பியிலிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குள் சிறுகளத்தூர் உள்ளது. இப்பிரதான



2000 நவம்பர் 13]

சாலையில் இயக்கப்படும் 77 நடைகளும் இம்மக்களுக்கு பேருந்து வசதி அளிக்கின்றன. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், திருச்சி, இக்கிராமத்திற்கு தனியாக 4 நடைகள் இயக்குகின்றது. சிறுகளத்தூர் வழியாக அரசு போக்குவரத்துக்கழக நகரப் பேருந்து 2 நடைகளும், புறநகர் பேருந்து 2 நடைகளும் தனியார் பேருந்துகள் 6 நடைகளும் இயக்குகின்றன. இப்பேருந்து வசதியே போதுமானதாகும். எனவே பேருந்து வசதியை அதிகப்படுத்தத் தேவை எழவில்லை.

**8—**

**புதிய வழித்தடம்**

**வினா எண் 26461—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) எடப்பாடியிலிருந்து வட ஆற்காடு, வேலூருக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) எடப்பாடியிலிருந்து சேலத்திற்கு 21 பேருந்துகளும் சேலத்திலிருந்து வடஆற்காடு வேலூருக்கு 35 பேருந்துகளும் சுமார் 20-30 நிமிட இடைவெளியில் 24 மணி நேரமும் இயக்கப்படுவதால் எடப்பாடியிலிருந்து வட ஆற்காடு, வேலூருக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க வேண்டிய தேவையில்லை.*

**9—**

**பேருந்து வசதி**

**வினா எண் 26474—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், சின்னக்காம்பட்டியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல மூலனூரில் இருந்து பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?*

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், சின்னக்காம்பட்டியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், ஈரோடு, பேருந்து தடம் எண் எம்.1, மூலனூரில் காலை 7.55க்கும் சாலக்கடையில் காலை 8.45க்கும் தடம் எண் எம்.2 நகரப் பேருந்து மூலனூரில் மாலை 4.35க்கும் புறப்படும் தனி நடைகள் சின்னக்காம்பட்டி வழியே பள்ளி நேரத்திற்கு காலை மற்றும் மாலை நேரங்களில் இயக்கப்பட்டு வருகின்றன.

**10—**

**பேருந்துகள் இயக்குதல்**

**வினா எண் 27753—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலைநகரிலிருந்து தாம்பரம், செங்கல்பட்டு மற்றும் சென்னை பிராட்வே ஆகிய இடங்களுக்கு பேருந்து வசதியை மீண்டும் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மறைமலைநகரிலிருந்து சென்னைக்கு இயக்கப்பட்டு வந்த தடம் எண் 99 எம் குறைந்த பயணிகள் அடர்வு காரணமாக 21-8-1995 முதல் நிறுத்தப்பட்டது. மறைமலை நகரிலிருந்து தற்பொழுது தாம்பரத்திற்கு நகரப் பேருந்து வசதி உள்ளது. சென்னை-செங்கல்பட்டு-விழுப்புரம்- உளுந்தூர்பேட்டை-திருச்சி தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் மறைமலைநகர் அமைந்துள்ளதால் எந்த நேரமும் தேவைக்கேற்ப பேருந்து வசதி பெற்றுள்ளது. எனவே மறைமலை நகரிலிருந்து செங்கற்பட்டு, சென்னை பிராட்வே ஆகிய இடங்களுக்கு நேரடிப் பேருந்து வசதி செய்யத் தேவை எழவில்லை.

**11—**

**கூடுதல் ரயில்கள்**

**வினா எண் 28374—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு



2000 நவம்பர் 13]

விடையளிப்பாரா—

சென்னை-கோயம்புத்தூருக்கு மேலும் கூடுதல் ரயில்களை விட மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தியுள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தற்போது கோவை விரைவு இரயில்வண்டி (2675/2676), சேரன் விரைவு இரயில் வண்டி (2673/2674), நீலகிரி விரைவு இரயில் வண்டி (6605/6606). சதாப்தி விரைவு இரயில் வண்டி (2023/2024) என நான்கு ஜதை இரயில் வண்டிகளும், இவை தவிர கேரள மாநிலம் செல்லும் 6 ஜதை இரயில் வண்டிகளும் சென்னைக்கும் கோயம்புத்தூருக்கும் சென்று வரும் பயணிகளின் தேவைக்குப் போதுமானதாக உள்ளது. முடிவுமிடம் மற்றும் பாதைகளின் தட்டுப்பாட்டின் காரணமாக (Terminal and Path Constraints) சென்னைக்கும் கோயம்புத்துருக்கும் இடையில் கூடுதல் இரயில்கள் விட இயலாது என தென்னக இரயில்வே தெரிவித்துள்ளது.

**12—**

**நவீன ஒலிப்பான்கள்**

**வினா எண் 28648—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாலையில் செல்வோர்களை நடுங்க வைக்கும் நவீன ஒலிப்பான்களைப் பயன்படுத்துவதற்கு அரசு தடை விதிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சாலையில் செல்வோர்களை நடுங்க வைக்கும் நவீன ஒலிப்பான்களைப் பயன்படுத்துவதற்கு மத்திய மோட்டார் வாகன விதி 119 (2) இல் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்விதி நன்கு அமல்படுத்தப்படுகிறது.

**13—**

**பேருந்து வசதி**

**வினா எண். 29037—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், கொத்தந்தவாடி கிராமத்திற்கு பேருந்து வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

[2000 நவம்பர் 13

*(ஆ) ஆம் எனில், விரைவில் அவ்வூருக்கு பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொத்தந்தவாடி கிராமம், ஆரணி, சேத்துபட்டு (வழி) கரிப்பூர் நாச்சாவரம், நம்பேடு, தடத்தில் நாச்சாவரம் கட்டண நிலையில் இருந்து 0.6 கி.மீ. தொலைவில் உள்ளடங்கி இருக்கிறது. ஆரணி-சேத்துப்பட்டு தடத்தில் தினசரி 6 நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இதில் பயணிகள் அடர்வு 52% மட்டுமே உள்ளது. நிலவி வரும் பயணிகள் அடர்வுக்கேற்ப தற்போது இயக்கப்பட்டுவரும் நடைகளே போதுமானதாகும். எனவே கொத்தந்தவாடி கிராமத்திற்கு தனியே பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

**14—**

**விரைவுப் பேருந்து**

**வினா எண் 30031—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) எடப்பாடியிலிருந்து தமிழ்நாடு அரசு விரைவுப் பேருந்து ஒன்று கோயம்புத்தூருக்கு இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) அதன் விவரம் அரசு அறிவிக்குமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**15—**

**விளம்பரம்**

**வினா எண் 30032—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரசுப் பேருந்துக் கழகங்கள் புதிய வழித்தடத்தில் பேருந்து விடும்போது அதை நல்ல முறையில் விளம்பரப்படுத்தி வசூலை அதிகரிக்கச் செய்ய முன்வருமா?*



2000 நவம்பர் 13]

*(ஆ) அவ்விதம் செய்யப்படாமையால், பல தடங்களில் வசூல் இல்லாமல் பேருந்துகள் ரத்து செய்யப்படுவதை அரசு அறியுமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில் புதிய வழித்தடங்கள் இயக்கும்போதோ அல்லது வழி மாற்றம் செய்யும்போதோ தமிழ் மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகள் மற்றும் நோட்டீசுகள் மூலம் பயணிகள் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்படுகின்றன. மற்றும் சம்பந்தப்பட்ட பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு முன்கூட்டி தகவல் தெரிவிக்கப்பட்டு பொது மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட விழாக்கள் மூலமாக விளம்பரப்படுத்தியே இயக்கம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் வழித்தடங்கள் அதில் பயணம் செய்யும் பயணிகள்/வருவாய் போன்றவற்றை அவ்வப்போது ஆய்வு செய்து உரிய மாற்றம் செய்யப்படுகிறது.

**16—**

**கண்காணிப்பு முறை**

**வினா எண் 30138—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சென்னை மாநகரத்தில் வீடியோ கேமராக்கள் மூலம் போக்குவரத்தைக் கண்காணிக்கும் முறை எந்தெந்த இடங்களில் செயல்படுத்தப்படுகிறது?*

*(ஆ) இதற்கு ஆகும் செலவு எவ்வளவு?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை மாநகரத்தில் வீடியோ கேமராக்கள் மூலம் போக்குவரத்தை கண்காணிக்கும் முறை அண்ணா நகர் ரவுண்டானாவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

[2000 நவம்பர் 13

(ஆ) இத்திட்டம் தன்னார்வ நிறுவனத்தின் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. எனவே அரசு நிதியிலிருந்து செலவிடப்படவில்லை.

**17—**

**விரைவுப் பேருந்து**

**வினா எண் 30178—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரிலிருந்து திண்டிவனம் வழியாக பாண்டிச்சேரிக்கு ஒரு அரசு விரைவுப் பேருந்து விட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**18—**

**புதிய பேருந்துகள்**

**வினா எண் 30198—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோயில் தாலுகா, ஆயங்குடியிலிருந்து சென்னை மற்றும் கடலூர் வரை செல்லும் பேருந்துகளின் புறப்படும் இடத்தை மாற்றிய காரணத்தினால் ஆயங்குடி பயணிகள் அவதிக்குள்ளாவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், ஆயங்குடியிலிருந்து புதியதாக பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

(இ) எப்போது?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆயங்குடியிலிருந்து புறப்படும் பேருந்துகளை முட்டத்திலிருந்து புறப்படும்படி மாற்றி அமைத்ததால் ஆயங்குடி பயணிகளுக்கு பாதிப்பு ஏதுமில்லை.

(ஆ) மற்றும் (இ) இல்லை.

**19—**

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 30210—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் முதல் பாண்டிச்சேரி வரை அரசுப் பேருந்து இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சென்னையிலிருந்து தாம்பரம் வழியாக பாண்டிச்சேரிக்கும் சென்னையிலிருந்து தாம்பரம், பாண்டிச்சேரி வழியாக பிற இடங்களுக்கும் போதுமான அளவு பேருந்துகள் இயக்கப்படுவதால் தாம்பரத்திலிருந்து பிரத்யேகமாகப் பாண்டிச்சேரிக்கு பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**20—**

**சிறப்புப் பேருந்து**

**வினா எண் 30480—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி மாலை நேர கல்லூரியில் படிக்கும் மாணவர்களின் சிரமத்தைப் போக்க பரமக்குடி - மேலாயக்குடி - எமனேஸ்வரம் - நேரு நகர் போன்ற பகுதிகளுக்கு மாணவர்களுக்கான சிறப்பு பேருந்து விடும் செயற்குறிப்பு உள்ளதா?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கோரிக்கைத் தடத்தில் போதுமான பேருந்து வசதிகள் உள்ளதால் பரமக்குடியிலிருந்து மேலாயக்குடி - எமனேஸ்வரம் - நேரு நகர் போன்ற பகுதிகளுக்கு மாலைநேரக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கான சிறப்புப் பேருந்து விடும் சாத்தியக்கூறு இல்லை.

**21—**

**உணவகம்**

**வினா எண் 30535—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொலைதூரப் பயணம் செய்யும் பயணிகள் வசதியை முன்னிட்டு, வழித்தடங்களில் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் உணவகம் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) இல்லையெனில் அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொலைதூரம் பயணம் செய்யும் பயணிகள் வசதியை முன்னிட்டு, கீழ்க்கண்ட இடங்களில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தனியார் மூலம் உணவகங்களை நடத்தி வருகிறது:

(1) பாடலூர் (திருச்சி)
(2) திண்டிவனம்
(3) மதுரை
(4) தொழுதூர்
(5) கொட்டாம்பட்டி
(6) மாமண்டூர்

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.



2000 நவம்பர் 13]

**22—**

**சொகுசுப் பேருந்து**

**வினா எண் 30546—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில்-சென்னை போன்ற நெடுந்தூரப் பேருந்துகளை 32 இருக்கைகள் கொண்ட தனியார் பேருந்து போன்று சொகுசுப் பேருந்தாய் மாற்றி இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**23—**

**போலீஸ் வாரண்டு**

**வினா எண் 30547—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு விரைவுப் பேருந்து வீடியோ கோச்சில் போலீஸ் வாரண்டு பெற்று பயணம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் பேருந்து வீடியோ கோச்சில் சட்டமன்ற உறுப்பினர் பாதுகாப்புக்கு வரும் பாதுகாவலரின் வாரண்டைப் பெற்றுக்கொண்டு, பயண அனுமதிச் சீட்டு வழங்கி பயணம் செய்ய அனுமதிக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**24—**

**விரைவுப் பேருந்து**

**வினா எண் 30798—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல், சுற்றுலா மையத்திற்கு சென்னையிலிருந்து அரசு விரைவுப் பேருந்து ஒன்று இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**25—**

**கணினிமயமாக்குதல்**

**வினா எண் 30811—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரி ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் மோட்டார் வண்டிகள் பதிவு உரிமம் வழங்குவதை கணினிமயமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வண்டிகள் பதிவு மற்றும் உரிமம் வழங்குவதை கணினிமயமாக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

(ஆ) 31-8-2000-க்குள் கணினிமயமாக்கும் பணி முடிவடையும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 13]

**26—**

**பேருந்து நிறுத்தம்**

**வினா எண் 30812—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், அரியானூரில் விநாயகா டெண்டல் கல்லூரி அருகில் அனைத்து பேருந்துகளும் நின்று செல்ல அரசு உத்திரவிட முன்வருமா?

(ஆ) அங்கு ஆயிரக்கணக்கான மாணவர்கள் பஸ் நிறுத்தம் இல்லாததால் அவதிப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம் I-ன் மூலம் இயக்கப்படுகின்ற சேலம்—கோவை மார்க்கத்தில் செல்லும் தொலைதூரப் பேருந்துகளைத் தவிர அரியானூர் பல் மருத்துவக் கல்லூரி வழியாகச் செல்லும் அனைத்து புறநகர் மற்றும் நகரப் பேருந்துகளும் கல்லூரி அருகில் நின்று மாணவ-மாணவிகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றன. போதுமான அளவில் அக்கல்லூரி வழியாக நகர் மற்றும் புறநகர் பேருந்துகள் இயக்கப்படுவதாலும் அவையனைத்தும் கல்லூரி வாசலில் நின்று மாணவ மாணவிகளை ஏற்றி இறக்கிச் செல்வதாலும் மாணவர்கள் சிரமமின்றி கல்லூரி சென்று வர இயலுகின்றது. போதுமான பேருந்து வசதி தற்போது உள்ளது.

**27—**

**கூடுதல் பேருந்து**

**வினா எண் 30815—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் முதல் திருப்பெரும்புதூர் வரை மணிமங்கலம் வழியாக கூடுதல் பேருந்துகள் விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல்?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம்—திருப்பெரும்புதூர் வழி மணிமங்கலம் தடத்தின் நீளம் 27.0 கி.மீ. ஆகும். கோரிக்கை தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம், 3 நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 36 நடைகளையும், புறநகர் பேருந்துகள் மூலம் 4 நடைகளையும் இயக்கி வருகிறது. இதில் பயணிகள் அடர்வு 72% மட்டுமே உள்ளது. இத்தடத்தில் தனியார் பேருந்துகள் 26 நடைகள் இயங்குகின்றன. தற்போது உள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளதால் கூடுதல் பேருந்து விடுவதற்கான தேவை எழவில்லை.

**28—**

**புதிய இரயில் பாதை**

**வினா எண் 30979—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து பெங்களூர் செல்ல, செங்கற்பட்டு, காஞ்சிபுரம், வந்தவாசி, திருவண்ணாமலை, செங்கம் வழியாக புதிய இரயில் பாதை அமைக்கும் செயற்குறிப்பு மத்திய அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?

(இ) அதை விரைவுபடுத்த மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சென்னையிலிருந்து பெங்களூர் செல்ல செங்கற்பட்டு, காஞ்சிபுரம், வந்தவாசி, திருவண்ணாமலை, செங்கம் வழியாக புதிய இரயில்பாதை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் மத்திய அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை.



2000 நவம்பர் 13]

**29—**

**வாரியம்**

**வினா எண் 31251—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆபத்தான தொழிலில் ஈடுபடும் பனை ஏறும் தொழிலாளர்கள், கட்டடத் தொழிலாளர்கள், கல்லுடைப்போர் ஆகியோருக்கு மாவட்டம் தோறும் தனித்தனியே வாரியம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு முழுவதும் ஆபத்தான தொழிலில் ஈடுபடும் பனை ஏறும் தொழிலாளர்கள், கட்டடத் தொழிலாளர்கள், கல்லுடைப்போர் ஆகியோருக்கு சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் ஆகியன இயங்கி வருவதால், இவர்களுக்கு மாவட்டந்தோறும் தனித்தனியே வாரியம் அமைக்கும் செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், பனைமரத் தொழிலாளர்களுக்கு தனியாக வாரியம் சென்னையில் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**30—**

**சென்னையில் ஆட்டோக்கள்**

**வினா 31525—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகருக்குள் அனுமதிக்கப்பட்டுள்ள ஆட்டோக்கள் எத்தனை?

(ஆ) அனுமதி பெறாமல் ஆட்டோக்கள் ஓடுகின்றதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 36,756

(ஆ) ஆம். அவற்றின்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2000 நவம்பர் 13

31—

### ஆம்னி பேருந்துகள்

**வினா எண் 31747—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஆம்னி பேருந்துகள் ரெகுலர் சர்வீஸ் பேருந்துகளாக இயக்க அனுமதிக்கப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் ஆம்னி பேருந்துகள் ரெகுலர் சர்வீஸ் பேருந்துகளாக இயக்க அனுமதிக்கப்படவில்லை.

32—

### புதிய பேருந்துகள்

**வினா எண் 31756—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம் கோட்டத்திற்கு கூடுதலாக புதிய பேருந்துகள் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் (கோட்டம்-3) காஞ்சிபுரம் போக்குவரத்துக் கழகத்தில் 1999-2000 ஆண்டில் 27 புதிய பேருந்துகள் கட்டி முடிக்கப்பட்டு பழைய பேருந்துகளுக்குப் பதிலாக தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன.

33—

### பேருந்து இயக்குதல்

**வினா எண் 31759—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

(அ) திருச்சியிலிருந்து பழநி வரை அரசுப் பேருந்து (வழி) கோகமலைப்பாளையம், அரவக்குறிச்சி வழியாக இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

34—

### சோதனையிடுதல்

**வினா எண் 31795—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாகனங்களைச் சோதனையிடும் அதிகாரிகள், ஓட்டுநர்கள் மது அருந்தியிருக்கிறார்களா என்று சோதனையிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், மது அருந்திய ஓட்டுநர்மீது கடுமையான நடவடிக்கை அரசு எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வாகனங்களைச் சோதனையிடும் போக்குவரத்துக் காவல் அதிகாரிகள், ஓட்டுநர்கள் மது அருந்தியிருக்கிறார்களா என்று சோதனை செய்கிறார்கள்.

(ஆ) அவ்வாறு மது அருந்திய ஓட்டுநர்கள்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

35—

### நிறுத்தப்பட்ட பேருந்துகளை இயக்குதல்

**வினா எண் 32237—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-2) மூலம் திருநெல்வேலியிலிருந்து இராமநாதபுரம், ராமேசுவரம் ஆகிய ஊர்களுக்கு தினசரி இயக்கப்பட்டு வந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-2) மூலம் திருநெல்வேலியிலிருந்து இராமநாதபுரத்திற்கு 2 பேருந்துகளும், ராமேசுவரத்திற்கு 1 பேருந்தும் ஆக 3 பேருந்துகள் இயக்கப்பட்டன. இப்பேருந்துகளில் பயணிகள் அடர்வு குறைவின் காரணமாக வருவாய் இழப்பு ஏற்பட்டதால் இத்தடத்தில் இயக்கப்பட்டு வந்த பேருந்துகளை தடச் சீரமைப்பு செய்து தற்போது தேவைக்கு ஏற்ப பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. நட்டத்தைத் தவிர்க்கும் பொருட்டு பயணிகள் விகிதாச்சாரம் மிக அதிகமுள்ள வழித்தடங்களில் மற்ற பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தடம் எண் 575-ல் பாபநாசம் - திருநெல்வேலி - இராமநாதபுரம் வழித்தடத்தில் இயக்கப்பட்ட பேருந்து 15-7-1999 முதல் நிறுத்தப்பட்டது. மேலும், திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடிக்கு வந்து அங்கிருந்து ராமேசுவரம், இராமநாதபுரம் செல்வதற்கு 200-க்கும் மேற்பட்ட சுற்றுக்கள் உள்ளதால் நிறுத்தப்பட்ட வருவாய் குறைந்த பேருந்தினை மீண்டும் இயக்கும் உத்தேசம் ஏதுமில்லை.

**36—**

## வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

**வினா எண் 32386—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஏற்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) எப்போது நிறைவேற்றப்படும்?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில் உள்ள வட்டாரப் போக்குவரத்துப் பகுதி அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பினை, நிதி நிலையைக் கருத்தில்கொண்டு தற்போது பரிசீலிக்க இயலவில்லை.

**37—**

## பேருந்து விடுதல்

**வினா எண் 32544—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியிலிருந்து கோவை செல்லும் பேருந்து தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அந்தப் பேருந்தை விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடியிலிருந்து கோயம்புத்தூருக்கு சங்ககிரி வழியாக 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் மூலமாக ஒரு புறநகர் பேருந்து தினசரி இரு நடைகள் பரீட்சார்த்த ரீதியில் இயக்கப்பட்டது. சுமார் ஆறுமாத காலத்திற்கு இயக்கப்பட்ட இப்பேருந்தில் பயணிகளது அடர்வின்மை காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட வழித்தடத்தில் பகுதிவாரியாக போதுமான அளவில் பேருந்து வசதி உள்ளதால் அதனை மீண்டும் இயக்கத் தேவை எழவில்லை.

**38—**

## கூடுதல் வழித்தடங்கள்

**வினா எண் 32690—திரு. மீ.அ. வைதிலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) மிக வேகமாக வளர்ந்து வரும் முடிச்சூரிலிருந்து தாம்பரத்திற்கு கூடுதலாக வழித்தடங்கள் விடுவது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து விடப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது முடிச்சூர் - தாம்பரம் வழித்தடத்தில் தேவையான அளவு பேருந்து இயக்கப்படுவதாலும் மற்றும் அவ்வழித்தடங்களில் பயணம் செய்யும் பயணிகள் அடர்வு 50 சதவிகிதமே உள்ளதாலும் கூடுதலாக வழித்தடங்கள் இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

**39—**

**திருப்பதிக்குப் பேருந்து வசதி**

**வினா எண் 32711—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் நகரிலிருந்து திருப்பதிக்கு நேரடி பஸ் போக்குவரத்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**40—**

**சேலத்தில் ஆட்டோக்கள்**

**வினா எண் 32712—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் பதிவு செய்யப்பட்ட ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கை எவ்வளவு?



2000 நவம்பர் 13]

(ஆ) அவைகளுக்கு மீட்டர் பொருத்தி கட்டணம் வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 5,554.

(ஆ) அனைத்து ஆட்டோ ரிக்ஷாக்களிலும் மீட்டர் பொருத்திய பின்னர்தான் அனுமதிச்சீட்டு தரப்படுகின்றது. எனவே இவ்வினா எழ இடமில்லை.

**41—**

**தொழிலாளர்கள்**

**வினா எண் 32979—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாலைத் தொழிற்சாலைகள் மற்றும் அதில் பணிபுரியும் தொழிலாளர்கள் எத்தனை?

(ஆ) 1999 மே மாதம் முடிய எவ்வளவு பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் உள்ளனர்?

(இ) இவர்களுக்காக அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாலைகளின் எண்ணிக்கை சுமார் 800 ஆகும். அதில் பணிபுரியும் தொழிலாளர்கள் இரண்டு லட்சத்திற்கும் மேல் உள்ளனர்.

(ஆ) 1999 மே மாதம் முடிய 40 ஆலைகளைச் சேர்ந்த 21,819 தொழிலாளர்கள் வேலையில்லாமல் உள்ளனர்.

(இ) பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாகவும், அதனால் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாகவும் பெரும்பாலான பஞ்சாலைகள் இயங்காமலுள்ளன. இந்நிறுவனங்களில் நிதி நெருக்கடி

இல்லாமல் தொழிலாளர்கள் பிரச்சினைகள் (ஊதிய உயர்வு கோரிக்கை போன்றவைகள்) இருந்தால்தான் தொழிலாளர் துறையால் தீர்த்து வைக்க இயலும். நிதி நெருக்கடி காரணமாக இயங்காமலுள்ள ஆலைகளைத் திறக்க நடவடிக்கை ஏதும் தொழிலாளர் துறையால் தொழிற் தகராறுகள் சட்டப்படி எடுக்க வாய்ப்பில்லை.

42—

### நிவாரணத் தொகை

**வினா எண் 32985—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 1999-2000 நிதியாண்டில் மூடிய தொழிற்சாலை மற்றும் பஞ்சாலைகளின் தொழிலாளர்களுக்கு மாதம் ரூ. 250/- நிவாரணத் தொகை எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?*

*(ஆ) இதனால் அரசுக்கு வருடம் ஒன்றுக்கு ஆகும் செலவுத் தொகை எவ்வளவு?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1989-90 ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ்நாட்டில் இயங்காமல் மூடப்பட்ட தொழிற்சாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு 1-5-1999 முதல் மாதம் ரூ. 250/- வீதம் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 1-5-1999 முதல் 31-3-2000 வரை 42 நிறுவனங்களில் பணிபுரிந்த 5255 தொழிலாளர்களுக்கு ரூ. 88,76,500/- பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

(ஆ) தகுதியுள்ள தொழிலாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணி இன்னும் முடிவடையவில்லையாதலால், ஒரு வருடத்திற்கு ஆகும் செலவுத் தொகையைத் தற்போது கணக்கிட இயலாது.



43—

### புதிய பேருந்து

**வினா எண் 33019—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கடலூரிலிருந்து சாமியார்ப்பேட்டை வழியாக பரங்கிப்பேட்டை வரை செல்லும் பழைய பேருந்தினை மாற்றி புதிய பேருந்துவிட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

44—

### புதிதாக இயக்கப்பட்ட பேருந்துகள்

**வினா எண் 33039—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்தில் போக்குவரத்துக்குச் சொந்தமான பேருந்துகள் தற்சமயம் 1999 அக்டோபர் மாதம் வரை எத்தனை உள்ளன?*

*(ஆ) இதில் பேருந்து இயக்குவதற்கு லாயக்கற்றவை எத்தனை என்று கண்டறியப்பட்டுள்ளது?*

*(இ) 1999 ஆம் ஆண்டில் எவ்வளவு பேருந்துகள் புதிதாக வாங்கப்பட்டன?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1999 அக்டோபர் மாதம் வரை தமிழகத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான பேருந்துகளின் எண்ணிக்கை 17,014.

[2000 நவம்பர் 13

(ஆ) அவைகளில் 106 பேருந்துகள் இயக்குவதற்கு லாயக்கற்றவை எனக் கண்டறியப்பட்டது.

(இ) 1999 ஆம் ஆண்டில் 1,142 பேருந்துகள் புதியதாக வாங்கப்பட்டன.

**45—**

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 33040—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியிலிருந்து இரவு நேரத்தில் சென்னை வரை ஒரு அரசுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய தகவல் அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடியிலிருந்து சென்னை செல்ல இரவு நேரத்தில் எடப்பாடி-சேலம், சேலம்-சென்னை தடத்தில் பகுதிவாரியாக போதுமான பேருந்து வசதி உள்ளதால் தனியாக ஒரு பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**46—**

**எடப்பாடி-கோயம்புத்தூர் பேருந்து வசதி**

**வினா எண் 33041—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலிருந்து கோயம்புத்தூருக்கு ஒரு அரசுப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் அரசு தெரிவிக்குமா?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடியிலிருந்து கோயம்புத்தூருக்கு நேரடியாக பேருந்து இயக்கும் உத்தேசம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**47—**

**கிளை அலுவலகம்**

**வினா எண் 33144—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளி வட்டத் தலைநகரில் போக்குவரத்துக் கிளை அலுவலகம் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கிளை அலுவலகம் விரைவில் துவங்கி போச்சம்பள்ளியில் இருந்து பேருந்துகள் இயங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) போச்சம்பள்ளியில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், தர்மபுரி மூலமாகப் பணிமனை ஒன்றைத் தொடங்கிட தற்சமயம் செயற்குறிப்பு ஏதும் இல்லை. அரசு ஆணையின்படி இரண்டு பணிமனைகளுக்கு இடையே 40 கி.மீ. தூரம் இடைவெளி இருக்க வேண்டும். ஊத்தங்கரை, தருமபுரி, திருப்பத்தூர் ஆகிய அருகில் உள்ள ஊர்களில் பணிமனைகள் ஏற்கெனவே உள்ளதால் போச்சம்பள்ளியில் பணிமனை அமைக்க வேண்டிய அவசியமில்லை.

**48—**

**வாகனங்களில் எரிவாயு**

**வினா எண் 34402—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

*(அ) தமிழ்நாட்டில் வாகனங்களை இயக்க சமையல் எரிவாயு பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், சமையல் எரிவாயு மூலம் எத்தனை வாகனங்கள் இயங்குகின்றன?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) வழங்கப்படவில்லை.*

*(ஆ) இவ்வினா எழாது.*

**49—**

**ஒரு வழிப் பாதை**

**வினா எண் 34617—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி நகராட்சிப் பகுதியில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க ஒரு வழிப்பாதை திட்டத்தை அமலுக்குக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

**50—**

**மாதச் சம்பளம் மற்றும் போனஸ்**

**வினா எண் 34808—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2000 நவம்பர் 13]

*(அ) திருப்பூரில் இயங்கி வருகிற கோவை சிந்தாமணி பனியன் கம்பெனியில் தொழிலாளர்களுக்கு எத்தனை மாதச் சம்பளம் மற்றும் போனஸ் வழங்கப்படவில்லை?*

*(ஆ) அவற்றை வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இந்நிர்வாகத்தின் தொழிலாளர்களுக்கு சம்பளம் மற்றும் போனஸ் நிலுவை குறித்த முறையீடு ஏதும் இத்துறையில் பெறப்படவில்லை. தொழில் தாவாவும் எழுப்பப்படவில்லை. நிலுவைத் தொகை குறித்து முறையீடு மனு செய்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**51—**

**இரயில் பாதைகள் இணைப்பு**

**வினா எண் 35691—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவனந்தபுரம்-நாகர்கோவில்-கன்னியாகுமரி மற்றும் நாகர்கோவில்-திருநெல்வேலி இரயில் பாதைகளை மதுரை மண்டலத்துடன் இணைக்க இரயில்வே வாரியத்தை வற்புறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) திருவனந்தபுரம்-நாகர்கோவில்-கன்னியாகுமரி மற்றும் நாகர்கோவில்-திருநெல்வேலி இரயில் பாதைகளை மதுரை மண்டலத்துடன் இணைக்க, 1990-ல் ஏற்கெனவே இவ்வரசு வலியுறுத்தியுள்ளது. மேலும், 1993-க்குப் பிறகு திண்டுக்கல்-மதுரை-விருதுநகர்-வாஞ்சி மணியாச்சி- மீளவிட்டான் - தூத்துக்குடி - திருச்சிராப்பள்ளி வழித்தடங்கள் அகல இரயில் பாதையாக மாற்றப்பட்டு வட மாநிலங்களுக்கு நேரடி*

இரயில்கள் இயங்கி வருவதால், மீண்டும் இரயில்வே வாரியத்திற்கு வற்புறுத்தி கடிதம் எழுதப்பட்டுள்ளது.

(ஆ) இரயில்வே வாரியத்தின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

**52—**

## கிரானைட் தொழில்

**வினா எண் 35745—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிரானைட் தொழிலை குறைந்தபட்ச ஊதிய அட்டவணையில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கிரானைட் தொழில் 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**53—**

## குறைந்தபட்ச ஊதியம்

**வினா எண் 35746—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செயற்கை வைரக் கற்களுக்கு பட்டை தீட்டும் தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செயற்கை வைரக் கற்களுக்கு பட்டை தீட்டும் தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் 1996 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் அரசாணை (2டி) எண் 35, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 2-6-2000-ன்படி மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**54—**

## பயிற்சி மற்றும் ஆராய்ச்சி

**வினா எண் 35747—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தொழிற்சாலை பாதுகாப்புப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் தமிழகத்தில் தொழிற்சாலை பாதுகாப்பு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இசைவு அளித்ததைத் தெரிவித்து சட்டசபையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 28-4-99 அன்று நடைபெற்ற கூட்டத்தில் அரசுத் துறை செயலாளர்கள், தொழில் நிறுவன அதிபர்கள், தொழிற் குழுமங்களைச் சார்ந்த பிரதிநிதிகள், காப்பீட்டுக் கழகங்கள் மற்றும் நிதி நிறுவன அலுவலர்கள் கலந்துகொண்டு, மேற்படி நிலையம்

[2000 நவம்பர் 13

அமைப்பது குறித்த செயல்பாடுகளை மேற்கொள்ள செயல்திட்டக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது. அதன்படி அரசாணை (நிலை) எண் 152, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை (எம் 2), நாள் 24-9-1999-ல் செயல் திட்டக்குழு ஒன்று அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) செயல் திட்டக் குழுவின் முதல் கூட்டம் 16-12-1999 அன்றும், 2-வது கூட்டம் 7-4-2000 அன்றும் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மேற்படி நிலையம் அமைப்பது குறித்த செயல்பாடுகள் விரிவாக விவாதிக்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வகையில் மேற்படி ஆராய்ச்சி நிலையம் அமைத்திட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருவதால், விரைவில் இந்நிலையம் செயல்படத் தொடங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**55—**

### சிறு பேருந்துகள்

**வினா எண் 36081—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் அனுமதி பெறப்பட்ட (மினி) சிறு பேருந்துகள் எத்தனை இயக்கப்படுகின்றன?*

*(ஆ) அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்தில் சிறுபேருந்து உரிமம் கோரி 14-9-2000 வரை மொத்தம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் 348 அவற்றில் 104 நபர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டு சிறுபேருந்துகளை இயக்கி வருகின்றனர். 65 நபர்களுக்கு இயக்க செயல்முறை ஆணை வழங்கப்பட்டுள்ளது. 11 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன.



2000 நவம்பர் 13]

**56—**

### தொழிலாளர் நீதிமன்றத்தின் வழக்குகள்

**வினா எண் 36804—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டத்திலுள்ள தொழிலாளர் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் எத்தனை?*

*(ஆ) அவற்றை விரைவில் முடிப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் தொழிலாளர் நீதிமன்றத்தில் மொத்தம் 2,847 வழக்குகள் நிலுவையிலுள்ளன.

(ஆ) நிலுவையிலுள்ள வழக்குகளை விரைவில் பைசல் செய்ய சென்னை, உயர்நீதிமன்றப் பதிவாளர் மூலம் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**57—**

### ஓட்டுநர் உரிமம்

**வினா எண் 37415—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பெரும்பாலான சாலை விபத்துக்கள் மனிதக் கவனக் குறைவினால் ஏற்படுவது பற்றி அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், ஓட்டுநர் உரிமம் வழங்கும் அதிகார மன்றம் விழிப்புடன் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஓட்டுநர் உரிமம், போக்குவரத்து வாகன விதிகள் முழுமையாக கடைப்பிடிக்கப்பட்டு, கடுமையான தேர்வு நடத்திய பின்னரே வழங்கப்படுகிறது.

**58—**

**நலத் திட்டங்கள்**

**வினா எண் 37611—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு நலத் திட்டங்கள் அரசால் வகை செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களில் சுமைதூக்கும் தொழில் உள்ளிட்ட 54 தொழில் புரியும் தொழிலாளர்கள் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் நலத் திட்டத்தின்கீழ் பயன்பெற வகை செய்யப்பட்டுள்ளது. சுமை தூக்கும் தொழிலாளர்கள் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்டால் மேற்படி நலத் திட்டத்தின்கீழ் தனிநபர் குழு விபத்து நிவாரணம், மகப்பேறுகாலப் பயன்கள் மற்றும் பணி ஓய்வுக்காலப் பயன்களைப் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.



**59—**

**சிற்றுந்து அனுமதி**

**வினா எண் 37798—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசால் சிறிய (சிற்றுந்து) பஸ்கள் இயக்க 1999-2000 ஆம் ஆண்டில் தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சிற்றுந்துகள் இயக்க தனியாருக்குத்தான் அனுமதி வழங்கப்படுகிறது.

(ஆ) கிராமப்புற பகுதிகளில் சிற்றுந்துகள் இயக்க 1999 டிசம்பர் வரை 669 நபர்களுக்கும், 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10 ஆம் தேதி வரையில் 520 நபர்களுக்கும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

**60—**

**சிற்றுந்துகள் இயக்க உரிமம்**

**வினா எண் 37799—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு சிற்றுந்துகள் இயக்க உரிமம் (லைசென்ஸ்) வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு சிற்றுந்துகள் இயக்க உரிமம் (லைசென்ஸ்) வழங்குவதில் முன்னுரிமை அளிக்க

[2000 நவம்பர் 13

மோட்டார் வாகன சட்ட பிரிவு 71(3) (IV) வழி செய்கிறது. இதனடிப்படையில் மாவட்டப் போக்குவரத்து அதிகார மன்றங்கள் செயல்படுகின்றன.

**61—**

**மானியத்துடன் கடனுதவி**

**வினா எண் 38154—திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு தொழில் தொடங்க மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், என்னென்ன தொழில்கள் தொடங்க உதவிகள் வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைப் பொறுத்தமட்டில் கடனுதவி திட்டங்கள் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**62—**

**முத்தரப்புக் குழு**

**வினா எண் 42477—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தனியார் பேருந்து நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நலச் சட்டங்கள் நிறைவேற்றப்படும் நிலை குறித்துப் பரிசீலிக்க முத்தரப்புக் குழு அமைக்க அரசு முன்வருமா?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இத்துறையில் அமலாக்க அதிகாரிகளால் தொழிலாளர் நலச் சட்டம் தீவிர அமலாக்கம் செய்யப்பட்டு வருகிற நிலையிலும், தனியார் துறை போக்குவரத்து நிறுவனங்களில் இச்சட்டங்களை முறையாக அமல்படுத்தப்பட்டு வருவதை தொழிலாளர் ஆய்வர் மற்றும் வட்டார அதிகாரிகளால் அடிக்கடி பரிசீலித்து வருவதாலும், இதற்கென ஒரு முத்தரப்புக் குழு அவசியமில்லை என்று கருதப்படுகிறது.

**63—**

**மோட்டார் சட்டம்**

**வினா எண் 42457—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 5 தொழிலாளர்களுக்குக் குறைவாகவுள்ள தனியார் பேருந்து நிறுவனங்களுக்கும் மோட்டார் சட்டம் பொருந்துகிற முறையில் மாநில அரசு அறிவிக்கை வெளியிடக் கருதியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இதுகுறித்து சட்டத் திருத்தம் செய்ய அரசு பரிசீலித்து வருகிறது.

**64—**

**சாலையைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 14376—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) மாதவரம் பால்பண்ணை முதல் சென்னை சுத்திகரிப்பு நிலையம் (எம்.ஆர்.எல்.) வரையில் உள்ள தேசிய நெடுஞ்சாலை பழுதடைந்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த சாலையைப் பழுதுபார்க்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலைப் பணிகள் பழுதுபார்க்கும் திட்டத்தில் எடுக்கப்பட்டு பணிகள் அனைத்தும் 31-3-1999 அன்று முடிக்கப்பட்டு தற்போது நல்ல நிலையில் உள்ளது.

**65—**

**துறைமுக நுழைவு வாயில்**

**வினா எண் 15852—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி துறைமுக நுழைவு வாயிலை ஆழப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மத்திய அரசின் பரிசீலனையில் இருந்தது.

(ஆ) தூத்துக்குடி துறைமுகத்தில் (-) 12.50 மீ. மற்றும் (-) 11.90 மீட்டரில் நுழைவு வாயில் உட்பட தூர்வாரி ஆழப்படுத்தும் பணி நவம்பர் 1999-ல் முடிவடைந்துள்ளது. இதன் விளைவாக கப்பல் அமிழளவு 8.24 மீ. (27 அடி)-லிருந்து 10.7 மீ. (35 அடி)-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. மற்றும் துறைமுகத்தின் கையாளும் திறன் 3.4 மில்லியன் டன்களுக்கு உயர்ந்துள்ளது.



2000 நவம்பர் 13]

**66—**

**பாலங்கள்**

**வினா எண் 19802—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாளையம்-அரவக்குறிச்சி சாலையில் பாளையம் அருகே வெள்ளோடு, சேர்வைக்காரன்பட்டி ஆகிய இடங்களில் மூன்று ஓடைகளின் குறுக்கே பாலங்கள் அமைத்துத் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

ஆம். குழாய்ப் பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**67—**

**சாலையைச் செப்பனிடல்**

**வினா எண் 22261—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடம்-இரவாங்குடி செல்லும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் கி.மீ. 0/0-3/8 வரை உள்ள பகுதியை மேம்பாடு செய்வதற்கு 2000-2001 ஆம் ஆண்டு சாலை பழுது நீக்கும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணி தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள (கி.மீ. 3.40) சாலையை மேம்பாடு செய்ய சுமார் ரூ. 20.00 இலட்சம் நிதி தேவைப்படும். இப்பணியை எதிர்வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

68— [2000 நவம்பர் 13

சாலையை அகலப்படுத்துதல்

**வினா எண் 22869—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூரிலிருந்து சுரண்டை செல்லும் பாதையை வருடா வருடம் 2 கிமீ. வீதம் அகலப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

69—

நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்

**வினா எண் 24040—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சின்னப்பம்பட்டியிலிருந்து எளம்பிள்ளை வரை நெடுஞ்சாலையை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இல்லை.

70—

சாலை அபிவிருத்தி

**வினா எண் 28378—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் மங்கலத்திலிருந்து சோமனூர் வரை அரசு சாலையை அகலப்படுத்தி அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

ஆம். திருப்பூர்-சோமனூர் சாலையில் கிமீ 9/2-19/0 வரை அபிவிருத்தி செய்யும் பணி நபார்டு 5-ம் கட்ட திட்டத்தில் எடுத்துச் செய்ய மதிப்பீடு ரூ. 98.00 இலட்சத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

71—

பாலத்தை அகலப்படுத்துதல்

**வினா எண் 28889—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் நகரில் சங்ககிரி சாலையில் கோட்டை மாரியம்மன் கோயில் அருகில் உள்ள குறுகிய பாலத்தை அகலப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**72—**

### இருவழித்தடம்

**வினா எண் 31081—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பெரிய மாவட்டச் சாலைகளை இருவழித்தடமாக அகலப்படுத்த அரசு பரிசீலிக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எடப்பாடி-மகுடஞ்சாவடி சாலையை இருவழித்தடமாக அரசு அகலப்படுத்துமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) எடப்பாடி-மகுடஞ்சாவடி சாலையின் மொத்த நீளம் 17.80 கி.மீ. ஆகும். இதில் ஏற்கெனவே 9.80 கி.மீ. நீளச்சாலை இருவழிப் பாதையாக உள்ளது. எஞ்சியுள்ள 8.00 கி.மீ. நீளம் 5.34 மீட்டர் அகலம் கொண்ட இடைவழிப் பாதையாக உள்ளது. இதனை இருவழிப் பாதையாக மாற்ற தோராயமாக ரூ. 24.00 இலட்சம் தேவைப்படும். இதனை வரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலைக்கேற்ப இருவழிச்சாலையாக மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**73—**

### பாலத்தை அகலப்படுத்துதல்

**வினா எண் 31085—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி-சங்ககிரி நெடுஞ்சாலையில் கோனமேரி என்ற இடத்திலுள்ள சிறு பாலத்தை அகலப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் இல்லை.

**74—**

### இருவழிச் சாலை

**வினா எண் 32420—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தாம்பரம்-முடிச்சூர் இருவழிச்சாலை அமைக்கும் பணி எப்பொழுது தொடங்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை ஏற்கெனவே இருவழிச்சாலையாக உள்ளது. இச்சாலையின் புருவங்களை கடினப்படுத்தும் பணி ஊரகச்சாலைகள் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

**75—**

### பாலம் கட்டுதல்

**வினா எண் 32976—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(a) Whether there is any proposal to construct on High Level bridge in 7/6 of Schoolagiri Brikai road in Hosur Taluk?

(b) If so, when it will be constructed?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன், தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**76—**

**சாலையை அகலப்படுத்துதல்**

**வினா எண் 33257—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், சேலம் ஜங்ஷன் ரயில் நிலையத்தில் இருந்து முத்துநாய்க்கன்பட்டி வழியாக ஓமலூர் செல்லும் சாலையை அகலப்படுத்தி தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**77—**

**சாலை அமைத்தல்**

**வினா எண் 33450—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஈரோடு-சத்தியமங்கலம் நெடுஞ்சாலையில் ஈரோட்டிலிருந்து 13-வது கி.மீ. தொடங்கி 14 கி.மீ. வரையுள்ள வளைவான சாலையில்



2000 நவம்பர் 13]

அதிகம் விபத்துக்கள் ஏற்படுவதால் அதை நேராக்கி சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* இல்லை. இச்சாலையில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலை வேறு இடத்திற்கு மாற்றாமல் இச்சாலைப் பகுதியை நேர்படுத்தும் சாத்தியக்கூறுகள் இல்லை. ஊர் பொதுமக்கள் அனைவரும் ஒன்றுகூடி சாலையோரத்தில் உள்ள இந்தக் கோவிலை வேறு இடத்திற்கு மாற்றியமைத்த பின்னரே இச்சாலைப் பகுதியை நேர்ப்படுத்தும் பணியைச் செயலாக்க இயலும்.

**78—**

**சாலை இணைப்பு**

**வினா எண் 33958—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தாம்பரம் தொகுதி, அகரம்-வெங்கம்பாக்கம் சாலையை (3.6 கி.மீ.) நெடுஞ்சாலைத் துறையோடு இணைத்துக்கொள்ளும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* வினாவுக்கு இடமில்லை.

79—

**சாலை இணைப்பு**

**வினா எண் 33962—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, மேடவாக்கம்-ஜல்லடியன்பேட்டை சாலையை (1.56 கி.மீ.) நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொள்ளும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பரம்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) பரங்கிமலை ஊராட்சி ஒன்றியச் சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு எடுத்துக்கொள்ளும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

80—

**சாலை வசதி**

**வினா எண் 33963—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, பம்மல்-நகல்கேணி சாலையில் 1.7 கி.மீ. நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொள்ளும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பரம்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



81—

**இரு வழிப்பாதை**

**வினா எண் 34560—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம்-காரைக்கால் எம். டி. ஆர். 12 சாலையில் கும்பகோணம்-திருநீலக்குடி பகுதி இரட்டை வழிப் பாதையாக மாற்றியது போல் திருநீலக்குடி-நெடுக்காடு ஒற்றை வழிப்பாதை இரட்டை வழிப்பாதையாக மாற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பரம்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

தற்போதைக்கு அப்படிப்பட்ட திட்டம் இல்லை.

82—

**சாலை விபத்து**

**வினா எண் [illegible]—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி அருகேயுள்ள இலஞ்சி சவுக்கை சாலையில் அதிக விபத்துக்கள் நடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விபத்தைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பரம்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இவ்விடத்தில் விபத்துக்களைத் தவிர்க்கும் பொருட்டு வேகத்தடைகள் மற்றும் எச்சரிக்கைப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

**83—**

**சாலை பழுது பார்த்தல்**

**வினா எண் 38945—திரு. டி. மணி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில்-திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வருவதில், இடையிலுள்ள மார்த்தாண்டம் பகுதி விடுபட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விடுபட்டுள்ள மார்த்தாண்டம் பகுதியில் தற்போது சாலையோர வடிகால் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**84—**

**வாடகை நிர்ணயம்**

**வினா எண் 25360—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கோயில்களுக்குச் சொந்தமான காலிமனைகள், கட்டடங்கள், குடியிருப்புகள், கடைகள் ஆகியவற்றுக்கு தற்போது உள்ள மார்க்கெட் நிலவரத்தின்படி வாடகையை உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருக்கோயில்களுக்குச் சொந்தமான காலிமனைகள், கட்டடங்கள், குடியிருப்புகள், கடைகள் ஆகியவற்றிற்கு நீண்ட காலத்திற்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட வாடகையே வசூலிக்கப்பட்டு வந்தது. இதன் காரணமாக திருக்கோயில்களுக்கு பெரிதும் இழப்பு ஏற்பட்டு வந்தது. இதனை சரிசெய்யும் விதமாக திருக்கோயில் மனைகள், கட்டடங்கள், குடியிருப்புகள், கடைகள் ஆகியவற்றிற்கு சந்தை மதிப்பின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யும்பொருட்டு 4-6-1999-ல் அரசாணை பிறப்பிக்கப்பட்டு திருத்திய வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்து ஆணையிடப்பட்டது. இந்த அரசாணையின்படி வீடுகளுக்கு வீட்டின் மதிப்பில் 0.60 சதவிகிதமும், காலிமனைகள் வணிக நோக்கத்திற்கு எனில் வீட்டின் மதிப்பில் 0.30 சதவிகிதமும், காலிமனைகள் வீடுகட்ட எனில் 0.20 சதவிகிதமும் வாடகையாக நிர்ணயிக்க அறிவுரைகள் வழங்கப்பட்டன. இந்த அரசாணையின்படி தற்போது நியாய வாடகை நிர்ணயிக்கும் பணி முழு வீச்சில் நடைபெற்று வந்தது. இதுவரையில் 14,708 கட்டடங்களுக்கும் 16,793 மனைப் பகுதிகளுக்கும் நியாய வாடகை நிர்ணயிக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன்வாயிலாக சுமார் ரூ.66.74 இலட்சமாக இருந்த பழைய மாத வாடகை ரூ.197.99 இலட்சமாக உயர்த்தப்பட்டு மாதம் ஒன்றிற்கு சுமார் ரூ.131.25 இலட்சம் உயர்வு கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது. வாடகை உயர்வு பலமடங்கு அதிகமாக உள்ளதாக பல முறையீடுகள் பெறப்பட்டுள்ள காரணத்தால் 4-6-1999 நாளிட்ட அரசாணையின் செயல்பாடு, மறு ஆய்வுக்கென நிறுத்தி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**85—**

**குடில்கள்**

**வினா எண் 26766—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி ஒன்றியத்திலுள்ள புகழ்பெற்ற மத்தூர் மகிஷாசுரமர்த்தினி கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்குத் தங்குவதற்காக குடில்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு மகிஷாசுரமர்த்தினி அம்மன் திருக்கோயிலுக்கு தங்கும் விடுதி கட்ட ரூ.6,30,000/- மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**86—**

**கோவில் நிலங்கள்**

**வினா எண் 33015—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமயம் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறநிலையத் துறைக்குச் சொந்தமான கோவில் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தால் அவற்றை மீட்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்வதைத் தடுக்கும்பொருட்டு அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்தவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கைகள் தொடர ஏதுவாக 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைக்கொடைகள் சட்டப்பிரிவுகள் 78 மற்றும் 79-ல் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு பல ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் 386.37 ஏக்கர் விவசாய நிலங்கள் மற்றும் 141 கிரவுண்டு 1423 சதுர அடி மனைப்பகுதி மற்றும் 40 சென்ட் நிலங்கள் மீட்கப்பட்டு திருக்கோயில் சுவாதீனத்திற்கு கொண்டுவரப்பட்டன. திருக்கோயில் நிலங்களில் ஆக்கிரமிப்பு ஏற்படாவண்ணம் பாதுகாக்கும்பொருட்டு அந்நிலங்களில் முட்கம்பி வேலியிட்டுப் பாதுகாக்க திருக்கோயில் நிர்வாகிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு வேலியிட்ட இடங்களில் உரிய அறிவிப்புப் பலகைகளும் வைக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஓய்வுபெற்ற வருவாய்த்துறை அலுவலர்களை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையில் தற்காலிகமாக நியமித்து திருக்கோயில் நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து அந்நிலங்களைத் திருக்கோயில் சுவாதீனத்தில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**87—**

**கோயிலைப் பழுது பார்த்தல்**

**வினா எண் 33682—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் மிகவும் பழமை வாய்ந்த கூத்தர்குடில் கோயிலைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், குற்றாலம் அருள்மிகு குற்றாலநாதசுவாமி திருக்கோயிலின் நிர்வாகத்தில் உள்ள கூத்தர்குடில் கோயிலை மராமத்து செய்வதற்கு (ரூ.71,000/-க்கு) மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பரிசீலனையில் உள்ளது. மதிப்பீடு அங்கீகாரம் பெற்றவுடன் நிறைவேற்றப்படும்.

[2000 நவம்பர் 13

88—

**தினசரி பூஜை**

**வினா எண் 34261—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியம் வெள்ளரி வெள்ளி கிராமத்தில் பசுபதி ஈஸ்வரர் கோயிலில் தினசரி பூஜை நடைபெறுவது இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) பசுபதி ஈஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வளவு உள்ளது?

(இ) எவ்வளவு வருமானம் வருடா வருடம் கிடைக்கிறது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தெரியும்.

(ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், வெள்ளரி வெள்ளி கிராமத்திலுள்ள பசுபதி ஈஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமாக, மொத்தம் 29.72 ஏக்கர் புன்செய் நிலங்கள் உள்ளன.

(இ) ஆண்டு வருமானம் மொத்தம் ரூ.6,000/- ஆகும்.

89—

**நியாய விலைக் கடைகள்**

**வினா எண் 20562—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாயவிலைக் கடைகளில் விநியோகம் சீராக நடைபெறுவதைக் கண்காணிக்க குழு ஒன்று ஏற்படுத்த அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

நியாயவிலைக் கடைகளில் விநியோகம் சீராக நடைபெறுவதைக் கண்காணிக்க மாவட்ட மற்றும் வருவாய்க் கோட்ட அளவிலான பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் குழுக்களும், சென்னை நகருக்கென தனியாக ஒரு ஆலோசனைக் குழுவும் ஏற்கெனவே அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், பஞ்சாயத்து அளவிலான பொது விநியோகத் திட்டக் குழுவும் அமைக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

90—

**கடனுதவி**

**வினா எண் 24526—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வங்கிகள் மூலம் இயந்திர உழுவை (டிராக்டர்) வாங்க கடன் வழங்கும் பொழுது 8 ஏக்கர் நஞ்சை நிலம் இருந்தால்தான் கடன் வழங்கப்படும் என்ற நிலையை அரசு தளர்த்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

வங்கிகள் மூலம் இயந்திர உழுவை (டிராக்டர்) கடன் வழங்கும்போது 8 ஏக்கர் நஞ்சை நிலம் இருந்தால்தான் கடன் வழங்கப்படும் என்ற நிலையை மாற்றி 6 ஏக்கர் நஞ்சை நிலம் இருந்தால் கடன் வழங்கப்படுமென தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) சில நிபந்தனைகளுக்குட்பட்டு தெரிவித்ததன் பேரில் 6 ஏக்கர் நஞ்சை நிலமுள்ள விவசாயிகளும் டிராக்டர் வாங்க தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

91—

### உணவுப் பொருட்கள்

**வினா எண் 24696—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*1998-99* ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய உணவுப் பொருள்களில் கலப்படம் செய்ததாக எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*1998-99* ஆம் ஆண்டில் உணவுப் பொருட்களில் கலப்படம் செய்ததாக கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை-28.

92—

### நெல் கொள்முதல்

**வினா எண் 25139—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, நடுவூர் ஊராட்சி, காசவளநாடு கோவிலூரில் புதிய நெல் கொள்முதல் நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, நடுவூர் ஊராட்சி, காசவளநாடு கோவிலூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம், சம்பா '99 பருவத்தில் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், குறுவை '99 பருவத்தில், காசவளநாடு கோவிலூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படவில்லை. நடப்பு சம்பா 2000 பருவத்தில்



காசவளநாடு கோவிலூர் கிராமத்தில் *24-12-1999* அன்று நேரடி கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.

93—

### போக்குவரத்துக் கட்டணம்

**வினா எண் 30348—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், இந்திய உணவுக் கழகத்திடம் இருந்து அரிசி மற்றும் கோதுமையை எடுத்து வந்ததற்கான போக்குவரத்துக் கட்டணம் எவ்வளவு எப்.சி.ஐ. இடமிருந்து திரும்பப்பெற வேண்டியுள்ளது?

(ஆ) திரும்பப் பெற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்திய உணவுக் கழகத்திடமிருந்து, அரிசி மற்றும் கோதுமைக்கான போக்குவரத்துக் கட்டணமாக *31-3-1998* வரையிலான காலத்திற்கு ரூ.*70,01,71,473.67* பெற வேண்டியுள்ளது. போக்குவரத்துக் கட்டணத்தை திரும்பப் பெறுவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுத்துள்ளது. *8-11-1995* ஆம் நாளன்று நடைபெற்ற துறைகளுக்கிடையேயான கூட்டத்தில் மாநில அரசுக்கு போக்குவரத்துக் கட்டணத்தொகையை திரும்பக் கொடுக்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், போக்குவரத்துக் கட்டணத்தொகையை திரும்பப் பெறுவதற்கு தகுதி உடையதாகையால் இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளிலிருந்து உணவு தானியங்களை எடுத்துச் செல்வதற்காகச் செலவிட்ட போக்குவரத்துக் கட்டணத்தைத் திருப்பிக் கொடுக்க இந்திய உணவுக் கழகத்திற்கு தேவையான கட்டளைகளைப் பிறப்பிக்குமாறு மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டு வருகிறது.

94—

### கூட்டுறவு நிலவள வங்கிக் கிளை

**வினா எண் 30636—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் விரைவில் கூட்டுறவு நிலவள வங்கிக் கிளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(அ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் ஒரு புதிய கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அமைப்பது தொடர்பான கருத்துருக்கள் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரிடமிருந்து கோரப்பட்டு உள்ளன. கருத்துருக்கள் பெறப்பட்டவுடன் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

95—

### குழு அமைத்தல்

**வினா எண் 30640—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொடக்க வேளாண்மை வங்கிகளின்கீழ் இயங்கும் நியாயவிலைக் கடைகளில் நடைபெறும் குறைபாடுகளைக் களைய அதிகாரிகள், பொதுமக்கள் பிரதிநிதிகள் கொண்ட குழு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொடக்க வேளாண்மை வங்கிகளின்கீழ் இயங்கும் நியாயவிலைக் கடைகளில் நடைபெறும் குறைபாடுகளைக் களைய தனியாக குழுக்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

96—

### முழுநேர நியாயவிலைக் கடை

**வினா எண் 32243—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், செல்லத்தாயார்புரம் கிராமத்தில் முழுநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், செல்லத்தாயார்புரம் கிராமத்தில் இயங்கும் பகுதிநேர நியாயவிலைக் கடையில் தற்போது 449 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால் அக்கடையினை முழுநேரக் கடையாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

97—

### நியாயவிலைக் கடை

**வினா எண் 32725—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்தில் உள்ள ஆயமரத்தூரில் நியாயவிலைக் கடை இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், ஆயமரத்தூரில் புதிதாக நியாயவிலைக் கடை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்தில் உள்ள ஆயமரத்தூரில், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணையின்படி ஆயமரத்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள 520 குடும்ப அட்டைகளைக் கொண்டு ஒரு முழுநேர நியாயவிலைக் கடை 20-12-1999 முதல் செயல்பட்டு வருகிறது.

**98—**

**கல்விக் கடன்**

**வினா எண் 35119—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலம் கல்விக் கடன் திட்டத்தில் கடன் வாங்கும் மாணவ/மாணவியரின் பெற்றோர் இரண்டு வருடங்களில் கடன் தொகையைக் கட்ட வேண்டும் என்று இருப்பதை மாற்றி மாணவர்கள் படித்து முடித்த பின்னர் கடனைத் திருப்பிச் செலுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கல்விக் கடன் திட்டத்தில் வழங்கப்பட்ட கடனை மூன்று ஆண்டுகள் முதல் ஐந்து ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வழிவகை



2000 நவம்பர் 13]

செய்யப்பட்டுள்ளது. மாணவ/மாணவியரின் படிப்பு முடிந்த பின் திருப்பிச் செலுத்தலாம் என்பதற்கு ஆவன செய்ய இயலாது.

**99—**

**மாணவர்களுக்குக் கடனுதவி**

**வினா எண் 35119—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலம் கல்விக் கடன் திட்டத்தில் கடன் வாங்கும் மாணவ/மாணவியரின் பெற்றோர் இரண்டு வருடங்களில் கடன் தொகையைக் கட்ட வேண்டும் என்று இருப்பதை மாற்றி மாணவர்கள் படித்து முடித்த பின்னர் கடனை திருப்பிச் செலுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கல்விக் கடன் திட்டத்தில் வழங்கப்பட்ட கடனை மூன்று ஆண்டுகள் முதல் ஐந்து ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாணவ/மாணவியரின் படிப்பு முடிந்த பின் திருப்பிச் செலுத்தலாம் என்பதற்கு ஆவன செய்ய இயலாது.

**100—**

**கிராமங்களில் குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய்**

**வினா எண் 35130—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகரங்களில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவுபோல் கிராமங்களிலுள்ள குடும்ப அட்டைகளுக்கும் வழங்க அரசு முன்வருமா?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தற்போது நடைமுறையிலுள்ள குடும்ப அட்டைகளுக்கு மாதாந்திர மண்ணெண்ணெய் தேவை 80,539 கிலோ லிட்டராகும். ஆனால் மைய அரசின் மாதாந்திர ஒதுக்கீடு 77,108 கிலோ லிட்டராகும். எனவே நகரங்களில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவுபோல் கிராமங்களிலுள்ள குடும்ப அட்டைகளுக்கும் வழங்க இயலாது.

**101—**

**புதிய நியாயவிலைக் கடை**

**வினா எண் 36582—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலகரம் பேரூராட்சி நன்னகரம் கிராமத்தில் புதிய நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், மேலகரம் பேரூராட்சி நன்னகரம் கிராமத்தில் டி.பி.005 என்ற கூட்டுறவு நியாயவிலைக் கடை 479 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகிறது. மேலும், நன்னகரம் நியாய விலைக் கடைக்கு குடியிருப்பு என்ற குக்கிராமத்தில் 503 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடையும் இயங்கி வருகிறது. எனவே, நன்னகரத்தில் ஏற்கெனவே ஒரு நியாயவிலைக் கடை நல்ல முறையில் செயல்பட்டு வருவதால், மேலும் ஒரு நியாயவிலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.



2000 நவம்பர் 13]

**102—**

**மண்ணெண்ணெய் வழங்குதல்**

**வினா எண் 36703—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரண்டு சமையல் எரிவாயு சிலிண்டர் உள்ளவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதில்லை என்ற நிலை எந்த அடிப்படையில் எடுக்கப்பட்டது?

(ஆ) அது குறித்து மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இரண்டு சமையல் எரிவாயு இணைப்பு உள்ளவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதில்லை என்ற நிலை மைய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் கொள்கை முடிவின் அடிப்படையில் எடுக்கப்பட்டதாகும்.

(ஆ) இரண்டு எரிவாயு இணைப்பு பெற்றவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குவது குறித்து பிரேரணை ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**103—**

**கண்காணிப்புக் குழுக்கள்**

**வினா எண் 37051—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நியாயவிலைக் கடைகளில் உணவுப்பொருட்கள் வழங்குவதைக் கண்காணிக்க மாவட்ட, வட்டார அளவில் 'கண்காணிப்புக் குழுக்கள்' ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நியாயவிலைக் கடைகளில் உணவுப்பொருட்கள் வழங்குவதைக் கண்காணிக்க மாவட்ட மற்றும் வருவாய்க்கோட்ட அளவிலான பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் குழுக்களும், சென்னை நகருக்கென தனியாக ஓர் ஆலோசனைக் குழுவும் ஏற்கெனவே அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், பஞ்சாயத்து அளவிலான பொது விநியோகத் திட்டக் குழுவும் அமைக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, வட்டார அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்க அவசியம் எழவில்லை.

**104—**

**பால் உற்பத்தி**

**வினா எண் 23653—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் இன்றைய தேதி வரை மொத்த நட்டம் எவ்வளவு?

(ஆ) அதை சரிசெய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் 1998-99 ஆம் ஆண்டு முடிய மொத்த நட்டம் தோராயமாக ரூ.1400 இலட்சங்கள் ஆகும். நட்டத்தை சரிசெய்ய ஒன்றியம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் சேகரம் செய்யும் பாலை பாலாகவே விற்பனை செய்யும்பொழுது இழப்பு ஏற்படுவது இல்லை. உபரி பாலை பால் பொருட்களாக மாற்றும்பொழுது உற்பத்திச் செலவு கூடுதலாக செய்யவேண்டியது மட்டுமல்லாது விற்பனை விலை நிர்ணயம் செய்யப்படும்பொழுது அடக்கவிலையை விட குறைவாகவே நிர்ணயம் செய்யப்படவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. எதிர்வரும் காலங்களில் ஒன்றியத்தை லாபத்தில் இயக்க சேகரம் செய்யப்படும் பாலை பாலாகவே அதிகபட்சம் விற்பனை செய்வதற்குண்டான முழு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகினன்றன.



**105—**

**அலுவலக வளாகம்**

**வினா எண் 31157—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி வட்டாட்சியர் அலுவலகம், குடியிருப்பு மற்றும் நீதிமன்றங்கள், கிளைச் சிறைச்சாலை, இதர அனைத்து அரசு அலுவலகங்கள் ஒன்றுசேர ஒரே வளாகத்தில் அமைத்திட அரசிடம் கருத்துரு உண்டா?

(ஆ) அதை இந்த நிதியாண்டில் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**106—**

**பவுண்டுகள்**

**வினா எண் 34682—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள கிராமச்சாவடிகளையும் பவுண்டுகளையும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**107—**

### கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம்

**வினா எண் 34847—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், வீரபாண்டி ஊராட்சி, வீரபாண்டி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர், வீரபாண்டி ஊராட்சி, வீரபாண்டி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகிறது. இவ்வலுவலகத்திற்குத் தகுதியான இடம் தேர்வு செய்யப்பட்டு, நிதிநிலைக்கேற்ப கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணியை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், எப்போது கட்டித் தரப்படும் என்பதைக் குறிப்பிட்டுக்கூற இயலாது.

**108—**

### பகுதி நேர வேலை

**வினா எண் 35725—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வருவாய்த் துறையில் பணியாற்றும் கிராம நிர்வாக அலுவலர்களின் வேலை முறையை பகுதிநேர வேலை முறையாக மாற்ற அரசு கருதி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) வருவாய்த் துறையில் பணியாற்றும் கிராம நிர்வாக அலுவலர்களின் வேலை முறையை பகுதி நேர வேலை முறையாக மாற்ற அரசு ஒரு போதும் கருதவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**109—**

### பட்டா உரிமம்

**வினா எண் 36622—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதி, சிறுமலை மலைக் கிராம மலைத்தோட்ட விவசாயிகள், பல ஆண்டுகளாக தாங்கள் விவசாயம் செய்து வரும் விவசாய நிலத்தை பட்டா உரிமம் கேட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பட்டா உரிமம் வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நீலகிரி மாவட்டம், உள்ளிட்ட மாநிலத்தில் உள்ள அனைத்து மலைப் பிரதேசங்களிலும் மண் அரிப்பு மற்றும் நிலச்சரிவு போன்ற இயற்கை இடர்பாடுகள் ஏற்படாமல் தடுத்து சுற்றுப்புறச் சூழலை பாதுகாப்பதும், காடுகளைப் பாதுகாப்பதும் தற்போது மிகவும் அவசியம் என்ற காரணத்தால் மாநிலத்திலுள்ள அனைத்து மலைப் பிரதேசங்களிலும் விவசாயத்திற்கு நில ஒப்படை வழங்குவதற்கும் ஆக்கிரமணங்களை வரன்முறைபடுத்தவும் தடை விதித்து அரசு ஆணை (நிலை) எண்.1168, வருவாய்த் துறை, நாள் 25-7-89-இல் உத்திரவிட்டுள்ளது. எனவே, 1989-க்கு பின்னர் எந்த ஒரு நபருக்கும் மலைப் பகுதிகளில் பட்டா வழங்கப்படவில்லை.

110—

**பவுண்டுகள்**

**வினா எண் 37416—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஆடு மாடுகளை அடைக்கப் பயன்படுத்தும் 'பவுண்டுகள்' எவ்வித உபயோகமும் இல்லாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவ்விடங்களை வேறு அரசுத் துறை உபயோகத்திற்குப் பயன்படுத்த அரசு அனுமதிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) பவுண்டுகள் எவ்வித உபயோகமும் இல்லாமல் இல்லை.

(ஆ) வினா எழாது.

111—

**புதிய வட்டம்**

**வினா எண் 37536—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில் திசையன்விளையை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.



112—

**சார் ஆட்சியர் அலுவலகம்**

**வினா எண் 37552—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையை மையமாகக்கொண்டு வீரகேரளம்புதூர், ஆலங்குளம், சங்கரன்கோவில் வட்டங்களை உள்ளடக்கி சார் ஆட்சியர் அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

113—

**வட்டாட்சியர் அலுவலகம்**

**வினா எண் 37555—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தை சுரண்டையில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தை சுரண்டையில் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

114—

## மானியத்தை உயர்த்துதல்

**வினா எண் 38386—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு மாநில அரசு வழங்கும் மானியத்தை அதிகரிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் செலவினத்தைச் சரிகட்டுவதற்காக, அரசு ஆண்டுதோறும் வக்ஃப் வாரியத்திற்கு நிர்வாக மானியம் வழங்கி வருகிறது. இதற்காக கடந்த நிதி ஆண்டில் (1999-2000) ரூ.30.00 இலட்சம் வழங்கப்பட்டது. ஆனால், வாரியத்தின் செலவினம் ஆண்டுக்காண்டு மிகவும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. எனவே, வக்ஃப் வாரியம் தனது நிதிநிலையினை மேம்படுத்திக்கொள்ள சகாயத் தொகை நிலுவையினை வசூலிப்பது, வக்ஃப் சொத்துக்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தைப் பெருக்குவது, செலவினத்தைக் கட்டுப்படுத்துவது போன்ற முயற்சிகளைத் தீவிரமாக மேற்கொள்ளவேண்டும் என அறிவுரைகள் அரசால் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு வாரியத்தின் நிதிநிலைமை மேம்பாடடைய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்த பின்னர், துண்டுவிழும் செலவினத்தை ஈடுகட்ட கூடுதலாக நிர்வாக மானியம் கோரப்பட்டால், தக்க அளவில் அதனை உயர்த்துவது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

115—

## உலமா ஓய்வூதியம்

**வினா எண் 38387—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் "உலமா ஓய்வூதியம்" ஆண்டொன்றிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எட்டுகிறதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் யாது?*



விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு உலமா ஓய்வூதியத் திட்டம், 1981-ன் கீழ் 2200 உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், சுமார் 1650 நபர்கள் மட்டுமே தற்போது உலமா ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். உலமா ஓய்வூதியம் வழங்கக்கோரும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் நிலுவையில் இல்லை. உலமா ஓய்வூதிய ஒப்பளிப்புக் குழு பரிந்துரைக்கும் நபர்களுக்கு உலமா ஓய்வூதியம் வழங்குவதன் மூலம் வருங்காலத்தில் இலக்கு எட்டப்பட்டுவிடும் எனக் கருதப்படுகிறது.

116—

## தனி வட்டம்

**வினா எண் 38827—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாமக்கல் மாவட்டம், கொமாரப்பாளையத்துடன் பள்ளிபாளையம் ஒன்றியத்தை இணைத்து, தனி வட்டமாக அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

117—

## சிறைச்சாலையை நவீனப்படுத்துதல்

**வினா எண் 32384—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) திருநெல்வேலி பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலையை நவீனப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலை ஏற்கெனவே (கடந்த நான்கு ஆண்டுகளில் பலவித நவீன கருவிகள்/ஆயுதங்கள் வழங்கப்பட்டு) நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு அவசியமில்லை.

**118—**

**நீதிமன்ற வளாகம்**

**வினா எண் 33293—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரில் நீதிமன்ற வளாகம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எங்கு, எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகரில் நீதிமன்ற வளாகம் அமைப்பதற்கு அரக்கோணம் தாலுக்கா அம்மனூர் கிராமத்தில் புல எண்கள் 418, 419 மற்றும் 420-ல் உள்ள 7.50 ஏக்கர் நிலத்தை வனத் துறையிடமிருந்து மாற்றம் செய்து பெற சென்னை உயர்நீதிமன்றம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.



2000 நவம்பர் 13]

**119—**

**கட்டடப் பணிகள்**

**வினா எண் 33448—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டில் பல்வேறு நீதிமன்றங்கள் கட்டுவதற்கு 1984-ல் ரூ. 84 இலட்சம் ஒதுக்கியும், இன்னும் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைந்து கட்டி முடிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

(ஆ) எழாது.

**120—**

**நீதிமன்றங்கள் தொடங்குதல்**

**வினா எண் 33852—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் 1999-2000-ல் ஓர் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

[2000 நவம்பர் 13

**121—**

**நீதிமன்ற வளாகம்**

**வினா எண் 34915—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், ஈரோட்டில் குற்றவியல் நீதிமன்ற வளாகம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் இதுவரை கட்டப்படாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

(ஆ) எழாது.

**122—**

**மாவட்ட நீதிமன்றம்**

**வினா எண் 36615—திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனியில் மாவட்ட நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டத்திற்கான மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பினை 2001-2002 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டமாகக் கொண்டு வருமாறு சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளரை 30-3-2000 அன்று அரசு கேட்டுக் கொண்டுள்ளது.



2000 நவம்பர் 13]

**123—**

**சப்-கோர்ட்**

**வினா எண் 37544—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டத்திற்கு சுரண்டையில் சப்-கோர்ட் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், சுரண்டையில் சார்பு நீதிமன்றம் ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**124—**

**உணவுச் செலவு**

**வினா எண் 37603—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போராட்டங்கள் செய்வோர் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்படும்போது கைதானவர் உணவுக்காக அரசு செலவு செய்யும் பணம் மிகக் குறைவு (ரூ. 5.50 ஒரு நபர் உணவுக்கு) என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) போராட்டங்களில் ஈடுபட்டு கைது செய்யப்படுவோருக்கு நீதிமன்றங்களின் ஆணையின்படி அவர்கள் சிறையில் சாதாரண வகுப்பு அல்லது சிறப்பு வகுப்பு காவல் சிறைவாசிகளாக நடத்தப்படுகின்றனர். மேலும், சிறைவாசிகள் 'அ' மற்றும்

[2000 நவம்பர் 13

'ஆ' வகுப்பு என அதன்படி உணவுக்காக அரசு செலவிடுகிறது. போராட்ட சிறைவாசிகளுக்கு உணவுக்காக ரூ. 5.50 மட்டுமே செலவு செய்யப்படுவதாகக் கூறுவது முற்றிலும் தவறானதாகும்.

**125—**

**உணவுக் கூடத்தை நவீனமயமாக்குதல்**

**வினா எண் 37795—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வேலூர் மத்திய சிறைச்சாலையில் உள்ள உணவுக் கூடத்தை நவீனமயமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வேலூர் மத்திய சிறைச்சாலையில் நீராவி சமையல் அடுப்பு மூலம் நவீனமுறையில் உணவு தயாரித்து வழங்கப்பட்டு வருகிறது.

**126—**

**நீதிமன்றம்**

**வினா எண் 37863—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* காட்பாடி தனி வட்டமாக உருவாக்கப்பட்டுவிட்டதால், நீதிமன்றம் தனியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், இந்நிதியாண்டில் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* காட்பாடியில் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2000 நவம்பர் 13]

**127—**

**விபத்து வழக்குகள்**

**வினா எண் 37868—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வேலூர் மாவட்டத்தில் நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் விபத்து வழக்குகளை விரைவில் முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வேலூர் மாவட்டத்தில் இயங்கும் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள விபத்து வழக்குகளை மக்கள் நீதிமன்றங்களில் (Lok Adalat) அவ்வப்பொழுது நடத்தி விரைவில் முடிக்குமாறு சென்னை உயர்நீதிமன்றம் வேலூர் மாவட்ட நீதிபதிக்கு அறிவுரை வழங்கியுள்ளது. மேலும் இவ்வழக்குகளை முடிப்பதற்கு முகாம் நீதிமன்றங்களும் அவ்வப்போது நடத்தப்படுகின்றன.

**128—**

**கிளைச் சிறைச்சாலை**

**வினா எண் 38632—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் கிளைச் சிறைச்சாலை தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் கிளைச் சிறை தொடங்கும் நேர்வு அரசின் பரிசீலனையில் இல்லை.

**129—**

**பெண்களுக்கு கிளைச் சிறைச்சாலை**

**வினா எண் 38890—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் பெண்களுக்கென தனிச் சிறைச்சாலை (அல்லது) கிளைச் சிறைச்சாலை அமைக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் இல்லை.

**130—**

**கைதிகளுக்குக் கல்வி வசதி**

**வினா எண் 38891—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாளையங்கோட்டை மத்திய சிறையிலுள்ள கைதிகளை அஞ்சல் வழிக் கல்வி மூலம் படிக்க வைப்பது போல சேலம், கோவை, சென்னை, திருச்சி ஆகிய மத்திய சிறைகளிலுள்ள கைதிகளும் படிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

பாளையங்கோட்டை மத்திய சிறையிலுள்ள கைதிகள் அஞ்சல் வழிக் கல்வி மூலம் கல்வி பயில்வது போல சேலம், கோவை, திருச்சி மற்றும் சென்னை ஆகிய மத்திய சிறைகளிலுள்ள சிறைவாசிகளுக்கும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மூலம் அரசு செலவில் உயர்கல்வி பயிலுவதற்கான அனுமதியும் செலவின அங்கீகாரமும் அரசு வழங்கியுள்ளது.



**131—**

**பாதுகாப்பு வசதி**

**வினா எண் 40492—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மத்திய சிறைச்சாலையில் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மத்திய சிறைச்சாலைகளில் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் அரசால் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**132—**

**தள்ளுபடி மானியம்**

**வினா எண் 28205—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சேரவேண்டிய தள்ளுபடி மானியத்தை உடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தள்ளுபடி மானியக் கோரிக்கைகளில் ஏப்ரல் 1998 முதல் மார்ச் 1999 முடிய ரூ. 48.63 கோடி வழங்கப்பட்டுள்ளது. அதைப்போல 1999-2000 நிதி ஆண்டில், ஏப்ரல் 1999 முதல் ஆகஸ்டு 1999 வரையான காலத்திற்கு ரூ. 11.86 கோடி அளவிற்கு தள்ளுபடி மானியக் கோரிக்கைகள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

133—

**நெசவுத் துணிகள்**

**வினா எண் 33919—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் தொடர்ந்து துணிகள் தேங்குவதை அரசு அறியுமா?*

*(ஆ) இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் தொடர்ந்து துணிகள் தேங்குவதைத் தடுத்து விற்பனை செய்வதற்கு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:—

(1) மாவட்ட தலைமையிடங்களில் கைத்தறிக் கண்காட்சி நடத்துதல்.

(2) முக்கிய நகரங்களில் கைத்தறித் துணி வகைகளுக்கென தனியாக விற்பனை வளாகங்கள் அமைத்து அதில் துணிகளை விற்பனை செய்தல்.

(3) நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்யப்படும் பருத்தி/பட்டுத் துணி வகைகள் அனைத்தும் ஒரே தரமுடையவை என்பதை உணர்த்தும் பொருட்டு ஒரே பெயரும் முகப்பும் கொண்ட "தொடர் விற்பனைக் கூடங்கள்" அமைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(4) எளிதில் விற்பனையாகக் கூடிய குறைந்த விலை பட்டுச் சேலைகளை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல்.

(5) தேங்கியுள்ள ஜவுளிகளை கொள்முதல் செய்து மிகக் குறைந்த லாபத்தில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்தல்.

(6) புதிய வடிவமைப்புகள் கண்கவரும் வண்ணங்களில் உற்பத்தி செய்யப்படும் ஜவுளிகள் பற்றி முக்கியமான செய்தித்தாள்கள், மாத இதழ்கள் மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றில் தொடர்ந்து விளம்பரங்கள் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளல்.

(7) போட்டிகள் மிகுந்த வியாபாரச் சந்தையில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் ஜவுளிகளுக்கு ஒரு தனி இடத்தினை



பிடிக்க அவற்றுக்கு தனி "வணிகப் பெயர்" (Brand Name) வைப்பது அவசியமாகிறது. இதன் தொடர்பான கைத்தறி இரகங்களுக்கு சிறந்த வணிகப் பெயரினை தேர்ந்தெடுக்க மாநில அளவில் போட்டி நடத்தப்பட உள்ளது.

134—

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 35199—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகராட்சிப் பகுதியில் உள்ள சீர்மரபினருக்கு பட்டா வழங்கத் தேவையான நிலத்தை கையகப்படுத்தி பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகராட்சிப் பகுதியில் உள்ள சீர்மரபினர்களுக்குத் தேவையான நிலத்தினை தேர்வு செய்து தனி நபர் பேச்சுவார்த்தை மூலம் கையகப்படுத்தி நடப்பு நிதியாண்டில் அரசுக்கு நிலம் கையகப்படுத்தி இலவச வீட்டுமனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

135—

**மாணவியர் விடுதி**

**வினா எண் 35203—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா.?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையில் ஆதிதிராவிட நல மாணவியர் விடுதி ஒன்று இயங்கி வருவதால், அரசு

நிர்ணயித்துள்ள நெறிமுறையின்படி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி தொடங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

136—

**விடுதிக்கு கட்டட வசதி**

**வினா எண் 37040—திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநாவலூர் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு கட்டட வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* விழுப்புரம் மாவட்டம், திருநாவலூரில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி ஏதும் இயங்கவில்லை. அங்கு மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஒன்று தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அவ்விடுதிக்கு கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

137—

**மாணவர் விடுதி**

**வினா எண் 37048—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை பகுதி மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் அரசு மாணவர் விடுதி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை பகுதியில் பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி புதியதாக தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

138—

**மிகவும் பிற்படுத்தப்பட்ட பட்டியலில் சேர்த்தல்**

**வினா எண் 37061—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியில் படித்து வரும் மாணவ/மாணவியர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், அங்கு புதிதாக பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

139—

**கட்டடம்**

**வினா எண் 39197—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கிளாமங்கலம் அரசு உயர்நிலைப்பள்ளி மாணவிகள் விடுதிக்கு நடப்பு நிதியாண்டில் (2000-2001) கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கிளாமங்கலம் பள்ளி மாணவியர் விடுதிக்கு நடப்பு நிதியாண்டில் கட்டடம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**140—**

**சுத்திகரிப்பு நிலையம்**

**வினா எண் 17060—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடங்கனசாலை மற்றும் எனம்பிள்ளை பகுதிகளில் சாயப்பட்டறை, சலவைப்பட்டறை கழிவுநீர் சுத்தம் செய்ய "சுத்திகரிப்பு நிலையம்" அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

ஆம்.

**141—**

**சுத்திகரிப்பு நிலையம்**

**வினா எண் 18182—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

*(அ) கரூர், திருப்பூர், ஈரோடு, பவானி, கொமாரபாளையம், பள்ளிப்பாளையம் ஆகிய இடங்களில் உள்ள சாயத் தொழிற்சாலைகளில் சுத்திகரிப்பு நிலையங்கள் உடனடியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். மேற்கண்ட இடங்களில் சாயத் தொழிற்சாலைகளில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.*

**142—**

**சாயத் தண்ணீர் கலப்பதைத் தடுத்தல்**

**வினா எண் 21561—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*1997-98 மற்றும் ஜூன் 30ந் தேதி வரை காவிரியில் சுற்றுப்புறச்சூழல் நடவடிக்கையின் காரணமாக காவிரி ஆற்றில் நேரடியாக சாயத் தண்ணீர் கலப்பதைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

*1997-98 மற்றும் ஜூன் 30 ஆம் தேதி வரை காவிரி ஆற்றில் நேரடியாகச் சாயத் தண்ணீர் கலப்பதைத் தடுப்பதற்காக 563 தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் மூடப்பட்டன.*

143—

## தொழிற்சாலைகள்

**வினா எண் 21579—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுச்சூழலுக்கு அபாயம் ஏற்படுத்தும் தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) அவற்றில் அபாயத் தன்மையைக் குறைக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

(அ) எண்பத்தியொன்பது.

(ஆ) இத்தொழிற்சாலைகள் அனைத்தும் நீர், காற்று மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு சட்டங்கள், அபாயகரக் கழிவுகள் மற்றும் அபாயகரமான இரசாயனம் நிர்வகித்தல், சுற்றுப்புறச் சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 மற்றும் அபாயகரமான இரசாயனங்களின் உற்பத்தி சேமிப்பு மற்றும் இறக்குமதி விதிகள், 1989 ஆகிய சட்டம் மற்றும் விதிமுறைகளின்படி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் கண்காணிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

144—

## தொழிற்சாலைக் கழிவுகள்

**வினா எண் 22402—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில், திடக்கழிவு மருத்துவமனைக் கழிவுகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் ஆகியவற்றில் மாசு நீக்கும் முன்னோடித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

145—

## நிருவாக முடிவு

**வினா எண் 25619—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விஸ்கோஸ் கழிவுநீரை சிட்டேபாளையம் அருகில் விட நிருவாகம் முடிவு செய்துள்ளதை விவசாயிகள் எதிர்த்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசின் நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவாளர்கள் எஸ்.ஐ.வி. (சவுத் இண்டியா விஸ்கோஸ்) இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் மீண்டும் படிப்படியாக மரக்கூழ் பிரிவை சில நிபந்தனைகளுக்குட்பட்டு இயக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி அளித்துள்ளது. இதனால் மரக்கூழ் பிரிவிலிருந்து வெளியேறும் கழிவுநீரை சிட்டேபாளையம் கிராமத்துக்கு அருகில் உள்ள இரும்பாறை கிராமத்தில் சுமார் 500 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி அங்கு

விவசாயத்திற்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. வாரியம் விதித்துள்ள நிபந்தனைகளின்படி தொழிற்சாலை நடவடிக்கை எடுத்து வருகிறதா என்பதை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் கண்காணித்து வருகிறது.

**146—**

சாயப் பட்டறைகள்

**வினா எண் 26374—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களிலுள்ள சாயப் பட்டறைகள், சலவைப் பட்டறைகள் எத்தனை?

(ஆ) அதில் கூட்டுறவு சங்கங்களின் மூலம் நடத்தப்படும் பட்டறைகள் எத்தனை?

(இ) அதில் தனியார் நடத்தும் பட்டறைகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

(அ) முன்னூற்றி ஐம்பது.

(ஆ) பதினாறு.

(இ) முன்னூற்றி முப்பத்து நான்கு.

**147—**

தொழிற்சாலைகள்

**வினா எண் 34973—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதியில் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் நிறுத்தப்பட்ட தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) இவற்றால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

(அ) 43.

(ஆ) 216.

**148—**

வீடுகள் கட்டுதல்

**வினா எண் 23648—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தன்னிறைவு வீட்டுமனைத் திட்டத்தில் பொருளாதாரத்தில் நலிந்தோர் பிரிவு மனைகளில் ஏழை எளிய மக்கள் வீடு கட்ட வீட்டு வசதி வாரியம் எத்தனை பேருக்குக் கடன் வசதி வழங்கியுள்ளது?

(ஆ) மேலும் துரிதமாக வீடுகள் கட்டி குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) அம்பத்தூர் தன்னிறைவு வீட்டுமனைத் திட்டத்தில் பொருளாதாரத்தில் நலிந்தோர் பிரிவு மனைகளில் ஒதுக்கீடு பெற்றவர்கள் வீடு கட்டுவதற்கு எவ்வித கடன் வசதியும் வீட்டுவசதி வாரியம் [illegible] கிடையாது.

(ஆ) மற்றும் (இ) பொருளாதாரத்தில் நலிந்த பிரிவில் ஒதுக்கீடு பெற்றவர்கள் துரிதமாக வீடு கட்டி குடியேற வீட்டுமனை வரைபட

தடையின்மைச் சான்றிதழ் மற்றும் வீட்டுமனை வரைபட அங்கீகாரம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி ஒன்றியத்தில் தமிழ்நாடு' வீட்டுவசதி வாரியமே வாங்கி மனை ஒதுக்கீடு பெற்றவர்களுக்கு கொடுக்கிறது. வீடு மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தால் வழங்கப்படும் வீடு கட்டுவதற்கான கடனை மனை ஒதுக்கீடு பெற்றவர்கள் பெறுவதற்கான வழிமுறைகளை மனை ஒதுக்கீடுதாரர்களுக்கு தெரியப்படுத்தப்படுகின்றன. மேலும் மனைகளில் துரிதமாக வீடுகட்ட அவ்வப்போது பத்திரிகை செய்தி வாயிலாகவும் தனிப்பட்ட கடிதத்தின் மூலமும் தெரிவிக்கப்படுகின்றன.

149—

**விடுகள் கட்ட அனுமதி**

**வினா எண் 23649—திரு. ஜே.எம். ஆருண் ரஷீத்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அயப்பாக்கம் தன்னிறைவு வீட்டுமனைத் திட்டம் பகுதி 1 மற்றும் 2ல் பொருளாதாரத்தில் நலிந்தோர் பிரிவுக்கு (EWS-A, EWS-B) கட்டட வரைபடம் தயார் செய்து உள்ளாட்சித் துறை அனுமதியுடன் ஒதுக்கீடுதாரர்களுக்கு ஒப்படைப்பு (Hand over) செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அம்பத்தூர் தன்னிறைவு வீட்டுமனைத் திட்டத்தில் ஒதுக்கீடு பெற்றவர்களுக்கு வரைபட தடையின்மைச் சான்றுக்கு ஒப்புதல் அளிப்பது சம்பந்தமாக வில்லிவாக்கம் ஊராட்சி நிர்வாக அதிகாரிக்கும் அயப்பாக்கம் தலைவருக்குமிடையே பிரச்சினை ஏற்பட்டது தொடர்பாக உள்ளாட்சி நிர்வாக அலுவலர்கள் வழக்கு தொடர்ந்து நிலுவையில் இருந்ததால், வரைபடத் தடையின்மை வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது. தற்பொழுது வழக்கு முடிவுற்று தடையின்மைச் சான்று விரைவாக வழங்கப்பட்டு வருகிறது.



150—

**துரிதமாக விடுகள் கட்டுதல்**

**வினா எண் 23651—திரு. ஜே.எம். ஆருண் ரஷீத்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் தன்னிறைவு வீட்டுமனைத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு 18 மாதங்களுக்குள் ஒதுக்கீடுதாரர்கள் வீடுகட்ட ஆரம்பிக்க வேண்டும் என்பது வீட்டுவசதி வாரியத்தின் விதி, இருப்பினும் 4 ஆண்டுகள் ஆகியும் திட்டப் பகுதியில் ஒதுக்கீடுதாரர்கள் துரிதமாக வீடுகள் கட்ட வாரியம் என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

அம்பத்தூர் தன்னிறைவு வீட்டுமனைத் திட்டத்தில் ஒதுக்கீடு பெற்றவர்களுக்கு சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு வரைபட தடையின்மைச் சான்றுக்கு ஒப்புதல் அளிப்பது சம்பந்தமாக உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக அலுவலர்கள் சங்கம் வழக்கு தொடர்ந்து நிலுவையில் இருந்ததால் வீடுகள் கட்டத் தாமதம் ஏற்பட்டது. தற்பொழுது அவ்வழக்கு முடிவு பெற்று தடையின்மைச் சான்று விரைவாக வழங்கப்பட்டு, வீடுகட்ட "ஹட்கோ நிவாஸ்" மூலம் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் ஒதுக்கீடுதாரர்கள் தமது மனைகளில் வீடுகட்டும் பணி விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

151—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 31022—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசியில் வீட்டுவசதி வாரிய குடியிருப்பிலுள்ள இரண்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா? எப்பொழுது நிறைவேற்றப்படும்?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி வீட்டுவசதி வாரியக் குடியிருப்பிலுள்ள இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் எந்தவிதக் குறைபாடுகளும் இல்லை.

**152—**

**பத்திரிகையாளர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு**

**வினா எண் 35459—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டுவசதி வாரிய வீடுகள் ஒதுக்கீட்டில் பத்திரிகையாளர்களுக்கு எத்தனை சதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?

(ஆ) அவை முழுவதும் நிரப்பப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்பு திட்டத்தின் கீழ் சென்னை மாவட்டத்தில் பத்திரிகையாளர்கள் வாடகை ஒதுக்கீடு குடியிருப்புகளின் எண்ணிக்கை 60-லிருந்து 70-ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டது.

(ஆ) இவ்வாறு உயர்த்தப்பட்ட குடியிருப்புகளில் இன்னமும் 2 குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளன.

**153—**

**குடியிருப்புக் காலனி**

**வினா எண் 35460—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையைப் போல் கோயம்புத்தூரில் பத்திரிகையாளர் குடியிருப்புக் காலனி கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**154—**

**அடுக்குமாடி வீடு**

**வினா எண் 35507—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 28-வது வார்டு சின்னான் நகரில் அடுக்குமாடி வீடு கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**155—**

**முத்திரைத்தாள்**

**வினா எண் 20116—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் முத்திரைத்தாள் விற்பனையாளர்களுக்கு வழங்கும் தரகு குறைவாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தரகு (Commission) அதிகப்படுத்த அரசு முன்வருமா?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். கடந்த 25 ஆண்டு காலமாக முத்திரைத்தாள் விற்பனையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற கழிவுத் தொகை உயர்த்தப்படாமல் இருந்தது. இந்த நிலையை மாற்றி, முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் விற்பனை செய்கின்ற நீதி சாரா முத்திரைத்தாள்கள், நீதி சார்ந்த முத்திரைத்தாள்கள், நீதி சார்ந்த முத்திரை வில்லைகள், ஷேர் டிரான்ஸ்பர், இன்சூரன்ஸ் வில்லைகள், பாரின் பில், உண்டி வில்லைகள், நீதிமன்ற நகல் தாள்கள் ஆகியவற்றிற்கு ஏற்கெனவே ஓராண்டுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ. 1.33 கோடி கழிவுத் தொகையை உயர்த்தி ஆண்டிற்கு ரூ. 2.00 கோடி அளவுக்கு 20-5-1999 அன்றிலிருந்து வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**156—**

**சத்துணவுக் கூடத்தை செப்பனிடுதல்**

**வினா எண் 22602—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், தவணை காலனியில் கட்டப்பட்டுள்ள பழுதடைந்த சத்துணவுக் கூடத்தை செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

செங்கோட்டை ஊராட்சி ஒன்றிய தவணை காலனியிலுள்ள பழுதடைந்த சத்துணவுக் கூடம் ரூ. 27,000 மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்யப்பட்டு சத்துணவு மையம் இயங்கி வருகிறது.



2000 நவம்பர் 13]

**157—**

**கலைமகள் சபா**

**வினா எண் 24234—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது மக்களை ஏமாற்றி மோசடி செய்த "கலைமகள் சபாவை" அரசு ஏற்று நடத்த திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**158—**

**சத்துணவு மையம்**

**வினா எண் 25509—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், காடுவெட்டி விடுதி ஊராட்சி, மேனாட்டுராயன் விடுதி கிராமத்தில் கள்ளர் தெரு, கோனார் தெரு குழந்தைகட்கு புதிதாக சத்துணவு மையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

மேனாட்டுராயன் விடுதி கிராமத்தில் புதிய மையங்கள் தொடங்க போதுமான குழந்தைகள் எண்ணிக்கை இல்லாததால் அருகில் உள்ள

[2000 நவம்பர் 13

மேனாட்டுராயன் விடுதி மையத்தில் பயன் அடைய மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**159—**

**கட்டட வசதி**

**வினா எண் 29068—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி மாவட்டப் பதிவாளர் அலுவலகம், வாடகை கட்டடத்தில் இயங்கி வருவதால் தேவையான கட்டட வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கு அரசு கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**160—**

**பத்திரப் பதிவு**

**வினா எண் 31213—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் பாகப் பிரிவினை செய்துகொள்ள மிகக் குறைந்த மதிப்பீட்டில் பத்திரப் பதிவு செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் குடும்ப உறுப்பினர்களுக்கிடையில் எழுதப்படும் பாக ஆவணங்களுக்கு ஏற்கெனவே இருந்த 4 சதவீதம் முத்திரைத் தீர்வையினை அரசாணை (நிலை) எண் 354, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 13-8-1997-ன்படி 2 சதவீதமாக குறைப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

**161—**

**தீப்பெட்டித் தொழிற்சாலைகள்**

**வினா எண் 31813—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூடிக்கிடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை தொழிற்கூட்டுறவுச் சங்கம் ஒன்று தக்கலையில் செயல்பட்டு வருகிறது. இதில் 69 உறுப்பினர்கள் அதாவது 'டி' வகுப்பு குடிசைத் தொழில் அமைப்பின்கீழ் செயல்படுகிறார்கள். குடிசைத் தீப்பெட்டித் தொழில் உறுப்பினர் அலகுகள் ஏதும் மூடப்பட்டுள்ளதாக இதுவரை தகவல் இல்லை. இம்மாவட்டத்தில், மாவட்டத் தொழில் மையத்தில் பதிவு செய்யப்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் 56 தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன.

(ஆ) கையால் செய்யப்பட்ட தீப்பெட்டிகள், வட மாநிலங்களில் இயந்திரம் மூலம் செய்யப்பட்ட தீப்பெட்டிகளால் இழந்த சலுகை வாய்ப்பை மீண்டும் பெறும் வகையில் தீப்பெட்டித் தொழில் இயந்திரமயமாக்கப்படுவதை தடைசெய்ய வேண்டும் என்றும் தீப்பெட்டித்

[2000 நவம்பர் 13

தொழிலை புனரமைக்கும் நடவடிக்கையாக, இத்தொழில் குடிசைத் தொழிலுக்கு மட்டும் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் மத்திய அரசிற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

162—

### தொழிற்பேட்டை

**வினா எண் 33192—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் இரும்பாலை அருகே தொழிற்பேட்டை தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* இல்லை.

163—

### செங்கோட்டையில் தொழிற்பேட்டை

**வினா எண் 34933—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகரில் தொழிற்பேட்டை அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* இல்லை.



2000 நவம்பர் 13]

164—

### உட்பிரிவுக் கட்டணம்

**வினா எண் 36808—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* விவசாயத்திற்காக நிலக்கிரயம் செய்தாலும், வீட்டு மனைக்காக நிலக்கிரயம் செய்தாலும், உட்பிரிவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டும் உட்பிரிவு செய்யப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், அக்குறை தீர்க்க வழி என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஆணைப் பதிவின்போது உட்பிரிவு ஏற்படும் இனங்களில் உட்பிரிவுக் கட்டணம் வசூலிக்கப்பட்ட விவரம் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு பட்டா மாறுதல் படிவம் அனுப்பப்படுவதின் மூலம் பதிவு அலுவலர்களால் தெரிவிக்கப்படுகிறது. இதன் மீதான நடவடிக்கையான பட்டா மாறுதல் வருவாய்த் துறையினரால் மேற்கொள்ளப்படுகிறது.

165—

### கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 34927—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தென்காசியில் தொழில் மற்றும் வணிகத் துறை மூலம் இயங்கிவந்த Coir Society இயங்காமல் இருப்பது குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதை இயங்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசியில் உள்ள தென்னை நார் கயிறு தொழிற்கூட்டுறவுச் சங்கம் 1985-86 லிருந்து தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்ததால், சங்கத்தின் நிதிநிலைமை நலிவடைந்திருந்தது. எனவே சங்கத்தின் எதிர்காலம் பற்றி நிர்ணயிக்க தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டம் 1983, பிரிவு 82-ன் கீழ் ஆய்வுக்கு ஆணையிடப்பட்டது. ஆய்வு அலுவலரின் அறிக்கையின் அடிப்படையில் சங்கத்தைக் கலைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**166—**

### தியாகிகள் மணிமண்டபம்

**வினா எண் 13484—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு சார்பில் சென்னையில் தியாகிகள் மணிமண்டபம் அமைக்கும் சிறப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னையில் தியாகிகள் மணிமண்டபம் ரூ.30.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2-10-1998 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**167—**

### உறுப்பினர்களுக்கு அரசு வெளியீடுகள் வழங்குதல்

**வினா எண் 19915—திரு. கோ.வீ. நன்னன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

(அ) அரசு வெளியிடும் செய்திக் குறிப்புகள், பிரசுரங்கள், விளம்பரச் செய்திகள், வெளியீடுகள் ஆகியவற்றின் ஏடுகளை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு வெளியிடும் தமிழரசு இதழ் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இலவசமாக அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும், அரசின் சார்பில் அவ்வப்போது வெளியிடப்படும் சிறப்பு வெளியீடுகள், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலமாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படுகிறது.

**168—**

### மறைந்த தலைவர்களை கௌரவித்தல்

**வினா எண் 22100—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்களை ஒன்றுபடுத்தப் போராடிய மறைந்த தலைவர்களை மாநில அரசு எந்தெந்த வகையில் கௌரவப்படுத்தியுள்ளது?

(ஆ) இதுகுறித்து புதிய முறையிலான திட்டங்கள் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்டு விடுதலைக்காக, சமுதாய மேம்பாட்டுக்காக பாடுபட்ட தலைவர்களின் நினைவாக, அரசு சிலைகள் மற்றும் நினைவகங்கள் அமைத்து சிறப்பு செய்து வருகிறது. தமிழ்மொழி பண்பாட்டைப் பேணிக்காப்பதற்கு பாடுபட்ட தியாகிகளுக்கு, ஓய்வூதியம்

[2000 நவம்பர் 13

மற்றும் இதர வசதிகள் செய்து தரப்படுகின்றன. ஓய்வூதியம் பெறும் தியாகியின் மறைவுக்குப்பின் அவரின் துணைவியாருக்கு வாரிசுதாரர் அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள 10 பல்கலைக்கழகங்களில் பெருந்தலைவர்களின் பெயர்களில் அறக்கட்டளைகள் நிறுவப்பட்டு, சிறந்த மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. நாட்டு விடுதலை போராட்டத்தில் கலந்து கொண்ட சுதந்திர போராட்ட வீரர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியம் ரூ.3000/- மற்றும் இதர வசதிகள் மற்றும் அவர்களின் வாரிசுகளுக்கு கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு, வேலை வாய்ப்பில் முன்னுரிமை போன்ற வசதிகள் செய்து தரப்படுகின்றன.

**169—**

**திரைப்படங்கள் கிராமங்களில் திரையிடுதல்**

**வினா எண் 30537—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தேசபக்தி, தெய்வபக்தி, ஒழுக்கம், சுதந்திரப் போராட்ட வரலாறு ஆகியவைகளை போதிக்கும் திரைப்படங்களை கிராமங்கள்தோறும் திரையிட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* தற்போது இதுபோன்ற திரைப்படங்கள் திரையிடப்படுகின்றனவா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

*(அ)* அனைத்து மக்களுக்கும் திரையிட்டுக் காட்டுவதற்காக தேசபக்தி, தெய்வபக்தி, சுதந்திர போராட்ட வரலாறு ஆகியவை குறித்த சில திரைப்படங்களை அரசு தயாரித்துள்ளது. ஒழுக்கம் குறித்து தனியே படம் எதுவும் எடுக்கப்படவில்லை.

*(ஆ)* ஆம். அத்தகைய திரைப்படங்கள் தமிழ்நாட்டில் அனைத்து கிராமப்புறங்களிலும் வீடியோ ஊர்திகள் மூலமாக திரையிட்டுக் காட்டப்படுகின்றன.



2000 நவம்பர் 13]

**170—**

**உதவித் தொகை**

**வினா எண் 39514—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பத்திரிகைத் துறையில் 15 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளமைக்காக செய்தியாளர் சங்கம் வழங்கும் சான்றிதழை ஏற்று அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகையை வழங்கிட அரசு கருதியுள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதை அரசு எப்போது முதல் நடைமுறைப்படுத்தும்?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

**171—**

**கால்நடை மருத்துவப் படிப்பு**

**வினா எண் 24260—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கால்நடை மருத்துவப் படிப்பு முடித்துள்ள பட்டதாரிகள் எத்தனை பேர்?

*(ஆ)* அவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) இந்நாள் வரை 1787 பட்டதாரிகள் கால்நடை மருத்துவப் படிப்பை முடித்து வெளிவந்துள்ளனர்.

(ஆ) இத்தகைய பட்டதாரிகள் தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத் துறையில் கால்நடை உதவி மருத்துவராக பணி நியமனம் செய்யப்படுகிறார்கள். 834 பேர் கால்நடை உதவி மருத்துவர்களாக கால்நடை துறையில் பணிபுரிகின்றனர். மேலும் இளநிலை பட்டதாரிகள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் இளநிலை ஆராய்ச்சியாளராக 103 பேரும், இளநிலை உதவியாளராக 21 பேரும் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டு திட்டகாலம் முடிவடைந்தவுடன் அவர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர். மேலும் இளநிலை பட்டதாரிகளுக்கு சில தனியார் நிறுவனங்களிலும், தனியார் பண்ணைகளிலும் வேலைவாய்ப்பு பெறும் வாய்ப்புகள் உள்ளன. மேலும் முதுநிலை பட்டப் படிப்பு படித்த பட்டதாரிகள் இப்பல்கலைக் கழகத்திலேயே உதவி பேராசிரியர்களாக பணி நியமனம் செய்யப்படுகிறார்கள். 1989 முதல் 1999 வரையில் 243 உதவிப் பேராசிரியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். மேலும் நிதி நிலைமையைப் பொறுத்து வேலைவாய்ப்பு காலியாக உள்ள இடங்கள் நிரப்பப்படுகின்றன.

**172—**

**கால்நடை மருத்துவர்கள் நியமனம்**

**வினா எண் 29399—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவர்கள் இல்லாத கால்நடை மருந்தகங்களில் அரசு மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) அரசு பரிசீலனை செய்யும்.



(ஆ) ஒவ்வொரு வருடமும் இயக்குநரிடமிருந்து பெறப்படும் காலியிட மதிப்பீட்டின் அடிப்படையில் தேர்வாணையத்தால் தேர்வு நடத்தப்பட்டு தெரிவு செய்யப்படும் கால்நடை உதவி மருத்துவர்களைக் கொண்டு காலியிடம் நிரப்பப்படும். 1998-99-ம் வருட காலியிட மதிப்பீட்டு அடிப்படையில் தேர்வு நடத்த அரசு பணியாளர் தேர்வாணையம் அறிவிக்கை வெளியிட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட நபர்களின் பட்டியல் பெற்று காலியிடங்கள் நிரப்பப்படும்.

**173—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 29461—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் கால்நடை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அவை யாவை?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) புவனகிரி தொகுதியில் நான்கு கால்நடை மருந்தகங்களும், ஒரு கால்நடை மருத்துவமனையும் உள்ளன.

(ஆ) பரங்கிப்பேட்டை, பின்னத்தூர், சேத்தியாதோப்பு, பின்னலூர் ஆகிய இடங்களில் நான்கு கால்நடை மருந்தகங்களும், புவனகிரியில் ஒரு கால்நடை மருத்துவமனையும் உள்ளன.

**174—**

**முழுநேர மருத்துவமனை**

**வினா எண் 30618—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், ஆலம்பாடி ஊராட்சி, சத்திரப்பட்டியிலுள்ள பகுதி நேர கால்நடை மருத்துவமனையை முழு நேர மருத்துவமனையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**175—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண்.30622—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், பாடியூர் ஊராட்சிக்கு கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



2000 நவம்பர் 13]

**176—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 30624—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, சித்தூர் ஊராட்சி, தண்ணீர்பந்தம் பட்டியிலுள்ள கால்நடை மருத்துவமனையை செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**177—**

**உதவி இயக்குநர் அலுவலகம்**

**வினா எண் 35950—திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் நகரில் கால்நடைத் துறை உதவி இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நத்தம் நகரில் கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்துவது தொடர்பான நடவடிக்கை ஏதும் இல்லை.

**178—**

**இராமாமிர்தம் திருமணத் திட்டம்**

**வினா எண் 22141—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில் 1996-லிருந்து இதுவரை எத்தனை பேருக்கு டாக்டர் தர்மாம்பாள் மறுமணத் திட்டத்தின் மூலம் எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

(ஆ) இராமாமிர்தம் திருமணத் திட்டம் மூலம் 1996-ல் இருந்து எத்தனை பேருக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில் 1996 லிருந்து 1998-99 வரை விதவை மறுமண உதவித் திட்டத்தின் கீழான உதவித் தொகை 2 நபருக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 1996-லிருந்து 1998-99 வரை மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் உதவித் தொகை 276 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**179—**

**நிதியுதவி**

**வினா எண் 23486—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் எத்தனை பேர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) கடந்த இரண்டு ஆண்டுகளில் அத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் (1996-97 முதல் 1997-98) 360 பேருக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கடந்த இரண்டு ஆண்டுகளில் அத்திட்டத்திற்காகச் செல்விடப்பட்ட தொகை ரூ.21.92 இலட்சம் ஆகும்.

**180—**

**சமூக சீர்திருத்தத் துறை**

**வினா எண் 32492—திரு. கே. அப்பராயன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சமூக சீர்திருத்தத் துறை செயல்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) அதன் செயல்படும் உத்திகள் முறையாக வகுக்கப்பட்டுள்ளனவா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். செயல்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) மாண்புமிகு முதலமைச்சர் ஆணைப்படி அரசாணை நிலை எண். 1540, பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு.பி) துறை, நாள் 15-10-1999-ல், மத நல்லிணக்கத்தைக் காக்கவும் சமுதாய ஒற்றுமையை மேம்படுத்தவும்

[2000 நவம்பர் 13

தலைமைச் செயலகத்தில் சமூக சீர்திருத்தத் துறை என்ற புதிய துறை ஏற்படுத்தப்பட்டு அதற்கென வரையறுக்கப்பட்ட பணிகளுடன் செயல்பட்டு வருகிறது.

**181—**

**ஆயத்த ஆடைகள்**

**வினா எண் 32824—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**182—**

**பள்ளியின் நிலை உயர்த்துதல்**

**வினா எண் 6211—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியிலுள்ள மாதானம் கிராமத்தில், ஆதிதிராவிட நலத் துறையின் மூலம் நடத்தப்பட்டு வரும் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதை 1997-98 ஆம் கல்வியாண்டில் உயர்த்த முன்வருமா?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியிலுள்ள மாதானம் கிராமத்தில், ஆதிதிராவிட நலத் துறையின் மூலம் நடத்தப்பட்டு வரும் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**183—**

**வீட்டுமனை**

**வினா எண் 7448—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், பெருமாநல்லூர் ஊராட்சிக்குட்பட்ட பொடாரம்பாளையம், ஆண்டிபாளையம், க.ச.215 மங்கலம் ஊராட்சி, சுல்தான்பேட்டை க.சா. 392 ஆண்டிபாளையம் பகுதியில் க.ச.63ல் இடுவாய் ஊராட்சி க.ச.145/1எ ஆகிய நிலங்கள் ஆதிதிராவிடர் வீட்டுமனைக்காக கையகப்படுத்தப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அந்த நிலம், ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைகளாக வழங்கப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெருமாநல்லூர் ஊராட்சிக்குட்பட்ட பொடாரம்பாளையம் மஜராவில் க.ச.215/2 காலையில் 1.24 ஏக்கர் நிலம் தனியார் பேச்சுவார்த்தை மூலம் கையகப்படுத்தப்பட்டு 11-2-2000 அன்று சுவாதீனம் எடுக்கப்பட்டு பட்டா வழங்கப்படவுள்ளது. ஆண்டிபாளையம் கிராமம் க.ச.63/1-ல் 1.40 எக்டேர் (3.46 ஏக்கர்) பூமி ஆதிதிராவிடர்கள் வீட்டுமனைகளுக்காக கையகப்படுத்தப்பட்டு 8-8-1997ல் 106 ஆதிதிராவிடர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது. இடுவாய் கிராமத்தில்

க.ச.145/1எ, 2எ, 2பி, 146/2எ, 147, 149, 150 ஆகிய காலைகளில் மொத்தம் 10.45.0 எக்டேர் (25.81 ஏக்கர்) மற்றும் க.ச. 176/1பி காலையில் 6.57.0 எக்டேர் (16.23 ஏக்கர்) கையகம் செய்யப்பட்டு, மொத்தம் 1204 ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் 16-8-1995-ல் வழங்கப்பட்டுள்ளன.

**184—**

## மேல்நிலைப்பள்ளி தொடங்குதல்

**வினா எண் 7814—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் மேல்நிலைப்பள்ளி ஒன்றைத் தொடங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**185—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 9198—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், புஞ்சைலக்காபுரம் கிராமத்தில் ஆதிதிராவிடர் காலனி அமைக்கப்பட்டு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?





விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், புஞ்சைலக்காபுரம் கிராமத்தில் 15.55 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 736 ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

**186—**

## திருமண மண்டபம்

**வினா எண் 16602—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, தாதாபுரத்தில் அருந்ததியர்களுக்கு ஒரு திருமண மண்டபம் கட்டித்தர அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, தாதாபுரத்தில் ஒரு சமூகக்கூடம் உள்ளது. எனவே இரண்டாவது சமூகக்கூடம் கட்டத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

**187—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 18875—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி நகர், அண்ணா நகரிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

பேராவூரணி நகர், அண்ணா நகரிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பினைப் பரிசீலனை செய்து 16 ஆதிதிராவிடக் குடும்பங்களுக்கு 15-12-1999-இல் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

**188—**

**விடு கட்டுதல்**

**வினா எண் 18934—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், பின்னலூரில் 1997-இல் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் வழங்கப்பட்ட மனைப் பட்டாக்களில் வீடுகள் கட்டப்பட்டு உள்ளதா?

(ஆ) இல்லை எனில், அதற்கான காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்ட பின்னலூரில் 1997-ல் ஆதி திராவிடர் நலத் துறை மூலம் வழங்கப்பட்ட மனைப் பட்டாக்களில் ஒருவர் மட்டுமே கூரை வீடு கட்டியுள்ளார். வழங்கப்பட்ட மனைப் பட்டாக்கள் தாழ்வான பகுதியாக உள்ளதாலும், மழை வெள்ளக் காலங்களில் தண்ணீர் பிடிக்கும் இடமாக உள்ளதாலும் வீடுகள் கட்டப்படவில்லை.

**189—**

**விதி முறைகள்**

**வினா எண் 22560—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



மாநில அரசு வழங்கி வரும் வீட்டுமனைப் பட்டாவை தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்கள் விற்க அல்லது அடகு வைக்கக்கூடாது என்பன போன்ற விதிமுறைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளனவா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

ஆம். வழங்கப்பட்டுள்ளன.

**190—**

**உதவித் தொகை**

**வினா எண் 23405—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துப்புரவுப் பணியாளர் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வறண்ட கழிவறை துப்புரவு, தோல் உரித்தல், தோல் பதனிடல் மற்றும் பெருக்குபவர் போன்ற சுகாதாரக் குறைவான பணிகளில் ஈடுபட்டுள்ளோரின் குழந்தைகளுக்கு 1 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான ஃப்ரி-மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம் மத்திய அரசின் நிதி உதவியோடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட சுகாதாரக் குறைவான தொழில் புரிவோர் எந்த சாதி, மதத்தினைச் சேர்ந்தவராயிருப்பினும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற வருமான வரம்பு இல்லை. ஒரு குடும்பத்தில் 1-4-1993-க்கு முன்னர் பிறந்து எட்டாம் வகுப்பு வரை பயிலும் அனைத்துக் குழந்தைகளும் இக்கல்வி உதவித்தொகை பெறத் தகுதி உடையவர்கள். ஆனால் 1-4-1993-க்கு பின்னர் ஒரு குடும்பத்தில்

[2000 நவம்பர் 13

மூன்றாவது குழந்தை பிறப்பின், அக்குடும்பத்தில் முதல் இரண்டு குழந்தைகள் மட்டுமே எட்டாம் வகுப்பு வரை இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை பெறத் தகுதி உடையவர்கள். மேலும், 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் ஒரு குடும்பத்தில் இரண்டு குழந்தைகள் மட்டுமே இக்கல்வி உதவித் தொகை பெறத் தகுதி உடையவர். இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித்தொகையின் வீதம் வருமாறு:

**வெளிப்புற மாணவர்களுக்கு:**

| | |
|---|---|
| 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கு | மாதம் ஒன்றுக்கு ரூ.25/- வீதம் 10 மாதங்களுக்கு. |
| 6 முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கு | மாதம் ஒன்றுக்கு ரூ.40/- வீதம் 10 மாதங்களுக்கு. |
| 9 மற்றும் 10-ம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியருக்கு | மாதம் ஒன்றுக்கு ரூ.50/- வீதம் 10 மாதங்களுக்கு. |

**விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு:**

| | |
|---|---|
| 3-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரையில் பயிலும் மாணவ/மாணவியருக்கு | மாதம் ஒன்றுக்கு ரூ.200/- வீதம் 10 மாதங்களுக்கு. |
| 9 மற்றும் 10-ம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியருக்கு | மாதம் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் 10 மாதங்களுக்கு. |

இது தவிர, ஒட்டுமொத்த மானியமாக ஆண்டுக்கு ரூ.500/- வீதம் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்கள் மற்றும் வீட்டிலிருந்து வந்து செல்லும் மாணவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

**191—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 25182—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், நெருப்பெரிச்சல் ஊராட்சி, வாவிபாளையம் ஆதி திராவிடர் குடியிருப்பில் சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர், நெருப்பெரிச்சல் ஊராட்சி, வாவிபாளையம் ஆதிதிராவிடர் குடியிருப்பில் சமுதாயக்கூடம் கட்ட முன்னுரிமை மற்றும் நிதிநிலைக்கேற்ப வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

**192—**

**பள்ளியின் நிலை உயர்த்துதல்**

**வினா எண் 33591—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், திருக்குளம்பியம் ஆதிதிராவிடர் நலத் தொடக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்தித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், திருக்குளம்பியம் ஆதிதிராவிடர் நலத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

[2000 நவம்பர் 13

193—

## இட ஒதுக்கீடு

**வினா எண் 34451—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இட ஒதுக்கீட்டில் மலைவாழ் மக்களை (எஸ்டி) பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க பின்பற்றப்படும் நடைமுறை என்ன?

(ஆ) எந்த வகையில் அவர்களுக்கு இட ஒதுக்கீடு கிடைக்க அரசால் ஆவன செய்யப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இந்திய அரசியல் சாசனம் 342-வது விதிகளின்படி ஒரு மாநிலம் அல்லது ஒரு யூனியன் பிரதேசம் சம்பந்தப்பட்ட வரையில், ஒரு மாநில ஆளுநரைக் கலந்தாலோசித்த பின்னர், அந்த மாநிலத்திலும், சம்பந்தப்பட்ட மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தின் பழங்குடியினராகக் கருதப்பட வேண்டிய சாதிகள், இனங்கள் ஆகியவற்றைப் பட்டியலிட்டு, ஒரு பொது அறிக்கையைக் குடியரசுத் தலைவர் வெளியிட வேண்டும். பழங்குடியினருக்கான பட்டியலிலிருந்து ஒரு குடியினரை அல்லது அந்தக் குடியினரின் பிரிவைப் புதிதாகச் சேர்ப்பதற்கும் நீக்குவதற்கும் சட்டம் இயற்றுவதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உண்டு. மேலும், இந்திய அரசு மானிடவியலரின் கூற்றின்படி, ஒரு இனம் பழங்குடியினரின் பட்டியலில் சேர்க்கலாமா என்று கலந்தாலோசித்து அவர்களைப் பட்டியலில் சேர்க்க ஆவன செய்யப்படுகிறது. குடியரசுத் தலைவரால் வெளியிடப்பட்ட நாளிலிருந்து அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்கு அவரவர் குடியிருக்கும் பகுதியை வைத்து சாதிச்சான்று வழங்கப்பட்டு இட ஒதுக்கீட்டுக்குரிய சலுகை வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) அவர்களுக்கு இட ஒதுக்கீட்டுச் சலுகை கிடைக்க பல்வேறு தொண்டு நிறுவனங்கள் மற்றும் பழங்குடியினர் ஆய்வு மையம், உதகையின் மூலம் பழங்குடியினருக்கு விழிப்புணர்ச்சி முகாம் நடத்தி அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.



2000 நவம்பர் 13]

194—

## தொடக்கப்பள்ளி

**வினா எண் 35917—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி கல்வி மாவட்டம், பாட்டப்பத்து ஊராட்சியில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக தொடக்கப்பள்ளி அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி கல்வி மாவட்டம், பாட்டப்பத்து ஊராட்சியில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக தொடக்கப்பள்ளி அமைத்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

195—

## பள்ளி நிலை உயர்த்துதல்

**வினா எண் 36692—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, மாதானம் ஆதிதிராவிடர் நலத் துறை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி, மாதானம் ஆதிதிராவிடர் நலத் துறை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

196—

### பள்ளி நிலை உயர்த்துதல்

**வினா எண் 39484—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், மானோஜிபட்டி, அரசினர் ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நடப்பு கல்வி ஆண்டில் (2000-2001) உயர்த்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், மானோஜிபட்டி, அரசினர் ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நடப்பு கல்வி ஆண்டில் (2000-2001) நிலை உயர்த்த வாய்ப்பில்லை.

197—

### தொங்கு பாலம்

**வினா எண் 25362—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரி ஆற்றின் குறுக்கே தொங்குபாலம் கட்டும் பணி அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரி ஆற்றின் குறுக்கே தொங்கு பாலம் கட்டும் பணி முடிவடைந்து நவம்பர் 1998 முதல் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

198—

### சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள்

**வினா எண் 30219—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தமிழ்நாட்டிற்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகள் மற்றும் உதவிகளை சுற்றுலாத் துறையே செய்து தர அரசு நடப்பாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டிற்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகள் மற்றும் உதவிகளை சுற்றுலாத் துறையும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் செய்து வருகின்றன.

199—

### வர்த்தக வளர்ச்சித் திட்டம்

**வினா எண் 30314—திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கான வரும் ஐந்தாண்டுகளுக்கான வர்த்தக வளர்ச்சித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், அடுத்த ஐந்தாண்டுகளுக்கு நீண்ட காலத் திட்டங்கள் எதையும் தயார் செய்யவில்லை. அக்கழகம் ஒவ்வொரு ஆண்டும் வரவு-செலவுத் திட்டம்/முதலீட்டு வரவு-செலவு திட்டம் தயார் செய்து அதனை இயக்குநர் குழுமம் பரிந்துரை மற்றும் ஒப்புதலுடன் அரசுக்கு சமர்ப்பித்து, அரசு உத்தரவுடன் செயல்படுத்தப்படுகிறது. அரசு ஒப்புதல் அளித்த வரவு-செலவுத் திட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் செயலாக்கத்திற்கு ஒரு அளவு கோலாகவும், வரவு-செலவு வகைகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் செயல் திறனுக்கு வகைப்படுத்தப்பட்டவாறு அமைந்துள்ளது.

200—

### ஓய்வு விடுதிகள்

**வினா எண் 33122—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் நடுத்தர மக்களும் கோடைகாலங்களில் தங்கிச் செல்ல வசதியாக ஓய்வு விடுதிகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் நடுத்தர மக்களும் கோடைகாலங்களில் தங்கிச் செல்ல வசதியாக ஓய்வு விடுதிகள் கட்டித்தரும் திட்டம் எதுவும் சுற்றுலாத் துறையிடம் இல்லை.

(ஆ) எழவில்லை.

## பத்தொன்பதாவது பட்டியல்

1—

### நேர்முகத் தேர்வு

**வினா எண் 21359—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நர்சரி பள்ளிகளில் இளம் சிறார்களிடம் நேர்முகத் தேர்வு நடத்தி தேர்வு செய்யப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஒப்புதலளிக்கப்பட்ட மழலையர் பள்ளிகளில் குழந்தைகள் சேர்ப்பதில் நேர்முகத் தேர்வு நடத்தப்படுவதாகப் புகார்கள் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



2—

### உயர்நிலைப்பள்ளி

**வினா எண் 30393—திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமானூர் ஒன்றியம், குருவாடி மற்றும் தூத்தூர் ஆகிய இடங்களிலுள்ள நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

பெரம்பலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், குருவாடி மற்றும் தூத்தூர் ஆகிய இடங்களிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்கு கருத்துரு எதுவும் பெறப்படவில்லை.

3—

### பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 36993—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வரும் 2000-2001 ஆம் ஆண்டில் அரசு உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த எத்தனை பள்ளிகள் தகுதி பெற்றுள்ளன?

(ஆ) அவை எந்தப் பள்ளிகள் என்பதை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் அரசு/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துவதற்கு தகுதியுடைய 100 பள்ளிகளுக்குரிய கருத்துருக்கள் பெறப்பட்டு, அவை உயர் மட்டக் குழுவின் முன் வைக்கப்பட்டு, அவற்றுள் உயர் மட்டக் குழு பரிந்துரை செய்த 50

அரசு/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மேம்படுத்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) 2000-2001-ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளிகளாக மேம்படுத்தப்பட்ட அரசு/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் பட்டியல் குறித்த கீழ்க்கண்ட விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**விவர அறிக்கை**

*2000-2001* ஆம் ஆண்டில் மேல்நிலைப்பள்ளிகளாக மேம்படுத்தப்படும் அரசு/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளின் பட்டியல்.

| மாவட்டம் | ஒன்றியம் | வ. எண் | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|
| திருவள்ளூர் | வில்லிவாக்கம் | 1. | அரசு உயர்நிலைப் பள்ளி, அயனம்பாக்கம். |
| காஞ்சிபுரம் | சித்தாமூர் | 2. | அரசு உயர்நிலைப் பள்ளி, சோத்துப்பாக்கம். |
| | தாமஸ்மலை | 3. | அரசு உயர்நிலைப் பள்ளி, பள்ளிக்கரணை. |
| வேலூர் | ஆலங்காயம் | 4. | அரசு உயர்நிலைப் பள்ளி, நிம்மியம்பட்டு. |
| | கந்திலி | 5. | அரசு உயர்நிலைப் பள்ளி, கொரட்டி. |
| திருவண்ணாமலை | துறிஞ்சாபுரம் | 6. | அரசு உயர்நிலைப் பள்ளி, சொரகுளத்தூர். |
| | தெள்ளாரர் | 7. | அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, தேசூர். |
| விழுப்புரம் | சங்கராபுரம் | 8. | அரசு உயர்நிலைப் பள்ளி, புதுப்பட்டு. |
| | மேல்மலையனூர் | 9. | அரசு உயர்நிலைப் பள்ளி, தேவனூர். |
| கடலூர் | குமராட்சி | 10. | அரசு உயர்நிலைப் பள்ளி, வல்லத்துறை. |
| | நல்லூர் | 11. | அரசு உயர்நிலைப் பள்ளி, நல்லூர். |



| மாவட்டம் | ஒன்றியம் | வ. எண் | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|
| தர்மபுரி | பென்னகரம் | 12 | அரசு உயர்நிலைப் பள்ளி, பெரும்பாலை. |
| | மொரப்பூர் | 13 | அரசு உயர்நிலைப் பள்ளி, இராமியம்பட்டி. |
| | காரிமங்கலம் | 14 | அரசு உயர்நிலைப் பள்ளி, பெரியாம்பட்டி. |
| சேலம் | ஓமலூர் | 15 | அரசு உயர்நிலைப் பள்ளி, வெள்ளாளப்பட்டி. |
| | கங்கவல்லி | 16 | அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, ஜலகண்டபுரம். |
| | பனமரத்துப் பட்டி | 17 | அரசு உயர்நிலைப் பள்ளி, தாசநாய்க்கன்பட்டி. |
| | சேலம் மாநகராட்சி | 18 | காமராஜ் மாநகராட்சி மகளிர் உயர்நிலைப் பள்ளி. மணக்காடு. |
| நாமக்கல் | புதுச்சத்திரம் | 19 | அரசு உயர்நிலைப் பள்ளி, புதுச்சத்திரம். |
| | வெண்ணாந்தூர் | 20 | அரசு உயர்நிலைப் பள்ளி, அத்தனூர். |
| | எருமப்பட்டி | 21 | அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, எருமப்பட்டி. |
| ஈரோடு | கோபிசெட்டிப் பாளையம் | 22 | அரசு உயர்நிலைப் பள்ளி, பொலவக்காளிப் பாளையம். |
| | அந்தியூர் | 23 | அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, அந்தியூர். |
| கோயம்புத்தூர் | கிணத்துக்கடவு | 24 | அரசு உயர்நிலைப் பள்ளி, வடசித்தூர். |
| | பெரிய நாயக்கன் பாளையம் | 25 | அரசு உயர்நிலைப் பள்ளி, நாய்க்கன்பாளையம். |

| மாவட்டம் | ஒன்றியம் | வ. எண் | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|
| நீலகிரி | உதகை | 26 | அரசு உயர்நிலைப் பள்ளி, கக்குச்சி. |
| நாகப்பட்டினம் | வேதாரண்யம் | 27 | அரசு உயர்நிலைப் பள்ளி, செம்போடை. |
| திருவாரூர் | மன்னார்குடி | 28 | அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, கூத்தாநல்லூர். |
| | மன்னார்குடி | 29 | அரசு உயர்நிலைப் பள்ளி, மகாதேவபட்டினம். |
| | நன்னிலம் | 30 | அரசு உயர்நிலைப் பள்ளி, பூந்தோட்டம். |
| தஞ்சாவூர் | மதுக்கூர் | 31 | அரசு உயர்நிலைப் பள்ளி (மகளிர்), மதுக்கூர். |
| புதுக்கோட்டை | குண்டாண்டார் கோயில் | 32 | அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, கீரனூர். |
| | | 33 | அரசு உயர்நிலைப் பள்ளி, அண்டக்குளம். |
| | அறந்தாங்கி | 34 | அரசு உயர்நிலைப் பள்ளி, நாகுடி. |
| திருச்சி | முசிறி | 35 | அரசு உயர்நிலைப் பள்ளி, தண்டலைபுத்தூர். |
| | தொட்டியம் | 36 | அரசு (மகளிர்) உயர்நிலைப் பள்ளி, தொட்டியம். |
| பெரம்பலூர் | பழூர் | 37 | அரசு உயர்நிலைப் பள்ளி, திருபுரந்தான். |
| | செந்துறை | 38 | அரசு உயர்நிலைப் பள்ளி, குறிச்சிகுளம். |



| மாவட்டம் | ஒன்றியம் | வ. எண் | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|
| திண்டுக்கல் | வேடசந்தூர் | 39 | அரசு உயர்நிலைப் பள்ளி, எரியோடு. |
| | ஆத்தூர் | 40 | அரசு உயர்நிலைப் பள்ளி, சித்தையன் கோட்டை. |
| | சாணார்பட்டி | 41 | அரசு உயர்நிலைப் பள்ளி, கம்பிளியம்பட்டி. |
| மதுரை | சேடப்பட்டி | 42 | அரசு உயர்நிலைப் பள்ளி, சேடப்பட்டி. |
| விருதுநகர் | இராஜபாளையம் | 43 | சேத்தூர் சேவக பாண்டிய மகளிர் அரசு உயர்நிலைப் பள்ளி, இராஜபாளையம். |
| சிவகங்கை | சிவகங்கை | 44 | அரசு உயர்நிலைப் பள்ளி, இடையமேலூர். |
| இராமநாதபுரம் | கடலாடி | 45 | எஸ்.ஏ.எம். என். அரசு உயர்நிலைப் பள்ளி, ஏர்வாடி. |
| தூத்துக்குடி | கோயில்பட்டி | 46 | கே.ஆர். சாரதா அரசு உயர்நிலைப் பள்ளி, நாலாட்டின்புதூர். |
| திருநெல்வேலி | களக்காடு | 47 | டி.வி.எஸ். அரசு உயர்நிலைப் பள்ளி, திருக்குறுங்குடி. |
| | கீழப்பாவூர் | 48 | அரசு உயர்நிலைப் பள்ளி, புல்லுக்காட்டுவலசை. |
| கன்னியாகுமரி | தக்கலை | 49 | அரசு உயர்நிலைப் பள்ளி, கண்டன்விளை. |
| | குருந்தன்கோடு | 50 | அரசு உயர்நிலைப் பள்ளி, ஆளூர். |

[2000 நவம்பர் 13

4—

## பாடநூல்கள் விலை

**வினா எண் 41437—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பாடநூல்கள் அரசு நிர்ணயித்த விலையில் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

மாணவர்களுக்கு தட்டுப்பாடில்லாமல் புத்தகங்கள் கிடைக்கவும், எல்லா மாணவர்களும் ஒவ்வொரு வகுப்பிலும் தரமுள்ள புத்தகங்களைப் படித்து பயன்பெறவும் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் 1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் அரசு நிர்ணயித்துள்ள குறைந்த விலையில் தரமான பாடநூல்களைத் தட்டுப்பாடில்லாமல் மாணவர்களுக்குத் தொடர்ந்து வழங்கி வருகிறது.

5—

## இட ஒதுக்கீடு

**வினா எண் 13422—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருத்துவப் படிப்பிற்கு கிராமப்புற மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இத்திட்டம் நடைமுறையில் உள்ளது.



2000 நவம்பர் 13]

6—

## மின்மாற்றி

**வினா எண் 23765—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், கீழ் அரியப்புரத்தில் மின் அழுத்தக் குறைவைப் போக்க கூடுதலாக ஒரு மின்மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

விடை—

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், கீழ் அரியப்புரத்தில் மின் அழுத்தக் குறைவைப் போக்க கூடுதலாக ஒரு மின்மாற்றி நிறுவப்பட்டு 11-2-1999 அன்று இயக்கப்பெற்றுள்ளது.

7—

## அரசு மருத்துவமனை

**வினா எண் 26724—திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொங்கலூர் தொகுதி, குண்டடத்தில் அரசு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மக்கள் தொகை அடிப்படையில் படிப்படியாக சில ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு மருத்துவமனைகளாக மாற்றப்பட்டு வருகிறது. குண்டடம் ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகை அடிப்படையில் தற்போது இயங்கிவரும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாகக் கருதப்படுவதால் குண்டடம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம்/அரசு மருத்துவமனை அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.

**8—**

**மருத்துவமனை**

**வினா எண் 33195—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம்-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் விபத்து சிகிச்சை செய்ய 24 மணி நேரமும் இயங்கக்கூடிய மருத்துவமனை ஒன்று ஓமலூர் - தொப்பூருக்கு இடையில் ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம்-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் விபத்து சிகிச்சை செய்ய 24 மணி நேரமும் இயங்கக்கூடிய மருத்துவமனை ஒன்று ஓமலூர்-தொப்பூருக்கு இடையில் தொடங்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.





**9—**

**தாய் சேய் மருத்துவமனை**

**வினா எண் 33532—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சிக்கு உட்பட்ட கடையம்பட்டியில் உள்ள தாய் சேய் மருத்துவமனை மிகவும் பழுதடைந்துள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த தாய் சேய் மருத்துவமனையைப் பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் கட்டட பராமரிப்பு நிதியிலிருந்து கடையம்பட்டி துணை சுகாதார நிலைய கட்டடத்தின் பழுதுகள் சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**10—**

**தாய்சேய் நல விடுதியைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 33701—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், வேம்புனேரி பஞ்சாயத்திலுள்ள தாய் சேய் நல விடுதி மிகவும் மோசமான நிலையில் உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தாய் சேய் நல விடுதியைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) வேம்புனேரி துணை சுகாதார நிலையக் கட்டட (தாய் சேய் நல விடுதி) பழுதுகள் சரி செய்யப்பட்டு, தற்போது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**11—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 36753—திரு. ச. இராஜ ரெட்டி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தளி தொகுதி, கெளமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் குறைந்த அழுத்த மின்சாரத்தைப் போக்க கெளமங்கலத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், தளி தொகுதி, கெளமங்கலத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யும்.

**12—**

**செவிலியர் பயிற்சிக் கல்லூரி**

**வினா எண் 37027—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியில் செவிலியர் பயிற்சிக்கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**13—**

**மருத்துவக் கல்லூரி**

**வினா எண் 37890—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வேலூர் மருத்துவக் கல்லூரி அறிவிக்கப்பட்டு இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூரில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி, 2000-2001 ஆம் ஆண்டிலிருந்து தொடங்க முறையான ஆணை, அரசாணை (நிலை) எண் 257, நாள் 26-7-2000-ல் வெளியிடப்பட்டுள்ளன. மைய அரசின் ஒப்புதல் வேண்டி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதல் பெற்றபின் மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள்.

**14—**

**மருந்துகள்**

**வினா எண் 40322—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை அரசு மருத்துவமனையில் சித்தா பிரிவில் தேவையான மருந்துகள் வேண்டுமென்ற கோரிக்கை அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

**15—**

**சித்த மருத்துவப் படிப்பு**

**வினா எண் 40397—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மோகன்குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவப் பட்டப் படிப்பு ஆரம்பிக்க அரசு முயற்சி செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி ஆங்கில முறை மருத்துவத்தை போதிக்கவென நடத்தப்படும் கல்லூரியாகும். எனவே, இக்கல்லூரியிலேயே சித்த மருத்துவப் பட்டப் படிப்பு ஆரம்பிக்க இயலாது.

**16—**

**பாம்புக் கடிக்கு மருந்துகள்**

**வினா எண் 40571—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் நாய்க்கடி, பாம்புக்கடி மருந்துகள் போதிய அளவு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் நல்ல தரம் வாய்ந்த நாய்க்கடி, பாம்புக்கடி மருந்துகள் போதிய அளவு, தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

**17—**

**குடிதண்ணீர்**

**வினா எண் 6949—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகருக்கும் அதனைச் சுற்றியுள்ள செம்மாண்டகுப்பம், எஸ். கொட்டாவூர், நாய்க்கன்கொட்டாய், கிருஷ்ணாபுரம், இருமத்தூர் ஆகிய இடங்களுக்கும் தென்பெண்ணை ஆற்றிலிருந்து குடிதண்ணீர் விநியோகம் செய்ய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி ஒன்றியத்தில் நடுப்பட்டி மற்றும் 47 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (செம்மாண்டகுப்பம், நாய்க்கன்கொட்டாய் மற்றும் கிருஷ்ணாபுரம் பகுதிகள் அடங்கியது) தென்பெண்ணை ஆற்றில் நீர் உறிஞ்சு கிணற்றை நீராதாரமாகக் கொண்டு மதிப்பீடு ரூ.471.00 இலட்சங்களுக்கு வாரிய ஆணை எண் 280 நாள் 3-8-98-ல் ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. திட்டப் பணிகள் இவ்வருட இறுதிக்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[2000 நவம்பர் 13

18—

### வாகன நிறுத்துமிடங்கள்

**வினா எண் 15848—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தனியார் வாகன நிறுத்துமிடங்களில் வசூல் செய்யப்படும் கட்டணத் தொகையில் அரசிற்கு ஏதேனும் வரி செலுத்தப்படுகிறதா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தனியார் வாகன நிறுத்துமிடங்களில் வசூல் செய்யப்படும் கட்டணத் தொகையிலிருந்து வரி ஏதும் செலுத்தப்படுவதில்லை.

19—

### மானியக் கடன்

**வினா எண் 19345—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளுக்குக் குடிநீர் சுத்திகரிக்கும் நிலையங்களைப் புதுப்பிக்க அரசு மானியக் கடன் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளுக்குக் குடிநீர் சுத்திகரிக்கும் நிலையங்களைப் புதுப்பிக்க அரசு மானியக் கடன் வழங்கும் திட்டம் பரிசீலனையில் ஏதும் இல்லை.



2000 நவம்பர் 13]

20—

### சிறுசேமிப்பு

**வினா எண் 24233—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சென்னை மாநகராட்சி மூலம் சிறுசேமிப்புக்காக நடப்பு ஆண்டில் (1998-99) வசூல் செய்ய நிர்ணயிக்கப்பட்ட குறியீடு எவ்வளவு?

*(ஆ)* நடப்பு ஆண்டில் வசூல் செய்த தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* சிறுசேமிப்புக்காக சென்னை மாநகராட்சி மூலம் 1998-99ம் நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட குறியீடு ரூ. 250 கோடி (ரூபாய் இருநூற்று ஐம்பது கோடி மட்டும்.)

*(ஆ)* 1998-99ஆம் நிதி ஆண்டில் சிறு சேமிப்புத் திட்டங்களின் மூலம் சென்னை மாநகராட்சி வசூல் செய்த நிகரத் தொகை ரூ. 223.25 கோடி ஆகும்.

21—

### குடிநீர்

**வினா எண் 35277—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், வேப்பிலை ஊராட்சியிலுள்ள அம்மன் ஏரித் தண்ணீரை குடிநீருக்குப் பயன்படுத்திக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், வேப்பிலை ஊராட்சியிலுள்ள அம்மன் ஏரியில் நிரந்தர நீராதாரம் இல்லை. எனவே இந்த அம்மன் ஏரிக்கரையில் கட்டப்பட்டுள்ள திறந்தவெளிக் கிணறு மூலம் இப்பகுதிக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

22—

### வணிக வளாகம்

**வினா எண் 36090—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க திருமணி முத்தாற்றின் மீது மேல்தளம் அமைத்து வணிக வளாகம் சீருந்து நிறுத்துமிடம் போன்றவைகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க திருமணி முத்தாற்றின்மீது மேல்தளம் அமைத்து வணிக வளாகம், சீருந்து நிறுத்துமிடம் போன்றவற்றை ஏற்படுத்தும் வகையில் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

23—

### இணைப்புச் சாலை

**வினா எண் 36281—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி ரயில் நிலையத்திலிருந்து தென்காசி-ஆய்க்குடி சாலைக்கு இணைப்புச் சாலை அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி இரயில் நிலையத்திலிருந்து தென்காசி-ஆய்க்குடி சாலைக்கு இணைப்புச்சாலை அமைக்கத் தேவையான நிலத்தை அளிக்க தென்னக ரயில்வே முன்வராததால் அத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

24—

### பூங்கா அமைத்தல்

**வினா எண் 37668—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், வேலூர் பாலாற்றங்கரையில் அமைக்கப்பட்ட முத்து மண்டபம் சுற்றி பூங்கா அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், வேலூர் பாலாற்றங்கரையில் அமைக்கப்பட்ட முத்து மண்டபம் சுற்றி பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் வேலூர் நகராட்சியிடம் இல்லை.

25—

### வண்டுகளை அழித்தல்

**வினா எண் 33826—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியப் பகுதிகளில் தென்னை மரங்களின் வேர்ப்பகுதிகளைத் தாக்கும் வண்டுகளை அழிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியப் பகுதிகளில் தென்னை மரங்களில் வேர்ப் பகுதிகளில் வண்டுகள் தாக்கியதாக தகவல் ஏதும் வரப்பெறவில்லை.

**26—**

**மானியத் திட்டங்கள்**

**வினா எண் 33856—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் துறையில் மானியத் திட்டங்களைப் பயன்பெற்ற விவசாயிகளே மீண்டும் மீண்டும் பயன் பெறுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வேளாண்மைத் துறை மூலமாக பல்வேறு மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றின் கீழ் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு குறிப்பாக மானியம் வழங்கப்பட்டு வருகிறது. கிராம அளவில் உதவி வேளாண்மை அலுவலர் மூலம் பகுதி வாரியாக பல்வேறு மானியத் திட்டங்கள் பல்வேறுபட்ட விவசாயிகளைச் சென்று அடைகின்றன. மத்திய மற்றும் மாநில அரசு செயல்படுத்தும் அனைத்து திட்டங்களும், பரவலான அளவில் அனைத்து விவசாயிகளையும் சென்று அடைய வேண்டும் என்ற நோக்கில் தான் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும் சிறிய அளவிலான மானிய விகிதங்களான விதை, நுண்ணூட்டச்சத்து, உயிர் உரங்கள், உயிரியல் கொல்லிகள் போன்றன வழங்கப்படும்போது பயன்பெற்ற விவசாயிகளே மீண்டும் பயன்பெற வாய்ப்புள்ளது. எனினும் நடைமுறையில் இதனைத் தீவிரமாக



கண்காணித்து ஒரு வரையறைக்குள் கொண்டுவருதல் கடினமான முயற்சியாகும். எனவே பெரிய அளவிலான மானியத் திட்டங்களான விசை உழுவை வழங்குதல், இழுவை (டிராக்டர்) விநியோகம் போன்றவற்றின் கீழ் இக்குறைப்பாட்டினை தவிர்க்கும் வகையில் முன்னரே பயன்பெற்ற விவசாயி திரும்பவும் இம்மானியத்தினைப் பெறாத வகையில் விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, திட்டம் செயல்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) மேற்படி பயனாளிகள் தேர்வு செய்வதற்கு ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஆலோசனை பேரில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செயற்பட அறிவுரைகள் வழங்கப்பட்டு உள்ளன. விசை உழுவை (பவர் டில்லர்) சிறு இழுவை (small tractors) போன்ற மானியங்கள் பயனாளிகளின் முந்தைய ஆண்டு பட்டியலை ஆராய்ந்து ஏற்கெனவே பயனடையாத நபர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**27—**

**சாலை அபிவிருத்தி**

**வினா எண் 35314—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், என்.பி.கே.ஆர்.ஆர். சர்க்கரை ஆலை எல்லைக்குட்பட்ட 49, ரெட்டி கடலங்குடி-திருமணஞ்சேரி இணைப்பு சாலை கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் எடுத்து செயல்படுத்தித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை எல்லைக்குட்பட்ட 49, ரெட்டி கடலங்குடி-திருமணஞ்சேரி இணைப்பு சாலைப் பணிகளை கரும்புச்சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 2000-2001 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ள இயலாது.

[2000 நவம்பர் 13

28—

### தொழிற்கூடம்

**வினா எண் 38434—திரு. கு. மனோகரன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் தக்காளி, புளி ஆகியவற்றை பதப்படுத்தும் தொழிற்கூடத்தை அமைத்திட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், போலுப்பள்ளி கிராமத்தில் தக்காளி, மாம்பழம் மற்றும் பப்பாளிப் பழங்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை தொழில் முனைவருடன் சேர்ந்து இணைப் பிரிவில் நிறுவிட தமிழ்நாடு வேளாண் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

29—

### வாய்க்கால்களைப் பராமரித்தல்

**வினா எண் 1173—திரு. கே. சி. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செயங்கொண்டம் தொகுதி, தா.பழூர் ஒன்றியம், மதனத்தூர் பழைய பொன்னாற்று வாய்க்கால், சிந்தாமணி வாய்க்கால் வடிகால், வெட்டாறு ஓடை வடிகால் வாய்க்கால் ஆகியவை புல்டோசர் மூலம் ஆழப்படுத்தி அகலப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

பழைய பொன்னாறு வாய்க்காலின் மொத்த நீளம் 6.50 கி.மீ. இந்த பழைய பொன்னாறு வாய்க்காலை ஆழப்படுத்தி அகலப்படுத்தும் பணி காவேரி வடிநில தூர்வாரும் திட்டத்தின்கீழ் 1998-99 நிதியாண்டில் ரூ.22.81 இலட்சம் மதிப்பீட்டில் நடுக்காவிரி வடிநில வட்டம், திருச்சியில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 13]

சிந்தாமணி ஓடையின் மொத்த நீளம் 8.50 கி.மீ. சிந்தாமணி ஓடையில் சிந்தாமணி ரெகுலேட்டரின் கிழ்புறமுள்ள 5.50 கி.மீ. நீளத்திறகு ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் 1997-98 நிதியாண்டில் கீழ் காவிரி வடிநில வட்டம், தஞ்சையில் காவிரி வடிநில தூர்வாரும் திட்டத்தின் கீழ் பணி முடிக்கப்பட்டது. சிந்தாமணி ரெகுலேட்டரின் மேற்புறமுள்ள 3. கி.மீ. நீளத்திற்கு 1998-99 நிதியாண்டில் ரூ.6.35 இலட்சம் மதிப்பீட்டில் நடுக்காவிரி வடிநில வட்டம், திருச்சியில் காவேரி வடிநில தூர்வாரும் திட்டத்தின்கீழ் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

வெட்டாறு ஓடை வடிகால் வாய்க்காலின் மொத்த நீளம் 5.4 கி.மீ. இந்த வெட்டாறு ஓடை வடிகால் வாய்க்கால் 1997-98 நிதியாண்டில் காவேரி வடிநில தூர்வாரும் திட்டத்தின்கீழ் கீழ்க்காவிரி வடிநில வட்டம், தஞ்சையில் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி செய்து முடிக்கப்பட்டது.

30—

### ஏரியை நவீனப்படுத்துதல்

**வினா எண் 17232—திரு. செ. மதிவாணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் தொகுதியில் அடங்கிய வேடந்தாங்கல் ஏரியை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டிலேயே நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் தொகுதியிலுள்ள வேடந்தாங்கல் ஏரியினை தரப்படுத்தும் பணிக்காக

வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.2.18 லட்சத்திற்கு ஒரு மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் செய்து ரூ.1.30 லட்சத்திற்கு இரண்டாம் மதகு மீளக்கட்டும் பணி முடிவடைந்துள்ளது. இவ்வேரியை நவீனப்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**31—**

## ஆற்றை ஆழப்படுத்துதல்

**வினா எண் 22506—திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள செய்யாறு ஆற்றை ஆழப்படுத்தும் பணியை அரசு மேற்கொள்ளுமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* செய்யாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைக்கட்டுகள், தலைப்பு மதகுகள் போன்றவை தற்போது பாசனத்திற்கு உரிய வகையில் தண்ணீரை எடுத்துச் செல்ல வடிவமைப்பு செய்யப்பட்டிருப்பதால் ஆற்றை ஆழப்படுத்தினால் இவைகளுக்கு பாதிப்பு ஏற்படும். அதனால் ஆழப்படுத்தும் திட்டம் ஏதுமில்லை.

**32—**

## புதிய அணை

**வினா எண் 25364—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பூண்டி ஏரி அருகே தண்ணீரை தேக்கி வைக்க புதிய அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ)* கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தில் பூண்டி நீர்த்தேக்கத்தின் மேல் பகுதியில் திருவள்ளூர் வட்டம் இராமஞ்சேரி மற்றும் திருக்கண்டலம் அருகில் நீர்த்தேக்கங்கள் அமைக்க திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன.

*(ஆ)* இராமஞ்சேரி நீர்த்தேக்கத் திட்டத்தில் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள எட்டு கிராமம் மற்றும் ஆந்திர எல்லையில் ஒரு கிராமமும் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மூழ்கும் என்பதாலும் திருக்கண்டலம் நீர்த்தேக்கத்திட்டத்தில் திருவள்ளூர் வட்டத்தில் 18 கிராமங்களில் நிலங்களும் ஊத்துக் கோட்டை வட்டத்தில் 7 கிராமங்களுடன் நிலங்களும் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மூழ்கும் என்பதாலும் இந்த கிராமங்களை சேர்ந்த நிலச் சொந்தக்காரர்கள் மும்முரமாக இந்த திட்டங்களுக்கு ஆட்சேபணை தெரிவிப்பதால் திட்ட ஆய்வு செய்து முழுமையான மதிப்பீடு தயார் செய்ய முடியாத நிலையிலேயே இருந்து வருகிறது.

**33—**

## செப்பனிடுதல்

**வினா எண் 28096—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம் தவணி பெரிய ஏரியின் கலங்களைச் செப்பனிட்டுத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், தவணி பெரிய ஏரியின் கலங்களைச் செப்பனிட மதிப்பீடு தயாரித்து நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் 2000-2001 ஆண்டு பணிமேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

[2000 நவம்பர் 13

34—

## நிலத்தடி நீர்

**வினா எண் 33322—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலத்தடி நீர்வள ஆதாரத்தை பெருக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விவசாயப் பொறியியல் துறையினால் தேர்வு செய்யப்பட்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கசிவு நீர் குட்டைகள் மூலம் மழைநீர் சேமித்து வைக்கப்பட்டு நிலத்தடி நீர்வள ஆதாரம் பெருக்கப்பட்டு வருகின்றது. ஆறுகளை ஓடைகள் குறுக்கே சிறுசிறு அணைகள் கட்டி மேற்பரப்பு நீர் தேக்கி வைத்து அதனால் ஊடுருவல் உண்டாக்கி நிலநீர்வள ஆதாரம் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மேற்பரப்பு நீர் மற்றும் நிலநீர் இணைந்து பயன்படுத்தும் திட்டத்தின் வழியாகவும் நிலநீர் வள ஆதாரம் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தஞ்சாவூர் மாவட்டத்தின் முக்கிய ஆறுகளை காவிரி, கொள்ளிடம் ஆகியவற்றில் ஆண்டு முழுவதும் ஓரளவு மேற்பரப்பு நீர் பரவலாக ஓடுவதற்கு வழிவகைகள் ஏற்படுத்தி நிலநீர்வள ஆதாரத்தை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

35—

## வன ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

**வினா எண் 36902—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அருகே நன்மங்கலத்தில் வன ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இந்த நிலையத்தின் பெயர் "உயிர்வகை மற்றும் உற்பத்தி அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம்" ஆகும். வனங்களில் கண்டறியப்படும் பலவகையான கள பிரச்சினைகளான வனத் தீ, ஆக்ரமணம், பழங்குடியினர் நலம் மற்றும் தமிழ் நாட்டிலுள்ள கிழக்கு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் உயிர்சூழலை மேம்படுத்துதல் வேளாண்காடுகள் மற்றும் வனத்துறையால் தோற்றுவிக்கப்படும் தோட்ட மேம்பாடு ஆகியவை இந்த நிலையத்தின் பணிகளாகும். இப்பணிகளைச் செயலாக்க 5 ஆண்டுகள் கொண்ட ஒரு திட்டம் ரூ.56.53 கோடியில் மைய அரசின் மூலம் டெகராடூனில் உள்ள இந்திய வன ஆராய்ச்சி மற்றும் கல்வி கழகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

36—

## பயிர்களைப் பாதுகாத்தல்

**வினா எண் 36980—திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் ஒன்றியம், மேல்மலைப் பகுதியில் விவசாயிகள் செய்யும் பயிர்களை பன்றிகள் அழித்து நாசம் செய்வதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

கொடைக்கானல் மாவட்டம், பெரிய குளம் சரகம் மேல்மலைப் பகுதியில் விவசாயிகளின் பயிர்களைத் தாக்கும் பன்றிகளின் நடமாட்டம் ஒரு சில காலங்களில் மட்டும் உள்ளது. இதைத் தடுக்க வேண்டுமென்றால் மலை அடிவாரத்தைச் சுற்றி 30 கிலோ மீட்டருக்கும் மேலாக கம்பிவலை

[2000 நவம்பர் 13

அமைக்க வன இலாக்காவினால் இயலாது. எனவே நிலச் சொந்தக்காரர்கள் அவர்களின் தோட்டங்களை சுற்றி வன இலாகாவில் இசைவுடன் வேலி அமைத்தும் மேலும் ஆடு மாடுகளை தடுக்க குழிகளை அமைத்தும் பயிர்நாசம் ஏற்படாவண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

**37—**

**குரங்குகளினால் தொல்லை**

**வினா எண் 36997—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், அட்டகட்டியில் குரங்குகளினால் ஏற்பட்டு வரும் தொல்லையிலிருந்து மக்களைக் காப்பாற்ற அவைகளை வேறு அடர்ந்த காட்டுப் பகுதிக்கு உடனடியாக மாற்றுவதற்கு அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், அட்டகட்டியில் பொதுமக்கள் வேண்டுகோளுக்கிணங்க குரங்குகள் கூண்டு வைத்து பிடிக்கப்பட்டு ஜனநடமாட்டம் இல்லாத காட்டுப்பகுதியில் கொண்டு விடப்பட்டு வந்தது. ஆனால் அவைகள் அங்கு இருக்காமல் மீண்டும் பழக்கப்பட்ட இடத்திற்கே திரும்பி வந்து விடுகின்றன. இருப்பினும் இதனைக் கண்காணிக்க வனப் பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**38—**

**வெள்ளக்கல் அணை**

**வினா எண் 37822—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தில் வெள்ளக்குட்டை பகுதியில் வெள்ளக்கல் அணையை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆலங்காயம் ஒன்றியத்தில், வெள்ளக்குட்டை பகுதியில் (விண்ணமங்கலம் கிராமத்தில்) வெள்ளக்கல் கானாற்றின் குறுக்கே ரூ.7.70 கோடி மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கி 8/98-ல் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**39—**

**சிறிய அணை**

**வினா எண் 37826—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் சத்துவாச்சாரி பகுதியில் பகுதி 2-இல் அமைந்துள்ள சிறிய நீர்வீழ்ச்சிக்கு மேல் ஏரிக்கொள்ளியில் சிறிய அணைகட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்போது எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் சத்துவாச்சாரி பகுதியில் பகுதி 2-இல் அமைந்துள்ள சிறிய நீர்வீழ்ச்சிக்கு மேல் ஏரிக்கொள்ளியில் சிறிய அணை கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[2000 நவம்பர் 13

**40—**

**ஏரி அமைத்தல்**

**வினா எண் 37891—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வேலூர் தொகுதி, மேல்கங்கா நத்தத்தில் ஏரி அமைக்க செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வேலூர் தொகுதி, மேல்கங்காநத்தத்தில் ஏரி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**41—**

**சந்தன மரங்கள் வளர்த்தல்**

**வினா எண் 38046—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வேலூர், திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலையில் சந்தன மரங்கள் வெட்டப்பட்டு காடு அழிந்துள்ளதை அரசு அறியுமா?

*(ஆ)* சந்தன மரங்களை வளர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* அறியும். ஜவ்வாது மலைப் பகுதியில் பெரும்பாலான சந்தன மரங்கள் 1996 ஆம் ஆண்டு முதல் மலைவாழ் மக்களால் வெட்டப்பட்டு களவு போயுள்ளன. அரசு போதிய அக்கறை செலுத்தி கடந்த ஆறு ஆண்டுகளில் 2151 சந்தன மர வழக்குகளை பதிவு செய்து 573 டன் சந்தனக் கட்டைகள் பறிமுதல் செய்துள்ளது. மேலும் சந்தன



2000 நவம்பர் 13]

மரங்களை வளர்க்க கடந்த மூன்று ஆண்டுகளில் வேலூர், திருவண்ணாமலை கோட்டங்களை உள்ளடக்கிய வேலூர் வன மண்டலத்தில் உள்ள வனப்பகுதிகளில் சந்தனத் தோட்ட உற்பத்தி திட்டத்தின் கீழ் 550 எக்டேரில் சந்தன மர விதைகள் தூவப்பட்டு சந்தன மரங்களின் வளத்தினைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**42—**

**இரவு நேரங்களில் வாகனங்கள்**

**வினா எண் 38381—திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* முதுமலைக் காட்டுப் பகுதியில் வனத்தில் வாழும் உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் இரவு நேரங்களில் வாகனங்கள் செல்வது தடை செய்யப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஊட்டி - மைசூர் நெடுஞ்சாலையை ஒட்டி முதுமலை சரணாலயம் உள்ளதால் நெடுஞ்சாலையினை இரவில் மூடுவது பெருமளவு போக்குவரத்தை பாதிக்கும். ஆகவே வனத்துறை நெடுஞ்சாலைத் துறையுடன் தொடர்பு கொண்டு சரணாலய பகுதியிலுள்ள நெடுஞ்சாலையில் வேகத்தடுப்பு அமைப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**43—**

**மேம்பாலங்கள்**

**வினா எண் 1945—திரு. செங்கை சிவம் மற்றும் திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சென்னையில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கு அண்ணாசாலை, ஈ.வெரா. நெடுஞ்சாலைகளில் நீண்ட தூர மேம்பாலங்கள் (Fly overs) கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், நடப்பு நிதி ஆண்டில் பணிகள் தொடங்கப்படுமா?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இப்பணிகள் இந்த நிதி ஆண்டில் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**44—**

**நகரப் பேருந்து**

**வினா எண் 21056—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி வட்டம், ஆலத்தூருக்குச் சென்று கொண்டிருந்த ஏ-10 என்ற நகரப் பேருந்து நிறுத்தப்பட்டுவிட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தடம் எண் ஏ 10 ஆலத்தூர் வழியாக இயக்கப்படும் பேருந்து அல்ல. அவினாசி - புளியம்பட்டி (வழி) தொட்டிபாளையம் வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்து ஆகும். அவினாசி - புளியம்பட்டி வழித்தடத்தில் தொட்டிபாளையம், செல்லப்பம்பாளையம் சாலைப் பகுதி பெருமழையின் காரணமாக பழுது ஏற்பட்டு பேருந்து இயக்கத்திற்கு உகந்ததாக இல்லாத நிலைமையிருந்தபோது அப்பேருந்து தற்காலிகமாக ஆலத்தூர் கிராமம் வழியாக மாற்றி இயக்கப்பட்டது. 23-4-1998 முதல் முன்பிருந்தவாறே தொட்டிபாளையம் வழியாக மாற்றி இயக்கப்பட்டு வருகிறது.

**45—**

**அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்**

**வினா எண் 32939—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங்கள் 21-ல் எத்தனை போக்குவரத்துக் கழகங்கள் லாபத்தில் இயங்குகின்றன?



2000 நவம்பர் 13]

(ஆ) நஷ்டத்தில் இயங்கும் போக்குவரத்துக் கழகங்கள் எத்தனை என்று கண்டறியப்பட்டுள்ளது?

(இ) லாபத்தில் இயங்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள 21 அரசு போக்குவரத்துக் கழகங்களும் தொடர்ந்து நட்டத்திலேயே இயங்கி வருகின்றன.

(இ) நட்டத்தைச் சரிகட்டி, லாபத்தில் இயங்க அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துவருகிறது:

**(அ) அரசின் நிதியுதவி:**

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் நிதி நெருக்கடியை சமாளிக்கும் பொருட்டு அரசு 1996 முதல் இலகுவான கடன்களையும், பங்கு மூலதன தொகைகளையும் கீழ்க்கண்டவாறு அளித்துள்ளது.

(ரூபாய் கோடியில்)

| | | | |
|---|---|---|---|
| 1. | போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு போக்குவரத்து கழகங்கள் திருப்பி செலுத்த வேண்டிய கடனைத் தீர்க்க. | 1996-97 | 68.52 |
| 2. | போக்குவரத்துக் கழகங்களுக்கு வழிவகை முன்பணம். | 1996-97 | 20.00 |
| 3. | போக்குவரத்துக் கழகங்களுக்கு பங்கு மூலதனம். | 1996 | 71.50 |
| 4. | போக்குவரத்துக் கழகங்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய கடனை பங்கு மூலதனமாக மாற்றியது. | 1996 | 110.90 |
| 5. | போக்குவரத்துக் கழகங்களுக்கு வழிவகை முன்பணம். | 1997-98 | 100.00 |
| 6. | போக்குவரத்துக் கழகங்கள், அரசுக்கு அளிக்க வேண்டிய கடன் தொகையை பங்கு மூலதனமாக மாற்றியது. | 1997-1998 | 450.53 |

| | | |
|---|---|---|
| 7. அனைத்து போக்குவரத்துக் கழகங்கள் புதிய பேருந்துகள் வாங்கவும், போக்கு வரத்து நிதி நிறுவனத்திற்கு தர வேண்டிய கடனை தீர்க்கவும் போனஸ் வழங்கவும், பங்கு மூலதனமாக அளிக்கப்பட்டது. | 1998-99 | 200.00 |
| 8. 1999-2000 ஆண்டில் 1402 பேருந்துகள் வாங்கும் பொருட்டு வழங்கியது. | 1999 | 111.00 |

### (ஆ) பயணக் கட்டண திருத்தம்:

கடந்த 25-10-1999 முதல் அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் பயணக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதால் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 612/- கோடி கூடுதல் வருவாய் வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

### (இ) போக்குவரத்துக் கழகங்கள் இணைப்பு:

21 அரசு போக்குவரத்துக் கழகங்களை 7 அரசு போக்குவரத்துக் கழகங்களாக இணைக்க வேண்டும் என அரசு முடிவெடுத்ததைத் தொடர்ந்து, முதற்கட்டமாக அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தின் இரு கோட்டங்களையும், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் இரு கோட்டங்களையும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் கோவை கோட்டத்துடன் உதகை கோட்டத்தினையும் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இவற்றின் இணைப்பிற்கு மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்த பின்னர், மற்றைய போக்குவரத்துக் கழக கோட்டம் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இத்தகைய நடவடிக்கைகளினால், போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகச் செலவு. பெருமளவு குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### (ஈ) கொள்முதல் கொள்கை:

அரசு போக்கு வரத்துக் கழகங்களுக்கு உதிரிபாகங்கள் மற்றும் இதர பொருட்கள் வாங்கும் பொருட்டு 'உயர்மட்ட கொள்முதல்' குழு அமைக்கப்பட்டு, அக்குழு வகுத்த கொள்முதல் கொள்கைப்படி தரமாகவும், நியாயவிலையிலும் உதிரிபாகங்கள் மற்றைய பொருட்கள் வாங்கப்படுவதால், அதிக செலவினம் பெரிதும் குறைக்கப்பட்டுள்ளது.

**46—**

## ஓய்வூதியம்

**வினா எண் 32940—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு "புதிய ஓய்வூதியத் திட்டம்" மூலம் எப்பொழுது முதல் ஓய்வூதியம் வழங்க அரசு எண்ணியுள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

புதிய ஓய்வூதியத் திட்டம் வடிவமைக்கப்பட்டு வருகிறது. பிராவிடண்ட் நிதி ஆணையாளரிடம் விதிவிலக்கு பெற்றதும் அமல்படுத்தப்படும்.

**47—**

## ஸ்பாட் ஃபைன் முறை

**வினா எண் 38237—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிக பாரம் ஏற்றிச் செல்லும் லாரிகளை மற்ற மாநிலங்களில் அச்செயலுக்காக அபராதக் கட்டணத் தொகையை அந்த இடத்திலேயே வசூல் செய்து லாரிகளை விடுவித்து விடுவதுபோல் தமிழ்நாட்டில் 'Spot Fine' முறையை அரசு ஏன் அனுமதிக்கவில்லை?

(ஆ) இதனால் மற்ற மாநில லாரி வாகனங்களிலிருந்து கிடைக்கும் அபராத கட்டணத் தொகை கிடைக்காமல் அரசுக்கு இழப்பு ஏற்படுவதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், உடனே அமல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மத்திய மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 194-இன்படி அதிக பாரத்துடன் வாகனத்தை ஓட்டுபவர்களிடமிருந்து தமிழக அரசு ஆணை எண்.30, உள் (போ.வ.5) துறை, நாள் 11-1-2000-இன்படி ரூ.100/- அபராதமாக வாகனம் தணிக்கை செய்யப்பட்ட இடத்திலேயே மாநில எல்லைகளில் அமைந்துள்ள போக்குவரத்துத் துறை சோதனைச் சாவடிகளிலும், சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி மாநகரங்களில் உள்ள போக்குவரத்துக் காவல் துறையினர் மூலமும் வசூலிக்கப்படுகிறது.

மேலும், அதிக பாரம் ஏற்றிய குறைபாட்டிற்காக உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்க சோதனை அறிக்கைகள், அனுமதி வழங்கிய வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

(ஆ) மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 86 (1)-ன்படி அனுமதியுள்ள போக்குவரத்து வாகனங்களுக்கு எந்த வட்டாரப் போக்குவரத்து

[2000 நவம்பர் 13

அதிகாரியால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதோ அந்த வட்டாரப் போக்குவரத்து அதிகாரிதான் அனுமதி நிபந்தனைகளை மீறிய குற்றத்திற்காக அனுமதிச் சீட்டில் மேல் நடவடிக்கை எடுத்து இணக்கக் கட்டணம் வசூலிக்க அதிகாரம் படைத்தவர் ஆவார். ஆகையால் சம்பந்தப்பட்ட வாகன அனுமதிதாரர் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சோதனை அறிக்கைகள் அந்தந்த வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்கு அனுப்பப்படுவதால் மேற்படி அபராதத் தொகையை அரசு வருவாய் இழப்பாகக் கருத இயலாது.

(இ) இல்லை. வினா ஆ-க்குக் கொடுக்கப்பட்ட பதிலின் அடிப்படையில் இவ்வினா எழாது.

**48—**

**சாலையை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 9694—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில்கொண்டு கோயம்பேட்டிலிருந்து சென்னை சென்ட்ரல் வரை உள்ள சாலையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை விரிவுபடுத்தும் கருத்துரு எதுவும் ஆய்வில் இல்லை. எனினும், சென்னை துறைமுகத்திலிருந்து (போர் நினைவுச் சின்னம்) கோயம்பேடு வழியாக கத்திப்பாரா சந்திப்பு வரை உயர்மட்ட துரித வழிச்சாலை அமைக்கும் கருத்துரு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது. இந்தச் சாலை அமைக்கப்பட்டால் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெரிசல் குறைய வாய்ப்புள்ளது.



2000 நவம்பர் 13]

**49—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 31535—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் - சோமனூர் தார்ச்சாலை மிகவும் பாழ்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை அகலப்படுத்தி செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் சாலையின் பெயர் திருப்பூர் - சோமனூர் 19.00 கி.மீ. நீளமுள்ள இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/0-8/2 வரையுள்ள பகுதியை நபார்டு ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி-2-ல் முதல் கட்டமாக ரூ.39.06 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்யப்பட்டு பணி முடிவடைந்து விட்டது. மேலும், இச்சாலையில் கி.மீ.9/2-19/0 வரையுள்ள பகுதிகளை நபார்டு ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி-5-ல் கடனுதவி பெற்று செய்ய ரூ.98.00 இலட்சத்திற்கு அரசு நிர்வாக அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணியைச் செயலாக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பணியும் விரைவில் முடிக்கப்படும்.

**50—**

**பாலம்**

**வினா எண் 32073—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், புல்லுக்காட்டுவலசை அரசு உயர்நிலைப் பள்ளி அருகில் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) வரும் நிதியாண்டில் நிதி நிலைமைக்கேற்ப செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**51—**

**சாலையை அகலப்படுத்துதல்**

**வினா எண் 34467—திரு. என்.ஆர். அழகர்ராஜா:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழக முதல்வரால் அனுமதிக்கப்பட்டு வேலை நடைபெற்றுவரும் துரைச்சாமிபுரம் பாலம் முதல் அரண்மனைப்புதூர் விலக்கு வரை உள்ள சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையின் ஒரு பகுதியான ஸ்ரீரெங்கபுரம் சாலை கி.மீ. 0/0 முதல் 5/4 வரையிலுள்ள பகுதியை மட்டும் ரூ.67.00 இலட்சம் மதிப்பீட்டில் அகலப்படுத்தும் பணி செயலாக்கத்தில் உள்ளது. இதர பகுதிகளை அகலப்படுத்தும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**52—**

**தேர்வு முறை**

**வினா எண் 31791—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



*அறநிலையத் துறைக்கு ஆள் எடுக்கும்போது கல்வித் தகுதியுடன் சமய அறிவு உள்ளவர்களை மட்டும்தான் தேர்வு செய்யும் என்ற நிலையை ஏற்படுத்துமா?*

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

பொதுவாகவே இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே நியமிக்கப்படுகின்றனர். சமய அறிவு பெறாத குறைபாடு ஏதும் நடைமுறையில் அவர்களிடம் காணப்படவில்லை.

**53—**

**நெல் கொள்முதல்**

**வினா எண் 15878—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில், வணிகர்களிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படுவதாக அரசிற்குப் புகார் வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) விவசாயிகளிடம் பருவத்திற்கு ஏற்ப கொள்முதல் செய்யப்படுகிறது.*

[2000 நவம்பர் 13

54—

### நியாய விலைக் கடை

**வினா எண் 32259—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், பூவனூர் கிராமத்தில் நியாயவிலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், பூவனூர் கிராமத்தில் 372 குடும்ப அட்டைகளுடன் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்கப்பட்டு 1-4-2000 முதல் செயல்பட்டு வருகிறது.

55—

### பால்துகள்

**வினா எண் 39221—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் பால்துகள் தயாரிக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் பால்துகள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.



2000 நவம்பர் 13]

56—

### பவுண்டுகள்

**வினா எண் 22741—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆடு மாடுகளை அடைக்கப் பயன்படுத்தப்படும் பவுண்டுகள் எவ்வித உபயோகமின்றி இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) பவுண்டுகள் எவ்வித உபயோகமும் இல்லாமல் இல்லை.

(ஆ) வினா எழாது.

57—

### புறம்போக்கு நிலங்கள்

**வினா எண் 24321—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்துப் பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) ஆக்கிரமிப்புகள் ஏற்படுவதைத் தடுக்காத அரசு அலுவலர்கள் மீது பொறுப்பு நிர்ணயம் செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம். நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905-இன்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

[2000 நவம்பர் 13

(ஆ) ஆட்சேபணை என்று கருதப்படும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுகின்றன. ஆட்சேபணையற்றவை வரன்முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

(இ) புதிய ஆக்கிரமிப்புகள் ஏதும் 'பி' யாதாஸ்துக்குக் கொண்டு வரப்படுவதில்லை. ஆக்கிரமணங்கள் அவ்வப்போது அகற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆக்கிரமிப்புகள் ஏற்படாவண்ணம் புறம்போக்கு நிலங்களைப் பாதுகாக்க வருவாய் அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு ஆக்கிரமிப்புகள் ஏற்படுவதைத் தடுக்காத அரசு அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

**58—**

### பொது இடங்கள் ஆக்கிரமிப்பு

**வினா எண் 34937—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது இடங்களில் ஆக்கிரமிப்பு செய்வதைத் தடுக்கத் Spot fine விதிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களுக்கு தமிழ்நாடு நில ஆக்கிரமணச் சட்டம், 1905-இன்படி தண்டத் தீர்வை விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. மேலும், ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்றவும் நில ஆக்கிரமிப்புச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்நிலையில் அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளுக்கு Spot fine விதிக்கும் எண்ணம் இல்லை.



2000 நவம்பர் 13]

**59—**

### தடையாணை

**வினா எண் 36809—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தடையாணைப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ள நிலங்களை தடையாணைப் புத்தகத்திலிருந்து நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்கள் நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்யப்படுகின்றன. ஆனால், சமுதாயக் காரியங்களுக்கு தேவைப்படுகின்ற அரசு நிலங்கள் நீராதாரம் மற்றும் நீர்வழிப் புறம்போக்குகள் (அரசுக்குத் தேவைப்படும் பட்சத்தில்) ஆகியவை ஒப்படை செய்வதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வகைப்பாட்டு நிலங்கள் தடையாணைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. எனவே இந்நிலங்களை தடையாணைப் புத்தகத்திலிருந்து நீக்க இயலாது.

**60—**

### தரிசு நிலங்கள்

**வினா எண் 36810—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள தீர்வை ஏற்படாத தரிசு நிலங்கள் அனைத்தையும் தீர்வை ஏற்பட்ட தரிசாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆட்சேபணையற்ற மற்றும் பொது காரியங்களுக்குத் தேவைப்படாத அரசு புறம்போக்கு நிலங்கள் தீர்வை ஏற்பட்ட தரிசாக வகைமாற்றம் செய்யப்பட்டு நிலமற்ற ஏழைகளுக்கு விவசாயம் செய்வதற்காக ஒப்படை செய்யப்படுகின்றன. ஆனால் அரசுக்கு தற்போது தேவைப்படுகின்ற (அல்லது) பிற்காலத்தில் தேவைப்படுகின்ற நிலங்கள் தடையாணைப்

[2000 நவம்பர் 13

புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. எனவே, தமிழ்நாட்டிலுள்ள தீர்வை ஏற்படாத தரிசு நிலங்களை உபயோகத்திற்காக எடுத்துக் கொள்ளும்போது தீர்வை ஏற்பட்ட தரிசாக மாற்றப்படுகிறது.

**61—**

**புதிய மாவட்டம்**

**வினா எண் 37422—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசியை தலைநகரமாகக்கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**62—**

**சிறைக் கைதிகள்**

**வினா எண் 34857—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் ஆயுள் தண்டனை பெற்று 10 ஆண்டுகள் கழித்தும் சிறையில் அடைபட்டுள்ளோர் எத்தனை பேர்?

(ஆ) அவர்களின் தண்டனைக் காலம் நீடிக்க என்ன காரணம்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் ஆயுள் தண்டனை பெற்று 10 ஆண்டுகள் கழித்தும் சிறையில் அடைபட்டுள்ளோர் மொத்தம் 125 பேர் ஆகும்.



2000 நவம்பர் 13]

(ஆ) அரசு சிறப்பு தண்டனைக் குறைப்பின்கீழ் விடுதலையாகத் தகுதியில்லாத காரணத்தாலும், பிற மாநிலங்களில் தண்டனை பெற்று தமிழ்நாட்டில் தண்டனை அனுபவிக்கும் காரணத்தாலும் விடுதலைக்குப் பின்னர் குடும்பத்தினரால் ஏற்றுக் கொள்ளப்படாத மற்றும் உயிருக்குப் பாதுகாப்பில்லாத காரணத்தால் நன்னடத்தை அலுவலரால் பரிந்துரைக்கப்படாத காரணத்தினாலும் சிறைவாசிகளின் தண்டனைக் காலம் நீடிக்கப்படுகிறது.

**63—**

**சிறைச்சாலையை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 37925—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் கிளைச் சிறைச்சாலை விரிவுபடுத்தப்படுமா?

(ஆ) மேலூர் சிறைச்சாலை சீரமைப்பு வேலைகள் நடைபெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**64—**

**புதிய கட்டடம்**

**வினா எண் 38716—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் நகரில் உரிமையியல் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

ஓமலூர் நகரில் உரிமையியல் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்கும் கருத்துரு எதுவும் நிலுவையில் இல்லை. உயர் நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்புகள் பெறப்படும்பொழுது அரசின் நிதிநிலையைக் கருத்திற்கொண்டு தகுந்த முடிவுகள் எடுக்கப்படும்.

**65—**

**சிறைச்சாலை**

**வினா எண் 40314—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மேலூர் சிறைச்சாலையில் இலங்கை அகதிகள் இருப்பதால் போதிய இடவசதி இல்லாமையால் ஒரு புதிய சிறைச்சாலை அமைக்கப்படுமா? அல்லது, பழைய சிறைச்சாலை விரிவுபடுத்தப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* எழவில்லை.

**66—**

**தனிச் சிறைச் சாலை**

**வினா எண் 40495—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சென்னையில் பெண்களுக்கு தனிச் சிறைச்சாலை ஒன்று தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* எழவில்லை.

**67—**

**கிளைச் சிறைச்சாலை**

**வினா எண் 40654—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி வட்டம், எடப்பாடியில் ஒரு கிளைச் சிறைச்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

சங்ககிரி, ஓமலூர், இராசிபுரம் ஆகிய இடங்களில் போதுமான இடவசதி உள்ள சிறைச்சாலைகள் உள்ளதால், எடப்பாடி தொகுதி, எடப்பாடி வட்டம், எடப்பாடியில் ஒரு கிளைச் சிறைச்சாலை அமைக்க அவசியமில்லை.

**68—**

**கைத்தறித் துணிகள்**

**வினா எண் 37967—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* இராமநாதபுரம் மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்த கைத்தறி துணிகள் விற்பனையாகாமல் தேக்க நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், விற்பனை செய்ய அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரும்பாலும் பரமக்குடி மற்றும் எமனேஸ்வரம் பகுதியில்தான் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் கோ-ஆப்டெக்ஸ் 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 173.51 இலட்சத்திற்கும், 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.331.58 இலட்சத்திற்கும் கொள்முதல் செய்துள்ளது. இவ்வாறு கோ-ஆப்டெக்ஸின் கொள்முதல் திறன் அதிகரித்திருப்பினும், சங்கங்கள் தன்னிச்சையாக உற்பத்தி செய்து, வெளிச் சந்தையில் விற்பனையாகாமல் உள்ள சரக்குகளே இருப்பில் உள்ளவையாகும். எனினும், தற்சமயம் சங்கங்களில் ரூ.339.55 இலட்சத்திற்கு தீர்ந்த சரக்குகள் தேக்கம் உள்ளன. வரும் தீபாவளி 2000 பண்டிகைக்காக இந்தப் பகுதியில் உற்பத்தி செய்யும் சேலைகளுக்கு ரூ. 64.12 இலட்சம் மதிப்பிற்கு உற்பத்தித் திட்டம் கோ-ஆப்டெக்ஸினால் வழங்கப்பட்டு கொள்முதல் நடைபெற்று வருகிறது. மேலும், இரக அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 14,200 சேலைகள் மற்றும் 2000 சுடிதார் ரகத்திற்கான உற்பத்தித் திட்டம், ரூ.86.50 இலட்சம் மதிப்பிற்கு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தினால் வழங்கப்பட்டு கொள்முதல் நடைபெற உள்ளது.

**69—**

## ஓசோன் படலம்

**வினா எண் 33918—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வளிமண்டலத்தைக் காக்கும் ஓசோன் படலத்தைச் சிதைக்கிற வகையில் உள்ள இரசாயனப் புகை வெளியேற்றம் தமிழ்நாட்டில் அதிகரித்து வருகிறதா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* எழவில்லை.





**70—**

## நீச்சல் குளம்

**வினா எண் 34536—திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தேனி மாவட்டத் தலைநகரில் நீச்சல் குளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தேனி மாவட்டத்தில், நீச்சல் குளம் மற்றும் விளையாட்டு வளாகம் அமைக்கத் தேவையான இடத்தை, பெருந்திட்ட வளாகத்தில் ஒதுக்கீடு செய்யுமாறு, சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாகத் துறை ஆணையர் கோரப்பட்டுள்ளார். நில ஒதுக்கீடு பெறப்பட்ட பின்னர், அந்நிலத்தில் விளையாட்டு வளாகம் அமைக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**71—**

## விளையாட்டரங்கம்

**வினா எண் 34628—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாமக்கல் மாவட்டத்தில் வரும் நிதியாண்டில் உள் விளையாட்டரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எந்த இடத்தில் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நாமக்கல் அரசு மகளிர் கலைக் கல்லூரிக்குச் சொந்தமான இடத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு, மேற்படி இடத்தை விளையாட்டுத் துறைக்கு ஒதுக்கீடு செய்யுமாறு கோரி, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் உயர் கல்வித் துறைச் செயலருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

**72—**

**மாசுக் கட்டுப்பாட்டுச் சாதனங்கள்**

**வினா எண் 37567—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல் உடைக்கும் தொழிற்சாலையிலிருந்து வரும் தூசுகளினால் விவசாயம் பாதிக்கப்படுவதால் அத்தொழிற்சாலைகளில் மாசுக் கட்டுப்பாட்டுச் சாதனங்களைப் பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கல் உடைக்கும் தொழிற்சாலைகளைப் பொறுத்து 30 நாட்கள் முதல் 60 நாட்களுக்குள் தேசிய உற்பத்திக் குழுமத்தின் பரிந்துரைப்படி காற்றுமாசுக் கட்டுப்பாடுச் சாதனங்களைப் பொருத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கால அவகாசம் கொடுக்கிறது. இதனைக் கடைபிடிக்காத தொழிற்சாலைகளின்மீது காற்று சட்டத்தின்கீழ் தொழிற்சாலையை மூட மற்றும் மின்சாரத்தைத் துண்டிக்க வாரியம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.



**73—**

**புகைக் கட்டுப்பாடு**

**வினா எண் 38044—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் உள்ள கூட்டுறவு பால்பண்ணையில் இருந்து வெளிவரும் புகை அப்பகுதியை மாசுபடுத்தி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தப் புகையைக் கட்டுப்படுத்த அரசு எப்போது நடவடிக்கை எடுக்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**74—**

**கூட்டுறவுக் கடன்**

**வினா எண் 17174—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீடுகட்டும் கூட்டுறவுக் கடன் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், காலதாமதத்தைப் போக்கிட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

75—

### தொழிற்பேட்டை

**வினா எண் 12017—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தென்காசியில் ஏற்படுத்தப்பட்ட பிரியதர்சினி கூட்டுறவு தொழிற்பேட்டை செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், மீண்டும் இயங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* பிரியதர்சினி கூட்டுறவு தொழிற்பேட்டையை மீண்டும் செயற்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பயனளிக்காததாலும், இச்சங்கம் துவக்கப்பட்டு 13 ஆண்டுகள் ஆகியும் செயல்படாததாலும், இதன் எதிர்காலம் பற்றி முடிவு செய்ய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் 1983, பிரிவு 81-ன்கீழ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

76—

### தொழிற்சாலைகள் பதிவு

**வினா எண் 36954—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் எத்தனை தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன? இவைகளுக்கு அரசின் மூலம் என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றன?



விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் 23,328 சிறு தொழில்கள் நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றிற்கு 15% மாநில முதலீட்டு மானியம், 20% சிறப்பு முதலீட்டு மானியம், மின் மானியம் மற்றும் ஜெனரேட்டர் மானியம் ஆகிய சலுகைகள் வழங்கப்படுகின்றன.

77—

### ஊரகத் தொழில்

**வினா எண் 40338—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கந்தனேரி, அ.புதூர், மகுடஞ்சாவடி, வைகுந்தம் ஆகிய ஊர்களிலும், இடங்கணசாலை பேரூராட்சியிலும் ஊரகத் தொழில் தொடங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கந்தனேரி, அ.புதூர், மகுடஞ்சாவடி, வைகுந்தம் ஆகிய ஊர்களிலும், இடங்கணசாலை பேரூராட்சியிலும் ஊரகத் தொழில் தொடங்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

78—

### பொருட்காட்சி

**வினா எண் 36078—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு மூலமாக நடத்தப்படும் பொருட்காட்சிகளில் மத்திய அரசின் நிறுவனங்களும் கலந்துகொள்ள அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

தமிழக அரசு மூலமாக நடத்தப்படும் பொருட்காட்சிகளில் கீழ்க்கண்ட மத்திய அரசு நிறுவனங்கள் கலந்துகொள்கின்றன:

1. இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்.
2. இமாச்சலப் பிரதேச தோட்டக்கலைச் சங்கம்.
3. சென்னைத் துறைமுகம்.
4. மத்திய அரசின் கள விளம்பரத் துறை.
5. ஆயுள் காப்பீட்டுக் கழகம்.
6. சேலம் உருட்டாலை.

**79—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 30625—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், ஆர். புதுக்கோட்டை ஊராட்சி, ஆர்.பி. பிள்ளமநாயக்கன்பட்டிக்கு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் :**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



**80—**

**கால்நடை துணை மருத்துவமனை**

**வினா எண் 33753—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கீழப்பசளையில் கால்நடை துணை மருத்துவமனை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**81—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 35308—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி வட்டம், சுந்தரபாண்டியபுரம் கிராமத்திலுள்ள கால் நடைக் கிளை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[2000 நவம்பர் 13

82—

### திருமணக்கூடம்

**வினா எண் 10322—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் உள்ள சீர்காழியில் தாட்கோ மூலம் திருமணக்கூடம் மற்றும் கடைகள் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

**திருமணக்கூடம்:**

திருமணக்கூடம் சீர்காழியில் கட்ட தகுதியான நிலம் எதுவும் இல்லாததால், தற்போது தாட்கோ மூலம் திருமணக்கூடம் கட்ட இயலாது.

**வணிக வளாகங்கள்:**

ஏற்கெனவே வெவ்வேறு இடங்களில் வணிக வளாகங்கள் கட்டப்பட்டு காலியாக உள்ள சூழ்நிலையில் புதிய வணிக வளாகங்களை தற்போது கட்டுவதற்கு அரசு இசைவளிக்கவில்லை. எனவே, சீர்காழியில் தற்போதைக்குக் கடைகள் கட்டித்தர இயலாது.

83—

### ஏரியை அழகுபடுத்துதல்

**வினா எண் 30311—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் தாலுகா, தஞ்சையிலிருந்து மாரியம்மன் கோயில் வரையுள்ள சமுத்திரம் ஏரியை சுற்றுலாத் துறை மூலம் அழகுபடுத்தி படகு விட அரசு ஆவன செய்யுமா?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் தாலுகா, தஞ்சையிலிருந்து மாரியம்மன் கோயில் வரையுள்ள சமுத்திரம் ஏரியை அழகுபடுத்தி படகு விடும் திட்டம் சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

84—

### சிறப்புப் பேருந்துகள்

**வினா எண் 30482—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து சுற்றுலா மையங்களுக்கும் சென்றுவர ஒவ்வொரு மாவட்டத்தின் தலைமையிடத்திலிருந்தும் சுற்றுலா சிறப்புப் பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து சுற்றுலா மையங்களுக்கும் சென்றுவர ஒவ்வொரு மாவட்டத்தின் தலைமையிடத்திலிருந்தும் சுற்றுலா சிறப்புப் பேருந்துகள் இயக்க திட்டம் ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

85—

### அரசுப் பொருட்காட்சி

**வினா எண் 30523—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து தாலுகா தலைநகரங்களிலும் சுற்றுலாத் துறையின் மூலம் அரசுப் பொருட்காட்சி நடத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அனைத்து தாலுகா தலைநகரங்களிலும் சுற்றுலாத் துறையின் மூலம் அரசு பொருட்காட்சி நடத்தும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**86—**

**சுற்றுலாத் தலம்**

**வினா எண் 32639—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஏற்காடு மலையடிவாரத்திலுள்ள குருவம்பட்டியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஏற்காடு மலையடிவாரத்திலுள்ள குருவம்பட்டியை சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**87—**

**சுற்றுலா மையம்**

**வினா எண் 34189—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பவானி அருள்மிகு சங்கமேஸ்வரர் ஆலய சுற்றுலா மையத்தை மேம்படுத்த அரசு ரூ.50.00 இலட்சத்தை ஒதுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பவானி அருள்மிகு சங்கமேஸ்வரர் ஆலய சுற்றுலா மையத்தை மேம்படுத்த ரூ.50.00 இலட்சத்தை ஒதுக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**88—**

**விற்பனை நிலையம்**

**வினா எண் 28196—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் ஒரு புதிய கிராம கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் கதர் கிராம மற்றும் கைவினைப் பொருட்கள் விற்பனை செய்வதற்கான கதர் அங்காடி ஒன்று ஏற்கெனவே செயல்பட்டு வருவதால், இங்கு மற்றுமொரு புதிய கிராம கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**89—**

**காகித ஆலை**

**வினா எண் 33512—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், பரப்பாடியில் உள்ள கைமுறைக் காகித ஆலை பல (பத்து) ஆண்டுகளாக மூடிக் கிடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், பரப்பாடியிலுள்ள கைமுறைக் காகித ஆலை போதிய நிதி வசதியின்றி கடந்த மூன்றாண்டுகளாக செயல்படாமலுள்ளது. இச்சங்கம் தொடர்ந்து இழப்பூட்டும் வகையில் இயங்கி வந்ததாலும், உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு போதிய தேவை நமூனா கிடைக்கப் பெறாததாலும், சங்கத்தைத் தொடர்ந்து இயக்கிடத் தேவையான நிதி வசதி இல்லாத காரணத்தாலும், தற்போது செயல்படாமலுள்ள இச்சங்கத்தின்கீழ் இயங்கும் காகித ஆலையினைத் திறந்து நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

**90—**

**ஓய்வூதியம்**

**வினா எண் 34490—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 60 வயதிற்கு மேற்பட்ட மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



**91—**

**கூட்டுறவுச் சங்கம்**

**வினா எண் 35405—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுந்தரபாண்டிபுரம் மண்பாண்ட தொழில் கூட்டுறவுச் சங்கத்தை இயங்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சுந்தரபாண்டிபுரம் மண்பாண்ட தொழில் கூட்டுறவுச் சங்கத்தில் உற்பத்தி விற்பனை ஏதும் நடைபெறாமல் சங்கம் செயலிழந்த நிலையில் உள்ளதால் மேற்படி சங்கத்தைக் கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, இச்சங்கத்தினை மீண்டும் இயங்கச் செய்ய வாய்ப்புகள் இல்லை.

**92—**

**காகித அலகு**

**வினா எண் 36548—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமயிலாடியில் உள்ள கைமுறைக் காகித அலகை விரிவு படுத்தி முறையாகச் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமயிலாடியில் உள்ள கைமுறைக் காகித அலகு 25-1-1991 முதல் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நட்டத்தில் இயங்கிவந்த காரணத்தினால் அவ்வலகு 1-12-1999-ல்

[2000 நவம்பர் 13

மூடப்பட்டுவிட்டது. எனவே அக்காகித அலகினை விரிவுபடுத்தி முறையாகச் செயல்படுத்த வாய்ப்பில்லை.

**93—**

**சலுகைகள்**

**வினா எண் 21177—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாரம்பரிய மீனவர்களுக்கு கேரளாவில் வழங்கப்படுகிற சலுகைகள் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு வழங்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

கேரளாவில் வழங்கப்படுகிற சலுகைகளில் ஒருசில சலுகைகளே தமிழ்நாட்டு மீனவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**94—**

**மீனவர் அமைப்புகள்**

**வினா எண் 26393—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்நாட்டு மீனவர் அமைப்புகளின் கோரிக்கைகள் ஏற்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 13]

**விவர அறிக்கை**

1. உள்நாட்டு மீனவர் அமைப்புகளின் கோரிக்கைகளை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2000-2001-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் 1000 வீடுகள் இலவசமாகக் கட்டி வழங்கப்படும் என்று அறிவித்ததன் மீதான ஆணை விரைவில் வெளியிடப்பட உள்ளது.

2. 5-5-1999 அன்று நடந்த மீனளத் துறை மானிய கோரிக்கையின்போது மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த அவ்வறிவிப்பினைத் தொடர்ந்து ஒரு மீன்பிடி வலை ரூ.10,000-ல் 25 சதவீத மானியமாக ஒரு மீனவருக்கு ரூ.2,500 வீதம் 500 மீனவர்களுக்கு வழங்க ரூ.12.50 இலட்சமும்; ஒரு அலுமினியப் பாத்திரம் ரூ.300-ல் ஒரு மீனவ மகளிருக்கு 50 சதவிகித மானியமாக ரூ.150 வீதம் தகுதி வாய்ந்த விதி முறைகளுக்குட்பட்டு மானியம் பெற விழையும் மீனவ மகளிர் முழுவதுமாக இருக்க வாய்ப்பில்லாததால் 1000 உள்நாட்டு மீனவ மகளிருக்குப் பதிலாக 500 உள்நாட்டு மீனவ மகளிருக்கு வழங்க ரூ.0.75 இலட்சமும்; ஒரு மீதி வண்டி ரூ.1800-ல் 25 சதவிகித மானியமாக அதிகபட்சம் ஒரு மீனவருக்கு ரூ.450 வீதம் 500 மீனவர்களுக்கு வழங்க ரூ.2.25 இலட்சமும்; 1999-2000-ம் ஆண்டில் வழங்க மொத்தம் ரூ.15.50 லட்சம் ஒப்பளிப்பு செய்து கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறையின் 13-12-1999 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.249-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. பொதுப் பணித் துறை, அரசுடைமையாக்கப்பட்ட நீர்நிலைகள் மற்றும் வருவாய்த் துறை நீர்நிலைகளின் மீன்பாசி குத்தகை உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தினருக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்க வேண்டுமென கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறையின் 332 ஆம் எண்ணிட்ட 17-11-1993 ஆம் நாளிட்ட ஆணையில் அரசு ஆணை வழங்கியுள்ளது. மேலும், வருவாய் நிலை ஆணை (Revenue Standing Order) எண் 211-க்கு உள்நாட்டு மீனவர்கள் பயனடையும் வகையில் மீன்பாசி குத்தகைக்கு உரிய திருத்தங்கள் வெளியிட சிறப்பு ஆணையர் மற்றும் நிலநிர்வாக ஆணையருக்கு அரசின் வருவாய் துறையினால் ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளது.

4. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய குளங்களின் மீன்பாசி குத்தகை பொது ஏலத்தின் மூலம் விடுவதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனினும், பொது ஏலத்தில் அதிகபட்சமாகக் குத்தகை கேட்கும் தொகைக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கம் குத்தகைக்கு எடுக்க முன் வந்தால் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு முன்னுரிமை அடிப்படையில் குத்தகை வழங்கலாம் என

ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை நிலை எண்.169, நாள் 16-8-1999-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. குத்தகை காலம் ஐந்து ஆண்டு காலத்திற்கு வழங்கலாம் என ஆணை வழங்கப்பட்டுள்ளது.

5. காப்புக் காடுகள் (Reserve Forests) பகுதியில் உள்ள உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மேலும் 3 ஆண்டுகளுக்கு (1999-2000, 2000-2001 மற்றும் 2001-2002) மீன்பிடி குத்தகைக்கு வழங்க அரசின் சுற்றுப்புறம் மற்றும் வனத் துறையின் 6-4-2000 நாளிட்ட அரசாணை (1டி) எண் 94-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

6. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ், திருவண்ணாமலை உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, 1997-98-ம் ஆண்டில் பரிசல், நைலான் வலைகள், மற்றும் மிதவைக் கூடுகள் வாங்க தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் ரூ.5.00 இலட்சம் நிதி உதவி பெறப்பட்டது. இதனில், வந்தவாசி உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ.2.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டு 50 மீனவப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை ரூ.2.50 இலட்சத்தை அழிஞ்சல்பட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செங்கை மாவட்ட உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஐந்து வருடங்களுக்கு மொத்த ஒதுக்கீடு ரூ.30.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு முதலாம் ஆண்டுக்கான நிதியுதவி 1998-99 இறுதியில் வழங்கப்பட்டு மீனளத் துறைக்கான ரூ.5.00 இலட்சத்திற்கான கருத்துருக்கள் காஞ்சிபுரம் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்ட பொது மேலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

8. உள்நாட்டு மீன் விற்பனையை மேம்படுத்திட பனிப்பெட்டி பொருத்திய வேன், அங்காடி, உறை பனிப்பெட்டி, குளிர்பதனப்பெட்டியுடன் கூடிய மிதிவண்டிகள் ஆகியவை வாங்கி வழங்க மத்திய அரசு 30.00 இலட்சம் ரூபாய் தமிழ்நாட்டிற்கு நிதி உதவி செய்துள்ளது. அவற்றுள், மாநில அரசு ரூ.18.48 இலட்சம் தொகையினை மேட்டூர் அணை மற்றும் பழனி தாலுகா உள்நாட்டு மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், ஸ்ரீவைகுண்டம் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 5.50 இலட்சம் செலவில் ஊர்தி ஒன்று வாங்கவும் மற்றும் ரூ.6.02 இலட்சத்தினை கன்னியாகுமரி மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையம், மேட்டூர் அணை



மீனவர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஸ்ரீவைகுண்டம் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றிற்கு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

**95—**

## இறால் பண்ணைகள்

**வினா எண் 29769—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இறால் பண்ணைகள் குறித்த 1996 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி கடலோரக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பண்ணைகள் அகற்றப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

11-12-1996-ல் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பாணையில் கடலோர கட்டுப்பாட்டுப் பகுதியில் 500 மீட்டருக்குள் அமைக்கப்பட்டுள்ள அனைத்து இறால் பண்ணைகளையும் (பாரம்பரிய இறால் பண்ணைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட பாரம்பரிய இறால் பண்ணைகள் நீங்கலாக) 1997 மார்ச் 31-க்குள் அழிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது. பின்னர், உச்சநீதிமன்றத்தில் 11-12-1996-ல் வழங்கப்பட்ட தீர்ப்பினை மறு ஆய்வு செய்ய சில தனியார் மற்றும் மத்திய அரசு நிறுவனங்கள் தாக்கல் செய்த மறு ஆய்வு மனுவின் (Review Petition) மீது உச்ச நீதிமன்றப் பிரிவு (Larger Bench) பரிசீலனை செய்து 19-8-1997-ல் கீழ்க்கண்ட இடைக்கால ஆணையினைப் பிறப்பித்துள்ளது:-

"அழிக்கப்பட வேண்டிய இறால் பண்ணைகள் அழிக்கப்பட வேண்டாம். ஆனால், அழிக்கப்பட வேண்டிய இறால் பண்ணைகளில் புதியதாக இறால் குஞ்சுகளை 19-8-1997-க்குப் பிறகு இருப்பு செய்யக்கூடாது."

உச்ச நீதிமன்றம் மேற்கண்டவாறு இடைக்கால ஆணையினை 19-8-1997-ல் பிறப்பித்துள்ள நிலையில் இறால் பண்ணைகளை அகற்ற வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

[2000 நவம்பர் 13

**96—**

**மீன் காட்சியகம்**

**வினா எண் 31638—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் மீன் காட்சியகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) தற்சமயம் மீன் காட்சியகம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**97—**

**மீனவர் நல வாரியம்**

**வினா எண் 37273—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனவர்களின் நலனுக்காக மீனவர் நல வாரியம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் மீனவர்களின் நலனுக்காக மீனவர் நல வாரியம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



2000 நவம்பர் 13]

**98—**

**மீனவர்களுக்கு விடுகள்**

**வினா எண் 39490—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதியில் உள்நாட்டு மீனவர்களுக்கு வீடுகள் கட்டித்தர அரசு எடுத்துள்ள முயற்சிகள் யாவை?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

நடப்பு 2000-2001-ம் ஆண்டில் உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீடு கட்டித்தரும் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டசபையில் அறிவித்ததைத் தொடர்ந்து 1000 உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீடு கட்டித்தரக்கோரும் மீன் துறை இயக்குநரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. மீன் துறையின் மூலம் அனைத்து உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இலவச வீடு பெறுவதற்கான விதிமுறைகளைத் தெரிவித்து கோரிக்கை மனு அனுப்புமாறு அந்தந்த மாவட்ட மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகம் மூலமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. புவனகிரி தொகுதிக்குட்பட்ட உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, கடலூர் (மண்டல) மீன் துறை உதவி இயக்குநர் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாணை வெளியிடப்பட்ட பின்பு பெறப்படும் மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு, தகுதி வாய்ந்த உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தரப்படும்.

**99—**

**மீனவர்களுக்குப் பாதுகாப்பு**

**வினா எண் 40038—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர்களைப் பாதுகாக்க அதிவேக நவீனப் படகு மீன் துறைக்கு வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். மத்திய அரசின் 100% நிதியுதவியுடன் ரூ. 449.95 இலட்சம் செலவில் ஏற்கெனவே 5 சுற்றுக்காவல் படகுகள் கட்டப்பட்டன. இப்படகுகள் தமிழ்நாடு கடல்மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டத்தைச் செவ்வனே செயல்படுத்துவதற்கும் மற்றும் மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கும்போது நிகழக்கூடிய இயற்கை இடர்பாடுகள் மற்றும் புயலினால் துயருக்குள்ளாகும்போது மீட்பு நடவடிக்கைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

(ஆ) 5 சுற்றுக் காவல் படகுகளும் எஃகால் (Steel) ஆனவை. 325 குதிரை சக்தியுடையது. 16.59 மீட்டர் நீளமும், 5.00 மீட்டர் அகலமும் உடைய இப்படகுகள் அதிகபட்சமாக 14.0 கடல் மைல் வேகத்தில் செல்லக்கூடியது. மேற்காணும் படகுகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பெயர் சூட்டப்பட்டு கீழ்க்காணும் தளங்களிலிருந்து மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்காக செயல்பட்டு வருகின்றன:

| படகின் பெயர் | செயல்படும் தளம் |
|---|---|
| நீலம் | சென்னை |
| கயல் | மல்லிப்பட்டினம் |
| பவளம் | இராமேஸ்வரம் |
| முத்து | தூத்துக்குடி |
| வலம்புரி | கன்னியாகுமரி |

**100—**

**வயர்லெஸ் கருவி**

**வினா எண் 41510—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மீனவர்களுக்கு வயர்லெஸ் கருவி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழக மீன்பிடி விசைப்படகு மீனவர்கள் 1500 பேருக்கு 25% மானிய விலையில் வி.எச்.எப். எனப்படும் வயர்லெஸ் தொலைத் தொடர்பு கருவிகள் வழங்கிட அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## இருபதாவது பட்டியல்*

**1—**

**நூலகங்கள்**

**வினா எண் 39495—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தில் எத்தனை அரசு நூலகங்கள் இயங்கி வருகின்றன?

(ஆ) இதில், பகுதிநேர நூலகங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) சிதம்பரம் வட்டத்தில் கிளை நூலகம், ஊர்ப்புற நூலகம் மற்றும் பகுதிநேர நூலகம் ஆகியன சேர்த்து மொத்தமாக 22 நூலகங்கள் செயல்படுகின்றன. அவற்றின் விவரம் இணைப்பில் தரப்பட்டுள்ளது.

(ஆ) சிதம்பரம் வட்டத்தில் கீழ்க்கண்ட 6 பகுதிநேர நூலகங்கள் செயல்படுகின்றன.

1. மிராளூர்
2. மேலத்திருக்கழிப்பாலை
3. தச்சக்காடு
4. கீழ்வளையமாதேவி
5. மேல்மணக்குடி
6. மஞ்சக்கொல்லை

[*குறிப்பு: இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.]

[2000 நவம்பர் 13

## இணைப்பு

### சிதம்பரம் வட்டத்தில் செயல்படும் கிளை நூலகங்கள்

1. கிளை நூலகம், சிதம்பரம்
2. கிளை நூலகம், பிச்சாவரம்
3. கிளை நூலகம், டி.எஸ். பேட்டை
4. கிளை நூலகம், பின்னத்தூர்
5. கிளை நூலகம், சாக்காங்குடி
6. கிளை நூலகம், வரிவம்படுகை
7. கிளை நூலகம், பரதூர்
8. கிளை நூலகம், மஞ்சக்குழி
9. கிளை நூலகம், புவனகிரி
10. கிளை நூலகம், பறங்கிப்பேட்டை
11. கிளை நூலகம், கிள்ளை
12. கிளை நூலகம், பி. முட்லூர்
13. கிளை நூலகம், சேத்தியாத் தோப்பு

### சிதம்பரம் வட்டத்தில் செயல்படும் ஊர்ப்புற நூலகங்கள்

1. ஊர்ப்புற நூலகம் - கீரப்பாளையம்
2. ஊர்ப்புற நூலகம் - பரிவிளாகம்
3. ஊர்ப்புற நூலகம் - பதுபூவாமேடு

### சிதம்பரம் வட்டத்தில் செயல்படும் பகுதிநேர நூலகங்கள்

1. பகுதிநேர நூலகம் - மிராலூர்



2000 நவம்பர் 13]

2. பகுதிநேர நூலகம் - மேலத்திருக்கழிப்பாவை
3. பகுதிநேர நூலகம் - தச்சக்காடு
4. பகுதிநேர நூலகம் - கீழ்வளையமாதேவி
5. பகுதிநேர நூலகம் - மேலமணக்குடி
6. பகுதிநேர நூலகம் - மஞ்சக்கொல்லை

2—

### ஸ்கேன் கருவி

**வினா எண் 35594—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எம். ஆர். ஐ. ஸ்கேன் கருவி நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எம். ஆர். ஐ. ஸ்கேன் கருவி நிறுவும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

3—

### காசநோய் பிரிவு

**வினா எண் 37436—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் வெளி நோயாளியாக 1998-99-ல் சிகிச்சைபெற்ற காசநோய் நோயாளிகள் எத்தனை பேர்?

[2000 நவம்பர் 13

(ஆ) அவர்கள் நலம் கருதி இந்த மருத்துவமனையில் ஒரு 'காசநோய் பிரிவு' ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் 1998-99 ஆம் ஆண்டில் வெளி நோயாளியாக 188 நபர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

(ஆ) எடப்பாடி அரசு மருத்துவமனையில் காசநோயைக் கண்டறியவும், சிகிச்சை அளிக்கவும் வசதிகள் உள்ளதால், இங்கு தனியாக காசநோய் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**4—**

**நெஞ்சக சிகிச்சை**

**வினா எண் 38605—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி சானிடோரியத்தில் உள்ள நெஞ்சக மருத்துவமனையில் கடந்த ஆண்டில் (1999-2000) எத்தனை பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்?

(ஆ) அதற்கு அரசு எவ்வளவு செலவு செய்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியிலுள்ள தனியார் சானிடோரியத்தில் உள்ள நெஞ்சக மருத்துவமனையில் கடந்த 1999-2000 ஆம் ஆண்டில் 1,164 உள்நோயாளிகள் மற்றும் 14,790 புறநோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்.



2000 நவம்பர் 13]

(ஆ) தமிழ்நாடு அரசு இந்த மருத்துவமனைக்கு வருடாந்திர பராமரிப்பு மானியமாக ரூ.3.00 இலட்சம் வழங்குகிறது.

**5—**

**புற்றுநோய் ஒழிப்புத் திட்டம்**

**வினா எண் 42286—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புற்றுநோய் ஒழிப்புத் திட்டத்திற்கு நடப்பாண்டில் மத்திய அரசு தமிழகத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கியுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

புற்றுநோய் ஒழிப்புத் திட்டத்திற்கு நடப்பாண்டில் (2000-2001) மத்திய அரசு தமிழகத்திற்கு இதுவரை ரூ.1.19 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. இத்தொகை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு கோபால்ட் தெரபி கருவி வாங்குவதற்காக மத்திய அரசு மாநில அரசிற்கு வழங்கியுள்ளது.

**6—**

**தொலைபேசி இணைப்பு**

**வினா எண் 43281—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தொலைபேசி இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தொலைபேசி இணைப்பு வழங்க வேண்டும் என்கிற கருத்தின் அடிப்படையில்

முதற்கட்டமாக அரசு ஆணை (நிலை) எண் 181, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 6-5-1997-ன்படி 424 பிரதான ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல நிலையங்களுக்கு தொலைபேசி இணைப்பு வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதில் 319 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தொலைபேசி இணைப்பு பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தொலைபேசி இணைப்புப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இனிவரும் காலத்தில் தேவையின் அடிப்படையில் மற்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொலைபேசி வசதி செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7—

**தார்ச் சாலை**

**வினா எண் 36206—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சத்துவாச்சாரி பகுதி, சுதந்திர தினப் பொன்விழா நகர் மற்றும் சேவியர் காலனி ஆகிய பகுதிகளில் தார்ச் சாலை மற்றும் தெரு மின்விளக்கு அமைக்கப்படாததால் பொது மக்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், இந்நிதியாண்டில் மேற்படி நிலைமையை தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* சத்துவாச்சாரி பகுதி, சுதந்திர தினப் பொன்விழா நகர் மற்றும் சேவியர் காலனி ஆகியவை புறம்போக்கு இடத்தில் அமைந்துள்ளதால் அவற்றுக்கு தார்ச் சாலை அமைக்கப்படாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் 2000-2001 ஆம் ஆண்டு பொது நிதியின்கீழ் மேற்படி இடங்களுக்கு தெரு விளக்கு அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.





8—

**நீச்சல் குளம்**

**வினா எண் 37999—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வேலூர் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சிப் பகுதி-2-ல் கப் அண்ட் சாசர் பகுதியில் மழைக் காலத்தில் நீர்வீழ்ச்சி உள்ளதால் இங்கு நீச்சல் குளம் அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சிப் பகுதி-2-ல் கப் அண்ட் சாசர் பகுதியில் நீச்சல் குளம் பேரூராட்சி வாயிலாகக் கட்டும் உத்தேசம் ஏதுமில்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

9—

**நிழற்குடை**

**வினா எண் 38003—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சி வள்ளலார் பேருந்து நிறுத்தத்தில் ஒருபுறம் மட்டும் நிழற்குடை அமைந்துள்ளது. மறுபுறம் எப்போது நிழற்குடை அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சத்துவாச்சாரி பேரூராட்சியில் வள்ளலார் பேருந்து நிலையத்தில் இரு பக்கமும் நிழற்குடை அமைக்கப்பட்டுள்ளது.

**10—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 38007—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் ஒவ்வொரு இடத்திலும், அங்கங்கு கிணற்றில் கிடைக்கும் குடிக்கத் தகுதியற்ற நீரை குடிநீராக வழங்குவதுபற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குடிக்கத் தகுதியுடைய நீரை அரசு எப்போது வழங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சத்துவாச்சாரி பேரூராட்சிப் பகுதியில் பாலார் குடிநீர் மாசு அடைந்துவிட்ட காரணத்தால் குடிப்பதற்கு கிணற்றுநீர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் குளோரினேஷன் செய்து தூய்மையாக வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) பொன்னை ஆற்றை நீராதாரமாகக் கொண்ட சத்துவாச்சாரி வேலூர் கூட்டுக் குடிநீர் திட்டம் ரூபாய் 19.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட இருப்பதால் 2001-2002 ஆம் ஆண்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.



**11—**

**சிமெண்ட் சாலை**

**வினா எண் 38011—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரி பகுதி-1, பகுதி-2-ல் இணைப்புச் சாலை சவுத் அவென்யூ ரோடு சிமெண்ட் சாலையாக மாற்றும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சி பகுதி-1 மற்றும் பகுதி-2 இணைப்புச் சாலை சவுத் அவென்யூ சாலையில் தமிழ்நாடு நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. சிமெண்ட் சாலையாக மாற்றும் உத்தேசம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**12—**

**சாலை அமைத்தல்**

**வினா எண் 38014—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் சத்துவாச்சாரி ஆர்.டி.ஓ. அலுவலக சாலை முதல் வள்ளலார் பகுதி வரை செல்லும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால், சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் சத்துவாச்சாரி ஆர்.டி.ஓ. அலுவலக சாலை முதல் வள்ளலார் பகுதி வரை செல்லும் சாலை தமிழ்நாடு நகர் வளர்ச்சித் திட்டத்தில் தார்ச் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது.

**13—**

**வாடகைக் குடியிருப்பு**

**வினா எண் 38015—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பேரூராட்சியின் மூலம் வாடகைக் குடியிருப்பு கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சியில் பணிபுரியும் பணியாளர்கட்கு பேரூராட்சியின் வாயிலாக வாடகைக் குடியிருப்பு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**14—**

**கழிவுநீர்க் கால்வாய்**

**வினா எண் 38016—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) வேலூர் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரி பகுதி-1 வீட்டுவசதி வாரிய குடியிருப்புப் பகுதிகளில் கழிவுநீர்க் கால்வாய் இல்லாமல் வீதிகளிலேயே கழிவு நீர் செல்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சத்துவாச்சாரி பகுதி-1 வீட்டுவசதி வாரிய குடியிருப்புப் பகுதிகளில் எல்லா தெருக்களிலும் கழிவு நீர்க் கால்வாய் உள்ளது. மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளதால் கால்வாய் தூர்ந்து விடுகிறது. அவற்றை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**15—**

**சிமெண்ட் சாலை**

**வினா எண் 38018—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சி பகுதி-1-ல் 6, 7, 8 தெருக்களில் ஸ்டேட் பாங்க் ஊழியர்கள் குடியிருப்புப் பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சத்துவாச்சாரி பேரூராட்சி பகுதி-1-ல் 6, 7, 8 தெருக்களில் ஸ்டேட் பாங்க் ஊழியர்கள் குடியிருப்புப் பகுதியில் தற்போது தார்ச் சாலை அமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளதால், சிமெண்ட் சாலை அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

16—

**சுற்றுச் சுவர்**

**வினா எண் 38398—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆரணி பள்ளிவாசல் மற்றும் அதனுடன் இணைந்த முஸ்லிம்களின் அடக்க ஸ்தலத்திற்கு (கபர்ஸ்தான்) சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆரணி பள்ளிவாசல் மற்றும் அதனுடன் இணைந்த முஸ்லிம்களின் அடக்க ஸ்தலம் (கபர்ஸ்தான்) பேரூராட்சி பராமரிப்பில் இல்லை என்பதால் சுற்றுச்சுவர் அமைக்க இயலாது.

(ஆ) வினா எழவில்லை.

17—

**குடிநீர் வசதி**

**வினா எண் 38529—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி பேரூராட்சி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்காமல் குடிக்க தகுதியற்ற நீர் வழங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி பேரூராட்சியில் வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.

18—

**போர்வெல்**

**வினா எண் 38532—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொரப்பாடி பேரூராட்சி, சிவராமபுரத்தில் போர்வெல் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஓர் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

19—

**சிமெண்ட் சாலை**

**வினா எண் 38533—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சி 'எல்' டைப் குறுக்குத் தெருக்களை சிமெண்ட் சாலைகளாக அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது போடப்படும்?

[2000 நவம்பர் 13

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சத்துவாச்சாரி பேரூராட்சி 'எல்' டைப் குறுக்குத் தெருக்களை சிமெண்ட் சாலைகளாக மாற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**20—**

**சாலை வசதி**

**வினா எண் 38534—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர், தொரப்பாடி பேரூராட்சியிலுள்ள காமராஜர் நகரில் மழைக் காலங்களில் குளம் போல மழைநீர் தேங்குவதை சரி செய்து சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தொரப்பாடி பேரூராட்சியில் காமராஜர் நகர் பகுதியில் நடப்பு நிதியாண்டிலேயே 5 சாலைகள் அமைக்கப்படவுள்ளன. நிதி நிலைக்கேற்ப மீதமுள்ள சாலைகளிலும் மேம்பாட்டுப் பணிகள் செய்யப்படும்.

**21—**

**கழிப்பிட வசதி**

**வினா எண் 38538—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

(அ) வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சி வள்ளலார் பஸ் நிறுத்தம் அருகில் பொதுக் கழிப்பிடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வள்ளலார் பஸ் நிலையம் அருகில் பேரூராட்சிக்குச் சொந்தமான இடமில்லாததால் பொதுக் கழிப்பிடம் கட்ட இயலாது.

(ஆ) வினா எழவில்லை.

**22—**

**சாலை அமைத்தல்**

**வினா எண் 38539—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சியிலுள்ள நேத்தாஜி நகரிலிருந்து என்.ஹெச். நெடுஞ்சாலையுடன் இணைக்க சாலை அமைக்க வேண்டி உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சாலை அமைக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் சத்துவாச்சாரி சாலை நேதாஜி நகரிலிருந்து தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்க பல்வேறு வழிகள் உள்ளன. நேர் சாலை அமைக்க வாய்ப்பு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

23—

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 40085—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் தொகுப்பு வீடுகள் அரசு கட்டித் தருவதுபோல் பேரூராட்சிப் பகுதிகளிலும் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

24—

**வீட்டுமனைகள் அங்கீகாரம்**

**வினா எண் 42456—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் எத்தனை வீட்டுமனைகள் அங்கீகாரம் இல்லாமல் இருக்கின்றன?

(ஆ) அவை எப்போது அங்கீகாரம் பெறும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதியில் அனைத்து மண்டலப் பகுதிகளிலும் சேர்த்து மொத்தம் 308 அனுமதியற்ற குடியிருப்பு மனைப் பிரிவுகள் உள்ளன.



(ஆ) அரசு ஆணை எண் 130, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 3-6-1999 மற்றும் அரசு ஆணை எண் 79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 16-6-2000ல் வெளியிடப்பட்ட பொது ஆணைகள் அடிப்படையில் அனுமதியற்ற மனைப் பிரிவுகளை முறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

25—

**ஆயில் என்ஜின்**

**வினா எண் 39141—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 1998-99 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்திலுள்ள சிறு/ மிகச்சிறு / தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு சிறுபாசனத் திட்டத்தின்கீழ் அக்ரோபெட் மூலம் மானியத்துடன் கூடிய ஆயில் என்ஜின் வாங்க எத்தனை விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்திலுள்ள சிறு / மிகச்சிறு / தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு மானிய விலையில் ஆயில் என்ஜின் வழங்கும் திட்டத்தில் 30 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். இதற்காக ரூ. 2,76,980/- மானியம் செலவிடப்பட்டது. அக்ரோபெட் மூலம் விவசாயிகளுக்கு ஆயில் என்ஜின் வாங்குவதற்குக் கடன் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை.

26—

**வேளாண்மை விரிவாக்க மையம்**

**வினா எண் 39149—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

தஞ்சாவூர் மாவட்டம், வெட்டுவாக்கோட்டை ஊராட்சியில் ஊரணிபுரத்தில் இயங்காத வேளாண்மை விரிவாக்க மையத்தை (விவசாய டெப்போவை) இயக்கிட அரசு உத்தரவிடுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வெட்டுவாக்கோட்டை வேளாண்மை விரிவாக்க மையம் 4-9-2000 முதல் கீழ்க்கண்ட முகவரியில் செயல்பட்டு வருகிறது:

வேளாண்மை விரிவாக்க மையம் (வெட்டுவாக்கோட்டை),
4/511, ஊரணிபுரம் மெயின்ரோடு,
ஊரணிபுரம்.

**27—**

**தருமபுரி வனத் துறை**

**வினா எண் 35011—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தின் பழங்குடி மக்கள் மத்தியில் வனத் துறையினரின் அத்துமீறல் சம்பவங்கள் நடைபெற்றதாக அரசிற்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டத்தில் பழங்குடி மக்கள் மத்தியில் வனத் துறையினரின் அத்துமீறல் தொடர்பாக புகார் ஏதும் வரவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



2000 நவம்பர் 13]

**28—**

**மரங்கள் ஏலம்**

**வினா எண் 38097—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டில் எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், ஆவணிப்பேரூர் கீழ்முகம் ஊராட்சிக்கு உட்பட்ட ஏரியிலுள்ள மரங்களை வெட்டி வன அலுவலர் ஏலம் விட்டதில் ஊராட்சிக்கு சேர வேண்டிய பங்குத் தொகையினை இன்னும் கொடுக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாகக் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 33 சுற்றுப்புறச்சூழல் மற்றும் வனத் துறை (வனம் 6) நாள் 15-5-2000ல், 1993-94 ஆம் ஆண்டு முதல் 1996-97 ஆம் ஆண்டு வரை ஊராட்சிகளுக்குப் பங்குத் தொகை அளிப்பதற்காக ரூ. 8.75 கோடி ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டு முதல் 1999-2000 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு ஊராட்சிகளுக்குப் பங்குத் தொகை அளிப்பது குறித்து விவரங்கள் சார்நிலை அலுவலர்களிடம் கோரப்பட்டு, பெறப்பட்டு வருகிறது. கருத்துரு அரசில் பெறப்பட்டவுடன் ஆய்வு செய்து ஆணைகள் வெளியிடப்படும்.

**29—**

**சந்தனக் கட்டைகள் ஏலம்**

**வினா எண் 39974—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆண்டில் சந்தனக் கட்டைகளை ஏலம் விட்டதில் அரசுக்கு எவ்வளவு வருமானம் வந்துள்ளது?

[2000 நவம்பர் 13

(ஆ) சேலத்திலுள்ள வனக் கிடங்கில் உள்ள சந்தனக் கட்டைகள் எவ்வளவு தொகைக்கு ஏலம் போனது? அதன் மூலம் பெற்ற வருவாய் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) 1999-2000 ஆண்டில் அரசு 2330.500 டன் சந்தனக் கட்டைகளை பொது ஏலத்தில் விற்றதில் ரூ. 91,64,14,950/- அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது.

(ஆ) சேலம் சந்தனக் கிடங்கிலுள்ள சந்தனக் கட்டைகள் 1999-2000 ஆண்டில் 998.500 டன்கள் பொது ஏலத்தில் விற்றதின் மூலம் அரசுக்கு ரூ.39,81,90,000/- வருவாய் கிடைத்துள்ளது.

**30—**

**சந்தனக் கட்டைகள்**

**வினா எண் 40152—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள வனச் சரகத்திலிருந்து பெறப்பட்ட சந்தனக் கட்டைகள் 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய எவ்வளவு ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது?

(ஆ) எந்தெந்த கிடங்கில் இருந்து எவ்வளவு ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) திருப்பத்தூர், சேலம் மற்றும் சத்தியமங்கலம் ஆகிய மூன்று சந்தன மரக் கிடங்குகளில் 1-1-1999 முதல் 31-12-1999 வரையிலான காலத்தில் சந்தன மரக் கட்டைகள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் அரசுக்கு ரூ.79,49,74,700 வருவாய் கிடைத்துள்ளது.



2000 நவம்பர் 13]

(ஆ) 1999 ஆம் ஆண்டில் கிடங்குகள் வாரியாக விற்பனை செய்யப்பட்ட சந்தனக் கட்டைகள் விவரம் பின்வருமாறு:—

(1-1-1999 முதல் 31-12-1999 வரை)

| கிடங்கின் பெயர் | விற்பனை செய்யப்பட்ட சந்தனக் கட்டைகளின் அளவு (டன்னில்) | விற்பனைத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| திருப்பத்தூர் .. | 928.500 | ரூ.33,67,03,650 |
| சேலம் .. | 709.500 | ரூ.29,46,70,700 |
| சத்தியமங்கலம் .. | 396.000 | ரூ.16,36,00,350 |
| மொத்தம் .. | 2034.000 | ரூ.79,49,74,700 |

**31—**

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 13820—திரு. ச. அழகிரி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், குணமங்கலம்-ஆனந்தங்குடி சாலை புதுப்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 8 கி.மீ. நீளமுள்ள குணமங்கலம்-ஆனந்தங்குடி சாலையில் கி.மீ.0/0-1/0 மற்றும் கி.மீ.2/0-5/0 வரையிலான 4 கி.மீ. சாலைப் பகுதிகள் 1999-2000 ஆம் ஆண்டின் தனிச்சிர் வேலைக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன.

(2) மீதமுள்ள கி.மீ. 1/0-2/0 மற்றும் கி.மீ. 5/0-8/0 வரையிலான 4 கி.மீ. சாலைப் பகுதிகள் 2000-2001 ஆம் ஆண்டில் பழுதுபட்ட சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் கட்டம் II ரூ.23 இலட்சம் மதிப்பீட்டில்

[2000 நவம்பர் 13

மேம்படுத்துவதற்கு அரசு ஆணை (நிலை) எண் 115, நெடுஞ்சாலைத் துறை, நாள் 5-7-2000-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**32—**

**உதவித் தொகை**

**வினா எண் 36705—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் 1998-99-ல் சிறுபாசனக் கடன் வாங்கி, கிணறு வெட்டி கிணறு பொய்த்துவிட்டதால் அரசிடம் இழப்பீட்டுத் திட்டத்தில் உதவித் தொகை கோரி மனு செய்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அம்மனுக்கள்மீது எத்தனை பேருக்கு அரசு இழப்பீட்டுத் தொகை வழங்கி உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஒருவரும் இல்லை.

(ஆ) இழப்பீட்டுத் தொகை ஏதும் வழங்கப்படவில்லை.

**33—**

**கிணறு வெட்டுதல்**

**வினா எண் 36712—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் 1998-99-ல் சிறுபாசனக் கடன் வாங்கி கிணறு வெட்டி கிணறு பொய்த்துவிட்டதால் அரசிடம் இழப்பீட்டுத் திட்டத்தில் உதவித் தொகை கோரி மனு செய்தவர்கள் எத்தனை பேர்?



2000 நவம்பர் 13]

(ஆ) அம்மனுக்கள்மீது எத்தனை பேருக்கு அரசு இழப்பீட்டுத் தொகை வழங்கியது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஒருவரும் இல்லை.

(ஆ) இழப்பீட்டுத் தொகை ஏதும் வழங்கப்படவில்லை.

**34—**

**வீட்டுவசதி வாரிய நிலம்**

**வினா எண் 30998—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரியார் நகர் (பெசன்ட் நகரில்) குடிசைப்பகுதி அமைந்துள்ள வீட்டுவசதி வாரிய நிலத்தை குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு கோரிப் பெற முயற்சி நடந்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**35—**

**ஆக்கிரமிப்பை அகற்றுதல்**

**வினா எண் 32795—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், நா. வல்லுண்டான்பட்டு ஊராட்சி, மாப்பிள்ளை நாயக்கன்பட்டி மாதாகோயில் தெருவிலிருந்து தேர் சுற்றி வரும் பாதையை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளதை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், நாஞ்சில்கோட்டை வல்லுண்டான்பட்டு ஊராட்சி, மாப்பிள்ளை நாயக்கன்பட்டி கிராமம், புல எண் 161/1, 1.79.0 ஹெக்டேர் "விமானத்தளம் புறம்போக்கு" என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் புலத்தின் கிழக்கு எல்லையில் மாதாகோயில் தெரு அமைந்துள்ளது. இந்தத் தெரு தற்சமயம் பொது மக்கள் சென்று வரும் பொதுப் பாதையாகவும், தேர்த் திருவிழாவின்போது தேர் சுற்றி வருவதற்கும் பயன்பட்டு வருகிறது. இந்த இடத்தில் விமானப் படைத் தள அதிகாரிகள் கிழக்கு பாதையினை இராணுவப் பாதுகாப்பு கருதி மூடிவிடும் நோக்கத்தில் இரும்பு வேலி போட ஆயத்தம் செய்து வருகின்றனர். இரும்பு வேலி போட்டால் தேர்த் திருவிழாவின்போது தேர் சுற்றிவர இடையூறாக இருக்கும் என்பது பொது மக்கள் கருத்து. தேர்த் திருவிழாவின்போது இரும்பு வேலி திறந்துவிட்டு, தேர் சுற்றிவர ஏற்பாடு செய்வதாக விமானப் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். எனவே, விமானப் படைத் தள அதிகாரிகள் மேற்படி புலத்தில் ஆக்கிரமணம் ஏதும் செய்யவில்லை.

**36—**

### கணிப்பொறி மையங்கள்

**வினா எண் 36637—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை நீதிமன்றங்களில், கணிப்பொறி மையங்களை தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படுமா?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூரில் இயங்கும் மாவட்ட நீதிமன்றத்திற்கு ஏற்கெனவே ஏழு டெர்மினல்களுடன் ஒரு கணினி வழங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. தற்சமயம் ஒரத்தநாட்டில் ஒரு மாவட்ட உரிமையியல் குற்றவியல் நடுவர் நீதிமன்றமும், பட்டுக்கோட்டையில் ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றமும் இயங்கி வருகின்றன. இந்த நீதிமன்றங்களில் கணிப்பொறி மையங்களை தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**37—**

### புதிய கட்டடம்

**வினா எண் 38777—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசத்தில் உரிமையியல் நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

பாபநாசத்தில் உரிமையியல் நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்டும் கருத்துரு எதுவும் நிலுவையில் இல்லை.

**38—**

### சிறைச்சாலையை மாற்றுதல்

**வினா எண் 40494—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மத்தியச் சிறைச்சாலையை புழலுக்கு மாற்றியதைப் போல, கோயம்புத்தூர் சிறைச்சாலையையும் புறநகர்ப் பகுதிக்கு மாற்றும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**39—**

**மத்தியச் சிறைச்சாலை**

**வினா எண் 40496—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மத்தியச் சிறைச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது இல்லை.

(ஆ) எழவில்லை.

**40—**

**படிப்புச் சலுகைகள்**

**வினா எண் 43233—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிறைத் துறையில் வேலை செய்யும் பணியாளர்கள் குழந்தைகளுக்கு, காவல் துறை பணியாளர்கள் குழந்தைகளுக்கான படிப்புச் சலுகைகள் போன்ற சலுகைகள் வழங்கப்படுகிறதா?

(ஆ) இல்லை எனில், அவர்களுக்கும் வழங்க அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு சிறைத் துறையில் பணிபுரியும் காவலர்களின் குழந்தைகளில் 10-ம் வகுப்பு, +2 வகுப்புகளில் தேர்ச்சி பெற்று முதல் 3 இடங்களைப் பிடிக்கும் மாணவர்களுக்கு கீழ்க்கண்டவாறு பரிசுத்தொகை அரசாணை (நிலை) எண் 952, உள் (சிறை 2) துறை, நாள் 28-6-1995-ன்படி வருடந்தோறும் வழங்கப்படுகிறது:

| | 10-ம் வகுப்பு | +2 வகுப்பு |
|---|---|---|
| முதலிடம் | ரூ.6000/- | ரூ.6000/- |
| இரண்டாவது இடம் | ரூ.4000/- | ரூ.4000/- |
| மூன்றாவது இடம் | ரூ.2000/- | ரூ.2000/- |

காவலர்களின் குழந்தைகள் மேல்படிப்புப் பயில வருடந்தோறும் அதிகபட்சமாக ரூ.1300/- தமிழ்நாடு சிறை நல நிதியிலிருந்தும் வழங்கப்படுகிறது.

(ஆ) எழவில்லை.

**41—**

**கடன் உதவி**

**வினா எண் 36955—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் கடந்த ஆண்டு எத்தனை பேருக்கு பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு (1999-2000) சேலம் மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் 600 நபர்களுக்கு

[2000 நவம்பர் 13

கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. குறியீட்டைக் கடந்து 616 நபர்களுக்கு கடன் ஒப்புதல் ஆணை வழங்கப்பட்டது. இதில் 402 பேர்களுக்கு கடன் தொகை வழங்கப்பட்டுவிட்டது. மற்றவர்களுக்கு 31-12-2000-க்குள் கடன் தொகை வழங்கப்பட்டுவிடும்.

**42—**

**தோல் பதனிடும் தொழிற்சாலைகள்**

**வினா எண் 37350—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் இயங்கிவரும் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றில் கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கப்படாமையால் மூடப்பட்ட தொழிற்சாலைகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டத்தில் 168 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் சிறுதொழில்களாகப் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன.

(ஆ) அவற்றில் கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கப்படாமையால் 124 தொழிற்சாலைகள் உச்ச நீதிமன்ற ஆணைகளுக்கிணங்க மூடப்பட்டுள்ளன.

**43—**

**கணினி வசதி**

**வினா எண் 39449—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாச்சியார்கோவில், வலங்கைமான், குடவாசல், குடந்தை பகுதிகளில் பத்திரப்பதிவு அலுவலகம் கணினிமயமாக்கப்படுமா?



2000 நவம்பர் 13]

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

வலங்கைமான் மற்றும் குடந்தை சார்பதிவகங்கள் தற்போது இரண்டாம் கட்டத் திட்டத்தில் கணினிமயமாக்கப்படும். நாச்சியார்கோவில், குடவாசல் சார்பதிவகங்கள் மூன்றாம் கட்டத் திட்டத்தில் கணினிமயமாக்கப்படவுள்ளன.

**44—**

**வீட்டு மனை**

**வினா எண் 5160—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி ஒன்றியம், பின்னலூர் கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு 1977-ல் வழங்கப்பட்ட வீட்டு மனைகளை மேடாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

புவனகிரி ஒன்றியம், பின்னலூர் கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைகளில், தாழ்வான பகுதிகள் அனைத்தும் மேடாக்கப்பட்டு, பயனாளிகளால் வீடுகள் கட்டப்பட்டு, தற்சமயம் அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

**45—**

**சிறப்புத் திட்டம்**

**வினா எண் 9235—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 13

மனிதக் கழிவுகளை, மனிதர்களே தலையில் சுமக்கும் கொடுமையை ஒழிக்க அரசிடம் திட்டம் ஏதும் இருக்கிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் நிலையை ஒழிக்க ஏற்கெனவே சட்டசபையில் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பின்னர், அரசாணை எண் 68, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 10-6-1999-ன்படி மேற்படி தொழில் தடைசெய்யப்பட்டு, ஆணை வெளியிடப்பட்டு தமிழ்நாடு அரசிதழிலும் வெளியிடப்பட்டுள்ளது.

**46—**

**இலவச விட்டுமனைப் பட்டா**

**வினா எண் 17020—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சி, வீரப்பம்பாளையத்தைச் சேர்ந்த அருந்ததியர் சமுதாய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சி, வீரப்பம்பாளையத்தை சேர்ந்த 46 அருந்ததியக் குடும்பங்களுக்கு உடனடியாக வீட்டுமனை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**47—**

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 34424—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 13]

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, கவுந்தப்பாடி ஊராட்சி, நல்லிக்கவுண்டனூர் வாய்க்கால் ஓரம் குடியிருக்கும் தாழ்த்தப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டுமனைகள் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நிலத்தைக் கையகப்படுத்தி பட்டா கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தெரியும்.

(ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, கவுந்தப்பாடி ஊராட்சி, நல்லிக்கவுண்டனூர் வாய்க்கால் ஓரம் குடியிருக்கும் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைகள் வழங்க வேம்பத்தி கிராமம் புல எண். 148/6ஏ, 148/1,2,3 ஆகிய நிலங்களை நில எடுப்பு செய்து 4-11-1996 அன்று, 169 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுவிட்டது.

**48—**

**விட்டுமனைப் பட்டா**

**வினா எண் 36744—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, ஆனந்தக்கூத்தன் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு மற்றும் சோதியக்குடி, சட்டநாதபுரம் செங்கல்மேட்டில் வாழும் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு குடியிருப்புச் சட்டத்தின் மூலம் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி, ஆனந்தக்கூத்தன் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு மற்றும் சோதியக்குடி, சட்டநாதபுரம், செங்கல்மேட்டில் வாழும்

ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு குடியிருப்புச் சட்டத்தின் மூலம் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது. ஆனால், நில எடுப்புச் சட்டத்தின் மூலம் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும். ஆனந்தக்கூத்தன் ஆதிதிராவிடர்களுக்கு சீர்காழி கிராமத்தில் புல எண் 288/3பி 1-ல் நில எடுப்பு செய்து 83 நபர்களுக்கு 1998-99 ஆம் ஆண்டில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும், சோதியக்குடி, சட்டநாதபுரம், செங்கல் மேட்டிலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**49—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 39266—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் ஊராட்சிக்குட்பட்ட குண்டில்பட்டியிலுள்ள அருந்ததியர்களுக்கு அரசு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் ஊராட்சிக்குட்பட்ட குண்டல்பட்டியிலுள்ள அருந்ததியர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**50—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 42401—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சியைச் சேர்ந்த வீரப்பம்பாளையம், வெள்ளரிவெள்ளி, கே. புதூர் அருந்ததியர் தெரு ஆகிய இடங்களில் வசித்துவரும் அருந்ததியர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சியைச் சேர்ந்த வீரப்பம்பாளையம், வெள்ளரிவெள்ளி, கே. புதூர் அருந்ததியர் தெரு ஆகிய இடங்களில் வசித்து வரும் அருந்ததியர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**51—**

## கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 33417—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையில் பிரம்பு மூங்கில் கூட்டுறவுச் சங்கம் அபிவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராக, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை விஸ்வநாதபுரம் பிரம்பு மூங்கில் கூட்டுறவுச் சங்கத்திற்கு எந்தவிதமான நிதி வசதியும் இல்லாத காரணத்தால், சங்கத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து சங்கம் செயல்படவில்லை. இச்சங்கம், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு ரூ.8.00 இலட்சமும், வங்கிக்கு ரூ.5.91 இலட்சமும் கடன் செலுத்த வேண்டிய நிலையிலுள்ளது. மேலும், இச்சங்கம் ரூ.17.37 இலட்சம் நட்டத்தில் உள்ளது. எனவே, மேற்கொண்டு சங்கம் கடன் பெறும் வாய்ப்பில்லாத காரணத்தினாலும், சங்கத்திற்கு நிதி வசதி இல்லாத காரணத்தினாலும், மேற்படி சங்கத்தினை அபிவிருத்தி செய்யும் வாய்ப்பு இல்லை.